SRIKALA

;;;...நீ நினைத்த முதல் காதல் மழை நீ...;;;

என் காதல் பிழை நீ...!!!

(பிரஹானாரா)

ஸ்ரீகலா

SMS Publications

SK-13

SRIKALA

PDF தமிழ் .com

தமிழ் நாவல்கள் இலவசமாக பதிவிறக்க...

TAMIL NOVELS ONE CLICK DOWNLOADER

Download

Contents

பிழை : 1
பிழை : 2
பிழை : 3
பிழை : 4
பிழை : 5
பிழை : 6
பிழை : 7
பிழை : 8
பிழை : 9
பிழை : 10
பிழை : 11
பிழை : 12
பிழை : 13
பிழை : 14
பிழை : 15
பிழை : 16
பிழை : 17
பிழை : 18
பிழை : 19
பிழை : 20
பிழை : 21
பிழை : 22
பிழை : 23
பிழை : 24
பிழை : 25
பிழை : 26

பிழை : 27
பிழை : 28
பிழை : 29
பிழை : 30
பிழை : 31
பிழை : 32
பிழை : 33
பிழை : 34
பிழை : 35
பிழை : 36

PDF தமிழ் .com

PDF தமிழ் .com
WWW.PDFTAMIL.COM

"மிருகநிலையோ தெய்வநிலையோ
இறுதிவடிவம் எந்த நிலையோ
சூழ்நிலை சொல்லிய விதிப்படி
வாழ்க்கையும் வடிவெடுக்கும்"

"சார்..." என்றழைத்தபடி தயக்கத்துடன் தனது முதலாளியை பார்த்தான் முரளி...

விஷ்ணுபிரஹான் அவனது அழைப்பை காதில் வாங்கிக் கொண்டாலும் அமைதியாகத் தனது வேலையைப் பார்த்துக் கொண்டிருந்தான்... அதாவது அலுவலக அறையில் அலங்காரத்திற்காக வைக்கப்பட்டிருந்த மீன்தொட்டியில் இருந்த வண்ண வண்ண மீன்களை இமைக்காது பார்த்துக் கொண்டிருந்தான்...

முன்னால் சீராக வெட்டிவிடப்பட்டிருந்த அவனது கேசம் பின்னால் சற்று நீளமாக வளர்க்கப்பட்டுச் சிறு பேண்டில் அடக்கப்பட்டிருந்தது... ' ஃப்ரெஞ்சு பியர் ' அவனது மோவாயை அலங்கரித்துக் கொண்டிருந்தது... வலதுகாதில் மட்டும் ஒற்றை வைரக்கடுக்கண்... கழுத்தில் மெல்லிய பிளாட்டின சங்கிலி , அதே போல் வலதுகையிலும் மெல்லிய பிளாட்டின பிரேஸ்லெட் , இடதுகையில் விலையுயர்ந்த கைக்கடிகாரம்... சாம்பல் வண்ண பேண்ட் , அதே நிறத்தில் டை , கோட் , கருப்பு வண்ண சட்டை அணிந்து கால்களை அகற்றிக் கொண்டா , இரு கைகளையும் இடுப்பில் ஊன்றியபடி ஆஜானுபாகுவாய் அவன் நின்றிருந்தவிதம் புராண கதைகளில் வரும் ராட்சசனை ஞாபகப்படுத்தியது...

"சார்..." முரளி பயத்துடன் எச்சிலை விழுங்கி கொண்டு அழைத்தான்...

அவனது பயத்திற்குக் காரணம் இருந்தது... ஏனெனில் கடந்த ஐந்தாண்டுகளில் விஷ்ணுபிரஹானின் தொழில் வளர்ச்சி அபரிதமானது... அவன் ஒன்றும் பரம்பரை பணக்காரன் இல்லை... இப்போது தான் தொழிலில் கால்

PDF தமிழ் .com

பதித்திருப்பவன்... அப்படிப்பட்டவன் இன்று எல்லோருக்கும் சிம்ம சொப்பனமாக விளங்குகின்றான் என்றால் அதற்கு அவனது அதீத புத்திசாலித்தனம் தான் காரணம்... யாரை எங்கு அடித்தால் காரியமாகும் என்பதை அறிந்தவ , குறி பார்த்து அடித்துத் தனது வெற்றியை நிலைநாட்டி கொள்ளும் வித்தையை அறிந்தவன் அவன்...

அவனைப் புரியாதவர்களுக்கு அவன் ஒரு புரியாத புதிர்... புரிந்தவர்கள் மட்டுமே அவனை அறிய முடியும்... ஆனால் அப்படி அவனைப் பற்றிப் புரிந்தவர்கள , அறிந்தவர்கள் என்று இதுவரை யாருமில்லை...

"சார்..." மீண்டும் முரளி இழுக்க... விஷ்ணுபிரஹான் அவன் புறம் திரும்பாது ' சொல்ல ' என்பது போல் கையசைத்தான்...

"நம்மளோட இரண்டு ஒப்பந்தமும் கைவிட்டு போயிருச்சு... ஒண்ணு ' விஜே க்ரூப்ஸ ' விஜய் கைப்பற்றி இருக்காரு... மற்றொன்று ' ஆராதனா க்ரூப்ஸ ' பரத் கைப்பற்றி இருக்காரு..."

முரளி கூறியதை கேட்டு அவன் சிறிதும் அலட்டி கொள்ளாது மீன்தொட்டி பக்கம் சென்றவன் அதை உன்னிப்பாகப் பார்வையிட்டபட ,

"எத்தனை கோடி நஷ்டம்... ?" என்று மட்டும் கேட்டான்...

"டோட்டலா பார்த்தால் தெளசண்ட் க்ரோர்ஸ் சார்..."

"ரை...ட்..." என்று அழுத்தி உச்சரித்தப்படி கையடக்க மீன் வலையைத் தனது கையில் எடுத்த விஷ்ணுபிரஹானை பார்த்த முரளிக்கு தான் அச்சத்தில் வியர்த்து வழிந்தது...

விஷ்ணுபிரஹானின் இந்த வார்த்தைக்கான அர்த்தம் அவனுக்கு மட்டுமே தெரியும்... அதற்கு ஏற்றார் போன்று விஷ்ணுபிரஹான் கண்ணிமைக்கும் நேரத்தில் ஒரு மீனை வலையில் பிடித்தவன் அடுத்த நொடி அதைத் தரையில் விட்டெறிந்தான்...

' மீனை எதுக்குப் பணம் கொடுத்து வாங்கணும்... ? எதுக்கு இப்படி அநியாயமா கொல்லணும்... ?' முரளியால் மனதில் மட்டுமே இப்படி நினைக்க முடிந்தது... வெளியில் சொல்ல முடியவில்லை... சொன்னால் அவனது வேலை காலி...

மூச்சுக்காற்றுக்காகத் துள்ளி துடித்துக் கொண்டிருந்த மீன் தனது உயிரை விடும் வரை இளகாது இரும்பு போன்று விறைத்து நின்றபடி பார்த்துக் கொண்டிருந்த விஷ்ணுபிரஹான் அதன் துடிப்பு முழுவதுமாய் நின்றதும் சிறுபுன்னகையுடன் ,

"மேட்டர் ஃபினிஷ்டு..." என்றவனின் விழிகளில் இருந்த வெறியுடன் கூடிய தீவிரம் கண்டு முரளிக்கு குளிர் ஜூரம் வந்துவிடும் போலிருந்தது...!

இதற்கு மேல் இதைப் பற்றித் தனது முதலாளியிடம் பேச கூடாது என்பதை உணர்ந்தவனாய் முரளி தனது பேச்சினை மாற்றினான்...

"சார் , இன்னும் ஒன் அவர்ல அகர்வால் கூட மீட்டிங் இருக்கு..." என்றவனைத் திரும்பி பாராது தனது நாற்காலியை நோக்கி நடந்த விஷ்ணுபிரஹான் ,

"அதைக் கேன்சல் பண்ணிரு..." என்றான் கொஞ்சமும் அலட்டி கொள்ளாது...

இப்போது தான் தொழிலில் ஆயிரம் கோடி நஷ்டம் ஏற்பட்டிருக்கிறது... அதைப் பற்றிக் கொஞ்சமும் கவலைப்படாது மேலும் ஒரு நஷ்டத்தை வலிய போய் ஏற்படுத்திக் கொள்கிறானே என்று முரளிக்குக் கவலையாக இருந்தது...

"ஓகே சார்..." என்று விறைப்பாகப் பதில் கூறியவன் அடுத்த நொடி அறையை விட்டு வெளியேறி இருந்தான்...

முரளி வெளியில் சென்று நிறுவனத்தில் துப்புரவு வேலை செய்யும் தொழிலாளியை அழைத்து முதலாளியின் அறையைச் சுத்தம் செய்யச் சொன்னான்... விஷ்ணுபிரஹானின் அறையினுள் அனுமதி கேட்டு

PDF தமிழ் .com

உள்ளே நுழைந்த தொழிலாளி நொடியில் சத்தம் வராது இறந்து கிடந்த மீனை சுத்தம் செய்துவிட்டு அங்கிருந்து வெளியேறினான்...

அதுவரை நாற்காலியில் அமர்ந்து யோசித்துக் கொண்டிருந்த விஷ்ணுபிரஹான் பின்பு எழுந்து ஜன்னல் அருகே சென்றான்... அங்கிருந்த ரிமோட் மூலம் திரைச்சீலையை விலக்கியவன் வெளியில் பார்த்தான்... பச்சைப்பசேலென்று இருந்த தோட்டம் அவனது கண்ணில் பட்டது... பரந்து விரிந்திருந்த அந்த நிலப்பரப்பில் முன்பக்கத்தில் தோட்டத்திற்கு அதிக இடம் விட்டுப் பின்னால் அலுவலகக் கட்டிடத்தைக் கட்டியிருந்தான்... மிகுந்த ரசனையுடன் அவன் அமைத்திருந்த இந்த அலுவலகம் பறைச்சாற்றும் அவனது ரசனையின் அளவை... அதில் எல்லாம் அவன் கலாரசிகன் தான்...

இத்தகைய ரசனையை மீறி அவனுள் எரியும் நெருப்பு சில நேரங்களில் அவனை உயிரோடு பொசுக்கும் போது அவன் ராட்சசனாய் மாறிவிடுகின்றான்... சற்று முன் துடிதுடித்து இறந்த மீனின் தோற்றம் அவனது மனக்கண்ணில் வலம் வந்தது... அந்த நினைவோடு வேறொரு நினைவும் சேர்ந்து எழுந்தது... இதயத்தைத் துடிக்கத் துடிக்க வேரோடு பிடுங்கி எறிந்த வலியை அவன் அனுபவித்தான்...

அன்று அவரவர்களுக்கு அவரவர் நியாயம் , அவரவர் சுயநலம்... அதில் அவனது நலம் பாதிக்கப்பட்டதே... இன்று அவன் எல்லாவற்றிற்கும் திருப்பிக் கொடுக்கின்றான்... வெற்றிக்கனி அவன் பக்கம் தான்... ஆனாலும் ஏதோ ஒரு வெறுமை உணர்வு அவனது மனதினை தாக்குகிறதே... ஏன் ? ஏன் ? ஏன் ? விடையறியா வினாக்கள் அவனுள்... கேள்வியும் அவன் தான்... பதிலும் அவன் தான்... ஆனால் அவன் அதைப் பற்றி இன்னமும் யோசித்துப் பார்க்கவில்லை... அது அவனுக்கே தெரியவில்லை போலும்...

அந்நேரம் அவனது அலைப்பேசியில் ' ரிமைண்டர் நோட்டிஃபிகேசன் ' ஒலி ஒலித்தது... அதில் நினைவு

கலைந்தவன் தனது அலைப்பேசியை எடுத்துப் பார்த்தான்... அவனது வேட்டைக்கான நேரம் நெருங்கிவிட்டது... அவனது முகத்தில் புன்முறுவல் விரிந்தது... அவன் ஒருவித உற்சாக மனநிலையில் துள்ளலுடன் வெளியில் கிளம்பினான்...

"முரளி , நீயும் வா..." அவன் போகும் வழியில் முரளிக்கு அழைத்தபடி செல்ல...

விஷ்ணுபிரஹான் வரவேற்பறைக்கு வரும் முன் முரளி இவனுக்கு முன் அங்கு வந்து நின்று காரின் கதவை திறந்து வைத்தபடி இவனுக்காகக் காத்திருந்தான்... முரளியை மெச்சுதலாய் பார்த்த விஷ்ணுபிரஹான் காரிலேறினான்... முரளி கார் கதவை சாற்றிவிட்டு முன்னால் வந்து ஏறிக் கொண்டான்... பின் விஷ்ணுபிரஹானை பார்த்தபோ ,

"சார்..." என்று இழுக்க... எங்கே போவதபோ ? என்று முதலாளியை பார்த்துத் தொழிலாளி கேட்க முடியாதே...

விஷ்ணுபிரஹான் பிரபல நட்சத்திர விடுதியின் பெயரை சொல்லி அங்கே போகச் சொன்னான்... முரளி தான் காரணம் தெரியாது குழம்பி போய் அமர்ந்திருந்தான்... அரைமணி நேரத்தில் அங்குச் சென்று பார்த்த போது தான் அவனுக்கு எல்லாம் விளங்கியது...

' சார் குறுகிய காலக்கட்டத்தில் இந்தளவுக்கு முன்னுக்கு வந்திருக்கிறார்ன்னா சும்மாவா... ? இந்தளவுக்கு யோசிக்க இவரால் மட்டுமே முடியும்... ' முதலாளியை நினைத்து அவன் புளங்காகிதம் அடைந்தான்...

நட்சத்திர விடுதியில் பெரிய கூட்டங்களுக்கு என்று தனியே அமைக்கப்பட்டிருந்த அந்த விஸ்தாரமான அறையின் கதவினை முரளி பவ்யமாய்த் திறந்துவிட விஷ்ணுபிரஹான் கம்பீரமாக உள்ளே நுழைந்தான்...

அவனுக்கு முன் அவனுக்காக வந்து காத்திருந்த ஜெர்மனி முதலீட்டாளர்களைக் கண்டு அவனது புன்னகை

PDF தமிழ் .com

விரிந்தது... அவர்களோடு பேசி கொண்டிருந்த பரத் , விஜயை கண்டு அவனது புன்னகை இன்னமும் அதிகமாய் விரிந்தது... அவனது வாழ்க்கை சரித்திர ஏட்டில் இன்றைய நாள் பொன் எழுத்துக்களால் பொறிக்கப்பட வேண்டிய முக்கியமான நாள்...

பரத் , விஜய் இருவரும் எதிர்பாராது விஷ்ணுபிரஹானை இங்குக் கண்டதும் மனதிற்குள் திகைத்து போயினர்... ஆனால் வெளியில் எதையும் காட்டி கொள்ளாது கல் போன்று முகத்தை இறுக்கமாய் வைத்து கொண்டனர்...

"வெல்கம் , வெல்கம்..." என்று ஜெர்மானியர்களிடம் கைகுலுக்கி அவர்களை வரவேற்ற விஷ்ணுபிரஹான் பரத்திடம் திரும்பி ,

"வெல்கம் மச்சான்..." என்று கண்சிமிட்டியபடி அவனது கையைப் பிடித்துக் குலுக்கினான்...

ஜெர்மானியர்கள் முன் எதையும் காட்டி கொள்ளாது பரத்தும் , " நைஸ் மீட்டிங் யூ..." என்றபடி மரியாதைக்காக அவனது கையைப் பிடித்துக் குலுக்கினான்...

விஷ்ணுபிரஹான் மேல் பரத்திற்குச் சிறிதும் மரியாதை கிடையாது... அவனது மரியாதை எல்லாம் அங்கிருந்த ஜெர்மானியர்கள் மீது மட்டுமே...

"வெல்கம் ப்ரோ..." என்று விஷ்ணுபிரஹான் விஜயை நோக்கி கையை நீட்ட...

"யாரு யாருக்கு ப்ரோ... ? ஒழுங்கா பேசலைன்னா பல்லை தட்டி கையில் கொடுத்திருவேன்..." கோபத்துடன் கர்ஜித்த விஜய் வலதுகையில் இருந்த தங்கக்காப்பை மேலேற்றியபடி அவனது புஜபலத்தை விஷ்ணுபிரஹானிடம் காட்டினான்...

"உடம்பை நல்லா வளர்த்து வச்சியிருக்க ப்ரோ..." நக்கலாய் கூறியபடி நாற்காலியில் அமர்ந்தான் விஷ்ணுபிரஹான்...

' நீ உடம்பை வளர்த்த அளவுக்கு மூளையை வளர்க்கலையேடா விஜய்... ' அவனது பார்வையில் அத்தனை நக்கல் தெறித்தது... விஜய் அவனை முறைக்க... அவன் நல்லபிள்ளையாக ஜெர்மானியர்களிடம் தொழில் பற்றிப் பேச துவங்கினான்...

விஷ்ணுபிரஹான் பேச பேச பரத் , விஜய் இருவருக்கும் எல்லாம் புரிந்தது... அவர்களது தொழில் ஒப்பந்தத்தை அவன் தட்டி பறித்திருக்கிறான் என்பது... கார் தாயாரிக்கும் பிரபல நிறுவனம் அது... அதை மட்டும் இங்கு ஆரம்பித்து விட்டால் இந்திய அளவில் அவர்களது தொழிலின் தரம் எங்கேயோ சென்றுவிடும்... அதைத் தான் விஷ்ணுபிரஹான் தட்டி பறித்திருக்கிறான்...

"என்ன மச்சான் , ப்ரோ... ரொம்ப அதிர்ச்சியா இருக்கா... ? என் கிட்ட பிசினஸ் டீல் பேசுறவங்க உங்களை எதுக்கு வரவழைச்சாங்கன்னா... ?"

அவனது நக்கல் பேச்சில் இருவரும் தங்களது ஆத்திரத்தை பல்லை கடித்துக் கட்டுப்படுத்திக் கொண்டிருந்தனர்...

"நான் தான் அவங்க கிட்ட உங்க ரெண்டு பேரையும் கூப்பிட சொன்னேன்... நீங்க ரெண்டு பேரும் என்னுடைய தோஸ்துன்னு சொல்லி..." அவன் கூறியதை கேட்டு அவர்களது புருவம் வியப்பில் உயர்ந்தது... விழிகளோ கேலியாய் ' நீ சொல்லும் கட்டுக்கதைகளை நாங்க நம்பவில்லை ' என்றது...

"உண்மை தான்... ஒப்பந்தத்தில் சாட்சி கையெழுத்து போட ஆள் வேணும்ன்னு உங்களை வர சொன்னேன்..."

அவன் கூறியதை கேட்டு அவர்கள் இருவரது முகமும் கறுத்துப் போனது... மனதினை வெளிப்படுத்தி விடக் கூடாது என்று அவர்கள் நினைத்தாலும் அவர்களால் தங்களைக் கட்டுப்படுத்திக் கொள்ள முடியவில்லை... அவர்கள் அங்கிருந்து எழுந்து செல்ல ஒரு நொடியாகாது... ஆனால் இந்த ஜெர்மனிய நிறுவனத்திடம் இன்னும் பல ஒப்பந்தங்களை அவர்கள் போடுவதற்கு இருக்கிறார்கள்...

PDF தமிழ் .com

அதனால் சட்டென்று வெளிநாட்டவரை பகைத்துக் கொள்ள முடியவில்லை...

எதிரிகளிடம் இருந்து தொழில் ஒப்பந்தத்தைத் தட்டி பறித்ததோடு மட்டுமில்லாது அந்த ஒப்பந்தத்தில் அவர்களைச் சாட்சி கையெழுத்து போடும் நிலைக்குத் தள்ளிய விஷ்ணுபிரஹானை கண்டு இருவரும் மனதிற்குள் பொறுமினர்...

தொழிலில் இது ஒரு பெரும் தொல்லை... எதிரியாக இருந்தாலும் அவனை நேருக்கு நேர் காணும் போது முகத்தில் இருக்கும் புன்னகை வாட கூடாது... அவன் நம் முதுகில் குத்தினாலும் வலிக்காத மாதிரி நடிக்க வேண்டும்... அவனைப் போன்றே புன்னகைத்தப்படி முதுகில் குத்த பழகி கொள்ள வேண்டும்... மொத்தத்தில் சுயநலவாதியாக , துரோகியாக இருந்தால் மட்டுமே தொழிலில் முன்னேற முடியும்...

அதைத் தான் பரத் , விஜய் இருவரும் செய்து கொண்டிருந்தனர்... முகத்தில் புன்னகையும் , மனதில் வெஞ்சினத்தையும் கொண்டு அவர்கள் நெருப்பின் மேல் அமர்ந்திருப்பது போன்று அவஸ்தையுடன் அமர்ந்திருந்தனர்...

தொழில் ஒப்பந்தத்தில் வெற்றிகரமாகக் கையெழுத்திட்ட பின் ஜெர்மானியர்களை முரளியுடன் மதிய உணவிற்கு அனுப்பி வைத்த விஷ்ணுபிரஹான் பின்பு இருவர் புறமும் திரும்பினான்... அவனைக் கண்டு கொள்ளாது இருவரும் நாற்காலியில் இருந்து எழுந்தனர்...

"எந்தவித பிரச்சனையும் பண்ணாம சைன் பண்ணியதுக்குத் தேங்க்ஸ் சொல்வேன்னு நீங்க நினைச்சீங்கன்னா , அதுக்கு ரொம்பச் சாரி... உங்க ப்ளான் என்னன்னு எனக்குத் தெரியும்... அடுத்தடுத்து நீங்க இவங்க கூடப் போடுற பிசினஸ் அக்ரிமெண்ட் பற்றியும் எனக்குத் தெரியும்... அது எல்லாம் இது போல் என் கைக்கு வந்து சேரும்ன்னு எனக்கு நம்பிக்கை இருக்கு... அதனால் ரொம்ப ஆசைப்படாதீங்க..."

"டேய் , என்னடா ரொம்பத்தான் பேசுற... ?" பரத் ஒரே எட்டில் அவன் புறம் நெருங்கியவன் அடுத்த நொடி அவனது சட்டையைப் பிடித்துவிட்டான்...

"என்ன மச்சான் , பார்க்க ஹீரோ மாதிரி இருந்துட்டுச் செய்றது எல்லாம் வில்லன் வேலையா செய்றியே... ? இது நியாயமா... ?" என்று கேட்டபடி நிதானமாகத் தனது சட்டையைப் பரத்தின் பிடியில் இருந்து எடுத்துவிட்டான் விஷ்ணுபிரஹான்...

"நியாயத்தைப் பத்தி நீ பேசாதே..." ஆள்காட்டி விரல் நீட்டி எச்சரித்தான் பரத்...

"அப்போ உங்க நியாயத்தைப் பத்தி நாம பேசலாமா... ?" மனதிற்குள் எதிரிலிருக்கும் பரத் , விஜயை கொன்றுவிடும் ஆத்திரம் இருந்த போதும் விஷ்ணுபிரஹான் புன்னகை மாறாது இருவரையும் பார்த்தான்...

"நீங்க ரெண்டு பேரும் எனக்கு ஏற்படுத்திய நஷ்டம் எவ்வளவு தெரியுமா... ?" அவர்கள் பதில் கூறாது அவனை முறைத்தனர்...

அவன் தனது நெற்றியை தடவி கொண்டே , " ஆயிரம் கோடி... அதைத் தான் இப்போது நான் உங்களுக்குத் திருப்பிக் கொடுத்திருக்கிறேன்... நீங்க ஒரு மடங்கு எனக்கு வலிக்க வச்சா , நான் பல மடங்கு திருப்பி உங்களுக்கு வலிக்க வைப்பேன்... புரிஞ்சிருக்கும்ன்னு நினைக்கிறேன்..." என்றவனைக் கண்டு விஜயின் கோபம் எகிறியது...

"யாருடா நீ... ? என் முன்னால் நின்னு பேச கூடத் தகுதி இல்லாதவன் நீ... என் ஸ்டேட்டஸ் என்னன்னு தெரியாம நீ பேசுற... நீ ஏற்படுத்தியிருக்கிற இந்த நஷ்டம் எனக்கு..." என்ற விஜய் தனது முடியை தொட்டு காட்டி ,

"இதுக்குச் சமம்... அதே மாதிரி நீ..." என்றவன் தனது கால் ஷூவை காட்டி ,

PDF தமிழ் .com

"இதுக்குச் சமம்... நீ எனக்கு நஷ்டத்தை ஏற்படுத்தறியா... ? முடிஞ்சால் செஞ்சு பாருடா..." என்று ஆத்திரத்துடன் கத்தினான்... ஜமீன் இரத்தம் அல்லவா அடங்காது திமிறியது...

"இது ஆரம்பம் தான் ப்ரோ... இனி தான் எல்லாம் இருக்கு..." அதே புன்னகையுடன் அமர்த்தலாகக் கூறினான் விஷ்ணுபிரஹான்...

"விஜய் , அமைதியாயிருங்க... இவன் நேத்து பெய்ஞ்ச மழையில் முளைச்ச காளான்... நாம ஆலமரம்... இவனால் நம்மளை அசைக்க முடியாது... இவனா ? நாமளான்னு ? நாம ஒரு கை பார்த்துக்கலாம்..." பரத் விஷ்ணுபிரஹானை முறைத்தபடி விஜய்க்கு ஆறுதல் கூறினான்...

"மச்சான் , இன்னும் நீ முட்டாளா தான் இருக்கியா... ? காளான் , ஆலமரம்ன்னு கட்டுக்கதை பேசிக்கிட்டு... தொழிலில் இந்த நொடி ஜெயிக்கிறவன் மட்டும் தான் பேச முடியும்... அவனது வார்த்தைக்கு மட்டும் தான் இங்கு மதிப்பிருக்கும்... தோற்பவன் பேச்சு எல்லாம் இங்கு எடுபடாது... சோ , உன்னோட பேச்சு எங்கேயும் எடுபடாது... பேச்சு மட்டுமல்ல , இனி உன் மூச்சு கூட எங்கும் எடுபடாது..."

"பார்க்கலாம்..." என்று வெறியோடு கத்திய பரத் அங்கிருந்து வெளியேற போக...

"அப்புறம் மச்சான் , உன் செல்ல தொங்கச்சி எப்படியிருக்கா... ?" என்று நக்கலாய் கேட்டான் விஷ்ணுபிரஹான்...

"அவளைப் பத்தி கேட்க உனக்கு எந்த ரைட்சும் இல்லை..." ஆத்திரத்தில் முகம் சிவக்க கத்தினான் பரத்...

"ரை...ட்..." என்று அழுத்தமாகக் கூறிய விஷ்ணுபிரஹான் பரத்தை கூர்ந்து பார்த்தான்... அவனின் அழுத்தமான பார்வைக்கான அர்த்தம் பரத்திற்கு விளங்கவில்லை... பரத்

அவனை முறைத்தபடி விஜயை அழைத்துக் கொண்டு அங்கிருந்து சென்றுவிட்டான்...

விஷ்ணுபிரஹான் மனதில் பரத்தின் தங்கை ஆராதனா முகமே வலம் வந்தது... அடுத்த நொடி அவனது மனதில் ஒருவித வெறுமை படர்ந்தது... ஏமாற்றம் கவிழ்ந்தது... அவனது ஏமாற்றம் மெல்ல மெல்ல கோபமாக உருமாறியது...

****

மேலே செல்லவிருந்த மின்தூக்கியில் ஓடிவந்து ஏறினாள் ஆராதனா... உள்ளே நின்று கொண்டிருந்த சிவேஷ்கந்தாவை பார்த்து புன்னகைத்தவள் ,

"குட் ஆப்டர்நூன் சார்..." என்க... அவனும் சிரித்தபடி ,

"குட் ஆப்டர்நூன்..." என்றவன் ,

"எந்த ஃப்ளோர்... ?" என்று அவளிடம் கேட்டான்...

"சிக்ஸ்த்..."

அவள் கூறியதும் அவன் ஆறாவது எண்ணை அழுத்திவிட்டு அமைதியாக நின்றான்... அவளும் அமைதியாகக் கைகளைக் கட்டி கொண்டு நின்றிருந்தாள்... அவன் அவளையே அளவிடுவது போல் பார்த்துக் கொண்டிருந்தான்... அவள் இங்கு நின்றிருந்தாலும் அவளது நினைவு இங்கில்லை என்பதை அவன் உணர்ந்தே இருந்தான்... எந்நேரமும் புன்னகை முகமாய் இருக்கும் அவளுள் ஏதோ ஒன்று இருக்கிறது... அது பற்றி அவனுக்கு அரசல்புரசலாகத் தெரியும்... அவனது தந்தையே இதைப் பற்றி அவனிடம் கூறியிருக்கிறார்...

அவனது தந்தை சிவசுப்ரமணியம் தான் இந்த மருத்துவமனையின் நிர்வாகி... இப்போது அவரோடு சேர்ந்து அவனும் நிர்வாகத்தைக் கவனித்துக் கொள்கின்றான்... இந்தியா முழுவதும் இவர்களது மருத்துவமனை கிளைகள் பரந்து விரிந்திருக்கிறது...

PDF தமிழ் .com

மீண்டும் அவனது நினைவு ஆராதனா புறம் திரும்பியது...

"உங்களுக்கு உங்க வேலை ரொம்பப் பிடிக்குமோ... ?" அவனது கேள்வியில் திடுக்கிட்டவளாய் அவன் புறம் திரும்பியவள் ,

"ஏன் கேட்கிறீங்க... ?" புரியாது கேட்டாள்...

"உங்க பெயருக்குப் பின்னால் அத்தனை டிகிரி வருதே அதான் கேட்டேன்..." இப்போது அவனது புன்னகை அவளையும் தொற்றிக் கொண்டது...

"செய்யும் தொழிலே தெய்வம்... எனக்கு என் தொழில் தெய்வம்..."

அதற்குள் மின்தூக்கி ஆறாவது தளத்தில் வந்து நின்றது... அவள் வெளியேறியதும் அவனும் உடன் வெளியேறி அவளுடன் இணைந்து நடந்தான்...

"நானெல்லாம் உங்களை மாதிரி பெரிய படிப்ஸ் எல்லாம் கிடையாது... ஏதோ பெயருக்கு ஒரு டிகிரி... அவ்வளவு தான்..."

அவன் கூறியதை கேட்டு அவளுக்குத் தனது தந்தையின் ஞாபகம் வந்தது... அவரும் அதிகம் படிக்கவில்லையே... ஆனால் மனிதர்களைப் படிக்கத் தெரிந்த அற்புதமான மனிதர்... தந்தையைப் பற்றி நினைத்ததும் அவளது முகம் மென்மையானது...

"படிப்பில் என்னயிருக்கு சார்... எல்லாம் அனுபவத்தில் தான் இருக்கிறது..."

"அது என்னவோ உண்மை தான்ங்க..." என்றவன் ,

"நீங்க யுஎஸ்ல தானே வொர்க் பண்ணிக்கிட்டு இருந்தீங்க... இப்போ ஏன் திடீர்ன்னு இங்கே வந்துட்டீங்க... ?"

அவனது கேள்வியில் அவளது முகம் ஒரு மாதிரியாய் மாறிப் போனது... நொடியில் தன்னைச் சமாளித்துக் கொண்டவள் அவனைப் புன்னகையுடன் பார்த்த ,

"வெளிநாட்டில் எத்தனை நாள் தான் இருக்கிறது... அதான் தாய்நாட்டிற்குத் திரும்பி வந்துவிட்டேன்..." என்றவளை ,

"வர்றேன் சார்..." அவனிடம் விடைபெற்றுக் கொண்டு தனது நோயாளியை பரிசோதிப்பதற்காக அங்கிருந்த ஒரு அறைக்குள் நுழைந்தாள்...

தந்தை கூறியதற்குமை , அவள் இங்கு வந்ததற்கும் ஏதும் சம்பந்தம் இருக்குமோ ? என்று அவனுக்குக் குழப்பமாக இருந்தது... இருக்கலாம் யார் கண்டது என்று நினைத்தவன் தோள்களைக் குலுக்கியபடி அங்கிருந்து சென்றான்... ஆனால் அவனது நினைவு மட்டும் அவளையே சுற்றி வந்தது... ஏனோ அந்த நினைவு கூட அவனுக்குப் பிடித்தமாய் இருந்தது... அதை நினைத்து அவனது உதடுகளில் மந்தகாச புன்னகை தோன்றியது...

****

வாசலில் கார் வந்து நிற்கும் சத்தத்தில் வரவேற்பறையில் அமர்ந்திருந்த அர்ஜூன் எழுந்து வாயிலுக்கு ஓடினான்... காலையில் வேலைக்குச் சென்ற மகளை வரவேற்கும் ஆர்வம் அவனுள்... அவன் அங்குச் செல்லும் போது ஆராதனா காரை நிறுத்திவிட்டு இறங்க தயாரானாள்... அதற்குள் அங்கு விரைந்த அர்ஜூன் கார் கதவை திறந்துவிட்டான்...

"நீங்க எதுக்குப்பா இதையெல்லாம் செஞ்சிக்கிட்டு... ?" புன்னகையுடன் கேட்டபடி இறங்கினாள் ஆராதனா...

"என்னோட பட்டுக்குட்டிக்கு நான் செய்யாம வேறு யார் செய்வாங்க... ?" என்றவன் மகளை அணைத்துக் கொண்டான்...

"வேலை எல்லாம் எப்படியிருக்குடா... ?" அன்போடு கேட்ட தந்தையைப் பார்த்தை ,

"நல்லா போகுதுப்பா..." என்று கூறி அவள் புன்னகைக்க...

PDF தமிழ் .com

"நீ திடீர்ன்னு இங்கே வர்றேன்னு சொன்னதால் என்னால் எதையும் யோசிக்க முடியலை... இல்லைன்னா உனக்குத் தனியா ஹாஸ்பிட்டல் கட்டி கொடுத்திருப்பேன்ம்மா... இன்னும் கொஞ்ச நாள் சிவாவோட ஹாஸ்பிட்டலில் வொர்க் பண்ணு... அதுக்குள்ள நம்ம ஹாஸ்பிட்டல் ரெடியாகிரும்..."

ஆராதனாவின் மனது தந்தையின் முதல் வார்த்தையில் உழன்றது... அதற்கு மேல் அவளால் சிந்திக்க முடியவில்லை...

"பட்டு..." தந்தையின் விளிப்பில் நிகழ்காலத்திற்கு வந்தவளாய் ,

"தனியா ஒரு ஹாஸ்பிட்டலை கட்டி மேய்க்கும் அளவுக்கு எனக்கு மைண்ட் இல்லை... இப்போதைக்கு அதில் கவனம் செலுத்துறது என்பது என்னால் முடியாத காரியம்... இப்படி வொர்க் பண்றது தான் எனக்குப் பிடிச்சியிருக்குப்பா..." என்றவளை அவன் மேலும் மேலும் கேள்வி கேட்டுத் தொந்தரவு செய்யவில்லை...

இருவரும் வீட்டிற்குள் நுழையும் போதே அவந்திகா அங்கு வந்தாள்... வாஞ்சையுடன் மகளைக் கண்டு புன்னகைத்தவளாய் ,

"குளிச்சிட்டு வா பட்டு... சாப்பிடலாம்..." என்க...

அதற்குத் தலையாட்டிவிட்டு ஆராதனா செல்ல... அமைதியாகச் செல்லும் மகளைக் கண்டு பெருமூச்சு விட்டாள் அவந்திகா... மனைவியின் கவலை அர்ஜூனையும் வாட்டியதோ என்னமோ அவன் ஆதரவாக அவளது தோளில் கை வைத்தான்... கணவனது தொடுகையில் திரும்பி பார்த்த அவந்திகா தனது மன சஞ்சலத்தை ஒதுக்கி வைத்துவிட்டாள் ,

"உங்களுக்கு வேறு தனியா சொல்லணுமான்னா... சாப்பிட வாங்கோ..." என்றழைக்க...

"பட்டு பத்தி கவலைப்படுறியா பேபி... ?"

"அதான் நீங்க இருக்கேளே... அப்புறம் நேக்கு என்ன கவலை..." என்று புன்னகைத்த மனைவியின் புன்னகையில் அவனது மனம் ஆறுதலடைந்தது...

"உன்னோட இந்த நம்பிக்கை தான்டி என்னை உயிர்ப்போடு வச்சியிருக்கு..." அவன் மனம் நெகிழ்ந்தான்...

' இவருக்கு வாழ்க்கையில் நிம்மதி என்பதே கிடையாதா...?' அப்போதும் அவள் கணவனை நினைத்து தான் கவலைப்பட்டாள்...

இரவு உணவு முடிந்து ஆராதனா தொலைக்காட்சியை உயிர்ப்பித்துச் செய்திகளைப் பார்க்க ஆரம்பித்தாள்... அப்போது தான் பரத் வீட்டிற்குள் நுழைந்தான்...

"பட்டா , சாப்பிட்டியாடா... ?" அவன் வந்ததும் தங்கை அருகில் அமர்ந்து கொண்டு அவளைப் பார்த்து பாசத்துடன் கேட்க...

"ம் , ஆச்சுண்ணா... நீங்க போய்ச் சாப்பிடுங்க..."

"அதை விட ஒரு முக்கியமான விசயம் இருக்கு..." என்றவன் உள்நோக்கி திரும்பி ,

"அப்பா , அம்மா..." என்று கத்தி அவர்களை அழைத்தான்...

"என்ன பரத்... ?" என்று கேட்டபடி அவர்கள் இருவரும் வந்தனர்...

பரத் தனது சட்டைப்பையில் இருந்து ஒரு கவரை எடுத்துத் தங்கையிடம் நீட்டினான்... அவள் புரியாது அவனைப் பார்த்தாள்...

"பிரிச்சு பார் புரியும்..."

அண்ணன் சொன்னதும் அதைப் பிரித்துப் பார்த்தவளின் விழிகள் கலங்கியதா , தேகம் முழுவதும் நடுங்கியது... அவளது மனம் எதையும் ஏற்றுக் கொள்ளும் நிலையில் இல்லை...

PDF தமிழ் .com

"அண்ணா , ப்ளீஸ்..." என்றவள் அதை அப்படியே அவனிடம் கொடுத்தாள்...

கலங்கிய வழிகளையும் , நடுங்கிய தேகத்தையும் முயன்று சமன்படுத்திக் கொண்டாள்... பெற்றோர் மற்றும் சகோதரனிடம் கூட அவள் தன் மனதினை வெளிப்படுத்திக் கொள்ள விரும்பவில்லை...

"ஏன் வேண்டாம் பட்டு... ?" பரத்தின் குரல் அழுத்தமாய் ஒலித்தது...

அர்ஜூன் , அவந்திகா இருவரும் மௌனமாகத் தங்களது மக்களைப் பார்த்திருந்தனர்... மகளது வாழ்க்கை சீராக வேண்டும் என்பதே அவர்களது ஒரே நோக்கம்...

"நான் இப்படியே இருந்துட்டு போறேன்... எனக்கு வேற யாரும் வேண்டாம்..."

"இப்பவே உனக்கு இருபத்தியெட்டு வயசாகுது பட்டு... காலாகாலத்தில் எல்லாம் முடிஞ்சால் தான் நல்லது..."

அதற்கு அவள் பதில் சொல்லாது அமைதியாக அமர்ந்திருந்தாள்...

"விடு பரத்... பட்டுவை கஷ்டப்படுத்தாதே... அவள் விரும்பியதை பண்ணட்டும்..." என்ற அர்ஜூன் , அவந்திகா எழுந்து தங்களது அறைக்குச் சென்றனர்... அதற்கு மேல் அங்கிருந்தால் நிச்சயம் இருவரும் உடைந்து போய்விடுவர்... பெற்றோர் மனநிலையை உணர்ந்தவனாய் பரத் அவர்களை வேதனையுடன் பார்த்திருந்தான்...

"பட்டு..." அண்ணனது அழுத்தமான குரலில் அவள் அவனை நிமிர்ந்து பார்த்தாள்...

"அவன் சென்னையில் தான் இருக்கான்..."

பரத்தின் வார்த்தையில் அவள் திகைப்பாய் அவனைப் பார்த்தாள்...

"தொழில்ரீதியாய் அவன் என் கிட்ட மோத ஆரம்பிச்சிட்டான்... அடுத்து அவன் உன் கிட்ட மோதாம இருக்கணும்ன்னா உனக்கு ஒரு கல்யாணம் அவசியம்..." அதைக் கேட்டு அவள் விரக்தியாய் சிரித்தாள்...

"அவருக்கு ஏற்கெனவே கல்யாணம் ஆகிருச்சுண்ணா... பின்னே எதுக்காக அவர் என் கிட்ட மோதணும்... ?"

"அது தெரியும்மா... ஆனா... ?"

"வேண்டாம்ன்னு விலகியாச்சுண்ணா... இனி இது பற்றிப் பேச வேண்டாம்... உங்களுக்கு மட்டுமல்ல... அவருக்கும் இது தான் என் பதில்..."

"அவன் கோபமா ஏதாவது... ?"

"கோபமா... ? அவரா... ? என் மீதா... ?" என்று விரக்தியாய் சிரித்தவள் அங்கிருந்து எழுந்து சென்றுவிட்டாள்...

தங்கையின் வேதனை , பெற்றோரின் வருத்தம் எல்லாம் கண்டு பரத்திற்கு விஷ்ணுபிரஹான் மேல் கோபம் வந்தது... எவ்வளவு சந்தோசமாக இருந்த வீடு இது... இப்படி இழவு வீடு போலாக்கி விட்டானே அந்தப் படுபாவி... நினைக்க நினைக்கப் பரத்திற்கு வெறியேறியது... இன்னமும் தொழிலில் விஷ்ணுபிரஹானை பழிவாங்க வேண்டும் என்கிற வெறி அவனது மனதில் எரிமலையாய்க் கனன்றது...

அறைக்கு வந்த ஆராதனாவிற்கு உறக்கம் வரவில்லை... மருத்துவம் சம்பந்தப்பட்ட புத்தகத்தைக் கையில் எடுத்துக் கொண்டு படிக்க ஆரம்பித்தாள்... தேவையில்லாத சிந்தனைகள் தன்னை அண்டவிடாது தடுப்பதற்கு அவள் கையாளும் உத்தி இது... சிறிது நேரத்தில் அந்த உத்தி நன்றாக வேலை செய்தது... அவள் தனது வேதனையை மறந்து அந்தப் புத்தகத்தில் ஆழ்ந்து போனாள்...

அதே நேரம் விஷ்ணுபிரஹான் அவனது வீட்டிற்குள் நுழைந்தான்... அவனைக் கண்டதும் முகம் மலர சோபாவில் இருந்து எழுந்த அர்ச்சனா ,

PDF தமிழ் .com

"மாமூ..." என்றபடி முகமலர்ச்சியுடன் அவனை நோக்கி ஓடிவர...

"ஹனி , இந்த மாதிரி நேரத்தில் இப்படி ஓடிவர கூடாதுன்னு சொல்லி இருக்கேன்னா இல்லையா... ?" கடிந்தபடி வேக எட்டுக்கள் வைத்து அவள் புறம் வந்தவன் அவளைக் கைத்தாங்கலாகச் சோபாவில் அமர வைத்தான்...

"இங்கே உனக்கு நேரம் போகுதா... ?" அவளது கைவிரல்களை நீவியபடி அவன் பரிவுடன் கேட்க...

"போர் அடிக்குது தான்... நாளைக்கு ஷாப்பிங் போகலாமா மாமூ... ?" ஆசையுடன் கேட்டவளை கண்டு அவனது முகம் கனிந்தது...

"கட்டாயம் போகலாம்..." என்றவன் ,

"சாப்பிட்டியா... ? என்று கேட்க... அவனது வார்த்தையில் அவளது விழிகள் கலங்கி போனது...

"ச்சூ... இப்போ எதுக்கு இந்த அழுகை... ?" என்று கூறியபடி அவன் அவளை அணைத்துக் கொள்ள... அவளது அழுகை நின்றபாடில்லை...

"இங்கே பார் ஹனி..." அவளது முகத்தை நிமிர்த்தியவன் ,

"நீ , நான் , நம் குழந்தைங்க... இது தான் நம்ம உலகம்... என்ன புரிஞ்சதா... ?" என்று சிறுபிள்ளைக்கு எடுத்து கூறுவது போல் அவன் கூற... புரிந்தது என்பது போல் அவள் மௌனமாய்த் தலையாட்டினாள்...

"போய்த் தூங்குடா..." அவன் அவளது நெற்றியில் மென்மையாக முத்தமிட்டு கூறியதும் சரியென்று எழுந்து அறையை நோக்கி நடந்தவள் பின் நின்று அவன் புறம் திரும்பி பார்த்தா ,

"நீங்க... ?" என்று கேட்க...

"எனக்குக் கொஞ்சம் வேலையிருக்கு..." அவன் சொன்னதும் அவள் அறைக்குள் சென்று மறைந்தாள்...

வேலையிருப்பதாய் கூறியவன் வேலை செய்யப் பிடிக்காதவனாய் அப்படியே சோபாவில் சரிந்து அமர்ந்தான்... மீண்டும் அவனது மனக்கண்ணில் ஆராதனாவின் முகமே... அவளுக்கு எதிராகக் கட்டம் கட்டுவதற்கான வலுவான ஆதாரம் ஒன்று அவனிடம் சிக்கி உள்ளது... அதை வைத்து அவன் ஆட போகும் ஆடுபுலி ஆட்டத்தில் அவள் சிக்கி சின்னாபின்னமாகப் போவது உறுதி...

"உனக்கு இருக்குடி... என்னைச் சந்திக்கத் தயாராயிரு..." என்று வாய்விட்டு கூறியவன் முகத்தில் அத்தனை மகிழ்ச்சி... விழிகளில் அத்தனை பழிவெறி...!!!

திருத்தமாகும்...!!!

PDF தமிழ் .com

இரவும் , அதிகாலையும் ஒன்றுடன் ஒன்று சந்திக்கும் ஏகாந்தவேளையில் குளித்து முடித்து வேட்டியை பஞ்சகச்சம் கட்டி கொண்டு கிழக்கு நோக்கி நின்று கொண்டு சந்தியாவந்தனம் செய்து கொண்டிருந்தான் விஷ்ணுபிரஹான்...

சந்தியாவந்தனம் என்பது ஆசமனியம் , பிராணாயாமம் , சங்கல்பம் , அர்க்யப்ரதானம் , காயத்ரி ஜெபம் மற்றும் உபஸ்தானம் என்ற ஆறு முக்கியக் கர்மாக்களை உள்ளடக்கியதாகும்...

விஷ்ணுபிரஹான் காயத்ரி ஜெபம் முடிந்து இறுதியாக உபஸ்தானம் செய்து கொண்டிருந்தான்... செதுக்கி வைத்த கிரேக்க சிற்பம் போல் அவன் நின்றிருந்த அழகு அத்தனை கம்பீரமாக இருந்தது...

சந்தியாவந்தனம் முடிந்ததும் அவன் கிழக்கு நோக்கி அப்படியே நின்றிருந்தான்... கீழ்வானில் இருந்து பகலவன் உதயமாவதை அவன் இமைக்காது பார்த்துக் கொண்டிருந்தான்... மெல்ல மெல்ல அக்னி பிழம்பு போல் சூரியன் நெருப்பாய் தகித்துக் கொண்டு மேலெழும் அழகை காண்பதற்குக் கண் கோடி வேண்டும்... அவனும் அந்தச் சூரியனை போன்று மனதிற்குள் தகித்துக் கொண்டிருக்கிறான்...

அமைதியாகச் சென்று கொண்டிருந்த அவனது வாழ்க்கை பாதையை மாற்றியமைத்த விதியை சபித்தபடி அவன் நின்றிருந்தான்... அவனுடைய வாழ்க்கையை அவன் தான் வகுக்க வேண்டும்... ஆனால் இங்கே அவனது வாழ்க்கையை யார் யாரெல்லாமோ கையில் எடுத்துக் கொண்டு விளையாடி பார்த்துவிட்டனர்... இனியாவது அவன் தனது வாழ்க்கையைத் தனக்காக வாழ வேண்டும்...

அவனது மனதில் பற்றியெரியும் நெருப்பிற்கு எண்ணெய் வார்ப்பது போல் ஆராதனாவின் நினைவுகள் வேறு

அவனுள் தகிக்கின்றது... எல்லாம் முடிந்த பின்பும் மனம் ஏன் அவளைப் பற்றியே நினைக்கின்றது... ? ஏன் அவள் மீது கோபம் வருகின்றது... ? வழக்கம் போல் விடையறியா வினாக்கள்... விடையறிய விரும்பாது அவன்...!

"மாமூ..."

எவ்வளவு நேரம் அப்படியே நின்றிருந்தானோ...! அர்ச்சனாவின் அழைப்பில் நினைவு கலைந்து அவளைத் திரும்பி பார்த்தான்...

"அதுக்குள்ள எழுந்துட்டியா அர்ச்சு... ? இன்னும் கொஞ்சம் நேரம் தூங்க வேண்டியது தானே..." அவனது வார்த்தையில் மட்டுமல்ல அவனது முகத்திலும் மென்மை வந்தது... இப்போதைக்கு அவனது மனதினை இளக்கும் சக்தியுடையவள் அர்ச்சனா மட்டுமே...

"மணி ஆறரையாச்சு மாமூ... ஒரு வாக் போயிட்டு வரலாமா... ?" என்றவளின் அருகே வந்தவன் அவளை அழைத்துக் கொண்டு வீட்டினுள் வந்தான்...

"நீ ரொம்ப வீக்கா இருக்க அர்ச்சு... இன்னும் கொஞ்ச நாளைக்கு வாக்கிங் எல்லாம் வேண்டாம்... குழந்தைங்க நல்லா வளர்ச்சி அடைந்ததும் வாக்கிங் போகலாம்..." என்று பேசியபடி அவளை வரவேற்பறைக்கு அழைத்து வந்தவன் அங்கிருந்த சோபாவில் அவளை அமர வைத்தான்...

"ஏதாவது குடிச்சியா... ?" அவனது கேள்விக்கு அவள் இல்லையென்று தலையாட்டினாள்...

அவன் உள்ளே சென்று சமையல்க்கார அம்மாவிடம் சொல்லி அவளுக்குப் பால் கொண்டு வந்து கொடுத்தான்... அதை வாங்கிப் பருகியவளின் விழிகள் அவன் மீதே இருந்தது... அவனது பணிவிடையில் அவளது விழிகள் கலங்கியது...

"ரொம்பத் தொந்தரவு கொடுக்கிறேனோ மாமூ..."

PDF தமிழ் .com

"அடிச்சு பல்லை கழட்டிருவேன்... நீ எனக்குத் தொந்தரவா...?" என்று அவளைக் கோபமாய் முறைத்தவனஂ ,

"இதுக்கு நான் கொடுத்து வச்சியிருக்கணும்..." என்று உரிமையுடன் முடித்தான்...

சிறிது நேரம் அவளிடம் பேசியிருந்துவிட்டு எழுந்தவனஂ , "ஈவினிங் ஷாப்பிங் போகலாம்... ரெடியாயிரு..." என்று கூற...

"வாவ் மாமூ... செம , ஜாலி ஜாலி..." என்று அவள் சிறுபிள்ளை போன்று குதூகலித்துக் குதித்தாள்...

"ஷ்... இப்படிக் குதிக்கக் கூடாது..." என்று கடிந்தபடி அவளை மீண்டும் சோபாவில் அமர வைத்தவன் அறையை நோக்கி சென்றான்...

அர்ச்சனா அவனைப் பார்த்தபடி அமர்ந்திருந்தாள்... அவளது மனதில் வேறு பல நினைவுகள் எழுந்து அவளைச் சோகத்தில் ஆழ்த்தியது... அலைபாயும் மனதுடனஂ , கலங்கும் விழிகளுடன் அவள் அப்படியே அமர்ந்திருந்தாள்...

****

உடற்பயிற்சி கூடத்தில் ட்ரெட்மில்லில் தடதடவென வேகமாக ஓடி கொண்டிருந்தான் விஜய்... ட்ராக் சூட்டுமஂ , கையில்லா பனியனும் அணிந்திருந்த அவன் ஆண்மையின் இலக்கணமாய் அத்தனை அழகாய் இருந்தான்... அவனது அழகு கண்டு அவனை நிறையப் பேர் திரைப்படங்களில் நடிக்க அழைப்பு விடுத்தனர்... ஏனோ அவனுக்கு அதில் எல்லாம் விருப்பம் இருந்தது கிடையாது...

அவனது அழகு அவனவளுக்கு மட்டுமே... தன்னவள் பார்த்து ரசிப்பதற்கு மட்டுமே தனது அழகு இருக்க வேண்டும் என்று நினைப்பவன் அவன்... மனதாலுமஂ , உடலாலும் அவன் ஒரு ஸ்ரீராமச்சந்திரமூர்த்தி... அதனால் தான் அவன் தனக்குத் தானே கட்டுப்பாடு விதித்துக்

கொண்டு கட்டுக்கோப்பாய் வாழ்ந்து வந்தான்... ஆம் , அவனது கட்டுப்பாடு , கண்ணியம் எல்லாமே இறந்தகாலம்... அவனது வாழ்க்கை தடம் மாறி போய் வெகுநாட்களாகி இருந்தது...

"விஜய்..."

தந்தையின் குரல் காதிற்கு எட்டினாலும் அவன் ஓடுவதை நிறுத்தவில்லை... அவன் வெறிப்பிடித்தார் போன்று ஓடி கொண்டிருந்தான்... சேதுபதி கோபத்துடன் ட்ரெட்மில்லின் ஸ்விட்சை அணைத்தார்... அதில் அவன் சலிப்பாய் அவர் புறம் திரும்பி ,

"வாட் டாட்... ?" என்று எரிச்சலுடன் கேட்டபடி ட்ரெட்மில்லில் இருந்து இறங்கி தனது வியர்வையைத் துண்டால் துடைத்தபடி அங்கிருந்த நாற்காலியில் தொப்பென்று அமர்ந்தான்...

அங்கிருந்தபடி பார்த்தால் தூரத்தில் இருக்கும் கடல் கண்ணுக்கு குளிர்ச்சியாய் அழகாய் தெரியும்... அவனது விழிகள் அங்கே நிலைக்குத்தி நின்றது... அவன் மறந்தும் தந்தையின் புறம் திரும்பி பார்க்கவில்லை...

"விஷ்ணு கூட எதுக்கு வம்பு பண்ற... ?"

"ஏன்னு உங்களுக்குத் தெரியாதா டாட்... ?" அவனது குரலில் அத்தனை சூடு...

"இதனால் என்ன லாபம் விஜய்... ? நீ அவனுக்கு ஏற்படுத்திய நஷ்டத்தை விட அவன் உனக்கு ஏற்படுத்திய நஷ்டம் பல மடங்கு அதிகம்... இப்படியே போச்சுன்னா தொழிலில் நமக்கு இருக்கிற நல்ல பெயர் பாதிக்கப்படும்... ஒரு தொழிலதிபனாய் புத்திசாலித்தனமாய் யோசிச்சு முடிவெடு..."

தந்தையின் அறிவுரை அவனது செவியில் நுழைந்து அவனது அறிவுக்கு எட்டிய போதும் அவனது மனது அதைக் கேட்காது அடம்பிடித்தது... சிறிது நேரம் யோசித்தவன்

PDF தமிழ் .com

நீண்ட பெருமூச்சு விட்டுத் தன்னைச் சமன்படுத்திக் கொண்டார் ,

"ஓகே டாட்... நீங்க சொன்னபடி நடந்துக்கிறேன்..." என்றவன் ,

"ஆனா ஒரு தொழிலதிபனாய் இந்த மாதிரியான ரிஸ்க்கான விளையாட்டை விளையாடி பார்க்கத்தான் நான் விரும்பறேன்... என்னால் ஜெயிக்க முடியும் டாட்... நிச்சயம் நான் ஜெயிச்சு காட்டுவேன்..." உறுதியோடு அதேசமயம் தீர்க்கத்துடன் உரைத்த மகனை கண்டு அவருக்குப் பெருமையாக இருந்தது...

"தட்ஸ் குட் மை சைன்... உன்னை என் மகன் விஜய்ன்னு சொல்றதை விட... விஜே க்ரூப்ஸ் எம்டி , சாதிக்கப் பிறந்தவன்னு எல்லோரும் சொல்றதை கேட்பது தான் எனக்குப் பெருமை..." என்று மகனது தோளில் தட்டி கொடுத்த சேதுபதி அவனிடம் ,

"சீக்கிரம் ஒரு கல்யாணத்தைப் பண்ணிக்கோ விஜய்..." என்று கூற...

வேதனையில் கசங்கிய முகத்துடன் தவிப்புடன் அவரை ஏறிட்டு பார்த்தவன் , " என்னால்... என்னால்... அவளை மறக்க முடியலை டாட்..." என்றவனது குரல் கலங்கி ஒலித்தது...

"விஜய்..." அவர் திகைப்புடன் அவனைப் பார்த்தார்...

"எஸ் டாட்... ஐ ஸ்டில் லவ் ஹர்... அவளை மறக்க முடியலை... அவள் வேணும்ன்னு என்னோட ஒவ்வொரு அணுவும் துடிக்குது... வாழ்வா ? சாவா ? ன்னு மனசுக்குள் பெரும் போராட்டமா இருக்கு டாட்..." மனதிலிருந்த அளவுக்கு அதிகமான காதலில் அவன் புலம்பினான்...

"எனக்கு என்ன குறைச்சல் டாட்... ? என்னை விட அவன் கிட்ட அப்படி என்னயிருக்கு டாட்... ? போயும் , போயும் அவனைப் போய்... அவன் என் கால் தூசு பெற மாட்டான்... அவனைப் போய்க் கல்யாணம் பண்ணியிருக்கிறாள்..."

என்று கோபத்துடன் படபடவெனக் கூறியவனை வருத்தத்துடன் பார்த்திருந்தார் அவர்...

"விடு விஜய்..." என்று அவர் அவனைச் சமாதானப்படுத்த முயல...

"எப்படி விட முடியும் டாட்... ? மறக்க முடியலை... எதையும் மறக்க முடியலை..." தலையில் இருகைகளை வைத்துக் கொண்டு தரையைப் பார்த்தபடி கீழே குனிந்து புலம்பிய மகனை கண்டு அவருக்கே பரிதாபமாக இருந்தது...

"இதற்கு என்ன தான் முடிவு விஜய்... ?"

"அவள் என்னைத் தேடி வரணும் டாட்..."

"வந்து..." அவர் அதிர்ச்சியுடன் அவனைப் பார்த்தார்...

"எனக்கு அவள் வேணும்... அவ்வளவு தான் டாட்..."

"இது சரியா வரணும்ன்னு எனக்குத் தோணலை..."

"எல்லாம் சரியா வரும் டாட்... அதுக்குத் தான் இந்தப் போராட்டமே..." வெறியுடன் கத்திய மகனை கண்டோ ,

"நான் அறிவுரை சொல்லும் அளவுக்கு நீ சின்னப் பையன் இல்லை விஜய்... உனக்கு என்ன வேணும்? வேண்டாம்? என்பதை முடிவெடுக்கும் முழு உரிமை உனக்கு மட்டுமே இருக்கு..."

"எனக்கு அவள் வேணும்... அட் எனி காஸ்ட்..." என்று இறுதியாய் , அறுதியாய் முடித்துக் கொண்ட விஜய் அங்கிருந்து எழுந்து சென்றான்...

மகனது எண்ணம் அவனை எங்கே கொண்டு போய்விடப் போகிறதோ ? என்று அவருக்குக் கவலையாக இருந்தது... விதிப்படி பயணிக்க அவர் முடிவு செய்துவிட்டார்...

****

அதே நேரம் அர்ஜூனும் மகனிடம் இதைப் பற்றித் தான் விவாதித்துக் கொண்டிருந்தான்...

தமிழ் நாவல்

"இனி நீ விஷ்ணு கூட மோத கூடாது பரத்..."

"அப்பா , நீங்க பேசுறது உங்களுக்கே நியாயமா இருக்கா... ? அவன் நம்ம பட்டுவுக்குப் பண்ணிய துரோகத்தைக் கொஞ்சம் நினைச்சு பாருங்க... அதை நினைச்சு நினைச்சு என் ரத்தம் எல்லாம் கொதிக்குதுப்பா..." பரத் கோபத்தில் பல்லை கடித்தான்...

"எனக்கு மட்டும் கோபம் இல்லைன்னா நினைக்கிற... ? உன்னை விட அதிகக் கோபம் இருக்குது... அவனைக் கண்டந்துண்டமாய் வெட்டி போடணும்ங்கிற வெறி வருது... ஆனா... ?" விரக்தியாய் சிரித்தவன் ,

"என் மகள் என் கைகளில் அவளது அன்பால் பூவிலங்கு போட்டிருக்கிறாள் பரத்... அதை உடைத்தெறிந்துட்டு போக என்னால் முடியலை... என் பட்டுவோட சொல் தான் எனக்கு வேதவாக்கு... அவளை மீறி என்னால் ஒண்ணும் செய்ய முடியாது... நீயும் அதைத் தான் கடைப்பிடிக்கணும் பரத்..."

"அதெப்படி முடியும்... ?" இளரத்தம் அல்லவா அவனது கொதிப்பு அவ்வளவு சீக்கிரம் அடங்குவேனா என்றது...

"பட்டுவே அவன் வேண்டாம்ன்னு முடிவு செய்து ஒதுங்கி இருக்கிறாள்... விஷ்ணுவும் அப்படியே... சம்பந்தப்பட்ட இருவரும் அமைதியா இருக்கும் போது நாமும் அமைதியா இருக்கிறது தான் நல்லது பரத்..."

"அதுக்குன்னு அவனுடைய நம்பிக்கை துரோகத்தைச் சகிச்சிக்கச் சொல்றீங்களா... ? அவன் நம் தொழிலை என்ன வேணா பண்ணிட்டு போகட்டும்... அதைக் கூட நான் ஈசியா கடந்து வந்திருப்பேன்... ஆனா அவன் விளையாடியது நம் பட்டுவோட வாழ்க்கையில்... இதை எப்படிச் சாதாரணமா விட முடியும்... ?"

"நீ சொல்றது எல்லாம் சரி தான் பரத்... நீ அவனுக்கு எதிரா காய் நகர்த்துகிற விசயம் பட்டுவுக்குத் தெரிஞ்சால் வீண் விபரீதமாகிரும்... அதை விட அவள் மீண்டும் அவனை நினைக்கிறதுக்கு நாமளே காரணமாகி விடக் கூடாது..."

தந்தையின் வார்த்தைகள் கேட்டு பரத் அமைதியாக அமர்ந்திருந்தான்...

"நீ விஷ்ணுவை மட்டும் யோசிக்கிற... நான் என் மகளை மட்டுமே யோசிக்கிறேன்... நீ அவனை விட்டு விலகுவது தான் நம் பட்டுவுக்கு நல்லது... அதை மட்டும் செய்... பட்டு அவனை மறந்துட்டு வேறு வாழ்க்கை வாழணும்ன்னு நினைப்பிருந்தால் நான் சொன்னதைச் செய்... இந்த விசயத்தில் கையைக் கட்டிக்கிட்டு வேடிக்கை பார்க்கணும்ன்னு எனக்கு மட்டும் தலையெழுத்தா என்ன...? ஆனா நான் நம்ம பட்டுவுக்காக அமைதியாக இருக்கிறேன்... அவளுக்கு ஒரு நல்ல வாழ்க்கையை அமைச்சுத் தர்றது தான் நம்மளோட முக்கியமான வேலை..."

தந்தையின் கூற்றுப் பரத்திற்குச் சரியென்று தோன்றியது... ஆனால் அதற்காக விஷ்ணுபிரஹானை அப்படியே விட்டு விட அவனுக்கு விருப்பமில்லை... ஏனெனில் அவன் செய்த துரோகம் அப்படிப்பட்டது... சந்தர்ப்பம் கிடைக்கும் போதெல்லாம் அவனை விடாது அடிக்க வேண்டும் என்று பரத் மனதிற்குள் ஆவேசம் கொண்டான்...

அப்போது ஆராதனா அங்கு வரவும் அவர்களது பேச்சு நின்றது... எல்லோரும் இணைந்து காலை உணவு உண்ண ஆரம்பித்தனர்...

"அப்பா..." என்றழைத்த மகளை நிமிர்ந்து பார்த்தான் அர்ஜூன்...

"என்ன பட்டும்மா... ?"

"மாமா , மாமி , கனி எல்லோரும் சென்னைக்கு ஷிப்டாகியிருக்காங்க... சீதா மட்டும் மும்பையில் இருக்கிறாள்... அவளும் இன்னமும் ஒரு மாசத்தில் இங்கே வந்திருவாள்..."

' கனி ' பெயரை கேட்டதும் பரத்திற்குச் சட்டென்று புரையேறியது...

தமிழ் நாவல்

"பார்த்து சாப்பிட கூடாதா... ?" மகனது தலையை வாஞ்சையுடன் தட்டி கொடுத்த அவந்திகா அவனுக்குப் பருகுவதற்கு நீரை எடுத்து கொடுத்தாள்...

"தேங்க்ஸ்ம்மா..." என்றபடி நீரை பருகியவனின் மனக்கண்ணில் பாவாடை தாவணியில் இரட்டை சடை போட்டுக் கொண்டு பெண்மையின் இலக்கணமாய் அழகாய் இருந்த கனிஷ்கா வலம் வந்தாள்... கூடவே அவள் அவனிடம் பேசிய அழகான தருணமும் ஞாபகத்தில் வந்தது...

"ஏன்னா..." என்று தன்னை அழைத்தவளை அவன் நின்று திரும்பி பார்த்தான்...

அவனுக்கு இருந்த வேலை பரபரப்பில் அவள் அழைத்தது பெருத்த எரிச்சலை உண்டு பண்ணியது... அதைவிட அவளது ' ஏன்னா ' என்றழைப்பு அவனது புருவத்தை யோசனையாய் சுருங்க வைத்தது... ஏனெனில் இந்த அழைப்பு மனைவி கணவனை மட்டும் அழைக்கும் பிரத்யேக அழைப்பு... அவனது அன்னை தந்தையை இப்படி அழைப்பதை அவன் தினமும் கேட்கின்றானே...

"நேக்கு... நேக்கு..." என்று திணறியவளை கண்டு அவனுக்குச் சற்றுச் சுவாரசியமாக இருந்தது போலும்...

"நோக்கு என்ன... ?" தாயின் பாசை அவனுக்கும் சில சமயம் வரும்...

"நேக்கு உங்களை ரொம்பப் பிடிச்சியிருக்குன்னா... ஐ லவ் யூன்னா..."

பட்டாம்பூச்சி போல் இமைகள் படபடவெனப் படபடக்க , முகம் செங்காந்தள் மலர் போன்று வெட்கத்தில் சிவந்திருக்க அவனைக் காதலாய்ப் பார்த்திருந்த அந்தப் பதின்பருவ பாவையின் மதி முகத்தை அவனால் என்றுமே மறக்க இயலாது... அது ஏனென்றும் அவனுக்குத் தெரியவில்லை...

அப்போதும் , இப்போதும் அவள் மீது தனக்குக் காதல் இருக்கிறதா ? என்று அவன் சிறிதும் யோசித்துப் பார்த்ததில்லை... ஏனெனில் இருவரின் வயது வித்தியாசம் அப்படி... அதைவிட அன்னையின் வளர்ப்பு அவனை அவளிடம் இருந்து தள்ளி நிற்க சொல்லியது...

அர்ஜூன் மகனை ஒரு பார்வை பார்த்துவிட்டு மகள் புறம் திரும்பினான்... அதில் பரத் நிகழ்காலத்திற்கு வந்தான்...

"ஓ... இத்தனை வருசம் வாழ்ந்த மும்பையை விட்டு அவங்க ஏன் இங்கே வரணும்... ?" அர்ஜூனுக்குக் குழப்பமாக இருந்தது...

"நான் தான் இங்கே வர சொன்னேன்..."

அதைக் கேட்டு மூவருமே திகைத்து போயினர்...

"உனக்கென்ன பைத்தியமா பிடிச்சிருக்கு... ?" பரத் கோபமாய்ச் சீறினான்...

"பரத்..." அர்ஜூன் மகனை கண்களால் அடக்கினான்... அதைக் கண்டு பரத் தன்னைக் கட்டுப்படுத்திக் கொண்டான்...

' மேலே சொல ' என்பது போல் அர்ஜூன் மகளைப் பார்த்தான்... ஆராதனாவோ தந்தையின் பார்வையைச் சந்திக்க முடியாது தலையைக் குனிந்து கொண்டா ,

"அவங்களுக்காகத் தான் நான் இந்தியா வந்தது..." என்றாள் மெதுவே...

மகளது வார்த்தைகள் கேட்டு அர்ஜூன் , அவத்திகாவிற்கு மனம் வலித்தது... தங்களது செல்ல மகள் தங்களுக்கு இல்லையோ என்கிற வலி அது... தங்கையின் பேச்சு கேட்டு பரத்திற்கோ பெருங்கோபம் வந்தது...

"அவங்களுக்குன்னு யாரும் இல்லைப்பா... பாவம் அவங்க... ரொம்பக் கஷ்டப்படுறாங்க... எல்லாம் என்னால் தான்ப்பா..." என்றவளின் விழிகளில் அத்தனை வேதனை தெரிந்தது...

தமிழ் நாவல்

மகளது மனம் புரிந்தார் போன்று அர்ஜூன் அவளது தோளில் ஆறுதலாகக் கையை வைத்து தட்டி கொடுத்தான்...

"அவங்களைப் பார்த்துக்க வேண்டிய பொறுப்பு , கடமை எனக்கு இருக்குப்பா... அதைவிடச் சீதாவுக்கும், கனிக்கும் ஒரு நல்ல வாழ்க்கை அமைச்சு தரணும்... இப்போதைக்கு இது மட்டும் தான் என் மனதில் இருக்கு..."

"அப்போ நாங்க எல்லாம் நோக்கு யாருடி... ?" மனசு பொறுக்காது அவந்திகா மகளைப் பார்த்துச் சத்தம் போட்டாள்...

"அம்மு..." அர்ஜூன் மனைவியை அதட்டினான்...

"உங்களுக்கு என்னம்மா குறை... ? உங்களுக்கு அப்பா , ரெண்டு அண்ணாக்கள் இருக்காங்களே..."

"பேசுடி , நன்னா பேசு... நீ இப்படிப் பேசறதுக்காகத் தான் நாங்க தவம் பண்ணி உன்னைப் பெத்தோம் பாரு... நான் இல்லை , உங்கப்பா தான் உனக்காகத் தவம் இருந்தார்... அவரோட மனசை நீ இப்படி நோகடிச்சிட்டியேடி பாவி..."

"அம்மா , சும்மாயிருக்க மாட்டியா... ? கஷ்டப்படுறவங்களுக்கு உதவுவதால் பட்டு நம்ம பொண்ணு இல்லைன்னு ஆகிறாது... என்னைக்கும் அவள் நம்ம செல்ல பொண்ணு தான்..."

"நல்லா கேட்டுக்கோடி..." அவந்திகா மகளைக் கண்டு நொடித்தாள்...

"தேங்க்ஸ்ப்பா... என்னைப் புரிஞ்சிக்கிட்டதுக்கு..." என்று தகப்பன் தோள் சாய்ந்தாள் மகள்... அவனும் மகளை ஆதரவாய் அணைத்துக் கொண்டான்...

"எல்லாம் என்னால் தானோன்னு எனக்கு ஒரே குற்றவுணர்ச்சியா இருக்குப்பா... நான் என்ன பண்ணட்டும்ப்பா... ?"

"உன் மனசுக்கு என்ன தோணுதோ அதைச் சந்தோசமா செய் பட்டு... நாங்க எல்லாம் எப்போதும் உன் கூடவே இருப்போம்..." என்று மகளைப் பார்த்து புன்னகைத்தவன் மனைவி , மகனை கண்டார் ,

"அப்படித் தானே... ?" என்று அழுத்தமாய்க் கேட்டான்... ' அப்படித்தான் ' என்று கூற வேண்டும் என்கிற மறைபொருள் அதில் ஒளிந்திருந்தது...

"உன் விருப்பப்படி செய் பட்டு..." அவந்திகாவும் , பரத்தும் ஒன்று போல் கூறினர்...

ஆராதனா முகம் மலர மகிழ்ச்சியுடன் எழுந்து கையைக் கழுவி கொண்டு வந்தவள் தனது கைப்பையை எடுத்துக் கொண்டார் ,

"பை அம்மா , அப்பா , அண்ணா..." என்று குதூகலத்துடன் விடைபெற்று சென்றாள்...

"எனக்கு இது பிடிக்கலைப்பா..." பரத் தனது மனதினை வெளிப்படுத்தினான்...

"இதை ஒரு உதவின்னு நினைச்சுக்கோ பரத்..."

"உதவியா இருந்தாலும்..." பரத் இழுத்தான்...

அதற்குள் அர்ஜூனின் அலைப்பேசி அழைத்தது... எடுத்து பார்த்தவனின் முகம் மலர்ந்தது...

"ஸ்ரீ..." என்று மகிழ்ச்சியுடன் அலைப்பேசியை உயிர்ப்பித்தான்...

ஸ்ரீராம் அர்ஜூனின் மூத்தமகன்... இலண்டனில் இருந்து கொண்டு உலகம் முழுவதும் பரவியிருக்கும் அவர்களது தொழில்களைக் கவனித்துக் கொள்கிறான்... இன்னமும் திருமணமாகவில்லை...

ஸ்ரீராம் பெற்றோரிடம் பொதுவாக நலன் விசாரித்தவன் பின்பு தம்பியிடம் தனித்துப் பேச விரும்பினான்... அதனால் தந்தையின் அழைப்பை துண்டித்துவிட்டுப் பரத்திற்கு

தமிழ் நாவல்

அழைத்தான்... அண்ணனது மனம் புரிந்தவனாய் பரத் அழைப்பை ஏற்றபடி அங்கிருந்து அகன்றான்...

"சொல்லுங்கண்ணா..." பரத்திற்கு அண்ணன் மீது மிகுந்த பாசம் , மரியாதை உண்டு...

"என்னடா நடக்குது அங்கே... ?"

"அது வந்துண்ணா..." என்றபடி காரின் கதவை திறந்து உள்ளே ஏறிய பரத் ப்ளூடூத்தை உயிர்ப்பித்துவிட்டு காரை இயக்கியபடி நடந்த விசயங்களைச் சகோதரனிடம் கூற ஆரம்பித்தான்...

"பரத் , முதல் தவறு உன்னிடம் இருந்து தான் ஆரம்பித்திருக்கிறது..." என்று சற்று கண்டிப்புடன் கூறினான் ஸ்ரீராம்... தந்தையிடம் பதிலுக்குப் பதில் மல்லுக்கட்டிய பரத் அண்ணனிடம் அமைதி காத்தான்...

"விஷ்ணு நம்ம பட்டுவை விட்டு விலகிட்டான்... அத்தோடு நம்மை விட்டும்... பிறகு நீ எதுக்கு அவன் கிட்ட வம்புக்கு போகிற... ?"

"அண்ணா , அவன் நம்ம பட்டுவை..." கோபத்துடன் ஆரம்பித்த பரத்தின் குரலை தடை செய்தது ஸ்ரீராமின் அழுத்தமான குரல்...

"பட்டுவை பொறுத்தவரை அவன் முடிஞ்சு போன அத்தியாயம்... நமக்கும் கூட... இனி அவனோட சகவாசம் நமக்கு வேண்டாம்... என்ன நான் சொல்றது புரியுதா... ?"

"ம்..." மெல்ல முனங்கினான் பரத்...

"பட்டுவுக்கு நல்ல மாப்பிள்ளையா பாரு... சீக்கிரம் அவளுக்குக் கல்யாணம் பண்ணி வச்சிரலாம்..."

"அதுக்கு அவள் சம்மதிக்க மாட்டேங்கிறாள் அண்ணா..."

"என்னது... ?" ஸ்ரீராம் திகைப்புடன் கேட்டான்...

"அவள் மனசில் இன்னமும் விஷ்ணு தான் இருக்கான் போலிருக்கு..."

அதைக் கேட்டு ஸ்ரீராம் அமைதியாக இருந்தான்... அந்தக் கணம் அவன் மனதில் அவன் மனக்கவர்ந்த பாவையவளின் தாமரை பூ போன்ற மென்மையான, அழகான மலர் முகம் தோன்றியது...

"இப்போ புரியுதாண்ணா... அவன் முடிஞ்சு போன அத்தியாயம் இல்லை... தொடரும் அத்தியாயம்... ஆனா அர்த்தம் இல்லாத தொடர்ச்சி..." என்றுரைத்த பரத்திற்குத் தங்கையை நினைத்து வருத்தமாக இருந்தது...

தம்பியின் வார்த்தையில் தன்னை மீட்டுக் கொண்ட ஸ்ரீராம், "இப்போதைக்கு அவனைச் சைலண்ட்டா வாட்ச் பண்ணு பரத்... அவன் பட்டு வழியில் குறுக்கிட்டால் பார்த்துக்கலாம்..." என்று தம்பியை சமாதானப்படுத்தினான்...

"இப்படி அதிரடியாய் இல்லை... அமைதியாய்... அதுவும் நேரம் பார்த்து குறி வச்சு அடிக்கணும்..." ஸ்ரீராமின் வார்த்தையில் தொழிலதிபனின் தந்திரங்கள் ஒளிந்திருந்தது...

"ஓகேண்ணா..." என்று நிம்மதியுடன் உரைத்த பரத் அழைப்பை துண்டித்தான்...

சாலையில் கவனத்தைச் செலுத்திய பரத்தின் மனம் மீண்டும் கனிஷ்காவிடம் சென்றது... அவன் தனது தலையைக் குலுக்கி வலுக்கட்டாயமாய் அவளது நினைவை விரட்டியடித்தான்...

பரத் அலுவலகம் வந்திறங்கிய போது அவனுக்காகக் காத்திருந்தாள் சுப்ரஜா... துரையின் மூன்றாவது மகள் இவள்... தொழில் நிர்வாக படிப்பு முடித்து விட்டு பரத்தோடு இணைந்து சில தொழில்களில் பங்குதாரராக இருக்கின்றாள்...

தமிழ் நாவல்

பெரியவர்கள் தங்களுக்குத் திருமணம் பேச விரும்புவதை இருவருமே அறிந்திருந்தனர்... ஆனால் இருவருமே அதைப் பெரிதாய் கண்டு கொள்ளவில்லை... அதது நடக்கும் போது பார்த்துக் கொள்ளலாம் என்று நினைத்தவர்கள் தங்களது நட்பை அப்படியே தொடர்ந்தனர்...

"ஹாய் சுபி..." அட்டகாசமாய்ச் சிரித்தபடி காரிலிருந்து இறங்கினான் பரத்...

"ஹாய் பரத்..." பதிலுக்கு அவளும் புன்னகைத்தாள்...

இருவரும் இணைந்து அலுவலகத்திற்குள் நுழைந்தனர்... அந்த நொடி பரத்தின் நினைவில் இருந்து கனிஷ்கா பின்னுக்குச் சென்றுவிட்டாள்...

****

மத்தியதர மக்கள் வசிக்கும் அடுக்குமாடி குடியிருப்பு அது... அங்குத் தனது காரை நிறுத்தவிட்டு இறங்கிய ஆராதனா நேரே முதல் தளத்தில் இருக்கும் ஆறாவது எண் வீட்டிற்குச் சென்றாள்... அழைப்பு மணியை அழுத்திவிட்டு அவள் காத்திருந்தாள்... சிறிது நேரத்தில் கதவு திறந்தது...

"மன்னி , வாங்கோ... வாங்கோ..." என்று உற்சாகக் குரலில் வரவேற்றாள் கனிஷ்கா...

"நல்லாயிருக்கியா கனி... ?" என்றபடி வீட்டிற்குள் நுழைந்தாள் ஆராதனா...

"நல்லாயிருக்கேன் மன்னி..."

"வாம்மா ஆரு..." என்றபடி அங்கு வந்தார் சுந்தரி...

"மாமி , ஆசிர்வாதம் பண்ணுங்கோ..." ஆராதனா அவரது காலில் விழுந்து வணங்கினாள்...

' பதினாறு பெற்றுப் பெருவாழ்வு வாழ்... ' என்று வாய் வரை வந்த வார்த்தைகளைக் கஷ்டப்பட்டு உள்ளே தள்ளியவர் ,

"சேமமாய் இரு குழந்தே..." என்று மனமார ஆசிர்வதித்தார்...

"மாமா எங்கே... ?"

அவள் கேட்டதும் இருவரும் அவளை ராகவனின் அறைக்கு அழைத்துச் சென்றனர்... படுத்த படுக்கையாய் இருந்த ராகவனின் உடல் மிகவும் மெலிந்து காணப்பட்டது... வயதின் தளர்ச்சியை விட மனதின் தளர்ச்சி அவரை வாட்டி வதைத்தது...

"மாமா..." ஆராதனா அழைத்ததும் அவரது விழிகள் மெல்ல திறந்தது...

தனது காலை தொட்டு கும்பிட்ட ஆராதனாவை கண்டு அவரின் விழிகள் கசிந்தது...

"என்னை... மன்னிச்சிரு... நான்... தப்பு... பண்ணிட்டேன்..." வாய் குழறியபடி கூறியவரை கண்டு மனம் பதைத்தவளாய் அவர் அருகே வந்தாள் ஆராதனா...

"நீங்க என்ன பண்ணுவேள் மாமா... ? விடுங்கோ..." அவரது கையைப் பற்றி அவள் ஆறுதல்படுத்த... ராகவன் அவளை அருகில் அமர சொன்னார்...

அவருடன் மெல்ல பேசியபடி அவரது உடல்நலனை பரிசோதித்தாள் ஆராதனா...

"எல்லாம் நார்மலா இருக்கு மாமி..." என்று சுந்தரியை பார்த்து கூறியவள் ,

"நாளையில் இருந்து மாமாவுக்கு ஆயர்வேத ட்ரீட்மெண்ட் கொடுக்க வீட்டுக்கு ஆள் வருவாங்க..."

"சரிம்மா..."

"நீங்க ரெஸ்ட் எடுங்கோ மாமா..." என்று கூறியவளை கண்டு ராகவன் அவளை உணவு அருந்திவிட்டுச் செல்லுமாறு சைகையில் கூற... அவள் சரியென்று சம்மதமாய்த் தலையசைத்தாள்...

தமிழ் நாவல்

மூவரும் அறையை விட்டு வெளியில் வந்தனர்... இன்னமும் பொருட்கள் பிரிக்கப்படாது ஆங்காங்கே அப்படியே இருந்தது...

"கனி வா... நாம ரெண்டு பேரும் இதையெல்லாம் ஒதுங்க வைக்கலாம்..."

சுந்தரி சிரித்தபடி சமையலறைக்குச் செல்ல... ஆராதனா அங்கிருந்த பொருட்களைப் பிரித்துக் கொடுக்க... கனிஷ்கா அதை அந்தந்த இடங்களில் அழகுற அடுக்கி வைத்தாள்...

"அப்புறம் கனி... படிப்பு முடிஞ்சிருச்சு... என்ன பண்ணலாம்ன்னு இருக்க... ?"

கனிஷ்காவிற்கு ஐஏஎஸ் ஆகவேண்டும் என்பது நீண்ட நாள் கனவு... ஆனால் இப்போது குடும்பம் இருக்கும் சூழ்நிலையில் அது பற்றி நினைத்துப் பார்ப்பது கூடப் பாபம்...

"வேலைக்குப் போகணும் மன்னி..."

"சிவில் என்ஜினியரிங் தானே படிச்சிருக்க... நம்ம கம்பெனியில் டிரை பண்ணி பார்க்கலாமா... ? அங்கே வேலை பார்க்க உனக்கு விருப்பமா... ?"

ஆராதனா அப்படிக் கேட்டதும் கனிஷ்கா பேந்த பேந்தவென விழித்தாள்... ஒருபக்கம் சந்தோசம்... மறுபக்கம் சோகம் என இருவேறு உணர்வுகள் அவளது மனதினை போட்டுத் தாக்கியது...

"சரி மன்னி..." இருக்கும் நிலைமையில் வேலையை ஒத்து கொள்வதைத் தவிர அவளுக்கு வேறுவழியில்லை...

அப்போது கனிஷ்காவின் அலைப்பேசி ஒலித்தது... விஷ்ணுபிரஹானின் இரண்டாவது தங்கை சீதா அழைத்திருந்தாள்... மும்பையில் இருக்கும் அரசுடமை வங்கியொன்றில் மேலாளராகப் பணியாற்றுகின்றாள்... திடுமெனக் குடும்பம் சென்னைக்குக் கிளம்பியதால் அவளால் இங்கு வர முடியவில்லை... பணிமாற்றத்திற்கு

விண்ணப்பித்து இருக்கிறாள்... இன்னும் ஒரு மாதத்தில் மாற்றம் வந்ததும் அவள் இங்கே கிளம்பி வந்துவிடுவாள்...

"மன்னி , சீதா தான் பேசுறா... உங்க கிட்ட பேசணும்ன்னு சொன்னா..." என்றவாறே கனிஷ்கா தனது அலைப்பேசியை ஆராதனாவிடம் கொடுத்தாள்...

அதை உயிர்ப்பித்துக் காதில் வைத்த ஆராதனா , " நல்லாயிருக்கியா சீதா... ?" என்று கேட்க...

"நல்லாயிருக்கேன் மன்னி... நீங்க எப்படியிருக்கேள்... ?"

"நல்லாயிருக்கேன்... உனக்கு வரன் பார்க்கலாமா... ? மாமி ரொம்ப வருத்தப்படுறா..."

அந்தக் கணம் சீதாவின் மனக்கண்ணில் ஸ்ரீராமின் முகம் மின்னி மறைந்தது... கருப்பாக இருந்தாலும் களையாக இருந்தவனின் வசீகரமான முகம் இப்போதும் அவளது நினைவில் இருந்து அகலவில்லை...

"எனக்கு உன்னை ரொம்பப் பிடிச்சியிருக்கு... இந்த ஸ்ரீராமிற்கு ஏற்ற சீதா நீ தான்னு நான் முடிவு பண்ணிட்டேன்... ஆம் , நான் உன்னைக் காதலிக்கிறேன்..."

அசட்டுத்தனமாகக் காதலை கூறாது கம்பீரமாகக் காதலை கூறியவனை அவளால் இன்னமும் மறக்க முடியவில்லை... அதேசமயம் அவனது காதலையும் அவளால் இன்னமும் ஏற்றுக் கொள்ள முடியவில்லை...!

“குடும்பம் இருக்கும் நிலைமையில் கல்யாணத்தைப் பத்தி எல்லாம் நினைச்சு கூடப் பார்க்க முடியாது மன்னி... ”

“நானில்லையா சீதா... ?” ஆராதனாவின் குரல் ஆதங்கத்துடன் ஒலித்தது...

“நீங்க இல்லைன்னு நான் சொன்னேனா... ?”

“பிறகு ஏன்... ?”

தமிழ் நாவல்

“இப்போ வேண்டாம் மன்னி... ” என்றவள் வேறு பேச்சு பேச... வேறுவழியின்றி ஆராதனாவும் அவளைப் பின்பற்றினாள்...

பேசி முடித்து அலைப்பேசியை அணைத்துக் கனிஷ்கா கையில் கொடுத்தவள் ,

“பிடி கொடுக்க மாட்டேங்கிறா... ” என்க...

“உங்களை மாதிரி... ” என்று கனிஷ்கா சிரித்தாள்...

“ஏய் வால , என்னை ஏன் வம்பிழுக்கிற... ?”

ஆராதனா சிரித்தபடி அங்கிருந்த ஒரு பையைப் பிரித்தாள்... அதில் நிறையப் புகைப்படத் தொகுப்புகள் இருந்தது... ஆர்வம் மேலோங்க அதைப் பிரித்துப் பார்த்தவள் அப்படியே சிலையாய் சமைந்து போனாள்...

அதில் கல்லூரி மாணவனாய் இளமையாய் , அழகாய் , வசீகரமாய்ப் புன்னகைத்துக் கொண்டிருந்தான் விஷ்ணுபிரஹான்... அவனது புகைப்படத்தை மெல்ல வருடி கொடுத்தவளின் விழிகளில் கண்ணீர் ததும்பியது...

அவளது மனம் பழைய நினைவுகளின் தாக்கத்தில் அலைக்கடலாய் ஆர்ப்பரித்தது...!!!

திருத்தமாகும்...!!!

பழைய நினைவுகளில் சுகமாய் மூழ்க துடித்த மனதினை ஆராதனா சட்டென்று மீட்டு கொண்டாள்... மனதின் ரணத்தைக் குத்தி கிளறுவதால் ஏற்படும் வலியானது அவளது மனவேதனைக்குச் சிறந்த மருந்தாக இருப்பது என்னவோ உண்மை தான்... ஆனால் அது அந்தச் சமயம் மட்டுமே... அதற்குப் பின் அவளது வேதனை சிறிதும் குறையாது அப்படியே தான் இருக்கிறது... அதனாலேயே இப்போது எல்லாம் அவள் பழைய நினைவுகளை நினைத்துப் பார்ப்பது இல்லை... அவளால் எதையும் மறக்க இயலாது... ஆனால் அந்த நினைவுகளை மறுக்க முடியும்...

ஆராதனா கலங்கியது ஒரு நொடி தான் என்றாலும் கனிஷ்கா உடனே அதைக் கண்டு கொண்டாள்... நேரே அன்னையிடம் சென்றவள் ,

"காபி கலந்து கொடுங்கம்மா..." என்று கேட்க...

"சித்த பொறு கனி... சாப்பாடே சாப்பிட்டரலாம்..." என்று கூறியபடி சுந்தரி அடுப்பில் தாளிதம் செய்து கொண்டிருந்தார்...

"ம்மா , நேக்கு இல்லை... மன்னிக்கு..."

"ஏன் ஆருவுக்கு என்னாச்சு... ?"

"எல்லாம் உங்க மகனால் தான்..." கனிஷ்கா கோபமாய் வெடித்தாள்...

"விஷ்ணு வந்திருக்கானா... ?" ஆவலுடன் கேட்ட அன்னையைக் கோபமாய் முறைத்து பார்த்தாள் கனிஷ்கா...

"உங்களுக்குள்ள இப்படியொரு ஆசை இருக்கும்ன்னு நேக்கு தெரியாம போச்சேம்மா..." அவளின் குரல் சற்று ஆதங்கத்துடன் ஒலித்தது...

தமிழ் நாவல்

"என்னை என்ன செய்யச் சொல்றடி... ? அவனைப் பத்து மாசம் சுமந்து பெத்தவ நான்... அதான் பெத்த மனசு பதறுது..."

"அவன் மன்னியை ஏமாத்தினவன்... ஒரு பொண்ணை நம்ப வச்சுக் கழுத்தறுக்கிறது எவ்வளவு பெரிய பாவம் தெரியுமாம்மா... ?"

அதற்குப் பதில் பேச முடியாது அமைதி காத்தார் சுந்தரி...

"மன்னி இடத்தில் என்னையும் , சீதாவையும் வச்சு பாருங்கோ... அப்போ புரியும் , மன்னியோட வலி என்னன்னு... ?"

"அது புரிஞ்சதால் தான்டி அவனுக்குச் சப்போர்ட் பண்ணாம விலகியிருக்கேன்... நான் மட்டும் உம்முன்னு சொன்னால் போதும்... என் பையன் நம்மளை தங்கத்தட்டில் வச்சு தாங்குவான்..." என்று பெருமையாகச் சொன்னவரை ஆதுரத்துடன் பார்த்தாள் கனிஷ்கா...

அவளுக்குமே அவளது அண்ணனை நிரம்பப் பிடிக்கும்... மூன்று பெண்களுக்கு இடையில் ஒற்றை ஆண்மகனாய் அவன் பிறந்த போதும்... ஒரு பெண்ணாய் சகோதரிகள் படும் கஷ்டங்களைக் கண்டு அதைத் தனது கஷ்டமாய் எண்ணி என்றும் அவர்களுக்கு ஆதரவாய் இருந்தவன் அவன்... சுருக்கமாகச் சொல்வது என்றால் அவன் ஒரு தாயுமானவன்... அப்படிப்பட்டவனா ஆராதனாவிற்குத் துரோகம் இழைத்தது... அவளால் இன்னமும் அதை நம்ப முடியவில்லை...

"போதும் உங்க மகன் புராணம்... இப்போ டபுள் ஸ்ட்ராங்கா மன்னிக்கு பிடிச்ச மாதிரி பில்டர் காபி போட்டு கொடுங்கோ..."

காபி போடும் போதே அன்னையின் நினைவு மகனிடம் சென்றுவிட்டது... டீ , காபி கூடக் குடிக்காத சமத்து பையன் விஷ்ணுபிரஹான்... அப்படிப்பட்டவன் ஏன் இப்படி மாறி போனான்... ? அவருக்குப் பெருத்த கவலையாக இருந்தது...

"இந்தாடி கனி..." காபி தம்பளரை மகள் கையில் கொடுத்தார்...

அதை வாங்கிக் கொண்ட கனிஷ்கா அன்னையிடம் , " மறந்தும் மன்னி கிட்ட அண்ணாவை பத்தி பேசாதீங்கோ..." என்க...

"நான் எதுக்குடி..." அவர் ஆரம்பித்ததும் அவரது வாயில் கை வைத்து தடுத்தவள் அவரைச் சமையலறை வாயில் அருகே அழைத்துச் சென்று ஆராதனாவை சுட்டிக்காட்டினாள்...

புகைப்படத் தொகுப்பை கையில் வைத்துக் கொண்டு அதைப் பார்த்திருந்த ஆராதனாவை கண்ட சுந்தரி கேள்வியாய் மகளைப் பார்த்தார்...

"உங்க மகன் ஃபோட்டோவை பார்த்து தான் மன்னி ஓவர் ஃபீலிங்கில் இருக்கா..."

ஆராதனாவை நினைத்து சுந்தரியின் விழிகள் கலங்கியது... கலங்கிய விழிகளைப் புடவை முந்தானையில் துடைத்து கொண்டவர் ,

"இதை இப்படியே விட முடியாது கனி... நடந்து முடிஞ்ச விசயத்தைப் பத்தி நினைச்சிண்டு இருக்கிறது சரியில்லை... ஆரு வாழ வேண்டிய பொண்ணு... அவளோட வாழ்க்கை நமக்கு முக்கியம்..." என்றவர் அடுப்பை அணைத்துவிட்டு மகளை அழைத்துக் கொண்டு ஆராதனாவை தேடி சென்றார்...

"மன்னி..." கனிஷ்காவின் குரலில் தன்னைக் கட்டுப்படுத்திக் கொண்ட ஆராதனா முகத்தைச் சிரித்தபடி வைத்துக் கொண்டு அவளைத் திரும்பி பார்த்தாள்...

"உங்களுக்குப் பிடிச்ச பில்டர் காபி..." என்று காபி தம்பளரை நீட்டிய கனிஷ்காவை கண்டு ,

"தேங்க்ஸ்..." என்றபடி ஆராதனா அதை வாங்கிக் கொண்டாள்... அவளது மனவுளைச்சலுக்கு ஆறுதலாகச் சூடான காபி தேவைப்பட்டது...

தமிழ் நாவல்

ஆராதனா காபி குடித்து முடிப்பதற்குள் கனிஷ்கா புகைப்படங்கள் இருந்த பையை மெல்ல எடுத்து தள்ளி வைத்துவிட்டாள்...

"ஆரும்மா..." அன்பாக அழைத்த சுந்தரியை அவள் என்னவென்று பார்க்க...

"உன்னோட வாழ்க்கையைப் பத்தி யோசிச்சு பார்த்தியாம்மா... ?"

"என்னோட வாழ்க்கைக்கு என்ன மாமி... ? நல்லா தானே இருக்குது..."

"த்ச்ச , நான் அதைக் கேட்கலை... உன்னோட கல்யாணத்தைப் பத்தி கேட்கிறேன்..."

"எனக்குக் கல்யாணம் பண்ணிக்கப் பிடிக்கலை மாமி..." வெறுமையுடன் வந்தது அவளது வார்த்தைகள்...

"இப்படிச் சொல்ல கூடாது ஆரு... நீ விஷ்ணுவை மறந்துட்டு உனக்குன்னு ஒரு வாழ்க்கையை வாழ ஆரம்பிக்கணும்..."

"நிச்சயம் நான் அவரை மறந்துருவேன் மாமி... வேறொருத்தியோட புருசனை காதலிக்கும் அளவுக்கு நான் ஒண்ணும் தரம் கெட்டு போகலை... மறக்கிறதுக்குக் கொஞ்ச நாளாகும்..."

"அதுக்குப் பிறகு நீ கல்யாணத்தைப் பத்தி யோசிக்கணும்..." அவர் சிறிது கண்டிப்புடன் கூற...

"முயற்சிக்கிறேன் மாமி..." சோகையாய் புன்னகை சிந்தியவளை அணைத்துக் கொண்ட சுந்தரி ,

"முயற்சிக்கிறேன் இல்லை... முடியணும்... காலுக்கு உதவாத செருப்பைக் கழட்டி தூர எறியற மாதிரி நீ விஷ்ணுவை மறந்துட்டு உன் வாழ்க்கையைச் சந்தோசமாய் வாழணும்..."

அவர் கூறியதை கேட்டு அவள் வெளியில் சிரித்தாலும் உள்ளுக்குள் ஓவென்று அழத்தான் செய்தாள்... அதையும்

தாண்டி இந்தத் துன்பத்தைக் கடந்து வர வேண்டும் என்று அவள் உறுதியாக எண்ணி கொண்டாள்...

மதிய உணவை அங்கேயே உண்டுவிட்டு சிறிது நேரம் பேசியிருந்துவிட்டு எழுந்த ஆராதனா ராகவனிடம் விடைபெற வந்தாள்... அப்போது சுந்தரி கணவனிடம் ,

"ஆரு நல்ல முடிவு எடுத்திருக்கிறாள்... கல்யாணம் பண்ண சம்மதிச்சிருக்கிறாள்..." என்று கூற...

ஆராதனா திகைப்பாய் சுந்தரியை பார்த்தாள்... ராகவன் மகிழ்ச்சியாய் அவளைப் பார்த்தார்... அவளை அருகில் அழைத்தவர் அவளது தலை மேல் செயல்படும் தனது வலதுகையைக் கொண்டு ஆசிர்வாதம் செய்வது போல் வைத்தவர் ,

"நல்ல... முடிவு... அவன்... உனக்கு... வேண்டாம்..." ஒவ்வொரு வார்த்தையும் தனித்தனியே என்றாலும் அதை அழுத்தமாய் உச்சரித்தார்...

"மாமா..." என்றழைத்தவளுக்கு விழிகள் கலங்கியது...

' அழ கூடாது... அதுவும் அவனுக்காக நீ ஒரு சொட்டுக் கண்ணீர் வடிக்கக் கூடாது... நீ கல்யாணம் பண்ணினால் தான் என் மனப்பாரம் அகலும்... ' என்று அவர் வலதுகையால் சைகையில் கூறியபடி தனது நெஞ்சை நீவி விட்டுக் கொண்டார்...

"உனக்கு... பாவம்... பண்ணின்டேன்... எனக்கு மோட்சம் கொடு..." அவளது கையைப் பிடித்துக் கொண்டு அவர் கண்ணீருடன் மன்றாட...

பெரியவர் அவர் தனது கையைப் பிடித்துக் கொண்டு கண்ணீர் விடுவதைக் கண்டு அவளால் மனம் தாங்க முடியவில்லை...

"எனக்காக இல்லைன்னாலும் உங்களுக்காகவாவது நான் கல்யாணம் பண்ணிக்கிறேன்..." என்றவளது விழிகளில் இருந்து விடாது கண்ணீர் வழிந்தது...

தமிழ் நாவல்

அவளது வார்த்தையில் மற்ற மூவரின் முகமும் மலர்ந்தது... அவளது முகமோ வேதனையில் கசங்கியது...

இதயத்தில் குடியிருக்கும் ஒருவனை அழித்துவிட்டு வேறொருவனை அதில் குடிவைப்பது என்பது மிகவும் சிரமமான காரியம்... அவளை அதைச் செய்யச் சொல்கிறார்கள் எல்லோரும்... தன் ஒருத்திக்காக எல்லோரும் அழுவதை விட... தான் ஒருத்தி மட்டும் எல்லோருக்காகவும் அழுதுவிட்டு போவது மேல் என்றே அவளுக்குத் தோன்றியது ...

பெற்றோர் , சகோதரர்கள் அறிவுரை கூறிய போது ஏற்றுக் கொள்ளாத ஆராதனா இப்போது இவர்களின் வார்த்தைக்குக் கட்டுப்பட்டாள்... இவர்கள் அவளது மனங்கவர்ந்தவனின் பெற்றோர் என்பதாலா...! அவளுக்கே அது தெரியவில்லை...

"வர்றேன் மாமா..." அவள் விடைபெற்றதும் அவர் சம்மதமாய்த் தலையசைத்தார்...

"சீதாவுக்கு ஏதாவது வரன் வந்ததா... ?" ராகவனின் அறையை விட்டு வெளியில் வந்த ஆராதனா சுந்தரியிடம் கேட்டாள்...

"பேங்கில் மேனேஜர்ன்னு சொன்னதும் எல்லாம் பெரிய இடமா தான் வருது... ஆனா அதுக்கேத்த மாதிரி சீர் கேட்கிறா... சீர் செய்ற நிலைமையிலா நாம இருக்கோம்..." வருத்தத்துடன் கூறிய சுந்தரியை கண்டு அவளது மனம் வருத்தம் கொண்டது...

' ம் ' என்னும் முன் உலகத்தையே ஆட்டிப்படைக்கும் வல்லமை பெற்றவன் அவர்களது மகன்... அத்தகைய மகனை தனக்காகத் துறந்து அவனது உதவியை நாடாது வாழும் அவர்களைக் கண்டு அவளது விழிகள் பனித்தது...

"நான் பார்த்துக்கிறேன் மாமி... நல்ல வரனா இருந்தால் பேசி முடிச்சிரலாம்..."

"நீயும் எத்தனை தான் செய்வ ஆரு... நீ இவ்வளவு செய்றதே பெரிய விசயம்... ரெண்டு பொண்ணுங்க கல்யாணத்தை நாங்க பார்த்துக்கிறோம்மா..."

அதைக் கேட்டு அவள் அமைதியாக இருந்தாள்... அவர் அப்படிக் கூறினாலும் தன்னால் இயன்ற உதவி செய்ய வேண்டும் என்று அவள் உறுதியாகத் தீர்மானித்துக் கொண்டாள்...

"சரி மாமி... எதுவாக இருந்தாலும் பார்த்துக்கலாம்... வைதேகி மன்னிக்கு இது எத்தனாவது மாசம்... ? டெலிவரிக்கு இங்கே வர்றாங்களா... ?"

விஷ்ணுபிரஹானின் முதல் தங்கை வைதேகி... அவளுக்குத் திருமணமாகி ஒரு ஆண்குழந்தை இருக்கிறது... இப்போது இரண்டாவது குழந்தை உண்டாகி இருக்கிறாள்...

"ஆறு முடிய போகுது... அடுத்த மாசம் அவளை இங்கே கூட்டிட்டு வரணும்..."

"பேஷா கூட்டிட்டு வாங்கோ மாமி... நம்ம ஹாஸ்பிட்டலிலேயே டெலிவரி பார்த்துக்கலாம்... அதுவும் நானே பார்க்கிறேன்..." என்று பூவாய் மலர்ந்தவளை கண்டு அவரது மனம் நெகிழ்ந்து போனது...

"உன் மனசுக்கு எந்தக் குறையும் வராது ஆரு..." என்று அவர் அவளை உச்சிமுகர்ந்தார்...

கார் வரை அவளை வழியனுப்ப வந்தனர் அம்மாவும் , மகளும்... அப்போது அங்குப் பூ விற்கும் பெண் செல்லவும்... அவளை அழைத்துப் பூ வாங்கி அதை ஆராதனாவின் தலையில் சூடிவிட்டார் சுந்தரி... காரிலேறிய ஆராதனா புன்னகையுடன் அவர்களிடம் இருந்து விடைபெற்று கிளம்பினாள்...

"ரொம்ப நல்ல பொண்ணு இல்லையா கனி... ?"

"ஆமாம்மா..."

"இவளுக்கேத்த மகாராஜன் எங்கே இருக்கானோ... ?" என்று அவர் புலம்ப...

"இனிமேலா பிறக்க போறான்... ? எங்கோ பிறந்திருப்பான்... நீங்க வாங்கோ..." என்றபடி அவள் அம்மாவை அழைத்துக் கொண்டு தங்களது வீடு நோக்கி சென்றாள்...

காரில் செல்லும் போதே ஆராதனா பரத்திற்கு அழைத்தாள்... தங்கையிடம் இருந்து அழைப்பு என்றதும் வேலையைக் கூட ஒதுக்கி வைத்து விட்டு அவன் அவசரமாக அவளது அழைப்பை எடுத்தான்...

"என்னடா பட்டு... ?" பதட்டத்துடன் ஒலித்தது அவனது குரல்...

"அண்ணா ரிலாக்ஸ்..." என்று கூறி அவள் சிரிக்கவும் தான் அவனும் ரிலாக்ஸானான்...

"என்ன விசயம் சொல்லுடா... ?"

"நம்ம கன்ஸ்ட்ரக்சன் கம்பெனியில் கனிக்கு ஒரு வேலை போட்டு கொடுக்க முடியுமாண்ணா... ?" கனிஷ்கா பெயரை கேட்டதும் அவன் அப்படியே உறைந்தான்...

"நம்ம கன்ஸ்ட்ரக்சன் கம்பெனியிலா... ?" அவன் தாடையைத் தடவியவாறு யோசித்தான்...

"எனக்காக அண்ணா... ப்ளீஸ்..."

"உனக்காக இதைக் கூடச் செய்ய மாட்டேனா... ? இதுக்கு எதுக்கு ப்ளீஸ் எல்லாம் போட்டுக்கிட்டு..." என்று தங்கையைக் கடிந்தவன் ,

"நம்ம வேளச்சேரி ப்ரான்ச்சில் வந்து ஜாயின் பண்ணிக்கச் சொல்லு பட்டு..."

"மெயின் ப்ரான்ச்சில் வேலை போட்டுக் கொடுக்கக் கூடாதாண்ணா... ?"

' நான் இருக்கும் இடத்தில் அவளுக்கு வேலையா... ? நான் வேலை செய்யணுமா ? வேண்டாமா ? பட்டு... ' மனதிற்குள் சங்கடமாய் முனங்கியவன் ,

"எங்கே வேலை பார்த்தாலும் ஒண்ணு தான் பட்டு... சம்பளம் பத்தி கவலைப்படாதே... நல்ல சம்பளமா கொடுக்கிறேன் போதுமா... ?" என்று அவன் புன்னகைக்க...

"ரொம்பச் சந்தோசம்ண்ணா... தேங்க்ஸ்..." என்றவள் அழைப்பை துண்டித்தாள்...

அலைப்பேசியை மேசை மீது வைத்த பரத் நாற்காலியில் சாய்ந்து அமர்ந்தான்... அவன் கனிஷ்காவை பார்த்து பல வருடங்களாகி விட்டது... இப்போது எப்படியிருப்பாள்... ? என்கிற சிறு ஆர்வம் அவனுள் எட்டிப்பார்க்க தான் செய்தது...

' உனக்கு இது தேவையா... ?' அவனது மனசாட்சி கண்டித்ததும் அவன் அவளது நினைவை ஒதுக்கி வைத்துவிட்டு தனது வேலையில் ஆழ்ந்தான்...

****

விஷ்ணுபிரஹான் முக்கியமான கோப்புகளில் மளமளவெனக் கையெழுத்து போட்டுக் கொண்டிருந்தான்... அப்போது அவனது அலைப்பேசியில் ' வாட்ஸ்அப் ' பில் இருந்து குறுஞ்செய்தி வந்ததற்கான ஒலி கேட்டது... ' யாரது ?' என்று லேசாகத் தலையைத் திருப்பிப் பார்த்தவன் அனுப்பியவரின் பெயரை கண்டதும் தனது வேலையை அம்போவென விட்டுவிட்டு வேகமாக அலைப்பேசியைத் திறந்து பார்த்தான்...

அவனது அன்னை சுந்தரி ஆராதனாவின் தலையில் பூ வைத்துவிடும் காட்சி புகைப்படமாக வந்திருந்தது... பக்கத்தில் அவனது செல்ல தங்கை கனிஷ்கா... கற்பாறைக்குள் இருந்து கசியும் ஈரத்தை போன்று இருவரையும் பார்த்து அவனது விழிகள் லேசாகக் கலங்கியது...

தனது வீட்டினரை பார்க்க வேண்டும் என்கிற ஏக்கம் அவனது மனதில் விருட்சமாக எழுந்தது... ஆனால் அவனால் அங்குச் செல்ல முடியாது... அதற்குக் காரணம் அவனது தந்தையின் வார்த்தைகள்... அதுவும் ஆராதனாவிற்காகப் பரிந்து கொண்டு அவர் அவனிடம் கோபித்துக் கொண்டார்...

எல்லாவற்றிற்கும் பிள்ளையார் சுழி போட்டவர் அவர் தான்... தந்தை மீதிருந்த அவனது கோபம் அடங்க மறுத்தது... அவன் விழிகளை மூடி முயன்று தன்னைக் கட்டுப்படுத்திக் கொண்டான்... இப்போது அவர் படுத்த படுக்கையாக இருப்பது கேள்விப்பட்டு அவனது இதயம் வேதனையுற தான் செய்கிறது... ஆனால் அவரின் பிடிவாதத்தின் முன் அவனால் எதுவும் செய்ய முடியவில்லை...

மீண்டும் அவன் அலைப்பேசியைப் பார்த்தான்... அதில் புன்னகை முகத்துடன் நின்றிருந்த ஆராதனாவின் பிம்பத்தின் மீது அவனது விழிகள் நிலைக்குத்தி நின்றது...

பிரமாதமான அழகி தான்... இல்லையென்று யாரும் சொல்லிவிட முடியாது... ஆனால் அவனுக்கோ அவளது அழகு கசந்தது...

‘ ஆடு பகை குட்டி உறவு... அதை மாற்றி அமைத்திருக்கிறது நீ தான்டி... நான் உனக்குப் பகை , என் பெற்றோர் உனக்கு உறவா... ?’ அவன் வெறுப்பாய் அவளைப் பார்த்தான்...

' ஏன்டி நான் உன்னைப் பாதிக்கலை... ? அப்படி நான் உன்னைப் பாதிச்சிருந்தேன்னா நீ இப்படியா சிரிச்சிக்கிட்டு இருப்ப... ? உன் விசயத்தில் நான் ஏமாந்து போயிட்டேன்டி... நீ ஒரு ஏமாத்துக்காரி , வேசக்காரி... ' அவன் மனதிற்குள் அவளைச் சராமாரியாகத் திட்டி தீர்த்தான்... அப்படியிருந்தும் அவனது மனம் ஆறவில்லை...

அடுத்த நொடி இன்டர்காம்மை எடுத்தான் , " முரளி..." என்று அலறினான்... மறுநொடி முரளி அவனது அறை கதவை தட்டி அனுமதி வேண்டிவிட்டான் ,

"எஸ் சார்..." என்று அவன் முன்வந்து நின்றான்...

"சிவசுப்ரமணியம் கிட்ட சொல்லிரு... கேசை ஃபைல் பண்ண போறோம்ன்னு..."

"சார்..." முரளி பெரிதும் தயங்கினான்...

"என்னையவே எதிர்த்து பேச ஆரம்பிச்சிட்டியா முரளி... ?" முரளியின் தயக்கம் அவனை எரிமலையாய் சீற செய்தது...

"அப்படி எல்லாம் இல்லை சார்..." அவன் நடுக்கத்துடன் பதிலளித்தான்...

"அப்போ சொன்னதைச் செய்..." என்று ஆக்ரோசமாய்க் கத்தியவன் ,

"கேஸ் ஃபைல் பண்ணாம இருக்கணும்ன்னா ஆராதனா என்னை நேரில் சந்திக்க வரணும்... என்னைப் பார்த்து பேசணும்... இதையும் சேர்த்து சொல்லிரு... ஆப்சனை நீ சொல்லிரு... அதில் எதைத் தேர்ந்தெடுப்பது என்பது அவர் பாடு..." என்று அவன் அலட்சியமாய்க் கூற...

' நீங்க சொல்றதில் எதைத் தேர்ந்தெடுத்தாலும் அது அவர் தனக்குத் தானே ஆப்பு வச்சிக்கிற மாதிரி தான்... ஒரு மனுசனை மூச்சு விடக் கூட நேரம் கொடுக்காம இப்படி மூச்சு வாங்க அடிக்கணுமா... ?' மனதிற்குள் புலம்பிய முரளி வெளியில் அப்பாவியாய் நின்றிருந்தான்...

விஷ்ணுபிரஹான் அங்கிருந்த மீன் தொட்டி பக்கம் சென்றவன் முரளி இன்னமும் போகாமல் அங்கு நின்றிருப்பதைக் கண்டு அவனைத் திரும்பி பார்த்தான்...

"இன்னும் ஏன் நின்னுக்கிட்டு இருக்க... ?" அவன் கோபமாய் உறுமினான்...

"மீன் செத்து போச்சுன்னா அடக்கம் பண்ணணுமே சார்..." முரளி அப்பாவியாய் விழி விரிக்க...

"கெட் அவுட்..." விஷ்ணுபிரஹான் கத்திய கத்தலில் அவன் துண்டை காணோம் துணியைக் காணோம் என்று

அறையை விட்டு வெளியில் ஓடிவிட்டான்...

விஷ்ணுபிரஹான் பக்கத்தில் இருந்த கையடக்க வலையை எடுத்து மீன் தொட்டியினுள் வீசினான்... வெள்ளையும் , ஆரஞ்சும் கலந்த வண்ணத்தில் அழகாய் இருந்த மீனையே பின்தொடர்ந்தது அவனது வலை... அதுவோ அவனுக்குப் போக்கு காட்டியபடி வேகமாக நீந்தி கொண்டிருந்தது...

"ஆராதனா..." அந்த மீனை கண்டு அவன் பெருமூச்சு விட்டான்...

"உன்னை வலையில் பிடிக்க எனக்கு ஒரு நொடியாகாது... ஆனால் அதை நான் செய்ய மாட்டேன்... நீயா வலைக்குள் வந்து மாட்டணும்... அது தான் எனக்கு வேணும்... வருவ , நீ வருவ... ' பிரஹான் நீங்க தான் எனக்கு முக்கியம்ன்ன ' என்னைத் தேடி ஓடி வருவ... அந்த நாள் தான் நான் வெற்றி பெற்ற நாள்..." அவன் பெருங்குரலெடுத்து வாய்விட்டுக் கத்தினான்...

பெண்ணவளின் தன்மானத்தைக் கேள்விக்குறியாக்கியவன் அவன்... ஆராதனாவை விட்டு விட்டு தனது வாழ்க்கையை அர்ச்சனாவுடன் பிணைத்து கொண்டவன் அவன்... அப்படிப்பட்டவன் இப்போது ஏன் ஆராதனாவை தேடுகின்றான்... ? மனித மனங்கள் பல விசித்திரங்களை உள்ளடக்கியது போலும்...

****

வேலை முடிந்து களைப்பாகத் தனது அறைக்கு வந்து சேர்ந்தாள் சீதா... அவள் தனியாகச் சிறு அறை ஒன்றை வாடகைக்கு எடுத்து தங்கியிருக்கிறாள்... அன்னை போடும் பில்டர் காபிக்காக அவளது நாவு ஏங்கியது... அத்தோடு கொறித்துக் கொள்ள அவர் செய்து தரும் சிற்றுண்டிகள் நினைவு வேறு எழுந்து அவளது பசியைத் தூண்டிவிட்டது... தான் வைத்திருந்த பிஸ்கெட்டை எடுத்து உண்டுவிட்டு நீரை அருந்தியதும் தான் அவளது பசி சிறிது அடங்கியது...

அந்நேரம் அவளது அலைப்பேசி அழைத்தது... +44 என்று ஆரம்பித்த அந்த அழைப்பை கண்டதும் அவளுக்குத் தெரிந்து போனது... இது அவனது அழைப்பு என்று... எடுக்கலாமா ? வேண்டாமா ? என்று அவள் மனதிற்குள் ஒற்றையா ? இரட்டையா ? போட்டு கொண்டிருந்தாள்... அதற்குள் அந்த அழைப்பு ஐந்து முறை அழைத்துவிட்டது...

வேறுவழியின்றி அலைப்பேசியை உயிர்ப்பித்துக் காதில் வைத்தவள் ஒன்றும் பேசாது அமைதி காத்தாள்...

"சீதா..." ஸ்ரீராமின் குரல் அவளது மனதினை தென்றலாய் தீண்டி சென்றது...

அதற்குப் பதில் சொல்லாது அமைதியாக இருந்தவளை கண்டு மறுபக்கம் அவன் பெருமூச்சுவிட்டான்...

"என் கூடப் பேச மாட்டியா... ?" அதற்கும் அவளிடம் இருந்து பதில் இல்லை...

"ஏன்... ? பயமா... ?"

"ம்..." இதற்கு மட்டும் அவள் பதில் சொன்னாள்... அதைக் கேட்டு அவன் திகைத்துப் போனான்...

"பயமா... ? ஏன்... ?" கேள்வியைத் திருப்பிப் படித்தான் அவன்...

"நேக்குமஃ , உங்களுக்கும் ஒத்து வராது... ப்ளீஸஃ , என்னை விட்டுருங்கோ..."

"நான் கருப்பா இருக்கேன்... உனக்குப் பொருத்தமா இல்லைன்னு ஃபீல் பண்றியா... ?"

"ஐயோ , அதெல்லாம் இல்லை..." அவள் பதறி போனாள்... அதைக் கேட்டு அவன் வாய்விட்டுச் சிரித்தான்...

"பிடிக்கலைன்னாலும் வேறுவழியில்லை சீதா... நீ என்னைத் தான் கல்யாணம் பண்ணியாகணும்... நம்ம கல்யாணத்துக்குப் பிறகு என்னை உனக்குப் பிடிக்க ஆரம்பிச்சிரும்... மஞ்சள் கயிறு மாயாஜாலம் தன்

வேலையைக் காட்டும் என்கிற நம்பிக்கை எனக்கு இருக்கு..."

அவனது அதிரடி வார்த்தையில் அவளது இதழ்களில் புன்னகை நெளிந்தது... அடுத்த நொடி அதிரடியாய் பேசியவனின் குரல் அப்படியே காதலில் குழைந்தது...

"நீ தான் என் மனைவின்னு நான் முடிவு பண்ணி பல வருசமாகுது சீதா... கற்பனையிலேயே நான் உன் கூட வாழ்ந்து நமக்கு இரண்டு குழந்தைகள் கூட இருக்கு..." அவனது காதலின் வேகம் கண்டு அவள் திகைத்து போனாள்...

"நேக்கு பயமாயிருக்கு..."

"அதான் ஏன்... ?" அவன் தனது பொறுமையைக் கைவிடாது கேட்டான்...

"உங்களுடைய அடிதடி வாழ்க்கை நேக்கு ஒத்து வராது... நான் அமைதியான வாழ்க்கை வாழ விரும்புகிறேன்..."

"என்னால் உனக்கு அமைதியான வாழ்க்கை அமைச்சு தர முடியும் சீதா... பெர்சனல் வேறு , தொழில் வேறு... என்னுடைய தொழில் வாழ்க்கை இப்படித்தான் இருக்கும்... உலகத்துக்கு ஏற்ற மாதிரி தான் நான் வாழ வேண்டியிருக்கு..."

"வேண்டாமே... இனி நம்ம ரெண்டு குடும்பத்துக்கும் ஒத்து வரும்ன்னு நேக்கு தோணலை..."

அவள் ஆராதனாவை பற்றிச் சொல்கிறாள் என்பதைப் புரிந்து கொண்டவன் , " அது வேறு... இது வேறு... எதைப் பத்தியும் யோசிக்காதே சீதா... உன்னையும் , என்னையும் மட்டும் யோசிச்சு பாரு..." என்று தன்மையுடன் கூற...

அதற்கு அவள் பதில் பேசவில்லை... இதைப் பற்றி எப்போது பேசினாலும் அவளின் பதில் மௌனம் தான் என்பதை உணர்ந்தவன் வேறு பேச்சிற்குத் தாவினான்...

"உன் குடும்பத்தை ரொம்ப மிஸ் பண்றியா சீதா... ?"

"ம்..."

"ஒரு மாசம் தானே பொறுத்துக்கோ... அதுக்குள் நானும் என் எல்லா வேலைகளையும் முடிச்சிட்டு சென்னைக்கு வந்திருவேன்..."

"அதுக்கும் இதுக்கும் என்ன சம்பந்தம்... ?" அவளுக்குச் சுத்தமாய்ப் புரியவில்லை...

"ஏன்னா... நான் தான் உன் ட்ரான்ஸ்பரை நிறுத்தி வச்சியிருக்கேன்... நீ சென்னை வரும் போது உன்னை வரவேற்க நான் அங்கே இருக்க வேண்டாமா... ? அதுக்காகத் தான்..."

அவனது அடாவடி காதலில் அவள் வாயடைத்து போனாள்...

"பை சீதா... ஐ மிஸ் யூ..." அலைப்பேசி வழியாக முத்தத்தைப் பரிசாக அளித்தவன் உடனே அழைப்பை துண்டித்துவிட்டான்...

அவள் தான் திக்பிரம்மை பிடித்தபடி அலைப்பேசியைப் பார்த்தவாறு வெகுநேரம் அமர்ந்திருந்தாள்...

****

ஆராதனா நோயாளிகளைப் பரிசோதனை செய்து கொண்டிருந்த போது சிவசுப்ரமணியத்திடம் இருந்து அழைப்பு வந்தது... அவளது நோயாளிகளை வேறொரு மருத்துவருக்கு மாற்றிவிட்டு அவள் அவரைக் காண சென்றாள்... அறைக்குள் நுழைந்ததும் அவளை அமர சொன்னார் சிவசுப்ரமணியம்...

"எப்படியிருக்கம்மா... ?" அவரது வாய் நலம் விசாரித்தாலும் அவரது முகத்திலிருந்த சங்கடம் விசயம் வேறு என்பதை உணர்த்தியது...

"நல்லாயிருக்கேன் அங்கிள்... என்ன விசயமா என்னை வர சொன்னீங்க... ?" அவள் நேரிடையாக விசயத்திற்கு வந்தாள்...

"சமீபத்தில் எந்தப் பெண்ணுக்காவது கர்ப்பப்பை வீக்கா இருக்குன்னு இன்ஜெக்சன் எதுவும் போட்டியாம்மா... ?"

"நான் இங்கே வந்த நாளில் இருந்து நிறையக் கேஸ் ஹேண்டில் பண்ணியிருக்கேன்... நீங்க யாரை சொல்றீங்கன்னு எனக்குத் தெரியலை..."

அவர் அவளின் முன் ஒரு கோப்பை எடுத்து போட்டார்...

"இதைப் படிச்சு பார் உனக்குப் புரியும்..."

அவள் அவசரமாக அதைப் புரட்டி பார்த்தாள்... பின்பு அவரை நிமிர்ந்து பார்த்தவளாய் ,

"ஆமா அங்கிள்... இந்தப் பொண்ணுக்கு நான் தான் ட்ரீட்மெண்ட் கொடுத்தேன்... அவள் செக்கப் வந்தப்போ மூன்று மாத கர்ப்பம்... கர்ப்பப்பை ரொம்ப வீக்கா இருந்தது... அதான் கர்ப்பப்பை ஸ்ட்ராங்காக இன்ஜெக்சன் போட்டது..." என்ன விசயமாய் ? என்று அவளுக்குப் புரியவில்லை...

"இப்போ அபார்ட் ஆகிருச்சாம்..." என்றவர் தனது கண்ணாடியை கழற்றினார்...

"வாட்... ?" அவள் அதிர்ந்து போனாள்...

"எஸ்ம்மா... அவங்க நம்ம ஹாஸ்பிட்டலில் சேர்ந்திருந்தாலாவது நான் ஏதாவது பண்ணியிருப்பேன்... ஆனா அவங்க வெளியிலுள்ள ஹாஸ்பிட்டலில் சேர்ந்திருக்காங்க... இப்போ உன் மேல் கேஸ் போடணும்ன்னு கொலைவெறியில் இருக்காங்க..."

"ஓ..." என்றவளது குரல் ஓய்ந்து போனது...

"இந்தக் கேஸ் ஃபைல் பண்ணாமல் இருக்கணும்ன்னா இன்னொரு ஆப்சன் இருக்கு..." என்றவரை அவள் யோசனையுடன் ஏறிட்டாள்...

"நீ..." அவர் அதைச் சொல்ல மிகவும் தயங்கினார்...

"எதுவாக இருந்தாலும் சொல்லுங்க அங்கிள்..."

"நீ மிஸ்டர். விஷ்ணுபிரஹானை போய்ச் சந்திச்சுப் பேசினால் இந்தப் பிரச்சனை சுமூகமா முடிஞ்சு போயிரும்..."

அதைக் கேட்டு அவளது முகம் ஒரு நொடி சுருங்கி மறுநொடி பொய்யோ என்பது போல் சாதாரணமாக மாறியது...

"அவருக்குமா , இவங்களுக்கும் என்ன சம்பந்தம் அங்கிள்... ?"

"அவரோட பேக்டரியில் தான் இந்தப் பொண்ணோட கணவன் வேலை செய்கிறானாம்..."

இப்போது அவளுக்கு எல்லாம் புரிந்து போனது... ஆனால் ஏன்... ? விட்டு விலகிய பின்பும் எதற்குத் தன்னைக் கஷ்டப்படுத்திப் பார்க்க வேண்டும்... ? அவளுக்கு மிகவும் குழப்பமாக இருந்தது...

அவள் அமைதியாக அவனை விட்டு விலகியது தான் அவனது இத்தனை கோபத்திற்கும் காரணம் என்பதை அவள் இன்னமும் புரிந்து கொள்ளவில்லை...!

"கேஸ் ஃபைல் பண்ணணும்ன்னா பண்ணிக்கச் சொல்லுங்க அங்கிள்... இதை எப்படி எதிர்கொள்ளணும்ன்னு எனக்குத் தெரியும்..." என்று அவரிடம் தைரியமாக உரைத்தவள் நாற்காலியில் இருந்து எழுந்தபடி ,

"இதைப் பத்தி அப்பா கிட்ட எதுவும் சொல்ல வேண்டாம் அங்கிள்... பிரச்சனை இன்னும் பெருசாகிரும்..."

அதை அவரும் உணர்ந்தவராய் சரியென்று தலையசைத்தார்... மேலும் அவள் அந்தப் பெண் எந்த மருத்துவமனையில் சேர்ந்திருக்கிறாளா ? என்பது பற்றி அவரிடம் கேட்டு தெரிந்து கொண்டவள் அந்தக் கோப்பையும் கையோடு எடுத்துக் கொண்டு அறையை விட்டு வெளியேறினாள்...

அந்த இக்கட்டான சூழ்நிலையிலும் விஷ்ணுபிரஹானின் காலில் போய் விழ அவளது தன்மானம் இடம் கொடுக்கவில்லை... அவள் தன்னம்பிக்கையுடன் அவனுடன் மோத தயாரானாள்...!!!

திருத்தமாகும்...!!!

ஆராதனா அறையை விட்டு வெளியில் சென்றதும் சிவசுப்ரமணியத்தின் அலைப்பேசி அழைத்தது... விஷ்ணுபிரஹான் தான் அவரை அழைத்தது... அவனது எண்ணை திரையில் கண்டதும் அவருக்குச் சிறிது வியர்க்க துவங்கியது... அவருக்கு வேறுவழியில்லை... அவனது அழைப்பை ஏற்றுத் தான் ஆகவேண்டும்...

"ஹலோ..." அவர் உரைத்ததும் அவனது குரல் வேகமாய் இடையிட்டது...

"என்ன சொன்னாள்... ?"

அவனது குரலில் அதிகப்படியான ஆர்வம் இருந்ததோ அவருக்குச் சந்தேகமாக இருந்தது... ஆராதனாவின் வாழ்க்கையைக் கேள்விக்குறி ஆக்கியவன் அவன்... அப்படிப்பட்டவனிடத்தில் ஆர்வமா ? அவர் தலையைக் குலுக்கி தனது நினைப்பை விரட்டியடித்தார்...

"ஆராதனா கேசை ஃபைல் பண்ண சொல்லிவிட்டாள்..."

"என்னது... ?" உணர்வுகளை வெளிக்காட்டி கொள்ளாத விஷ்ணுபிரஹானின் குரலில் சிறிது அதிர்வு வெளிப்பட்டது...

இதை அவன் சற்றும் எதிர்பார்க்கவில்லை... ஆராதனா வேறுவழியின்றித் தனது காலில் வந்து விழுவாள் என்று அவன் எண்ணியிருக்க... அவளோ அவனைச் சிறிதும் லட்சியம் செய்யாது வழக்கை பதிவு செய்யச் சொல்லியிருக்கிறாளா... ?

"கேஸ் போட்டால் உங்க டாக்டரம்மா உள்ளே போய்க் களி திங்க வேண்டியிருக்கும்... அதைச் சொன்னீங்களா... ? அவளது பெயர் கெடுவதோடு மட்டுமல்லாது உங்க ஹாஸ்பிட்டல் பெயரும் சேர்ந்து கெட்டுப் போகச் சான்ஸ் இருக்கு மிஸ்டர். சிவசுப்ரமணியம்..."

"எனக்கு அப்படித் தோணலை விஷ்ணு... இந்தக் கேஸால் எங்க ஹாஸ்பிட்டல் பெருமை அதிகரிக்கப் போகுதுன்னு தான் தோணுது..." அவரது குரல் கர்வத்துடன் ஒலித்தது...

"அவ்வளவு நம்பிக்கையா அவள் மீது..." அவனது குரலில் அத்தனை நக்கல் தெறித்தது...

"நிச்சயமாய்..." உறுதியாய் கூறிய அவரது வார்த்தையில் அவன் தான் சிறிது அசந்து போனான்...

"ஆராதனாவை பற்றி எனக்கு நல்லா தெரியும் விஷ்ணு... அவள் ஒரு கேசை எந்தளவுக்குக் கேர் எடுத்து பார்த்து கொள்வாள் என்று... அவள் மேல் எனக்கு மிகுந்த நம்பிக்கை இருக்கிறது..."

"ம்ஹூம்... தேவையான நம்பிக்கை தான்... இதை எப்படி டீல் பண்ணணும்னு எனக்குத் தெரியும்..." என்று அந்த விசயத்தை அத்தோடு முடித்துக் கொண்டவனாய் ,

"அப்புறம் நாம நம்ம பிசினசை பற்றிப் பேசலாமா... ?" என்று அவன் கூறியதும் அவருக்குப் பயத்தில் வியர்க்க துவங்கியது...

மறுமுனையில் அவன் பேச பேச... அவரது முகம் வெளிறிப் போனது... அவன் பேசிவிட்டு வைத்ததும் அவர் அப்படியே தலையில் கை வைத்தபடி அமர்ந்துவிட்டார்...

ஆராதனா பணிக்கு செல்ல மனமில்லாதவளாய் நேரே அங்கிருந்த சிற்றுண்டி விடுதிக்கு சென்றாள்... அங்குப் பணிபுரியும் மருத்துவர்களுக்காகத் தனியாக இருக்கும் சிற்றுண்டி விடுதி அது... அதனால் அங்கு அவ்வளவாகக் கூட்டம் இல்லை... அங்கொன்றும் இங்கொன்றுமாய் ஒரு சிலர் மட்டுமே இருந்தனர்... ஒதுக்கியிருந்த மேசை அருகில் சென்றவள் அங்கிருந்த நாற்காலியில் அமர்ந்தாள்... அமர்ந்ததும் அவசரமாகக் கையிலிருந்த கோப்பை புரட்டி படிக்கலானாள்...

சிறிது நேரத்தில் படித்து முடித்தவள் அடுத்து என்ன செய்வதோ ? என்று யோசித்தபடி மேசை மீது

ஊன்றியிருந்த கைகள் மீது விழிகள் மூடி தலை கவிழ்ந்தாள்... அவளது மனம் முழுவதும் யோசனையில்...

"ஹாய் ஆராதனா..." சிவேஷ்கந்தாவின் குரலில் அவள் திடுக்கிட்டு போய் நிமிர்ந்து பார்த்தாள்...

"ஹாய்..." சுரத்தே இல்லாது அவள் கூறியதில் அவனது விழிகள் அவளை உன்னிப்பாய்க் கவனித்தது...

"என்னாச்சு... ?" என்று கேட்டான் கவலையாக...

"நத்திங்..."

"இல்லையே... உங்க முகம் சரியில்லாத மாதிரியிருக்கே..."

"ஒரு சின்னப் பிரச்சனை..." என்றாள் அவள் தனது மனதினை மறைக்காது...

"என்ன பிரச்சனை... ?" அவன் படபடப்பாகக் கேட்டான்...

அவனது தந்தை கூறிய விவரத்தை அவனிடம் கூறியவள் , " இது தான் பிரச்சனை..." என்க... மறந்தும் அவள் விஷ்ணுபிரஹானின் மிரட்டலை அவனிடம் கூறவில்லை...

"நேரே அவங்களைப் போய்ப் பார்க்கலாமா... ?"

"ம் , அதைத் தான் நான் யோசிச்சிக்கிட்டு இருக்கேன்..." என்றவளுக்கு அது சாத்தியமாகுமா ? என்று பெருத்த யோசனையாக இருந்தது...

"நான் வேணும்ன்னா உங்க கூட வரவா... ?"

"இல்லை... இதை நானே பார்த்துக்கிறேன்..."

"வேறு எதுவும் உதவி வேணும்ன்னா கேளுங்க..."

அவனது தந்தையால் கூட அவளுக்கு உதவ முடியவில்லை... ஆனால் அவன் தனக்கு உதவுவதாகக் கூறியது அவளுக்குச் சற்று ஆறுதலாக இருந்தது...

"நிச்சயம் சார்... ஏதாவது உதவி தேவைப்பட்டால் உங்களிடம் கேட்கிறேன்..." என்று கூறி அவள்

புன்னகைக்க...

"இந்தச் சார் வேண்டாமே... சிவேஷ்ன்னு கூப்பிடலாமே..."

"ஷ்யூர்..." என்று முத்துப்பல் தெரிய புன்னகைத்தவளின் கன்னக்குழியில் அவன் சுகமாய் வீழ்ந்து போனான்...

அவனிடம் விடைபெற்று எழுந்த ஆராதனாவின் மனதில் இந்தச் சிக்கலில் இருந்து விடுபட வேண்டும் என்கிற நினைப்பே ஓடி கொண்டிருந்தது... அதேசமயம் விஷ்ணுபிரஹானின் முகமும் அவளது மனக்கண்ணில் எழுந்தது... அவனைப் பிடிக்கும் என்பதற்காக அவள் தனது தன்மானத்தை விட்டு விட முடியாதே...

"என் கடைசிமூச்சு நிற்கும் போது கூட நான் உங்களைச் சந்திக்கக் கூடாதுன்னு தான் பிரியப்படறேன்... என் வாழ்க்கையை விட்டு விலகிய நீங்க , விலகியவங்களாகவே தள்ளியிருங்க... உடைந்த கண்ணாடியை ஒட்ட வைக்க முயற்சிக்காதீங்க..." அவள் மெல்ல முணுமுணுத்து கொண்டாள்...

' அவன் உன்னிடம் ஒட்ட முயற்சிக்கிறானா... ? குட் ஜோக் ஆரா... கீறல் விழுந்த கண்ணாடியை மேலும் உடைத்து சுக்குநூறாக்க தான் அவன் திட்டம் போடுகின்றான்... அது தெரியாம நீ ஏதாவது நினைக்காதே... இப்படி நீயாக எதையாவது நினைத்து நினைத்து தான் இப்போது உன் வாழ்க்கையை இழந்து தனிமரமாக நிற்கிறாய்... அவன் உனக்கு வேண்டாம்... அவனின் நிழல் கூட உன் மீது விழாது ஒதுங்கியது போல் அவனது நினைப்பிலிருந்தும் ஒதுங்கி விடு... அது தான் உனக்கு நல்லது... ' அவளது மனசாட்சி அவளுக்கு அறிவுரை கூறியது...

எத்தனையோ தடவை அது கூறிய அறிவுரையை உதாசீனப்படுத்தியதால் தான் அவளுக்கு இந்த நிலைமை... அதனால் இப்போது அது கூறிய அறிவுரையை அவள் அப்படியே கேட்டு கொண்டாள்...

இன்று ஆராதனா கனிஷ்காவை வெளியில் அழைத்துச் செல்வதாகக் கூறியிருந்ததால் அவளை நேரே மருத்துவமனைக்கு வர சொல்லியிருந்தாள்... அதனால் ஆராதனா கனிஷ்காவை தேடி மருத்துவமனை வரவேற்பு இடத்தை நோக்கி விரைந்தாள்... அவள் நினைத்தது போல் கனிஷ்கா அவளுக்காகக் காத்திருந்தாள்...

"வந்து ரொம்ப நேரமாச்சா கனி... ?" என்று கேட்டபடி அவள் அருகே செல்ல...

"இல்லை மன்னி... இப்போ தான் வந்தேன்..."

"வா , போகலாம்..."

கனிஷ்காவை அழைத்துக் கொண்டு மருத்துவமனையை விட்டு வெளியில் வந்தவள் நேரே தனது காரை நோக்கி நடந்தாள்... காரிலேறி அது கிளம்பியதும் கனிஷ்கா அவளைப் பார்த்த ,

"எங்கே போறோம் மன்னி... ?" என்று கேட்க...

"சர்ப்ரைஸ்..." என்று ஆராதனா கண்சிமிட்டி சிரித்தாள்... அவளது புன்னகையை ஆதுரத்துடன் பார்த்து கொண்டிருந்தாள் கனிஷ்கா...

"என்ன அப்படிப் பார்க்கிற... ?"

"நீங்க எப்போதும் இப்படிச் சிரிச்சிக்கிட்டே இருக்கணும் மன்னி..." மனதார கூறியவளை வாஞ்சையுடன் பார்த்த ஆராதனாவின் முகம் விஷ்ணுபிரஹானை நினைத்து ஒரு கணம் வாடி போனது... பின்பு தன்னைச் சுதாரித்துக் கொண்டவள் ,

"எனக்கு என்ன குறை கனி... ? என்னைச் சுத்தி இருக்கிற எல்லோருமே என் நலன் விரும்பிகள்... இதைவிட எனக்கு என்ன வேணும்... ?" என்று புன்னகை மலர கேட்க...

"நிச்சயம் மன்னி... நாங்க எல்லோரும் உங்க கூடவே இருப்போம்..."

பேசியபடி வந்ததில் அவர்கள் வந்து சேர வேண்டிய இடம் வெகுசீக்கிரத்தில் வந்துவிட்டது... காரை நிறுத்திய ஆராதனா ,

"இறங்கு கனி..." என்க...

"இங்கே எதுக்கு மன்னி... ?"

அந்தப் பெரிய கட்டிடத்தைப் பார்த்தபடி கேட்டாள் கனிஷ்கா... உடைகள் மற்றும் நகைகள் என்று எல்லாமே ஒரு இடத்தில் கிடைக்கும் கடை இது...

"உனக்கு வாங்கத்தான்..."

"எனக்கா... ? எனக்கு எதுக்கு மன்னி... ?"

"நாளையில் இருந்து வேலைக்குப் போகப் போகிற இல்லையா... அதான் புது ட்ரெஸ் , ஜூவல்ஸ் எல்லாம் வாங்கலாம்ன்னு உன்னைக் கூட்டிட்டு வந்தேன்..."

"இருக்கிறது போதும் மன்னி..." கனிஷ்கா சங்கடமாக மறுத்தாள்...

"ஷ்.... எதுவும் பேச கூடாது..." வாயில் விரல் வைத்து மிரட்டல் தொனியில் கூறிய ஆராதனா அவளை அழைத்துக் கொண்டு கடையினுள் சென்றாள்...

முதலில் கனிஷ்காவிற்குத் தேவையான உடைகளை எடுக்கச் சென்றனர்... எளிமையாக , விலை குறைவாக அதேசமயம் பார்ப்பதற்கு மிகவும் அழகாக இருந்த உடைகளாகக் கனிஷ்கா தேர்வு செய்வதைப் புன்னகையுடன் பார்த்து கொண்டிருந்தாள் ஆராதனா... கனிஷ்காவிற்குப் பிடித்த உடைகளை எடுத்துவிட்டு நகைகள் எடுப்பதற்கு அவளை அழைத்துச் சென்றாள் ஆராதனா...

அப்போது அங்கே அவள் கண்ட காட்சியில் அப்படியே அதிர்ந்து போய் நின்றுவிட்டாள்... என்ன தான் மனதினை சமாதானப்படுத்த முயன்றாலும் கண்முன் பார்க்கும் போது அவள் மன தைரியமற்று கோழையாகி போனாள்...

அங்கு விஷ்ணுபிரஹான் அர்ச்சனாவின் கால் அருகே குனிந்து அவளது கால்களில் கொலுசு அணிவித்துக் கொண்டிருந்தான்... முதுகு காட்டி அமர்ந்திருந்த அந்தப் பெண்ணின் முகம் அவளுக்குத் தெரியவில்லை... ஆனால் அவள் தான் அவனது மனைவி என்று அவளது மனம் அடித்துச் சொல்லியது... அவன் அவளிடம் நன்றாக இருக்கிறதா ? என்று கேட்க... அதற்கு அவள் ஏதோ பதில் கூற... உடனே அவன் வேறு ஒரு கொலுசை எடுத்து அவளுக்கு அணிவித்தான்...

ஆராதனாவிற்கு நெருப்பின் மீது நிற்பது போல் உடல் முழுவதும் பற்றிக் கொண்டு வந்தது... அவனது புன்னகை முகம் அவளுள் பெருத்த தாக்கத்தை ஏற்படுத்தியது... அதிலும் வெகுநாட்கள் கழித்து அவனைப் பார்த்தது வேறு அவளுக்குப் பேரதிர்ச்சியாக இருந்தது...

"மன்னி..." அதுவரை நகைகளை வேடிக்கை பார்த்துக் கொண்டிருந்த கனிஷ்கா அவளைப் பிடித்து உலுக்கினாள்...

"நாம போக வேண்டிய செக்சன் அங்கே இருக்கு கனி..." அவளை வேறுபக்கம் அழைத்துச் சென்றாள் ஆராதனா...

அன்றாட உபயோகத்திற்கு ஏற்றார் போன்று மெல்லிய நகைகளைக் கனிஷ்காவிற்கு வாங்கிக் கொடுத்த ஆராதனா , விஷ்ணுபிரஹான் கண்ணில் படாமல் கடையை விட்டு வெளியேறிவிட்டாள்... காரிலேறியதும் தான் அவளுக்குப் பெருத்த நிம்மதியாக இருந்தது...

சாலையில் கவனம் வைத்து காரை செலுத்தியவளின் மனமோ மீண்டும் மன்னவனிடம் வந்து நின்றது... தான் ஓடி ஒளிந்தது கூடத் தவறோ ? என்று இப்போது அவளுக்குத் தோன்றியது... தவறு செய்த அவன் கொஞ்சமும் குற்றவுணர்வு இல்லாது தலைநிமிர்ந்து இருக்கும் போது தான் மட்டும் ஏன் இப்படித் தலைகுனிந்து ஓட வேண்டுமா ? அது ஏனென்று அவளுக்கே தெரியவில்லை...

கனிஷ்காவை அழைத்துக் கொண்டு உணவு விடுதி வந்தவள் எப்படி உண்டாளஂ ? மறுபடியும் கனிஷ்காவை அவளது வீட்டில் எப்படிக் கொண்டு வந்து விட்டாளஂ ? எல்லோரிடமும் எப்படி விடைபெற்றாளஂ ? எதுவுமே அவளது ஞாபகத்தில் இல்லை... யாரோ தன்னைத் துரத்துவது போல் காரை வேகமாக ஓட்டி கொண்டு வந்தவள் தனது வீடு வந்ததும் காரை நிறுத்திவிட்டு இறங்கி விறுவிறுவென வீட்டிற்குள் நுழைந்தாள்...

"பட்டு சாப்பிட்டியாம்மா... ?" பெற்றோரின் குரலுக்கு அவளது பதில் வெறும் தலையசைப்பு மட்டுமே... அர்ஜூனுமஂ , அவந்திகாவும் ஒருவரை ஒருவர் புரியாது பார்த்து கொண்டனர்...

உடையைக் கூட மாற்றாது அப்படியே படுக்கையில் தொப்பென்று விழுந்தாள் ஆராதனா... பழைய நினைவுகளை நினைக்கக் கூடாது என்று தன்னைக் கட்டுப்படுத்தி வைத்திருந்தவளின் கட்டுப்பாடு அந்த நொடி தகர்ந்தது... விஷ்ணுபிரஹான் அந்தப் பெண்ணின் காலை பிடித்திருந்த காட்சி மீண்டும் மீண்டும் தோன்றி அவளை உயிரோடு வதைத்தது... இப்படி அவளை அணு அணுவாய் கொல்வதற்காகத் தான் அவள் இந்தப் பூமியில் படைக்கப்பட்டாளாா ? அவளுக்குக் கழிவிரக்கத்தில் கண்ணீர் பொங்கியது... தேற்றுவார் யாருமின்றிச் சத்தமின்றி அவள் மௌனமாக அழ துவங்கினாள்... அந்த விதி கூட அவளுடன் இணைந்து மௌனமாக அழுதது , தான் செய்த தவறினை நினைத்து...

****

"இப்போ உனக்கு ஹேப்பியா ஹனி... ?" காரை லாவகமாக ஓட்டியபடி அர்ச்சனாவிடம் கேட்டான் விஷ்ணுபிரஹான்...

"எஸ் மாமூ..." அவள் குதூகலமாய்ப் பதிலளித்தாள்... அவளது புன்னகை முகம் அவனிடமும் புன்னகையைத் தோற்றுவித்தது...

"நீ எப்பவும் இதே போல் சந்தோசமா இருக்கணும்..." என்றவனது வார்த்தையில் தான் எத்தனை அக்கறை , அன்பு...

"நீங்க என் கூட இருக்கும் போது எனக்கு என்ன கவலை... ?" அவள் புன்னகையுடன் கூற... அதே கேட்டு அவனது முகம் யோசனையில் ஆழ்ந்தது...

"என்ன யோசனை மாமூ... ?" அவனது முக மாறுதலை கண்டு அவள் கேட்க...

"ப்ச் , ஒண்ணுமில்லை..." என்றான் அவன்... அதற்கு மேல் அவளும் தோண்டி துருவாது அமைதியாக வந்தாள்...

சட்டென்று உணர்வுகளை வெளிப்படுத்தும் அர்ச்சனாவுடன் , உணர்வுகளை வெளிப்படுத்தாது இறுகி போயிருக்கும் ஆராதனாவை ஒப்பிட்டுப் பார்த்தது அவனது மனம்... அவள் மட்டும் ஏன் இப்படி... ? ஆராதனாவை நினைத்து அவனுக்குப் பெருத்த தலைவலியாக இருந்தது...

நட்சத்திர உணவு விடுதியில் காரை நிறுத்தியவன் முதலில் தான் இறங்கி காரை சுற்றிக் கொண்டு அவள் புறம் வந்தவன் அவளுக்காகக் கார் கதவை திறந்துவிட்டான்... அவள் கர்ப்பம் தரித்து மூன்று மாதமே ஆகியிருந்த போதும் அவளது வயிறு சற்று மேடிட்டிருந்தது... ஒருவேளை இரட்டை குழந்தைகள் என்பதால் கூட இப்படி இருக்கலாம்...

உணவு விடுதியை அடைந்து உணவு வகைகளை ஆர்டர் கொடுத்துவிட்டு இருவரும் பேசி கொண்டிருந்தனர்... அப்போது அவனது அலைப்பேசி அழைத்தது... அவன் அவளிடம் அனுமதி வேண்டி கொண்டு வெளியில் சென்றான்...

அதுவரை அவர்களை அமைதியாக வேடிக்கை பார்த்துக் கொண்டிருந்த விஜய் இது தான் நல்ல சந்தர்ப்பம் என்றெண்ணி அர்ச்சனாவை நோக்கி விரைந்து வந்தான்...

"உனக்குக் கொஞ்சம் கூட வெட்கமாயில்லை... ?" அவனது உரத்த குரலில் அவள் அரண்டு போய்த் திரும்பி

பார்த்தாள்...

அங்கு எதிர்பாராது விஜயை கண்டதும் அவள் நாற்காலியோடு நாற்காலியாக ஒன்றி போய் அமர்ந்தாள்... அவளுக்குப் பயத்தில் வியர்க்க ஆரம்பித்தது... பேச வாய் வரவில்லை... விஜய் நன்றாகக் குடித்திருந்தான்... போதையில் அவனது விழிகள் இரண்டும் நன்கு சிவந்து காணப்பட்டது...

"என் கிட்ட இல்லாதது அப்படியென்ன அவன் கிட்ட இருக்குது... ?" விஜய் அர்ச்சனாவை பார்த்து கேட்கும் போது விஷ்ணுபிரஹான் அங்கு வந்து சேர்ந்தான்...

"விஜய் , மைன்ட் யுவர் வேர்ட்ஸ்..." கர்ஜனை குரலில் கர்ஜித்தவனைத் திரும்பி பார்த்த விஜய் கொலைவெறியுடன் அவனை முறைத்துப் பார்த்தான்...

"எல்லாம் உன்னால் தான்டா..." என்றவன் கோபமாய் விஷ்ணுபிரஹானின் சட்டையைப் பிடித்தான்...

"நல்லா யோசிச்சு பேசு ப்ரோ... உன்னோட இந்த நிலைக்கு நானா காரணம்... ?" அவனும் பதிலுக்குப் பதில் கேட்டான்...

"ஆமாம் , நீ தான் காரணம்..." என்று குற்றம் சாட்டிய விஜயை பார்த்து ஏதோ சொல்ல வாய் திறந்தவன் அர்ச்சனாவின் பயந்த தோற்றத்தை கண்டு வாயை இறுக மூடி கொண்டான்...

"இப்போ எதுக்கு இங்கே வந்த விஜய்... ?"

"என்னடா... ? பெரிய நல்லவன் மாதிரி பேசிக்கிட்டு இருக்க... ? உன்னைப் பத்தி எனக்குத் தெரியாதுன்னு நினைச்சியா... ?" என்று எகிறிய விஜய் அடுத்த நொடி குரலை தழைத்துக் கொண்டே ,

"எனக்கு இவ வேணும்..." என்று அர்ச்சனாவை சுட்டிக்காட்ட...

விஜயின் கைவிரல்கள் தன்னைத் தீண்டி விடுமோ ? என்று பயந்து போன அர்ச்சனா வேகமாக எழுந்து

விஷ்ணுபிரஹானிடம் சென்று அவனது முதுகிற்குப் பின் பாதுகாப்பாய் மறைந்து கொண்டாள்...

"தேவையில்லாமல் பேசாதே விஜய்... திரும்பத் திரும்ப நீ இதையே பேசினால் நான் உன்னைக் கொல்ல கூடத் தயங்க மாட்டேன்..." விஷ்ணுபிரஹான் விஜயிடம் கோபமாய்ச் சீறினான்...

"கொன்னுருவியா... ? எங்கே கொல்லுடா பார்க்கலாம்..." விஜய் நெஞ்சை நிமிர்த்திக் கொண்டு அவன் அருகில் சென்றான்...

அப்போது அர்ச்சனா விஷ்ணுபிரஹான் முதுகிற்குப் பின்னால் இருந்து அவனை மெல்ல ஏறிட்டு பார்த்தாள்... அவளது பார்வையில் தெரிந்த அச்சத்தில் , பரிதவிப்பில் விஜய் அப்படியே பின்வாங்கினான்... அவனது காதல் கொண்ட மனது அவளது பார்வையில் பலத்த அடிவாங்கியது...

"ச்சீ..." என்று அவளைப் பார்த்து அருவருப்புடன் மொழிந்தவன் அடுத்தக் கணம் அங்கிருந்து விறுவிறுவெனச் சென்றுவிட்டான்...

விஜய் செல்வதைப் பார்த்துக் கொண்டிருந்த அர்ச்சனாவின் தோளை தொட்ட விஷ்ணுபிரஹான் , " உட்கார் அர்ச்சு..." என்க... அவள் அமைதியாக நாற்காலியில் அமர்ந்தாள்...

உணவு வந்ததும் இருவரும் அமைதியாக உணவு அருந்தினர்... இருவரின் எண்ணங்களும் எதிர் எதிர் திசையில் பயணித்தது... அரைகுறையாக உண்டவர்கள் வீட்டிற்குக் கிளம்பினர்... அதுவரை இருவரும் எதுவும் பேசி கொள்ளவில்லை...

"அவருக்கு எந்தக் கெட்ட பழக்கமும் கிடையாது மாமூ..." எவருக்கு ? என்று அபத்தமாகக் கேள்வி எழுப்பாது அமைதியாக வந்தான் விஷ்ணுபிரஹான்...

"எல்லாம் என்னால் தான் மாமூ..." என்று கூறியபடி முகத்தை மூடி கொண்டு அழுதாள் அவள்...

அவளது அழுகையைக் கண்டு பதற்றமுற்றவனாய் காரை ஓரமாக நிறுத்தியவன் , " இங்கே பார் ஹனி... நீ இப்படி அழுறது குழந்தைகளுக்கு நல்லதில்லை... ப்ளீஸ் , அழாதே..." அவனது குரலில் தெரிந்த கலக்கத்தில் அவள் தனது விழிகளைத் துடைத்து கொண்டாள்...

"மாமூவுக்காக நான் அழலை..." என்று கூறி அவள் மெல்ல சிரித்தாள்... ஆனால் அவனால் பதிலுக்குச் சிரிக்க முடியவில்லை...

"நான் எப்படி ஆராதனாவை மறக்க நினைக்கிறேனோ , அது போல் நீயும் விஜயை மறந்தால் நல்லது..." அவனது குரலில் அத்தனை கடினத்தன்மை வந்திருந்தது...

"மாமூ , நான் அப்படி எல்லாம் நினைக்கலை..."

"நீ எப்படி நினைச்சியோ... ? அது பத்தி எனக்குக் கவலை இல்லை... எல்லாவற்றையும் மறந்துவிடு..." என்றவன் காரை கிளப்பினான்...

' மறக்க முடியுமா ?' தனக்குள் கேள்வி கேட்டவளுக்கு விடை தான் கிடைக்கவில்லை... ஆணவன் எளிதாக எல்லாவற்றையும் கடந்து வந்துவிட்டான்... ஆனால் பெண்ணவளால் எதையும் எளிதில் கடக்க முடியவில்லை...

இருவருக்கும் இடையில் கனத்த அமைதி நிலவியது... வீடு வந்ததும் அர்ச்சனா இறங்கி வீட்டிற்குள் சென்றுவிட... விஷ்ணுபிரஹான் தோட்டத்திற்குச் சென்றான்... சிவசுப்ரமணியம் அவனிடம் கூறியதை , விஜய் அவனிடம் நடந்து கொண்டது என்று அவனது எல்லாக் கோபமும் சேர்ந்து ஆராதனாவின் மேல் திரும்பியது... இரவு நேரம் என்று கூடப் பாராது அவன் அவளுக்கு அழைத்தான்...

கழிவிரக்கத்தில் கரைந்து கொண்டிருந்தவள் தனது அலைப்பேசி ஒலிப்பதை கண்டு அதை எடுத்து பார்த்தாள்... தன்னவனுக்குரிய பிரத்யேக வார்த்தையுடன் அவனது

அலைப்பேசி எண் அவளது திரையில் ஒளிர்ந்தது... இப்படியே பேசினால் அவளது குரலே அவளது பலவீனத்தைக் காட்டி கொடுத்துவிடும் என்றெண்ணி அவள் முகம் கழுவி விட்டு வந்து அலைப்பேசியைக் கையில் எடுத்தாள்...

வெகுநாட்களுக்குப் பின் அவனது அழைப்பு... அவனது குரலை கேட்டால் தான் உடைந்து போய்விடுவோமோ என்று அவளுக்குப் பயமாக இருந்தது... எந்த நிலையிலும் தனது பலகீனத்தை அவனிடம் காட்டிவிடக் கூடாது என்பதில் அவள் உறுதியாக இருந்தாள்... முயன்று தன்னைக் கட்டுப்படுத்திக் கொண்டு அவள் அலைப்பேசியை உயிர்ப்பித்தாள்...

"ஃபோனை உடனே எடுக்க மாட்டியா... ? மனுசன் எத்தனை தடவை தான் ஃகால் பண்றது... ?" அவனது சிடுசிடுவென்ற பேச்சு கேட்டு அவள் அமைதி காத்தாள்... அவன் பேசி முடித்ததும் ,

"இப்போ மணி எத்தனை... ? தூங்க போகும் நேரத்தில் ஃகால் பண்ணி தொந்தரவு பண்ணிட்டு அதிகாரம் வேறயா மிஸ்டர். விஷ்ணுபிரஹான்..." அவளது வார்த்தையில் அவன் பல்லை கடித்தான்...

"என்னடி... ? என் கிட்டேயே உன் வித்தையைக் காட்டுறியா... ?" அவன் வழக்குச் சம்பந்தமாகப் பேசுகின்றான் என்பதை அவள் புரிந்து கொண்டாள்...

"உங்களுக்குத் தெரிந்த வித்தையை நீங்க காட்டும் போது நானும் எனக்குத் தெரிந்த வித்தையைக் காட்டினால் தானே நல்லது... அதான்..." அவளது அமர்த்தலான குரலில் அவனது இரத்த அழுத்தம் ஏகத்துக்கும் எகிறியது...

"இது நானாக ஆரம்பித்த விளையாட்டு... நானாக முடிக்கும் வரை தொடரும்..."

"அப்படியா... ?" அவள் அவனை நக்கலடிக்க...

"அப்படியே தான்டி... உன்னை மாட்ட வைக்க நான் போட்ட ப்ளான் தான் இது... என்னை மீறி உன்னால் எதுவும் பண்ண முடியாது... நீ ஜெயிலுக்குப் போகாமல் இருக்கணும்னா நீ என்னைத் தேடி வரணும்... இல்லை வரவழைப்பேன்..." பதிலுக்கு அவன் எரிமலையாகச் சீறினான்...

அவனது வார்த்தைகள் அவளது காதில் ஈயத்தைக் காய்ச்சி ஊற்றியது போல் வலிக்கச் செய்தது... விழிகளை மூடி தன்னைச் சமன்செய்து கொண்டவள் ,

"உங்களது முயற்சி வெற்றியடைய என்னுடைய மனமார்ந்த வாழ்த்துக்கள்..." என்றாள் அவள் எள்ளல் குரலில்...

"அப்படின்னா நாளைக்குக் காலையில் களி திங்க ரெடியாயிரு..." என்று அவன் கூற...

அவனது வார்த்தையில் அவள் அடிப்பட்ட பறவையாய் துடித்தாள்... தனது வேதனையை ராட்சசன் அவனிடம் காட்டி கொள்ள அவள் விரும்பவில்லை...

"ரொம்பப் பேசிட்டீங்க மிஸ்டர். விஷ்ணுபிரஹான்... இதுக்காக நீங்க ரொம்ப வருத்தப்படப் போறீங்க..."

"நீ என்ன பெரிய இவளா... ? சர்தான் போடி..." அத்தனை அலட்சியம் அவனது குரலில்...

அவள் அமைதியாக அலைப்பேசியை அணைத்து விட்டாள்... அவள் மனதிற்குள் நாளைய நாளை எப்படி எதிர்கொள்வது ? என்று திட்டங்களை வெகுநிதானமாக வகுக்கத் தொடங்கினாள்...

அங்கு அவனோ எதைப் பற்றியும் சிந்திக்காது அமைதியாகப் படுத்ததும் உறங்கிவிட்டான்... அவனது ஆழ்ந்த உறக்கத்திற்குக் காரணம் ஆராதனாவுடன் தான் பேசியதே என்பதைக் கூட அறியாத அறிவீலியாக அவன் இருந்தான்... அவன் இன்னமும் தன் மனதினை உணரவில்லை... தனக்கு என்ன வேண்டும் ? என்பதையும் அவன் அறியவில்லை...

மறுநாள் காலையில் விஷ்ணுபிரஹான் தனது அலுவலகத்திற்குக் கிளம்பி கொண்டிருந்தான்... மனம் முழுவதும் ஆராதனாவின் நினைவுகள்... மீண்டும் அவள் சமாதானத்திற்கு வரக்கூடும் என்று அவன் நம்பிக்கையுடன் அவளது வரவிற்காகக் காத்திருந்தான்...

"மாமூ..." மூச்சிரைக்க அங்கு வந்து சேர்ந்தாள் அர்ச்சனா...

"என்ன ஹனி... ?"

"உங்களைத் தேடி போலீஸ் வந்திருக்கு மாமூ..." என்றவளின் விழிகளில் அச்சம் படர்ந்தது...

"போலீஸ்ன்னாலே பயம் தானா... ? நான் போய் என்னன்னு பார்க்கிறேன்... நீ இங்கேயே இரு..."

"நானும் வர்றேனே..." என்றவளை கையமர்த்தித் தடுத்தவன் ,

"இந்த நிலைமையில் நீ அங்கு வர வேண்டாம்..." கண்டிப்புடன் கூறியவன் வரவேற்பறையை நோக்கி சென்றான்...

"வாங்க இன்ஸ்பெக்டர்... என்ன விசயமா வந்திருக்கிறீங்க... ?" சாதாரணமாகக் கேட்டுக் கொண்டே அங்கு வந்தவன் அவர்களை அமர சொல்லிட்டு தானும் சோபாவில் அமர்ந்தான்...

"டாக்டர். ஆராதனா மீது வேண்டுமென்றே அவதூறு வழக்கு போட போவதாக நீங்க அவங்களை மிரட்டினீங்களாமே..." என்றவரை கண்டு அவனது புருவங்கள் ஆச்சரியமாக உயர்ந்தது...

"நீங்க , அவங்க செய்யாத குற்றத்தை செஞ்சதா பொய் புகார் அளிக்க இருப்பதாகவும் , அந்தக் கேசை நீங்களே பொய்யாய் ஜோடித்திருப்பதாகவும் டாக்டர். ஆராதனா எங்க கிட்ட கம்ப்ளையிண்ட் பண்ணியிருக்காங்க..."

அத்தனையும் அமைதியாகக் கேட்டவன் பின்பு வாய்விட்டு சிரித்தபடி , " குட் ஜோக்... அவங்களுக்குக் கற்பனை

வளம் ரொம்ப நல்லாயிருக்கு... பேசாம டாக்டர் தொழிலை விட்டுட்டு கதை எழுத போகச் சொல்லுங்க..." என்று அவன் கிண்டலடித்தான்...

"ஜோக் இல்லை சார்... அத்தனையும் உண்மை..." என்றவர் தனது அலைப்பேசியை உயிர்ப்பித்து ' வாய்ஸ் மெசேஜ் ' ஐ அவனிடம் போட்டு காண்பித்தார்...

அதில் நேற்றிரவு அவன் ஆராதனாவுடன் பேசிய விசயங்கள் ஒன்றுவிடாது பதிவு செய்யப்பட்டு இருந்தது... அவள் அவன் பேசியது அனைத்தையும் தனது அலைப்பேசியில் பதிவு செய்திருக்கிறாள்... அதைக் கேட்டு அவனது முகம் உணர்வுகளைத் தொலைத்து இறுகி போனது...

"இப்போ நாங்க உங்களைக் கைது பண்ணலாமா... ?"

காவல்துறை அதிகாரியின் வார்த்தையில் அவன் திடுக்கிட்டு போய் நிமிர்ந்து அவரைப் பார்த்தான்... அப்போது அவரது அலைப்பேசி அழைத்தது... எடுத்து பேசியவர் சரி , சரியென்று கூறிவிட்டு அலைப்பேசியை அணைத்தார்...

"உங்க அதிர்ஷ்டம் , டாக்டர். ஆராதனா கேசை வாபஸ் வாங்கிட்டாங்க... நாங்க வர்றோம் சார்..." என்று உரைத்தவர் அவனிடம் விடைபெற்று செல்ல... அவன் அப்படியே இறுகி போய் அமர்ந்திருந்தான்...

அப்போது அவனது அலைப்பேசி ஒலித்தது... எடுத்து பார்த்தவன் அது ஆராதனாவின் அழைப்பு என்றதும் கோபத்துடன் அதை உயிர்ப்பித்துக் காதில் வைத்தான்... ஆனால் பேசவில்லை... பெருங்கோபத்தை அடக்கி கொண்டு உள்ளுக்குள் எரிமலையாய் கனன்றபடி அவன் அமர்ந்திருந்தான்...

"பிசினஸ்மேன் அதிகம் பேச கூடாதுன்னு உங்களுக்குத் தெரியாதா மிஸ்டர். விஷ்ணுபிரஹான்... ? இப்போ

பாருங்க , உங்க பேச்சே உங்களுக்கு எதிரா போயிருச்சு..." அதற்கு அவன் அமைதி காக்க...

"நான் அவந்திகாவோட பொண்ணு மட்டுமல்ல... அர்ஜூனோட பொண்ணும் கூட... எங்கப்பவோட ரத்தமும் எனக்குள் ஓடுது... என் கிட்ட நீங்க உங்க கிரிமினல் புத்தியை காட்டாதீங்க... நான் சும்மாயிருந்தாலும் என் அண்ணன்ங்க ரெண்டு பேரும் சும்மாயிருக்க மாட்டாங்க..."

"உன் நொண்ணன்ங்களால் என்னை என்ன பண்ண முடியும்டி... ?" அதற்கு மட்டும் அவன் எகிறினான்...

"என்னோட ஸ்ரீண்ணா சொல்ல மாட்டாங்க , செஞ்சிட்டு தான் சொல்வாங்க... பார்த்து நடந்துக்கோங்க... அதை விட எங்கப்பா இன்னும் ஒரு படி மேலே போய்ச் சத்தமில்லாம செஞ்சு முடிச்சிருவாங்க..."

வீரமான தந்தையையும் , சகோதரர்களையும் கிடைக்கப் பெற்ற வீரத்தமிழச்சியாய் அவள் முழங்கினாள்... அவளது பேச்சில் அவனது அத்தனை நேர இறுக்கம் மறைந்து உதடுகளில் புன்னகை நெளிந்தது...

"அடேங்கப்பா பயமாயிருக்கே..." என்று அவன் கேலி பேச...

"பயமிருக்கணும் மிஸ்டர்..." என்றவளை கண்ட ,

"ரௌடிகளைப் பார்த்து பயப்படாம இருக்க முடியுமா... ?" என்று அவன் கிண்டலடிக்க...

தன் வீட்டு ஆண்களை ரௌடிகள் என்று அவன் விளித்தது கண்டு அவளுள் சினம் மூண்டது...

"என் அப்பா , அண்ணாக்கள் அமைதியா விலகியிருக்கிறதால் தானே உங்களுக்கு இளக்காரமா போச்சு... அவங்க என் சொல்லுக்குக் கட்டுப்பட்டுத் தான் அமைதியா இருக்காங்க... இல்லைன்னா நடக்கிறதே வேற..." அவளது கோபம் ஒவ்வொரு வார்த்தையிலும் தெறித்தது...

"இல்லைன்னா மட்டும் என்னைய என்னடி பண்ணிற முடியும்... ?" அவனும் பதிலுக்கு எகிறினான்...

"என்ன பண்ணுவாங்களா... ? ம் , அவங்க மட்டும் செயலில் இறங்கினாங்கன்னா நீங்க இப்படி என்னோடு பேசிக்கிட்டு இருந்திருக்க மாட்டீங்க... புரிஞ்சிருக்கும்ன்னு நினைக்கிறேன்..." அவளது அமர்த்தலான குரலில் அவன் வாய்விட்டுச் சிரித்தான்...

"பாருடா , வாயில்லா பூச்சி எல்லாம் என்னம்மா பேசுது... இப்பத்தான்டி உன்னைய ரொம்ப ரொம்பப் பிடிக்குது..."

அவன் என்ன அர்த்தத்தில் இதைச் சொன்னானோ ? ஆனால் அவனது வார்த்தைகள் அவளது மனதில் சிலீரென்று ஒரு இனம் புரியா உணர்வினை தோற்றுவிக்கத் தவறவில்லை... அந்த உணர்வினை தாங்க இயலாதவளாய் அவள் பேச்சற்று அமைதியாகி போனாள்...

"உன்னை எல்லாம் வச்சு செய்யணும்டி... எப்படி வச்சு செய்றேன்னு பாரு..." அவனது வன்மம் மிகுந்த வார்த்தையில் அவளது மயக்கம் தெளிந்தது...

"பார்க்கலாம்..." என்றாள் சவாலாக...

"ரைட்..."

அந்த வார்த்தையை அவன் அழுத்தத்துடன் உச்சரித்த போது அவளது முதுகு தண்டுவடம் அச்சத்தில் சில்லிட்டது... அதற்கான அர்த்தம் அவளுக்கு நன்கு தெரியுமே...

அவன் ஒருவரை அழிக்க வேண்டுமென்று நினைத்தால் அவனது வாயிலிருந்து வரும் வார்த்தை இது... அன்று அவன் அவளது வாழ்க்கையை அழித்த போது அவன் கூறிய ' ரைட் ' என்கிற வார்த்தை இப்போதும் அவளது காதுகளில் கடூரமாய் ஒலித்துக் கொண்டிருக்கிறது...!!!

திருத்தமாகும்...!!!

"எல்லாம் சரி தான்... நீ கம்ப்ளையிண்ட் கொடுத்தது அனைத்தும் உண்மை தான்... நான் பொய்க்காரன் தான்..."

விஷ்ணுபிரஹான் உண்மையை அப்படியே ஒத்து கொண்டதை கேட்டு ஆராதனா ஒன்றும் புளங்காகிதம் அடைந்து விடவில்லை... மாறாக அவள் யோசனையுடன் அவனது அடுத்த வார்த்தைக்காகக் காத்திருந்தாள்...

"ஆனால் இதில் ஒன்று மட்டும் உண்மை... அதாவது அந்தப் பெண் ஹாஸ்பிட்டலில் அனுமதிக்கப்பட்டு இருப்பது..."

அவனது வார்த்தைகள் அவளைச் சரியாகச் சென்று தாக்கியது... அவள் எப்படி இதை மறந்தாள்... ? அவள் வேதனையுடன் தலையைப் பிடித்துக் கொண்டாள்...

"இதற்கு உன் பதில் என்ன... ?" என்றவனது குரலில் அப்படியொரு எகத்தாளம் இருந்தது...

அவனது வார்த்தையில் தன்னைத் தேற்றி கொண்டவள் , " அது என் கவலை... நான் பார்த்து கொள்கிறேன்..." என்றாள் நிமிர்வாக...

"அப்போ கேஸ் ஃபைல் பண்ணிர சொல்லவா... ?"

அதைக் கேட்டு அவள் மௌனம் காத்தாள்...

"மௌனம் சம்மதத்துக்கு அறிகுறி..." என்றவன் வாய்விட்டுச் சிரித்தான்...

"என்ன வேணா செஞ்சிட்டு போங்க... அது பத்தி எனக்குக் கவலையில்லை... மடியில் கனம் இருந்தால் தானே வழியில் பயம்... என் மேல் எந்தத் தப்பும் இல்லை... அதனால் எதையும் நேர்மையாக , சட்டப்படி எதிர்கொள்ளும் தைரியம் எனக்கிருக்கு..."

அவளது அசாத்திய துணிச்சல் கண்டு அவனது புருவங்கள் இரண்டும் வியப்பில் உயர்ந்தது... அவளைப் பற்றி அவன்

எண்ணியிருந்தது அனைத்தும் தவறோ... அவன் அறிந்து கொள்ளாத பக்கங்கள் அவளிடம் அதிகம் இருப்பதாக அவனுக்குத் தோன்றியது...

"உன் மடியில் கனம் இல்லை தான்... அது ஒத்துக் கொள்ள வேண்டிய விசயம் தான்... ஆனால் அந்தக் கனமே நீ தானே... உனக்கு நீ பயந்து தானே ஆகணும்..."

"என்ன உளர்றீங்க... ?" அதைக் கேட்டுச் சத்தமாய்ச் சிரித்தவன் ,

"கோபத்தில் கூட மரியாதையோட பேசுகிற... ம்..." உண்மையில் அவன் அவளின் குணம் கண்டு மெச்சினான்...

"இப்போ எதுக்கு இந்தத் தேவையில்லாத ஆராய்ச்சி... ?" அவள் சிடுசிடுத்தாள்... அவனே வேண்டாம் எனும் போது அவனுடைய பாராட்டு மட்டும் அவளுக்கு எதற்கு... ?

"எல்லாத்துக்கும் பதில் சொல்றேன்... ஆனா இப்போ இல்லை... நீ என்னைத் தேடி வரும் போது..."

"அது இந்த ஜென்மத்தில் நடக்காது..."

"அப்படியா... ?" என்று தனது பிரெஞ்சு பியரை தடவியபடி யோசித்தவன் ,

"அப்போ நான் உன்னைத் தேடி வரவா... ?" என்க... அவனது கிசுகிசுப்பான குரல் அவளை ஏதோ செய்தது...

"ஒரு மண்ணும் தேவையில்லை..." என்று எரிச்சலுடன் மொழிந்தவள் அலைப்பேசியை அணைத்தாள்...

விஷ்ணுபிரஹான் அலைப்பேசியைச் சட்டைப்பையில் போட்டுவிட்டு விழிகள் மூடி சோபாவில் சாய்ந்தான்... ஆராதனாவுடன் பேசியதை அவன் தனக்குள் அசை போட்டபடி அமர்ந்திருந்தான்... அவனது முகம் அவனையும் அறியாமல் புன்னகையில் மலர்ந்திருந்தது...

"மாமூ..."

அர்ச்சனாவின் அழைப்பில் அவன் விழி திறந்தான்...

"என்ன ஹனி... ?" என்று அவளிடம் கேட்டவனின் புன்னகை மாறவில்லை...

"மாமூ ரொம்பச் சந்தோசமா இருக்கிற மாதிரியிருக்கு... ?"

"ஆமாம் , ஆராதனா கூடப் பேசினேன்..." என்றான் அவன் தனது மனதினை மறைக்காது... அதைக் கேட்டு அவள் ஆச்சரியமாக அவனைப் பார்த்தாள்...

அப்போது கூட அவனைப் போன்று அவளால் அவனிடம் கோபம் கொள்ள முடியவில்லை... ' நீ ஏன் ஆராதனாவிடம் பேசினாய் ?' என்று...

"ஆராதனாவை ரொம்பப் பிடிக்குமோ... ?" என்று கேட்ட அர்ச்சனாவை ஒரு பார்வை பார்த்தவன் ,

"தெரியலை..." என்று தோள்களைக் குலுக்கினான்...

அவளது மனக்கண்ணில் விஜயின் முகம் நினைவிலாடியது... விஷ்ணுபிரஹான் போன்றே அவளுக்கும் விஜயை பற்றிய நினைப்பு இதே போன்று தான் இருந்தது...

"நான் ஆஃபிஸ் கிளம்பறேன்..." விஷ்ணுபிரஹானின் குரலில் அவள் தன்னினைவு கலைந்தாள்...

"சரி மாமூ..."

இரண்டு அடி எடுத்து வைத்தவன் பின் நின்று அவள் புறம் திரும்பி , " எதுக்கும் இன்னொரு தடவை செக்கப் பண்ணிட்டு வருவோமா... ?" அவனது விழிகள் கவலையுடன் அவளது வயிற்றைப் பார்த்தது...

"இல்லை வேண்டாம் மாமூ... அடுத்தச் செக்கப் அடுத்த மாசம் தான்... எனக்கு ஒரு பிரச்சனையும் இல்லை..."

அவளது வார்த்தைகளில் தன்னைத் தேற்றி கொண்டவன் வாயிலை நோக்கி நடந்தான்... அவனது மனதில் பலவித

யோசனைகள்... அவனது எண்ணம் செல்லும் திசை அவனுக்கே புதிராக இருந்தது... ஏன் இப்படி ? அது அவனுக்கே புரியவில்லை என்பது தான் மிகச் சரி...

வாழ்க்கை என்கிற புதிர் விளையாட்டில் அவனாய் ஊகித்திருந்த விடைகள் அனைத்தும் தவறாகி போய்விட்டது... அதனால் இப்போது அவன் எதையும் ஊகிக்க முடியாது குழம்பி போனான்...

****

"விஜய்..."

கதவை தட்டிவிட்டு உள்ளே வந்த தந்தையின் குரலை கேட்டும் கூட விஜய் அசையாது படுக்கையில் படுத்திருந்தான்...

"இன்னும் எழுந்துக்கலையா விஜய்... ? இப்போ நேரம் என்ன தெரியுமா... ? நீ ஆபிஸ் கிளம்பும் நேரம்..." என்றபடி மகன் அருகில் அமர்ந்த சேதுபதி கவலையுடன் அவனது நெற்றியில் கை வைத்து பார்த்தார்... அவனது உடல் சூடு சாதாரணமாகத் தான் இருந்தது...

"விஜய்..."

"ம்..." அவனிடம் இருந்து மெல்லிய முனங்கல் ஒலி வந்தது...

"என்னாச்சு விஜய்... ?"

"ம்ப்ச்..." என்று சலித்தபடி எழுந்தமர்ந்தான் விஜய்...

"உடம்பு சரியில்லையா... ?"

"மனசு சரியில்லை டாட்..." என்றவனது கண்கள் சிவந்திருப்பதைக் கண்டா ,

"நேத்து குடிச்சியா விஜய்... ?"

"எஸ் டாட்..." தலையைக் குனிந்து கொண்டு கூறாது தைரியமாக நெஞ்சை நிமிர்த்திக் கொண்டு கூறிய மகனை கண்டு அவரது உதடுகளில் புன்னகை படர்ந்தது...

"நீ ஒவ்வொரு தடவையும் கிளாஸ் ஃபர்ஸ்ட் எடுக்கும் போது இதே மாதிரி தான் நெஞ்சை நிமிர்த்திக்கிட்டு பெருமையா வந்து என் கிட்ட சொல்லுவ... அதே மாதிரி தான் விளையாட்டு , குதிரையேற்றம் , இப்படிப் பல விசயங்களில் நீ நம்பர் ஒன்னா வின் பண்ணிட்டு வந்து சொல்லியிருக்க... அப்போ எல்லாம் ' இவன் என் மகன்... என் ரத்தம்... என் உயிர்' ன்னு சந்தோசப்பட்டு இருக்கேன்... ஆனா இப்போ அந்தச் சந்தோசம் எனக்குக் கொஞ்சமும் இல்லை... ரொம்பக் கவலையாயிருக்கு விஜய்..."

தந்தையின் வருத்தத்தில் அவனது தலை தானாகக் குனிந்தது... தாயில்லாத அவனைத் தந்தையும் , தாயுமாகக் கவனித்து வளர்த்த அன்பு தந்தை அவர்... அவன் பிறந்த போதே அவனது தாய் இறந்துவிட்டார்... பிறந்த குழந்தையை வைத்துக் கொண்டு சேதுபதி கஷ்டப்படுவதைக் கண்டு யாரும் வருந்தவில்லை... அதைவிட அவரது இத்தனை சொத்துக்களையும் கண்டு ஆசை கொண்டு அதை அமுக்கி கொள்ள எண்ணிய அவரது சொந்தங்கள் அவர்களது பெண் பிள்ளைகளை அவருக்குத் திருமணம் செய்து வைக்கும் முயற்சியில் மும்முரமாக இறங்கியது... ஆனால் அவர் தனது மனைவியின் காதல் நினைவில் மறுமணத்தைக் கம்பீரமாக மறுத்துவிட்டார்... அதே கம்பீரத்தோடு அவர் தனியே தனது மகனை வளர்த்தெடுத்தார்... அவரது இளமை பசிக்கு எத்தனையோ வடிகால் இருந்தது... அப்படியிருந்தும் அவர் சீதையின் பதியாகவே வாழ்ந்துவிட்டார்... இதோ இந்த நொடி வரை அவர் அப்படித்தான் வாழ்ந்து வருகிறார்... அவரைப் பார்த்து தானே அவனும் உயர்ந்த பண்புகளோடு வளர்ந்தான்...

மகனது குனிந்த தலையை நிமிர்த்திய சேதுபதி , " என்ன பிரச்சனைடா... ?" என்று ஆதுரத்துடன் கேட்க...

"நேத்து அவளைப் பார்த்தேன் டாட்..."

"ஓ , அதனால் தான் குடிச்சியா... ?"

"இல்லை டாட்... குடிக்கப் போன இடத்தில் தான் அவளைப் பார்த்தேன்... அதுவும் அவன் கூட... ஒண்ணா ஜோடி போட்டுட்டு டின்னர் சாப்பிட வந்திருக்கா... எனக்கு வந்த ஆத்திரத்திற்கு..." என்று அவன் கோபத்தில் பல்லை கடித்தான்...

"இப்படிக் குடிச்சு குடிச்சு உடம்பை கெடுத்துக்கிறதுக்குப் பதில் நீ வேறொரு நல்ல பொண்ணா பார்த்துக் கல்யாணம் பண்ணிக்கிட்டு நிம்மதியா இருக்கலாம்..." அவர் ஆதங்கத்துடன் உரைத்தார்...

"ப்ச் , அவளைத் தவிர மனசுக்கு யாரையும் பிடிக்க மாட்டேங்குதே..." அவன் இயலாமையில் தலையைக் கோதி கொண்டான்...

"இவ்வளவு சொல்றவன் அவளைக் காயப்படுத்தாம இருந்திருக்கணும்..." அவருக்கும் கோபம் வந்தது...

அவன் பதில் கூறாது அமைதி காத்தான்...

"இங்கே பார் விஜய்... அவள் முன்ன மாதிரியில்லை..." அதைக் கேட்டு அவன் விலுக்கென்று நிமிர்ந்து பார்த்தான்... அவனது விழிகளில் சினமேறியது...

"ஓஹோ... இப்போ அவள் அவன் பொண்டாட்டியில்ல... மறந்தே போயிட்டேன்..." என்றான் நக்கல் குரலில்...

"நான் அதைச் சொல்லலை விஜய்... நான் சொன்னது , அவள் குழந்தை உண்டாகி இருப்பதை... அதுவும் இரட்டை குழந்தைகள் வேறு..." அதைக் கேட்டதும் அவனது முகம் ஒரு மாதிரியாய் மாறிப் போனது...

"அதுக்கு நான் என்ன பண்ண முடியும்... ?"

"உன்னால் அவள் வயிற்றில் இருக்கும் குழந்தைகளுக்கு மட்டும் ஏதாவது ஒண்ணு ஆச்சுன்னா விஷ்ணு சும்மாயிருக்க மாட்டான்..."

"அவனுக்குப் பயந்துக்கிட்டு ஒதுங்கி போகச் சொல்றீங்களா... ?" அவன் சீற்றத்துடன் கேட்க...

"கை நழுவி போனதை பற்றி நினைக்கவும் வேண்டாம்... பேசவும் வேண்டாம்... விட்டு விடு... அது தான் உனக்கு நல்லது..."

"முடியாது..."

"முடியலைன்னா நானே உனக்கு ஒரு பொண்ணைப் பார்த்துக் கல்யாணம் பண்ணி வைப்பேன்..."

அதைக் கேட்டு அவன் வலியுடன் அவரைப் பார்த்தான்... அவனால் என்றுமே அவரது பேச்சை தட்ட முடியாது... இப்போது கூட அவர் என்ன சொன்னாலும் அவன் சரியென்று தான் தலையாட்டுவான்... ஆனால் இந்த விசயம்... ???

"ஒருத்திய நினைச்ச மனசால எப்படி வேறொருத்தியை நினைக்க முடியும்... ? ப்ளீஸ் டாட் , வலிக்குது..." தனது நெஞ்சின் மீது கை வைத்தபடி வலியுடன் கூறியவனை அவர் வேதனையுடன் பார்க்க... அவரது பார்வையைச் சந்திக்க இயலாதவனாய் அவன் குளியலறைக்குள் புகுந்து கதவை சாற்றிக் கொண்டான்...

எல்லா வரமும் பெற்று பிறந்த மகனுக்குக் காதல் வாழ்க்கையை மட்டும் ஏன் அந்தக் கடவுள் சாபமாக மாற்றிவிட்டார்... ? சேதுபதி வேதனையுடன் அமர்ந்திருந்தார்...

****

கனிஷ்கா வேளச்சேரியில் இருந்த பரத்தின் கட்டுமான நிறுவனத்தின் அலுவலகத்திற்கு வந்த போது அவளது மனம் முழுவதும் பயத்தில் படபடவென அடித்துக் கொண்டது... பரத்தை அவள் பார்த்து பல வருடங்களாகி விட்டது... இப்போது அவன் எப்படி இருப்பான்... ? தன்னைக் கண்டதும் அவனது முகம் மலருமா ? இல்லை முகத்தைச் சுளிப்பானா ? இல்லை கண்டு கொள்ளாது இருப்பானா ? பல யோசனைகளுடன் அவள் அலுவலகத்திற்குள் நுழைந்தாள்...

வரவேற்பறை பெண்ணிடம் அவள் விசயத்தைச் சொன்னதும் , " கொஞ்சம் வெயிட் பண்ணுங்க மேம்..." என்றாள் மிகவும் மரியாதையாக... பின்னே அவர்களது இளவரசியின் சிபாரிசுடன் வந்திருப்பவளாயிற்றே...

கனிஷ்கா அமைதியாக அமர்ந்தாலும் அவளது மனம் பரபரத்தது... அவளது விழிகள் ஆர்வத்துடன் வாயிலை நோக்கியது... சுமார் அரை மணி நேரம் கழித்து அங்கு ஒரு இளம்பெண் புயல் போல் நுழைந்தாள்... எல்லோரும் அவளுக்கு எழுந்து நின்று மரியாதை தெரிவித்தனர்... கம்பீரமாகத் தலையசைத்து அதை ஏற்றுக் கொண்டவள் அங்கிருந்த முதலாளி அறைக்குள் சென்று மறைந்தாள்...

அதைக் கண்டு கனிஷ்காவிற்குத் திக்கென்று இருந்தது... ஒருவேளை பரத்திற்குத் திருமணமாகி விட்டதோ என்ற ? இல்லை , அப்படி இருக்காது என்று அவள் தன்னைத் தானே தேற்றி கொண்டாள்...

அதற்குள் அவளுக்கு அழைப்பு வர... அவள் எழுந்து சென்று கதவை தட்டி அனுமதி கேட்டுவிட்டு உள்ளே சென்றாள்...

"ஹாய் கனிஷ்கா , வாங்க , வாங்க... ஐயம் சுப்ரஜா... பரத் எல்லாம் சொன்னார்... டேக் யுவர் சீட்..." என்று அவளை ஆர்ப்பாட்டமாக வரவேற்றாள் சுப்ரஜா...

அவளது தோழமையான வரவேற்பில் கனிஷ்காவின் முகம் மலர்ந்தது... அங்கிருந்த நாற்காலியில் அமர்ந்தவள் தனது கையிலிருந்த கோப்பை சுப்ரஜா புறம் நீட்டினாள்...

"நீங்களே வச்சுக்கோங்க... பட்டு ஒரு விசயம் செய்யச் சொன்னால் அந்த விசயத்தைப் பத்தி ஆராயக் கூடாதுன்னு எங்க தல உத்தரவு..." என்று கூறி சுப்ரஜா புன்னகைக்க...

என்ன சொல்தென்று தெரியாது அவளைப் பார்த்து புன்னகைத்து வைத்தாள் கனிஷ்கா...

"நீங்க இப்போதைக்குச் சீனியர் இன்ஜினியர்ஸ் கீழே வேலை பாருங்க... எல்லாம் கொஞ்ச நாள் தான்... அதுக்குப்

பிறகு உங்களை நாங்க பிரமோட் பண்றோம்... ஓகேவா... ?" சுப்ரஜா கேட்டதும் அவள் சம்மதமாகத் தலையசைத்தாள்...

"நீங்க ரொம்ப அமைதியோ... பேசவே மாட்டேங்கிறீங்க... ஆனா எனக்குப் பேசிக்கிட்டே இருக்கணும்..." அவள் கூறும் போதே அவளது அலைப்பேசி அழைத்தது...

"ஒன் மினிட்..." என்றவள் அலைப்பேசியை உயிர்ப்பித்தா ,

"சொல்லுங்க பரத்..." என்க... தன்னவனின் பெயரை கேட்டு கனிஷ்காவின் உடலில் இருந்த அத்தனை செல்களும் சந்தோசத்தில் ஆர்வமாய்ப் பரபரத்தது...

"ஆமா பரத் , நீங்க சொன்ன மாதிரி வேலை போட்டு கொடுத்தாச்சு... வேற எதுவும் சொல்லணுமா... ? என்ன... வேண்டாமா , ஓகே பரத்..."

' ஓ... அவங்களுக்கு என்னிடம் சொல்றதுக்கு ஒண்ணுமே இல்லை போலும்... நான் தான் தேவையில்லாது கற்பனை பண்ணிக்கிட்டு இருக்கேனோ... ? இவங்க அவரோட மனைவியா ? இல்லையா ?' அவளுக்கு யோசனையாக இருந்தது... ஏனெனில் சுப்ரஜாவை பார்த்தால் திருமணமான பெண் போல் தோன்றவில்லை...

"ஈவினிங் பார்ட்டிக்கு போறதையே மறந்துட்டேன்... ஞாபகப்படுத்தியதற்குத் தேங்க்ஸ் பரத்..." என்றவள் அலைப்பேசியை அணைக்க மறந்துவிட்டு கனிஷ்காவை பார்த்தாள்... அலைப்பேசி தொடர்பில் இன்னமும் பரத் இருந்தான்... காரை ஓட்டி கொண்டிருந்தாலும் அவனால் அழைப்பை துண்டிக்க முடியவில்லை... கனிஷ்காவின் குரலை கேட்க நினைத்தானோ என்னவோ...!

"ஓகே கனிஷ்கா... நீங்க வேலையில் ஜாயிண் பண்ணுங்க... எனக்கு வெளியில் ஒரு சின்ன வேலையிருக்கு... இங்கே உங்க வீடு மாதிரி கம்போர்ட்டபிளா ஃபீல் பண்ணலாம்... ஏதாவது ப்ராப்ளம்ன்னா பரத் அல்லது எனக்கு ஃகால் பண்ணுங்க..."

சுப்ரஜா கூறியதும் கனிஷ்கா புன்னகையுடன் எழுந்தவள் , " தேங்க்ஸ் மேடம்..." என்று கூற...

கனிஷ்கா கூறிய ' மேடம் ' என்கிற வார்த்தை கேட்டுப் பரத்திற்குத் தான் ஒரு மாதிரியாக இருந்தது... ' இவள் எதற்குச் சுபியை பார்த்து மேடம்ன்னு சொல்கிறாள்... சுபி எப்படியோ ? அது போல் தானே இவளும் ' அவனுக்குக் கோபமும் , எரிச்சலும் ஒருங்கே எழுந்தது... ஏனிந்த கோபம் , எரிச்சல் என்று அவன் அந்தக் கணம் யோசிக்கவில்லை...

"மேடம் எல்லாம் வேண்டாம் கனி... கனின்னு கூப்பிடலாம் இல்லையா... ?" அதற்குக் கனிஷ்கா சம்மதமாகத் தலையசைக்க...

"பேசவே மாட்டேங்கிறீங்க..." சுப்ரஜா சிரித்தபடி கூற...

' யாரு இவளா பேச மாட்டாள்... ? வாய் ஓயாது பேசுறது எப்படின்னு இவளை பார்த்து தான் தெரிஞ்சுக்கணும்... ஒருவேளை திருந்திட்டாளோ ?' பரத் தனக்குள் யோசித்தபடி இருந்தான்...

"சுப்ரஜா ஆர் சுபின்னே கூப்பிடுங்க..." சுப்ரஜா கூறும் போதே அறை கதவை தட்டப்பட்டது...

"எஸ் , கம்மின்..." சுப்ரஜா கூறியதும் கதவை திறந்து கொண்டு உள்ளே நுழைந்தார் அவர்களது வரவு செலவு தணிக்கையாளர்...

"மிஸ். சுப்ரஜா..." என்றழைத்தபடி அவர் உள்ளே வர...

உடனே கனிஷ்கா அங்கிருந்து வெளியேறினாள்... ' மிஸ். சுப்ரஜா ' என்ற வார்த்தை அவளது காதில் தேனாய் பாய்ந்து அவளது மனதில் தித்திப்பாய் இறங்கியது...

அதே நேரம் பரத் அழைப்பை துண்டித்துவிட்டுச் சாலையில் கவனத்தைப் பதித்தான்... அவனது காதுகளில் குயிலை போன்ற இனிமையான கனிஷ்காவின் குரலே ஒலித்துக் கொண்டிருந்தது... அவள் பேசியது இரண்டே இரண்டு

வார்த்தைகள் தான்... ஆனால் அது இரண்டும் இரண்டாயிரம் முறை அவனது காதுகளில் திரும்பத் திரும்ப ஒலித்துக் கொண்டே இருந்தது...

****

தொழில்சார்ந்த பேச்சு வார்த்தைக்காக விஷ்ணுபிரஹான் நட்சத்திர விடுதிக்குச் சென்றிருந்தான்... பேச்சு வார்த்தை மும்முரமாகச் சென்று கொண்டிருந்த போது அவனது அலைப்பேசி அதிர்ந்தது... எடுத்து பார்த்தவன் முரளி என்று தெரிந்ததும் எரிச்சலுடன் அமைதியாகி போனான்... முரளிக்கு வேறு வேலை கொடுத்துவிட்டு தான் அவன் இங்கு வந்தது... முரளிக்கு தெரியும் அவன் முக்கியமான பேச்சு வார்த்தையில் இருப்பது... அப்படி இருந்தும் அழைக்கிறான் என்றால்... ? அவனுக்கு அப்படியொரு கோபம் வந்தது... அவன் கோபத்தை அடக்கியபடி பேச்சு வார்த்தையில் கவனத்தைச் செலுத்தினான்...

மீண்டும் மீண்டும் முரளியிடம் இருந்து அழைப்பு வந்து கொண்டே இருக்கவும் எரிச்சலுடன் நிமிர்ந்தவன் , " எக்ஸ்க்யூஸ் மீ..." என்று அனுமதி வேண்டி விட்டு வெளியில் வந்தவன் அடுத்த நொடி முரளிக்கு அழைப்பு எடுத்தான் ,

"முரளி , உனக்கு ஒரு தடவை சொன்னால் புரியாதா... ?" என்று கோபத்துடன் கத்தினான்...

"சார்..."

"உயிர் போகிற விசயமா இருந்தாலும் பரவாயில்லை... நீயே சமாளிச்சுக்கோ..." என்று கத்தியபடி அவன் அழைப்பை துண்டிக்கப் போனான்...

"மேடம்..." என்று முரளி இழுக்கவும்...

"அவளுக்கு என்ன... ?" அவனது குரலிலிருந்த கோபம் மறைந்து பதற்றம் தொற்றிக் கொண்டது...

"அர்ச்சனா மேடம் இல்லை..." முரளி விளக்கம் கொடுப்பதைக் கேட்டு விஷ்ணுபிரஹான் பல்லை

கடித்தான்...

"அது எனக்குத் தெரியும்... நீ விசயத்தைச் சொல்லு..."

"முதலில் நீங்க ஹாஸ்பிட்டலுக்குக் கிளம்பி வாங்க சார்..."

"என்னாச்சு... ?" அவன் குழப்பத்துடன் நெற்றியை நீவி கொண்டான்...

"மேடம் இங்கே இருக்காங்க... கணேசனோட ஆட்கள் மேடமை சுத்தி வளைச்சிட்டாங்க... என்னால் ஒண்ணும் பேச முடியலை..."

"ஓ மை காட்..." மேற்கொண்டு ஆராதனாவை திட்ட போனவன் தன்னைக் கட்டுப்படுத்திக் கொண்டா ,

"உடனே வர்றேன்..." என்றவன் அழைப்பை துண்டித்துவிட்டு அறைக்குள் சென்று பேச்சு வார்த்தை நடத்தி கொண்டிருந்த தொழிலதிபரிடம் விசயத்தைக் கூறி விடைபெற்று வெளியில் வந்தவன் தனது காரிலேறி அதை மருத்துவமனையை நோக்கி புயலாய் விரட்டினான்...

அடுத்த அரை மணி நேரத்தில் மருத்துவமனையை அடைந்தவன் கணேசன் மனைவி இருந்த அறையை நோக்கி சென்றான்... அத்தனை வேகம் அவனது நடையில்... அத்தனை குழப்பம் , கோபம் அவனது மனதில்...

அறை கதவை திறந்து உள்ளே சென்றவன் முதலில் பார்த்தது அங்கிருந்த நாற்காலியில் அமர்ந்திருந்த ஆராதனாவை தான்... தலையில் கை வைத்தபடி தலைகுனிந்து அவள் அமர்ந்திருந்த தோற்றம் அவனை ஏதோ செய்தது... கடந்த சில நாட்களாகப் புகைப்படத்தில் மட்டுமே பார்த்து வந்தவளை நேரில் கண்டதும் அவனுள் ஏதோ ஒரு உணர்வு... உணர்ந்து கொள்ள முடியாத , பிரித்தறிய முடியாத ஒரு உணர்வு... அதையும் மீறி அவள் தன்னைத் தேடி வராது இங்கு வந்தது அவனுக்கு மிகுந்த கோபத்தைக் கொடுத்தது...

அவளைச் சுற்றி நின்றிருந்த கணேசன் மற்றும் அவனின் உறவினர்கள் அவனது விழியில் விழுந்து அவனது ஆத்திரத்தை மேலும் அதிகரித்தனர்... முரளி ஆராதனாவுக்கு ஆதரவாக அருகில் நின்றிருந்தது ஒன்று மட்டுமே அவனுக்குப் பெருத்த ஆறுதலாக இருந்தது...

"க்கும்..." என்று ஆராதனாவை கவரும் வகையில் அவன் தனது தொண்டையைச் செருமினான்...

பரிச்சயமான அவனது செருமலில் அவள் நிமிர்ந்து பார்க்கும் முன் அவன் கணேசனை பார்த்துச் சத்தம் போட ஆரம்பித்தான்...

"கணேசனஂ , யாரிடம் பேசிக்கிட்டு இருக்கீங்கன்னு தெரிஞ்சு தான் பேசிக்கிட்டு இருக்கீங்களா... ?" அவனது குரலில் அத்தனை காட்டம் இருந்தது...

விஷ்ணுபிரஹானை நிமிர்ந்து பார்க்க முயன்ற ஆராதனா அவனது வார்த்தையில் அப்படியே நிலைகுலைந்து தலைகுனிந்து போனாள்... இருவருக்கும் இடையில் என்ன உறவு இருக்கிறதஂ ? அதை நினைத்து அவளது உள்ளம் அதிர்ந்தது...

"ஏன் தெரியாம சார்... ? என் குழந்தையை அழிச்ச பாவி அவங்க..." கணேசனை தொடர்ந்து அவனது உறவினர்களும் எதிர்ப்பு குரல் கொடுத்தனர்...

"அவங்க தான் அழிச்சாங்க என்பதற்கான ஆதாரம் உங்க கிட்ட இருக்கா... ?"

விஷ்ணுபிரஹானின் இந்த வார்த்தையில் ஆராதனா விலுக்கென்று நிமிர்ந்தாள்... ' அடப்பாவஂி ' என்பது போல் அவள் அவனைப் பார்த்தாள்... அவளுக்கு எதிராய் அத்தனை ஆதாரங்களைத் திரட்டி கோப்பு போட்டு அவளிடம் கொடுத்தது அவன் தானே... ? பிள்ளையும் கிள்ளிவிட்டு தொட்டிலையும் ஆட்டிவிடும் அவனை நினைத்து அவளுள் சிறு கோபம் ஒன்று முளைத்தது...

அதேசமயம் தன்னவனை அவளது விழிகள் நிதானமாய் அளவிட்டது... அடர் நீல நிற கோட் , சூட்டில் இராஜகுமாரன் போன்று கம்பீரமாக இருந்தவனின் அழகு அவளது மனதினை நிறைக்கத் தவறவில்லை... அவளது விழிகள் அவனை ஆசையுடன் பார்ப்பதை அறியாது அவன் கணேசனுடன் பேசி கொண்டிருந்தான்...

"அன்னைக்கு ஹாஸ்பிட்டலில் அவங்க கிட்ட ஊசி போட்டுட்டு போனதுக்கு அப்புறம் தான் என் பொஞ்சாதிக்குக் கருக்கலைப்பு நடந்திருக்கு..." கணேசனின் குரல் ஓங்கி ஒலித்தது...

"அதுக்கும் ஆதாரம் வேணும் கணேசன்... ஆதாரம் இல்லாம ஒருத்தர் மேல் கேஸ் போட முடியாது..."

"அவங்க எழுதி கொடுத்த மருந்து சீட்டு என் கிட்ட இருக்கு... இதை விட வேறென்ன ஆதாரம் வேணும்... ?" கணேசன் அடங்க மறுத்தான்...

"அவங்க இதுக்குக் காரணம் இல்லைன்னு சொன்னால்... உன்னோட முடிவு என்ன... ?"

"முதலில் நீங்க அதை நிரூபிங்க..."

"உன் மனைவியிடமே அதைக் கேட்கலாமா... ?"

அந்த அறையின் ஓரத்தில் இருந்த கட்டிலில் சாய்ந்து அமர்ந்திருந்த கணேசனின் மனைவி மீது விஷ்ணுபிரஹானின் பார்வை சென்றது...

"சொல்லும்மா... நடந்தது என்னன்னு உன் புருசன் கிட்ட சொல்லு... ?" அவள் பயத்துடன் தனது கணவனைப் பார்த்தாள்...

"என்னிடம் சொன்னதைப் பயப்படாம உன் புருசன் கிட்டேயும் சொல்லு..."

ஆராதனா நடப்பது எதுவும் புரியாது வேடிக்கை பார்த்து கொண்டிருந்தாள்...

"ஆமாங்க... இந்தத் தடவையும் பொட்டப்புள்ள பொறந்திருமோன்னு பயந்து நான் தான் கருக்கலைப்பு செஞ்சிட்டேன்..."

ஏனெனில் அவர்களுக்கு முதலில் இரண்டும் பெண் குழந்தைகள்... எங்கே மூன்றாவதும் பெண்ணாகி விடுமோ என்று பயந்து அவள் இப்படியொரு காரியத்தைச் செய்திருக்கிறாள்...

"அடிப்பாவி... நான் அப்படி நினைக்கிற ஆளா... ? அப்படி நினைச்சிருந்தா அவ்வளவு செலவு பண்ணி பெரிய ஹாஸ்பிட்டலுக்கு உன்னைச் செக்கப்புக்கு கூட்டிட்டு போவேனா... ?" கணேசன் கோபமும் , ஆதங்கமுமாய் அரற்றினான்...

"பிரச்சனை முடிந்ததுன்னு நினைக்கிறேன்... இப்போதாவது அவங்களை விடலாம் இல்லையா... ?" என்று கணேசனிடம் சொன்ன விஷ்ணுபிரஹான் முரளியிடம் திரும்பி ,

"மேடத்தைப் பத்திரமா கூட்டிட்டு போ..." என்றவன் ஆராதனாவை திரும்பியும் பாராது சென்றுவிட்டான்...

அவளாகத் தன்னைத் தேடி வராது அவனாக அவளைத் தேடி சென்று பார்க்கவும் மாட்டான்... பேசவும் மாட்டான்... ஆண் என்கிற ஈகோ அவனது கண்களை மறைத்தது...

புரியாத புதிராய்ச் செல்லும் அவனைப் பார்த்தபடி அமர்ந்திருந்த ஆராதனா அருகில் வந்த முரளி , " மேடம் , கிளம்பலாமா... ?" என்று கேட்க...

"ம்..." என்றபடி எழுந்தவள் அறையை விட்டு வெளியில் வந்தாள்...

இந்த வழக்கு பதிந்து விடாது தடுப்பதற்காகவும் , தன்னிலை விளக்கத்திற்காகவும் தான் அவள் இங்கே வந்தது... அவளை இங்குப் பார்த்ததும் கணேசனும் , அவனது உறவினர்களும் கோபமாய் முற்றுகையிட்டு

விட்டனர்... நல்லவேளை எதுவும் அசம்பாவிதம் நடக்கும் முன்னர் முரளி அங்கு வந்துவிட்டான்...

"மேடம் , சார் என்னைய கார் ஓட்ட சொன்னார்..."

"இல்லை வேண்டாம்... நானே போய்க்குவேன்..." என்றபடி கார் கதவை திறக்க போனவள் பின் நின்ற ,

"நீங்க எப்படிச் சரியான நேரத்துக்கு இங்கே வந்தீங்க... ?" என்று கேட்க...

' எங்க சார் உங்களைக் கண்காணிக்க ஆள் வச்சியிருக்கார்... அவன் சொல்லித்தான் நான் இங்கே வந்தேன்... அதுவும் நான் இங்கே பக்கத்தில் ஒரு வேலையாக வந்ததால் உடனே வர முடிந்தது... இல்லையென்றால்... ?' விஷ்ணுபிரஹான் கோபமாய்த் தன்னைத் திட்டுவதை மனக்கண்ணில் கண்டவனாய் முரளி மேனி சிலிர்த்துக் கொண்டான்...

"ஹாஸ்பிட்டலுக்கு வந்தேன் மேடம்... அப்போ அந்த ரூமுக்குள் இருந்து சத்தம் கேட்டது... எட்டி பார்த்தால் நீங்க... அப்படியே விட்டுட்டு போக மனசு வரலைங்க..."

"ஓ..." என்றவள் அவனுக்கு நன்றி கூறிவிட்டு காரை கிளப்பிக் கொண்டு சென்றாள்...

அவளது மனதில் வந்ததில் இருந்து தன்னைக் கண்டு கொள்ளாத விஷ்ணுபிரஹான , தன்னிடம் பேச முயற்சிக்காத விஷ்ணுபிரஹான் என்று அவனது பிம்பமே வலம் வந்தது... அவன் மீது அப்படியொரு கோபம் வந்தது அவளுக்கு... அதேசமயம் அவனது உதாசீனம் அவளுள் பெருத்த வலியை உண்டு பண்ணியது...

அவனிடம் பேச வேண்டி அவள் அவனுக்கு அழைப்பை எடுத்தாள்... மறுபுறம் பிகு பண்ணாது அவன் உடனே அழைப்பை எடுத்தான்... அவள் பேசுவாள் என்பது அவனுக்கு நன்கு தெரியும்... அதை உணர்ந்தவனாய் அவனது உதடுகளில் நமட்டுச் சிரிப்புத் தவழ்ந்தது...

"ஏன் இப்படிப் பண்ணினீங்க... ?" அடக்கப்பட்ட கோபத்துடன் அவள் கேட்க...

"ஏன்னு உனக்குத் தெரியாதா... ?" அவனது குரல் புதிராய் ஒலித்தது...

"சத்தியமா எனக்குப் தெரியலை..." உண்மையில் அவனது பிரச்சனை என்ன ? என்பது அவளுக்குத் தெரியவில்லை தான்...

"எதுக்கு வீணே சத்தியத்தை வேஸ்ட் பண்ற... ?" என்றவன் ,

"நான் விலகி போக சொன்னால் நீ உடனே விலகி போயிருவியா... ?" அவன் ஆழ்ந்த குரலில் கேட்க... அந்தக் குரல் அவளது மனதினை ஏதோ செய்தது...

அவளது மனது தடுமாறியதில் அவளது கைகளில் கார் தடுமாறியது... காரை ஓரமாக நிறுத்தி தன்னை ஆசுவாசப்படுத்திக் கொண்டவள் பின் நிதானமாக ,

"வேறென்ன செய்யணும்ன்னு எதிர்பார்க்கிறீங்க... ?" அவள் சுள்ளென்று கோபத்துடன் கேட்டாள்... தவறு மொத்தமும் அவனிடத்தில் தானே இருக்கிறது...

"என்னைக் காதலிக்கிறேன்னு சொல்லியிருக்கணும்... என்னை விட்டுட்டு இருக்க முடியாதுன்னு சொல்லியிருக்கணும்... விட்டது தொல்லைன்னு விட்டுட்டு போய் விட்டால் எப்படி... ? அதைக் கேட்டு நான் சும்மாயிருப்பேனா... ?"

"விட்டுட்டு போறேன்னு சொல்றவங்க காலில் விழுந்து கெஞ்சணுமா... ? என்னை விட்டுட்டு போகாதீங்கன்னு... ?"

"தேவைப்பட்டா அதையும் செய்யலாம் , தப்பில்லை..." என்றவனது குரலில் விசமம் வழிந்தது...

"நெவர் மிஸ்டர். விஷ்ணுபிரஹான்... தப்பு செய்யாத நான் ஏன் உங்க காலில் விழுந்து கெஞ்சணும்... ? அப்படி

ஒண்ணும் நீங்க எனக்குத் தேவையில்லை..." என்று படபடவென்று கோபமாய்க் கூறியவள் ,

"என்னை விட்டுப் போனது நீங்க... வேறு பொண்ணைக் கல்யாணம் பண்ணிக்கிட்டது நீங்க... தவறு முழுவதும் உங்கள் மீது... என் மீதில்லை..." என்றவள் நிதானத்திற்கு வர வெகுநேரம் தேவைப்பட்டது...

அவள் கூறியதை கேட்டு அவன் சிறிது நேரம் மௌனமாய் இருந்தான்... அவள் கூறியது அனைத்தும் உண்மை என்று ஒத்துக் கொள்வது போலிருந்தது அவனது மௌனம்...

"அது என்னுடைய தனிப்பட்ட விசயம்..." என்றான் அமர்த்தலாக...

"அப்போ இதுவும் என்னுடைய தனிப்பட்ட விசயம் தான்..." அவளும் முறுக்கி கொண்டாள்...

"இப்பவும் நான் காப்பாத்தியதால் தான் நீ இப்படித் தைரியமா பேசிக்கிட்டிருக்க... இல்லைன்னா... ?"

"இல்லைன்னா என்ன... ?" அவள் தெனாவெட்டாகக் கேட்க...

"உன்னை அசிங்கப்படுத்தவோ , உன்னைத் திட்டவோ , இன்னும் எத்தனையோ... எல்லாத்துக்கும் எனக்கு மட்டுமே உரிமையிருக்கு... வேறொருத்தன் உன்னை அசிங்கப்படுத்த நான் விட மாட்டேன்... அதனால் தான் நீ தப்பிச்ச..." அவனது வார்த்தைகள் கேட்டு அவள் இதழ் கடித்தபடி அமைதியாகி போனாள்... பின்பு சுதாரித்துக் கொண்டு ,

"உண்மை தெரிஞ்சும் இப்படிப் பொய்யாய் மிரட்ட உங்களுக்கு அசிங்கமா இல்லை..."

அதைக் கேட்டு வாய்விட்டு சிரித்தவன் , " நிச்சயம் இல்லை... உன்னை என் கிட்ட வரவழைக்க நான் எது வேணும்ன்னாலும் செய்வேன்..." என்க...

"ச்சீ... இன்னொருத்தி புருசனா இருந்திட்டு இப்படிப் பேச உங்களுக்கு வெட்கமாயில்லை..." அவளது குரல் அருவருப்புடன் ஒலித்தது...

"இல்லையே..." என்றான் அவன் உல்லாசமாக... ஏனோ அவளுடன் வார்த்தையாடுவது அவனுக்கு மிகவும் பிடித்திருந்தது... அவளைச் சூடேற்றி பார்ப்பதில் அத்தனை குஷி போலும்...

"எனக்கு அருவருப்பா இருக்கு..." எரிச்சலுடன் கூறிவிட்டு அலைப்பேசியை அணைக்க முற்பட்டவள் கை அதிர்ச்சியில் அப்படியே நின்றது... ஏனெனில் மறுபுறம் அவன் கூறிய வார்த்தைகள் அப்படி...

"நீ என்னைத் தேடி வரணும்... உன் மனசில் நான் இருக்கேன்ங்கிறதை சொல்லணும்... அதையெல்லாம் விட..." அவன் இடைவெளி விட... அவளது இதயம் அச்சத்தில் சத்தமாய் மத்தளம் வாசிக்க ஆரம்பித்தது...

"நீ என்னைப் பார்த்து ஐ லவ் யூன்னு சொல்லணும்... உன்னைச் சொல்ல வைப்பேன்..."

அவனது வார்த்தைகள் பனிக்கட்டியாய் அவளது நெஞ்சத்தை ஊடுருவி சென்றது... அது அவளுக்கு மிகுந்த வலியை கொடுத்தது...

"பை பேபி..."

அவனது ' பேபி ' என்றழைப்பு அவளை விதிர்க்க செய்த அதே நேரத்தில் , அவளுள் சிலீரென்று ஒருவித புது உணர்வையும் தோற்றுவிக்கத் தவறவில்லை...!!!

திருத்தமாகும்...!!!

ஸ்ரீராம் இரவு உணவு முடித்துக் கொண்டு தனது அறைக்குள் நுழைந்தவன் தனது மடிகணினியை எடுத்துக் கொண்டு சோபாவில் அமர்ந்து அதை உயிர்ப்பித்தான்... கணினி திரையில் அன்று மலர்ந்த மலராய் அல்லி பூவாய் புன்னகைத்துக் கொண்டிருந்த சீதாவின் முகத்தை அவன் ஆசை தீர பார்த்துக் கொண்டிருந்தான்...

அவன் அவளை காதலித்ததே ஒரு சுவாரசியமான விசயம் தான்... அவனுக்கு எப்போதுமே சீதா என்கிற பெயரில் ஒருவித மயக்கம் உண்டு... ஒருவேளை அவனது பெயர் ஸ்ரீராம் என்றிருப்பதால் கூட அப்படி இருந்திருக்கலாம்... ஆனால் இன்றைய நவீன யுகத்தில் சீதா என்கிற பெயருடைய இளம்பெண்களைக் காண்பதே அரிதாகி போனது... சீதா என்று பெயர் வைத்தவர்களில் நிறையப் பேர் வயதானவர்களாகவோ அல்லது நடுத்தர வயதுடையவர்களாகவோ இருந்தனர்...

அப்படிப்பட்டவர்களில் இளந்தளிராய் அவள் இந்தப் பெயரை தாங்கி அவன் கண்முன் வந்த போது அவன் தனது சிந்தையை இழந்தான் அவள்பால்... அன்று அவளில் அவன் கொண்ட மயக்கம் இன்றும் தொடர்கிறது... அவன் உயிர் பிரிந்தாலும் இந்த மயக்கம் தீருமா ? அது அவனுக்கே தெரியவில்லை... தனது காதலை எண்ணி பூரித்துக் கொண்டிருந்தவனின் மனக்கண்ணில் ஆராதனாவின் அழகு முகம் எழுந்து அவனை வேதனை கொள்ளச் செய்தது...

' வேண்டாம்... இரண்டையும் நினைத்து மனதை போட்டுக் குழப்பிக் கொள்ளாதே... உன் சீதா பாவம்... அப்பாவி... அவள் அண்ணன் செய்த தவறுக்கு அவள் என்ன செய்வாள்... ? விஷ்ணுவின் தவறுக்கு பெண்ணின் வாழ்க்கையில் விளையாட நினைக்காதே... ' அவனது மனசாட்சி என்றும் போல் இன்றும் அவனுக்கு அறிவுறுத்தியது...

அந்நேரம் அவனது அலைப்பேசி அழைத்தது... சீதாவின் எண் திரையில் ஒளிர்ந்தது , அவளது புகைப்படத்தோடு... அவன் முகம் மலர அழைப்பை ஏற்றுக் காதில் வைத்தான்...

"சீதா..."

ஒவ்வொரு ஆண்களைப் போன்று அவனால் காதலியை செல்லமாய்க் கூப்பிட முடியவில்லை... சீதா என்கிற பெயர் மீதிருந்த மயக்கம் அவனை அப்படி அழைக்க விடவில்லை...

பல்லாயிரக்கணக்கான மைல்களுக்கு அப்பாலிருந்து அவன் அழைத்த அழைப்பில் இருந்த காதலை மறுபக்கம் இருந்த சீதா உணர்ந்தாள்... எப்போதும் போல் இப்போதும் அவனது காதல் அவளைச் சிலிர்க்க செய்தது...

"பேச மாட்டியா சீதா... ?" தாபத்துடன் வந்தது அவனது வார்த்தைகள்...

"சாப்பிட்டேளா... ?"

எந்த ஆணுக்கு தான் தன்னவளின் அக்கறை பிடிக்காது... அவனுமே அப்படியொரு மனநிலையில் தான் இருந்தான்... அவளின் அக்கறை அவனைச் சுகமாய்த் தாலாட்டியது...

"ம் , இப்போ தான்..." என்றவன் ,

"இப்போ அங்கே அதிகாலை மணி மூன்றரை இருக்குமே... தூங்காம எனக்கு ஃபோன் பண்ணிக்கிட்டு இருக்க..." அவன் சற்று அக்கறையுடன் அவளைக் கடிய... இப்போது அவனது அக்கறை அவளைச் சுகமாய்த் தாக்கியது...

"உங்க கிட்ட பேசணும்ன்னு தான்..." சீதா கூறியதும் அவன் அகமகிழ்ந்து போனான்...

"அப்போ கொஞ்சம் ஏர்லியரா ஃபோன் பண்ணியிருக்கலாமே..."

"வேலை நேரத்தில் உங்களை டிஸ்டர்ப் பண்ண வேண்டாம்ன்னு தான்..."

"எனக்கு வேலையை விட நீ தான் முக்கியம் சீதா..." அவனது வார்த்தையில் அவள் உள்ளம் குளிர்ந்து போனாள்...

"ம் , சொல்லு... என்ன விசயமா ஃபோன் பண்ணின... ?"

"அது வந்து..." அவள் தயங்க...

"நிச்சயம் என் காதலுக்கு ஓகே சொல்றதுக்கு இல்லை... அது எனக்கு நல்லா தெரியும்... அதனால் என்ன விசயம்ன்னு தயங்காம சொல்லு... ?"

அவனது வார்த்தையில் அவளது மனதில் குற்றவுணர்வு ஏறியது...

"சாரி..."

"எதுக்குச் சாரியெல்லாம் சொல்ற... ? நம்ம கல்யாணத்துக்கு அப்புறம் நான் கண்டிப்பா உன்னைக் காதலிக்க வச்சே தீருவேன்... அதனால் நம்ம காதலை பத்தி கவலைப்படாதே... நீ சொல்ல வேண்டியதை சொல்லு..."

"அது வந்து... வைதேகிக்கு வர்ற இருபத்தினாலாம் தேதி வளைகாப்புப் பண்றாளாம்... நான் அங்கே போகணும்... அதுக்கு முன்னாடி என்னோட ட்ரான்ஸ்பர்..." என்று அவள் தயக்கத்துடன் நிறுத்தினாள்...

அதைக் கேட்டு அவன் ஒரு கணம் அமைதியாக இருந்தான்...

"நானும் இல்லைன்னா அம்மா ரொம்பக் கஷ்டப்படுவா... ஆண் பிள்ளை இல்லாத வீடு... கூடமாட வேலை செய்ய நான் இருந்தா தான் சித்த நன்னா இருக்கும்..."

அவளது வார்த்தைகளில் அவனுள் குற்றவுணர்வு தோன்றியது... அவர்களது இந்த நிலைக்கு அவனும் ஒரு காரணம் அல்லவா...

"இன்னும் மூணு நாளில் உனக்கு ட்ரான்ஸ்பர் கிடைச்சிரும்..." என்று அவன் உறுதி அளித்தான்...

அதைக் கேட்டு அவள் அமைதி காத்தாள்...

"இப்ப சந்தோசமா... ?"

அவன் கேட்ட போது அவளுள் சந்தோசம் முகிழ்க்கவில்லை... மாறாகத் துக்கம் தொண்டையை அடைத்தது... அது என்ன உணர்வு ? என்று அவளால் சொல்ல முடியவில்லை...

"தெரியலை..."

"இதென்ன பதில்... ?" அவனுள் சுவாரசியம் கூடியது...

"நேக்கு என்ன சொல்றதுன்னு தெரியலை... நான் உங்களை ரொம்பக் கஷ்டப்படுத்துறேனோ... ?"

"புரியலை..."

"நீங்களும் இங்கே வர்றதா சொன்னேளே... உங்க விருப்பத்துக்கு மாறா நான் நடந்துக்கிறேனோ... ?"

"ஏன் நீ அப்படி நடந்தால் தான் என்ன... ? அதில் எனக்கு என்ன கஷ்டம் வந்திர போகுது... ?" அவளது மனம் செல்லும் பாதை அறிந்து அவனுள் உல்லாசம் பிறந்தது...

"உங்களைக் கஷ்டப்படுத்திப் பார்க்க நேக்குத் தைரியம் இல்லை..."

"அதான் ஏன்... ?" அவன் நமட்டு சிரிப்புடன் கேட்க... அவள் தான் பதில் சொல்ல தெரியாது விழித்தாள்...

"அது தான் காதல் சீதா... உன் மனசில் உன்னையும் அறியாமல் நான் இருக்கிறேன்... உன்னை நீயே ஆராய்ந்து பார்... உன்னோட காதல் உனக்குப் புரியும்..."

"அச்சோ காதல் எல்லாம் இல்லை..." அவள் அவசரமாக மறுத்தாள்...

"அப்போ பிடித்தம் மட்டும் இருக்கிறதா... ?" என்று கேட்டவனுக்கு அவள் மௌனத்தையே பதிலாகக் கொடுத்தாள்...

"இந்தப் பிடித்தம் மெல்ல ஒருநாள் காதலாக மாறும்... எனக்கு நம்பிக்கை இருக்கிறது..." அதற்கும் அவள் பதில் கூறவில்லை...

"சரி , இப்போ நீ சந்தோசப்படுற மாதிரி ஒரு விசயம் சொல்லவா... ?"

"என்னது... ?" அவளது அதீத ஆர்வம் கண்டு அவன் வாய்விட்டுச் சிரித்தான்... அதைக் கேட்டு அவளுக்குத் தான் வெட்கமாகப் போய்விட்டது...

"சிரிக்காதீங்கோ... சொல்லுங்கோ..."

அவளது உரிமையான சிணுங்கலில் அவனது இதயம் ஒரு நொடி நின்று துடித்தது... பதின்பருவம் போன்று அவனது மனதிற்குள் லட்சக்கணக்கான பட்டாம்பூச்சிகள் பறக்க ஆரம்பித்தது...

"அது சர்ப்ரைஸ்..."

அவளது சிணுங்கலில் தன்னை மறந்தவன் அவளுக்கு இனிய அதிர்ச்சி கொடுத்து அவளை இன்பவெள்ளத்தில் மூழ்கடிக்க விரும்பினான்...

"அச்சோ நேக்கு யோசிச்சு யோசிச்சு தலை வெடிச்சிரும்..."

"அப்படியாவது என்னைப் பத்தி யோசி சீதா..." ஆழ்ந்து ஒலித்த அவனது வசீகரக் குரலில் அவளுக்கு மறுபடியும் வாயடைத்துப் போனது...

"இன்னைக்குக் காலையில் எழும் போது கூட இன்றைய நாள் எனக்குச் சாதாரண நாளாகத் தான் இருந்தது... ஆனா இப்போ ரொம்ப ஸ்பெசல் நாளாக மாறியிருச்சு... தேங்க்ஸ் சீதா..." என்றவன் அலைப்பேசி வழியே அழுத்தமாய்த் தனது முத்திரையைப் பதிக்க... அவன் நேரில் கொடுத்தது போல் மறுபக்கம் அவள் விதிர்த்து போனாள்...

"பை சீதா... குட்நைட்..." என்றவன் அழைப்பை துண்டித்தான்...

சீதா அலைப்பேசியைப் பார்த்தபடி பிரம்மை பிடித்தார் போன்று அமர்ந்திருந்தாள்... ஸ்ரீராமோ மடிகணினியை அணைத்துவிட்டுப் புன்னகை முகமாய்ப் படுக்கையில் சாய்ந்தான்...

****

பார்வதி சில நாட்களாகத் தனது மகன் சிவேஷ்கந்தாவை கவனித்துக் கொண்டு தான் இருக்கிறார்... எப்போதும் ஓரிடத்தில் தங்காது சுற்றிக் கொண்டிருக்கும் மகன் கடந்த சில மாதங்களாகக் குட்டி போட்ட பூனை போன்று சென்னையில் சுற்றிக் கொண்டிருப்பது கண்டு அவருக்கு மிகுந்த ஆச்சரியமாக இருந்தது...

"சிவேஷ்..."

தான் படித்துக் கொண்டிருந்த செய்தித்தாளை கீழே இறக்கிய சிவேஷ்கந்தா , " என்னம்மா... ?" என்று புன்னகையுடன் கேட்டான்...

"சிங்கப்பூர் , ஸ்ரீலங்கா , துபாய் இந்த மூன்று நாடுகளிலும் நம்ம ஹாஸ்பிட்டல் கட்டும் வேலை நடந்துக்கிட்டு இருக்கிறது உனக்கு ஞாபகம் இருக்கா ? இல்லையா ?"

"ஏன் ஞாபகம் இல்லாமல்... ? நல்லா ஞாபகம் இருக்கும்மா..." செய்தித்தாளை மடித்து வைத்தபடி அவன் பதில் கூறினான்...

"அங்கே எல்லாம் போகாமல் நீ இங்கேயே இருப்பதைப் பார்த்தால்... ?" அவர் சந்தேகமாய் மகனை பார்த்தபடி இழுத்தார்...

"என்னருமை அம்மாவை விட்டு போக முடியலைன்னு அர்த்தம்..." என்றபடி அவன் தனது அன்னையை அணைத்துக் கொண்டான்...

"டேய் யாருடா அது... என் பொண்டாட்டியை கட்டிப்பிடிக்கிறது... ?" போலி கோபத்துடன் கேட்டபடி அங்கே

வந்தார் சிவசுப்ரமணியம்...

"உங்க பொண்டாட்டியோட மகன்..." என்று குறும்பாய் சிரித்தபடி கண்ணைச் சிமிட்டினான் சிவேஷ்கந்தா...

"ஹா ஹா..." என்று அவர் சிரித்தபடி அங்கே அமர்ந்தார்...

"போதுமே கிண்டல்... உங்க மகன் மனசில் என்னயிருக்குன்னு கேளுங்க..."

"என்ன சிவேஷ்... ?" சிவசுப்ரமணியம் புரியாது மகனை பார்த்தார்...

"ஒண்ணுமில்லைப்பா..." அவன் பதில் கூற முடியாது தலையைக் கோதியபடி வேறு பக்கம் பார்த்தான்...

"வெளிநாட்டில் நம்ம ஹாஸ்பிட்டல் கட்டுமான வேலைகள் நடக்கிறது இல்லையா... ? அதைக் கவனிக்கப் போகாமல் இங்கேயே இருக்கியேன்னு கேட்டேன்... அதுக்குப் பதில் சொல்லாம மழுப்பறான்..."

"நம்ம அர்ஜூன் கன்ஸ்ட்ரக்சன் கம்பெனி கிட்ட தானே இந்த வேலையை ஒப்படைச்சு இருக்கோம்... ஸ்ரீராம் எல்லாம் பக்காவா பிளான் பண்ணி செஞ்சிருவான்... எனக்கு அவன் மேல் நம்பிக்கை இருக்கு..." சிவசுப்ரமணியம் கூறவும் ,

"அதுவும் சரி தான்..." என்று ஒத்துக் கொண்ட பார்வதி ,

"ஆனாலும் இவன் மேல் எனக்கு டவுட்டா இருக்கு..." என்றபடி மகனை பார்த்தார்...

"பார , நீ போய்ச் சாப்பாடு எடுத்து வை..." என்று மனைவியை அனுப்பி வைத்த சிவசுப்ரமணியம் மகனை பார்த்தார்... அவன் அவரது பார்வையைச் சந்திக்க இயலாது தனது அலைப்பேசியை எடுத்து பார்த்துக் கொண்டிருந்தான்...

"சிவேஷ் , உங்கம்மாவை ஏமாத்தின மாதிரி நீ என்னை ஏமாத்த முடியாது..." சற்று கண்டிப்புடன் ஒலித்தது அவரது குரல்...

"ப்பா..."

"யாருடா அந்தப் பொண்ணு... ? நம்ம ஹாஸ்பிட்டலில் வொர்க் பண்ணுகிறாளா... ? டாக்டரா ? நர்சா ? இல்லை ரிசப்சனில் வேலை செய்யும் பெண்ணா... ?"

"ரிசப்சனிஸ்ட்டா இருந்தால் சரின்னு சொல்வீங்களாப்பா... ?" அவன் சிறுபுன்னகையுடன் கேட்க...

"அப்போ லவ் மேட்டர் தானா... ?" அவர் அவனை உற்று நோக்க... அதில் அவன் லேசாக முகம் சிவந்தான்...

"எஸ்ப்பா..." என்றவன் ,

"என்னோட கேள்விக்குப் பதில் சொல்லுங்க..." என்று பிடிவாதம் பிடிக்க...

"யாராயிருந்தால் என்ன... ? என் மகனுக்குப் பிடிச்சிருந்தால் சரி..." அவர் அவனது தோளை தட்டி கொடுத்தார்...

"நான் விரும்பும் பெண்..." என்றவன் நிமிர்ந்து தந்தையைப் பார்க்க...

"பெண்... ?" அவர் ஆர்வமுடன் அவனை நோக்கினார்...

"ஆராதனா..."

அதைக் கேட்டு அவர் அதிர்ச்சியுடன் அவனைப் பார்த்தார்... மகனது காதலி யாராக இருக்கக்கூடும் என்று யாரை எல்லாமோ யோசித்துப் பார்த்தவர் சிறிதும் ஆராதனாவை பற்றி யோசித்துப் பார்க்கவில்லை...

"இது சரி வருமா சிவேஷ்... ?" அவருக்குப் பெருத்த கவலையாக இருந்தது...

"ஏன்ப்பா... ? ஆராதனா ரொம்ப நல்ல பெண்..."

"நான் அதுக்குச் சொல்லலை..."

"நீங்க சொல்ல வர்றது எனக்குப் புரியுதுப்பா... எத்தனை நாளைக்குத் தான் அவள் விஷ்ணுவை நினைச்சிக்கிட்டு இருக்க முடியும்... அவனுக்கு ஒரு வாழ்க்கை அமைஞ்ச மாதிரி அவளுக்கும் ஒரு நல்ல வாழ்க்கை அமைய வேண்டாமா... ? அவள் காலம் முழுவதும் இப்படியே இருக்க வேண்டுமா... ?"

"நிச்சயம் நான் அப்படிச் சொல்ல மாட்டேன் சிவேஷ்... ஆராதனா நான் பார்த்து வளர்ந்த பொண்ணு... அவளைப் போய் நான் எப்படி... ? நான் சொல்ல வருவது வேறொன்று..." என்றவர் நிறுத்திவிட்டு மகனை நிதானமாகப் பார்த்தார் ,

"விஷ்ணுபிரஹான்..." என்றார் அமைதியாக...

"அவனைக் கண்டு நீங்க எதுக்குப் பயப்படுறீங்க... ? அவன் தான் ஆராதனா வாழ்க்கையை விட்டு போய்விட்டானே..." சிவேஷ்கந்தா படபடத்தான்...

"ஆராதனா வாழ்க்கையில் இருந்து போயிருந்தாலும் அவளை விட்டு போன மாதிரி எனக்குத் தெரியலை..." என்றவர் ஆராதனாவுக்கு எதிராக விஷ்ணுபிரஹான் செய்த சதியை மகனிடம் கூறினார்...

"அவளை அவன் கிட்ட வரவழைக்க அவன் எல்லா விதத்திலும் தயாரா இருக்கான்... இவங்களுக்கு இடையில் நீ மாட்டி கொள்வதை நான் விரும்பலை சிவேஷ்..."

"ப்பா , நான் ஆராதனாவை ரொம்ப விரும்பறேன்ப்பா... தேவைப்பட்டா விஷ்ணு கிட்ட போய் நான் பேசறேன்... உன்னை மாதிரி அவளும் சந்தோசமா இருக்கணும்ன்னா நீ அவளை விட்டு ஒதுங்கி இருன்னு நான் விஷ்ணு கிட்ட கேட்டுக்கிறேன்..."

"நாம கேட்டு அவன் செய்யும் நிலையில் அவனில்லை... அவன் சொல்லி நாம செய்யும் நிலையில் தான் நாம் இருக்கிறோம்..."

"ப்பா..." அவன் திகைப்புடன் அவரைப் பார்க்க...

"எஸ் சிவேஷ்... நம்ம குடுமி அவன் கையில்..." என்று வருத்தத்துடன் தொழில் விசயத்தை விளக்கி கூறியவரை கண்டு அவனுக்கு என்ன சொல்வதா ? என்று தெரியவில்லை...

"ப்பா , தொழில் வேறு... வாழ்க்கை வேறு... நீங்க நேரடியா அர்ஜூன் அங்கிள் கிட்ட பேசி எங்க கல்யாணத்தை முடிவு பண்ணுங்க... அவரை எதிர்க்கும் தைரியம் விஷ்ணுவுக்குக் கிடையாது... அதுவும் அர்ஜூன் அங்கிள் ஆராதனாவுக்கு ஏதாவது ஒண்ணுன்னா பார்த்துட்டுச் சும்மாயிருக்க மாட்டாங்க..."

மகன் கூறுவதும் சற்று ஏற்றுக் கொள்வது போலிருக்க... அவர் சரியென்று சம்மதித்தார்...

"தேங்க்யூப்பா..." என்று சந்தோசத்தில் குதித்தவன் தந்தையை அணைத்து முத்தமிட்டான்...

"இப்போதைக்கு இந்த லவ் மேட்டர் அர்ஜூன் அங்கிள் கிட்ட சொல்ல வேண்டாம்... ஆராதனா வீட்டாளுங்களைப் பொறுத்தவரை இது அரேன்ஜ்டு மேரேஜாகவே இருக்கட்டும்... கல்யாணத்துக்கு அப்புறம் நான் ஆராதனா கிட்ட சொல்லிக்கிறேன்..." என்று உற்சாகத்துடன் கூறியவனைக் கண்டு அவரது முகத்தில் சந்தோசம் வந்தது...

"ஓகே சிவேஷ்..." என்று சம்மதித்தார் அவர்...

"சாப்பிட வர்றேன்னு சொல்லிட்டு அங்கே என்ன அரட்டை...?" பார்வதியின் குரலில் இருவரும் அமைதியாக எழுந்து உணவு மேசையை நோக்கி நடந்தனர்...

****

"பட்டு நில்லு..." மருத்துவமனையில் இருந்து களைத்து வந்த தங்கையை அப்படியே நிறுத்தினான் பரத்...

"பரத் , பட்டு களைச்சு போய் வந்திருக்கிறாள்... ரெப்ரெஷ் பண்ணிட்டு வரட்டும்..." மகனை சத்தம் போட்ட அர்ஜூன்

மகளைப் பார்த்தா ,

"நீ போம்மா..." என்க...

"அப்பா , நீங்க இந்த விசயத்தில் தலையிடாதீங்க..." மகன் கோபத்துடன் உறுமினான்...

"டேய் , அப்பாவையே எதிர்த்து பேசுவியா... ?" அவந்திகா மகனை கோபத்துடன் கடிந்தாள்...

"இந்த விசயத்தில் எதிர்த்து பேசுவேன்..." என்ற பரத் தங்கையிடம் திரும்பி ,

"உன்னைச் சின்னப் பொண்ணுன்னு நினைச்சிட்டு இருந்தேன் பட்டு... ஆனா நீ பண்ற காரியத்தைப் பார்த்தால் அப்படித் தோணலை எனக்கு.."

மகன் மகளை நிற்க வைத்துக் கேள்வி கேட்பதை கண்டு அர்ஜூனுக்குக் காண சகிக்கவில்லை...

"பரத்..." என்று அவன் கோபத்துடன் மகனை அதட்டினான்...

"என்னை அதட்டாதீங்கப்பா... பட்டுவை அதட்டுங்க..."

"அதட்டும் அளவுக்குப் பட்டு என்ன தப்பு செஞ்சாள்... ?"

"நம்ம கிட்டயிருந்து உண்மையை மறைச்சியிருக்கிறாள்... கொஞ்சம் அசந்திருந்தா இந்நேரம் நம்ம பட்டு ஜெயிலில் இருந்திருப்பாள்..."

"பரத்..." பெற்றோர் இருவரும் அதிர்ந்து போய்க் கூவினர்...

"பாரு பட்டு... உன் மேல் உயிரையே வச்சியிருக்கிற நம்ம அப்பா , அம்மாவை ஏமாத்த உனக்கு எப்படி மனசு வந்தது... ?" பரத் தங்கையிடம் ஆவேசமாய்க் கேட்டான்...

"புரியாத மாதிரி பேசுறதை நிறுத்து பரத்... என்ன நடந்ததுன்னு எனக்குச் சொல்லு..." அர்ஜூன் இடையிட்டான்...

ஆராதனாவுக்கு எதிராக விஷ்ணுபிரஹான் செய்த சதியை ஒன்று விடாது கூறிய பரத் , " இவ்வளவு நடந்திருக்கு... இவள் நம்ம கிட்ட ஒரு வார்த்தை கூடச் சொல்லலை... சிவா அங்கிள் சொல்லித்தான் எனக்கு விசயம் தெரியும்..." என்று கூற...

"பட்டா , உண்மையாவாடா..." அர்ஜூன் உயிர் அவன் வசமில்லை...

"ப்பா..." என்று ஓடிவந்து தந்தையை அணைத்துக் கொண்டு அழுதாள் ஆராதனா...

"எங்க கிட்ட சொல்ல முடியாத அளவுக்கு நாங்க உனக்கு அந்நியமா போயிட்டோமா பட்டு... ?" அவந்திகாவிற்குக் கண்கள் கலங்கி போனது...

"உங்க கிட்ட சொல்லாமல் மறைச்சது தப்பு தான்ப்பா... ஆனா , ஆனா..." பேச முடியாது திக்கிய மகளின் முதுகை ஆதரவாக வருடி கொடுத்த அர்ஜூன் ,

"ஆனா என்னம்மா... ?" என்று பரிவுடன் கேட்க...

"பரத் அண்ணா அவரை எதாவது செஞ்சிட்டா... ? அதுக்குப் பயந்து தான் நான் எதுவும் சொல்லலை..." அவள் திக்கி திணறி சொல்லி முடித்தாள்...

"உனக்கு ஏதாவது ஒண்ணானா மட்டும் அவனைச் சும்மா விட்டுருவேன்னு நினைச்சியா பட்டு... வெட்டி பொலி போட்டிர மாட்டேன்..." கோபமாய்க் கர்ஜித்தான் பரத்...

"பரத் சொல்றதும் சரி தானே பட்டு... நீ சொல்ல தயங்கிய விசயம் உனக்கு எதிரா அமைந்திருந்தால்... ? அதுக்கு அப்புறம் எங்களோட நிலைமையைக் கொஞ்சம் நினைச்சு பார்த்தியா... ?" அர்ஜூனின் வார்த்தைகளில் ஆராதனாவின் விழிகள் கலங்கியது...

"அவர் அந்தளவுக்குப் போக மாட்டார்ப்பா... எனக்கு நம்பிக்கை இருக்கு... சும்மா என்னைப் பயமுறுத்த தான் இப்படிச் செஞ்சியிருக்கார்..."

"விஷ்ணு எதுக்கும்மா உன்னைப் பயமுறுத்தணும்... ?" அர்ஜூனின் பார்வை மகளைத் துளைத்தெடுத்தது...

"அது வந்துப்பா... தெரியலை..." தந்தையின் விழிகளைச் சந்திக்க இயலாது தலைகுனிந்து கொண்டு அவள் பேச முடியாது திணறினாள்... உண்மையை அவர்களிடம் எப்படிக் கூற முடியும்... ?

"அவனைக் காப்பாத்த நினைக்காதே பட்டு... உண்மையைச் சொல்லு..." பரத் கத்தினான்...

"பரத்..." மகனை கையமர்த்தித் தடுத்த அர்ஜூன் மகளிடம்
,

"நீ போய் ரெப்ரெஷ் பண்ணிட்டு வாம்மா..." என்று கூற... ஆராதனா உடனே தனது அறையை நோக்கி விரைந்து சென்றாள்...

அவள் செல்லும் வரை அமைதியாக இருந்த அர்ஜூன் பரத்திடம் , " பட்டுவுக்கு மாப்பிள்ளை பாரு பரத்..." என்று அமைதியாகக் கூற...

"ப்பா..." பரத் மகிழ்ச்சியோடு தந்தையைப் பார்த்தான்... இப்போது தான் அவந்திகாவிற்குப் பெருத்த நிம்மதியாக இருந்தது...

"விலகி போனவன் திரும்ப வந்து தொந்தரவு கொடுக்கிறான் என்றால்... ? நிச்சயம் அது நல்லதுக்கு இல்லை... ஏதோ விபரீதம் நடக்கப் போகுதுன்னு என் மனசுக்கு தோணுது..."

"ம் , அது தான் எனக்கும் சந்தேகமா இருக்குப்பா..."

"தொழிலில் விஷ்ணு கிட்டயிருந்து அமைதியா விலகியிரு... அவன் என்ன செஞ்சாலும்... எவ்வளவு பெரிய நஷ்டத்தை ஏற்படுத்தினாலும்... பதிலுக்கு ஒண்ணும் செய்யாதே... நமக்கு நம்ம பட்டுவோட கல்யாணம் தான் முக்கியம்... அது மட்டும் நல்லபடியா நடந்து முடியட்டும்... அதுக்குப் பிறகு இருக்கு அவனுக்கு..."

அர்ஜூனின் முகம் கோபத்தில் தகித்தது... அவனது செல்ல மகளிடம் வம்பு வளர்ப்பவனைச் சும்மாவிட அவனால் முடியுமா... ?

"சரிப்பா..."

"அப்புறம் முக்கியமான விசயம்... கல்யாண விசயம் பத்தி எதுவும் பட்டுவுக்குத் தெரிய வேண்டாம்... நிச்சயம் பண்ணும் போது அவளுக்குத் தெரிஞ்சா போதும்... நிச்சயம் நடந்துட்டா பட்டுக் கல்யாணத்தை மறுக்க மாட்டாள்... நமக்காக அவளோட மனசை மாத்தி கொள்வாள்... என் மகள் மீது எனக்கு நம்பிக்கை இருக்கிறது... நமக்காக உயிரையும் கொடுப்பவள் அவள்... நிச்சயம் நமக்காக அவள் கல்யாணம் பண்ணி கொள்வாள்..." என்று உறுதியாகக் கூறினான் அர்ஜூன்... அவந்திகாவும் , பரத்தும் அவனது கூற்றை ஏற்றுக் கொண்டனர்...

பெற்றோர் இருவரும் உள்ளே சென்றதும் பரத் மட்டும் தனியே அமர்ந்து யோசனையில் ஆழ்ந்தான்... ஆராதனாவுக்குத் திருமணம் என்றதும் உடனே அதைக் கேட்டு அடங்கிப் போகும் ரகம் இல்லை விஷ்ணுபிரஹான்... நிச்சயம் திருமணம் அன்று கூட அவன் வம்பு செய்தாலும் செய்வான்... அவனைப் பற்றி இவனுக்கு நன்கு தெரியும்... அப்படி விஷ்ணுபிரஹான் தனது தங்கையின் திருமணத்தில் வம்பு செய்யாமல் இருக்க வேண்டுமென்றால் அவனது துருப்புச்சீட்டு ஒன்று இவனிடம் இருப்பது மிகவும் அவசியம்...அந்த துருப்புச்சீட்டு என்னவாக இருக்கக்கூடும் என்று பரத் பலத்த யோசனையில் ஆழ்ந்தான்...

இறுதியில் விஷ்ணுபிரஹானை பயமுறுத்தும் துருப்புச்சீட்டாக அவனது தங்கை கனிஷ்காவின் முகம் பரத்தின் மனக்கண்ணில் வலம் வந்தது... அது அவனுக்கு மிகுந்த திருப்தியை கொடுத்தது...

பழிக்கு பழி , இரத்தத்திற்கு இரத்தம் என்பது போல் தங்கைக்குத் தங்கை...! வாழ்க்கை விளையாட்டு விசித்திரமான புதிர் தான் போலும்...!!!

****

இரவு பத்து மணி... எல்லோரும் வெளியில் சென்றிருக்க ஆராதனா மட்டும் வீட்டில் தனியே இருந்தாள்... புத்தகம் படிக்கவோ , தொலைக்காட்சி பார்க்கவோ பிடிக்காது இசையைக் கேட்டபடி அவள் ஒருவித மோனநிலையில் ஆழ்ந்திருந்தாள்... அப்போது அவளது அலைப்பேசி அதிர்ந்தது... தெரியாத எண்ணில் இருந்து அழைப்பு வந்திருந்தது... அவளது தொழிலில் இது சகஜம் என்பதால் உடனே அலைப்பேசியை உயிர்ப்பித்துக் காதில் வைத்தாள்...

"மேடம் , உடனே கிளம்பி வாங்க..."

"யார் நீங்க... ? எங்கே வரணும்... ?" அவளுக்குக் குழப்பமாக இருந்தது...

"நான் தான் மேடம் முரளி பேசறேன்... விஷ்ணுபிரஹான் சாரோட பிஏ... உடனே சார் வீட்டுக்கு கிளம்பி வாங்க மேடம்... நம்ம சாருக்கு..." அதுக்கு மேல் சொல்ல முடியாது அவனுக்கு வார்த்தை தடுமாறியது...

"அவருக்கு என்னாச்சு... ?" அவளுக்குத் திக்கென்றது...

"நீங்க வாங்களேன் மேடம்... அவர் வேற யாருக்கிட்டேயும் ட்ரீட்மெண்ட் பண்ண போக மாட்டேன்னு அடம்பிடிக்கிறாரு... நீங்க தான் அவரைப் பார்க்கணுமாம்..."

"த்ச்சு... இதென்ன பிடிவாதம்... அவரோட வீட்டுக்கு எல்லாம் அதுவும் இந்த நேரத்தில் என்னால் வர முடியாது... உயிர் போகிற சமாச்சாரமாக இருந்தாலும் கூட..."

அவள் மனதை கடினப்படுத்திக் கொண்டு நிர்தாட்சண்யமாய்ச் செல்ல மறுத்தாள்... அவன் இன்னொரு பெண்ணுடன் வாழும் வீட்டிற்குள் அவளால் எப்படிப் போக முடியும்... ? ராட்சசன் எப்படி எல்லாம் அவளைப் போட்டு வதைக்கின்றான்... ???

"அவள் வர தேவையில்லை முரளி... அவள் வரவும் வேண்டாம்..."

அருகில் ஒலித்த விஷ்ணுபிரஹானின் குரல் பலகீனமாய்ப் பெரும் வலியுடன் ஒலித்தது... அதைக் கேட்டு அவளது காதல் மனம் பதைபதைத்துப் போனது...

அவள் யோசிக்கும் போதே அவளது வாட்ஸ்அப்பிற்கு முரளி ஒரு புகைப்படத்தை அனுப்பியிருந்தான்... அதில் விஷ்ணுபிரஹானின் தலையில் அடிப்பட்டு அதிலிருந்து இரத்தம் கொட்டி கொண்டிருந்தது...

"ஐயோ..." என்று பதறியவள் ,

"உடனே வர்றேன் முரளி..." என்றவள் அடுத்த நொடி காரிலேறி கிளம்பியிருந்தாள்...

போகும் போதே பெற்றோரிடம் அலைப்பேசியில் தான் அவசரமாக மருத்துவமனைக்குச் செல்வதாகக் கூறினாள்...

"சரிம்மா , பத்திரமா போயிட்டு வா..." என்று அலைப்பேசியை அணைத்த அர்ஜூன் எதிரிலிருந்த சிவசுப்ரமணியத்தைப் பார்த்துப் புன்னகைத்தான்...

"பட்டு தான்... எமெர்ஜென்சி கேசாம்..."

"ஓ..." என்றவர் ,

"அர்ஜூன் , எப்போ நிச்சயத்தை வைத்து கொள்ளலாம்...?" என்று கேட்க...

அர்ஜூன் தனது மனைவி , மகனின் முகத்தைப் பார்த்தான்... அவர்களது சம்மதம் அவர்களது விழிகளில் தெரிந்தது...

"எப்போன்னாலும்..." என்று உடனே சம்மதித்தான் அர்ஜூன்...

"இன்னும் இரண்டு நாளில் ஆடி பிறக்குது... அதனால் ஆடி முடிஞ்சு ஆவணியில் நிச்சயத்தை வச்சுக்கலாமா... ?"

பார்வதி கூற... அதுவே ஏகமனதாக ஏற்றுக் கொள்ளப்பட்டது...

பெற்றோர் அருகில் அமர்ந்திருந்த சிவேஷ்கந்தாவிற்கு எதையோ சாதித்த நிம்மதி ஏற்பட்டது... உலகத்தை வென்றுவிட்டது போல் அவன் உவகையுடன் அமர்ந்திருந்தான்...

ஆனால் இவர்கள் அத்தனை பேர் திட்டத்தையும் ஒருவன் தவிடுபொடியாக்க போவதை அந்நேரம் அவர்கள் அறிந்திருக்கவில்லை...! அதற்கான அச்சாரத்தையும் அவன் போட்டு விட்டதை அவர்கள் தெரிந்திருக்கவில்லை...!!!

திருத்தமாகும்...!!!

"முரளி..."

"எஸ் சார்..."

"ஆராதனாவுக்கு வீட்டு அட்ரெஸ் தெரியாது... அவளுக்கு மெசேஜ் பண்ணிரு..."

தலையில் அடிப்பட்டு இரத்தம் வழிந்து கொண்டிருந்த அந்த நிலையிலும் விஷ்ணுபிரஹான் ஆராதனா மீது கொண்ட அக்கறையைக் கண்டு முரளி வியந்து போனான்...

"ஷ்யூர் சார்..." என்றவன் உடனே ஆராதனாவின் அலைப்பேசிக்குக் குறுஞ்செய்தியில் வீட்டு முகவரியை அனுப்பிவிட்டான்...

ஆராதனா பார்த்துவிட்டதற்கான அடையாளமாக இரண்டு நீல நிற குறியீடு தோன்றியதும் , " சார் , மேடம் மெசேஜை பார்த்துட்டாங்க..." என்று முரளி கூற...

"சரி முரளி , நீ போய்ப் போலீஸ் ஃபார்மாலிட்டீஸ் முடிச்சிட்டு வீட்டுக்கு போ..." என்று விழிகள் மூடியவாறு விஷ்ணுபிரஹான் கூற... அதற்கு மேல் அங்கு நிற்காது முரளி மரியாதையோடு விடைபெற்றுக் கொண்டு கிளம்பினான்...

விஷ்ணுபிரஹான் சற்று முன்னர் நடந்ததை நினைத்துப் பார்த்தான்... அவன் தனது நண்பர்களைச் சந்திப்பதற்காக நட்சத்திர விடுதிக்குச் சென்றிருந்தான்... எப்போதாவது ஒரு முறை தனது கல்லூரி நண்பர்கள் மற்றும் வேலை செய்யும் போது உடன் பழகிய நண்பர்கள் என்று முக்கியமான ஒரு சிலரை சந்திக்க அவன் செல்வான்... அப்படித்தான் இன்று மாலை அவன் அங்குச் சென்றது...

அவர்களுடன் அரட்டை அடித்தபடி உணவு உட்கொண்டு இருந்தவனின் பார்வை சற்று தள்ளி அமர்ந்திருந்த அர்ஜூன் குடும்பத்தின் மீது விழுந்து அவனது விழிகள் யோசனையில் இடுங்கியது... சிறிது நேரத்தில்

சிவசுப்ரமணியம் தனது குடும்பத்தினருடன் வந்தமர்ந்ததும் அவனது யோசனை இன்னும் தீவிரமடைந்தது... அதைவிடச் சிவசுப்ரமணியம் சிவேஷ்கந்தாவை சுட்டிக்காட்டி அர்ஜூனிடம் பேசவும் அவனது விழிகள் கூர்மையடைந்தது...

அதற்கு மேல் பொறுமை காக்க முடியாது நண்பர்களிடம் விடைபெற்றுக் கொண்டு எழுந்தவன் நேரே அர்ஜூன் குடும்பம் அமர்ந்திருந்த மேசைக்கு அடுத்த மேசையில் முதுகு காட்டி அமர்ந்து கொண்டான்... அப்போது அவர்கள் பேசிய விசயத்தை வைத்து சிவேஷ்கந்தாவிற்கும் , ஆராதனாவிற்கும் திருமணம் முடிப்பது பற்றிப் பேச அவர்கள் வந்திருப்பதை அவன் அறிந்து கொண்டான்... அந்தக் கணம் அவனது மனதில் அப்படியொரு ஆவேசம் எழுந்தது... நேரே எழுந்து சென்று அர்ஜூனின் சட்டையைப் பிடித்து நறுக்கென்று நாலு கேள்வி கேட்கலாமா... ? என்று கூட ஆத்திரம் வந்தது... இது ஆவேசம் கொள்ளும் நேரமல்ல... இது நிதானமாகச் சாணக்கியத்தனமாகச் சூழ்நிலையைக் கையாள வேண்டிய நேரம் என்று நினைத்தவன் அடுத்த நொடி அங்கிருந்து சென்றுவிட்டான்...

காரில் வரும் போது அவனது மனம் ஒரு நிலையில் இல்லை... என்ன தான் மனதை சமாதானப்படுத்திய போதும் அவனது மனம் ஆராதனாவின் திருமண விசயத்திலேயே உழன்றது... அவளது திருமணத்தில் தலையிடும் உரிமையை அவன் இழந்து வெகுநாட்களாகி விட்டது... அதை அவனும் உணர்ந்தே இருந்தான்... ஆனாலும் அவனது மனதில் அப்படியொரு ஏமாற்றம் சூழ்ந்தது... ஆராதனா எப்படித் திருமணத்திற்குச் சம்மதித்தாள்... ? என்று அவனது மனம் ஆத்திரமுற்றது... அப்போ அவள் மனதில் தான் இல்லையா ? என்கிற கேள்வியில் அவன் முற்றிலும் நிலைகுலைந்து போனான்... ஆண்மகனான அவனது தன்மானம் அந்த இடத்தில் சீண்டி விடப்பட்டது... அது பெண்ணவளை எந்த நிலைக்கும் தள்ள தயாராக இருந்தது...

' ச்சீ... நீ எல்லாம் ஒரு ஆண்மகனா... ? வெட்கக்கேடு... ' அவனது மனசாட்சி அவனைக் காறி துப்பியது...

அவன் தன்னைக் குறித்தே மிகவும் அவமானமாக உணர்ந்தான்... அதில் நிலைகுலைந்து போனவனின் கைகளில் கார் தடுமாறி தனது கட்டுப்பாட்டை இழந்து சாலையோரம் இருந்த மரத்தின் மீது மோதி நின்றது... அவன் ஆசனப்பட்டியை அணியாததால் அவனது தலை முன்னால் இருந்த கண்ணாடியில் மோதியதில் தலை உடைந்து இரத்தம் பீறிட்டது... ஆள் அரவமற்ற அந்தச் சாலையில் அவனது விபத்தைக் கண்டு உதவுபவர்கள் யாருமில்லை... அவன் தன்னைச் சமாளித்துக் கொண்டு முரளிக்கு அழைப்பு விடுத்தவன் அப்படியே ஸ்டீயரிங் வீலில் தலை கவிழ்ந்தான்... அவனது மனம் முழுவதும் ஆராதனாவின் பிம்பமே நிறைந்திருந்தது ...

"போடி ஏமாத்துக்காரி , பொய்க்காரி , வேசக்காரி..." அவனது உதடுகள் மெல்ல முணுமுணுத்தது...

விசயம் கேள்விப்பட்ட உடனே முரளி அடித்துபிடித்துக் கொண்டு அங்கு விரைந்து வந்தான்... காரினுள் தலை கவிழ்ந்திருந்த தனது முதலாளியை கண்டு அவனுள் பயம் எழுந்தது...

"சார் , சார்..." அவன் பதற்றத்துடன் காரின் கண்ணாடியை தட்டினான்...

அந்த ஒலியில் தலை நிமிர்த்திய விஷ்ணுபிரஹானை கண்டதும் தான் முரளிக்கு மூச்சு வந்தது... கார் கதவை திறந்து கொண்டு இறங்க முயற்சித்த விஷ்ணுபிரஹானை பிடிக்க முரளி அருகில் வர... முரளியை தடுத்துவிட்டு அவனே காரிலிருந்து இறங்கினான்...

"வாங்க சார்..." விஷ்ணுபிரஹானின் மற்றொரு காரில் அவனை ஏற்றிய முரளி தானும் அதில் ஏறிக் கொண்டான்...

"முதலில் ஹாஸ்பிட்டல் போகலாம் சார்..."

"இல்லை வேண்டாம்... நேரே வீட்டுக்கு போ..." என்க... அதை மறுத்து பேசும் துணிச்சல் முரளிக்கு இல்லை... கார் வீட்டை நோக்கி பறந்தது...

வீட்டிற்கு வந்து வரவேற்பறையில் அமர்ந்த விஷ்ணுபிரஹான் முரளியிடம் , " ஆராதனாவுக்கு ஃபோன் பண்ணி இங்கே வர சொல்..." என்றான் கட்டளையாக...

ஏனெனில் அவளால் உண்டான காயத்திற்கு அவள் தான் மருந்திட வேண்டும் என்று அவன் பிடிவாதமாக நினைத்தான்... உடல் காயத்திற்கு மட்டுமல்ல... மனக்காயத்திற்கும் சேர்த்து...

முரளி அவன் சொன்னதை அப்படியே செய்தான்... இதோ அவளும் இங்கு வர ஒத்து கொண்டாள்... அதை நினைத்து அவனது உதடுகளில் இளம்புன்னகை எட்டிப்பார்த்தது...

"எனக்கா ஆட்டம் காட்ட நினைக்கிற... நான் உனக்குக் காட்டுறேன்டி உண்மையான ஆட்டத்தை..." என்று கூறியவனின் வார்த்தைகளில் அத்தனை கோபம் இருந்தது...

ஆராதனா வரும் வழியில் விஷ்ணுபிரஹானுக்கு முதலுதவி செய்யத் தேவையான பொருட்கள் அனைத்தையும் மருந்து கடையில் வாங்கிக் கொண்டாள்... அவளிடம் இருக்கும் முதலுதவி பெட்டியில் இவ்வளவு பெரிய காயத்தைக் கையாளும் அளவிற்கு மருந்துகள் கிடையாது...

முரளி சொன்ன வீட்டு முகவரியை தேடி கண்டுபிடித்து அடுத்த இருபது நிமிடத்தில் அவள் அங்கு வந்து சேர்ந்தாள்... வீட்டின் முன்னிருந்த காவலாளி அவளது காரை எந்த விசாரணையுமின்றி உள்ளே செல்ல அனுமதித்தான்... அது எதுவும் அவளது மனதில் பதியவில்லை... அவள் வேகமாகக் காரை நிறுத்திவிட்டு அவசரமாக வீட்டினுள் நுழைந்தாள்...

அவள் தேடுவதற்கு அவசியமே இல்லாது விஷ்ணுபிரஹான் சோபாவில் அமர்ந்திருந்தான்... இரத்தம் வழிய அவன் அமர்ந்திருந்த கோலம் கண்டு அவளது காதல் நெஞ்சம் பதறிப் போனது... ஓடி சென்று அவனது முகத்தை அள்ளியெடுத்து தனது நெஞ்சுக்கூட்டில் பாதுகாப்பாய் பொத்தி வைக்கச் சொல்லி அவளது காதல் மனம் துடித்தது... அவனது நிலை கண்டு அவளது உயிர் அவள் வசமில்லை... அந்தக் கணம் அவனது மனைவி கூட அவளது நினைவில் இருந்து மறைந்து போனாள்... அவள் கண்முன் இருந்தது எல்லாம் விஷ்ணுபிரஹானின் பிம்பமே...

அவள் வரும் அரவம் கேட்டுக் கண் திறந்த விஷ்ணுபிரஹான் மனதில் சொல்லொண்ணா நிம்மதி எழுந்தது... அவன் அவளைப் பார்த்து மந்தகாச புன்னகையைச் சிந்தியபடி , " என்னைத் தேடி வரவழைச்சிட்டேன் பார்த்தியா... ?" என்று இறுமாப்புக் குரலில் கூற...

"மிரட்டி வரவழைச்சிண்டு இதில் பெருமை வேறயா... ?" அவள் தனது உணர்வுகளைக் கட்டுப்படுத்திக் கொண்டு அவனை நோக்கி சென்றாள்...

"என் மிரட்டலுக்கு நீ ஏன் பயப்படுற... ?"

இளஞ்சிவப்பு நிறத்தில் குர்தியும் , பழுப்பு வண்ணத்தில் லெகின்சும் அணிந்த , கலைந்த தலையுடன் , கழுத்தில் தங்க சங்கிலி தவிர வேறெந்த ஆபரணமும் இல்லாது இருந்தாலும் அந்த வானின் தேவதையை ஒத்த அழகுடையவளாய் இருந்த தன்னவளை தலை முதல் கால் வரை அவன் அணு அணுவாய் ரசிக்க ஆரம்பித்தான்...

அவளோ அவனது காயத்திற்கு மருந்திடும் பதற்றத்தில் இருந்ததால் அவனது பார்வை வேறுபாட்டைக் கவனிக்கவில்லை...

"நான் ஒரு டாக்டர்... ஒரு உயிரின் அருமை நேக்கு நன்னா தெரியும்... அதனால் தானே அதைக் காட்டி என்னை மிரட்டி

வரவழைச்சு இருக்கேள்..." என்றபடி அவள் தான் கொண்டு வந்திருந்த பொருட்களை அவன் அமர்ந்திருந்த சோபாவின் பக்கவாட்டு மேசையில் வைத்தாள்...

"என் உயிரோட அருமை உனக்குத் தெரிஞ்சியிருக்கு... அப்படித்தானே..." என்று நமட்டுச் சிரிப்பு சிரித்தவனை முறைத்து பார்த்தவள் ஒன்றும் பேசாது தனது வேலையைப் பார்க்க ஆரம்பித்தாள்...

அவள் கடமை தவறாத மருத்துவராய் தனது வேலையில் இறங்கியிருக்க... அவளது அருகாமையில் அவன் தான் மிகவும் தடுமாறிப் போனான்... தன் கண்முன் குவிந்திருந்த அவளது இளமை அழகை கண்டு அவன் கண்ணிமைக்க மறந்து போனான்... அவசரத்தில் கிளம்பி வந்திருந்ததால் என்னவோ அவள் குர்தியின் மேல் பொத்தானை போடாது வந்திருந்தாள்... அதன் வழியே வழிந்த அவளது அழகு அவனைப் பித்தம் கொள்ளச் செய்தது... அவை அவனது முகத்தில் மென்மையாய் உரசி அவனை மூச்சடைக்கச் செய்தது... அத்தோடு வேறொரு ரகசியத்தையும் அறிந்தவனால் தனது மனதினை கட்டுப்படுத்த முடியவில்லை...

தனக்கே தனக்குச் சொந்தமான அவளது நெஞ்சத்தில் முகம் புதைத்து அதில் ஆழ்ந்து போகச் சொல்லி அவனது ஆசை கொண்ட மனம் துடித்தது... தனது மனதின் ஆசையை அறிந்து அவன் அதிர்ந்து போனான்... மனதின் எண்ணத்தைக் கட்டுப்படுத்தி வாழ அவன் ஒன்றும் முற்றும் துறந்த முனிவர் இல்லையே... அதனால் மனதின் போக்கில் பயணிக்க விரும்பினான்... அது அவனுக்கு மிகவும் பிடித்தும் இருந்தது... அது தான் தொல்லையே...!

' கொல்றாளே... ' மனதிற்குள் அவஸ்தையாய் முனங்கியவன் அத்தனை நேரம் அடக்கி வைத்திருந்த மூச்சுக்காற்றைப் பெருமூச்சாய் பலமாய் வெளிவிட்டான்...

அவனது மனதின் வெம்மையைத் தாங்காது அவனது மூச்சுக்காற்று சூடாய் தகித்தபடி வெளிவந்தது... அவனது முகத்தருகே குனிந்து அவனது காயத்திற்குத் தையல்

போட்டு கொண்டிருந்தவளின் நெஞ்சம் அவனது சூடான மூச்சுக்காற்றை உணர்ந்தது... அதில் திடுக்கிட்டு போனவளின் கைகள் ஒரு நொடி வேலை நிறுத்தம் செய்தது... அவளது விழிகள் தாழ்ந்து அவனது முகத்தைப் பார்த்தது...

தனது கள்ளத்தனத்தை அவள் கண்டுபிடித்து விடுவாளோ என்றெண்ணிய அந்த மாயக்கண்ணனி , " வலிக்குது... பார்த்து ஸ்டிட்ச் பண்ணுடி..." என்றபடி வலிப்பது போல் முகத்தைச் சுளித்து நடித்தான்... அதை உண்மை என்று நம்பியவளி ,

"சாரி... கொஞ்சம் வலி இருக்கத்தான் செய்யும்..." என்று பதில் கூறியவள் ஞாபகமாய் அவனுக்குப் பக்கவாட்டிற்கு நகர்ந்து தனது வேலையைத் தொடர்ந்தாள்...

' வட போச்சமே ' என்ற பாவனையில் அவன் பாவமாய் அமர்ந்திருந்தான்...

அவனது காயத்திற்குத் தையல் போட்டுவிட்டா , அதில் மருந்து போட்டு கட்டு போட்டவளி , " காயம் கொஞ்சம் ஆழமா இருக்கு... எதுக்கும் நீங்க நாளைக்கு நியூராலஜிஸ்ட் கிட்ட காட்டிருங்க..." அவளையும் அறியாது அவளது குரலில் அக்கறை எட்டிப்பார்த்தது... அவன் யோசனையாய் அவளைப் பார்த்தவனி ,

"எனக்கு நீ தான் ட்ரீட்மெண்ட் கொடுக்கணும்..." என்று பிடிவாதம் பிடிக்க... அவனை இயலாமையுடன் பார்த்தவளி
,

"இங்கே பாருங்கோ... நான் கைனகாலஜிஸ்ட்... எனக்கு இது பத்தி எதுவும் தெரியாது..."

"பொய் சொல்லாதே..."

"அடிப்படை கொஞ்சம் தெரியும்... அவ்வளவு தான்... டீடெயில்லா எதுவும் தெரியாது... அப்புறம் இந்த டேப்லெட்டை போட்டுக்கோங்க..." என்றவள் வலிநிவாரணி மாத்திரையை எடுத்து அவனிடம் கொடுத்து போட

சொன்னவள் பிறகு தானும் வீட்டிற்குக் கிளம்ப ஆயத்தமானாள்...

அவள் கிளம்புவதை உணர்ந்து அவனது முகம் ஒளியை இழந்தது... அன்று அவன் தான் அவளை வேண்டாம் என்றான்... இன்று அவன் தான் அவள் வேண்டும் என்று அடம்பிடிக்கின்றான்... ஒன்றை விட்டு பிரியும் போது தான் அதன் அருமை புரியுமோ ? ஒன்றை இழக்கும் போது தான் அதன் வலி தெரியுமோ ? ஏதோ ஒன்று அவனது மனதினை போட்டுப் பிசைந்தது... ஆனாலும் அவன் எதையும் வெளியில் காட்டி கொள்ளாது அமைதியாக நின்றிருந்தான்...

தனது கைப்பையை எடுத்துத் தோளில் மாட்டி கொண்டவள் அவன் புறமாய்த் தனது வலதுகையை நீட்டினாள்... பிறந்த குழந்தையின் பாதம் போன்று மென்மையாக இருந்த அவளது இளஞ்சிவப்பு உள்ளங்கையை ஒரு நொடி ரசித்துப் பார்த்தவன் பின்பு அவள் தன்னிடம் கை நீட்டியிருப்பதை உணர்ந்து பதறித்தான் போனான்... அவனது குற்றமுள்ள நெஞ்சு துடிதுடித்துப் போனது... அவனையும் அறியாது அவனது முகம் உணர்வுகளைத் தொலைத்து இறுகி போனது.....

அவனது பார்வையில் , அவனது இறுக்கத்தில் அவனது மனதினை உணர்ந்தவளுக்கு மனதில் விரக்தி எழுந்தது... அவன் இறுகி போய் நிற்பதை கண்டு அவளுக்குத் தான் காண சகிக்க முடியவில்லை...

"பீஸ் கொடுங்கோ... நான் போகணும்..."

"என்னுடைய ஆளுக்கு நான் எதுக்குப் பீஸ் கொடுக்கணும்... ?"

"உங்களுடைய ஆளா... ? அது யாரு... ?" அவனது வார்த்தையில் அவள் வெகுண்டு எழுந்தாள்...

"நீ தான்டி... வேறு யாரை சொல்வேன்... ?"

"நீங்க யாரோ ? நான் யாரோ ? ஒரு டாக்டரா என்னுடைய கடமையைச் செஞ்சேன்... அவ்வளவு தான்... அதுக்கான பீஸை கொடுங்கோ... நான் கிளம்பறேன்..."

"கொடுக்கலைன்னா... ?" அவன் ஒற்றைப் புருவத்தை ஸ்டைலாக உயர்த்த...

"பிச்சை போட்டதா நினைச்சிக்கிறேன்..." என்று வெடுக்கென்று கூறியவள் அங்கிருந்து செல்ல முயன்றாள்... அவனுக்கும் தனக்கும் எந்தவித சம்பந்தமும் இல்லை என்பதற்காகத் தான் அவள் தனக்கான கட்டணத்தைக் கேட்டது...

"நில்லு..." என்றவன் தனது பர்சிலிருந்து இரண்டாயிரம் ரூபாயை எடுத்து நீட்டியபடி ,

"போதுமா... ?" என்று கேட்க...

"இல்லை..." என்றவள் மருந்து கடையில் அவனுக்காகத் தான் வாங்கிய மருந்துக்கான பில்லை கொடுத்தா ,

"இன்னும் ஆயிரம் ரூபாய் வேணும்..." என்று கறார் குரலில் கேட்க...

அவன் சிரித்தபடி இரண்டு ஐநூறு ரூபாயை அவளது கையில் வைத்தான்... அதை வாங்கிக் கொண்டவளின் முகம் திருப்தியை காட்டியது...

"உன்னைப் புரிஞ்சிக்கவே முடியலை..."

பணத்தைத் தனது கைப்பையில் வைத்தபடி அவனைப் பார்த்தவள் , " நீங்க புரிஞ்சிக்க முயற்சிக்கலைன்னு சொல்லுங்கோ..." என்று வெறுமையான குரலில் கூறியவளை கண்டு அவனது முகம் தான் இருண்டு போனது...

அவள் அமைதியாக வெளியில் வர... அவனும் அவளை அமைதியாகப் பின்தொடர்ந்தான்... அவளது விழிகள் சுற்றிலும் அலைபாய்ந்தபடி வந்தது... ஆனால் அவனிடத்தில் எதுவும் கேட்கவில்லை...

கார் அருகில் சென்றதும் விஷ்ணுபிரஹான் அவளிடம் , " என்னமோ கேட்கணும் நினைக்கிற... கேளு..." என்று அவளை ஊக்குவிக்க... அவள் ஆச்சரியமாய் அவனைத் திரும்பி பார்த்தவள் பின்பு மெல்ல ,

"எங்கே உங்க வொய்ப்பை காணோம்... ?" அதைக் கேட்கும் போதே அவளது முகம் அவமானத்தில் சிறுத்துப் போனது... அவளது முக மாறுதலை அவதானித்தபடி அவன் ,

"அவள் வீட்டில் இல்லை..." என்று கூற...

"ஓ..." என்றவள் ஒன்றும் பேசவில்லை...

"தனியா போயிருவியா ? இல்லை நான் உன் கூட வரவா... ?" என்று கேட்டவனைக் கண்டு அவளுக்குக் கோபம் வந்தது... அவள் கோபமாய் அவனை முறைத்து பார்த்தாள்...

"துணையாகத் தான் சொன்னேன்..." அவன் அவளைப் பார்த்து விசமமாய்ப் புன்னகைத்தான்...

"ஒரு மண்ணும் தேவையில்லை..." என்று அவனிடம் கோபமாய் வெடித்தவள் காரிலேற போனாள்...

"ஏன் அடிப்பட்டதுன்னு நீ கேட்கவே இல்லையே... ?" அதில் அப்படியே நின்றவள் அவனைத் திரும்பி பார்க்கவில்லை...

"அடிப்பட்டதுக்குக் காரணம் நீ தான்..."

அவனது வார்த்தைகளில் அவள் வெடுக்கென்று திரும்பினாள்...

"எல்லாத்துக்கும் காரணம் நான் தான்... உங்க வாழ்க்கையை நீங்க இழந்ததுக்குக் காரணம் நான் தான்... உங்க நிம்மதி இழந்ததுக்குக் காரணம் நான் தான்... உங்களோட ஒவ்வொரு இழப்புக்கும் காரணம் நான் தான்... இதையே எத்தனை நாளைக்குத் தான் சொல்வீங்க... ?" விட்டால் அவனது சட்டையைப் பிடித்துக் கேள்வி கேட்பாள் போலும்... அவன் மீது அத்தனை கோபம் வந்தது...

"நிச்சயம் இதை எல்லாம் நான் மறுக்கப் போவதில்லை..." என்றவனைக் கண்டாள் ,

' ச்சீ... நீங்கெல்லாம் மனுசன் தானா... ?' என்பது போல் அவள் அவனை வெறுப்புடன் பார்த்தாள்...

"இப்பவும் என் நிம்மதி பறி போனதால் தான் இந்த விபத்து நடந்தது... எல்லாம் உன்னால் தான்..." மீண்டும் மீண்டும் தன்னைக் குற்றம் சாற்றியவனைக் கண்டு அவளுக்கு ஆத்திரத்தில் தேகம் நடுங்கியது...

"போதும்..." என்று ஒற்றைக் கை உயர்த்தித் தடுத்தவள் ,

"நடந்து முடிஞ்சது எல்லாத்துக்கும் நானே காரணமா இருந்திட்டு போறேன்... இனி நான் உங்கள் வாழ்க்கையில் தலையிட மாட்டேன்... போதுமா... ?" என்று கூற...

"போதாது... உன் மனசில் என்னயிருக்குன்னு தெரியாம நான் உன்னை விட மாட்டேன்... அதுவரைக்கும் நீ யாரையும் கல்யாணம் பண்ண நான் விட மாட்டேன்..." அவனது வார்த்தையில் அத்தனை தீவிரம் இருந்தது...

"கல்யாணமா ? நானா ?" அவளது உள்ளம் நடுங்கியது... அவளது அதிர்வில் அவளுக்கு விசயம் தெரியாது என்பதை ஊகித்தவனுக்குக் கோபம் மட்டும் குறையவில்லை...

"நீயே தான்..." என்று அவன் அவளைக் குற்றம் சாற்ற...

அதில் சற்று நிதானித்தவள் தன்னைச் சமாளித்துக் கொண்டு அவனைத் தைரியமாக நேருக்கு நேர் பார்த்தாள் ,

"நீங்களே கல்யாணம் பண்ணிக்கிட்டு வாழும் போது.... நான் கல்யாணம் பண்றதுக்கு என்ன... ?" என்று தெனாவெட்டாகக் கேட்க...

"பண்ணிக்கலாமே... தப்பே இல்லை... ஆனா மூன்றே மூன்று வார்த்தைகள் மட்டும் சொல்லிரு... உன்னோட ஹனிமூனுக்கு நானே டிக்கெட் எடுத்து கொடுத்து வெளிநாட்டுக்கு அனுப்பறேன்..." என்றவன் ,

"ஐ... லவ்... யூ..." என்று ஒவ்வொரு வார்த்தையையும் நிதானமாக அழுத்தமாக அவளைப் பார்த்து உச்சரித்தான்...

இரண்டு கைகளையும் பேண்ட் பாக்கெட்டில் விட்டபடி இரத்தம் தொய்ந்த சட்டையுடன் அவன் நின்றிருந்தவிதம் ஒரு ராட்சசனை ஞாபகப்படுத்தியது... அவள் வெறுப்புடன் அவனைப் பார்த்தவளாய் ,

"ராட்சசன்..." கோபத்தில் பற்களைக் கடித்துக் கொண்டு வார்த்தைகளைக் கடித்துத் துப்பினாள்...

"நாயகனுக்குத் தான்ம்மா கட்டுப்பாடுகள் எல்லாம்... ராட்சசனுக்கு அது தேவையில்லை... ராமருக்கு விதிமுறைகள் மட்டும் தான் தெரியும்... ஆனால் ராவணனுக்கு விதிமீறல்கள் மட்டுமே தெரியும்... எனக்குத் தேவைப்பட்டா எல்லா விதிமீறல்களையும் மீற நான் தயாராயிருக்கேன்..."

' என்னமும் பேசிட்டு போ ' என்பது போல் அவள் காரிலேறி காரை கிளப்பினாள்... அவன் அவள் புறமாய்க் குனிந்து கார் கண்ணாடியை தட்டினான்... அவள் எரிச்சலுடன் கண்ணாடியை இறக்கினாள்...

"இன்னும் என்ன... ? ஏதாவது சபதம் மிச்சமிருக்கா... ?" அவள் நக்கலுமாய் , எரிச்சலுமாய்க் கேட்க...

"வீட்டுக்கு போயிட்டு ஃபோன் பண்ணு..." அவனது அக்கறையைக் கண்டு அவளது விழிகள் வெறுப்பை உமிழ்ந்தது...

"போற வழியில் ஆக்சிடென்ட் நடந்து என் உயிர் போனா தேவலை..."

ஆத்திரத்தில் வெடித்தவளை கண்டு அவனது உள்ளம் தான் அதிர்ந்து போனது... ஏனென்று தெரியவில்லை... அவளது வார்த்தைகள் குத்தீட்டியாய் அவனைக் குத்தி கிழித்தது... ஆனாலும் அவன் அவளிடம் அடங்க மறுத்தான்...

"உன்னுயிரை எமன் கிட்டயிருந்து மீட்டு எடுப்பேன் பேபி..." என்றவனை அவள் திகைப்புடன் பார்க்க...

"ஏன்னா உன் உயிரை எடுக்கும் அதிகாரம் கூட எனக்கு மட்டும் தான் இருக்கிறது... அந்த எமனுக்குக் கூட ரைட்ஸ் இல்லை... ரை...ட்..." என்று கடைசி வார்த்தையை அழுத்தி சொல்லி வாய்விட்டு அட்டகாசமாய்ச் சிரித்தவனைக் கண்டா ,

"ராட்சசன்..." என்று அவள் திட்டிவிட்டு காரை கிளப்பிக் கொண்டு சென்றாள்...

அவன் புன்சிரிப்புடன் வீட்டிற்குள் நுழைந்தவன் நேரே குளியலறைக்குள் சென்று புகுந்து கொண்டான்... தலை நனையாதவாறு குளித்துவிட்டு வெளியில் வந்தவன் படுக்கையில் சாய்ந்தான்... அவன் மனம் முழுவதும் அவனவளின் வாசம்...!

அரை மணி நேரம் கழித்து ஆராதனா அழைப்பதற்கு அவசியமே இல்லாது அவனே அவளை அழைத்தான்... மறுபுறம் அலைப்பேசியை எடுத்த ஆராதனா ஒன்று பேசாதிருந்தாள்...

"வீட்டுக்கு போயிட்டியா... ?" என்று அவன் கேட்க...

"ம்..." என்று ஒற்றைச் சொல்லோடு அவள் அழைப்பை துண்டித்தாள்...

அவளது செய்கையில் நியாயத்திற்கு அவனுக்குக் கோபம் வர வேண்டும்... ஆனால் கோபம் வரவில்லை... மாறாக அவளது கோபம் , தைரியம் , தெனாவெட்டா , திமிர் எல்லாவற்றையும் அவன் நினைத்து நினைத்து ரசித்தான்...

"இப்போ தான்டி உன்னைய ரொம்ப ரொம்பப் பிடிச்சியிருக்கு..." என்றவன் இன்னும் சற்று ஆழ்ந்து யோசித்திருந்தால் தன் மனம் செல்லும் திசையை நன்கு தெரிந்திருப்பான்... அதைப் பற்றி அவன் சிறிதும் யோசிக்கவில்லை...

அடுத்தச் சில நொடிகளில் அவன் ஆராதனா நினைவுடன் , மென்னகையுடன் சுகமாய் உறங்கி போனான்...!

****

தான் யோசித்த விசயத்தை இன்று செயல்படுத்தி விடுவது என்று பரத் தீர்மானித்துவிட்டான்... அன்னையின் வளர்ப்பு அவனை இப்போதும் தடை செய்யத் தான் செய்தது... ஆனால் தங்கையின் நிர்கதியான நிலை அவனது மனதில் அனலை மூட்டியது... அடுத்தக் கணம் அவனது கைகள் தனது அலைப்பேசியை எடுத்து அந்தக் குறிப்பிட்ட எண்ணை அழைத்தது...

தொழிலை போன்று காதலை கையில் எடுத்துக் கொண்டு வேட்டையாட தயாராகினான் பரத்... தொழிலில் வேட்டையாடுவது தனக்குச் சரிசமமான புலிகளை , திமிங்கலங்களை... ஆனால் காதலில் வேட்டையாட அவன் புறப்பட்டிருப்பது உலகமறியா சின்னஞ்சிறு மானை... புலி வீழ்த்தி மான் வீழ்ந்த போதும் , மானின் மருண்ட விழிகளில் புலியின் ' தான் ' என்கிற அகங்காரம் அழிய போவது உறுதி... தான் பெற்ற வெற்றியை கொண்டாட முடியாது தோல்வியில் துவள போவது நிச்சயம்...

விஷ்ணுபிரஹானுடன் ஆடுபுலி ஆட்டமாட தயாராகிவிட்டான் பரத் , நம் அர்ஜூனின் மைந்தன்...!

"ஹலோ..." மறுமுனையில் சங்கீதமாய் ஒலித்த பெண்ணவளின் குரலில் அவனது மனதில் பதற்றம் வந்து ஒட்டி கொண்டது... முயன்று தன்னைச் சமாளித்துக் கொண்டவன் ,

"என்னைத் தெரியலையா... ?" குழைந்து மயக்கத்துடன் ஒலித்த ஆண் குரலில் கனிஷ்கா ஸ்தம்பித்துப் போய் நின்றாள்...

இத்தனை வருடங்களாக எவனது குரலை கேட்க வேண்டும் என்று நினைத்து ஏங்கினாளோ அவனது குரலிது... அதுவும் அவளது மனதிற்கு மிகவும் பிடித்த மன்னவனின்

குரலிது... ஆனந்தத்தில் அவளது விழிகளில் இருந்து கண்ணீர் வழிந்தோடியது...

"மம் , தெரியுதுன்னா..." என்றவள் சந்தோசத்துடன் புறங்கையால் தனது அழுத விழிகளைத் துடைத்து கொண்டாள்...

அவளது ' ஏன்னாா ' அழைப்பில் மதிமயங்கி போன பரத் அலைப்பேசியைப் பிடித்தபடி உறைந்து போனான்...

"எப்படி இருக்கேள்... ?"

"எனக்கென்ன நல்லா இருக்கேன்... உனக்கு வேலை எல்லாம் பிடிச்சியிருக்கா... ?"

"மம் , பிடிச்சியிருக்கு..." என்றவளுக்கு வெயிலின் தாக்கம் தாங்காது வியர்த்து ஒழுகியது...

"எதுவும் கஷ்டமாயிருந்தா சொல்லு..."

"இல்லைன்னா..." என்று அவள் அவசரமாய் மறுத்தாள்...

"பொய் சொல்ல கூடாது கனி..." என்றவனின் குரல் மிக அருகாமையில் கேட்பது போல் தோன்ற... அவள் திரும்பி பார்த்தாள்...

அங்கே புன்னகையுடன் பரத் நின்றிருந்தான்... அவள் தன்னைப் பார்ப்பதை கண்டு ஒற்றைப் புருவத்தை உயர்த்தி ' என்ன ?' என்பது போல் கேட்டவன் அவளைப் பார்த்து வசீகரமாய்ச் சிரித்தான்...

"பாரு... எப்படி வியர்த்து கொட்டுதுன்னு..." என்றவன் தனது கைக்குட்டையை எடுத்து அவளது நெற்றியில் படிந்திருந்த வியர்வை துளிகளை மென்மையாய் துடைத்துவிட்டான்...

பரத்தின் கைக்குட்டையில் இருந்து வந்த அவனது பிரத்யேக நறுமணம் சின்னப் பெண்ணவளின் சித்தத்தைத் தடுமாறச் செய்தது...

"வேண்டாம்ன்னா... நானே துடைச்சிக்கிறேன்..." என்றவள் அவனிடம் இருந்து விலகி நின்றாள்...

"உனக்குள் அதே காதல் இருந்ததுன்னா நீ இப்படிச் சொல்ல மாட்டே... ஒருவேளை அது வயதின் ஈர்ப்போ... ?" என்றவனது விழிகள் அவளைக் கூர்மையாய் அளவிட்டது...

அந்த நொடி அவளது நினைவில் குடும்பத்தின் நிலைமை கண் முன்னால் தோன்றியது... அதில் அவளது காதல் உணர்வுகள் பொங்கிய பாலில் நீர் துளி தெளித்தது போல் அப்படியே அடங்கிப் போய்விட்டது...

"ஆமாம்... அது வயதின் ஈர்ப்பு தான்... இப்போ எந்தக் காதலும் என் மனதில் இல்லை..." என்று உறுதியாகக் கூறியவள் அவனை நிமிர்ந்தும் பாராது விறுவிறுவென நடந்து சென்றுவிட்டாள்... ' ஏன்னா ' என்கிற விளிப்பை கூட அவள் மறந்து போனாள்...

அவன் தான் அவளது பதிலில் விக்கித்துப் போய் நின்றிருந்தான்... நேரத்துக்கு நேரம் சட்டையை மாற்றுவது போல் மனதினை மாற்றிக் கொள்ளும் பெண்களைக் கண்டு அவனுக்கு வெறுப்பாக இருந்தது...

"எங்கே போயிருவன்னு நானும் பார்க்கிறேன்... எப்படியும் நீ என் கிட்ட வந்து தானே ஆகணும்..." அவனது உதடுகள் ஆத்திரத்துடன் முணுமுணுத்துக் கொண்டது...

****

மருத்துவமனையில் நோயாளிகளுக்குச் சிகிச்சை அளித்துக் கொண்டிருந்த ஆராதனாவிடம் வந்த அவளது சக மருத்துவர் சாக்ஷி ,

"சேர்மன் உன்னைக் கூப்பிடுறாரு ஆரு..." என்று கூறிவிட்டு செல்ல...

ஆராதனா சற்று பதட்டத்துடன் சிவசுப்ரமணியம் அறையை நோக்கி சென்றாள்... அன்று போல் விஷ்ணுபிரஹான்

ஏதேனும் ஏழரையை இழுத்து வைத்திருக்கிறானோ ? என்று அவளுக்குப் பயமாக இருந்தது...

"மே ஐ கம்மின் சார்... ?"

"கம்மின்..." என்று ஒலித்த கம்பீரமான குரலில் குழம்பியவளாய் உள்ளே நுழைந்தவள் அங்கிருந்த நாற்காலியில் அமர்ந்திருந்த விஷ்ணுபிரஹானை கண்டு திகைத்து போய் விழி விரித்தாள்...

"ஹாய் பேபி..." என்று அவன் அவளைப் பார்த்து கையசைக்க ,

"இங்கே என்ன பண்றீங்கோ... ? சிவா அங்கிள் வந்தால் பிரச்சனையாகி போயிரும்..." என்று அவள் பயத்தில் படபடக்க...

"என் கிட்ட பிரச்சனை பண்ண யாருக்குத் தைரியம் இருக்கு... வேணும்ன்னா உன்னோட சிவா அங்கிளுக்கு ஃபோன் பண்ணி கேட்டு பாரேன்..."

"அப்படின்னா... ?" அவள் அதிர்ச்சியுடன் அவனைப் பார்த்தாள்...

"அப்படியே தான்... சிவா மருத்துவமனை குழுமத்தில் நானும் ஒரு பங்குதாரர்... மிஸ்டர். சிவசுப்ரமணியத்துக்கு இருக்கும் அதிகாரத்தைப் போன்று... இல்லையில்லை , அதை விட அதிகமான அதிகாரம் எனக்கு இருக்கிறது..." என்றவன் ,

"நீ புத்திசாலி என்பதை இப்போது நான் ஒத்து கொள்கிறேன்..." அவன் அவளை மெச்சினான்...

"ரொம்ப முக்கியம்..." அவள் வெடுவெடுத்தாள்...

"சேர்மனை பார்க்க வரும் போது இப்படித் தான் கோட் மாட்டிக்கிட்டு வருவியா... ? இதென்ன மரியாதை இல்லாமல்... முதலில் அதைக் கழட்டு..." அவனது குரல் சற்றுக் கடுமையாக ஒலித்ததோ...

அதைக் கேட்டு அவளையும் அறியாது அவளது கைகள் தான் அணிந்திருந்த வெள்ளை கோட்டை கழற்ற முயன்றது... திடீரெனத் தன் முன் நிழலாடவும் அவள் சட்டென்று நிமிர்ந்து பார்த்தாள்... அவளுக்கு வெகுஅருகில் அவன் நின்றிருந்தான்... அவனது பார்வை பதிந்திருந்த இடத்தைக் கண்டு அவள் சட்டென்று தனது கோட்டை கொண்டு மறைத்தவள் பின்பு அவனை நிமிர்ந்து பார்த்து முறைத்தாள்...

' ஜஸ்ட் மிஸ்ட்... ' மனதிற்குள் கூறி கொண்டவன் தனது சிகையைக் கோதி கொண்டே வேறுபக்கம் பார்த்தபடி தனது விசம சிரிப்பை அடக்கி கொண்டான்...

"உங்களுக்குக் கொஞ்சமும் மேனர்ஸ் என்பதே கிடையாதா... ?"

"நமக்குள் மேனர்ஸ்க்கு இடம் இருக்கிறதா என்ன... ?" கொஞ்சமும் அலட்டி கொள்ளாது கேட்டவனை எரித்து விடுவது போல் பார்த்தாள் அவள்...

"நீ என்னுடையவள் ஆராதனா..." அதற்கும் அவள் தனது பார்வையை மாற்றிக் கொள்ளாது அவனைப் பார்வையால் சுட்டெரித்தாள்...

"யூ ஆர் மைன் பேபி..." என்று உயிர் உருகும் குரலில் கூறியவனின் வார்த்தைகளில் என்ன விதமான உணர்வு வழிந்தோடுகிறது என்று அவளால் கண்டுபிடிக்க முடியவில்லை...

அவனுக்குமே தனது உணர்வுகளைச் சரியாகப் புரிந்து கொள்ள முடியவில்லை... ஆனாலும் ஏனோ அவனுக்கு இந்த உணர்வு மிகவும் பிடித்திருந்தது... அதிலும் ஆராதனாவை பேய் முழி முழிக்க வைக்கும் இந்த உணர்வை அவன் மிகவும் விரும்பி ரசித்தான் என்றே சொல்ல வேண்டும்...!!!

திருத்தமாகும்...!!!

" இதுக்குத் தான் வேலை நேரத்தில் கூப்பிட்டேளா... ?" ஆராதனா கோபத்துடன் விஷ்ணுபிரஹானை பார்த்து கேட்டவள் அறையை விட்டு வெளியேற போனாள்...

அவன் அவளைப் போக விடாது தடுப்பதற்காக அவளது கையைப் பிடிக்க முயன்ற போது அவள் சுதாரித்துக் கொண்டு விலகியபடி ,

" டோன்ட் டச் மீ..." என்றாள் கோபத்துடன்...

" ஓகே , ஓகே... கூல் , கூல்..." அவன் தனது இரு கைகளையும் உயர்த்தியபடி மந்தகாச புன்னகையுடன் கூற...

' என் உணர்வுகளோடு விளையாடுவதே உங்களுக்கு வேலையாகப் போய்விட்டதா ' அவள் விழிகளில் வலி மிக அவனைப் பார்த்தாள்... அவளது விழிகளில் தெரிந்த மாற்றத்தை அவன் உணர்ந்த போதும் அது என்னவென்று அவனால் கண்டுபிடிக்க முடியவில்லை...

" நான் சொல்றதை கேட்டுட்டு போ..." என்றவன் அவளைப் பார்த்தபடி ,

" இதைச் சொல்ல மட்டும் நான் உன்னை வரவழைக்கவில்லை... நீ சொல்ல வேண்டும் என்பதற்காகத் தான் நான் உன்னை வரவழைத்தேன்..."

அவள் புரியாது அவனைப் பார்த்தாள்... அவளது பாவனையில் அவனது மனதில் உற்சாகம் பொங்கியது...

" அதாம்மா... ஐ லவ் யூ..." என்று கண்சிமிட்டியவனைக் கண்டு திகைத்து போனவள் பின்பு சுதாரித்துக் கொண்டா
,

" டைம் வேஸ்ட்..." என்றாள் எரிச்சலுடன்...

" என்னுடைய எந்த முயற்சியும் வீணாய் போனதாய் சரித்திரம் இல்லை..." என்றான் அவன் கர்வமாய்...

" இது ஒத்துக் கொள்ள வேண்டிய விசயம் தான்..." என்றவளது இதழ்கள் இகழ்ச்சியாய் வளைந்தது... அவளது பார்வை அவனைத் துளைத்தெடுத்தது... அவனும் சளைக்காது அவளது பார்வையைத் தாங்கி நின்றான்...

அவளது இகழ்ச்சி எதனால் என்று அவனுக்குத் தெரியும்... அவளது துளைத்தெடுக்கும் பார்வைக்கான அர்த்தமும் அவனுக்குப் புரியும்... தவறு முழுவதும் அவனுடையது தான்... ஆனாலும் ஆணின் மனம் அதை ஒத்துக் கொள்ள முடியாது தெனாவெட்டாய் திமிராய் அடங்காது திமிறியது...

" நேக்கு எச்சில் இலையில் சாப்பிட்டுப் பழக்கம் இல்லை... அப்படியொரு தேவையும் நேக்கு இல்லை..." என்று அவனைப் பார்த்து முகம் சிவக்க ஆத்திரத்துடன் உரைத்தவளை கண்டு அவன் முகம் மாறாதிருக்க மிகவும் சிரமப்பட்டான்...

" இப்போ சொல்றேன் நன்னா கேட்டுக்கோங்க... இவ்வளவு நாளா என் கல்யாணத்துக்குப் பிடி கொடுக்காம தான் இருந்தேன்..." என்றுரைத்தவளை கண்டு அவனது கோபம் சட்டென்று மறைந்தது... அவன் மனதில் உல்லாசம் மிக அவளைப் பார்த்தா ,

" என்னை நினைத்து தானே..." என்று குறும்பாய் கூறி நமட்டுச் சிரிப்பு ஒன்றை உதிர்த்தான்...

" நினைப்பு தான் பிழைப்பை கெடுக்கிறது... ஆண்கள் என்றாலே வெறுப்பாய் இருக்கிறது..." என்று அவனைப் பார்த்து வெறுப்பை உமிழ்ந்தவள் ,

" இன்னைக்கே நான் கல்யாணத்துக்குச் சம்மதம் சொல்ல போறேன்..." என்று தீவிர குரலில் சொன்னவளை கண்டு அவனது விழிகள் இடுங்கியது அவ்வளவே... வேறு எந்த மாற்றமும் காட்டாது அவன் அமைதி காத்தான்...

" பெஸ்ட் ஆஃப் லக்..." என்று மட்டும் கூறியவன் மேலே ஒன்றும் கூறவில்லை...

" இதுக்குத் தேங்க்ஸ் சொல்வேன்னு நினைச்சால் சாரி மிஸ்டர். விஷ்ணுபிரஹான்..."

அவள் கூறிக் கொண்டிருக்கும் போதே அறை கதவை திறந்து கொண்டு உள்ளே நுழைந்தான் சிவேஷ்கந்தா... அங்கு விஷ்ணுபிரஹானும் , ஆராதனாவும் பேசி கொண்டிருப்பதைக் கண்டு அவனுக்குக் கோபம் வந்தது... அவனது கோபம் எல்லாம் விஷ்ணுபிரஹான் மீது தான்...

" ரூமுக்குள்ள வரும் போது கதவை தட்டிட்டு வரணும்ங்கிற பேசிக் மேனர்ஸ் கூடவா உங்களுக்குத் தெரியாது மிஸ்டர்..." விஷ்ணுபிரஹானின் குரலில் கோபம் கொப்பளித்தது...

அதைக் கேட்டு சிவேஷ்கந்தாவின் முகம் அவமானத்தில் சிவந்து போனது... ஆனால் அவனால் பதிலுக்குப் பதில் பேச முடியாதபடி அவனது நிலை இருந்தது... ஏனெனில் அவனது தந்தை விஷ்ணுபிரஹானிடம் வாங்கிய கடனுக்கு ஈடாக அவர்களது மருத்துவமனை குழுமத்தின் பங்குகளை அவனுக்கு எழுதி கொடுத்திருக்கிறார்... அதனால் இப்போது மருத்துவமனை விசயத்தில் அவர்களை விட விஷ்ணுபிரஹான் அதிக உரிமை உடையவனாகிறான்...

" அவருடைய ரூமுக்கு வர்றதுக்கு அவர் எதுக்குக் கதவை தட்டணும்... ?" கேட்டது சாட்சாத் நம் ஆராதனா தான்...

அவளது வார்த்தைகளில் சிவேஷ்கந்தாவின் முகம் மலர்ந்தது என்றால் , விஷ்ணுபிரஹானின் முகம் உணர்வுகளைத் தொலைத்துக் கடினமுற்றது...

" வெல் மிஸ்... மிஸ் தானே... ?" கேலியாய் புருவத்தை உயர்த்திய விஷ்ணுபிரஹானை பார்த்தவள் ,

" எஸ்..." என்றாள் அழுத்தம் திருத்தமாய்...

" குட்... மிஸ். ஆராதனா... நீங்க சம்பளத்துக்கு வேலை பார்க்கிறீங்க என்பதை முதலில் ஞாபகத்தில்

வச்சுக்கோங்க... தெனம் , சேர்மன் கிட்ட எப்படிப் பேசணுமோ அப்படிப் பேசி பழகுங்க... மரியாதை கொடுத்து பேசணும்... இது எல்லாத்தையும் விட..." என்றவன் நிறுத்திவிட்டு சிவேஷ்கந்தாவை ஒரு பார்வை பார்த்தவன் பின்பு அவளிடம் திரும்பி ,

" நான் என்ன சொன்னாலும் கேட்கும் நிலையில் மிஸ்டர். சிவேஷ்கந்தா இருக்கிறார் என்பதை நீங்க மறந்துராதீங்க..." என்று அடக்கப்பட்ட கோபத்தில் சீறினான்...

அவனது சீறலான , அலட்சியமான வார்த்தையில் ஆராதனா திகைப்புடன் அவனைப் பார்த்தாள்...

அவளது பார்வையைக் கண்டு கொள்ளாதவனாய் அவன் சிவேஷ்கந்தாவிடம் திரும்பி , " கொஞ்சம் நேரம் வெளியில் இருக்கீங்களா... ? நான் என்னுடைய பேபியிடம் தனியாகப் பேச வேண்டியிருக்கு... இது அஃபிசியல் இல்லை... பெர்சனல்..." ' பேபி ' என்கிற வார்த்தையில் வேண்டுமென்றே அழுத்தம் கொடுத்து கூறியவனைக் கண்டு ஒன்றும் சொல்ல முடியாது ஆராதனாவை ஒரு பார்வை பார்த்தபடி சிவேஷ்கந்தா கடுப்புடன் வெளியேறினான்...

" பெர்சனல் எல்லாம் பேச நேக்கு டைமில்லை... என்னோட பேஷண்ட்ஸ் எனக்காகக் காத்துண்டு இருப்பா..." என்றபடி வெளியேற போனவளை கை நீட்டி தடுத்தவன் ,

" உன்னோட பேஷண்ட்ஸ் எல்லாரையும் டாக்டர். சாக்ஷிக்கு மாத்தியாச்சு பேபி... இப்போ உன்னுடைய ட்யூட்டி என்னைக் கவனிக்கிறது மட்டுமே..." என்று கூலாக அவன் கூற...

" என்னது... ?" என்று அதிர்வுடன் பின்வாங்கியவள் கதவு இடித்ததில் அதைப் பற்றிக்கோலாய் பிடித்தபடி அதன் மீதே சாய்ந்து நின்றாள்...

" ஹேய்... பார்த்தா , பார்த்து... நான் பக்கா ஜென்டில்மேன்ம்மா... நான் சொன்னது வேறு அர்த்தத்தில்... என்னுடைய பார்வை கூட உன்னை எப்போதாவது தவறாகப் பார்த்து இருக்கிறதா... ?"

' டேய் , நேத்து நீ அவளைத் தப்பா பார்த்ததை நான் பார்த்துட்டேன்டா... நீ ரொம்பப் பிலிம் ஓட்டாதே... ' அவனது மனசாட்சி நேரம் காலம் தெரியாது கவுண்டர் கொடுத்தது...

' அவள் பார்க்கலையே... ' அவனது பதில் திமிராய் வந்தது...

' மவனே , அதனால் தான் நீ தப்பிச்ச... ' என்று மனசாட்சி அவனைச் சத்தம் போட்டது...

அவனது வார்த்தையில் ஆராதனா மிகவும் ஓய்ந்து போனாள்... தனது அழகின் மீதா , புத்திசாலித்தனத்தின் மீதா , தனது படிப்பின் மீது இப்படி அவள் மீதே அவளுக்கு வெறுப்பு வருவதற்கு அவன் மட்டும் தான் காரணம்... அவளுள் ஒருவித தாழ்வு மனப்பான்மை எழுந்திருக்கிறது என்றால் அதற்கு முக்கியக் காரணமே அவன் தானே...

" இல்லைல்ல..." அவளது மௌனத்தைச் சம்மதமாக எண்ணி கொண்டு அவனே பேச ஆரம்பித்தான்...

" நேத்துக் கொடுத்த பணத்தைத் திருப்பிக் கொடு பேபி..." என்று அவன் அவள் முன் கை நீட்ட... அவள் திடுக்கிட்டு போய் அவனைப் பார்த்தாள்...

' என்னையவா அந்நியன் மாதிரி ட்ரீட் பண்ற... ? ஆனா நீ எனக்கு அப்படியில்லையே... ' மனதில் சீண்டலாய் நினைத்து கொண்டவன் வெளியில் அப்பாவியாய் நின்றிருந்தான்...

" என்னோட ஹேண்ட்பேக் என்னுடைய ரூமில் இருக்கு..."

" சரி , அது இருக்கட்டும்... சேர்மனுக்கோ , அவருடைய வீட்டில் இருப்பவர்களுக்கோ உடல்நலம் சரியில்லாது போனால் இங்குப் பணிபுரியும் டாக்டர்ஸ் எந்த நேரத்திலும்

அவங்க வீட்டுக்கு வந்து எமெர்ஜென்சி ஹெல்ப் பண்ணணும்... அதே மாதிரி ட்ரீட்மெண்ட்க்கு பணம் வாங்க கூடாது... இது எல்லாம் ஹாஸ்பிட்டல் ரூல்ஸ் தெரியும் தானே..."

" மꣳ , தெரியும்..." அவன் முகம் பார்க்காது வேறு எங்கோ பார்த்தபடி அவள் முனங்கினாள்...

" தெரிந்தால் சரி... இனியாவது ஒழுங்கா நடந்து கொள்..." என்றவன் அவளைப் போகச் சொல்லி அனுமதி அளித்தான்...

தப்பித்தோம் பிழைத்தோம் என்று கதவை திறக்க போனவள் அதிலிருந்த சிறு கருப்புக் கண்ணாடியில் அவனது முகத்தைக் கண்டு சற்று தயங்கி நின்றாள்...

" என்ன... ? அதான் போகச் சொல்லிட்டேனே... ஒரே நாளில் எல்லாவற்றையும் பேசிவிட முடியாது... இனி தினமும் இது தொடரும்..." என்றான் அவன் குறும்பு புன்னகையுடன்... அவனைத் திரும்பி பார்த்தவள் அவனது பேச்சை கவனிக்காது அவனது தலையில் இருந்த கட்டை பார்த்தபடꣳ ,

" நியூரோ சர்ஜன் மிஸ்டர். அமருக்கு இப்போ ட்யூட்டி டைம் தான்... நீங்க போய் உங்க காயத்தைக் காட்டிண்டு வாங்களேன்..." என்று கவலையுடன் கூற...

அவளது அக்கறை அவனது அடிநெஞ்சு வரை சென்று தேனாய்த் தித்தித்தது...

" எந்த ஃப்ளோரꣳ , எந்த ரூம்ன்னு எனக்குத் தெரியாதே... ?" கள்ளவன் அப்பாவியாய் நடித்தான்...

" வாங்க... நான் கூட்டிண்டு போறேன்..." என்றவள் கதவை திறந்து கொண்டு முன்னே சென்றாள்... அவள் சென்றதும் கதவு தானாக மூடி கொண்டது...

" யாஹூ..." என்று அவன் சிறுபிள்ளை போன்று கையை உயர்த்திப் பின்பு மடக்கியபடி சந்தோச கூச்சல் போட்டான்...

விஷ்ணுபிரஹான் வெளிவராததைக் கண்டு மீண்டும் கதவை திறந்து கொண்டு உள்ளே எட்டிப்பார்த்தாள் ஆராதனா... அவள் பார்ப்பது தெரிந்ததும் அவன் மடக்கிய தனது கையைப் பேண்ட் பாக்கெட்டில் விட்டபடி ஸ்டைலாக அவளை நோக்கி நடந்து வந்தான்... அவனது பாவனையில் அவனை ஒரு மாதிரியாகப் பார்த்தவள் பின்பு அவனுடன் இணைந்து நடந்தாள்...

நிர்வாகியின் அறை மருத்துவமனையில் மேல் மாடியில் தனித்திருந்தது... கீழே முழுவதும் மருத்துவமனை செயல்பட்டு வந்தது...

அங்கிருந்த மின்தூக்கியில் இருவரும் நுழைந்தனர்... அது நிர்வாகிக்கு என்று தனித்து இயங்கும் மின்தூக்கி... அவனுடன் தனித்து நின்றிருப்பது கண்டு அவளுக்கு மூச்சு முட்டுவது போலிருந்தது...

" எந்த ஃப்ளோர்... ?" திடுமென அவன் கேட்டதும் தூக்கிவாரி போட அவனைத் திரும்பி பார்த்தவள் ,

" செகண்ட் ஃப்ளோர்..." என்று மெல்லமாய் முனங்கினாள்... அவளது மாற்றம் அவனை யோசனையாய் புருவத்தை உயர்த்த வைத்தது...

ஆராதனா அவனைப் பார்க்காது விழி மூடி மின்தூக்கி சுவற்றில் சாய்ந்து நின்று கொண்டாள்... அவள் அப்படி நின்றது அவனுக்கு இன்னமும் வசதியாய்ப் போய்விட்டது... அவன் நிறுத்தி நிதானமாக அவளைத் தலை முதல் கால் வரை அளவிட்டான்...

கருப்பும் , வெள்ளையும் கலந்த நிறத்தில் சுடிதார் அணிந்திருந்தவள் மேலே வெள்ளை கோட் அணிந்திருந்ததால் அவளது அழகினை முழுமையாக ரசிக்க முடியவில்லையே என்று அவனுக்குச் சற்று வருத்தமாக இருந்தது... அவள் தலையில் சூடியிருந்த ஜாதிப்பூவின் வாசம் அவனது நாசியைத் தேடி வந்து ' என்னை நுகர்ந்து பார் ' என்று ஆசை காட்டி அவனைத்

தாபமாய் அழைத்தது... அவன் ஆழ்ந்து மூச்செடுத்து அவளது வாசத்தைத் தன்னுள் நிரப்பிக் கொண்டான்...

' அவளை இப்படி அணு அணுவாய் ரசிக்கின்றாய்... அவளது நறுமணத்தைச் சுவாசிக்கின்றாய்... இப்படிப்பட்ட நீ , அவள் ' ஐ லவ் யூ ' என்று சொல்லிவிட்டால் அவளை வேறு ஒருத்தனுக்கு விட்டு கொடுத்து விடுவாயா... ?' அவனது மனசாட்சி கேட்ட கேள்விக்கு ,

' நிச்சயமாய்... அதுக்குப் பிறகு அவளுக்கும் , எனக்கும் என்ன உறவிருக்கிறது... அவள் மனதில் நானிருக்கிறேன் என்று தெரிந்தால் மட்டும் போதுமானது... ' அவனிடம் இருந்து உடனே பதில் வந்தது...

' இப்போது மட்டும் உனக்கும் , அவளுக்கும் என்ன உறவிருக்கிறது... ? அவள் மனதில் இருப்பதைத் தெரிந்து கொண்டு நீ என்ன செய்யப் போகிறாய்... ?'

' எனக்கும் அவளுக்கும் உறவில்லை தான்... ஆனால் இது என் மனதில் எரிந்து கொண்டிருக்கும் தீ... இதுக்கு அவள் பதில் சொல்லியே ஆகணும்... அவள் என்னிடம் மண்டியிட வேண்டும்... அது தான் எனக்கு வேண்டும்... ' அவனது மனதில் கோபத்தீ பற்றியெரிந்தது... அதை அவனது முகமும் பிரதிபலித்தது...

" ஃப்ளோர் வந்திருச்சு..." ஆராதனாவின் குரலில் அவனுக்கு நிகழ்காலம் உறைத்ததில் சட்டென்று முகத்தில் புன்னகையைப் பூசி கொண்டவன் ,

" ம்..." என்றபடி மின்தூக்கியை விட்டு வெளியில் வந்தான்...

மருத்துவர் அமரின் அறை முன் வந்து நின்றவள் அவருக்கு அழைத்துப் பேசிவிட்டு அவனிடம் , " ஃப்ரீயா தான் இருக்கார்... நீங்க போங்கோ..." என்க...

" நீயும் உடன் வரலாமே..."

" நான் எதுக்கு... ? துணைக்கு ஆள் வேணும்ன்னா உங்க மனைவிக்கு ஃபோன் பண்ணி கூப்பிடுங்கோ..." என்றவள்

கோபத்துடன் அங்கிருந்து நகர்ந்தாள்...

' இவங்களுக்கு எல்லாம் உதவியே பண்ண கூடாது ' அவளது மனம் கோபமாய் முணுமுணுத்தது...

அவளது பேச்சை கேட்டு விஷ்ணுபிரஹானின் முகம் ஒரு மாதிரியாக மாறிப் போய்விட்டது... அவன் சொடக்கு போட்டு அவளை அழைத்தான்... அவள் திரும்பி பார்க்கவில்லை என்றாலும் அப்படியே நின்றாள்...

" எனக்குக் கொடுக்க வேண்டிய மூவாயிரம் ரூபாய் அப்படியே தான் இருக்கிறது... ஞாபகம் இருக்கட்டும்..." என்றானே பார்க்கலாம்... அதில் கோபமடைந்தவள் திரும்பி பார்த்து ,

" நன்னா ஞாபகம் இருக்கு..." என்று வெடுக்கென்று உரைத்தவள் விறுவிறுவென அங்கிருந்து அகன்றாள்...

நீண்ட பின்னலாட அவள் சென்றதை ரசித்துப் பார்த்து கொண்டிருந்தவனின் மனதில் சொல்லொண்ணா உணர்வுகள் எழுந்தது... அவன் பெருமூச்சு விட்டபடி மருத்துவர் அறைக்குள் நுழைந்தான்...

****

பிரபல ஆடையகத்தில் ஆண்கள் ஆயத்த ஆடை பிரிவில் நின்று கொண்டிருந்தாள் அர்ச்சனா... இளம் ஊதா வண்ண நிறத்தில் சுடிதார் அணிந்து , லேசாக மேடிட்ட வயிற்றின் மீது கை வைத்தபடி முகம் பூரிக்க நின்றிருந்தவள் அத்தனை அழகாய் இருந்தாள்... காண்போரை சுண்டியிழுக்கும் அவளது அழகு அப்போது தான் அங்கு நுழைந்த விஜயையும் சுண்டியிழுத்தது... அவன் தன்னை மறந்தவனாய் அவளைப் பார்த்தபடி அசையாது நின்றிருந்தான்...

அர்ச்சனா அங்கிருந்த வெண்ணிற டீசர்ட் ஒன்றை கையில் வைத்தபடி பார்த்திருந்தாள்... தன்னவன் இந்த டீசர்ட்டை அணிந்தால் டீசர்ட்டின் அழகு இன்னமும் அதிகரித்து விடும் என்று எண்ணியவளின் இதழ்களின் குறுநகை

வந்தமர்ந்தது... மெல்ல அதை வருடி கொடுத்தவளின் முகத்தில் மென்மை படர்ந்தது... அதைப் பார்த்துக் கொண்டிருந்த விஜயின் மனதில் பொறாமை தீ பற்றியெரிந்தது... விறுவிறுவென அவளை நோக்கி வந்தவன் ,

" எப்படி... எப்படிடி உன்னால் இப்படியிருக்க முடியுது... ?" என்று ஆக்ரோச குரலில் கேட்க...

திடுமென ஒலித்த விஜயின் குரலில் திடுக்கிட்டுப் போய்த் திரும்பி பார்த்தவள் வெகு அருகாமையில் நின்றிருந்த அவனைக் கண்டு அதிர்ந்து போனவளாய் பயத்தில் பின்னால் நகர்ந்தாள்... பின்னால் இருந்த துணி தொங்க விடப்பட்டிருந்த தாங்கியில் கால் தடுக்கி அவள் கீழே விழுந்தாள்...

" ஏய்..." என்று விஜய் அலறிக் கொண்டே அவளைத் தூக்கும் முன் அவள் கீழே விழுந்திருந்தாள்...

விஜயின் உயிர் அவன் வசமில்லை... கர்ப்பிணி பெண்ணவளை தேவையில்லாது பயப்படுத்தி விட்டோமோ ? என்று அவன் உள்ளம் குமைந்தபடி அவளைத் தூக்குவதற்காக அவள் அருகே வந்தான்... கீழே விழுந்தவளுக்கு அடி எதுவும் படவில்லை என்றாலும் அதிர்ச்சியில் அவளால் உடனே சுதாரிக்க முடியவில்லை... அப்போது விஜய் அவளைத் தூக்க வர... நத்தை கூட்டிற்குள் ஒடுங்குவது போல் அவள் கை , கால்களைச் சுருக்கி கொண்டு தனக்குள் ஒடுங்கினாள்... அவளது ஒதுக்கத்தைக் கண்டு கொள்ளாது அவள் முன் குனிந்தவன் அவளது இடையில் ஒரு கையும் , அவளின் இடதுகையில் மற்றொரு கையையும் பதித்து அவளைத் தூக்கி நிறுத்தினான்...

" அடி எதுவும் படலையே.." அவனது விழிகள் அவளை மேலிருந்து கீழாகப் பதட்டத்துடன் பார்த்தது...

அவனது பதட்டத்தைப் பார்த்தபடி நின்றிருந்த அர்ச்சனா அச்சத்தில் உறைந்திருந்தாள்...

" அர்ச்சு..." தனது அன்னையின் பதற்ற குரலில் தன்னுணர்வு பெற்றவள் திரும்பி பார்த்தாள்...

அங்கு நின்றிருந்த விஜயை கண்டதும் அதிர்ந்து போனார் மங்கை... அவனிடம் என்ன பேசுவது என்று அவருக்குத் தெரியவில்லை... பேசுவதற்கும் ஒன்றும் இல்லை... அதனால் மகளைக் கண்டா ,

" குழந்தை உண்டாகி இருக்கும் போது பார்த்து கவனமா இருக்க மாட்டியா அர்ச்சு..." என்று அவளைக் கடிந்தார்...

அப்போது விஜயின் விழிகள் அவளது மேடிட்ட வயிற்றைப் பார்த்தது... அதைக் கண்டு அவனுள் பலவித உணர்வுகள் எழுந்தது... அவன் கை முஷ்டியை இறுக்கி தனது உணர்வுகளை அடக்கி கொண்டான்...

" வா அர்ச்சு..." மங்கை மகளின் கையைப் பிடித்து இழுத்தார்...

அர்ச்சனா ஒரு எட்டு எடுத்து வைத்தவள் , " ஷ்..." என்று வலியின் முனங்கினாள்...

" என்னாச்சு... ?" விஜய் , மங்கை இருவரும் ஒரே நேரத்தில் பதற்றத்துடன் குரல் கொடுத்தனர்...

" ஸ்டாண்ட்டில் கால் வைக்கும் போது வழுக்கியிருச்சும்மா... லேசா சுளுக்கி இருக்கும்ன்னு நினைக்கிறேன்..." என்றவள் சிரமப்பட்டு அடுத்த அடி எடுத்து வைத்தாள்...

அது மட்டும் தான் அவளுக்கு ஞாபகத்தில் இருந்தது... அடுத்த நொடி அவளது கால்கள் இரண்டும் அந்தரத்தில் பறந்தது...

" ஆ..." எனப் பயத்தில் அலறியவளை கண்டா ,

" நான் தான்..." என்று விஜய் அவளைச் சமாதானப்படுத்த...

அவள் ஆச்சரியமும் , பயமும் கலந்து அவனைப் பார்த்து விழி விரித்தவள் பற்றுக்கோலுக்காக அவனது சட்டையை

இறுக பற்றிக் கொண்டாள்... அந்தக் கணம் அவனது புருவங்கள் வியப்பில் உயர்ந்தது...

" காரில் தானே வந்திருக்கீங்க..." அவனது கேள்விக்குப் பதில் சொல்லாது மங்கை ஆமென்று தலையசைத்தவர் ,

" எம் பொண்ணைக் கீழே இறக்கி விடுங்க... யாராவது பார்த்தா தப்பா நினைச்சிருவாங்க..." என்று கண்டிப்புத் தொனியில் கூற...

" யார் தப்பா நினைச்சா எனக்கு என்ன... ?" என்று திமிராய் கூறியபடி அர்ச்சனாவை தூக்கி கொண்டு அசால்ட்டாக நடந்த விஜயை கண்டு மங்கை திகைத்த போதும் அவனைத் தடை செய்யவில்லை...

" ப்ளீஸ் , என்னை இறக்கி விடுங்க..." அர்ச்சனா மெல்லிய குரலில் பயத்துடன் முனங்கினாள்...

அவளைப் பார்த்து முறைத்தவன் ஒன்றும் கூறாது மேலே நடந்தான்... அவளுக்குத் தான் பயத்தில் வியர்த்து வடிந்து இரத்தம் அழுத்தம் ஏகத்துக்கும் எகிறுவது போல் தோன்றியது... அவன் தொட்ட இடமெல்லாம் பற்றியெரிவது போல் அவளுள் ஒரு தோற்றம்...

விஜய் அர்ச்சனாவை தூக்கி வருவதைக் கண்ட அவளது கார் ஓட்டுநர் வேகமாய் ஓடி வந்து கார் கதவை திறந்துவிட்டான்... காரினுள் குனிந்து இருக்கையில் அவளை அமர்த்திவிட்ட பின்பே விஜய் நிமிர்ந்தான்...

" வலி எதுவும் இருக்கா... ?" என்று அக்கறையுடன் கேட்டபடி அவன் அவளைப் பார்க்க...

அப்போது தான் அவள் தன்னையே பார்ப்பதை அவன் உணர்ந்தான்... அந்தப் பார்வையில் அவன் என்ன மாதிரி உணர்ந்தான் என்று அவனுக்கே தெரியவில்லை... அவனது மனதில் இத்தனை நாள் வாடி போயிருந்த அவனது காதல் பூ மெல்ல மலர்ந்தது... அவனையும் அறியாது அவனது உதடுகளில் புன்முறுவல் பூத்தது...

" வலி இருக்கான்னு கேட்டேன்..." அவனையும் அறியாது அவனது குரல் மென்மையாய் ஒலித்தது...

" வலி எனக்குப் பழக்கமான ஒன்று தான்..."

மற்ற பெண்களைப் போன்று கோபம் கொள்ளாதை , எதிரியையும் கோபப்பட வைக்காது மென்மையாய் தனது மனதினை உணர்த்த அவளால் மட்டுமே முடியும்... அவளது குரலில் தெரிந்த வலியில் அவனது விழிகள் வேதனையைப் பிரதிபலித்தது...

" ஓஹோ..." என்று கேட்டவனின் குரலில் நிச்சயம் அலட்சியம் இல்லை... அடிப்பட்ட வலியே மிகுந்திருந்தது...

" உடலில் ஏற்படும் காயத்துக்கு மருந்து இருக்கு... ஆனா மனசில் ஏற்படும் காயத்துக்கு... ?" கேள்வியாய் அவனைப் பார்த்தவள் பின்பு அவனது பதிலை எதிர்பாராது விழிகளை மூடி கொண்டாள்...

அவளையே சில நொடிகள் கூர்ந்து நோக்கியவனை , " சாரி..." என்று மன்னிப்பு வேண்டிவிட்டு அங்கிருந்து வேகமாய்ச் சென்றுவிட்டான்...

அவனது மன்னிப்பு வார்த்தை அவளது காதுகளில் விழுந்த அடுத்த நொடி அவள் விழி திறந்து பார்த்தாள்... அவளது பார்வை வட்டத்தில் விஜயின் முதுகுபுறமே தெரிந்தது... அவள் மீண்டும் சோர்வுடன் விழிகளை மூடி கொண்டாள்... மங்கை மறுபுறம் வந்தேறியதும் கார் கிளம்பியது... அர்ச்சனாவின் காதுகளில் விஜயின் மன்னிப்பு குரலே திரும்பத் திரும்ப ஒலித்துக் கொண்டிருந்தது...

பிறக்கும் போதே எல்லா வரமும் பெற்று பிறந்த இளவரசன் அவன்... அவன் சமானிய பெண்ணான அவளிடம் மன்னிப்பு கேட்டது அவளது மனதினை பெரிதாய் அசைத்துப் பார்த்தது... அதேசமயம் அவன் மீதான அச்சம் அவளிடத்தில் அப்படியே இருக்கின்றதே... அவளது விழியோரமாய் விழுநீர் வழிந்தோடியது...

மகளின் வேதனையைப் பார்த்தபடி மங்கை அமைதியாக வந்தார்... அவரால் எதுவும் செய்ய முடியாது என்பதால் கையாலாகாதவராய் அவளைப் பார்த்திருந்தார்...

வீட்டிற்கும் வந்தும் அர்ச்சனாவின் அழுகை நிற்கவில்லை... மங்கை அவளது காலுக்கு ஒத்தடம் கொடுத்து அவளது வலியை போக்கிவிட்டு நிமிரும் வரை அவள் மௌனமாய்க் கண்ணீர் வடித்தாள்...

" அர்ச்சு , அழுவதால் எதுவும் மாறப் போவதில்லை..."

" மாறியிருக்கும்... எல்லாம் மாறியிருக்கும்... எல்லாம் உங்களால் தான்... நான் இப்போ இந்த வேதனையை அனுபவிப்பது எல்லாம் உங்களால் தான்... பிடிவாதம்... உங்களது வறட்டு பிடிவாதத்தால் தான் என் நிம்மதி பறிப் போனது... இன்னமும் மிச்சம் இருப்பது இந்த உயிர் ஒண்ணு தான்... இதுவும் போயிரணும்... அதைத் தான் நான் விரும்பறேன்... யாருக்கும் பாரம் இல்லாமல் நான் போயிரணும்..." கண்ணீரை துடைக்கக் கூட இயலாது தேம்பியபடி பேசியவளை கண்டு மங்கை விக்கித்துப் போனார்...

" என்ன பேச்சு பேசுற அர்ச்சு... ? உன் வயிற்றில் இருக்கும் குழந்தைகளைக் கொஞ்சமாவது நினைச்சு பார்த்தியா... ?" அவர் மகளை அதட்டினார்...

" அவங்களுக்கு என்ன... ? மாமூ இருக்கார்... பார்த்துக்குவார்..."

" அப்போ விஷ்ணு... ?"

" இனியாவது அவருடைய வாழ்க்கையை அவர் வாழட்டும்... என்னால் யாருடைய வாழ்க்கையிலும் குழப்பம் வேண்டாம்..."

" என்னடி இப்படிச் சொல்ற... ?" அவர் திகைத்துப் போனார்...

" இப்போ தான்ம்மா எனக்குப் புத்தி தெளிஞ்சிருக்கு..." என்று விரக்தியாய் கூறியவள் தனது அறையை நோக்கி சென்றாள்...

மங்கை அவளைப் பரிதாபத்துடன் பார்த்திருந்தார்... அவளது இந்த நிலைக்கு அவரும் ஒரு காரணம் அல்லவா... அவரது மனதில் பாரமேறியது...

அர்ச்சனாவிடம் பேசிவிட்டு காரிலேறி அமர்ந்த விஜய் நேரே காரை வீட்டிற்கு விரட்டினான்... அவனது மனதில் அர்ச்சனாவின் வெவ்வேறு உணர்வுகளைப் பிரதிபலித்த முகமே வலம் வந்து அவனைப் பெரிதும் இம்சித்தது... ' வலி எனக்குப் பழக்கமான ஒன்று தானே ' அவளது வலியில் அவன் துடித்துப் போனான்...

' என்ன வார்த்தை சொல்லிட்டேடி... ? நான் என்ன அரக்கனா... ? இல்லை ராட்சசனா... ?' அவனது மனம் இயலாமையில் குமுறியது... அவள் மீது வானளவு காதலிருந்தும் துளியளவு கூட அதை அவளிடம் காட்ட இயலாது அவனது ஈகோ அவனைத் தடுத்தது...

வீட்டிற்குள் நுழைந்தவன் தனது உடைகளை அள்ளி பெட்டியில் போட்டான்... பின்பு தந்தைக்கு அழைத்தார் ,

" டாட் , நான் பிசினஸ் விசயமா மும்பை போறேன்... அப்படியே சிங்கப்பூர் போயிருவேன்... எனக்குப் பதிலா நீங்க இங்கே பார்த்துக்கோங்க..." என்றவன் நிறுத்தி தன்னைச் சமன்படுத்திக் கொண்டார் ,

" லைஃப் லாங்கா..." என்று கூறினான்...

" விஜய் என்ன சொல்ற... ?" சேதுபதியின் குரல் பதற்றமடைந்தது...

" என்னுடைய ஏஞ்சல் மேல் எனக்கு எவ்வளவுக்கு எவ்வளவு கோபம் இருக்கிறதோ... அவ்வளவுக்கு அவ்வளவு அவள் மீது காதலிக்கிறது டாட்... இன்று தான் நான் என்னையும் உணர்ந்து கொண்டேன்... அவளையும் உணர்ந்து கொண்டேன்..."

" அதுக்கு ஏன் இப்படியொரு முடிவு எடுத்து இருக்கிற விஜய்... ? நான் இன்னும் பத்து நிமிசத்தில் வீட்டுக்கு வந்திருவேன்... நீ கொஞ்சம் வெயிட் பண்ணு..."

" நோ டாட்... நீங்க வந்தீங்கன்னா என் மனசை கலைச்சிருவீங்க... இனி என்னால் என் ஏஞ்சலை கஷ்டப்படுத்திப் பார்க்க முடியாது... அதனால் தான் நான் அவளை விட்டு கண்காணாத இடத்துக்குப் போகிறேன்... பார்ப்பதால் தானே இந்தத் துன்பம் எல்லாம்... எங்கிருந்தாலும் அவள் நல்லாயிருக்கட்டும் டாட்..." என்றவன் அவரது அழைப்பை துண்டித்துவிட்டு வீட்டை விட்டு வெளியேறி இருந்தான்...

****

" நீங்க இங்கே டாக்டரா... ? இல்லை விஷ்ணுவோட பிஏவா... ? உங்க டியூட்டியை செய்யவிடாமல் அவன் ஏன் இப்படிப் பண்றான்... ? நீங்களும் உங்க தகுதியை மறந்துட்டு அவன் பின்னாடியே போறீங்க... ?"

அமர் தனக்குக் கொஞ்சம் வேலை இருப்பதால் விஷ்ணுபிரஹானின் எல்லாப் பரிசோதனைகளுக்கும் அவளை உடன் செல்லுமாறு கேட்டுக் கொண்டார்... அவளுக்கும் இப்போதைக்கு வேறு வேலையில்லை... அவளது நோயாளிகளைச் சாக்ஷி பார்த்துவிட்டாள்... அதனால் விஷ்ணுபிரஹானின் பரிசோதனைக்கு அவள் துணை வந்திருந்தாள்... இதோ இப்போதும் அவனை ஸ்கேன் பண்ண அனுப்பிவிட்டு அவள் வெளியில் தான் காத்து நிற்கிறாள்...

உள்ளே போகும் முன் அவன் அவளிடம் வம்பிழுத்ததை எண்ணி பார்த்தாள் அவள்...

" நமக்குள் எந்த ஒளிவும் மறைவும் இருக்கக் கூடாது பேபி... நீ என் கூடத் தாராளமா உள்ளே வரலாம்..." என்று கண்சிமிட்டிய விஷ்ணுபிரஹானை கண்டு கோபத்தில் ,

" மிஸ்டர். விஷ்ணுபிரஹானஂ , திஸ் த லிமிட்..." என்று ஒற்றை விரல் உயர்த்தி அவனை எச்சரித்தவள் அதே விரல் கொண்டு ஸ்கேனிங் அறையைச் சுட்டிக்காட்டி உள்ளே போகுமாறு சைகை செய்தாள்...

" தலைக்குத் தானேம்மா ஸ்கேன் எடுக்கப் போறாங்க... நீ எதுக்கு இப்படிப் பதறுகிற... ?" அதுக்கும் அவளைக் கிண்டலடித்து வெறுப்பேற்றி விட்டே அவன் உள்ளே சென்றான்...

அவள் தான் கொதிக்கும் கொதிகலனாய் கோபத்தில் வேக மூச்செடுத்தபடி நின்றிருந்தாள்... இந்த நேரம் பார்த்தா சிவேஷ்கந்தா அவளிடம் வந்து இது மாதிரி கேட்க வேண்டும்... ?

" அவன் இவன்னு பேசாம முதலில் அவருக்கு மரியாதை கொடுத்து பேசுங்க சிவேஷ்... அப்புறம் சேர்மன் குடும்பத்தில் இருந்து யார் செக்கப் வந்தாலும் கூடவே ஒரு டாக்டர் இருப்பது இங்கே உள்ள ரூல்சில் ஒன்று தான்... அதனால் நான் இங்கிருப்பதில் தவறில்லை... நாளைக்கே உங்களுக்கு ஏதாவது ஒன்று என்றாலும் நான் உங்க கூடவும் இது போல் வருவேன்..."

அவள் முதலில் பேசியதை இந்தக் காதில் வாங்கி அந்தக் காதில் விட்ட சிவேஷ்கந்தா அவள் கடைசியில் கூறிய வார்த்தைகளை மட்டும் சரியாகக் கேட்டு கொண்டவனின் முகம் மகிழ்ச்சியில் மகிழ்ந்து போனது...

" அப்படின்னா சந்தோசம் தான்... இருந்தாலும் விஷ்ணு கிட்டயிருந்து நீங்க தள்ளியிருப்பது உங்க ப்யூச்சருக்கு நல்லது..."

ஒரு காலத்தில் விஷ்ணுபிரஹான் தான் தன்னுடைய எதிர்காலம் என்று நினைத்தவள் அல்லவா அவள்... சிவேஷ்கந்தா கூறியதை கேட்டு அவளது முகம் ஒருமாதிரியாய் மாறிப் போனது...

" நான் என்ன பண்ணணும்ன்னு , பண்ண கூடாதுன்னு நான் தான் முடிவு பண்ணணும்... உங்களது அக்கறைக்கு நன்றி..."

ஏனோ தனக்கும் , விஷ்ணுபிரஹானுக்கும் இடையில் சிவேஷ்கந்தா மூக்கை நுழைப்பது அவளுக்குப் பிடிக்கவில்லை...

அப்போது தான் சிவேஷ்கந்தா அவளது குணத்தை முழுமையாக அறிந்தான்... ஆராதனா அமைதி மட்டுமல்ல , அழுத்தமும் கூட என்று... அதற்காக அவன் வருந்தவும் இல்லை... நிச்சயம் திருமணத்திற்குப் பிறகு தன்னையும் அவள் இப்படி நேசிப்பாள் என்று உறுதியாக நம்பினான்...

" நான் உங்களைக் கட்டுப்படுத்தலை ஆராதனா... ஜஸ்ட் எச்சரிக்கை கொடுத்தேன்... அவ்வளவு தான்..." என்றவனைக் கண்டு தவறு செய்துவிட்டது போல் அவள் இதழ்களைக் கடித்தபடி நின்றிருந்தாள்...

" தீ என்று தெரிந்திருந்தும் இன்னொரு முறை சுட்டுவிடக் கூடாதேன்னு எச்சரிக்கிறேன்... அவ்வளவே..."

' சாரி ' என்று அவள் மன்னிப்பு கேட்கும் முன் விஷ்ணுபிரஹான் அறைக்குள் இருந்து வெளியில் வந்தான்... சிவேஷ்கந்தா சொன்னது அவனது காதில் விழுந்து அவனைக் கோபம் கொள்ளச் செய்தது... ஆனாலும் அதை வெளிக்காட்டி கொள்ளாது புன்னகையுடன் சிவேஷ்கந்தாவை பார்த்தவன் ,

" நான் தீயே தான் சிவேஷ்கந்தா... என் எதிரிகளுக்கு நான் காட்டு தீ தான்..." என்று நெஞ்சை நிமிர்த்திக் கொண்டு அவன் நின்றிருந்த விதமே ' ஒற்றைக்கு ஒற்றையாய் சண்டைக்கு வருகிறாயா ?' என்று அறைக்கூவல் விடுவது போலிருந்தது...

அதை உணர்ந்தவளாய் ஆராதனா , " பை சிவேஷ்... பிறகு பேசலாம்..." என்று சிவேஷ்கந்தாவிடம் விடைபெற்றவள் ,

" டாக்டரை போய்ப் பார்க்கலாமா... ?" என்று விஷ்ணுபிரஹானிடம் கேட்டாள்...

" ம்..." விஷ்ணுபிரஹானுக்குக் கோபம் கனன்ற போதும் ஆராதனாவிடம் காண்பிக்க விரும்பாதவனாய் அவளுடன் இணைந்து நடந்தான்...

மீண்டும் மருத்துவரிடம் காட்டிவிட்டு அவர் பயமில்லை என்றதும் இருவரும் வெளியில் வந்தனர்... ஆராதனா அமைதியாக நடந்து வந்தாள்...

" ஒரு விசயம் ஆராதனா..." விஷ்ணுபிரஹானின் குரலிலிருந்த தீவிரத்தில் அவள் யோசனையாய் அவனை ஏறிட்டாள்...

" கனியை உங்க ஆஃபிசில் வேலை செய்ய நான் அனுமதிச்சு இருக்கேன்னா... அது உன் குடுப்பத்துக்காக இல்லை... உனக்காக மட்டும் தான்..." என்றவனது வார்த்தைகள் அவளுள் சிலீரென்று ஊடுருவியது...

" ஆனா உன் அண்ணன் பரத் சரியில்லையே..." என்று அவன் நெற்றியை யோசனையாய் நீவி கொள்ள...

" காமாலை கண்ணுக்கு எல்லாமே அப்படித்தான் தெரியும்..." அவன் தன் அண்ணனை குறை கூறியதும் அவளுக்குக் கோபம் வந்ததில் வெடுக்கென்று கூறினாள்...

" இது என் எச்சரிக்கை அவ்வளவே... அவன் என்னை எதுவும் செய்ய முடியாம என் தங்கச்சி கிட்ட மட்டும் வம்பு பண்ணினான் வையி... அதோட விளைவுகள் விபரீதமா இருக்கும்..."

" என் அண்ணா அப்படி எல்லாம் செய்ய மாட்டாங்க... கனி என்னுடைய பொறுப்பு..." அவள் உறுதியாகக் கூற...

" உன் மேல் நம்பிக்கை இருக்கு..." அவனது வார்த்தைகளில் அவள் விழி மலர அவனை நோக்க...

" ஆனா பரத் மேல் எனக்குக் கொஞ்சமும் நம்பிக்கை இல்லை... இருந்தாலும் உன் வார்த்தைக்குக் கட்டுப்பட்டு

நான் அமைதியா இருக்கேன்... எதுக்கும் கனி விசயத்தில் கவனமாய் இரு..." என்றவன் தனது காரை நோக்கி சென்றான்...

அப்போது தான் ஞாபகம் வந்தவளாய் அவளஂ , " இந்தாங்க உங்க பணம்..." என்றபடி பணத்தை அவன் முன் நீட்டினாள்... அதை எடுத்தபடி அவளைப் பார்த்தவனஂ ,

" நமக்கு இடையில் டாக்டரஂ , பேஷண்ட் உறவு மட்டும் தான்னு நீ சொன்ன... இப்போ பார்த்தியா..." என்று கிண்டலாய் கேட்க...

" மண்ணாங்கட்டி... வேறு எந்த உறவும் இல்லை..." அவள் அடக்கப்பட்ட கோபத்தில் வெடித்தாள்...

" நிச்சயம் உறவிருக்கிறது... முதலாளி , தொழிலாளி... நீ என்னிடம் கை நீட்டி சம்பளம் வாங்குபவள்..."

ஒரு மருத்துவரை பார்த்து அவன் எப்படி இப்படிக் கேவலமாகப் பேசலாமஂ ? அவளுக்குக் கோபம் கோபமாய் வந்தது... அவனிடம் பதிலுக்குப் பேச போனவள் அவனின் அலைப்பேசி அழைப்பதை உணர்ந்து அமைதியாகி போனாள்... அதை எடுத்தவனஂ ,

" சொல்லுங்க..." என்று கூற...

" எப்போ... ? இதோ வர்றேன்... அதுவரை ஹனியை பத்திரமா பார்த்துக்கோங்க..." என்றவன் ஆராதனாவிடம் விடைபெறும் எண்ணம் கூட இல்லாது காரிலேறிப் பறந்தான்...

அவன் சென்ற திசையைப் பார்த்தபடி நின்றிருந்த ஆராதனாவிடம் வலியை தவிர வேறில்லை... பழக்கப்பட்ட வலி தான் என்றாலும் ஏனோ இன்று மிகவும் வலித்தது...!!!

திருத்தமாகும்...!!!

"ஹனி எங்கே... ?"
அர்ச்சனாவின் வீட்டிற்குள் புயல் வேகத்தில் நுழைந்த விஷ்ணுபிரஹானின் வார்த்தைகளும் அதே வேகத்தில் படபடப்பாய் வெளிவந்தது...

"அவள் ரூமில் இருக்கிறாள்..." மங்கை கூறியதும் ,

"ம்..." என்றவன் அர்ச்சனாவின் அறையை நோக்கி வேகமாய் நடந்தான்...

மங்கை மகளின் நிலையைக் கண்டு மனம் கனக்க நின்றிருந்தார்...

விஷ்ணுபிரஹான் அர்ச்சனாவின் அறைக்குள் நுழைந்த போது அவள் கட்டிலில் குப்புற படுத்திருந்தாள்... அவளின் முதுகு குலுங்குவதில் இருந்தே தெரிந்தது அவள் அழுகிறாள் என்று... அவள் அருகே சென்று அமர்ந்தவன் அவளது தலையை வருடியபடி ,

"ஹனி..." என்றழைக்க... அடுத்தக் கணம் அவள் ,

"மாமூ..." என்று கூவியபடி அவனை அணைத்துக் கொண்டு அவனது நெஞ்சில் முகம் புதைத்து தேம்பி தேம்பி அழ ஆரம்பித்தாள்...

அவளது செய்கை அடிப்பட்ட சிறுகுழந்தை ஒன்று ஆறுதல் தேடுவது போலிருந்தது... அதை அவனும் உணர்ந்தவனாய் அவளது முதுகை ஆறுதலாய் நீவி விட்டான்...

"இங்கே பார் ஹனி... நீ விருப்பப்பட்டதால் தான் நான் உன்னை உன் அம்மா வீட்டில் விட்டிருக்கிறேன்... நீ இப்படி அழுதுக்கிட்டு இருந்தேன்னா நான் திரும்ப உன்னை நம்ம வீட்டுக்கு கூட்டிட்டு போயிருவேன்..."

"இல்லை... நான் அங்கே வரலை..." அவள் அழுது சிவந்த விழிகளோடு அவனை ஏறிட்டு பார்த்தாள்...

"ஏன்... ?"

"எனக்கு யோசிக்கணும்..."

"என்ன யோசிக்கப் போற... ? இதில் என்ன யோசிக்க இருக்கு... ?"

"நிறைய இருக்கு..." என்றவளது விழிகள் மீண்டும் உடைப்பெடுத்தது...

"ச்சஓ , அழ கூடாது..." என்று அவளது விழிகளைத் துடைத்தவன் ,

"இப்போ கால் வலி எப்படியிருக்கு... ?" அவன் அவளது பாதத்தை மென்மையாய் வருடியபடி கேட்டான்... அவனது விழிகள் அவளது பாதத்தைக் கூர்மையாக ஆராய்ந்தது... அடி ஒன்றும் இல்லாததால் அவன் நிம்மதியுற்றான்...

"கால் வலிக்கலை மாமூ... ஆனா..." என்றவளை கூர்மையாக அளவிட்டவன் ,

"என்ன ஆனா... ?" என்று கேட்க...

"மனசு ரொம்ப வலிக்குது..." என்று அவள் தனது நெஞ்சின் மீது கை வைத்தாள்...

"ஏன்... ?"

"அவங்க என் கிட்ட சாரி கேட்டாங்க..." அதைக் கேட்டு அவனுக்குச் சுள்ளென்று கோபம் வந்தது...

"சாரி கேட்டா எல்லாம் சரியாகிருமா... ?" அதையே தான் தானும் செய்து கொண்டிருப்பதை அறியாது அவன் கொதித்தான்...

"அவங்க பண்ணினது தப்புன்னா நான் பண்றதும் தப்பு தானே மாமூ..." அவளது வார்த்தைகள் சுருக்கென்று அவனைத் தைத்தது... அவளது வார்த்தைகள் அவனுக்கும் பொருந்துமே...

"நீ இங்கே இருந்தால் இப்படித்தான் கண்டபடி யோசிச்சிக்கிட்டு இருப்ப... என் கூடக் கிளம்பி வா..."

"இல்லை... நான் இங்கேயே இருக்கேன்..." என்று பிடிவாதம் பிடித்தவளை இயலாமையுடன் பார்த்தவன் ,

"சரி , உன் இஷ்டம்... ஈவினிங் ரெடியாயிரு... செக்கப் போயிட்டு வந்திருவோம்..."

"செக்கப்புக்கு நாளிருக்கு மாமூ..."

"சும்மாவே நான் பயந்துக்கிட்டு இருக்கேன்... இந்த லட்சணத்தில் நீ வேறு கீழே விழுந்திருக்க..." என்று அவளைக் கடிந்தவன் ,

"சொன்ன பேச்சு கேளு அர்ச்சு... ஈவினிங் ரெடியாயிரு... நான் வந்து பிக்கப் பண்ணிக்கிறேன்..." என்று அவன் திட்டவட்டமாய்க் கூறினான்...

"சரி , வர்றேன்... கோபப்படாதீங்க மாமூ..." என்று வெள்ளை மனதுடன் வெள்ளேந்தியாய் சிரித்தவளை கண்டு அவனுக்குப் பெருமூச்சு வந்தது... அவளது தலையை மெல்ல வருடி கொடுத்தவன் ,

"சும்மா சும்மா அழுதுக்கிட்டு இருக்காம நல்லா சாப்பிட்டு தெம்பா இருக்கணும்... இப்போ நீ ஒருத்தி இல்லை... உன்னோடு சேர்த்து மூணு பேர் இருக்கீங்க..."

"மாமை , உங்க கிட்ட நான் ஒண்ணு கேட்கவா... ?"

"கேளு..."

"ஒருவேளை நான் டெலிவரியில் செத்து போயிட்டா நீங்க குழந்தைகளைப் பத்திரமா பார்த்துக்குவீங்களா..."

"லூசாடி நீ... அடிச்சு பல்லை பேத்துருவேன்..." என்று அவன் கோபமாய்ச் சீறிய போதும் அவன் தனது அணைப்பை விலக்கவில்லை...

"சும்மா ஒரு பேச்சுக்கு தானே மாமூ..."

"பேச்சுக்கு கூட இப்படி அபத்தமா பேசாதே..."

"நெருப்புன்னு சொன்னா வாய் வெந்துடாது மாமூ... எனக்கு அப்படி ஏதாவது ஒண்ணு ஆச்சுன்னா குழந்தைகளை நல்லா பர்த்துக்கோங்க... அப்புறம்..." என்றவள் அவன் முகத்தை மெல்ல ஏறிட்டாள்... அவனது முகம் கல்லாய் இறுகி போயிருந்தது...

"நீங்க ஆராதனாவை கல்யாணம் பண்ணிக்கணும்..." என்றவளை குனிந்து பார்த்தவன் முறைத்தான்...

ஆராதனாவை பற்றி அர்ச்சனாவிற்கு முழுமையாகத் தெரியாது... அதே போல் இவளை பற்றி அவளுக்குத் தெரியாது... அவன் ஒருவரிடம் மற்றவரை பற்றிச் சொல்ல விரும்பவில்லை... அது தான் உண்மை...

"உண்மையா தான் சொல்றேன் மாமூ... பாவம் அவங்க..."

"பாவமா ? அவளா... ? நீ சொன்ன விசயத்தை மட்டும் நான் போய் அவள் கிட்ட சொன்னேன் வையி... என்னை வெட்டி பொலி போட்டுருவாள்..." என்றவனது முகம் இறுக்கம் தளர்ந்து மென்மையானது...

"அவங்களைப் பத்தி தப்பா புரிஞ்சியிருக்கீங்க மாமூ... உங்களுக்காக அவங்க எல்லாத்தையும் விட்டு கொடுத்திருக்காங்க... அதே மாதிரி உங்களுக்காக இதையும் ஏத்துக்குவாங்க..." என்று உறுதியாய் கூறிய அர்ச்சனாவை பார்த்தவன் ஒன்றும் பேசவில்லை...

"இப்படி அபத்தமா யோசிக்காம வேறு எதையாவது உருப்படியா யோசி... குழந்தைகளுக்கு என்ன பெயர் வைக்கலாம் ? அவங்களை எப்படி வளர்க்கலாம் ? எந்த ஸ்கூலில் சேர்க்கலாம் ? இப்படி உபயோகமா யோசி..." என்றபடி எழுந்தவன் ,

"ஈவினிங் ரெடியாயிரு... இப்போ எதைப் பத்தியும் யோசிக்காதே... வாழ்க்கையை அதன் போக்கில் விட்டு வாழ பழகு... உன் நல்ல மனசுக்கு நல்லதே நடக்கும்..."

என்றவன் அவளிடம் இருந்து விடைபெற்று வெளியில் வந்தான்...

காரை கிளப்பிக் கொண்டு சென்ற விஷ்ணுபிரஹானின் மனதில் அர்ச்சனாவின் வார்த்தைகள் பெரிய தாக்கத்தை ஏற்படுத்தி இருந்தது... ஆராதனா பற்றிய தனது கணக்கீடு தவறோ ? என்று இப்போது அவனுக்குத் தோன்றியது... அந்த நொடி அவனுக்குத் தலைவலிப்பது போலிருந்தது...

மாலையில் விஷ்ணுபிரஹான் அர்ச்சனாவை அழைத்துக் கொண்டு ஆராதனாவை பார்க்க மருத்துவமனைக்குச் சென்றான்... ஆராதனாவிடம் அர்ச்சனாவை காண்பித்துப் பரிசோதனை செய்ய அவன் விரும்பினான்... அவன் வந்த போது ஆராதனாவை பார்ப்பதற்கு நிறையப் பேர் காத்து கொண்டிருந்தனர்... அவனும் அவர்களுடன் இணைந்து வரிசையில் காத்திருந்தான்... ஏனெனில் ஆராதனாவிற்கு அவன் தனது பதவி பலத்தை உபயோகிப்பது பிடிக்காதே... அதை நினைத்து அவனது உதடுகளில் புன்முறுவல் வந்தமர்ந்தது... அவனுடைய கையைப் பற்றியபடி அர்ச்சனா அமர்ந்திருந்தாள்...

"பிபி கொஞ்சம் கூடியிருக்கே... சாப்பாட்டில் கொஞ்சம் உப்பை குறைச்சுக்கோங்க..."

உள்ளே அறையில் ஆராதனா தன் அருகில் அமர்ந்திருந்த பெண்ணிடம் மெல்லிய குரலில் கூறி கொண்டிருந்தாள்...

"உப்பு இல்லாம என்னால் சாப்பிட முடியாது..." சிறுகுழந்தை போன்று அந்தப் பெண் சிணுங்கினாள்...

"இப்படித் தான் பிடிவாதம் பிடிக்கிறாள் டாக்டர்... என்னால் இவளோட விருப்பத்துக்கு மறுப்பு தெரிவிக்க முடியலை... அதுவும் இந்த மாதிரி நேரத்தில் சுத்தம்..." அந்தப் பெண்ணின் கணவனின் கண்கள் மனைவியின் மேடிட்ட வயிறை பெருமை பொங்க பார்த்தது...

"இப்படியே பிபி கூடி போச்சுன்னா சுத்தமா சாப்பாட்டில் உப்பு போட கூடாது... அரை உப்பு வேணுமா ? இல்லை

உப்பே இல்லாம பத்திய சாப்பாடு வேணுமா... ?" ஆராதனா சற்று மிரட்டல் தொனியில் கூற...

"ஐயோ வேணாம் டாக்டர்... அரை உப்பு சேர்த்துக்கிறேன்..." என்று பயத்துடன் கூறியவள் தான் உட்கொள்ள வேண்டிய மருந்துகளை எழுதி வாங்கிக் கொண்டு ஆராதனாவுக்கு நன்றி கூறிவிட்டு எழுந்து சென்றாள்...

அந்தப் பெண் சென்றதும் ஆராதனா அழைப்பு மணியை அடித்து அடுத்த நோயாளிக்கு அழைப்பு விடுத்தாள்... உள்ளே வந்த பெண்ணைத் தொடர்ந்து அவளுடன் வந்த விஷ்ணுபிரஹானை கண்டு ஆராதனா மனதிற்குள் அதிரத்தான் செய்தாள்... ஆனாலும் நொடி பொழுதில் தன்னைச் சமாளித்துக் கொண்டு புன்னகையுடன் அவர்கள் இருவரையும் பார்த்தவளா் ,

"உட்காருங்க..." என்றாள்... ஆனாலும் ஆராதனாவின் விழிகள் அர்ச்சனாவின் லேசாக மேடிட்டிருந்த வயிறை ஞாபகமாய் மனதில் குறித்துக் கொண்டது...

விஷ்ணுபிரஹான் அவளை அளவிடுவது போல் பார்த்தபடி அமர்ந்தான்...

"என்ன ப்ராப்ளம் சொல்லுங்க... ?" அவள் ஒரு மருத்துவராய் கேட்டாள்...

"செக்கப்புக்கு வந்தோம்..." என்ற அர்ச்சனா அவளிடம் கோப்பை நீட்டினாள்... அவள் தான் ஆராதனா என்று தெரியாது அமர்ந்திருந்தாள் அர்ச்சனா...

' திருமதி. அர்ச்சனா ' என்று அதில் எழுதியிருந்த பெயரை படித்த ஆராதனா ஒன்றும் பேசாது உள்ளே புரட்டி பார்த்தாள்...

"இப்போ த்ரீ மன்த் இல்லையா... ? ஸ்கேன் பண்ணி பார்த்துட்டு மெடிசன் எழுதி தர்றேன்..." என்றவள் கோப்பை மூடி வைத்துவிட்டா ,

"ஓபிடி முடிச்சிட்டு ஒரு மணி நேரத்தில் ஸ்கேனிங்க்கு வருவேன்... நீங்க வெயிட் பண்ணுங்க..." என்றவள் அந்தக் கோப்பை அர்ச்சனாவிடம் கொடுத்தாள்...

சரியாக ஒருமணி நேரம் கழித்து அவள் ஸ்கேனிங் பகுதிக்கு சென்றாள்... அர்ச்சனாவை பரிசோதிக்கும் போது விஷ்ணுபிரஹானை அங்குக் காணவில்லை... அவன் எங்கே ? என்று அவள் அர்ச்சனாவிடம் கேட்கவும் இல்லை... அவள் அமைதியாக அர்ச்சனாவை பரிசோதித்தாள்... ஒரு மருத்துவராக அவளிடம் ,

"பேபிஸோட ஹார்ட் பீட் கேட்குதா... ?" என்று கேட்டாள்...

"ஆமாம் டாக்டர்..." என்று சந்தோசமாகப் பதிலளித்தாள் அர்ச்சனா...

"இது ஒரு பேபியோட கைகள்... இது கால்கள்..." என்று அவள் கணினி திரையில் குழந்தைகளின் வளர்ச்சியை அர்ச்சனாவிடம் காண்பித்துக் கொண்டு வர...

அதைப் பார்க்க , பார்க்க அர்ச்சனாவின் விழிகளில் நீர் திரண்டது... யார் கொடுத்த சாபமோ ? அவளால் தனது குழந்தைகளின் அசைவுகளைக் கண்டு கூடச் சந்தோசப்பட முடியவில்லை...

"பேபிஸ் இரண்டும் நல்ல ஆரோக்கியமாயிருக்கு... கவலை வேண்டாம்..." ஒரு மருத்துவராய் அர்ச்சனாவிற்கு ஆறுதல் கூறிய ஆராதனா அவளை அனுப்பி வைத்துவிட்டு மற்ற நோயாளிகளைப் பார்க்க ஆரம்பித்தாள்...

சுமார் ஒருமணி நேரம் கழித்து ஆராதனா மீண்டும் அவளது அறைக்கு வந்த போது புயல் போல் விஷ்ணுபிரஹான் அவளது அறைக்குள் நுழைந்தான்... அவன் பின்னேயே அர்ச்சனா வந்தாள்...

"ஹனி கிட்ட என்ன சொன்ன... ?"

அர்ச்சனாவின் கலங்கிய விழிகள் கண்டு அவன் அடக்கப்பட்ட கோபத்துடன் சீற்றமாய்க் கேட்டான்... அவனது

கோபம் ஆராதனாவை ஒன்றும் செய்யவில்லை... மாறாக அமைதியாக அவனைப் பார்த்தவள் ,

"ஒரு டாக்டர் பேஷண்ட் கிட்ட என்ன பேசுவாங்களோ... அதைத் தான் பேசினேன்..." என்று அமர்த்தலாகக் கூற... அதைக் கேட்டு அவனது விழிகள் இடுங்கியது...

"டாக்டர் ஒண்ணும் சொல்லலை விஷ்ணு... நான் தான் தேவையில்லாம..."

அர்ச்சனா கூற வருவதை உணர்ந்து விஷ்ணுபிரஹானின் கரம் அவளை ஆறுதலாக அணைத்துக் கொண்டது... அவளும் மனப்பாரம் தாங்காது அவனது தோள்களில் சாய்ந்து கொண்டாள்... இருவரையும் பார்த்துக் கொண்டிருந்த ஆராதனாவின் முகத்தில் எந்தவித சலனமும் இல்லை... அவளது அகத்தில் ஆயிரம் இருந்தாலும் அவள் தனது முகத்தில் எதையும் காட்டி கொள்ளவில்லை...

விஷ்ணுபிரஹான் அவளை ஆராய்வது போல் பார்த்துக் கொண்டிருந்தான்... அவளது சலனமில்லா முகம் கண்டு அவனுக்கு உள்ளுக்குள் பற்றிக் கொண்டு வந்தது...

"பேபி எப்படியிருக்கு... ?" அவன் வேண்டுமென்றே குரலை குழைத்துக் கொண்டு கேட்க... ஆராதனா அவனை ஒரு பார்வை பார்த்தவள் ,

"அப்படி அக்கறை இருக்கிறவங்க ஸ்கேன் பண்ணும் போது மனைவி கூட இருந்திருக்கணும்..." என்று கடுப்புடன் கூற...

"முக்கியமான ஃகால் டாக்டர்... இல்லைன்னா விஷ்ணு என்னை விட்டு எங்கேயும் போயிருக்க மாட்டார்..." அர்ச்சனா அவனுக்குப் பரிந்து கொண்டு வர... அவன் கர்வமாய் ஆராதனாவை பார்த்தான்...

"மிஸஸ். அர்ச்சனா..." என்றபடி ஆராதனா அர்ச்சனாவிடமிருந்த ரிப்போர்ட்டை வாங்கிப் பார்க்க...

"மிஸஸ். விஷ்ணுபிரஹான்..."

விஷ்ணுபிரஹான் அழைத்ததும் ஆராதனா சரேலென அவனை நிமிர்ந்து பார்த்தாள்... அவனின் விழிகள் துளைத்து விடுவது போல் அவளைப் பார்த்தது...

"ஓ , சாரி... மிஸஸ். விஷ்ணுபிரஹான்..." என்று ஆராதனா தன்னைத் திருத்தி கொள்ள...

"பரவாயில்லை டாக்டர் , அர்ச்சனான்னே கூப்பிடுங்க..." அர்ச்சனா இடைப்புகுந்தாள்...

"உங்க கணவர் விருப்பப்படுகிறாரே..." என்ற ஆராதனாவின் விழிகள் அவனைத் தான் பார்த்துக் கொண்டிருந்தது...

"மாமூ எப்பவும் இப்படித்தான்..." அர்ச்சனா சிறுசிரிப்புடன் விஷ்ணுபிரஹானை பார்த்தபடி கூறினாள்...

"ஓஹோ..." என்ற ஆராதனா மேற்கொண்டு அதைப் பற்றி ஒன்றும் பேசவில்லை...

"குழந்தைகள் நல்ல ஆரோக்கியமா இருக்கு... மெடிசன் எழுதியிருக்கேன்... மறக்காம தினமும் சாப்பிடுங்க..."

"நல்லா ஸ்கேன் பண்ணினியா... ? குழந்தைகளுக்கு ஒன்றுமில்லையே..." விஷ்ணுபிரஹானின் குரல் சற்று பதற்றத்துடன் ஒலித்தது...

"நல்லா பார்த்துட்டேன்... சந்தேகம் இருந்தா வேறு டாக்டரை கன்சல்ட் பண்ணிக்கோங்க..." என்றவளை தீர்க்கமாய்ப் பார்த்தவன் ,

"தேவையில்லை..." என்றான் முகத்தில் அடித்தார் போன்று...

அவர்கள் இருவரும் கிளம்பி சென்றதும் ஆராதனா சோர்ந்து போய் இருக்கையில் சாய்ந்தமர்ந்தாள்... அவளுக்குப் புயலடித்து ஓய்ந்தது போலிருந்தது... அவளுக்கு விஷ்ணுபிரஹானிடம் சில விசயங்கள் பேச வேண்டியிருந்தது... ஆனால் அர்ச்சனா முன்னிலையில்

அதைப் பற்றிப் பேச அவளுக்கு விருப்பம் இல்லை... அதனால் அவனுக்கு அழைப்பு விடுவித்தாள்...

காரை ஓட்டி கொண்டிருந்த விஷ்ணுபிரஹான் ஆராதனாவின் அழைப்பை கண்டு வியப்பாய் புருவத்தை உயர்த்தியவன் ப்ளூ டூத்தை உயிர்ப்பித்துப் பேசலானான்...

"நான் உங்க கிட்ட கொஞ்சம் தனியா பேசணும்..."

"என் கிட்டவா... ?"

"ம்..."

"அப்போ நான் சொன்ன விசயத்தை ஏத்துக்கிட்டியா... ?" அவனது குரலில் குறும்பு கூத்தாடியது...

"உங்க கிட்ட போய்ப் பேச வந்தேனே... என்னைச் சொல்லணும்..." கடுகடுத்தபடி அவள் அலைப்பேசியை அணைக்கப் போக...

"என்ன விசயம் சொல்லு... ?" அவனது குரல் தீவிரத்துடன் ஒலித்தது...

"அர்ச்சனா ஹெல்த் பத்தி பேசணும்..." ஆராதனா கூறியது கேட்டு விஷ்ணுபிரஹான் யோசனையாய் அர்ச்சனாவை திரும்பி பார்த்தான்...

"சொல்லு..."

"இப்போ அவங்க உங்க கூடத் தான் இருக்காங்க இல்லையா... ? இப்போ வேண்டாம்... தனியா இருக்கும் போது சொல்றேன்..."

"சரி... நானே ஃகால் பண்றேன்..." என்றவன் அழைப்பை துண்டித்தான்...

"மாமை , இவங்க தான் உங்க ஆராதனாவா... ?" அர்ச்சனாவின் குரலில் அவன் திடுக்கிட்டு போய் அவளைத் திரும்பி பார்த்தான்... அவனது திகைப்பை கண்டு கண்சிமிட்டி சிரித்தவள் ,

"நீங்க ஒருமையா , உரிமையா பேசும் போதே கெஸ் பண்ணிட்டேன்... ரொம்ப அழகாயிருக்காங்க மாமூ... உங்களுக்கு ரொம்பப் பொருத்தம்..."

"வாயை மூடு அர்ச்சு..." என்று அவன் கோபமாய்க் கத்தினான்... இழப்பின் வலியை அவள் ஞாபகப்படுத்தியதாலா ? இல்லை இந்தப் பேச்சு அவனுக்கு ரசிக்கவில்லையா ? ஏதோ ஒன்று அது அவனுக்கே வெளிச்சம்...

அர்ச்சனாவும் அவனது கோபத்தை உணர்ந்தவளாய் அமைதி காத்தாள்... அர்ச்சனாவை வீட்டில் விட்டவன் உடனே ஆராதனாவிற்கு அழைத்தான்... அவனது அழைப்பை எதிர்பார்த்திருந்தவளாய் அவள் உடனே அழைப்பை எடுத்தாள்...

"என்ன விசயம் சொல்லு... ?" பதட்டத்துடன் ஒலித்த அவனது குரலில் ஆராதனா பெருத்த அடி வாங்கினாள்... இருந்தாலும் ஒரு மருத்துவராய் மனதினை தேற்றி கொண்டவள் ,

"அர்ச்சனா உடம்பு ரொம்ப வீக்கா இருக்கு... அவங்களைக் கொஞ்சம் கவனமா பார்த்துக்கோங்க..."

"நல்லாயிருக்குன்னு சொன்னியே..."

"இப்பவும் சொல்றேன்... குழந்தைகள் நல்ல ஆரோக்கியமா இருக்காங்க... தாயோட உடல் தான் பலகீனமா இருக்கு..."

"இதுக்கு நான் என்ன செய்யணும்... ?"

இதை விடக் கொடுமையான கேள்வி உலகத்தில் எதுவும் இருக்க முடியாது என்றே அவளுக்குத் தோன்றியது... இருந்தாலும் தன்னைத் தேற்றி கொண்டவள் ,

"கவனம் எடுத்து பார்த்துக்கோங்க போதும்... சத்தான உணவு , சரியான நேரத்துக்கு டேப்லெட் எல்லாம் எடுக்கிறாங்களான்னு பார்த்துக்கோங்க போதும்... அதே மாதிரி மன்த்லி செக்கப்புக்கும் சரியாய் கூட்டிட்டு வாங்க..."

"வேறொண்ணும் இல்லையே..." அவனது கவலை குரல் அவளையும் வாட்டியது...

"அதான் நானிருக்கிறேன்ல... பார்த்துக்கிறேன்..." அவளது நம்பிக்கையான வார்த்தையில் அவனுக்கு யானை பலம் வந்தது போலிருந்தது...

"ரொம்பத் தேங்க்ஸ் பேபி..." என்றவனுக்கு அவளால் ,

"ம்..." என்று மட்டுமே பதில் கூற முடிந்தது...

"இப்பத்தான்டி உன்னைய ரொம்ப ரொம்பப் பிடிக்குது..." என்று புன்சிரிப்புடன் கூறியவன் மகிழ்ச்சியுடன் அழைப்பை துண்டித்தான்...

அவனது வார்த்தையில் அவள் தான் திகைப்புடன் அமர்ந்திருந்தாள்...!

****

தனது அறையைப் பூட்டி கொண்டு வெளியில் வந்த சீதா ஆட்டோ பிடிப்பதற்காகச் சாலையின் இருமருங்கிலும் பார்த்தாள்... அப்போது சரேலென்று ஒரு கார் அவளருகில் வந்து நின்றது... இரவு நேரத்தில் கார் ஒன்று இப்படி உரசுவது போல் நின்றால் பெண்ணவள் பயப்படாது என்ன பண்ணுவாள்... ? அவள் பயந்து போய்ப் பின்னால் இரண்டடி நகர்ந்தாள்...

காரின் பின் கதவை திறந்து கொண்டு இறங்கிய ஸ்ரீராமை கண்டு அவளது விழிகள் ஆச்சரியமும் , திகைப்புமாய் விரிந்தது... நீண்ட நெடிய வருடங்களுக்குப் பிறகு அவனைப் பார்த்த சந்தோசத்தில் அவளது விழிகள் இரண்டும் கலங்கி போய்விட்டது...

"ஹாய் சீதா..." வைரங்களாய் பளபளத்த அவளது விழிகளைப் பார்த்தபடி கேட்ட ஸ்ரீராமின் விழிகள் இரண்டும் பனித்தது , அவளது அன்பை நினைத்து...

"இது தான் நீங்க சொன்ன சர்ப்ரைசா... ?" அழுகையும் , சந்தோசத்தையும் உள்ளடக்கிய குரலில் கேட்டவளை

அணைத்துக் கொள்ளச் சொல்லி அவனது கைகள் இரண்டும் பரபரத்தது... கஷ்டப்பட்டுத் தன்னைக் கட்டுப்படுத்திக் கொண்டவனாக ,

"உன்னை எப்படித் தனியா விடுவேன் சீதா... ?" என்றவனது விழிகள் கூறிய காதலில் அவள் வாயடைத்து போனாள்...

"பேசிக்கிட்டு இருக்க நேரமில்லை... பசங்க , சூட்கேசை கொடு..." என்றவன் அவள் கையிலிருந்த பெட்டியை வாங்க முயலும் போது ஓட்டுநர் வந்து அவற்றை எல்லாம் வாங்கிக் காரின் பின்னால் வைத்தார்...

"ஏறு சீதா..." அவன் அவள் ஏறுவதற்கு ஏதுவாகக் கார் கதவை திறந்துவிட்டான்...

"நீங்க எதுக்கு... ?" அவனது உயரம் தெரிந்திருந்தவளின் விழிகளில் காதல் வருவதற்குப் பதில் கலக்கம் வந்து தொற்றிக் கொண்டது...

"உனக்கு நான் செய்யாது வேறு யார் செய்வா... ?" ஒற்றைப் புருவத்தைத் தூக்கியபடி வசீகரமாய்ப் புன்னகைத்தவனைக் கண்டு அவளது மனதிலும் மயக்கம் எழுந்தது...

பதில் பேசாது தலையைக் குனிந்து கொண்டு காரிலேறி அமர்ந்து கொண்டாள்... அவன் புன்சிரிப்புடன் அவள் அருகில் ஏறியமர்ந்தான்... கார் இரயில் நிலையத்தை நோக்கி புறப்பட்டது... ஓட்டுநர் இருந்ததால் அவன் அவளிடம் எதுவும் பேசவில்லை... வெளியில் வேடிக்கை பார்த்தபடி வந்தான்... அவள் தான் அவனைப் பார்ப்பதும் பின்பு தலையைக் குனிவதுமாய் வந்தாள்... அதைப் பார்த்தும் பாராது அவன் அமர்ந்திருந்தான்...

இரயிலில் முதல் வகுப்புத் தனிப் பெட்டியில் அவளை அமர வைத்தவனாக , " கொஞ்சம் இரு சீதா... இதோ வந்துர்றேன்..." என்றபடி நகர முயல...

"சீக்கிரம் வந்திருங்கோ..." என்று அவள் பயத்தில் அவனது கையைப் பற்றினாள்...

தனது கரத்தை பற்றியிருந்த அவளது கரத்தினைப் பார்த்தவன் புன்சிரிப்புடன் அவளது கை மீது தனது கையை வைத்தபடி , " நான் கீழே இறங்கலை... டிரைவர் கிட்ட சொல்லி தண்ணி பாட்டில் வாங்கிட்டு வர சொல்லத்தான் போறேன்..." என்று கூற...

"நானும் வர்றேன்..." என்றவள் அவனுடன் இணைந்து வந்து வாயிலில் நின்று கொண்டாள்...

ஓட்டுநர் அவன் கேட்ட எல்லாப் பொருட்களையும் வாங்கிக் கொண்டு வந்து கொடுத்ததும் இரயிலும் கிளம்பியது... சீதா ஜன்னலோரமாய் அமர... அவன் அவளைப் பார்த்தபடி எதிரில் அமர்ந்தான்...

"முன்ன இருந்ததுக்கு ரொம்ப மெலிஞ்சிட்டியே சீதா..." அவனது குரலில் அக்கறை வழிந்தது...

அவள் மனதிற்குள் போராடி போராடி களைத்து போவது அவளுக்கு மட்டும் தானே தெரியும்... அதனால் பதில் பேசாது இதழ்களைக் கடித்தபடி அமைதியாக இருந்தாள்...

"நான் உன்னை ரொம்பப் படுத்துறேனோ... ?"

"ஐயோ அப்படி எல்லாம் இல்லை..." அவள் அவசரமாய் மறுத்தாள்...

"உனக்கு என்னை எத்தனை வருசமா தெரியும்... ?"

"ஐஞ்சு வருசமா..."

"ஆனா எனக்கு உன்னை எட்டு வருசமா தெரியும் சீதா... அப்போ நீ ஸ்கூல் படிச்சிட்டு இருந்த..." என்றவனது மனம் அந்தக் காலக் கட்டத்திற்கே சென்றது... அவனது முகத்தில் கனிவு படர்ந்தது...

அவளோ அவனது காதலை அறிந்து திகைத்து போய் அமர்ந்திருந்தாள்... அவளது திகைப்பை உணர்ந்தவனாய் அவன் அவளது விழிகளுக்குள் தனது விழிகளைக் கலந்தபடி தனது காதல் கதையைக் கூறலானான்... அதைக் கேட்க கேட்க அவளுள் திகைப்பு மறைந்து பிரமிப்புக்

கூடியது... இப்படியும் ஒருவனால் காதலிக்க முடியுமா ? என்று...

"என் கிட்ட என்ன இருக்குன்னு இப்படி மாஞ்சி மாஞ்சி காதலிக்கிறேள்... ?" அவளது குரலில் குற்றவுணர்வு எட்டிப்பார்த்தது...

"என்ன இல்லை உன்னிடம்... ?" காதலுடன் ஒலித்த அவனது குரல் அவளைப் பெரிதும் அசைத்துப் பார்த்தது...

அவள் சட்டென்று எழுந்து அவன் அருகில் சென்று அமர்ந்தவள் சிறிதும் யோசியாது அவனது கரத்தினைக் கட்டி கொண்டு அவனது தோளில் முகம் புதைத்து கொண்டாள்... அவளது செய்கையில் அவன் வாயடைத்து போய் அமர்ந்திருந்தான்... பின்பு தன்னைச் சுதாரித்துக் கொண்டவன் ,

"சீதா , இது நிஜம் தானா... ?" அவள் பதில் கூறாது தலையை மட்டும் ஆமென்பது போல் அசைத்தாள்...

"நீயும் என்னைக் காதலிக்கிறியா... ?"

"தெரியலை... ஆனா உங்களுடைய காதலை இழக்க நேக்கு மனசு வரலை... காலம் முழுசும் உங்க கூடவே இருக்கணும்ன்னு தோணுது... உங்க மடியில் செத்து போயிரணும்ன்னு தோணுது..."

"என் சீதா..." என்று அவளைக் காதலோடு அணைத்து கொண்டவன் குனிந்து அவளது காதோரமாய் ,

"இதுக்குப் பெயர் தான் காதல் , சீதா..." என்க...

"நேக்கு அதெல்லாம் தெரியாது... இதுக்குப் பிறகு வேறு யாரையும் கல்யாணம் பண்ண நேக்கு தோணலை... வாழ்வோ , சாவோ அது உங்களோடு மட்டும் தான்..." அவன் பதில் பேசாது மனநிறைவுடன் அவளை அணைத்துக் கொண்டான்...

"நம்ம காதலோடு பட்டு விசயத்தைப் போட்டுக் குழப்பிக்கக் கூடாது சீதா... என்ன நடந்தாலும் நான் உன் கூட

இருப்பேன்... அது போல் நீயும் என் கூட இருக்கணும்..."

"நிச்சயமா..." என்றவளின் கரத்தோடு கரம் கோர்த்து கொண்டவன் ,

"உனக்கோ , நம் காதலுக்கோ எந்தக் களங்கமும் வர விட மாட்டேன் சீதா..." அவன் உறுதியாய்க் கூறினான்...

"தெரியும்ன்னா..." கணவனை அழைக்கும் பிரத்யேக வார்த்தையைக் கொண்டு அவனை அழைத்தவள் வெட்கம் தாங்காது அவனது தோளில் முகம் புதைத்து கொண்டாள்...

அவளது வார்த்தையில் அவன் சந்தோச வானில் சுகமாய்ச் சிறகடித்தான்...

"நான் ஏன் ஃப்ளைட்டை சூஸ் பண்ணாம ட்ரையினைச் சூஸ் பண்ணினேன் தெரியுமா... ?" அவள் அவனைப் புரியாது பார்க்க...

"இந்த மாதிரி பிரைவேசி அதில் கிடைக்காது... அப்புறம் , உன் கூட இருக்கும் நேரத்தை நீட்டிக்க விரும்பினேன்..."

அவனது காதலின் ஆழத்தில் அவள் இன்பமாய் மூழ்கி போனாள்... சென்னை சென்றடையும் வரை இருவரும் ஏதேதோ பேசி கொண்டு வந்தனர்... என்ன பேசினார்கள் ? என்று கேட்டால் அது அவர்களுக்கே தெரியாது...

சென்னை வந்ததும் சீதா கலக்கத்துடன் ஸ்ரீராமை பார்த்தாள்... இனி அவள் அவனை எப்போதா , எப்படிக் காண்பதா ? என்று அவளுக்கு வருத்தமாக இருந்தது... அவளது கலக்கத்தை உணர்ந்தவனாய் அவன் ,

"அதுக்கு எல்லாம் வேறு ஒரு ஐடியா வச்சியிருக்கேன்... நீ ஒண்ணும் கவலைப்படாதே..." என்று அவளைப் புன்னகை முகமாய்த் தேற்றினான்...

"நேக்கு உங்க மேல் நம்பிக்கை இருக்கு..."

"தட்ஸ் குட்..."

இருவரும் பேசியபடி இரயில் நிலையத்தை விட்டு வெளியில் வந்தனர்... அங்கு ஸ்ரீராமின் காருக்குப் பக்கத்தில் தனது காரை நிறுத்திவிட்டு அவர்களின் வரவுக்காகக் காத்திருந்தான் விஷ்ணுபிரஹான்... அவனைக் கண்டதும் ஸ்ரீராம் உள்ளுக்குள் அதிர்ந்தாலும் வெளியில் எதுவும் காட்டி கொள்ளவில்லை... சீதா அச்சத்துடன் சகோதரனை பார்த்தபடி வந்தாள்... அவளது அச்சத்தை உணர்ந்த ஸ்ரீராம் அவளது கையை இறுக பற்றிக் கொண்டான்...

"ஹாய் மச்சான்... வெல்கம் டூ சென்னை..." வேண்டுமென்றே ஆர்ப்பாட்டமாய் வரவேற்றான் விஷ்ணுபிரஹான்... அதைக் கண்டு கொள்ளாதா ,

"பிசினஸ் மேக்னட்டுக்கு ரெயில்வே ஸ்டேசனில் என்ன வேலை... ?" ஸ்ரீராம் புன்னகை மாறாது கேட்க...

"என் தங்கையைக் கூட்டிட்டு போக வந்தேன்..."

"அப்படியா... ? யார் சொன்னது... ? உன் அம்மாவா ? இல்லை உன் அப்பாவா ?" ஸ்ரீராம் இடக்கான குரலில் கேட்க...

அதைக் கேட்டு விஷ்ணுபிரஹானின் விழிகள் இடுங்கியது...

"என் சீதாவை கூட்டிட்டு வர வேண்டிய பொறுப்பை என் கிட்ட தான் கொடுத்திருக்காங்க..." ஸ்ரீராம் வேண்டுமென்றே ' என் சீதா ' என்று அழுத்தி உச்சரித்தான்... விஷ்ணுபிரஹான் கடுப்புடன் அவனைப் பார்த்து முறைத்தான்...

"என் தங்கை விசயத்தில் விளையாடாதே ஸ்ரீராம்..."

"நீ என் தங்கை விசயத்தில் விளையாண்டது போலவா... ?" ஸ்ரீராமின் சூடான வார்த்தைகளுக்கு விஷ்ணுபிரஹானிடம் பதிலில்லை...

"நான் உன்னைப் போல் கோழையில்லை... என் காதலி , என் மனைவி எல்லாமே என் சீதா மட்டும் தான்..." என்று சீதாவை தோளோடு அணைத்தபடி உறுதியான குரலில் கூறியவன் ,

"எங்களுக்கு மட்டுமல்ல... உன் குடும்பத்துக்கும் நீ அந்நியன் தான்... புரிஞ்சதா... ?" விஷ்ணுபிரஹானை பார்த்து கூறிய ஸ்ரீராம் சீதா புறம் திரும்பி ,

"நீ வா சீதா..." என்றபடி அவளது கைப்பற்றி அழைத்துச் செல்ல... அவள் தனது அண்ணனை திரும்பி திரும்பி பார்த்தபடி சென்றாள்...

விஷ்ணுபிரஹான் கையாலாகாதவனாய் கோபத்துடன் அவர்கள் செல்வதைப் பார்த்தபடி நின்றிருந்தான்...!!!

திருத்தமாகும்...!!!

இரண்டு அடிகள் மட்டுமே எடுத்து வைத்திருப்பாள் சீதா... அதற்குள் அவள் இரண்டாயிரம் தடவை மனக்கலக்கத்திற்கு உள்ளானாள்... சகோதரனுக்கும் , அவளது பெற்றோருக்கும் இடையில் ஆயிரம் மனஸ்தாபம் இருந்த போதும் விஷ்ணுபிரஹான் அவளது அண்ணன் இல்லை என்றாகி விடுமா ? இல்லை அவன் சகோதரிகள் மீது கொண்ட பாசம் தான் இல்லை என்றாகி விடுமா ? அடுத்த நொடி சீதா ஸ்ரீராமின் கையை உதறிக் கொண்டு விஷ்ணுபிரஹானை நோக்கி ஓடி வந்தவள் ,

"அண்ணா..." என்று கதறியபடி அவனை அணைத்து கொண்டாள்...

ஸ்ரீராம் அவளின் இந்தச் செயலை சற்றும் எதிர்பார்க்கவில்லை என்றாலும் அதற்காக அவன் அவள் மீது கோபம் கொள்ளவில்லை... மாறாக அவன் புன்னகை முகத்துடன் அவர்களை நோக்கி வந்தான்... விஷ்ணுபிரஹான் தங்கையை அணைத்தபடி இறுமாப்பாய்

ஸ்ரீராமை பார்த்தான்... ஸ்ரீராமிற்கு அவனது கர்வம் புரிந்தாலும் தன்னவளின் நேசம் முன் அதெல்லாம் பெரிதாகத் தெரியவில்லை...

"சீதா , இப்போ நான் என்ன செய்யணும்ன்னு எதிர்பார்க்கிற... ? உங்க வீட்டினர் கிட்ட உன்னைப் பத்திரமா கூட்டிட்டு வர்றதா வாக்கு கொடுத்திருக்கிறேன்..." என்று அவன் அவளைப் பார்த்துத் தன்மையாகக் கேட்டான்...

"என்னால் எங்கண்ணாவை விட்டு கொடுக்க முடியாது..." என்று கண்களைக் கசக்கியவளை பரிவுடன் பார்த்தவன் ,

"அப்போ உங்கண்ணா கூடப் போறியா... ?" அதற்கு என்ன பதில் சொல்வது என்று தெரியாது விழித்தபடி அவள் அவனைப் பார்த்தாள்...

"சொல்லு சீதா..."

"நான்... அண்ணா..." அவள் திக்கி திணறினாள்... சகோதரனின் வரவை தந்தை விரும்ப மாட்டார் என்று அவளுக்கு நன்கு தெரியும்...

"உனக்காக நான் நம்ம வீட்டுக்கு வர்றேன் சீதா... நீ போய்க் காரிலேறு..." என்று விஷ்ணுபிரஹான் ஸ்ரீராமை பார்த்தபடி தங்கையிடம் கூறினான்... அவள் ஸ்ரீராமை கேள்வியாய் பார்க்க...

"உனக்கு எது விருப்பமோ அது செய் சீதா..."

"உங்களுக்கு என் மேல் கோபமில்லையே..." தவிப்புடன் வந்தது அவளது வார்த்தைகள்...

"ச்சே , ச்சே... நான் உன் மேல் கோபப்பட மாட்டேன் சீதா... பட்டு எனக்கு எப்படியோ அது போல் தானே உன் அண்ணனுக்கு நீயும்... நீ தாராளமா உன் அண்ணன் கூடப் போ..." என்று புன்னகை முகம் மாறாது கூறியவனைக் கண்டு நிம்மதியாய் புன்னகைத்தவள் அண்ணனது காரிலேறி அமர்ந்தாள்...

ஸ்ரீராமின் ஓட்டுநர் அவளது பை , பெட்டியை எடுத்து வந்து விஷ்ணுபிரஹானின் காரில் வைத்துவிட்டு ஒதுங்கி கொண்டார்...

விஷ்ணுபிரஹான் ஸ்ரீராமை யோசனையுடன் பார்த்துக் கொண்டிருந்தான்... அவனது புன்னகை முகம் இவனுக்குப் பெருத்த ஆச்சரியத்தைக் கொடுத்தது... அதிலும் ஸ்ரீராம் சீதாவிடம் கொஞ்சமும் முகம் சுளிக்காதே , கோபம் கொள்ளாது பேசியது கண்டு அவனுக்கு வியப்பாய் இருந்தது... இந்தளவிற்கு ஒருவன் காதலிக்க முடியுமா ? என்று அவனுக்குப் பிரமிப்பாய் இருந்தது... அதை விஷ்ணுபிரஹான் வார்த்தைகளில் கேட்கவும் செய்தான்...

"உனக்குமி , எனக்கும் தான் பிரச்சனை... சீதாவிடம் இல்லையே... அவள் என்ன தவறு செய்தாள்... ? ஒரு பாவமும் அறியாத அவளுக்குத் தண்டனை கொடுக்க நான் விரும்பவில்லை... உன்னைப் போல் நானில்லை..." அடிக்குரலில் சீறினான் ஸ்ரீராம்...

அதைக் கேட்டு விஷ்ணுபிரஹான் மந்தகாச புன்னகையைச் சிந்தினான்...

"இந்தத் தெளிவு உன்னை எங்கேயோ கொண்டு போகப் போகுது மச்சான்..." என்று கிண்டலாய் கூறியவனி ,

"இப்போ புரியுதா... ? காதலோட வலி என்னன்னு... ?" என்று இப்போது விஷ்ணுபிரஹான் சீறினான்...

விஷ்ணுபிரஹான் வார்த்தையில் ஸ்ரீராமின் முகம் கறுத்துப் போனது... அதைத் திருப்தியுடன் பார்த்த விஷ்ணுபிரஹான் அவன் அருகில் வந்தே ,

"நீ உண்மையில் என் தங்கையைக் காதலிப்பதாக இருந்தால் முறைப்படி வந்து பொண்ணு கேளு..." என்றவனை ஸ்ரீராம் நம்ப முடியாது பார்த்தான்...

"உன்னை விட நல்லவன் என் தங்கைக்கு வேறுயாரும் கிடைக்க மாட்டாங்க..." என்று அவன் சிரித்துக் கொண்டே ஸ்ரீராமை அணைத்துக் கொண்டான்... உண்மையில்

விஷ்ணுபிரஹான் வார்த்தையில் ஸ்ரீராம் சந்தோசித்துப் போனான்...

"ஆனா கல்யாணம் நடக்கும் வரை சீதாவை விட்டுக் கொஞ்சம் தள்ளியிரு..." என்று அவன் அண்ணனாய் அறிவுறுத்த...

"பார்க்கலாம்..." என்று புன்னகைத்த ஸ்ரீராம் ,

"அதே அறிவுரை தான் உனக்கும்... என் தங்கையிடம் இருந்து நீயும் தள்ளியிரு..." என்றான் புன்னகை மாறாது...

"உன் தங்கை வந்து உன்னிடம் புலம்பினாளா... ?" விஷ்ணுபிரஹான் கேள்வியாய் புருவத்தை உயர்த்தினான்...

"அந்தத் தைரியம் தானே உன்னை உன் இஷ்டத்துக்கு ஆட்டுவிக்கிறது... இல்லைன்னா... ?" என்ற ஸ்ரீராமின் விழிகள் கோபத்தில் சிவந்தது... புன்னகை முகம் மாறாது இருக்கும் ஸ்ரீராமையும் கோபம் கொள்ளச் செய்ய விஷ்ணுபிரஹானால் மட்டும் தான் முடியும்...

"எனக்கும் , உன் தங்கைக்கும் ஒரு கணக்கு மிச்சமிருக்கிறது... அதுக்கு விடை தெரிந்த பிறகு எனக்கும் , அவளுக்கும் எந்தச் சம்பந்தமும் இல்லை..." என்றவனை விழிகள் இடுங்க பார்த்தான் ஸ்ரீராம்...

"சில கணக்குகள் புதிராகவே போய்விடும் விஷ்ணு... உன்னைப் போல்..." நக்கலாய் பதில் கூறிய ஸ்ரீராம் அவனது பதிலை எதிர்பாராது காரின் மறுபக்கம் வந்து சீதா புறமிருந்த கண்ணாடியை தட்டினான்... அவள் கண்ணாடியை இறக்கியதும் ,

"பை சீதா... டேக் கேர்..." என்று விடைபெற... அவளிடம் இருந்து மெல்லிய தலையசைப்பே பதிலாகக் கிடைத்தது... அதைக் கண்டு ஸ்ரீராமின் உதடுகளில் தானாகப் புன்னகை வந்து ஒட்டி கொண்டது...

விஷ்ணுபிரஹான் காரிலேறி அதை விருட்டென்று கிளப்பிக் கொண்டு சென்றான்... அதைப் பார்த்தபடி நின்றிருந்தான் ஸ்ரீராம்... விஷ்ணுபிரஹான் ஆராதனாவை போட்டு படுத்தி எடுப்பது தெரிந்திருந்தும் அண்ணனான அவனால் ஒன்றும் செய்ய முடியாது கைகளைக் கட்டி கொண்டு வேடிக்கை மட்டுமே பார்க்க முடிகிறது...

"ஏன் பட்டு என் கைகளைக் கட்டி போட்டிருக்க... ? உன்னை வேண்டாம்ன்னு தூக்கி எறிஞ்சிட்டு போனவனுக்காக நீ ஏன் இத்தனை தூரம் மெனக்கெடுற... ?" வேதனையுடன் முணுமுணுத்தவன் தனது காரிலேறி அமர்ந்தான்... அடுத்த நொடி கார் அவனது வீடு நோக்கி புறப்பட்டுச் சென்றது...

சீதா அண்ணனை திரும்பி திரும்பி பார்த்தபடி வந்தாள்... விஷ்ணுபிரஹானோ இறுக்கமான முகத்துடன் காரை ஓட்டி கொண்டிருந்தான்... அவனது முகமே சொல்லாமல் சொல்லியது அவன் தீவிர யோசனையில் இருப்பதை...

"அண்ணா..." தங்கையின் அழைப்பில் அவளைத் திரும்பி பார்த்தவன் ,

"சொல்லு..." என்க...

"அவர் ரொம்ப நல்லவர்ண்ணா..."

"நான் என்ன அவனைக் கெட்டவன்னா சொன்னேன்... ?" என்றவன் லேசாகச் சிரித்தான்...

"அண்ணா..." சகோதரனின் புன்னகை அவளுக்கு மிகுந்த சந்தோசத்தைக் கொடுத்தது...

"ஸ்ரீராம் ரொம்ப நல்லவன்... உனக்குப் பொருத்தமானவன்... அவன் உனக்குக் கணவனா வர்றதில் எனக்குச் சந்தோசம் தான்... ஆனா அண்ணா கிட்ட கூட உன் காதலை மறைச்சிட்ட பார்த்தியா... ? அது தான் எனக்கு வருத்தமா இருக்கு... நான் என்ன காதலுக்கு எதிரியா சீதா... ?" அவனது கடைசி வரி மிகுந்த வருத்தத்துடன் வந்தது...

"நான் அவரைக் காதலிக்கலைண்ணா... அவர் தான்..." என்ற தங்கையை அவன் வியப்பாய் திரும்பி பார்த்தான்...

"அவர் எட்டு வருசமா என்னைக் காதலிக்கிறார்... இப்பவும் அவரை நான் காதலிக்கிறேனா ? இல்லையான்னு நேக்கு தெரியலை... ஆனா அவரை நேக்கு ரொம்பப் பிடிச்சிருக்குண்ணா..."

"பாருடா... அதனால சாரோட காதலை இழக்க விரும்பலையாக்கும்..." கிண்டலடித்தான் அண்ணன்...

அதைக் கேட்டுத் தங்கை நாணத்துடன் தலைகவிழ்ந்து கொண்டாள்... மனம் முழுவதும் மனங்கவர்ந்தவனின் பிம்பமே...

விஷ்ணுபிரஹானோ குழப்பத்துடன் தலையைக் கோதி கொண்டான்... ஸ்ரீராம் தனக்கு இழைத்த துரோகத்திற்குக் காரணம் சீதா மீதான அவனது காதல் தானோ... அதனால் தான் அன்று அவன் அப்படி நடந்து கொண்டானோ... அன்று நடந்ததை நினைத்து விஷ்ணுபிரஹானுக்கு மிகுந்த வேதனை இருந்த போதும் தங்கையின் காதலுக்காக அவன் ஸ்ரீராமை மன்னிக்கத் தயாராக இருந்தான்... அவனது வாழ்க்கையில் அவனது தந்தை மட்டும் விளையாடவில்லை... ஸ்ரீராமும் சேர்ந்து விளையாடி இருக்கிறான் என்பதை அவன் உணர்ந்து கொண்டான்...

ஏழு வருடங்களாக அவன் அனுபவித்து வரும் துன்பத்திற்கு அளவே இல்லை... அவன் எல்லாவற்றையும் விழுங்கி கொண்டு உயிரற்ற ஜடமாய் வாழ்ந்து கொண்டிருக்கிறான்... இந்த நொடி வரை அவனால் நடந்தது எதையும் மாற்ற முடியவில்லை... இதோ இந்தக் கணம் கூட அவன் இறந்த காலத்திற்கும் , நிகழ் காலத்திற்கும் பயணப்பட்டுப் பயணப்பட்டு மிகவும் களைப்புற்று இருக்கின்றான்... அந்தக் கணம் கோடை மழையாய் , பாலைவன ஊற்றாய் ஆராதனா அவனது மனக்கண்ணில் தோன்றினாள்... அதில் திடுக்கிட்டு போனவனாய் அவன் இயலாமையுடன் தனது கையை ஸ்டீயரிங் வீலில் குத்தி கொண்டான்...

வாழ்க்கையில் அவன் யாருக்கும் கடமைப்பட்டவன் இல்லை... ஆனால் ஆராதனாவின் அன்பிற்கு அவன் கடமைப்பட்டு இருக்கிறான்... அதை எப்படித் திருப்பிச் செலுத்துவது ? என்று இதோ இந்த நொடி வரை அவனுக்குத் தெரியவில்லை...

அன்பிற்கு மறுபெயர் தான் ஆராதனாவோ...!!!

வீடு வந்ததும் காரிலிருந்து இறங்கிய விஷ்ணுபிரஹான் தங்கையின் பயணப் பொதிகளைக் கைகளில் எடுத்துக் கொள்ள... அதைக் கண்டு மனம் பொறுக்காத தங்கையவள் ,

"அண்ணா என் கிட்ட கொடு..." என்க...

"பணம் , அந்தஸ்து மாறினாலும் நான் உனக்கு அதே அண்ணன் தான் சீதா..." என்றவன் அவளை அழைத்துக் கொண்டு வீட்டை நோக்கி நடந்தான்...

அழைப்பு மணி அடித்ததும் கதவை திறந்த சுந்தரி அங்கு நின்று கொண்டிருந்த மகனை கண்டு முதலில் திகைத்தவர் பின்பு விழி கலங்க ,

"விஷ்ணு..." என்றழைக்க...

"எப்படிம்மா இருக்கீங்க... ?" மகனுக்கும் கண்கள் கலங்கியது...

"அம்மா , நான் இங்கே இருக்கேன்... நான் உங்க கண்ணுக்கு தெரியலையா... ?" சீதா சலுகையுடன் சிணுங்க...

"அதெல்லாம் நேக்கு நன்னா கண்ணு தெரியுது... இப்போ நேக்கு என் பையன் தான் உசத்தி..." என்றவர் ,

"உள்ளே வா விஷ்ணு..." என்று மகனை அழைத்தார்...

உள்ளே வந்தவன் கையிலிருந்த பெட்டி , பைகளைக் கீழே வைத்துவிட்டு அன்னையை இறுக அணைத்துக் கொண்டான்...

"விஷ்ணு..." என்று சுந்தரி கதறி அழுதுவிட்டார்...

பேச்சுக் குரல்கள் கேட்டு அங்கு வந்த கனிஷ்கா தனது அண்ணனை கண்டு திகைத்து போனாள்... வெகுநாட்கள் கழித்து அவனை அங்குக் கண்டதும் அவளுக்குக் கண்களைக் கரித்துக் கொண்டு வந்தது... ஆனால் பெண்ணவளால் அவன் ஆராதனாவிற்குச் செய்த துரோகத்தை மன்னிக்க முடியவில்லை... அதனால் அவள் இறுக்கமான முகத்துடன் நின்றிருந்தாள்...

"டீ கனி... எப்படியிருக்கடி... ?" சீதாவின் குரலில் விஷ்ணுபிரஹான் கனிஷ்காவை திரும்பி பார்த்தான்...

"குட்டிம்மா..." அவன் பாசத்துடன் கடைக்குட்டி தங்கையை அழைக்க...

"ம்மா , என்னை யாரும் குட்டிம்மான்னு கூப்பிட வேண்டாம்ன்னு சொல்லுங்கோ..." கனிஷ்கா கோபத்துடன் முகத்தைத் திருப்பிக் கொண்டாள்... அதைக் கண்டு அவனுக்குச் சிரிப்பு வந்தது... அவள் அருகில் வந்தவன் ,

"குட்டிம்மா , அண்ணா கிட்ட என்ன கோபம்டா... ?" என்று வாஞ்சையுடன் கேட்க...

"ஏன்னு நோக்கு தெரியாதாண்ணா... ?" கூர்மையுடன் தன்னைப் பார்த்தவளை கண்டு அவன் புன்னகை மாறாது ,

"அது என் பெர்சனல் விசயம்..." என்றான் அழுத்தமான குரலில்...

"எது உன் பெர்சனல் விசயம்... ? ஒரு பொண்ணை ஏமாத்துறதா... ?"

"அப்படின்னு யாரும் உன் கிட்ட வந்து கம்ப்ளையிண்ட் கொடுத்தாங்களா... ?" அவனது வார்த்தையில் அவள் தான் திகைத்து நின்றாள்...

"நீ சின்னப் பொண்ணு குட்டிம்மா... சில விசயங்கள் உனக்குப் புரியாமல் இருப்பதே நல்லது..." எடுத்து

சொல்லிய அண்ணனை ஒரு பார்வை பார்த்தவள் ,

"நேக்கு ஒரு மண்ணும் புரிய வேண்டாம்... ஆனா ஒரு விசயம் மட்டும் நன்னா புரியுது... நீ மன்னிக்கு செஞ்ச துரோகத்தை என்னால் மன்னிக்க முடியாதுன்னு..."

"திரும்பத் திரும்ப அதையே சொல்லாத..." அவனுக்கும் எரிச்சல் வந்தது...

"இப்போ கூட உன்னால் அதை மறுக்க முடியலை பாரு... அப்போ நீ செஞ்சது தப்பு தானே... இதே துரோகம் உன்னோட தங்கைகளுக்கு நடக்கும் போது தான் உனக்கு அதோட வலி புரியும்... நீ பச்சை துரோகி... என் முகத்தில் விழிக்காதே..." என்று கத்தியவள் அறைக்குள் சென்று கதவை சாற்றிக் கொண்டாள்...

தங்கை கூறியது அனைத்தும் உண்மை தானே... அவன் ஆராதனாவிற்குச் செய்தது பச்சை துரோகம் தான்... இல்லையென்று கூறி அவன் தப்பித்துவிட முடியாது... இதுநாள் வரை அவன் யாருக்கும் கெடுதல் செய்ய நினைத்தது கூடக் கிடையாது... ஆராதனாவை தவிர... அவளுக்கு அவன் வில்லனே தான்...! தங்கையின் வார்த்தையில் அவன் அடிப்பட்டவனாய் மிகுந்த வலியுடன் நின்றிருந்தான்... அன்று வலி தெரியாதவன் தான்... ஆனால் இன்று மிகவும் வலிக்கிறதே...!

"அண்ணா..." , " விஷ்ணு..." சீதா மற்றும் அன்னையின் குரல்களில் தன்னுணர்வு பெற்றவன் தன்னைச் சாமாளித்துக் கொண்டான் ,

"அப்பா எப்படியிருக்கார்... ?" என்று கேட்க...

"ட்ரீட்மெண்ட் போயிக்கிட்டு இருக்கு..." என்ற அன்னையைப் பார்த்தான் ,

"வீட்டிலேயே டாக்டர் இருக்கும் போது உங்களுக்கு என்ன கவலை... ?" என்று குறும்புடன் கூற...

"ஆமா , ஆரு தான் ஆயுர்வேத ட்ரீட்மெண்ட்க , பிசியோதெரஃபிக்கு எல்லாம் ஏற்பாடு பண்ணியிருக்கிறாள்..." என்று கூறியவர் பெருமூச்சு விட...

ஆராதனாவை நினைத்து அவனது முகம் மட்டுமல்லாது மனமும் கனிந்தது... அவளது இந்தச் செயலிலேயே அவன் அவளது மனதினை புரிந்து கொண்டிருக்க வேண்டும்... ஏனோ அவனால் அதைப் புரிந்து கொள்ள முடியவில்லை... ஒருவேளை அவளது வாய்மொழியாக அவளது காதலை சொல்ல வேண்டும் என்று அவன் எதிர்பார்க்கிறானோ...! அவள் விசயத்தில் மட்டும் அவன் என்ன நினைக்கின்றான ? என்ன செய்கின்றான ? என்று எதுவுமே அவனுக்குப் புரியவில்லை... அவனது மனம் முழுவதும் குழப்பம் மட்டுமே...

"அப்பா அந்த ரூமிலா இருக்கிறார்... ?" என்று அவன் மற்றொரு அறையைச் சுட்டிக்காட்டி கேட்க...

"ஆமா விஷ்ணு..." சுந்தரி ஆமோதித்ததும் அவன் அந்த அறையை நோக்கி நடந்தான்...

"வேண்டாம் விஷ்ணு... அவருக்கு உன் மேலுள்ள கோபம் இன்னமும் போகலை..."

"பரவாயில்லைம்மா..." என்றவன் அறை கதவை திறந்து கொண்டு உள்ளே நுழைந்தான்... அவன் பின்னேயே சுந்தர , சீதா இருவரும் உள்ளே வந்தனர்...

படுத்த படுக்கையாய் இருக்கும் தந்தையின் மெலிந்த தோற்றம் அவனது கண்ணில் நீரை சுரக்க செய்தது... அவரது இந்த நிலைக்குக் காரணம் அவன் தானே... மெல்ல அவர் அருகில் சென்று அமர்ந்தவன் அவரது கையை எடுத்து மென்மையாக வருடி கொடுத்தான்...

"ப்பா..." தாயை தேடும் கன்றின் குரலை ஒத்திருந்தது அவனது குரல்...

எத்தனை மனஸ்தாபம் இருந்த போதும் வரம் வாங்கிப் பெற்ற மகனின் குரலை ராகவனால் மறக்க இயலுமோ...

மூடியிருந்த அவரது விழிகள் பட்டென்று திறந்து கொண்டது... மகனை கண்டதும் சந்தோசத்தில் விரிந்த அவரது விழிகள் அடுத்த நொடி யாரையோ பார்ப்பது போல் சாதாரணமாகப் பார்த்து வைத்தது... அதை அவனும் உணர்ந்தானோ என்னவோ பெருமூச்சு ஒன்றை வெளியிட்டான்...

"எப்படியிருக்கேள்ப்பா... ?" அதற்குப் பதில் பேசாது அவர் இருக்கவும் ,

"நான் என்ன தப்பு பண்ணினேன்னு எனக்கு ஏன் இந்தத் தண்டனை... ?" அவனது குரல் மனத்தாங்கலுடன் ஒலித்தது... அதற்கும் பதிலில்லை...

"நான் காதலிச்சது தப்பா... ? ஒரு வருசமா , ரெண்டு வருசமா... நினைவு தெரிஞ்ச நாளில் இருந்து மனதில் வேர் விட்டு ஆழமாய் முளைத்த காதல்... அந்தக் காதலை எப்படிப்பா நான் மறக்க முடியும்... ? அதைத் தவறுன்னு நினைச்சு நீங்க எனக்குப் பெரிய தண்டனை கொடுத்துட்டீங்கப்பா... மனசு ரொம்ப வலிக்குது... இப்போ என்னையும் வெறுத்து மேலும் மேலும் நீங்க எனக்குத் தண்டனை கொடுத்துட்டே போறீங்க... எப்போ தான் என் பக்க நியாயத்தைப் பத்தி யோசிக்கப் போறீங்க... ?" அவன் கோபமும , ஆதங்கமுமாய்ப் படபடத்து விட்டான்...

சுந்தரிக்கு மகனின் நிலையை நினைத்து வேதனையாக இருந்தது... ஸ்ரீராமின் காதலை உணர்ந்த சீதாவோ அண்ணனின் இடத்தில் ஸ்ரீராமை வைத்து பார்த்தவளுக்கு இப்போது அண்ணனின் வலி புரிவதாய்... அவள் தனது சகோதரனுக்காக மிகவும் வருந்தினாள்...

"ஆராதனா பக்கம் இருக்கும் நியாயத்தை அவன் என்னைக்குப் புரிஞ்சிக்கிறானோ... அப்போ தான் நான் அவனை மன்னிப்பேன்னு சொல்லிரு சுந்தரி..." ராகவன் திக்கி திணறி ஒருவழியாய் சொல்லி முடித்தார்...

"ஓஹோ... பெத்த பையனை விட அவள் தான் உங்களுக்கு முக்கியமா போயிட்டாளோ... ?" அவனுக்கும் கோபம்

வந்தது...

"பெண்பாவம் பொல்லாதது..." ராகவன் கூற...

"ஆண்பாவம் அதைவிடப் பொல்லாததுப்பா..." என்று வலியுடன் கூறியவனஂ ,

"எல்லாமே உங்க இஷ்டப்படி தான் நடக்கணும் இல்லையா... ? அப்போ தான் நான் நல்லவன்... இனி இந்த நல்லவனஂ , வல்லவன் பட்டம் எல்லாம் எனக்கு வேண்டாம்... இனியாவது என் விருப்பத்துக்கு என்னை வாழ விடுங்க..." என்றவன் அறையை விட்டு வெளியில் வந்துவிட்டான்...

"ம்மஂா , இதை வச்சுக்கோங்க..." என்றவன் தனது பர்சில் இருந்து பணத்தை அள்ளி அன்னையின் கையில் திணித்தான்...

"பணம் எதுக்குடா விஷ்ணு... ? இருக்கிறது போதும்... நீ எங்க கூடச் சேர்ந்திருந்தா அதுவே போதும்டா..." தாயின் கண்கள் கலங்கியது...

"என் வாழ்க்கையைக் கடவுள் இப்படித்தான் விதிச்சு வச்சியிருக்கார்ம்மா... என்னைப் பத்தி கவலைப்படாம இருங்க... நான் வர்றேன்..." என்றவன் கிளம்ப ஆயத்தமானான்...

"விஷ்ணஂு , வர்ற இருபத்தினாலாம் தேதி வைதேகிக்கு வளைகாப்பு வச்சிருக்கோம்... இரண்டாவது குழந்தைங்கிறதால வீட்டோட தான் வச்சியிருக்கு... நீயும் வந்திருடா... நீ வரலைன்னா சம்பந்தியம்மா ஏனஂ , எதுக்குன்னு கேள்வி கேட்பா... உன் விசயம் நம்ம சொந்தக்காரா யாருக்கும் தெரியாது..."

"மஂ , சரி வந்திர்றேன்..." என்றவன் பின்பு ஞாபகம் வந்தவனாயஂ ,

"ஆராதனா வர்றாளா... ?" என்று ஆர்வமாய்க் கேட்டான்... அவனுக்கே அவனது ஆர்வம் எதனால் என்று

புரியவில்லை...

"ஆமா விஷ்ணு... கூடக் கூட்டிட்டு போகணும்... இல்லைன்னா அதுக்கும் கேள்வி வரும்..."

"அப்போ சரி..." என்றவன் முகத்தில் சந்தோசம் தாண்டவமாடியது... அவன் உற்சாகத்துடன் அன்னையிடமும் , தங்கையிடமும் விடைபெற்றுக் கொண்டு வெளியில் வந்தான்...

காரை கிளப்பியவன் முகத்தில் அத்தனை மகிழ்ச்சி... முன்னாலிருந்த கண்ணாடியில் தனது பிம்பத்தினைப் பார்த்து தலையைக் கோதி கொண்டவன் ,

"வைதேகி வீட்டில் நீ என்னை எப்படி அவாய்ட் பண்றேன்னு நானும் பார்க்கிறேன் பேபி..." எதிரில் ஆராதனா இருப்பது போல் அவன் கண்சிமிட்டி புன்னகைத்தான்...

****

ஸ்ரீராம் வீட்டினுள் நுழைந்ததும் குடும்ப உறுப்பினர்கள் அனைவரும் அவனை அணைத்து அன்பு பாராட்டினர்... அவனது தங்கை ஆராதனா மட்டும் அங்கே இல்லை... அவனது விழிகள் வந்ததும் அவளைத் தான் தேடியது...

"பட்டு எங்கே... ?"

"நேத்து லேட் நைட் எமெர்ஜென்சி கேஸ்ன்னு ஹாஸ்பிட்டல் போயிட்டு வந்து லேட்டா தான் தூங்க போனாள்..." அவந்திகா மகனிடம் பதில் கூறினாள்...

அன்னையிடமும் , தம்பியிடமும் சிறிது நேரம் பேசியிருந்து விட்டு எழுந்த ஸ்ரீராம் விழிகளால் தந்தையைத் தனியே அழைத்தான்... அலுவலக அறைக்கு வந்த தந்தையைச் சந்தோச மிகுதியில் அணைத்துக் கொண்டான் அவன்...

"தேங்க்ஸ்ப்பா... ரொம்ப ரொம்பத் தேங்க்ஸ்..." என்றவன் அர்ஜூனின் கன்னத்தில் முத்தமிட்டு உற்சாகமாய்க் கூச்சலிட்டான்...

"டேய் , சீதாவுக்குக் கொஞ்சம் மிச்சம் வச்சுக்கோ..." என்று கூறி அர்ஜூன் சிரிக்க...

அதைக் கேட்டு ஸ்ரீராம் முகத்தில் மெல்லிய வெட்கம் படர்ந்தது...

"என்னோட காதலை ஏத்துக்கிட்டதுக்கு ரொம்பத் தேங்க்ஸ்ப்பா... விஷ்ணுவோட தங்கை சீதான்னு தெரிஞ்சும் நீங்க ஓகே சொன்னது ரொம்பச் சந்தோசம்ப்பா..."

"விஷ்ணு பண்ணின தவறுக்கு அந்தச் சின்னப் பொண்ணு என்ன பாவம் பண்ணும் ஸ்ரீ... ? சீக்கிரமா சீதாவை கல்யாணம் பண்ணும் வழியைப் பார்... இப்பவே உன் அம்மாவோட புலம்பல் அதிகமாயிருக்கு... இப்போ நீ வேற இங்க வந்திட்ட... இனி தினமும் புலம்பி நம்மளை ஒரு வழி பண்ணிருவாள்..."

"அதுக்கு முன்னாடி பட்டுக் கல்யாணம் முடியட்டும்ப்பா..."

"சிவேஷ் அம்மா ஆடி மாசம் முடியட்டும்ன்னு சொல்றாங்க..."

"அதுவும் சரி தான்... நேரே கல்யாணத்துக்கு நாள் பார்த்திருங்க..." என்றவன் பின்பு யோசனையாய் ,

"விஷ்ணு எதுக்கு இப்ப எல்லாம் அடிக்கடி சிவேஷ் ஹாஸ்பிட்டலுக்கு வர்றான்... ?" என்று தந்தையிடம் கேட்டான்...

அர்ஜூனுக்குமே இது புதுச் செய்தி... ஏனெனில் சிவசுப்ரமணியம் விஷ்ணுபிரஹான் மருத்துவமனையில் ஒரு பங்குதாரர் என்கிற விசயத்தை அர்ஜூனிடம் இருந்து மறைத்துவிட்டார்...

"அப்படியா... ? அவன் பட்டு வழியில் குறுக்கிடாம ஒதுங்கி இருக்கான்னு நினைச்சது தப்பா போயிருச்சோ... ?"

"நீங்க பட்டுவை மட்டுமே பார்க்கிறீங்க... ஆனா நான் விஷ்ணுவை மட்டுமே கண்காணிக்க ஆள் போட்டிருக்கேன்... நிறைய விசயம் நமக்குத் தெரியாம

நடக்குது... பட்டு இது பத்தி உங்க கிட்ட எதுவும் சொல்லலையா... ?"

"ப்ச்... விஷ்ணு விசயத்தில் மட்டும் பட்டு எதுவுமே வாயை திறக்க மாட்டேங்கிறாள்..." அர்ஜூன் சலிப்புடன் கூற... தங்கை ஏன் இந்த விசயத்தைத் தங்களிடம் இருந்து மறைக்க வேண்டும் ? என்று அவனுக்குச் சுத்தமாய்ப் புரியவில்லை...

"நான் பட்டு கிட்ட பேசி பார்க்கிறேன்ப்பா..."

"நல்லது... அதைச் செய்..." என்றான் அர்ஜூன் நிம்மதியாக...

ஆராதனா கண் விழித்ததும் ஸ்ரீராம் அவளைத் தேடி சென்றான்... முகத்தைத் துடைத்தபடி குளியலறையில் இருந்து வெளியில் வந்த ஆராதனா எதிர்பாராது அங்கு அண்ணனை கண்டதும் மகிழ்ச்சியுடன் ,

"ஸ்ரீண்ணா..." என்றபடி ஓடிவந்து அவனைக் கட்டி கொண்டாள்...

"பட்டு..." என்று அவனும் வாஞ்சையுடன் அவளை அணைத்து கொண்டாள்...

"நீங்களும் என்னை விட்டுட்டு போயிட்டீங்கல்ல..." அவள் மனத்தாங்கலுடன் அவனிடம் கோபித்துக் கொள்ள...

"அப்படியெல்லாம் இல்லைடா... கொஞ்சம் வேலையிருந்தது... நான் எங்கே இருந்தாலும் என் நினைப்பு எல்லாம் என் பட்டுக்குட்டி மேல் தான்..."

தங்கையுடன் சிறிது நேரம் சாதாரணமாகப் பேசி கொண்டிருந்த ஸ்ரீராம் மெல்ல தான் பேச வேண்டிய விசயத்திற்கு வந்தான்...

"பட்டா , என் பிரெண்டோட ஹாஸ்பிட்டல் நல்ல விலைக்கு வருது... உனக்கு அதை வாங்கிக் கொடுக்கலாம்ன்னு இருக்கேன்... நீ இதைப் பத்தி என்ன நினைக்கிற... ?"

"நானா... ? வேண்டாம்ண்ணா..." என்று முனங்கினாள் அவள்...

"நம்ம கிட்ட இருக்கிற வசதிக்கு நீ இப்படி அடுத்தவங்க கிட்ட கை நீட்டி சம்பளம் வாங்கிறது சரியா வராது... நீ யுஎஸ்ல செட்டிலாகப் போறேன்னு நினைச்சு தான் நாங்க உனக்காக இங்கே ஒண்ணும் பண்ணாம இருந்தோம்... ஆனா இப்போ அதுக்கான சூழ்நிலை இல்லை... நீ இங்கே தான் இருக்கப் போற... பிறகு என்ன... ?" தந்தை கேட்ட அதே கேள்வியைச் சகோதரனும் கேட்டான்...

"எனக்கு அந்தளவுக்கு ப்ரீ மைண்ட் இல்லைண்ணா... இப்போதைக்கு எனக்கு நிம்மதி மட்டும் தான் தேவைப்படுது... ப்ளீஸ்..."

"ஓகே , அதுக்கு அப்புறம் உன் இஷ்டம்..." என்றவன் ,

"விஷ்ணு உனக்குத் தொந்தரவு கொடுக்கிறதா அப்பா , பரத் சொல்றாங்களே... உண்மையா... ?" என்று கூர்மையாகத் தங்கையைப் பார்த்தபடி கேட்க...

"அப்படி எல்லாம் இல்லைண்ணா..." என்று சமாளித்தவளை கண்டு ,

"இன்னும் நீ விஷ்ணுவை மறக்கலையா பட்டு... ?" என்று நேரடியாகப் பட்டென்று கேட்டான்... அண்ணனை அடிப்பட்ட வலியுடன் ஏறிட்டு பார்த்தவள் ,

"எப்படி மறக்க முடியும்ண்ணா... ?" என்று கேட்டவளின் விழிகள் கலங்கியது...

தங்கை கண் கலங்குவது கண்டு காண சகிக்காதவனாய் அவன் அவளைத் தாயின் வாஞ்சனையுடன் அணைத்துக் கொண்டான்... அவளின் இந்தத் துன்பத்திற்கு அவன் மட்டும் தானே காரணம்...

"உலகத்தில் அவன் மட்டும் தான் ஆண் கிடையாது பட்டு..."

"இருக்கலாம்... ஆனா என் மனசில் நுழைஞ்ச ஒரே ஆண் அவர் தானே..."

"அதுக்கான தகுதி அவனுக்கு இருக்கிறதா... ?" சற்று கோபத்துடன் உரத்து ஒலித்தது அவனது குரல்...

"அதுக்கான தகுதி எனக்கு இருக்குண்ணா..." என்றவளது பதிலில் அவன் தான் அயர்ந்து போனான்... எத்தனை அழகாய் தங்கை அவளது காதலை கௌரவித்து விட்டாள்... விஷ்ணுவை நினைத்துக் கொஞ்சம் பொறாமையாக இருந்தது அவனுக்கு...

' அப்படி என்னடா வசியம் பண்ணி வச்சிருக்க... ? சீதா என்னடான்னா அண்ணான்னு உருகுறா... இதோ என் தங்கை உனக்காகக் கரைகிறாள்... அந்த அர்ச்சனா பொண்ணு கூட உன்னை நம்புது... என்ன தான்டா நடக்குது இங்கே... ? நீ அந்த மாயக்கண்ணனே தான்... சந்தேகமே இல்லை... ' ஸ்ரீராம் மனதிற்குள் நினைத்துக் கொண்டான்...

"அப்போ காலம் முழுவதும் இப்படியே இருக்கப் போறியா... ?" அதற்கு அவளிடத்தில் இருந்து பதில் இல்லை...

"அப்பா , அம்மா , நானும் , பரத் யாருமே உன் கூடக் கடைசிவரை துணைக்கு வர முடியாது பட்டு... நீ பிராக்ட்டிக்கலா யோசிக்கணும்... உனக்குன்னு ஒரு துணை அவசியம்... உன்னைக் காலம் முழுவதும் பாதுகாப்பாய் பார்த்து கொள்ள..." அவன் தன்மையுடன் எடுத்து சொல்ல...

"அப்படி நம்பியவர் தானே என்னைப் பாதியில் விட்டு விட்டுப் போய்விட்டார்... இன்னொரு தடவை அடிபட என்னால் முடியாதுண்ணா... ப்ளீஸ் , நான் இப்படியே இருந்துட்டு போறேன்..." இருகரம் கூப்பிய தங்கையைக் கண்டு அவன் தான் பதறிப் போனான்...

"உன் இஷ்டம் பட்டு..." என்றவன் அவளது அறையை விட்டு வெளியேறி விட்டான்...

பலத்த யோசனையுடன் அமர்ந்திருந்த ஆராதனாவின் அலைப்பேசியில் மின்னஞ்சல் வந்ததற்கான ஒலி கேட்டது... எடுத்து பார்த்தவள் அந்த மின்னஞ்சலை கண்டதும் கோபம் பொத்துக் கொண்டு வந்தது... அடுத்த நொடி தாமதிக்காது

விஷ்ணுபிரஹானுக்கு அழைத்தாள்... அவன் எடுத்ததும் அவள் பொரிந்து தள்ளிவிட்டாள்...

"நான் உங்க கிட்ட கேட்டேனா... ? எதுக்கு என்னை இப்படி டார்ச்சர் பண்றேள்... ?"

"நீ கேட்கலைன்னாலும் அனுப்ப வேண்டியது என் கடமை ஆராதனா..." ஆழ்ந்து ஒலித்த அவனது குரலில் , அவனது ஆராதனா என்றழைப்பில் அவள் மெதுவே நிதானத்திற்கு வந்தாள்...

"நேக்கு எதுவும் வேண்டாம்... நீங்க உட்பட... ஆளை விட்டால் போதும்..." என்ன முயன்றும் அவளது மனதின் துக்கம் அவளது வார்த்தைகளில் வெளிப்பட்டது... அதை அவனும் உணர்ந்தானோ என்னமோ... சிறிது நேரம் அமைதியாக இருந்தவன் ,

"எப்படி விட முடியும்... ? இராத்திரி , பகல்ன்னு நீ என்னைப் படுத்தி எடுத்துட்டு இருக்க... அது உனக்குத் தெரியுமா... ? உன் மனசில் என்ன இருக்குன்னு நான் பைத்தியக்காரன் மாதிரி ஒவ்வொரு நொடியும் யோசிச்சுக்கிட்டு இருக்கேன்... இதுக்கு எல்லாம் பதில் தெரிஞ்சா தானே நான் உன்னை விட முடியும்..."

அவனது வார்த்தைகளில் இருந்த உணர்வுகளை அவளால் புரிந்து கொள்ள முடியவில்லை... அதற்கு அவள் முயற்சிக்கவும் இல்லை... ஏனெனில் அவள் அடைந்த வேதனை , வலி அப்படிப்பட்டது...

"சரி , தெரிஞ்சு என்ன செய்யப் போறேள்... ?" கோபத்தைக் கட்டுப்படுத்திக் கொண்டு அவள் கேட்க...

"தெரிந்தால்... ?" யோசனையுடன் தன் பிரெஞ்சு ஃபியரை தடவியவன் ,

"கொஞ்சம் சந்தோசப்படுவேன்..." என்றான் சிரியாது...

"சாடிஸ்ட்... இப்போ சொல்றேன் நன்னா கேட்டுக்கோங்க... நீங்க என்னை விட்டு விலகி போறேன்னு சொன்னப்போ

நானும் சரின்னு ஒத்துக்கிட்டதுக்குக் காரணம் நேக்கும் உங்க மேல் எந்த இன்ட்ரஸ்ட்டும் இல்லைங்கிறதால தான்... போதுமா... ?" என்று அவள் படபடக்க...

"போதாதே பேபி..." என்றான் அவன் நமட்டு சிரிப்புடன்...

"எனக்குப் போதும்... ஃபோனை வைங்கோ..."

"நீ நிரூபி... நான் நம்பறேன்..."

"எதை... ?"

"என் மேல் எந்த இன்ட்ரெஸ்ட்டும் இல்லைன்னு..." அவன் கூறியதை கேட்டு அவள் கோபத்துடன் அழைப்பை துண்டித்தாள்...

அவனோ அவள் பேசியதை எண்ணி எண்ணி சந்தோசப்பட்டுக் கொண்டிருந்தான்... இப்போதிருந்தே அவன் தங்கையின் வளைகாப்பு நிகழ்ச்சியை ஆவலுடன் எதிர்பார்த்துக் காத்திருக்க ஆரம்பித்தான்...

திருத்தமாகும்...!!!

கனிஷ்கா வழக்கம் போல் பரபரப்புடன் அலுவலகத்திற்குள் நுழைந்தாள். வரவேற்பில் இருந்த பெண் அவளது வருகையை உணர்ந்து நிமிர்ந்து பார்த்துப் புன்னகை சிந்தியவள் ,

"மேம் , உங்களை மெயின் ப்ரான்ச்சுக்கு வர சொன்னாங்க..." என்க...

"என்னையவா... ?" கனிஷ்கா குழப்பத்துடன் அவளைப் பார்த்து கேட்டாள்.

"எஸ் மேம் , உங்களைத் தான்..."

"எதுக்குன்னு தெரியுமா ?"

"தெரியலை... சாரோட உத்தரவு..."

பரத்தின் உத்தரவு என்றதும் அவளது உள்ளம் திடுக்கிட்டுப் போனது. அன்று தான் அவனிடம் பேசியதற்குக் கூப்பிட்டு வைத்து திட்ட போகிறானோ ? என்று அவளுக்குப் பயமாக இருந்தது... அவள் மனதினை திடப்படுத்திக் கொண்டு பரத் இருக்கும் அலுவலகத்திற்குச் செல்வதற்காக வெளியில் வந்தவள் ஷேர் ஆட்டோ ஒன்றை பிடித்துச் சென்றாள்.

அடுத்த அரைமணி நேரத்தில் பிரதான அலுவலக வாயிலின் முன் வந்து நின்ற கனிஷ்கா அதை அண்ணாந்து ஆவெனப் பார்த்தாள். அந்தக் கட்டிடம் பல மாடிகளை உள்ளடக்கியதாய்ப் பிரம்மாண்டமாக இருந்தது. அதன் பிரம்மாண்டத்தில் அவளுக்கு மீண்டும் அச்சம் வந்து தொற்றிக் கொண்டது. தயங்கி தயங்கி உள்ளே வந்தவளை அட்டகாசமான சிரிப்புடன் பரத் அவளை எதிர்கொண்டான்.

"வா , வா கனி... உன்னைத் தான் எதிர்பார்த்துட்டு இருந்தேன்..." என்றவன் அவளது கையைப் பிடிக்க வந்தான். அவனது முயற்சி தெரிந்து அவள் சட்டென்று ஒதுங்கி நின்றாள். அதைக் கண்டு அவனது விழிகள் இடுங்கினாலும் அவனது புன்னகை மாறவில்லை.

"போகலாமா மேடம் ?" என்று கேலி போல் அவளைப் பார்த்து கேட்டவன் தனது இரு கைகளையும் பாதையை நோக்கி பணிவாக நீட்டியபடி நின்றான்.

' ஏன் இப்படி எல்லாம் பண்றார் ? பகவானே! நேக்கு ஒண்ணும் புரியலையே ? ஏதோ ஒண்ணு சரியில்லைன்னு படுது. அது என்னதுன்னு தான் தெரியலை. ' அவள் மனதிற்குள் பயந்தபடி நடக்க... அவனும் அவளுடன் இணைந்து நடந்தான்.

கம்பீரமான அழகுடன் பரத் தன்னுடன் இணைந்து நடப்பதை கண்டவளுக்கு அவன் தன் வாழ்க்கை முழுவதும் இப்படி உடன் வர மாட்டானா ? என்று ஏக்கமாக இருந்தது... அவளுக்கு ஆசை கொண்ட தனது மனதை அடக்குவது மிகவும் கஷ்டமாக இருந்தது. அது தானே அவனுக்கும் வேண்டும். அதை அறியாத பேதை பெண்ணாக அவள் அவனுடன் நடந்தாள்.

அறைக்குள் நுழைந்த பரத் அங்கிருந்த நாற்காலியை சுட்டிக்காட்டி , " உட்கார்..." என்க... அவள் அமர்ந்ததும் அவன் மேசையைச் சுற்றி சென்று தனது நாற்காலியில் அமர்ந்தான். அவனது பார்வை அவளை அழுத்தமாய்ப் பார்த்து வைத்தது.

கருப்பு நிற குர்தியும் , நீல நிற ஜீன்சும் அணிந்தா , தலைமுடியை தூக்கி குதிரைவால் போட்டிருந்தவளின் அழகு ஆளை அசத்துவதாக இருந்தது. அவனது பார்வையில் அவளது உள்ளம் குறுகுறுத்த போதும் அதை அவள் வெளியில் காட்டி கொள்ளாது அமைதியாக இருந்தாள்.

"உன்னை ஏன் இங்கே வரவழைச்சேன்னு உனக்குத் தெரியுமா ?"

"ம்ஹூம்..." இடமும் வலமுமாகத் தலையாட்டியவளின் அழகில் அவன் ஒரு கணம் தன்னை மறந்தான். பின் தன்னைச் சுதாரித்துக் கொண்டா ,

"எனக்குப் பிஏவா உன்னை அப்பாயிண்ட்மென்ட் பண்ணியிருக்கேன்..." என்க...

"நான் செகரட்டரியல் கோர்ஸ் படிக்கலை. நான் படிச்சது சிவில் என்ஜினியரிங்." அவள் சற்று தயக்கத்துடன் கூறினாள்.

"அது எனக்குத் தெரியாதா ? இந்தக் காலத்தில் யார் படிச்ச படிப்புக்கு ஏத்த மாதிரி வேலை பார்க்கிறாங்க ?" அவன் ஒற்றைப் புருவத்தைக் கேலியாகத் தூக்கினான்.

"தெரியாத வேலை..." அவள் இழுக்கும் போதே...

"உனக்கு வேலை வேணுமா ? வேண்டாமா ?" அவனது குரல் கோபமாய் இடையிட்டது... முதலாளியின் பாவத்தில் ஓங்கி ஒலித்த அவனது குரலில் அவள் சட்டென்று அமைதியாகி போனாள்.

"வேணும்..." தலைகுனிந்து கொண்டு மெல்லிய குரலில் கூறியவளை கண்டு அவன் சிறு சிரிப்புடன் நிம்மதியாக நாற்காலியில் சாய்ந்து அமர்ந்தான்.

"அப்போ நான் சொல்றதை செய்..." என்றான் அமர்த்தலான குரலில்...

"மं , ம்..." அவனது கூற்றுக்கு அவள் தலையாட்டுவதைத் தவிர அவளுக்கும் வேறுவழி தெரியவில்லை...

"இந்தா... இதில் இருப்பதை டைப் பண்ணி கொண்டு வந்து கொடு..." என்றவன் அவளிடம் ஒரு காகித கற்றைகளைத் தூக்கி கொடுத்தான். அவள் விழித்தபடி அதை வாங்கிக் கொண்டாள். அவள் இன்னமும் எழாமல் இருப்பதைக் கண்டு அவனं ,

"அங்கே இருக்கும் மேசை உனக்கானது தான்... போய் வேலையைப் பார்..." என்று கூற...

கனிஷ்கா தன்னுடைய இருப்பிடத்திற்கு வந்து மேசை மீதிருந்த கணினியை உயிர்ப்பித்தாள். கணினியில் அவள் தனது படிப்பு சம்பந்தமான கணினி படிப்பு மட்டுமே

படித்திருக்கிறாள். மற்றது எல்லாம் அவளுக்குத் தெரியாது. உயிர்ப்பித்திருந்த கணினி திரையை உற்று நோக்கியபடி அவள் என்ன செய்வது ? என்று தெரியாது திருதிருவென விழித்தபடி அமர்ந்திருந்தாள்.

பரத்தோ அவளது நினைப்பின்றித் தனது வேலையில் மூழ்கி இருந்தான். இன்னும் கொஞ்ச நாட்களுக்குச் சுப்ரஜா இங்கு வர மாட்டாள். அவளைப் பணி நிமித்தமாக வட இந்தியாவிற்கு அனுப்பி வைத்தாயிற்று. ஸ்ரீராமும் வேறு அலுவலகத்திற்குத் தான் செல்லவிருக்கிறான். இங்கு வர போவதில்லை. அதனால் தான் பரத் தைரியமாகக் கனிஷ்காவை இங்கு வரவழைத்தது.

சுமார் அரை மணி நேரம் கழித்துக் கனிஷ்காவை நிமிர்ந்து பார்த்த பரத் அவள் திருதிருவென விழித்துக் கொண்டிருப்பதைக் கண்டு எழுந்து அவளை நோக்கி வந்தான். அவன் வருவதைக் கூட உணராது அவள் பெருத்த யோசனையுடன் அமர்ந்திருந்தாள்.

"மிஸ். கனிஷ்கா..."

அவள் பின்னால் நின்று கொண்டு அவன் குரல் கொடுக்க... அவள் பயத்தில் அடித்துப் பிடித்துக் கொண்டு எழுந்தாள். அப்போது அவள் அமர்ந்திருந்த சக்கரம் வைத்த நாற்காலி பின்னால் செல்ல... இவள் பிடிமானம் இல்லாது தவறி விழ போனாள். பரத் அவளை இடையோடு பிடித்துத் தூக்கி நிறுத்தினான். அவனது செயலில் அவளுக்குத் தான் படபடவென வந்தது. அவனோ நிதானமாக அவளது முகத்தை அளவிட்டான். முகம் சிவக்க நின்றிருந்தவளை கண்டு அவனுக்கு உல்லாசமாய் விசிலடிக்க வேண்டும் போலிருந்தது.

"வேலைய பார்க்காம என்ன பண்ற ?" அவன் தனது மனதினை மறைத்துக் கொண்டு அவளைப் பார்த்து அதட்டும் குரலில் கேட்டான்.

"நேக்கு... நேக்கு..."

"உனக்கு..." அவன் கேள்வியாய் அவளைப் பார்த்தான்.

"நேக்கு டைப்பிங் தெரியாது." என்றவளுக்கு அவமானத்தில் முகம் சிவந்து , கண்கள் கலங்கி போனது.

அவளது முகத்தையே பார்த்திருந்தவன் பின்பு என்ன நினைத்தானோ , " இதுக்கு முன்னாடி என்னோட பிஏவா இருந்தவங்க கிட்ட ஒரு மாசம் ட்ரெயினிங் எடுத்துக்கோ..." என்க...

"தேங்க்ஸ்..." என்று நன்றி கூறியவளை ஏற இறங்க பார்த்தவன் ,

"இனி இப்படி ஜீன்ஸ் போட்டுட்டு வர கூடாது." என்று அதிரடியாகக் கூற...

"ஏன் ? இது தான் நேக்கு வசதியா இருக்கு. உங்க இஷ்டத்துக்கு எல்லாம் என்னால் உடுத்திண்டு வர முடியாது." அவளது உடையைக் குறை கூறினால் அவளுக்குக் கோபம் வராது என்ன செய்யும் ? அவளது பயம் காணாமல் போக அவள் அடாவடியாய் அவனிடம் எகிறினாள்...

"எனக்கு வசதியா இல்லையே" என்று முனங்கியவன் சற்று முன் அவளை இடையோடு தாங்கி பிடித்ததை நினைத்துப் பார்த்தான்.

"என்னது ?"

"என்னோட பிஏக்குன்னு சில ரூல்ஸ் அன்ட் ரெகுலேஷன்ஸ் இருக்கு. அதில் ஒண்ணு புடவை கட்டுறது." என்று அவன் அதிகாரமாய் உத்தரவிட... அதில் அவளது கோபம் காணாமல் போக... அவள் தலையைப் பூம் பூம் மாடு போல் ஆட்டி வைத்தாள்.

வரவேற்பறை வரை வந்து புன்னகையுடன் தன்னை வரவேற்ற பரத்தா இவன் ? என்று அவள் குழப்பத்துடன் அவனைப் பார்த்தாள். அவனும் அவளைப் பார்த்தவன் பின்பு என்ன நினைத்தானோ ,

"உட்கார்ந்து இதைச் சரி செய்..."

பரத் அவளிடம் கட்டிட மாதிரிகள் சிலதை கொடுத்து சரி பார்க்க சொன்னான். அவள் அதை வாங்கிக் கொண்டு அமைதியாக அமர்ந்தாள். அவனும் தனது இடத்திற்குச் சென்று அமர்ந்தான்.

ஆணவன் திட்டம் அறியாது பெண்ணவள் அவன் விரித்த வலையில் வீழ்ந்து போனாளா் , அவளையும் அறியாது. ஒன்று அவள் தனது காதலை ஒத்துக் கொள்ள வேண்டும். இல்லை இருவரும் காதலிப்பதாக அனைவரையும் நம்ப வைத்து அவளைத் தனது ஆதிக்கத்தின் கீழ் கொண்டு வர வேண்டும் என்று அவன் நினைத்தான். இந்த நொடி வரை அவனுக்கு அவள் மீது எந்தவித காதலும் இல்லை... அவனையும் அறியாது அவன் மனதில் இருந்த அவள் மீதான சிறு ஈர்ப்பு கூட அவனது வன்மத்தின் பின்னால் மறைந்து போனது.

****

ஆராதனா வழக்கம் போல் மருத்துவமனைக்குக் கிளம்பி கொண்டிருந்தாள். இன்று வைதேகிக்கு வளைகாப்பு விழா... அதற்கு வரும்படி சுந்தரி அவளை வற்புறுத்தி அழைத்தார். ஆனால் அவள் தான் உறுதியாக மறுத்துவிட்டாள். அவர்களுக்காக ஒவ்வொன்றையும் பார்த்து பார்த்து செய்யும் ஆராதனா இதற்கு வர மறுப்பது கண்டு அவரும் ஒன்றும் கூறாது சரியென்று கூறிவிட்டார். அதற்குப் பின் வலுவான காரணம் இருக்கும் என்று அவர் நம்பினார்.

"ம்மா , ப்பா... வர்றேன்..." என்று பெற்றோரிடம் விடைபெற்றவள் தனது காரை கிளப்பிக் கொண்டு சென்றாள்.

அவளது வீடு இருக்கும் பகுதியில் இருந்து மூன்று தெரு தள்ளி அவளது காரின் குறுக்கே சென்று தனது காரை நிறுத்தினான் விஷ்ணுபிரஹான். ' இவன் எங்கே இங்கே ?' என்றபடி அவள் அவனைப் பார்த்தாள். தனது

காரிலிருந்து இறங்கி அவளது கார் அருகே வந்தவன் அவள் பக்கம் இருந்த கார் கண்ணாடியை இறக்கி விடச் சொன்னான். அவள் புரியாது அவனைப் பார்த்தபடி கார் கண்ணாடியை இறக்கி விட்டாள். அடுத்த நொடி அவன் உள்ளே கை நீட்டி கார் சாவியைத் தனது கையில் எடுத்துக் கொண்டான் ,

"கீழே இறங்கு..." என்று அதிகார குரலில் கூற... அவள் திகைப்புமன் , கோபமுமாய் அவனைப் பார்த்தாள்.

"எதுக்கு... ?" எரிச்சலுடன் ஒலித்தது அவளது குரல்...

"வைதேகி வளைகாப்புக்கு போகணும்... க்விக்..." என்று அவன் அவளை அவசரப்படுத்தினான்.

"நான் வரலைன்னு மாமி கிட்ட ஏற்கெனவே சொல்லிட்டேன்." அவள் இறங்காது அவனைப் பார்த்து கூறினாள்.

"இங்கே பார் ஆராதனா... தேவையில்லாம வைதேகி வாழ்க்கையில் பிரச்சனையை ஏற்படுத்தாதே." அவன் அடக்கப்பட்ட கோபத்துடன் பல்லை கடித்தான்.

"உங்களுக்கு உங்க தங்கை மட்டும் தான் முக்கியம்." என்றவளை புரியாது பார்த்தவனன் ,

"என்ன சொல்ற ?" என்று கேட்க...

அவனை நிமிர்ந்து பார்த்தவளின் இதழ்கள் அவனிடம் எதையோ கூற துடித்தது. விழிகள் கலங்கி சிவக்க அவள் அமைதியாகத் தனது பார்வையைத் திருப்பிக் கொண்டாள். அவளது விழி கலங்கியதை கண்டு அவனுக்குத் தான் என்னவோ போலானது. அவன் எத்தனையோ துன்பங்களை அவளுக்கு அளித்திருக்கிறான். அப்போது எல்லாம் அவள் கலங்கி அவன் பார்த்தது இல்லை. அவள் எல்லாவற்றையும் தைரியமாகத் தான் எதிர் கொண்டாள். இவ்வளவு ஏன் இப்போது அவனை அர்ச்சனாவுடன் பார்த்த போது கூட அவள் இது போல் கலங்கவில்லையே.

"என்ன காரணம்ன்னு சொல்லு பேபி ?" அவனது குரலில் கனிவு தோன்றியது.

"நேக்கு வர விருப்பம் இல்லை." என்றவளை கண்டா ,

"ப்ச்..." என்று சலித்துக் கொண்டவன் காரை சுற்றி வந்து மறுபக்கம் ஏறியமர்ந்தான். அவனது செய்கையில் அவள் திகைத்து விழித்தாள்.

"என்ன பிரச்சனை சொல்லா ?" அவனது குரல் தன்மையுடன் ஒலித்தது.

"முன்பு நடந்த பிரச்சனை என்னன்னு உங்களுக்குத் தெரியாதோ ?" அவள் கோபத்துடன் வெடித்தாள்.

"என்ன பிரச்சனை ? நீ சொல்ல வர்றது எனக்குச் சுத்தமாய்ப் புரியலை ?" உண்மையில் அவனுக்குப் பிரச்சனை என்னவென்று புரியவில்லை.

"புரியாது... உங்களுக்கு எதுவுமே புரியாது. உங்களுக்கு நீங்க நினைச்சதை சாதிக்கணும். அவ்வளவு தான்... யார் எக்கேடு கெட்டால் என்ன ?"

"இங்கே பார்... நீ சொல்லி எனக்குப் புரியலைன்னு சொன்னா கூடச் சரி... இப்படி மொட்டையா பேசினா எனக்கு எப்படிப் புரியும் ?" ஏனோ அவனால் பெண்ணவளிடத்தில் கோபப்பட முடியவில்லை.

"மன்னி ஹரிஷை உண்டாகி இருந்தப்போ நடந்த வளைகாப்பு விழாவில் ஏற்பட்ட பிரச்சனையை மறந்துண்டு நீங்க பேசறேள்"

அப்போது தான் அவனுக்கும் அது உறைத்தது. அவளது முகத்தைப் பார்க்க முடியாது தனது பார்வையை வேறு எங்கோ திருப்பியவன் ,

"இந்தத் தடவை அந்த மாதிரி எந்தப் பிரச்சனையும் வராம நான் பார்த்துக்கிறேன்."

"எப்படிப் பார்த்துக்க முடியும் ? அத்தனை பேர் இருக்கிற சபையில் வச்சு என்ன பேச போறேள் ? என்ன பார்க்க போறேள் ?" அவள் அழுகையை அடக்கி கொண்டு பதில் கூறினாள்.

"நீ வராம இருந்தால் உன் பிரச்சனை தீர்ந்துவிடும். ஆனா அங்கே வைதேகி வீட்டில் அவளுக்குப் பிரச்சனை ஆரம்பித்து விடும்."

' அதற்கு நானா காரணம் ? நீங்க தானே! ' என்று அவளது விழிகள் அவனைக் குற்றம் சாட்டியது. அது அவனுக்கும் புரிந்தது. ஆனால் பதில் தான் அவனிடத்தில் இல்லை. சிறிது நேரம் அமைதியாக இருந்தவன் பின்பு அவளைப் பார்த்த ,

"இப்போ என்ன தான் சொல்ல வர்ற ?" என்று முடிவாகக் கேட்க...

"என்னைய எதுக்குக் கூப்பிடறீங்க ? உங்க குழந்தைகளைச் சுமந்துக்கிட்டு உங்க மனைவியா ஒருத்தங்க உங்க வீட்டில் இருக்காங்களே. அவங்களைக் கூட்டிட்டு போங்க. அது தான் நல்லது. அது தான் முறையும் கூட. தயவுசெய்து என்னைய கூப்பிடாதீங்க. இது முறையில்லை." படபடவெனக் கோபமாய்ப் பொரிந்தவளை அவன் இறுக்கமான முகத்துடன் பார்த்தான்.

"நீ விரும்பினாலும் சர , விரும்பலைன்னாலும் சரி... நீ என்னுடன் வந்து தான் ஆகணும் ஆராதனா." என்றவன் கீழே இறங்கி அவளது காரின் சக்கரத்தில் இருந்த காற்றை நொடியில் இறக்கிவிட்டவன் , பின்பு மறுபக்கம் வந்து அவள் புறமிருந்து கதவை திறந்து அவளது கையைப் பிடித்து வெளியில் இழுத்தான். அவனது செய்கையைத் திகைப்புடன் பார்த்திருந்தவள் அவனது உடும்பு பிடியில் வேறுவழியின்றிக் கீழே இறங்கினாள்.

அவன் அவளது கார் சாவியைக் காரில் வைத்துவிட்ட , அவளது கைப்பையை எடுத்துக் கொண்டு அவளைத் தனது காரை நோக்கி தரதரவென இழுத்துச் சென்றான். அவனது

வலிமையில் அவளது பிடிவாதம் எடுபடாது போய்விட்டது. அவனது கார் கதவை திறந்து அவளை உள்ளே தள்ளியவன் தானும் மறுபக்கம் வந்து ஏறி காரை கிளப்பி இருந்தான். சாலையில் கவனம் வைத்திருந்தவன் அவளது கைப்பையை அவளிடம் கொடுத்தா ,

"உங்கப்பாவுக்கு ஃபோன் பண்ணி கார் பங்க்ச்சர் ஆகிருச்சு... ஆட்டோவில் ஹாஸ்பிட்டல் போறேன்னு சொல்லு... ஈவினிங்கும் ஆட்டோவில் வந்திருவேன்னு சொல்லு... இல்லைன்னா உங்கப்பன் , உன் நொண்ணன்ங்க உன்னைய தேடி ஹாஸ்பிட்டலுக்கு வந்துர போறாங்க."

அழகாய் திட்டமிட்டு கோர்வையாய் பொய் சொல்ல சொன்னவனை முறைத்துப் பார்த்தாலும் அவள் வேறுவழியின்றி அவன் சொன்னதைச் செய்துவிட்டு அமைதியாக வெளியில் வேடிக்கை பார்த்தாள். அவனும் அவளது மனம் புரிந்து அமைதியாகக் காரை ஓட்டியபடி வந்தான். அவனது தங்கையின் புகுந்த ஊரான காஞ்சிபுரம் வந்ததும் அவனது கார் தங்கை வீடு செல்லாது வேறு எங்கோ செல்வது கண்டு அவள் புரியாது அவனைப் பார்த்தாள்.

"இப்படியேவா போக முடியும் ? டிரெஸ் சேன்ஜ் பண்ண வேண்டாமா ?"

அவனது வார்த்தையில் தன்னைக் குனிந்து பார்த்தவள் , " நான் வேற டிரெஸ் கொண்டு வரலையே." மெதுவே முணுமுணுத்தாள்.

"நான் வாங்கிட்டு வந்துட்டேன்." என்றவனைத் திகைப்பாய் பார்த்தவள் மேலே பேசும் முன் ,

"ஹோட்டல் வந்துவிட்டது வா..." என்று அவன் அவளை அழைத்துக் கொண்டு சென்றான். அவள் பலியாடு போல் அவன் பின்னேயே சென்றாள்.

அங்கிருந்த அறைக்கு அவளை அழைத்துச் சென்றவன் தனது கையிலிருந்த கவரை அவளிடம் கொடுத்தான்.

"என்னது ?"

"டிரெஸ் , ஜூவல்ஸ்..." அவன் சாதாரணமாகக் கூற... அவளது மனக்கண்ணில் அவன் அர்ச்சனாவின் கால்களைப் பிடித்துக் கொலுசு அணிவித்த காட்சி தோன்றி அவளை உயிரோடு வதைத்தது.

"நேக்கு வேண்டாம்..."

அவள் பெரும் வலியுடன் அதை மறுத்தாள். ஒரு காலத்தில் அவன் இது எல்லாம் வாங்கித் தர வேண்டும் என்று ஆசைப்பட்டவள் தான்... ஆனால் இன்று அந்தச் சந்தோசத்தை அவளால் முழுமையாக அனுபவிக்க முடியவில்லை.

"ஏன் ?" அவனது புருவம் இரண்டும் யோசனையாய் முடிச்சிட்டது.

"இதை வாங்கிக் கொள்ளும் அளவுக்கு நமக்குள் உறவு இல்லை." அவள் கூறியதன் அர்த்தம் புரிந்ததும் அவன் இயலாமையுடன் தனது நெற்றியை நீவி கொண்டவன் ,

"ஃபங்க்சனுக்கு மட்டும் தான்... பிறகு இதைக் கொடுத்திரு..." என்று சற்று பொறுமையுடன் கூறினான்.

ஆராதனா அவனது பேச்சை கேட்காது முரண்டு பிடிக்கலாம் தான்... ஏனோ அவள் அதைச் செய்யவில்லை...

"வெளியில் போங்கோ..." என்றவளை புரியாது பார்த்தவன் ,

"எதுக்கு ?" என்று கேட்க...

"நான் டிரெஸ் மாத்தணும்..." என்றபடி அவள் முறைக்க...

"ஓகே ஓகே..." அவள் கூறியது புரிந்தவனாய் அவன் சரணாகதி அடைந்தவன் போல் இரண்டு கைகளையும்

தூக்கியவன் சிரித்தபடி வெளியேறினான்.

பத்து நிமிடங்களில் வெளியில் வந்தவளின் அழகை கூட நின்று ரசிக்க நேரம் இல்லாதவனாய் அவன் , " சீக்கிரம் வா... நேரமாச்சுன்னு அம்மா ஃபோன் பண்ணினாங்க..." என்று கூறியபடி முன்னால் நடக்க... அவள் தனது உடைகள் அடங்கிய பையுடன் அவனின் பின்னால் ஓடினாள்.

இருவரும் வைதேகியின் வீட்டை அடைந்த போது அங்கு இருவீட்டாரின் நெருங்கிய சொந்தங்களே குழுமியிருந்தனர். இரண்டாவது குழந்தை தானே என்று விழாவை எளிமையாக நடத்த இருந்தனர்.

விஷ்ணுபிரஹான் , ஆராதனா இருவரும் வீட்டிற்குள் நுழைந்ததும் இருவருக்கும் ஏகப்பட்ட வரவேற்பு... அவன் புன்னகையுடன் அதை எல்லாம் கடந்தான் என்றால் , அவள் சங்கடத்துடன் நெளிந்தாள். அவளின் நிலை உணர்ந்து சுந்தரி அவளைத் தன்னுடன் அழைத்துச் சென்றுவிட்டார். விஷ்ணுபிரஹானும் நிம்மதியுடன் தனது தங்கை கணவரிடம் பேசி கொண்டிருந்தான். அவருக்கு இன்னமும் விசயம் தெரிந்திருக்கவில்லை போலும்.

விசயம் தெரிந்த வைதேகி ஆராதனாவின் கைகளைப் பிடித்துக் கொண்டு கண் கலங்கி விட்டாள். அவளை ஆராதனா தான் தேற்ற வேண்டியதாய் போயிற்று.

"குழந்தை உண்டாகி இருக்கும் போது கண்டதையும் நினைச்சிண்ட்டு இருக்காதீங்கோ. சந்தோசமா இருங்கோ மன்னி..." அவள் வைதேகியை உற்சாகப்படுத்தினாள்.

"மாமி , கனி , சீதா வரலையா ?"

"தோப்பனாரை பார்க்கிறதுக்காக வீட்டில் இருக்கேன்னு சொல்லிட்டா..." சுந்தரி கூறினார். சரியென்பது போல் அமைதியாகி போனாள் ஆராதனா.

சிறிது நேரத்தில் வைதேகியை மனையில் உட்கார வைக்க அழைத்தனர். ஆராதனா யோசனையுடன் அறையிலேயே

நிற்க... சுந்தரி தான் அவளது கையைப் பிடித்துக் கொண்டா ,

"யாரும் ஒண்ணும் சொல்ல மாட்டா... நோக்கு நான் இருக்கேன்... பயப்படாம வா..." என்று அவளை அழைத்துக் கொண்டு சென்றார்.

வைதேகியை மனையில் அமர வைத்து நலுங்கு வைக்கும் முன் யாரையாவது நலுங்கு பாடல் பாட சொல்ல... சுந்தரி மருமகளைப் பாட சொன்னார். ரொம்பவும் பிகு பண்ணினால் எல்லோர் கண்ணும் தன் மேல் விழும் என்ற எண்ணத்தில் ஆராதனா மெல்ல பாட ஆரம்பித்தாள்.

"மூன்று மாதம் முடியும் வரையில் மசக்கையில் தானே
அவள் முன்னும் , பின்னும் ஓடி ஓடி வாந்தி எடுத்தாள்!
நால , ஐந்த , ஆற , ஏழு மாதம் முடிந்ததும்
அவள் மசக்கை தெரிந்த , வயிறும் தெரிந்து நடையும் கலந்தனள்!
மேலும் , கீழும் மூச்சு வாங்கி மெல்ல நடந்தனள்
முட்டி உதைக்கும் பிள்ளைதனை வயிற்றில் சுமந்தனள்! '"

தூயத்தமிழில் வளைகாப்பு பாடலை பாடியவளை எல்லோரும் ஆச்சரியத்துடன் பார்த்தனர். விஷ்ணுபிரஹான் வியப்பில் விழி விரிய அவளைப் பார்த்திருந்தான். அன்று அவன் கவனித்துக் கேட்காத அவளது குரல் வளத்தை இன்று கவனித்துக் கேட்டான். குயில் ஒன்று கூவுவது போல் அத்தனை இனிமையாக இருந்தது அவளது குரல். ஒரே பெண் என்பதால் அவளுக்கு அனைத்தையும் கற்றுக் கொடுத்திருக்க வேண்டும் என்று அவன் நினைத்துக் கொண்டான். ஏனோ மனம் லேசாக அவனது பார்வை அவளை விட்டு அங்கே இங்கே நகரவில்லை.

ஆராதனா பாடி முடிந்ததும் அங்கிருந்து அகல எண்ணி பின்னால் நகர... நேரே விஷ்ணுபிரஹான் மீது மோதி நின்றாள்.

"சாரி..." அவனைக் கண்டு விதிர்த்து போனவள் சற்று தள்ளி நிற்க முயல... அவனது கை அவளது கையை இறுக்கி பிடித்தது.

"இங்கேயே நில்..." என்று கட்டளை குரல் வேறு... அவள் பயத்துடன் அவனை நிமிர்ந்து நோக்க... அவனோ புன்னகை முகமாய் நின்றிருந்தான். அதனால் அவளும் அமைதியாக நின்றாள்.

வளைகாப்பு முடிந்ததும் நல்லவேளையாக இந்தத் தடவை புதிதாய் திருமணம் முடித்த வைதேகியின் நாத்தனாரை மனையில் அமர்த்திக் கண்ணாடி வளையல்களை அணிவித்து விட்டனர். அப்போது வைதேகியின் மாமியார் ஆராதனாவை கவனித்துவிட்டு அவளிடம் வந்து கண்ணாடி வளையல்களை நீட்டினார்.

"சும்மா கையில் போட்டுக்கோ..." என்று புன்னகை முகத்துடன் கூற... ஆராதனா அதை வாங்காது விழித்தபடி நின்றாள். அவளுக்குப் பதிலாக விஷ்ணுபிரஹான் அந்த வளையல்களை வாங்கிக் கொண்டான்.

"நான் போட்டு விடறேன்..." என்றவனைக் கண்டு அவர் நமட்டுச் சிரிப்பு சிரித்தபடி நகர்ந்துவிட... ஆராதனா அவனை முறைத்து பார்த்திருந்தாள்.

"இந்த மாதிரி விழாவில் இது எல்லாம் தவிர்க்க முடியாது பேபி..." என்றவன் அவளது கரம் பற்றிப் பொறுமையாக , மென்மையாக ஒவ்வொரு வளையல்களாகப் போட்டு விட... அவளுக்குத் தான் கோபம் பொத்துக் கொண்டு வந்தது.

"ரொம்ப எக்ஸ்பீரியன்ஸ் போல..." வெடுக்கென்று கேட்டவளை கண்டு அவன் ,

"இதுக்கு எதுக்கு எக்ஸ்பீரியன்ஸ் வேணும் ? வைதேகி , சீதா , கனிக்கு போட்டு விட்டிருக்கேனே..." என்று கேட்டபடி அவளைப் புரியாது நிமிர்ந்து பார்த்தான்.

"அர்ச்சனாவை விட்டுட்டீங்களே..." அவள் நறுக்கென்று உறைக்கும்படி கூற... அவள் நினைத்தது போல் அவளது

வார்த்தைகள் அவனது நெஞ்சினை சுருக்கென்று குத்தியது. வலி கொஞ்சம் அதிகம் தான். ஆனாலும் தன்னைச் சமாளித்துக் கொண்டு அவன் நிமிர்ந்து நின்றான்.

"வளையல் மட்டும் போட்டு விடலை... அவளுக்கு ப்ரீயட்ஸ்க்கு நாப்கினே வாங்கிக் கொடுத்திருக்கேன்..."

அவனது வார்த்தைகளில் அவளது முகம் கன்றிப் போனது... அதைக் கண்டு சந்தோசம் கொள்வதற்குப் பதில் அவனுக்கு வருத்தம் தான் எழுந்தது.

"நமக்கு இடையில் தேவையில்லாம அர்ச்சுவை இழுத்து பேசி வாங்கிக் கட்டிக்காதே ஆராதனா..."

விஷ்ணுபிரஹான் அவளிடம் பேசி கொண்டே அவளது கைகளில் வளையல்களை அணிவித்து முடித்து இருந்தான். அதற்கு மேல் அவளிடம் பேச்சு வளர்க்க விரும்பாதவனாய் அவன் அங்கிருந்து அகன்றுவிட்டான். அதுவும் அவளது மனதினை மிகவும் பாதித்தது.

மதிய உணவிற்குப் பின் வெயிலின் தாக்கம் அதிகம் இருப்பதால் மாலையில் செல்லலாம் என்று வைதேகியின் வீட்டினர் கூறிவிட்டனர். வைதேகியும் அலுப்பாக உணர்ந்ததால் ஓய்வு தேவை என்று கூறிவிட்டாள். அதனால் ஆராதனாவை அங்கிருந்த ஒரு அறையில் ஓய்வெடுக்கக் கூறினர். அறைக்குள் வந்தவளுக்கு உறக்கம் வரவில்லை... அதனால் அவள் அறையின் பக்கவாட்டில் இருந்த சின்னப் பால்கனியில் நின்று கொண்டு வானத்தை வெறுமையான மனநிலையில் பார்த்து கொண்டிருந்தாள்... சற்றுமுன் நடந்த நிகழ்வை அவளால் ஜீரணிக்க முடியவில்லை... குனிந்து தனது இரு கைகளிலும் அடுக்கப்பட்டிருந்த கண்ணாடி வளையல்களை வருடி பார்த்தவளின் முகத்தில் மகிழ்ச்சி தானில்லை... மாறாக விரக்தியே பரவியிருந்தது...

அப்போது அறை கதவு திறக்கும் சத்தம் கேட்டது... சட்டென்று திரும்பி பார்த்தவள் அங்கே விஷ்ணுபிரஹான்

கதவை திறந்து கொண்டு உள்ளே வருவது கண்டு திடுக்கிட்டவளாய் நேராக நின்று கொண்டாள்... அவன் அறை கதவை தாழ் போடுவதை உணர்ந்து அவள் மனதிற்குள் பயந்து நடுங்கினாள்... விழிகளை மூடி கொண்டா , மூச்சை அடக்கி கொண்டு பால்கனியில் ஓரமாய்ப் பயத்துடன் ஒடுங்கி நின்றிருந்தாள் அவள்...

அறைக்குள் நுழைந்த விஷ்ணுபிரஹான் அந்தச் சிறிய அறை முழுவதையும் நோட்டமிட்டான்... அடுத்து அங்கிருந்த குளியலறை கதவை திறந்து பார்த்தான்... பின்பு யோசித்தவனாய் பால்கனி பக்கம் வந்து எட்டிப்பார்த்தான்... அவன் நினைத்து போல் அவனது பச்சைக்கிளி அங்கே தான் நின்றிருந்தாள்... விழிகளை மூடி நின்றிருந்தவளின் முன்னிருந்த பால்கனி கம்பியை இரு கைகள் கொண்டு பிடித்தபடி சாய்ந்து நின்றவன் அவளை உச்சந்தலை முதல் உள்ளங்கால் வரை ரசனையுடன் பார்த்து வைத்தான்... காலையில் ரசிக்க முடியாததை இப்போது ரசித்துப் பார்த்தான் போலும்...

இளம்பச்சை வண்ண பட்டுப்புடவை , இளம்பச்சை வண்ண கற்கள் பதிக்கப்பட்ட குடை ஜிமிக்கி , கழுத்தாரம் என அவள் பச்சை வர்ண கிளியாக நின்றிருந்தாள்... அவனை வார்த்தையால் கொத்துவதிலும் அவள் பச்சைக்கிளி தான்...

எந்தவித சத்தமும் வராததை உணர்ந்து ஆராதனா மெல்ல கண் திறந்தாள்... தன் முன் புன்சிரிப்புடன் நின்றிருந்த விஷ்ணுபிரஹானை அவள் சிறிதும் எதிர்பார்க்கவில்லை... அடர் பச்சை வண்ண பட்டுச்சட்டையும் , பட்டு வேட்டியும் அணிந்து கம்பீரமாக நின்றிருந்த அவளது கள்வன் சத்தமில்லாது மொத்தமாய் அவளது மனதினை கொள்ளையடித்தான்... அவளும் இப்போது தான் அவனைக் கவனித்துப் பார்த்தாள்.

"தேங்க்ஸ்..." என்ற விஷ்ணுபிரஹானை கண்டு ஆராதனா புரியாது பார்க்க...

"நான் சொன்னதுக்காக வந்ததற்கு..."

"நீங்க சொல்லவா செஞ்சேள்... மிரட்டினேள்..." வெடுக்கென்று கேட்டவள் வேறுபுறம் முகத்தைத் திருப்பிக் கொண்டாள்...

"நம்ம பிரச்சனையில் வைதேகி பாதிக்கப்படுறது சரியா ? நீயே சொல்லு..." அதற்குப் பதில் பேசாது அவள் அமைதியாக நின்றாள்...

"ஏன் இப்படி வியர்த்து வழியுது... ?"

"வெயில்ல நின்னா குளுகுளுன்னா இருக்கும்..." அதற்கும் அவள் வெடுவெடுத்தாள்...

"நீ சொல்றதும் சரி தான்..." தகிக்கும் மதிய நேர சூரியனை திரும்பி பார்த்தவன் அவள் அருகில் நெருங்கி வந்தான்... அவள் விழியகல பயத்துடன் இன்னும் சுவற்றோடு சுவராக ஒன்றினாள்...

அவளது பயத்தைக் கண்டு கொள்ளாதவனாய் அவன் தனது கையை உயர்த்தி அவளது நெற்றி முன் மடக்கி தனது முழுக்கை சட்டையில் அவளது நெற்றி வியர்வையை மென்மையாகத் துடைத்துவிட்டான்... ஆணவனின் அருகாமை அவளை விதிர்க்க செய்தது... இத்தனை நாட்களில் அவனது அண்மையை இன்று தான் உண்மையாக உணர்கிறாள்...

"ப்ளீஸ் , தள்ளி போங்கோ... நானே துடைச்சிக்கிறேன்..."

அவளது வார்த்தையில் தான் அவனுமே அவள் அருகில் தான் நெருங்கி இருப்பதை உணர்ந்தான்... முதன்முதலாய் பெண்ணவளின் அருகாமை தரும் மயக்கத்தினை அவன் உணர்ந்தான்... அதில் அவன் தலைச்சுற்றி தான் போனான்... ஏனென்று புரியாத தாபம்... தெளியவே கூடாது என்று நினைக்குமளவிற்கு ஒருவித மயக்கம்... எல்லாம் சேர்ந்து அவன் அவனாக இல்லை... இன்னும் பெண்ணவளிடம் நெருங்கி நிற்க சொன்னது அவனது மனது...

கண்ணாடி வளையல்கள் அணிந்த அவளது வளைகரங்களைத் தனது இரண்டு கைகளால் பற்றியவனை , " இந்தப் புடவையில் நீ ரொம்ப அழகாயிருக்கப் பேபி..." என்று சிறிதும் தயக்கமின்றிக் கூற... அவள் தான் திகைப்புடன் அவனைப் பார்த்திருந்தாள்...

"இப்படியே என்னுடன் வந்து விடுகிறாயா பேபி... ?" என்று ஆசையுடன் கேட்டவனைக் கண்டு அவள் அதிர்ந்து போய் விழிக்க...

"ஹா ஹா... நீ இப்படிப் பார்க்கும் போது எனக்கு அப்படியே ஜிவ்வுன்னு இருக்கு தெரியுமா..." என்றவன் வாய்விட்டுச் சிரித்தான்... அவள் தன்னை மறந்தவளாய் அவனது சிரிப்பை பார்த்தபடி மயங்கி நின்றாள்...

அவளது பார்வையில் அவன் சிரித்தபடி ஒற்றைப் புருவத்தைத் தூக்கி என்னவென்று கேட்டான். அவள் ஒன்றுமில்லை என்பது போல் வேகமாய்த் தனது தலையை ஆட்டினாள். அவளது தலையோடு சேர்ந்து அவளது ஜிமிக்கியும் அழகாய் ஆடி வர்ணத்தை வாரியிறைத்தது. பச்சை வர்ண கற்களின் ஒளி அவளது முகத்தில் பட்டு நிஜ பச்சை கிளியாக ஜொலித்தவளை கண்டு அவனது மனம் விரும்பியே கிறங்கியது. அவளைத் தன்னவளாக்க சொல்லி அவனது மனம் பிடிவாதமாய் அடம்பிடித்தது. தனது மனம் போகும் போக்கினை கண்டு அவன் திகைத்தவனாய் அவளை விட்டு விலகியவன் வேகமாய் அறை கதவை திறந்து கொண்டு வெளியேறினான். அவன் போவதை வேதனையுடன் பார்த்தபடி அவள் நின்றிருந்தாள்.

மாலை ஆறு மணிக்கு மேல் மகளுக்கு அழைப்பு விடுத்த அர்ஜூன் அவள் மருத்துவமனைக்கு வரவில்லை என்பதை அறிந்து பதற்றம் அடைந்தான். ஆராதனா தொலைப்பேசிக்கு அழைத்தால் அது அணைத்து வைக்கப்பட்டு இருந்தது. அவளைக் காணாது அவளது குடும்பம் மொத்தமும் கவலைக்குள்ளானது.

திருத்தமாகும்...!!!

அர்ஜூனும் , அவந்திகாவும் கவலையில் ஆழ்ந்திருந்தனர். ஆராதனா எங்கே சென்றாலும் சொல்லிவிட்டுச் செல்லும் வழக்கம் கொண்ட பெண்... அப்படிப்பட்டவள் காணவில்லை என்றதும் எல்லோரின் சந்தேகமும் விஷ்ணுபிரஹான் மீது தான் சென்றது. உடனே விஷ்ணுபிரஹான் வீட்டிற்குக் கோபமாய்ப் புறப்பட்டுச் சென்ற பரத்தை தடுத்து நிறுத்திய ஸ்ரீராம் ,

" கொஞ்சம் பொறுமையா இருடா..." என்று தம்பியை அதட்டினான்.

" அண்ணா , காணாமல் போயிருக்கிறது நம்ம தங்கை... நீங்க விஷ்ணுவை கண்காணிப்பதாய் சொன்னதால் தான் நானும் கொஞ்சம் அசால்ட்டா இருந்துட்டேன்." பரத் கொதித்தான்.

" தெரியும் பரத்..." என்ற ஸ்ரீராம் மேலே எதுவும் பேசவில்லை.

தங்கையின் வாழ்க்கை இப்படியானதற்கு அவன் தானே முழுக்காரணம்... அத்தோடு விஷ்ணுபிரஹானின் கோபத்திற்கும் அவன் தான் காரணம். அதனால் அவன் பொறுமையைக் கடைப்பிடித்தான்.

ஸ்ரீராம் சற்று தள்ளி சென்று சீதாவிற்கு அழைத்தான். அவனது அழைப்பை கண்ட சீதா நாணத்துடன் அழைப்பை எடுத்தாள்.

" சொல்லுங்கோன்னா..." எப்போதும் மனதினை வருடும் அவளது குரல் இன்று அவனது செவியில் கூட நுழையவில்லை.

" பட்டு அங்கே வந்தாளா ?"

" இல்லையேன்னா... இன்னைக்கு அக்காவுக்கு வளைகாப்பு... அதுக்கு அம்மா கூப்பிட்டப்போ கூட வர முடியாதுன்னு தான் மன்னி சொன்னா..."

" ஓ... சரி நான் ஃபோனை வைக்கிறேன்." என்றவன் அழைப்பை துண்டிக்கப் போனான்.

" என்ன விசயம் சொல்லுங்கோன்னா ? மன்னியை காணோமா ?" அவளது பதட்டத்தில் அவன் ,

" ம்..." என்றான்...

" ஒருவேளை மன்னி விசேசத்துக்குப் போயிருக்காளோ என்னமோ ? செத்த இருங்கோ... நான் விசாரிச்சிட்டு உங்களைக் கூப்பிடறேன்."

சீதா அழைப்பை துண்டித்ததும் ஸ்ரீராம் யோசனையுடன் வரவேற்பறையில் வந்தமர்ந்தான். அர்ஜூன் கேள்வியாக மகனை பார்த்தான்.

" சீதா கிட்ட கேட்டேன். இன்னைக்கு அவங்க அக்காவுக்கு வளைகாப்பாம்... ஒருவேளை பட்டு அங்குப் போயிருப்பாளோ ?"

" இல்லை ஸ்ரீ... பட்டு நம்ம கிட்ட சொல்லாம எங்கேயும் போகாம மாட்டாள்." அர்ஜூன் மகள் மீதிருந்த நம்பிக்கையில் திட்டவட்டமாக மறுத்தான்.

அப்போது சீதா ஸ்ரீராமுக்கு அழைத்தாள். எடுத்து பேசிய ஸ்ரீராமின் முகம் இறுகி போனது. அமைதியாக அழைப்பை துண்டித்தவன் தந்தையை ஏமாற்றத்துடன் பார்த்தான்.

" பட்டு அங்கே தான் இருக்காளாம்." என்றவனது குரலில் அப்பட்டமாய் ஏமாற்றம் தெரிந்தது.

" அந்த ராஸ்கல் பட்டுவை மிரட்டி கூட்டிட்டு போயிருப்பான்." பரத் கோபத்தில் பல்லை கடித்தான்.

" அவன் கூப்பிட்டால் இவள் எப்படிப் போகலாம் ? அதுவும் நம்மிடம் பொய் சொல்லிவிட்டு போகும் அளவுக்கா ?" மகளின் செயலில் அர்ஜூனுக்கு மனசு விட்டுப் போனது.

" நீங்க கவலைப்படாதேள்ன்னா..." அவந்திகாவிற்குக் கணவனைக் கண்டு வேதனையாக இருந்தது. மகள் மீது

கோபம் வந்தது.

" இன்னைக்கு அவள் வரட்டும்... இரண்டில் ஒண்ணு கேட்கிறேன்..." அவள் கோபமாய் முணுமுணுத்து கொண்டாள். இதை எல்லாம் உணரும் நிலையில் அர்ஜூன் இல்லை...

' என் பட்டுவா இப்படி ?' அவன் மனமருகி போனான்.

எல்லோரும் அவரவர் யோசனையில் ஆழ்ந்தனர். எல்லோரது யோசனையும் ஆராதனாவை பற்றித் தான் என்பதைச் சொல்ல தேவையில்லை.

****

இரவு ஏழு மணியாகியும் ஹரிஷ் தனது தந்தையை விட்டு கிளம்ப அடம்பிடித்தான். பிறகு இரவு நேரமானதும் அவர்களை இரவு உணவு உண்டுவிட்டுச் செல்லுமாறு வைதேகி வீட்டினர் பணிக்க... வேறுவழியின்றி எல்லோரும் இரவு உணவு உண்டுவிட்டு கிளம்பினர். இரவு நேரம் என்பதால் ஓட்டுநரை வரவழைத்து விட்டான் விஷ்ணுபிரஹான். எல்லோரும் விடைபெற்றுக் கார் அருகில் வந்தனர்.

விஷ்ணுபிரஹானுக்குப் பயந்தே ஆராதனா முதலில் காரிலேறிப் பின்னால் சென்று அமர்ந்து கொண்டாள். சுந்தரி தன்னுடன் அமர்வார் என்று அவள் எதிர்பார்த்திருக்க... விஷ்ணுபிரஹான் அவளுக்கு அடுத்து ஏறி அவள் அருகில் வந்தமர்ந்தான். அவள் விதிர்த்தபடி அவனைப் பார்க்க... அவனோ அவளைக் கண்டு கொள்ளாது வெளியில் நின்றிருந்த அன்னையிடம் ,

" ம்மா , நீங்களும் வைதேகி , ஹரிஷூம் இங்கே உட்காருங்க... அப்போ தான் கார் குலுங்குவது தெரியாது..." என்று கூற... அவன் கூறியதை நம்பி அப்படியே ஏறியமர்ந்தனர் மூவரும்... கார் கிளம்பி சாலையில் சீறிப் பாய்ந்தது...

" வெளிநாட்டுக் கார் குலுங்குதாக்கும்... பொய் சொன்னாலும் பொருந்த சொல்லணும்..." ஆராதனா கோபத்துடன் முணுமுணுத்தாள்.

" கார் வெளிநாட்டுத் தயாரிப்பு தான்... ஆனால் ரோடு நம்ம ஊர் தயாரிப்பாச்சே..."

வெண்பற்கள் பளீரிட கம்பீரமாய் , அழகாய் சிரித்தவனைக் கண்டு அவளது இதயம் தாளம் தப்பியது. அவள் முயன்று மனதினை கட்டுப்படுத்திக் கொண்டு ஜன்னல் புறம் திரும்பி வேடிக்கை பார்க்க ஆரம்பித்தாள்... அவனும் ஒன்றும் பேசாது சிரித்தபடி மறுபக்கம் திரும்பி கொண்டான். அவள் அருகில் அமர்ந்திருப்பதே அவனுக்கு அத்தனை பரவசமாக இருந்தது. ஏனென்று தெரியாத உணர்வில் சிக்கி தவித்தவன் தனது தலைமுடியை அடிக்கடி கோதி விட்டுக் கொண்டான்...

சிறிது நேரத்தில் தனது தோளில் பாரத்தை உணர்ந்து திரும்பி பார்த்தவன் இனிமையாக அதிர்ந்தான். ஆராதனா அவனது தோளில் தூங்கி வழிந்து கொண்டிருந்தாள். சில நாட்களாகத் தூங்க முடியாது அவஸ்தைப்பட்டுக் கொண்டிருந்தவளை , இன்று ஏனோ அவனது அருகாமையில் அப்படியொரு நிம்மதியான , ஆழ்ந்த தூக்கம் வந்து தொற்றிக் கொண்டது. தனது தோளில் தூங்கி வழிந்து சாமியாடியபடி வந்தவளை கண்டு இரக்கப்பட்டவன் தனது இரு கால்களையும் தூக்கி முன் இருக்கையில் பதித்து உயர்த்தி மடக்கி கொண்டு அவளைத் தனது மடியில் கிடத்தி கொண்டான்.

வெகு அருகாமையில் தெரிந்த அவளது நிலவு முகம் அவனை அதிகமாய் ஈர்த்தது. அவனையும் அறியாது அவனது வலதுகை அவளது தலையைக் கோதி கொடுத்தது.

" ஒரு காலத்தில் உன்னை அதிகம் வெறுத்தவன் தான். ஆனால் இப்போது ஏனோ உன்னை ரொம்ப ரொம்பப் பிடிக்கிறதே. என்ன காரணம் பேபி ? உன்னுடைய எதிர்கால வாழ்க்கைக்கு நான் தடையா இருக்கக்

கூடாதுன்னு என் மனசு சொல்லுது. ஆனால் நான் உன்னைப் பாதித்து இருக்கிறேனா என்று அறியாமல் உன்னை விட எனக்கு மனசு வரவில்லையே. என்னை உனக்குப் பிடிக்கும்ன்னு ஒரு வார்த்தை சொல்லு... அடுத்த நொடி நான் உன்னை விட்டு போயிர்றேன். சொல்வியா ?" தனக்குள் முணுமுணுத்தவன் அவளை ஏக்கத்துடன் பார்த்திருந்தான்...

அவளை நேரில் காணும் முன் அவன் அவள் மீது கொண்ட கோபம் தான் என்ன! அவளைக் கண்டதும் அவனது கோபம் எங்கே போனதோ ? என்று அவனுக்கே தெரியவில்லை. அவளது மனதினை போல் அவனது மனமும் அவனுக்குப் புரியாத புதிர் தான்... அதில் ஏகப்பட்ட சிக்கல்கள் , ஏகப்பட்ட புதிர்கள் எல்லாம் அடங்கியிருந்தது...

திடீரென்று கார் பிரேக் போடவும் ஏதோ யோசனையில் இருந்தவன் மடியில் இருந்தவளை நழுவ விடப் பார்த்தான். அந்த ஒரு நொடி அவனது உயிர் அவன் வசமில்லை... அவளைத் தனது கரங்களால் பாதுகாப்பாய் அரவணைத்து கொண்டவன் ,

" டிரைவர் , பார்த்து ஓட்ட கூடாதா ?" என்று ஓட்டுநரை கண்டு சத்தம் போட...

" இல்லை சார்... திடீர்ன்னு முன்னால் போன வண்டி நின்னிருச்சு..." என்று ஓட்டுநர் மன்னிப்பு கேட்கும் குரலில் கூற... அவன் மேற்கொண்டு ஒன்றும் பேசவில்லை.

எல்லோரும் நல்ல உறக்கத்தில் இருக்க விஷ்ணுபிரஹான் மட்டும் ஆழ்ந்த யோசனையில் ஆழ்ந்திருந்தான். அவனது கைகள் இன்னும் ஆராதனாவை இறுக அரவணைத்திருந்தது. அவனது தந்தை வீடு வரும் வரை இந்த நிலை நீடித்தது. வீடு நெருங்குவது கண்டு சுதாரித்தவன் ஆராதனாவை தூக்கி இருக்கையில் சாய்த்து வைத்தான். அவனது மடியில் படுத்து வந்ததை அவள் அறிந்தால் நிச்சயம் சங்கடப்படுவாள் என்பது அவனுக்குத் தெரியும்.

" அம்மா வீடு வந்தாச்சு..." கார் நின்றதும் அவன் தனது அன்னை எழுப்பினான். அந்தச் சத்தத்தில் எல்லோரும் எழுந்தனர். ஹரிஷ் மட்டும் நன்கு உறங்கி கொண்டிருந்தான்.

" அம்மா , நீங்க இறங்குங்க... ஹரிஷை நான் தூக்கிக்கிறேன்..." என்று விஷ்ணுபிரஹான் கூற...

சரியென்று தலையசைத்த சுந்தரி இறங்கி மறுபக்கம் வந்து வைதேகி அழைத்துக் கொண்டு வீட்டை நோக்கி செல்ல... விஷ்ணுபிரஹான் முன்னிருக்கையை மடக்கி முதலில் தான் இறங்கியவன் பின் ஆராதனா இறங்குவதற்காகக் கையை நீட்டினான். அவளோ அவனது கையைப் பற்றாது கீழே இறங்கினாள். அவன் நமட்டு சிரிப்புடன் அவளைப் பார்த்தவன் ஒன்றும் பேசாது ஹரிஷை தூக்கி கொண்டு முன்னே நடந்தான்.

" நான் வீட்டுக்கு கிளம்பறேன்." ஆராதனாவின் வார்த்தையில் நின்று திரும்பி பார்த்தவன் ,

" அம்மா கிட்ட சொல்லிட்டு போ..." என்க... அப்போது தான் அவளுக்கும் சுந்தரியிடம் சொல்ல வேண்டும் என்பதே தோன்றியது.

இருவரும் இணைந்து வீட்டின் முன் சென்று நின்ற போது சுந்தரி மகளுக்குச் சுற்றிய ஆரத்தி தட்டுடன் நின்றிருந்தார். வாசலில் விஷ்ணுபிரஹான் , ஆராதனா இருவரும் சேர்ந்து நிற்பது கண்டு விழி கலங்கியவர் தனது கையில் இருந்த ஆரத்தி தட்டை ஒரு நொடி வெறித்துப் பார்த்தவர் அடுத்த நொடி விறுவிறுவென ஆரத்தியை கொட்ட வெளியில் சென்றுவிட்டார்.

விஷ்ணுபிரஹான் மற்றும் ஆராதனா இருவரின் முகமும் கறுத்துப் போனது. அவன் ஒன்றும் பேசாது உள்ளே சென்றான். அவள் உள்ளே செல்வதா ? வேண்டாமா ? என்று மனதிற்குள் ஒற்றையா ? இரட்டையா ? போட்டு கொண்டிருந்தாள்.

" வா பேபி..." அவனது குரல் கனிவுடன் அவளை அழைத்தது. அதில் தன்னுணர்வு அடைந்தவள் அவனை வெறித்துப் பார்த்தாள்.

" உன் வீட்டிற்குள் வர என்ன தயக்கம் ?" என்றவனைக் கண்டு அவள் முறைக்க...

" ஹேய் , தப்பா அர்த்தம் எடுத்துக்காதே... இது நீ பார்த்து வச்ச வீடு தானே... நான் அந்த அர்த்தத்தில் சொன்னேன்."

" சரியான அர்த்தம் எடுத்திருந்தால் எல்லாமே சரியாய் போயிருக்கும்." என்று முணுமுணுத்தபடி நின்றவளை கண்டு அவன் புரியாது பார்த்தான்... அப்போது அங்கு வந்த சுந்தரி அவளை உள்ளே வர சொல்லி அழைத்தார். அவள் அவனை முறைத்துக் கொண்டே உள்ளே வந்தாள்.

" வாங்கோ அண்ணா , வாங்கோ மன்னி..." சீதா இருவரையும் புன்னகையுடன் வரவேற்க... கனிஷ்கா இருவரையும் ஆச்சரியமாகப் பார்த்தாலும் ஒன்றும் பேசாது இருந்தாள்.

" சீதா , ஹரிஷை தூக்கிட்டுப் போய்ப் படுக்க வை..." என்று தங்கை மகனை சீதாவிடம் நீட்டிய விஷ்ணுபிரஹான் ,

" ம்மா , என்ன யோசனை ? வைதேகி களைச்சு போயிருக்கிறாள் பாருங்க..." என்று அன்னையோடு வைதேகியை அனுப்பி வைத்துவிட்டுக் கடைசித் தங்கையிடம் திரும்பினான்.

" என் மேல் தானே கோபம்... உன் மன்னி மேல் இல்லையே... உன் மன்னிக்கு காபி போட்டுக் கொண்டு வா..." என்று கனிஷ்காவை வேலை வாங்கினான்.

" நீங்க உட்காருங்கோ மன்னி..." என்று ஆராதனாவை அமர சொன்ன கனிஷ்கா அண்ணனை முறைத்துவிட்டு உள்ளே சென்றாள்.

விஷ்ணுபிரஹான் அதைக் கண்டு கொள்ளாது ஆராதனா அருகில் அமர்ந்தான். அவள் சற்று நகர்ந்து அமர்ந்தாள். இருவருக்கும் இடையில் இருக்கும் இடைவெளியை ஒரு பார்வை பார்த்தவன் ஒன்றும் பேசவில்லை. சிறிது நேரத்தில் கனிஷ்கா ஆராதனாவிற்குக் காபியும் , அண்ணனுக்குப் பாலும் கொண்டு வந்து கொடுத்தாள். முகத்தைத் திருப்பிக் கொண்டு கொடுத்தவளை கண்டா ,

" அதான் உங்க மன்னி வீட்டுக்கு வந்திருக்கிறாள் இல்லையா ? இன்னும் என்ன கோபம் ?" அவன் தன்மையாகக் கேட்க...

" மன்னி , இவனை என் கிட்ட பேச வேணாம்ன்னு சொல்லுங்கோ." கனிஷ்கா கறார் குரலில் கூற...

" பேபி , அவளை என் கிட்ட பேச சொல்லு... அப்படி என்ன என் மேல் கோபம் ?"

அவன் ஆராதனாவிடம் புகார் படித்தான். இருவருக்கும் இடையில் ஆராதனா முழித்துக் கொண்டிருக்கும் போது சுந்தரி அங்கு வந்துவிட்டார். ஆராதனா காபி தம்பளரை வைத்துவிட்டு எழுந்தவள் ,

" மாமா எப்படி இருக்கார் ? அவரைப் பார்க்கலாமா ? தூங்கிண்டு இருந்தா வேண்டாம்" என்று கேட்க...

அவளது அக்கறையை விழி விரித்து வியப்புடன் பார்த்திருந்தான் விஷ்ணுபிரஹான். அவளது இந்த அக்கறையால் தான் அவனது பெற்றோர் பெற்ற மகன் அவனை விட அவளைத் தலையில் தூக்கி வைத்துக் கொண்டாடுகிறார்கள் என்பது அவனுக்குப் புரிந்தது.

" தூங்கலை... நீ வா ஆரு..." சுந்தரி அவளை அழைத்துக் கொண்டு செல்ல... அவர்கள் பின்னே விஷ்ணுபிரஹான் சென்றான்.

ஆராதனா , விஷ்ணுபிரஹான் இருவரும் அடுத்தடுத்து உள்ளே நுழைவதை கண்டு ராகவனின் விழிகள் பளிச்சிட்டது.

" மாமா , இப்போ பரவாயில்லையா ?" ஆராதனா கேட்டதற்கு அவர் ஆமென்பது போல் பலமாய்த் தலையாட்டினார். ஆனால் அவரது பார்வை மகன் மீதே இருந்தது. அதைப் புரிந்து கொண்ட சுந்தரி ,

" சம்பந்திம்மா தப்பா நினைச்சிர கூடாதுன்னு ரெண்டு பேரையும் வைதேகி வளைகாப்புக்கு அழைச்சிருந்தேன்..." என்று கூற... இருவரும் இணைந்து வந்ததன் காரணம் ராகவனுக்குப் புரிந்ததில் அவர் சோர்வுடன் விழிகளை மூடி கொண்டார்.

அதற்கு மேல் அவரைத் தொந்தரவு பண்ண விருப்பம் இல்லாது எல்லோரும் வெளியில் வந்தனர்.

" மாமி , நான் கிளம்பறேன்." என்று ஆராதனா எல்லோரிடமும் விடைபெற்று கிளம்பினாள். அவளைத் தொடர்ந்து விஷ்ணுபிரஹானும் கிளம்பினான்.

விறுவிறுவென முன்னால் நடந்த ஆராதனாவை இரண்டே எட்டில் எட்டிப்பிடித்தவனம் , " இந்த நேரத்தில் எப்படித் தனியா போவ ? வா , நான் டிராப் பண்றேன்." என்று அவளை அழைக்க...

" இல்லை , நானே போய்க்கிறேன்..." அவள் பிடிவாதமாய் மறுத்தாள்...

" எவனையோ நம்பி போவ ? ஆனா என் கூட வர மாட்டியா ? நான் ரொம்ப நல்லவன்ம்மா..." என்றவனை அவள் திடுக்கிட்டு போய் ஏறிட்டு பார்த்தாள்... அவனும் அவளைத் தான் பார்த்துக் கொண்டிருந்தான்.

கடந்த காலம் இருவரின் கண்களிலும் கடந்து போனதோ என்னவோ! இருவருக்கும் இடையில் கனத்த மௌனம் நிலவியது. அவள் தான் சுதாரித்துக் கொண்டு அவனைப் பார்த்தவளம் ,

" வேண்டாமம் , தேவையில்லாத பிரச்சனை வரும்..." என்றாள் மெல்லமாய்...

" இப்போ மட்டும் பிரச்சனை வராதுன்னு நினைச்சிக்கிட்டு இருக்கியா ? இவ்வளவு நேரம் உன்னைக் காணாமல் உன் வீட்டில் தேடாமலா இருப்பாங்க ?" அவள் பயத்துடன் அவனைப் பார்த்தாள்...

" நீ என்னுடன் இருப்பது அவங்களுக்குத் தெரியும்... எனக்காக நீ பொய் சொல்லியிருக்கேன்னும் அவங்களுக்குத் தெரியும்... அதனால் தான் அமைதியா இருக்காங்க..."

அவன் சொல்லி முடிக்கும் முன் அவள் கோபத்துடன் அவன் அருகில் வந்தா , " உங்களால எங்கப்பா கிட்ட பொய் சொல்லியிருக்கேன்... இப்போன்னு இல்லை , நிறையத் தடவை... ஆனா இன்னைக்குச் சொன்ன பொய்க்கு நான் என்ன பதில் சொல்ல போறேன் ? ஏன் என்னை இப்படிப் பாடாய் படுத்தறேள் ?" அவள் ஆங்காரமாய் அவனைப் பார்த்து கேட்டாள்.

அவளது ஆங்காரத்தில் திகைத்து போனவன் சுற்றும் முற்றும் பார்த்தான். கார் நிறுத்துமிடம் என்பதால் இந்த நேரத்தில் அங்கே யாரும் இல்லை... ஓட்டுநரும் அங்கிருந்து சென்றிருந்தான்.

" நான் கொண்டு வந்து விடறேன். ஒண்ணும் சொல்ல மாட்டாங்க..." அவன் தணிவாகப் பேசினான்.

" நீங்க வந்தாலும் பிரச்சனை வரும்..." அவள் தன்னிலை உணர்ந்து கோபம் குறைந்து தலையைக் குனிந்து கொண்டு முணுமுணுத்தாள்.

" போய்ப் பார்த்தால் தெரிஞ்சிர போகுது..." என்றவன் அவளைக் காரிலேற சொல்ல... அவள் மறுக்காது காரில் ஏறியமர்ந்தாள். அவன் தானும் ஏறியமர்ந்து காரை கிளப்பினான். அவளது வீடு செல்லும் வரை இருவரிடையே கனத்த மௌனம் நிலவியது.

அவளது வீட்டின் முன் அவளை இறக்கி விட்டவன் கூடவே தானும் இறங்கினான்... அதைக் கண்டவள் ,

" நான் பார்த்துக்கிறேன்... நீங்க போங்க..." என்க...

" பரவாயில்லை..." என்றவன் அவளுடன் இணைந்து அவளது வீட்டினுள் நுழைந்தான்.

இருவரையும் முதலில் கண்ட அவந்திகாவிற்கு என்ன செய்வது ? என்று தெரியவில்லை. விஷ்ணுபிரஹானை வரவேற்பதா ? வேண்டாமா ? என்கிற குழப்பத்துடன் அவள் நின்றிருந்தாள்... அர்ஜூனோ மகளை வருத்தத்துடன் பார்த்திருந்தான். அதற்குள் அங்கு வந்த பரத் நேரே வந்து விஷ்ணுபிரஹானின் சட்டையைப் பிடித்தான்...

" எங்கேடா என் தங்கச்சியைக் கடத்திட்டு போன ?" பரத் ஆத்திரத்துடன் கேட்க... அப்போது அங்கு வந்து நின்ற ஸ்ரீராம் தம்பியை தடுக்காது விஷ்ணுபிரஹானை எரித்துவிடுவது போல் பார்த்து வைத்தான்.

ஆராதனாவின் பெற்றோரிடம் தன்மையாகப் பேசி அவளை விட்டு விட்டு செல்ல வேண்டும் என்று நினைத்திருந்த விஷ்ணுபிரஹானை பரத் தனது வார்த்தையால் சீண்டினான். சீண்டப்பட்ட சிங்கம் சீறாமல் இருக்குமோ!

" உன் தங்கச்சி என்ன சின்னப் பாப்பாவா ? கடத்திட்டு போறதுக்கு ? அவள் தானே ஃபோன் பண்ணி உங்க கிட்ட சொன்னாள்... ஹாஸ்பிட்டல் போறேன்னு..." அவனது வார்த்தையில் ஆராதனா மனதில் பெரும் அடிவாங்கினாள்.

" டேய்..." என்றபடி பரத் அவனது சட்டையைப் பிடித்து முறுக்கினான்.

" உன் தங்கையை நான் கடத்திட்டு போகணும்ன்னு அவசியம் கிடையாது மிஸ்டர். பரத். இப்போ நான் கூப்பிட்டாலும் அவள் என் கூட வருவாள். அதுவும் உங்க கிட்ட பொய் சொல்லிக்கிட்டு. இதிலேயே தெரிந்திருக்குமே , ஐயாவோட பவர் என்னன்னு..." விஷ்ணுபிரஹான் மிதப்புடன் பேச... அதைக் கேட்டு

ஆராதனா கூனிக்குறுகி போய் நின்றாள். தவறு முழுவதும் அவளது தானே...

" மிஸ்டர். விஷ்ணு , கெட் அவுட்..." அர்ஜூன் அடக்கப்பட்ட கோபத்துடன் கத்தினான்.

" போகாம... இங்கேயே இருந்து உங்க மகள் கூடக் குடும்பம் நடத்தவா போகிறேன்..." என்று நக்கலுடன் பதிலளித்த விஷ்ணுபிரஹான் ஆராதனா புறம் திரும்பி ,

" பேபி , நான் வாங்கிக் கொடுத்த பிளவுஸ் உனக்குன்னு அளவெடுத்துத் தைத்தது போல் கச்சிதமா பொருந்தியிருக்கு... நீ பார்ப்பதற்கு அவ்வளவு அழகாயிருக்க..." என்று எல்லோர் முன்பும் அவளுக்கும் , தனக்கும் அந்தரங்கமாய் நெருக்கம் இருப்பதாய் காட்டி கொண்டவன் பின்பு அவளைப் பார்த்து குறும்பாய் கண்சிமிட்டியபடி ,

" குட்நைட் பேபி... ஸ்வீட் ட்ரீம்ஸ்..." என்று விரிந்த புன்னகையுடன் அவன் விடைபெற்றான்.

விஷ்ணுபிரஹான் சென்றதும் ஆராதனா சக்தி எல்லாம் வடிந்தார் போன்று சோபாவில் தொப்பென்று அமர்ந்தாள். அவளைக் கேவலப்படுத்த தானா அவன் இங்கு வந்தது ? அவளுக்கு ஆற்றாமையாக இருந்தது. அவளது வீட்டினர் அவளைச் சுற்றி நின்று கொண்டனர்.

" உனக்கு எவ்வளவு கொழுப்பு இருந்தா அவன் கூடப் போயிட்டு வந்திருப்ப... ?" பரத் எகிறினான்.

" உன் மேல் ரொம்ப நம்பிக்கை வச்சிருந்தேன் பட்டு... ஆனா என் கிட்டேயே பொய் சொல்ல உனக்கு எப்படி மனசு வந்தது ?" அர்ஜூன் தனது ஆதங்கத்தைக் கூறிய போது அவனையும் அறியாது அவனது கண்கள் கலங்கியது.

" நான் வளர்த்த பொண்ணு இப்படிப் பண்ணுவாள்ன்னு நான் கொஞ்சமும் நினைச்சு பார்க்கலை... எங்களை எல்லாம் ஏமாத்திட்ட பட்டு..." அவந்திகா மௌனமாய்க் கண்ணீர் வடித்தாள்.

ஆராதனாவால் யாருக்கும் பதில் அளிக்க முடியவில்லை... குனிந்த தலை நிமிராது அவள் அமர்ந்திருந்தாள்.

ஸ்ரீராம் தங்கை அருகில் அமர்ந்தவனை , " விஷ்ணு நம்ம வீட்டுக்கே வந்து நம்மளையே கேவலப்படுத்திட்டுப் போறான்... ஆனா அவனை ஒண்ணும் செய்ய முடியாதபடி எல்லோரும் அமைதியா இருக்கோம்ன்னா , அதுக்குக் காரணம் நீ தான் பட்டு." அவன் கூறியதும் அவள் விலுக்கென்று அவனை நிமிர்ந்து பார்த்தாள்.

" நீ பண்றது உனக்கே சரியா இருக்கான்னு நீயே சொல்லு." அதைக் கேட்டு அவள் மீண்டும் தலைகுனிந்தாள்.

" இதுக்கு என்ன தான் முடிவு ? அவனது ஒவ்வொரு தவறையும் நீ எங்களுக்குத் தெரியாம மறைச்சிக்கிட்டே இருக்க... அப்போ உன் மனசில் இன்னமும் அவன் மீதான காதல் இருக்கு... அப்படித்தானே ?"

" இல்லைண்ணா..." அவள் தவிப்புடன் அவனை நிமிர்ந்து பார்த்தாள்.

" அப்படியே காதல் இருந்தாலும் தப்பில்லை... ஆனா அந்தக் காதலுக்கு எந்தவித அர்த்தமும் கிடையாது பட்டு. அவன் அந்தப் பொண்ணை விட்டுட்டு உன் பின்னால் வர போவது இல்லை... அப்படியே வந்தாலும் அந்த வாழ்க்கைக்கு என்ன பெயர் தெரியுமா ?" என்று நிறுத்திவிட்டு தங்கையைப் பார்த்த ஸ்ரீராம் பின்பு தனது பெற்றோரை பார்த்து ,

" இதைச் சொல்வதற்காக என்னை மன்னிக்கணும் அப்பா , அம்மா..." என்று அவர்களிடம் மன்னிப்பு கோரியவன் தங்கையைத் திரும்பி பார்த்து ,

" கள்ளக்காதல்... நீ அவனோட கள்ளக்காதலி..." என்று கூற...

ஆராதனா விழிகளில் அடிப்பட்ட வலியுடன் சகோதரனை ஏறிட்டு பார்த்தாள். தங்கைக்கு வலிப்பதற்காகச் சிகிச்சை மேற்கொள்ளாது இருக்க முடியாது. தனது வேதனையை

விழி மூடி விழுங்கி கொண்ட ஸ்ரீராம் பின் விழி திறந்து தங்கையைப் பார்த்தவன் ,

" இது தான் நிதர்சனம் , யதார்த்தம்... இன்னும் சில நாட்கள் போனால் அவன் உன்னை அவனது பிடிக்குள் கொண்டு வந்துவிடுவான்... அதன் பிறகு நான் சொன்னது தான் நடக்கும். அதற்கு நீ இப்போதே அவனை விட்டு விலகுவது நல்லது இல்லையா ?"

ஸ்ரீராம் கூறிய வார்த்தைகள் அவளது மனதில் ஆழப்பதிந்தது. சகோதரன் கூறுவது அனைத்தும் உண்மை தானே... இன்று மகுடிக்குக் கட்டுப்படும் பாம்பு போல் விஷ்ணுபிரஹான் கூறிய வார்த்தைக்குக் கட்டுப்பட்டு அவள் தன்னை மறந்து நடந்து கொண்டது நினைவில் நின்று அவளை உயிரோடு வதைத்தது.

" பட்டா , அடுத்தப் பொண்ணோட பாவம் நமக்கு வேண்டாம்டி. நீ விஷ்ணுவை விட்டு விலகிரு..." என்ற அன்னையை ஏறிட்டு பார்த்தவளின் விழிகள் கலங்கியது. முயன்று தன்னைக் கட்டுப்படுத்திக் கொண்டவள் ,

" கல்யாணத்துக்கு நாள் பாருங்கோ... மாப்பிள்ளை யாரா இருந்தாலும் எனக்கு ஓகே..." என்று கூறிவிட்டு யாரையும் பார்க்காது எழுந்தவள் நேரே தனது அறைக்குச் சென்றுவிட்டாள்.

அவளது வார்த்தைகளில் அனைவரின் முகத்திலும் சந்தோசமும் , நிம்மதியும் ஒருங்கே பரவியது!!!

அறைக்கு வந்த ஆராதனா கட்டிலில் அமர்ந்து முழங்காலில் முகம் புதைத்து ஓவென்று கதறியழுதாள். பாசமான பெற்றோர் , அன்பான அண்ணன்கள் என்று சுற்றிலும் அத்தனை அருமையான உறவுகள் இருந்த போதும் அவள் தன் மனதில் இருப்பதை யாரிடமும் கூற முடியாது தனித்தீவாய் தனக்குள் தவித்தாள். தனக்கு மட்டும் ஏன் இந்த இழிநிலை ? என்று கழிவிரக்கம் அவளைக் கொன்றதில் அவளது கண்களில் கண்ணீர் வற்றாத ஜீவநதியாய் ஊற்றெடுத்தது.

விஷ்ணுபிரஹான் பேசிவிட்டு சென்ற வார்த்தைகள் அவளது காதில் மீண்டும் மீண்டும் ஒலித்து அவளுக்கு வலிக்கச் செய்தது. அவன் அவளை இப்படி அவமானப்படுத்தி விட்டானே ? என்று அவளுக்கு மிகவும் வருத்தமாக இருந்தது. இனியும் அவன் சொன்ன பேச்சு கேட்டு அவள் நடந்தால் ஒரு கட்டத்தில் அவன் அவளது காதலை கூடக் கொச்சைப்படுத்துவதற்கு வாய்ப்பு இருக்கிறது. அவள் அவமானப்படாமல் , அவளது காதல் கேவலப்படாமல் அவள் அவனை விட்டு விலகுவதற்கான ஒரே வழி அவளது திருமணம் மட்டுமே... திருமணம் என்றதுமே அவளது மனமும் , மேனியும் ஒருசேர அதிர்ந்தது.

" கடவுளே! என்னை ஏன் இப்படிச் சோதிக்கிற ?" என்று வாய்விட்டு கதறியவளின் கதறல் விஷ்ணுபிரஹானை சென்றடைந்ததோ என்னவோ! அவனும் அவளைப் பற்றித் தான் நினைத்துக் கொண்டிருந்தான்.

பரத் அவனது சட்டையைப் பற்றிப் பேசியதும் அவனது ஆத்திரம் அதிகரித்து விட்டது. மேலும் ஆராதனாவிற்கும் , தனக்கும் இடையில் இன்னமும் நெருக்கம் இருப்பதாய் அவர்களிடம் காட்டி கொண்டு தன்னை அவமானப்படுத்தும் பரத்தின் மூக்கை அவன் அறுக்க எண்ணினான். அதனால் தான் அவன் கோபத்தில் அப்படிப் பேசியது. ஆனால் இப்போது கோபம் குறைந்து நிதானமாக யோசிக்கும் போது தான் அவனுக்குப் பெண்ணவளின் வேதனை புரிகின்றது... எல்லாப் பெண்களின் வலியையும் புரிந்து கொண்டு அதற்கு ஏற்ப நடந்து கொள்பவன் அவன்... ஆனால் ஆராதனா விசயத்தில் மட்டும் முதலில் இருந்தே சறுக்கி தான் போனான். முதல் கோணல் முற்றும் கோணல் என்பதற்கேற்ப இப்போது எல்லாமே தவறாகவே போகின்றது.

விஷ்ணுபிரஹான் மனது கேட்காது ஆராதனாவிற்கு அழைத்தான். அவளது அலைப்பேசி அணைத்து வைக்கப்பட்டு இருந்தது. காலையில் இருந்து அவள்

அலைப்பேசியை உபயோகப்படுத்தவில்லை என்பதால் அது தானாகவே தனது உயிரை விட்டிருந்தது...

" ப்ச்..." அவன் எரிச்சலுடன் அலைப்பேசியைப் படுக்கையில் எறிந்துவிட்டு தானும் படுக்கையில் சாய்ந்தான்.

அவனது மனக்கண்ணில் ஆராதனாவே வலம் வந்தாள். அன்று அவனது காயத்திற்குத் தையல் போட்டு விடும் போது அருகில் நின்றிருந்த ஆராதனாவின் அழகு , மின்தூக்கியில் அவளுடன் செல்லும் போது அவள் தலையில் வைத்திருந்த ஜாதிப்பூவின் வாசம் , இன்று மதியம் பச்சை கிளியாய் அம்சமாய் நின்றிருந்தவளின் பேரழகு , அவளது கைகளில் வளையல்கள் அணிவிக்கும் போது அவன் உணர்ந்த அவளது மென்மை என்று எல்லாமே அவனைப் பித்தனாக்கி இருந்தது.

ஏனென்று தெரியாத தாபம் , என்னவென்று புரியாத உணர்வு எல்லாம் சேர்த்து அவனை இனிமையாய் இம்சித்தது. ' பேபி , பேபி ' என்று அவன் முணுமுணுத்தபடி தலையணையைக் கட்டிப்பிடித்துக் கொண்டு கட்டிலில் புரண்டான்.

மறுநாள் காலையில் வழக்கம் போல் மருத்துவமனைக்குக் கிளம்பிய ஆராதனாவை அர்ஜூன் அழைத்தான். அவள் அமைதியாகத் தந்தை முன் வந்து நின்றாள்.

" உனக்குக் கல்யாணம் பண்ணி வைக்கலாம்ன்னு முடிவு பண்ணியிருக்கிறோம் பட்டு." தந்தையின் வார்த்தையில் உள்ளம் அதிர்ந்தாலும் அவள் வெளியில் எதையும் காட்டி கொள்ளாது அமைதியாக நின்றாள்.

" என்ன சொல்ற ?" அர்ஜூன் மீண்டும் கேட்டபடி மகளது முகம் பார்த்தான்.

" நான் நேத்தே சரின்னு சொல்லிட்டேனேப்பா..."

" குட் , இப்போ நடக்கிற ஆடி மாசம் முடிஞ்சு அடுத்த மாசம் ஆவணியில் முதல் முகூர்த்தத்தில் உனக்குக் கல்யாணம்."

ஒரு நாள் இரவில் அனைத்தையும் சாதித்துக் காட்டிய தந்தையை அச்சத்துடனும் , வியப்புடனும் அவள் பார்த்திருந்தாள். அவள் மனதில் திகில் கிளம்பியது.

" மாப்பிள்ளை வேறு யாரும் இல்லை... நம்ம சிவசுப்ரமணியத்தின் மகன் சிவேஷ்கந்தா தான்." இதைக் கேட்டு அவள் இன்னமும் அதிர்ந்தாள்.

" ரொம்ப நல்ல பையன்... எந்தக் கெட்டப்பழக்கமும் கிடையாது. நீ என்ன சொல்ற பட்டா ?"

" உங்க விருப்பம்ப்பா... நீங்க என்ன சொன்னாலும் நான் அதுக்குக் கட்டுப்படறேன்." என்று அவசரமாய்க் கூறியவள் அங்கிருந்து வேகமாய்க் கிளம்பி சென்றாள். எதிலிருந்தோ தப்புவது போல் ஓடிய மகளை வேதனையுடன் பார்த்திருந்தான் அர்ஜூன்.

' என் மகளுக்கும் என்னை மாதிரியே கஷ்டத்தைக் கொடுக்கிறியே கடவுளே ' அந்த ஆறடி ஆண்மகன் தனது மகளுக்காக மனதிற்குள் மருகினான். மனம் நிறையக் காதலை வைத்துக் கொண்டு தனது மகள் படும் துன்பத்தை அந்த அன்பான தந்தையால் தாங்கி கொள்ள முடியவில்லை...

" முதலில் என் மகள் கல்யாணம் முடியட்டும்... அதுக்கு அப்புறம் உன்னைக் கவனிச்சிக்கிறேன் விஷ்ணு. உன் உயிர் என் கையில்..." என்று கோபமாய் முணுமுணுத்துக் கொண்டான் அர்ஜூன்.

****

ஆராதனா தனது நோயாளிகள் அனைவரையும் பார்த்துவிட்டு மதிய உணவிற்காக நாற்காலியில் இருந்து எழுந்தாள். அப்போது அங்குப் புயல் போல் உள்ளே நுழைந்தான் விஷ்ணுபிரஹான்... அவனது வருகையை உணர்ந்து அங்கிருந்த செவிலிப்பெண் அமைதியாக வெளியேறினாள்.

ஆராதனாவும் , அவனும் மட்டுமே அந்த அறையில் தனித்து இருந்தனர். அவள் அவனைப் பார்க்காது மௌனமாய்க் கைகளைக் கட்டி கொண்டு நின்றிருந்தாள். அவனோ பதட்டத்துடன் அவளைத் தலை முதல் கால் வரை ஆராய்ந்து பார்த்தான்...

" ஆர் யூ ஓகே பேபி ?" அவனது குரல் சிறிது தடுமாறியது...

" நான் நன்றாகத் தான் இருக்கிறேன்." என்று கம்பீரமாகக் கூறியவள் அவனைத் தைரியமாக ஏறிட்டு பார்த்தா ,

" எனக்குத் திருமணமாகப் போகிறது மிஸ்டர். விஷ்ணுபிரஹான். அதனால் இனிமேல் என்னைப் பார்க்க வராதீங்க..." என்று அழுத்தம் திருத்தமாய்க் கூற... அதைக் கேட்டு அவன் உயரழுத்த மின்சாரம் பாய்ந்தது போல் செயலிழந்து போய் நின்றான்.

அன்று அவன் கூறிய வார்த்தைகளின் அதே அர்த்தம் தான் இன்று அது வேறுவிதத்தில் வெளிவந்து இருக்கிறது. ஆனால் வலியோ அதை விடப் பலமடங்கு அதிகமாக அல்லவா திருப்பி வலிக்கச் செய்கிறது!!!

திருத்தமாகும்...!!!

விஷ்ணுபிரஹானுக்கு வலி ஒன்றும் புதிது அல்ல... ஆனால் ஆராதனா கொடுத்த வலியானது மிகவும் வலித்தது. அவன் அவளுக்குக் கொடுத்த அதே வலியை தான் இப்போது அவள் அவனுக்குத் திருப்பிக் கொடுக்கின்றாள். அன்று மிகச் சாதாரணமாகத் தோன்றிய ஒரு விசயம்... இன்று அசாதாரணமாகத் தோன்றி அவனை உயிரோடு வதைத்தது. அவன் மிகுந்த சிரமப்பட்டுத் தனது வலியை புன்னகையின் பின் மறைத்தவன் ,

" மாப்பிள்ளை யார் ?" என்று சாதாரணமாகக் கேட்டான். அவனது வார்த்தைகளில் அவள் தான் மனதிற்குள் அதிகம் அடிப்பட்டுப் போனாள்.

' எப்படி இவங்களால் எல்லாவற்றையும் எளிதாக எடுத்துக் கொள்ள முடிகிறது ? ஏன் தன்னால் வாழ்க்கையை இப்படி எளிதாக எடுத்துக் கொள்ள முடியவில்லை ?' மனதிற்குள் மருகியபடி நின்றிருந்தவள் தன்னைச் சமாளித்துக் கொண்டு அவனைப் பார்த்த ,

" சிவேஷ்கந்தா..." என்றாள் எந்தவொரு உணர்வினையும் காட்டி கொள்ளாத வெறுமை குரலில்...

அவனுக்குத் தான் ஏற்கெனவே இந்த விசயம் தெரியுமே! அதனால் அவன் பெரிதாக அதிரவில்லை , அலட்டி கொள்ளவில்லை... அவன் அமைதியாக விசயத்தை உள்வாங்கிக் கொண்டான்.

" உனக்கு அவனைப் பிடிச்சியிருக்கா ?" என்று அவன் போலியான அக்கறையோடு கேட்க... அதை உணராதவளாய் அவனைப் பார்த்தவள் ,

" பிடிக்காம தான் கல்யாணத்துக்கு ஒத்துண்டேனா ?" என்று சிறு முறைப்போடு கூற...

" ராத்திரியோடு ராத்திரியாகக் கல்யாணம் பேசி முடிச்சு இருக்காங்கன்னா ஏதோ இருக்குன்னு தானே அர்த்தம்."

" ஒரு மண்ணாங்கட்டியும் இல்லை. என் அப்பா , அம்மா , நேக்குக் கல்யாணம் பண்ணி பார்க்கணும்ன்னு ஆசைப்படுறா... அவ்வளவு தான்."

" உங்க வீட்டில் எப்போதுமே உன் விருப்பம் கேட்பது இல்லையா ?" அவனது குரலில் அவளது முகம் ஒரு மாதிரியாய் மாறினாலும் ,

" என் விருப்பமும் இது தான்..." என்றாள் அவள் உறுதியான குரலில்...

" எது... ?" அவன் கேள்வியாய் புருவத்தை உயர்த்தினான்.

" இந்தக் கல்யாணம்..." முகத்தில் எந்தவித உணர்வையும் காட்டி கொள்ளாது கூறியவளை ஒரு கணம் அவதானித்துப் பார்த்தவன் பின்பு மலர்ந்த புன்னகையுடன் தனது கையை அவள் புறம் நீட்டி ,

" வாழ்த்துக்கள் மிஸ்..." என்று ' மிஸ் ' ஐ அழுத்தி சொல்லியபடி அவளைப் பார்த்தவன் , " ஆராதனா..." என்று சிறு கேலியுடன் முடித்தான்.

அதைக் கேட்டு அவளது முகம் கன்றிய போதும் அவன் புறம் கையை நீட்டாது அமைதியாக , " தேங்க்ஸ்..." என்று கூறியவள் அவனைச் சுற்றி வந்து அறை கதவை திறந்து கொண்டு வெளியில் சென்றாள்.

விஷ்ணுபிரஹான் நீட்டிய தனது கையை ஒரு நொடி பார்த்திருந்தவன் , பின்பு அதை மடக்கி பேண்ட் பாக்கெட்டில் விட்டபடி அவளைப் பின்தொடர்ந்து அறையை விட்டு வெளியில் வந்து அவளுடன் இணைந்து நடந்தான்.

" லன்ச்சக்கா போகிற... ?" அவனது கேள்விக்கு அவள் பதில் அளிக்காது அமைதியாக நடந்து வர...

" என் கூட லன்ச்சக்கு வர்றியா ?" என்றவனை அவள் திரும்பி பார்த்து முறைத்தாள்.

" ஐயோ , நான் தப்பான அர்த்தத்தில் கேட்கலை. உண்மையில் உன்னுடைய கல்யாணத்துக்கு ட்ரீட்

கொடுக்கலாமேன்னு தான்..." என்று அவன் இழுத்தான்.

அதற்குள் இருவரும் கார் நிற்கும் இடத்திற்கு வந்துவிட்டிருந்தனர். அவள் அவனது பேச்சுக் காதில் விழாதவளாய் கார் கதவை திறந்து அதனுள் இருந்த ஒரு கவரை எடுத்து அவனிடம் நீட்டினாள். அவன் புரியாது அவளைப் பார்த்தான்.

" என்னது ?"

" நீங்க நேக்கு வாங்கிக் கொடுத்த புடவை , நகைகள்..." அவளது வார்த்தைகளில் அவனுள் சுறுசுறுவெனக் கோபம் எழுந்தது.

" இதை வைச்சிக்கிட்டு நான் என்ன பண்ண ?" அவன் கோபத்தை அடக்கி கொண்டு நக்கலாய் கேட்டான்.

" திருப்பிக் கொடுத்திருவேன்னு சொல்லித்தான் நான் வாங்கிண்டதா நேக்கு ஞாபகம்."

' உன் ஞாபகத்தில் தீயை வைக்க... ' கோபத்தில் எரிமலையாய் வெடிக்கத் தயாரான நாவை முயன்று கட்டுப்படுத்திக் கொண்டு அவளை அமைதியாகப் பார்த்தவன் ,

" இது உன் பணத்தில் வாங்கியது தான் ஆராதனா... அதனால் நீ திருப்பித் தர தேவையில்லை..." என்று தன்மையாகக் கூற...

அதைக் கேட்டு அவள் திடுக்கிட்டு போய் அவனைப் பார்த்தாள். பழைய நினைவுகளில் அவளது மனம் சிக்குண்டு தவித்தது. எந்த இடத்திலும் அவள் ஏமாறவில்லை... அது போல் அவன் ஏமாற்றவும் இல்லை... இதோ இந்த நொடி கூட அவன் அதை நிரூபிக்கின்றான். ஆனால் வாழ்க்கையில் ஏமாந்து போனவளுக்கு அவன் கூற வருவது புரிந்து அது அவளுள் பெருத்த வலியை ஏற்படுத்தியது.

" நேக்குத் தானம் கொடுத்து தான் பழக்கம்... வாங்கிப் பழக்கம் இல்லை..." என்றவள் கையிலிருந்த கவரை காரினுள் போட்டுவிட்டு தனது கைப்பையில் இருந்து காசோலை புத்தகத்தை எடுத்து வெற்றுக் காசோலையில் கையொப்பம் இட்டவள் அதை அவனிடம் கொடுத்தா ,

" நீங்க செலவளிச்ச பணத்தை இதில் எழுதிக்கோங்க... உங்களுக்குமா , நேக்கும் உண்டான கடைசிக் கொடுக்கலா , வாங்கலும் இத்தோடு முடிஞ்சு போயிண்டது. இனி உங்க வழி வேறு... என் வழி வேறு... தயவுசெஞ்சு என் கண் முன்னாடி வராதீங்கோ." இருகரம் கூப்பி வேண்டி கேட்டு கொண்டவள் தனது காரிலேறி அதைக் கிளப்பிக் கொண்டு சென்றுவிட்டாள்.

விஷ்ணுபிரஹான் தனது கையிலிருந்த காசோலையைப் பார்த்தான். ஆராதனாவின் உழைப்பை அதில் அவன் கண்டான். பின்பு அதை மடித்துத் தனது சட்டை பையில் வைத்து கொண்டவன் தனது காரை நோக்கி நடந்தான். காரை கிளப்பிக் கொண்டு சென்றவனது மனதில் பலவித யோசனைகள்.

****

சென்னைக்கு மாற்றலாகி வந்த சீதா அன்று தான் வேலையில் சேர்ந்தாள். அவள் தனது அறைக்குள் நுழைந்து தனது வேலையில் மூழ்கும் நேரம் அறை கதவை தட்டிவிட்டு உள்ளே நுழைந்தான் ஸ்ரீராம். அவனைக் கண்டதும் அவளது முகம் சூரியனை கண்டதும் மலரும் தாமரை போன்று மலர்ந்து போனது.

" வாங்க , வாங்க..." என்று அவள் எழுந்து நின்று அவனை உபசரித்தாள்.

" மேனேஜரம்மா , எழுந்து நின்று வரவேற்பதா ? முதலில் உட்காருங்க மேனேஜரம்மா..." என்று அவன் அவளைக் கிண்டலடித்தபடி அங்கிருந்த நாற்காலியில் அமர்ந்தான்.

" உங்களை மாதிரி பெரிய ஆளுங்களுக்கு எழுந்து நின்னு வரவேற்பு கொடுக்கணும்ன்னு எங்க ஹெட் ஆபிசில் சொல்லியிருக்காங்க..." என்றவளை மெச்சுதலாய் பார்த்தவன் ,

" புத்திசாலி தான்..." என்று கூறினான்...

" என்ன சாப்பிடறீங்க ? ஹாட் ஆர் கூல் ?"

" ஒண்ணும் வேண்டாம்... நீ ஏன் வளைகாப்புக்கு போகலை ?"

" கனிக்கு வேலை இருந்தது. அதனால் அப்பாவை கவனிக்கிறதுக்காக வீட்டில் இருந்துண்டேன்." என்றவள் ,

" சொல்லுங்க... என்ன விசயமா என்னைப் பார்க்க வந்திருக்கீங்க ?"

" ஒரு பெண் , அதுவும் அழகான பெண் ஒருத்தி என்னைக் காணாது தவித்துக் கொண்டிருக்கிறாளாம்... அதான் அவளைப் பார்த்துவிட்டு போகலாம்ன்னு வந்தேன்..."

அவன் கூறியது கேட்டு அவளது முகத்தில் நாணம் தோன்றியது. தலைகுனிந்து தனது வெட்கத்தினை மறைத்தவள் ,

" அப்போ பேச வரலையா ?" என்று மெல்லிய குரலில் கேட்க... அதைக் கேட்டு அவன் வாய்விட்டுச் சிரித்தான்...

" இனி தினமும் உன்னோடு பேசத்தான் நான் இங்கே வந்தது..." என்றவனை அவள் புரியாது பார்க்க...

" அக்கவுண்ட் ஓபன் பண்ணலாம்ன்னு வந்திருக்கிறேன்..." அதைக் கேட்டு அவள் ஆச்சரியமாய் விழி விரித்தாள்.

" இது உனக்காகத் தான் சீதா... அப்பா கிட்ட நான் பார்க்கும் தொழிலுக்கு மட்டும் உன்னுடைய பேங்கில் அக்கவுண்ட் வச்சிக்கப் போறதாய் சொல்லி பெர்மிசன் வாங்கியிருக்கேன்." என்றவனைக் கண்டு அவளது மனம் நெகிழ்ந்து போனது.

" உனக்காக மெயின் பிரான்ஞ்சில் இருக்கும் வேலையைக் கூட வேண்டாம்ன்னு பரத் கிட்ட ஒப்படைச்சிட்டு இங்கே இருக்கும் பிரான்ஞ்சை நான் எடுத்திருக்கிறேன்." அவனது காதலில் அவள் பேச முடியாது வாயடைத்து போனாள்.

" சீதா..." அவள் பதில் பேசாதது கண்டு அவன் அவளை அழைக்க...

" எல்லாம் எனக்காகவா ?"

" உனக்காகத் தான்... உனக்காக மட்டும் தான்..." என்றவன் மேசை மீது கைகளை ஊன்றி அதில் தனது நாடியை பதித்து அவளை ஆழ்ந்து பார்த்தான்.

அவனது பார்வையைச் சந்திக்க இயலாது மேசை மீது பார்வை பதித்தவள் , " அக்கவுண்ட்ஸ் ஆரம்பிக்கிறதுக்கு வேண்டிய பிரோசிஜரை பார்க்கலாமா ?" என்று பேச்சை மாற்ற எண்ணி கேட்க...

அவளது எண்ணம் புரிந்து அவனும் லேசாகச் சிரித்தபடி சரியென்று கூறினான். அடுத்த அரை மணி நேரமும் வங்கி கணக்கு ஆரம்பிக்கும் வேலை சரியாக இருந்தது... ஸ்ரீராம் கிளம்பும் நேரம் வந்தது.

" இனி நாம் தினமும் சந்திக்கலாம்..." என்றவன் ,

" கூடிய விரைவில் எனது அறையில் தினமும் சந்திக்கலாம்..." என்று கண்சிமிட்டியபடி கூற... அவள் திகைத்து போய் அவனைப் பார்த்தாள்.

" உன்னிடம் இன்னும் விசயத்தைச் சொல்லவில்லை இல்லையா ? பட்டுவுக்குக் கல்யாணம்... மாப்பிள்ளை கூடப் பார்த்தாச்சு... பட்டு வேலை பார்க்கிற ஹாஸ்பிட்டல் சேர்மனோட மகன்." என்று சந்தோசத்துடன் கூறியவனைக் கண்டு அவள் உள்ளுக்குள் ஒரு நொடி அதிர்ந்தாலும் தன்னைச் சமாளித்துக் கொண்டு அவனைப் பார்த்து புன்னகைத்தா ,

" ரொம்பச் சந்தோசம்ன்னா... இனியாவது மன்னி வாழ்க்கை சந்தோசமா , நிம்மதியா இருக்கணும்."

" எல்லோருடைய பிரார்த்தனையும் அது தான்..." என்றவன் ,

" பட்டு கல்யாணத்தோடு நம்ம கல்யாணத்தையும் சேர்த்து நடத்திடலாமான்னு அப்பா கேட்டார். இப்போ ஆடி மாசம் நடக்குதாம்... முடியட்டும்ன்னு சொன்னார். அதுக்கு நான் ஓகே சொல்லிட்டேன்."

" நம்ம விசயம் மாமாவுக்குத் தெரியுமா ?" அவள் பயத்துடன் அவனைப் பார்த்தாள்.

" என் அப்பாவிடம் நான் எதையும் மறைத்தது இல்லை... அவர் எனக்குப் பிரெண்ட் மாதிரி... நான் ஒண்ணும் தப்பு பண்ணலையே... எனக்குப் பொருத்தமான பெண்ணைத் தானே காதலித்தேன்... உன் குணத்துக்காகவே அவர் நம்... சாரி , சாரி... என் காதலுக்குச் சம்மதம் சொல்லியிருக்கிறார்..."

அவன் கூறியதை கேட்டு அவளுள் சந்தோச சாரல் அடித்தது... மீண்டும் மீண்டும் அவன் அவளை வெட்க மழையில் நனைய வைத்தான்.

" சந்தோசம் தானே சீதா ?"

" ம் , ம்..." என்றவளுக்கு மகிழ்ச்சியிலும் , நாணத்திலும் பேச்சு எழவில்லை.

" ஓகே சீதா , நான் கிளம்பறேன். வேலை நேரத்தில் உனக்கு மேலும் தொந்தரவு செய்ய விரும்பலை." என்றபடி ஸ்ரீராம் எழ... அவளும் தலையசைத்து அவனுக்கு விடை கொடுத்தாள்.

அன்று மாலையே சீதா தனது அன்னையிடம் ஆராதனா திருமண விசயத்தைக் கூறினாள். உடன் வைதேகி , கனிஷ்கா இருந்தனர். கனிஷ்காவை தவிர மற்ற இருவரும் உள்ளுக்குள் திடுக்கிட்டு போயினர்.

" இப்பத்தான் நேக்கு ரொம்பச் சந்தோசமாயிருக்கு..." என்று கனிஷ்கா குதூகலித்தாள்.

சுந்தரி ஒன்றும் சொல்லாது எழுந்து கணவர் இருந்த அறைக்குச் சென்றார். ராகவன் தூங்கி கொண்டிருந்தார். சுந்திரிக்குத் துக்கம் தொண்டையை அடைத்தது... கணவரது கரத்தில் முகம் புதைத்து அழுதார் அவர்... அதில் உறக்கம் கலைந்த ராகவன் மனைவியிடம் ,

" சுந்தரி எதுக்கு அழுற... ?" என்று கேட்க... கணவனது குரலில் அவசரமாய்த் தனது விழிகளைத் துடைத்துக் கொண்ட சுந்தரி ,

" ஒண்ணும் இல்லைன்னா..." என்க...

" பொய் சொல்லாதே..." என்று கூறியவரின் பார்வை மனைவியைத் தீர்க்கமாய்ப் பார்த்து வைத்தது.

" ஆருவுக்குக் கல்யாணமாம்." சுந்தரி கூறியதும் ராகவனின் முகத்தில் ஒளி தோன்றியது.

" சந்தோசமான விசயத்துக்கு எதுக்கு அழற ?" அவர் மனைவியைக் கடிந்தார்.

" உங்களுக்கு வருத்தமா இல்லையான்னா ?"

" வருத்தம் என்பதை விடக் கோபம் தான் அதிகம் இருக்கிறது. அதுவும் உன் மகனை நினைத்து தான்... முட்டாள் , அவனுக்கு எது தேவை என்பதை அறியாது தன்னைத் தானே முட்டாளாக்கி கொள்ளும் அறிவீலி அவன்." அவர் மகனை சத்தம் போட்டார். அதில் அவருக்கு மூச்சு வாங்கியது.

" நீங்க வருத்தப்படாதேள். அவன் ஒண்ணும் சின்னப் பிள்ளை இல்லை..." என்ற சுந்தரி அருகில் இருந்த கூஜாவில் இருந்து தண்ணீரை தம்பளரில் ஊற்றி கணவருக்கு மெல்ல புகட்டினார். பிறகு சுந்தரி அவரது நெஞ்சை நீவி கொடுத்தார்.

மனைவியின் கையைத் தனது செயல்படும் கையால் பற்றிக் கொண்ட ராகவன் , " நான் தப்பு பண்ணிட்டேனோ சுந்தரி ?" என்று கேட்டவரின் விழிகள் கலங்கியது.

" இல்லைன்னா நீங்க எந்தத் தப்பும் பண்ணலை..." சுந்தரிக்கும் கண்கள் கரித்துக் கொண்டு வந்தது.

" வைதேகியின் வாழ்க்கைக்காக விஷ்ணுவின் வாழ்க்கையைக் கையில் எடுத்தது ரொம்பத் தப்பு... அதை விடத் தெரிஞ்சே ஆருவின் வாழ்க்கையில் விளையாண்டது ரொம்ப ரொம்பத் தப்பு. இந்தப் பாவத்தை எப்படித் தீர்க்க போகிறேனோ ?" என்றவரது விழிகளில் இருந்து கண்ணீர் சொட்டியது.

" நீங்க எந்தத் தப்பும் பண்ணலை. தப்பு பண்ணியது எல்லாம் விஷ்ணு தான். அவன் தான் புத்தி கெட்டு போய் அலையறான்." சுந்தரி கணவரை தேற்றினார்.

என்ன தான் ஒருவரை ஒருவர் தேற்றிய போதும் இருவரின் மனதிலும் கடந்த காலம் மிகவும் பாரமாய்க் கனத்தது!

****

கனிஷ்கா பரபரப்புடன் வேலைக்குக் கிளம்பி கொண்டிருந்தாள். இன்று முக்கியமான ஒப்பந்தம் சம்பந்தமாக வாடிக்கையாளர் ஒருவரை சந்திக்கச் செல்ல வேண்டும் என்று நேற்றே பரத் அவளிடம் கூறியிருந்தான். முதலில் மறுத்தவளை அவன் அதட்டி வந்தே ஆகவேண்டும் என்று கூறிவிட்டான்.

" ம்மா , நேக்கு சாப்பாடு வேண்டாம்... ஆபிசில் பார்த்துக்கிறேன்..." என்றவள் அன்னையின் பதிலை எதிர்பார்க்காது கிளம்பிவிட்டாள்.

ஆட்டோ பிடித்து அலுவலகம் வந்திறங்கியவளை தனது அறையில் இருந்து பார்த்துக் கொண்டிருந்தான் பரத்... இன்று அவன் செய்யப் போகும் காரியத்தை நினைத்து அவனது விழிகள் பழிவெறியில் பளபளத்தது.

கனிஷ்காவின் வரவை எதிர்பார்த்தபடி நாற்காலியில் வந்தமர்ந்தான் அவன்...

" மே ஐ கம்மின் சார் ?" அவளது தேன் குரலில் அவன் அவனையும் அறியாது சொக்கித்தான் போனான்.

" எஸ்..." கம்பீரமாகப் பதிலளித்தவனின் பார்வை கதவின் மீதே நிலைத்திருந்தது.

கதவை தள்ளி கொண்டு உள்ளே நுழைந்த கனிஷ்காவை கண்டு அவன் கண்ணிமைக்க மறந்தான். எளிமையான பருத்தி புடவையில் அத்தனை அழகாய் அவள் இருப்பாள் என்று அவன் கொஞ்சமும் எதிர்பார்க்கவில்லை... ஆணவன் அவனையும் அறியாது அவளிடத்தில் மொத்தமாய் வீழ்ந்து போனான். ஆனால் அதை ஒத்துக் கொள்ளத்தான் அவனது வீம்பு தடுத்தது...

" குட்மார்னிங் சார்..." என்று அவனைப் பார்த்து உரைத்த கனிஷ்கா தனது மேசையில் வந்தமர்ந்து தனது வேலையைப் பார்க்க ஆரம்பித்தாள்.

இரண்டே நாளில் அவனின் முன்னாள் செயலாளரிடம் இருந்து வேலையைக் கற்றுக் கொண்டு அதைத் திறன்படச் செய்தவளை அவனால் மெச்சாமல் இருக்க முடியவில்லை. ஆனால் அதை அவன் வெளியில் காட்டி கொள்ளவில்லை. எவ்வளவு நேரம் அவளைப் பற்றிய யோசனையில் இருந்தானோ! கனிஷ்காவின் குரலில் தன்னுணர்வு பெற்றவன் அவளைப் புரியாது பார்த்தான்.

" இதில் எல்லாம் நீங்க சைன் பண்ணணும் சார்..." என்றவள் ஒரு கோப்பை எடுத்து அவன் புறம் நீட்டினாள்.

" பதினோறு மணிக்கு மீட்டிங் இருக்குது சார்." என்று அவள் ஞாபகப்படுத்த...

அவன் அவளை அர்த்தத்துடன் நிமிர்ந்து பார்த்தான். அவள் அவனது பார்வையை வெறுமையாய் எதிர் கொண்டாள். அதைக் கண்டவன் ஒன்றும் பேசாது கையெழுத்து போடும் பணியைச் செய்தான். அதன் பிறகே கனிஷ்காவால் மூச்சு

விட முடிந்தது... ஒவ்வொரு நாளும் அவனது பார்வையில் அவளது காதல் மனம் தவியாய் தவிக்கத்தான் செய்கிறது. ஆனால் எதிர்காலம் இல்லாத காதலுக்கு அர்த்தம் இல்லையே. அதனால் அவள் தனது காதலை மனதிற்குள் பூட்டி வைத்து கொண்டாள்.

சரியாகப் பத்தரை மணிக்கு பரத் தனது இருக்கையில் இருந்து எழவும் , அவளும் தனது கைப்பையை எடுத்துக் கொண்டு எழுந்தாள். அவளை மெச்சுதலாய் பார்த்தவன் முன்னால் நடக்க... அவனது பார்வையை உணராதவளாய் அவள் தலைகுனிந்தபடி அவனது பாதம் பின்பற்றிப் பின்னால் நடந்தாள்.

காரிலேறி நட்சத்திர விடுதியை அடைந்து இருவரும் இணைந்து உள்ளே செல்லும் வரை எந்தப் பிரச்சனையும் இல்லை. வாடிக்கையாளரை அவரது அறையில் சென்று சந்திப்பதற்காக இருவரும் மின்தூக்கியில் சென்ற போது இருவருமே அவரவர் யோசனையில் இருந்ததால் ஒருவரை ஒருவர் பார்த்து கொள்ளவில்லை. மின்தூக்கி நின்றதும் இருவரும் வெளியில் வந்த போது அங்கு விஷ்ணுபிரஹான் ஒரு அறையில் இருந்து வெளியில் வந்து கொண்டிருந்தான்.

அவனைக் கண்டதும் பரத்தின் முகத்தில் வஞ்சினம் தாண்டவமாடியது. விஷ்ணுபிரஹான் வாடிக்கையாளரை சந்திக்கும் நேரத்தை கருத்தில் கொண்டு தான் பரத் விஷ்ணுபிரஹானின் தங்கையை இங்கு அழைத்து வந்தது. அவனது கணக்கு தப்பாகவில்லை. விஷ்ணுபிரஹான் கண்முன் அவனது தங்கையோடு பரத் நின்று கொண்டிருந்தான். அவனுக்குத் தனது தங்கையைச் சாமர்த்தியமாகக் கடத்தி கொண்டு போகத் தெரிந்திருந்தால் இவனுக்கு அவனது தங்கையைப் புத்திசாலித்தனமாகத் தனது பிடிக்குள் வைத்துக் கொள்ளத் தெரியாதா என்ன! ஆண்களின் வேட்டையில் எப்போதும் பாதிக்கப்படுவது பெண்கள் தானே!

ஏதோ யோசனையில் நடந்து வந்து கொண்டிருந்த விஷ்ணுபிரஹான் உள்ளுணர்வு உந்த நிமிர்ந்து பார்த்தவன் அங்குப் பரத் மற்றும் கனிஷ்கா நின்று கொண்டிருப்பதைக் கண்டு அதிர்ந்து போனான்.

" கனி , நீ எங்கே இங்கே ?" என்று விஷ்ணுபிரஹான் அடக்கப்பட்ட கோபத்துடன் கேட்க...

அதுவரை தலைகுனிந்து ஏதோ யோசனையில் இருந்த கனிஷ்கா திகைப்புடன் அண்ணனை நிமிர்ந்து பார்த்தாள். திடுமென அவன் கேள்வி கேட்டதும் அவளால் பதில் கூற முடியவில்லை. அவனுக்கும் அவளுக்கும் சண்டை தான்... அண்ணனிடம் அவள் பேச மாட்டாள் தான்... இருந்தாலும் சகோதரனின் இந்தக் கேள்விக்கு அவள் என்ன பதில் கூறுவாள் ? அவள் பதில் அளிக்கும் முன் பரத் முந்தி கொண்டு பதிலளித்தான்.

" அவள் என்னோட பிஏ... நான் எங்கே கூப்பிட்டாலும் வர வேண்டியது அவளது கடமை... ஹோட்டலுக்கு மட்டுமல்ல எனது படுக்கைக்குக் கூப்பிட்டாலும் வர வேண்டியது அவளது கடமை..."

பரத் விஷ்ணுபிரஹானை சரியான இடம் பார்த்து அடித்தான்... அன்று அவனது தங்கை மீது விஷ்ணுபிரஹான் பொய் வழக்கு போட முனைந்ததை , தனது வீட்டினர் முன்னிலையில் தனது தங்கையை விஷ்ணுபிரஹான் அவமானப்படுத்தியது என்று எல்லாவற்றிற்கும் சேர்த்து இப்போது அவன் விஷ்ணுபிரஹானை அவமானப்படுத்தி விட்டான். விஷ்ணுபிரஹானை மட்டும் யோசித்த பரத் கனிஷ்காவை பற்றி யோசிக்க மறந்துவிட்டான்.

பரத்தின் வார்த்தையில் கனிஷ்கா நெருப்பில் குளித்தது போல் துடிதுடித்துப் போய் நின்றிருந்தாள்... அவள் கோழை போல் சிந்தித்து இருந்தது எல்லாம் ஒரு கணம் தான்... மறுகணம் மதுரையை எரித்த கண்ணகி போல் வெகுண்டு எழுந்தவள் பரத்தின் கன்னத்தில் ஓங்கி ஒரு அறை

அறைந்தாள். விஷ்ணுபிரஹான் பரத்தை அடிக்க வரும் முன் கனிஷ்கா அவனை அடித்திருந்தாள்.

" இதுக்கு மேல் ஒரு வார்த்தை பேசின , உன்னைக் கொன்னு போட்டிருவேன்... பொண்ணுங்கன்னா உனக்கு அவ்வளவு கேவலமா போயிட்டாளா ? பொண்ணுங்க வேலைக்கு வந்ததால் அவளைப் படுக்கைக்குக் கூப்பிடுவேளோ ? என்னவொரு கீழ்த்தரமான எண்ணம் ? ச்சீய்..." என்று அவள் அருவருப்புடன் முகத்தைத் திருப்பிக் கொண்டாள்.

" என்னடி சொன்ன... ? சம்பளம் கொடுக்கும் முதலாளியவே அடிப்பியா ?" அவள் அடித்ததில் ஆத்திரம் தலைக்கேறிய பரத் கோபத்துடன் அவள் அருகே வர...

" இனியும் உன் கிட்ட வேலை பார்க்க எனக்கு என்ன பைத்தியமா பிடிச்சியிருக்கு ?" என்று கூறிய கனிஷ்கா வெறுப்புடன் பரத்தை பார்த்தாள்.

அதற்குள் இருவருக்கும் இடையில் வந்த விஷ்ணுபிரஹான் பரத்தின் கைகளைப் பிடித்து முறுக்கியவன் அவனது முகத்தில் ஓங்கி ஒரு குத்து விட்டான். பரத் சுதாரிக்கும் முன் இவை அத்தனையும் நடந்து முடிந்திருந்தது. பதிலுக்கு ஆத்திரம் கொண்ட பரத் விஷ்ணுபிரஹானின் முகத்தில் ஓங்கி ஒரு குத்து விட்டான்...

" ஐயோ , ரெண்டு பேரும் சண்டை போடுறதை நிறுத்துங்கோ... நிறுத்த போறேளா இல்லையா ?" என்று கனிஷ்கா உரக்க கத்தினாள்...

ம்ஹூம் , பெண்ணவளின் மெல்லிய குரல் வலிய ஆண்கள் இருவரையும் சென்றடையவே இல்லை. இந்தக் காட்சியைச் சிசிடிவியில் பார்த்துக் கொண்டிருந்த விடுதி நிர்வாகி இருவரை உடன் அழைத்துக் கொண்டு அங்கே ஓடி வந்தான். அவர்கள் மூவரும் வந்து இவர்கள் இருவரையும் பிரித்துவிட்டனர்.

" என்ன சார் பிரச்சனை ?"

என்ன பிரச்சனை ? என்று கூறுவது... அதனால் இரு தரப்பும் அமைதியாக இருந்தனர். கனிஷ்கா மின்தூக்கி நோக்கி செல்ல... விஷ்ணுபிரஹான் அவசரமாக நிர்வாகியிடம் ,

" ஒரு பிரச்சனையும் இல்லை... நீங்க போங்க சார்..." என்று கூறி அவர்களை அனுப்பி வைத்தவன் பரத் புறம் திரும்பி ,

" உன் தங்கை மாதிரி என் தங்கை கிடையாது. அதை நினைவில் வச்சிட்டு எதுன்னாலும் செய்..." என்று அடக்கப்பட்ட கோபத்துடன் வார்த்தைகளை உதிர்த்தவன் தனது தங்கையை நோக்கி ஓடினான்.

அண்ணன் , தங்கை இருவரும் அளித்த அவமானத்தில் பரத் முகம் கறுக்க நின்றிருந்தான்.

அப்போது தான் அங்கு வந்து நின்ற மின்தூக்கியின் கதவு திறந்தது... முதலில் கனிஷ்கா நுழைய அடுத்து தங்கையைத் தொடர்ந்து விஷ்ணுபிரஹானும் உடன் உள்ளே நுழைந்தான். அவள் அண்ணனை திரும்பி கூடப் பார்க்கவில்லை.

" அவனைப் பத்தி தெரிஞ்சு இருந்தும் அவன் கூட எதுக்கு இங்கே எல்லாம் வர்ற ?" அதற்கு மட்டும் அவள் திரும்பி பார்த்து அவனை முறைத்தாள்.

" நீ அவன் கிட்ட வேலைக்குப் போனதே எனக்குப் பிடிக்கலை... ஆனா உன் மன்னிக்காகத் தான் நான் பேசாம இருந்தேன். அவன் தங்கைக்காகக் கொஞ்சம் அடக்கி வாசிப்பான்னு நினைச்சேன்... ஆனா அவன் அவனோட புத்தியை காட்டினான்." விஷ்ணுபிரஹான் கோபத்துடன் மின்தூக்கி சுவற்றில் தன் கை முஷ்டியை இறுக்கி குத்தினான்.

அதற்குள் கீழ்தளம் வந்துவிடக் கனிஷ்கா வெளியேறினாள். அவளைப் பின்தொடர்ந்து சென்ற விஷ்ணுபிரஹான் ,

" வா , நான் வீட்டில் ட்ராப் பண்றேன்..." என்று கூற...

" ஒண்ணும் தேவையில்லை..." என்று அண்ணனிடம் வெடித்தவள் சாலையில் சென்ற ஆட்டோ ஒன்றை நிறுத்தி அதில் ஏறினாள்.

விஷ்ணுபிரஹானும் வேகமாய்த் தனது காரை எடுத்துக் கொண்டு தங்கையைப் பின்தொடர்ந்தான். வீடு வரை அவளைத் தொடர்ந்தவன் அவள் வீடு இருந்த குடியிருப்பிற்குள் நுழைந்ததும் நிம்மதியுடன் தனது காரை அலுவலகம் நோக்கி திருப்பினான். ஆனாலும் அவன் பரத்தின் மீது கொலைவெறியில் இருந்தான்.

****

அந்த இரவு நேரத்தில் மருத்துவமனையின் மேல் மாடியில் ஷாமியானா பந்தல் போட்டு , விதவிதமான அலங்கார விளக்குகள் தொங்க விடப்பட்டு ஒரு விழாவுக்குரிய அழுகுடன் ஜொலித்தது. சிவசுப்ரமணியம் மருத்துவமனை குழுமம் ஆரம்பித்து ஐம்பது வருடங்கள் ஆகியிருந்ததைச் சிறப்பிக்கும் வண்ணம் இந்த விழா கொண்டாடப்பட்டது. அன்று பகல் முழுவதும் பல இலவச சேவைகள் புரிந்த மருத்துவர்கள் இப்போது வண்ண வண்ண உடையில் ரிலாக்சாக வந்திருந்தனர். எல்லோர் முகத்திலும் மகிழ்ச்சி தாண்டவமாடியது. பொன்விழா கொண்டாடும் மருத்துவமனை குழுமத்தில் தாங்களும் ஒரு அங்கத்தினர் என்பதே அவர்கள் அனைவருக்கும் அத்தனை பெருமையாக இருந்தது.

இந்த விழாவில் சிவேஷ்கந்தா , ஆராதனா இருவருக்குமான திருமண நிச்சயத்தை அறிவித்து விடலாம் என்று பார்வதி கூறிய போது சிவசுப்ரமணியம் மறுத்துவிட்டார். விஷ்ணுபிரஹான் பங்குதாரர் என்ற முறையில் அங்கு வருவான்... அதனால் தேவையில்லாத பிரச்சனை வரும். தொழில் வேறு , குடும்பம் வேறு என்று அவர் கூறிவிட்டார்.

விழாவிற்கு வருகை தந்த விஷ்ணுபிரஹானின் விழிகள் ஆராதனாவை எதிர்பார்த்து அங்குமிங்கும் அலைபாய்ந்தது. அவளுக்குத் திருமணம் முடிவு செய்திருப்பதாய் அவள் கூறிய அன்று அவன் அவளைப் பார்த்தது... அதற்குப் பின்பு அவன் அவளைப் பார்க்கவில்லை. அவனைப் போன்றே சிவேஷ்கந்தாவும் ஆவலுடன் ஆராதனாவின் வருகையை எதிர்பார்த்துக் காத்திருந்தான். இறுதியில் இருவரும் எதிர்பார்த்துக் காத்திருந்த ஆராதனா அங்கு வந்து சேர்ந்தாள்.

இரவு நேர விழா என்பதால் கையில்லாத நீண்ட வெள்ளை கவுன் அணிந்திருந்தாள். நெஞ்சு பகுதியிலும் , பாவாடையின் அடியிலும் வெள்ளை நிற பிரில் வைத்து அழகுற தைக்கப்பட்டு இருந்தது. நீண்ட முடியை இருமருங்கிலும் சுருட்டி விட்டுக் காதோரம் தொங்கவிட்டு இருந்தாள். அதே போல் முடியின் அடிப்பகுதியும் சுருட்டப்பட்டு அவள் நடக்கும் போது அலை அலையாய் துள்ளி விளையாடியது. அவள் அணிந்திருந்த வைர நகைகள் மின்விளக்கு ஒளியில் வர்ணங்களை வாரியிறைத்தது. அத்தனை வர்ணஜாலங்களையும் பின்னுக்குத் தள்ளிவிட்டது அவளது ஒற்றைப் புன்னகை... அவளது வசீகரப் புன்னகை இரு ஆண்மகன்களையும் வேரோடு வெட்டி சாய்த்தது என்றால் மிகையில்லை... விஷ்ணுபிரஹான் அறியாது அவளிடம் வீழ்ந்தான்... சிவேஷ்கந்தா அறிந்து அவளது அழகில் தொலைந்து போனான்...

' எட்டி நில்லு ' என்று எச்சரித்தவளை எப்படி நெருங்குவது என்று தெரியாது விஷ்ணுபிரஹான் திகைத்து நிற்க... சிவேஷ்கந்தா இயல்பு போல் ஆராதனா முன் சென்று அவளைப் புன்னகை முகமாய் வரவேற்றான்.

" வாங்க ஆராதனா..." என்று அவளை வரவேற்றவன் அவளது கையைப் பற்றி அழைத்துச் செல்ல...

முதன்முறையாய் விஷ்ணுபிரஹான் பொறாமை என்னும் சொல்லுக்கு முழுமையான அர்த்தத்தை உணர்ந்தான்.

அன்றும் அவன் பெண்ணவளை இழந்தான் தான்... அப்போது அவனுள் வேதனை , வலி ஏற்பட்டது என்னவோ உண்மை தான். அதை இல்லை என்று சொல்வதற்கு இல்லை. ஆனால் இன்று போல் ஆத்திரம் , பொறாமை ஏற்படவில்லை. அன்று அவன் தனது கைப்பொருளை நழுவ விட்ட ஆதங்கத்தில் , தனது இயலாமையில் மனதிற்குள் ஊமையாக அழுதான். ஆனால் இன்றோ அவன் தனது உரிமையானவளை இழந்துவிடாதிருக்க எண்ணி ஆத்திரத்தில் எரிமலையாய் வெகுண்டான்.

ஆராதனா மீதான உரிமையைத் தான் இழந்து வெகுநாட்களாகிவிட்டது என்பதை விஷ்ணுபிரஹான் உணராது இருந்தது தான் அந்தோ பரிதாபம்!!!

திருத்தமாகும்...!!!

விழிகளால் தன்னை எரித்துக் கொண்டிருந்த விஷ்ணுபிரஹானை பார்த்துவிட்ட ஆராதனா மனதிற்குள் திடுக்கிட்டவளாய் சிவேஷ்கந்தாவின் கைப்பிடியை விலக்க நினைத்தவள் , பின்பு மனதினை மாற்றிக் கொண்டு தானும் சிவேஷ்கந்தாவின் கையை இறுக பற்றிக் கொண்டாள். அதைக் கண்ட விஷ்ணுபிரஹானின் இரத்த அழுத்தம் ஏகத்துக்கும் எகிறியது.

' எவ்வளவு திமிர் ? என் கண் முன்னே அவனுடைய கையைப் பிடிச்சிட்டு நிற்பாள் ?' அவன் மனம் குமுறியபடி தனது கையிலிருந்த பழச்சாறு அடங்கிய கண்ணாடி குவளையை இறுக பிடித்தான். கொஞ்சம் விட்டால் கண்ணாடி குவளை உடைந்து போயிருக்கும். அதற்குள் அவன் சுதாரித்துக் கொண்டான்...

ஆராதனா , சிவசுப்ரமணியம் மற்றும் பார்வதியிடம் சென்று மரியாதை நிமித்தம் பேசி கொண்டிருந்தாள். உடனிருந்த சிவேஷ்கந்தா அப்போதும் அவளது கையை விடவே இல்லை. அது அவளுக்குப் புரிந்த போதும் அவளும்

அதைப் பெரிதாக ஆட்சேபிக்கவில்லை. அவள் விஷ்ணுபிரஹானுக்கு நிதர்சனத்தை உணர்த்திட நினைத்தாள்.

அவனுடைய பாதை வேறு... அவளுடைய பாதை வேறு... இருவருமே இனி இணைய முடியாது என்பதை அவன் தெள்ளத் தெளிவாக உணர்ந்து கொள்ள வேண்டும்... அவன் உணராமல் எங்கே ? அதில் எல்லாம் அவன் தெளிவாகத் தான் இருக்கிறான். அதான் சொல்கிறானே , ' நீ என்னைக் காதலிப்பதாய் சொல்லு... நான் விலகி போகிறேனஂ ' என்று... ' நான் அவங்களைக் காதலிப்பதாய் சொல்லி அவங்க முன்னாடி மண்டியிடணுமா ? அது எதுக்கஂ ? நோ நெவர். ' அவள் மனதிற்குள் பிடிவாதமாய்ச் சிலுப்பிக் கொண்டாள். காதலை கொண்டாடுபவனிடம் காதலை கூறலாம். அவளது காதலை கேலிக்கூத்தாக்க நினைப்பவனிடம் காதலை கூற அவளுடைய மனம் ஒப்பவில்லை. வேண்டாமென்று விலகியது வேண்டாமென்றே இருந்துவிட்டு போகட்டும் என்றே அவள் நினைத்தாள்.

சற்று நேரத்தில் விழா ஆரம்பமானது... சிவசுப்ரமணியம் தான் மருத்துவக் குழுமம் ஆரம்பித்த கதையைப் பேசினார்... அடுத்து விஷ்ணுபிரஹானை பேச சொல்லி அழைத்தார். அவன் ஆராதனாவை பார்த்தபடி மைக்கை கையில் பிடித்தான்.

"எனக்கும் மருத்துவத் துறைக்கும் எந்தவித சம்பந்தமும் இல்லை. வேறு ஒருவருக்காகத் தான் நான் இந்தத் துறையில் கால் பதித்தேன். என்னைப் பற்றிச் சொல்வதற்கு இவ்வளவு தான் இருக்கிறது." என்றவனது பார்வை ஆராதனா மீது தான் நிலைத்திருந்தது.

தொழிலில் கிடைத்த லாபத்தில் அவன் அவளுக்காகத் தான் இந்த மருத்துவமனை குழும பங்குகளை வாங்கினான். இதை எல்லாம் அவளுக்குக் கொடுப்பதற்காகத் தான் அவன் செய்தது. அவன் அவளுக்குச் செலுத்த வேண்டிய நன்றிக்கடன் மட்டுமே

இதிலிருந்தது. வேறு எந்தவித உள்நோக்கமும் இதில் கிடையாது.

ஆனால் அவளோ அவன் தன்னைப் பின்தொடர்ந்து வம்பு செய்வதற்காகவே இந்தத் துறையில் கால் பதித்ததாய் நினைத்து பல்லை கடித்தாள். ' என்ன ஒரு சீப் மென்டாலிட்டி ? இப்படி எல்லாம் செய்தால் நான் அவங்க காலடியில் விழுந்து விடுவேனா ?' அவளுக்குக் கோபம் கோபமாய் வந்தது.

அடுத்தடுத்து பேசிய மருத்துவர்களின் பேச்சில் தனது கவனத்தைச் செலுத்திய ஆராதனா தனது கோபத்தையும் மறந்தாள் , விஷ்ணுபிரஹானையும் மறந்தாள். ஆனால் அவன் அவளை மறக்கவும் இல்லை , அவளைப் பார்ப்பதை நிறுத்தவும் இல்லை.

எல்லோரும் பேசி முடித்ததும் சிவேஷ்கந்தா தனது கிட்டாரை எடுத்துக் கொண்டு எழுந்து நின்றான். எல்லோரும் அவன் பாட போவதை உணர்ந்து கைத்தட்டி ஆர்ப்பரித்தனர். ஆராதனாவும் ஆர்வத்துடன் சிவேஷ்கந்தாவை பார்த்தாள். சிவேஷ்கந்தா தனது இனிமையான குரலில் பாட ஆரம்பித்தான். அவனது குரல் வளத்தில் கூட்டம் மொத்தமும் உறைந்து போனதோ , விஷ்ணுபிரஹானை தவிர...

" Mere sapno ki rani kab aayegi tu
(The queen of my dreams, when will you come)
Aayi rut mastani kab aayegi tu
(The season of joy is here, when will you come)
Beeti jaaye zindagani kab aayegi tu
(Life is passing by, when will you come)
Chali aa, tu chali aa
(Come, please come)"

சிவேஷ்கந்தா ஆராதனாவை பார்த்துப் பாடினான். அதைக் கண்டு விஷ்ணுபிரஹான் கோபத்தில் பல்லை கடித்துக் கொண்டு அமர்ந்திருந்தான்.

' அவள் உனக்குக் கனவு பெண்ணே தான்... கடைசி வரை நீ அவளைக் கனவில் கண்டபடி வா , வான்னு பாடிக்கிட்டே இரு... ' விஷ்ணுபிரஹான் கோபத்தில் சிவேஷ்கந்தாவை பிடித்து மனதிற்குள் தாளித்துக் கொண்டிருந்தான்.

சிவேஷ்கந்தா பாடி முடித்ததும் சும்மாயிருக்காமல் , " என்னை விட மிஸ். ஆராதனா ரொம்ப அழகா பாடுவாங்க... அவங்க சின்ன வயசில் இருந்து கர்னாடிக் மியூசிக்கை முறைப்படி கத்துக்கிட்டவங்க..." என்று கூற...

ஆராதனா சங்கடத்துடன் நெளிந்தாள். விஷ்ணுபிரஹான் உணர்வற்ற முகத்துடன் அவளைப் பார்த்திருந்தான். தனக்குத் தெரியாத விசயங்களைச் சிவேஷ்கந்தா தெரிந்து வைத்திருப்பது கண்டு அவனுக்குத் தன் மேலேயே கோபம் வந்தது... கை முஷ்டியை இறுக்கி தனது கோபத்தைக் கட்டுப்படுத்திக் கொண்டவனின் முகம் உணர்வுகளைத் தொலைத்து இறுகி போனது...

"வாங்க ஆராதனா..." சிவேஷ்கந்தா அவளை அழைக்க...

அதற்கு மேல் பந்தா பண்ணாது எழுந்து வந்த ஆராதனா மைக்கை பிடித்தபடி பாட ஆரம்பித்தாள். ' தும் ஹி ஹோ ' என்கிற இந்தி பாடலை பாட ஆரம்பித்தாள். அது அவளுக்கு மிகவும் பிடித்த பாடல். காதலுக்காகத் தன்னையே கொடுக்க நினைக்கும் பரிச்சுத்தமான ஆன்மாவின் ஆத்மார்த்தமான காதலின் வெளிப்பாடு அந்தப் பாடல்...

" Kyunki tum hi ho
(Because it is only you)
Ab tum hi ho
(Now it is only you)
Zindagi ab tum hi ho
(My life is only you)

Chain bhi mera dard bhi
(My peace and my pain)
Meri aashiqui ab tum hi ho
(My love is only you)"

அவளையும் அறியாது அவளது விழிகள் விஷ்ணுபிரஹானை பார்த்தது. அவனைக் கண்ட நாள் முதல் இதோ இந்த நொடி வரை அவன் மீதான அவளது காதல் பொங்கி பிரவாகம் எடுத்து ஓடுகிறதே! அதை ஏன் அவன் உணராது போனானஂ ? அதை நினைத்து அவளுக்குத் துக்கமாக இருந்தது. தன்னையே பார்த்துக் கொண்டிருந்த ஆராதனாவை கண்டு விஷ்ணுபிரஹானின் விழிகள் பளபளத்தது. அதைக் கண்டு கொண்ட ஆராதனா சட்டென்று தனது பார்வையைச் சிவேஷ்கந்தா மீது திருப்பினாள். அதை உணர்ந்த விஷ்ணுபிரஹானின் முகம் கடுகடுத்தது.

" Tere liye
(For you)
Hi jiya main
(Only I lived)
Khud ko jo yun
(For me)
De diya hai
(I gave up all)
Teri wafa ne mujhko sambhala
(Your faithfulness supported me)
Saare ghamon ko
(I have removed all the)
Dil se nikala
(Rashes from the heart)
Tere saath mera hai
(With you I have)
Naseeb juda
(Luck separated)
Tujhe paake adhura na raha
(Seeing you never become incomplete)
Hunm..."

ஆராதனா சிவேஷ்கந்தாவை பார்த்து பாடிய வரிகளின் அர்த்தம் புரிந்து விஷ்ணுபிரஹானின் விழிகள்

ஆத்திரத்தில் சிவந்தது... அவன் பிறந்தை , வளர்ந்தது எல்லாம் மும்பை தான்... அதனால் அவனுக்கு இந்தி தண்ணிப்பட்ட பாடு... அதனால் எழுந்த கோபம் அவனது கண்களை மறைத்தது. அதற்கு மேல் தாங்க மாட்டாதவனாய் அவன் நாற்காலியில் இருந்து வேகமாக எழுந்து விறுவிறுவென நடந்து விழா நடக்கும் இடத்திற்கு நேர் எதிர்புறம் சென்று நின்றான். காற்றில் படபடத்த சிகையைக் கோதி கொடுத்தவன் படபடக்கும் தனது மனதினை அடக்க இயலாது தவித்தான்.

இப்போதும் அவன் தனது மனதினை உணரவில்லை... ஆராதனா மனதில் தான் இல்லையோ என்கிற தவிப்புமி , கோபமும் தான் அவனது கண்களை மறைத்தது. இந்தத் தவிப்பிற்குமி , கோபத்திற்குமான அடிப்படை காரணத்தை அவன் உணர்ந்து கொள்ள முடியாதபடி அவனது கடந்த காலம் அவனைத் தடுத்தது. எதை எதையோ நினைத்தபடி அவன் தன்னைப் போட்டுக் குழப்பிக் கொண்டான். ஆராதனா விசயத்தில் மட்டும் அவன் எப்போதுமே குழப்பவாதி தான். இன்றும் அவன் தன்னையும் உணராதை , அவளையும் புரியாது இருவரையும் சேர்த்து வருத்தி கொண்டிருக்கிறான்.

விஷ்ணுபிரஹான் கனவுக்குமி , நனவுக்கும் இடையில் கிடந்து அல்லாடும் சாதாரண மனிதன்! கனவோ அவனைச் சிறந்த காதலனாக இருக்கச் சொன்னது. நனவோ அவனைச் சிறந்த கணவனாக இருக்கச் சொன்னது. அவனால் இரண்டில் ஒன்றை மட்டும் தான் செய்ய முடியும்! ஆனால் ஒரு ஆணால் வாழ்க்கையில் சிறந்த காதல் கணவனாக மட்டுமே சோபிக்க முடியும் என்பதை அந்தத் தொழிலதிபன் அறியாது போனது தான் விந்தையிலும் விந்தை...

குளிர்ந்த காற்று விஷ்ணுபிரஹானை வருடி சென்று அவனது மனதினை குளிர்வித்தது. அதில் சற்று மனம் தெளிந்தவன் மீண்டும் விழா நடக்கும் இடத்திற்கு வந்தான். அப்போது ஆராதனா மட்டும் தனித்துச் செல்வது தெரிந்தது. அதைக் கண்டு அவன் விழிகள் பளபளக்க , மனதில்

வன்மம் தலை தூக்க அவளைப் பின்தொடர்ந்தான். அவள் மொட்டை மாடிப்படியில் இருந்து இறங்கி கீழ்தளம் செல்ல வேண்டி மின்தூக்கி அருகில் வந்த போது அவன் அவளது கையைப் பிடித்திழுத்து யாரும் பார்க்காதவாறு மாடிப்படி கீழே அழைத்துச் சென்றான். அவனது செயலில் முதலில் திகைத்த ஆராதனா பின்பு பயத்துடன் அவனைப் பார்த்தாள்.

அங்கிருந்த சுவற்றில் அவளைச் சாய்த்து நெருங்கி நின்றவன் அவளது விழிகளில் தெரிந்த பயத்தில் ஒரு நொடி நிதானித்தான். பின்பு அமைதியாக அவளை ஏறிட்டவன் ,

"என்ன... என்னை வெறுப்பேத்தி பார்க்கணும் நினைக்கிறியா ?" அதைக் கேட்டு அவள் அவனைக் குழப்பத்துடன் பார்த்தாள்.

"அதான் அவன் கூட ஒட்டிக்கிட்டு அலைஞ்சியே... அதைச் சொன்னேன்..."

"இதோ பாருங்கோ... அவர் என்னுடைய வருங்காலக் கணவர்... தேவையில்லாம அசிங்கமா பேசாதீங்கோ..." என்று அவள் கோபமாய்க் கூற...

"அப்போ நான் யாருடி உனக்கு ?" அவனும் கோபமாய் வெடித்தான்.

"நீங்க எனக்கு யாருன்னு உங்க மனசாட்சி கிட்ட கேட்டு பாருங்கோ... அது பதில் சொல்லும்."

கோபமாய்ப் படபடத்தவளின் குரல்வளையை ஆத்திரத்துடன் நெரித்தபடி , " உன் மனசாட்சிக்கு அது தெரியாதாக்கும்..." என்று அவன் கூறும் போதே அவனது கை அதை உணர்ந்தது.

அதில் மனமும் , முகமும் மலர்ந்து போனவனாய் அவன் தனது கையைத் தளர்த்தினான். அவளை விட்டு சற்று விலகி நின்று கைகளைக் கட்டி கொண்டவன் அவளை இமைக்காது பார்த்தான். அவனது முகத்தில் அத்தனை

சந்தோசம் தெரிந்தது. அவள் புரியாது அவனைப் பார்த்திருந்தாள். அவனது கோபத்திற்கான காரணமும் அவளுக்குத் தெரியவில்லை... அவனது சந்தோசத்திற்கான காரணமும் அவளுக்குத் தெரியவில்லை...

"இனிமேல் இப்படி உடம்பு தெரியற மாதிரி டிரெஸ் போடாதே..." என்றவனது பார்வை அவளது வழுவழுப்பான தோள்களின் மீது பாய்ந்தது...

ஆராதனாவின் உடை , அவளது அலங்காரம் எல்லாம் சேர்த்து அவனை மயக்கியது. அவனது இளமை உணர்வுகளைத் தூண்டிவிட அவள் ஒருவளால் மட்டுமே முடியும் என்பதை அக்கணம் அவன் உணர்ந்தான். அவளை அள்ளி அணைத்த , முத்தமிட்டு கொஞ்ச சொல்லி அவனது கைகள் பரபரத்தது. அவன் நெஞ்சோடு கட்டியிருந்த தனது கைகளை இன்னமும் இறுக்கி கொண்டான். என்ன தான் உரிமை , உறவு இருந்தாலும் பெண்ணவளின் மனம் அறியாது அவளது நுனி விரல் தீண்ட கூட அவனுக்கு விருப்பம் இல்லை.

"பத்தாம்பசலித்தனமா பேசாதேள்... இந்த டிரெசுக்கு என்ன குறைச்சல் ? பார்ட்டிக்கு இது மாதிரி டிரெஸ் தான் போட்டுண்டு வருவா..."

"அது நீ இருந்த அமெரிக்காவில்... இங்கே இல்லை... இங்கே பார்க்கிறவங்க பார்வை வேறு..."

"இப்போ இந்த ஆராய்ச்சி ரொம்ப முக்கியமா ?" அவள் கேட்கும் போதே அவளது அலைப்பேசி சிணுங்கியது. அதைப் பார்த்தவள் முகத்தில் பதற்றம் வந்து தொற்றிக் கொண்டது.

"ப்ளீஸ் தள்ளுங்கோ... ஒரு முக்கியமான கேஸ்... நான் போகணும்..." என்று கெஞ்சியவளின் கடமை உணர்வை மதித்து அவன் விலகி நின்றான்.

ஆராதனா அவசரமாக மின்தூக்கியை நோக்கி விரைய... அவனும் அவளைப் பின்தொடர்ந்து மின்தூக்கியினுள்

நுழைந்தான். அவள் வெளியேறிய தளத்தில் அவனும் வெளியேறி அவளின் பின்னேயே சென்றான். அவள் பிரசவ அறைக்குள் நுழையும் முன் அவனை ஒரு பார்வை பார்த்தாள். அதன் அர்த்தம் புரிந்தவனாய் அவன் இரு கையையும் தூக்கி ,

"ஓகே , ஓகே... யூ கேரி ஆன்..." என்றவன் அங்கிருந்த இருக்கையில் அமர்ந்தான்.

அப்போது தான் அவன் அங்கிருந்தவர்களைக் கவனித்தான்... ஒரு இளைஞனும் , வயதான தம்பதியும் அங்கு அமர்ந்திருந்தனர். அந்த இளைஞன் படபடப்பாக அமர்ந்திருந்தான். அத்தோடு அவனது முகத்தில் கவலை படர்ந்திருந்தது. உள்ளே இருப்பது அவனது மனைவியாக இருக்கலாம்.

அப்போது அங்கு வந்த ஆராதனா நேரே அந்த இளைஞனிடம் சென்று , " குழந்தை பிறக்க இன்னும் ரெண்டு மணி நேரமாகலாம்." என்று தகவல் கொடுத்தவள் ,

"உங்களுக்கு விருப்பம் இருந்தால் டெலிவரி அப்போ நீங்க உங்க வொய்ப் கூட வந்து இருக்கலாம்." என்று கூற...

"அவள் வேதனைப்படுறதை பார்க்கும் சக்தி எனக்கு இல்லை டாக்டர்..." என்று அவன் மறுக்க...

"தாய்மை என்பது பெண்களுக்குக் கிடைத்த வரம். அது வேதனை இல்லை. இந்த மாதிரி நேரத்தில் நீங்க அவங்களுக்குப் பக்கபலமா இருக்கணும். அது தான் அவங்களுக்குத் தன்னம்பிக்கை , பலத்தைக் கொடுக்கும்..."

அவளது பேச்சை கேட்டு அவனும் சம்மதித்தான். அவள் புன்னகை முகத்துடன் அங்கிருந்து அகல... விஷ்ணுபிரஹான் மனதில் பலத்த அடி வாங்கியவனாய் அமர்ந்திருந்தான். ' தாய்மை என்பது பெண்களுக்குக் கிடைத்த வரம் ' ஆராதனாவின் வார்த்தைகள் திரும்பத்

திரும்ப அவனது காதுகளில் ஒலித்துக் கொண்டே இருந்தது. எவ்வளவு பெரிய தவறை அவன் பெண்ணவளுக்கு இழைத்திருக்கிறான். அவன் மனம் நொந்தவனாய் அங்கேயே அமர்ந்திருந்தான். எத்தனை நேரம் அப்படியே அமர்ந்திருந்தானோ!

"பிரஹான்..." ஆராதனாவின் அழைப்பில் அவன் தன்னுணர்வு பெற்று அவளை ஏறிட்டுப் பார்த்தான்.

"நீங்க எதுக்கு இங்கே இருக்கீங்க ?"

' உனக்காகத் தானஂ ' என்று வாய் வரை வந்த வார்த்தையை விழுங்கி கொண்டவனஂ , " சும்மா தான்..." என்க... அதை அவள் நம்பாதவளாய் அவனை ஒரு பார்வை பார்த்தவள் அறையினுள் சென்று மறைந்தாள்.

சிறிது நேரத்தில் கேட்ட பெண்ணின் அலறல் சத்தத்தில் விஷ்ணுபிரஹான் அரண்டு தான் போனான். அதைத் தொடர்ந்து கேட்ட குழந்தையின் அழுகை சத்தத்தில் அவனுள் எழுந்த நிம்மதியை வார்த்தையால் வடிக்க முடியாது.

அப்போது வெளியில் வந்த அந்தக் கணவன் பெரியவர்களை நோக்கி சென்றஂ , " பெண் குழந்தை..." என்று மகிழ்ச்சியோடு கூற... அவனது மகிழ்ச்சி இவனையும் தொற்றிக் கொண்டது.

"சாரஂ , சாக்லேட் எடுத்துக்கோங்க..." என்று அவன் இவனிடத்தில் கூற...

"வாழ்த்துக்கள்..." என்று கூறியபடி விஷ்ணுபிரஹான் சாக்லேட்டை எடுத்துக் கொண்டான்.

ஆராதனா அறையில் இருந்து வெளியில் வர... அவளைத் தொடர்ந்து செவிலிப்பெண் குழந்தையைத் தூக்கி கொண்டு வந்தாள். குழந்தையை வாங்கிக் கொண்ட அந்த மூதாட்டி ஆராதனாவை பார்த்து கையெடுத்து கும்பிட்டஂ ,

"நீ நல்லா இருக்கணும்மா... கடவுள் மாதிரி வந்து தாயையும் , சேயையும் காப்பாத்தி கொடுத்திருக்க..." என்று அவளை வாழ்த்தினார்.

"இது என்னோட கடமைம்மா..." என்று புன்னகை புரிந்த ஆராதனா விஷ்ணுபிரஹான் கண்களுக்கு வெள்ளை உடை அணிந்த தேவதையாகத் தான் தெரிந்தாள். இந்தத் தேவதைக்கு இறக்கைகள் மட்டும் தான் இல்லை...

ஆராதனா அவனைக் கண்டு கொள்ளாது தனது கடமையை முடித்துவிட்டு மின்தூக்கியை நோக்கி செல்ல... விஷ்ணுபிரஹான் அவளை நோக்கி ஓடினான். இருவரும் உள்ளே நுழைந்ததும் மின்தூக்கி கதவு முடி கொண்டது. அவன் அவள் அருகே வந்தவன் ,

"தேவதை எப்படி இருக்கும்ன்னு எனக்குத் தெரியாது. ஆனா இன்னைக்கு நான் தேவதையைப் பார்த்துவிட்டேன் , உன் உருவில்..." என்றவனைக் கண்டு அவள் இமைக்க மறந்து விழி விரித்தாள்.

"ஸ்வீட் தேவதைக்கு ஸ்வீட் கொடுக்க வேண்டாமா ?" என்றவன் தனது கையிலிருந்த சாக்லேட்டை பிரித்து அவளது வாய்க்குள் திணித்தான்.

"என்ன பண்றேள் ?" பேச திறந்த அவளது வாயினுள் சாக்லேட்டை வைத்து நன்றாக அழுத்தி விட்டான். அவள் அதைத் துப்ப வழியில்லாது மெல்ல மென்றாள்.

அதற்குள் மின்தூக்கி கதவு திறக்க... இருவரும் மௌனமாக வெளியில் வந்தனர். அவள் தனது காரை நோக்கி செல்ல... அவனும் தனது காரை நோக்கி சென்றான்... காரை கிளப்பிக் கொண்டு சாலையில் சென்ற போது தான் ஆராதனா அதைக் கவனித்தாள். விஷ்ணுபிரஹானின் கார் அவளது காரை பின்தொடர்ந்து வருவதை... தன் மீதான அவனது அக்கறையைக் கண்டு அவளுக்குக் கண்கள் கரித்தது. இப்போது இருக்கும் அக்கறை ஏன் முன்பு இல்லாது போனதோ ? முற்றுப்புள்ளி வைத்த கதைக்கு இவன் ஏன் தொடரும் போடுகின்றான் ?

என்று அவள் துக்கத்துடன் நினைத்து கொண்டாள். அந்தக் கணம் வாயிலிருந்த சாக்லேட் அவளுக்குக் கசந்தது.

சிவேஷ்கந்தா கூட அவள் கிளம்பத் தாமதமாகும் என்றதும் கிளம்பி சென்று விட்டான். ஆனால் விஷ்ணுபிரஹான் தனக்காகக் காத்திருந்தது குறித்து அவளுக்கு மகிழ்ச்சி ஒருபுறம் இருந்தாலும் மறுப்பக்கம் துக்கமே அதிகம் இருந்தது. காலம் கடந்த ஞானோதயத்தால் யாருக்கும் பயனில்லை.

வீடு வந்ததும் ஆராதனா காரின் ஹார்னை ஒலிக்கச் செய்ய... காவலாளி வந்து கதவை திறந்துவிட்டான்... வீட்டினுள் செல்லும் முன் ஆராதனா தனது கார் கண்ணாடியை இறக்கி விட்டு அவனைத் திரும்பி பார்த்தாள். அவளது பார்வைக்காகக் காத்திருந்தார் போன்று விஷ்ணுபிரஹானின் விழிகள் பளபளத்தது. அவள் அவனிடம் மெல்ல தலையசைத்து விடைபெற்றவள் அடுத்த நொடி வேகமாய்க் காரை வீட்டினுள் செலுத்தி மறைந்தாள்.

ஆராதனாவின் ஒற்றைத் தலையசைப்பில் யானை பலம் பெற்றவன் போல் விஷ்ணுபிரஹான் தனது காரை கிளப்பிக் கொண்டு சென்றான். அந்தக் கணம் அவனுள் ஒரு திட்டம் உருவானது... அதன் பலனை நினைத்து பார்த்தவன் உல்லாசமாய் விசிலடித்தான்.

அன்றே அவன் அர்ச்சனாவை சந்தித்து மனம் விட்டுப் பேசினான். அவன் கூற வருவதைப் பொறுமையுடன் கேட்ட அர்ச்சனா ,

"உங்க சந்தோசம் தான் எனக்கு முக்கியம் மாமூ..." என்றாள் மலர்ந்த முகத்தோடு...

"ஆனால் நீ... ?" அவனது முகத்தில் கவலை படர்ந்தது...

"எனக்கு என்ன குறை மாமா ? நீங்க இருக்கீங்க... குழந்தைங்க இருக்காங்க..." என்றவளது தோளில் அவன்

ஆறுதலாய் கை வைத்தான். அவள் ஆறுதல் வேண்டி அவனது தோளில் சாய்ந்து கொண்டாள்.

இருவரது மனதிலும் கடந்த காலமும் , எதிர்காலமும் எழுந்து அவர்களை மருட்டியது.

****

"ம்மா , போதும்மா... நான் சர்வீஸ் பண்ண போறேனா ? இல்லை சாப்பிட போறேனா ?" ஆராதனா அன்னையிடம் சிணுங்கினாள்.

"அங்கே சாப்பாடு எப்படி இருக்குதோ ? அதனால் தான் உனக்குப் பிடிச்ச நொறுக்குத் தீனிகள் செஞ்சி வச்சியிருக்கேன்... ஒழுங்கா நேரா நேரத்துக்குச் சாப்பிடு..." அவந்திகா மகளை அதட்டினாள்.

"ம் , ம்..." என்று அவள் தலையாட்டினாள்.

இதை எல்லாவற்றையும் கவலையுடன் பார்த்திருந்த தந்தையின் அருகில் வந்தமர்ந்தாள் ஆராதனா.

"ப்பா..."

"சொல்லு பட்டு..." அர்ஜூன் தனது கவலையை மறைத்துக் கொண்டு அவளைப் பார்த்து கேட்க...

"நான்... எனக்கு... இங்கேயே இருந்தால்..." என்று தடுமாறிய மகளைக் கூர்ந்து பார்த்திருந்தான் அர்ஜூன்.

"நேக்கு மனசு மாறிருமோன்னு பயமாயிருக்குப்பா..."

ஒரு வாரத்திற்கு முன் தன்னை வீடு வரை கொண்டு வந்து விட்டு சென்ற விஷ்ணுபிரஹானின் அக்கறையை நினைத்து அவள் பயம் கொண்டாள். அவனது அக்கறை அவன் மீதான தனது காதலை புதுப்பித்து விடுமோ ? என்று அவளுக்குப் பயமாக இருந்தது. அதைத் தான் தந்தையிடத்தில் அவள் கூறியது.

"நீ அவ்வளவு பலவீனமானவளா பட்டா ?" தந்தையின் கேள்வி குத்தீட்டியாய் அவளைக் குத்தி கிழித்தது.

"நான் பலவீனமானவள் இல்லைன்னு உங்களுக்கே தெரியும்ப்பா. என் வாழ்க்கையில் எத்தனையோ ஆண்களை நான் கடந்து வந்திருக்கேன்... எல்லோருக்கும் எனது பதில் ' நோ ' தான். ஆனால் நான் ஏன் பிரஹானுக்கு மட்டும் என் மனசில் இடம் கொடுத்தேன்னு உங்களுக்குத் தெரியாதா ? ஏன்னா அவங்க உங்களோட சாய்ஸ்..." என்றவளை கண்டு அந்தத் தகப்பன் தனது தவறால் தலைகுனிந்தான்.

"இதோ இப்போதும் உங்க சாய்ஸ்க்கு தான் நான் தலையாட்டி இருக்கேன். உங்களுக்காக நான் எதையும் செய்வேன். என்னால் நீங்க அசிங்கப்படக் கூடாது. ஆனால் என் மனக்காயம் ஆற எனக்குக் கொஞ்சம் தனிமை வேண்டியிருக்கு... ப்ளீஸ்ப்பா..." என்று இறைஞ்சுதலாய் கேட்டவளை கண்டு அந்தத் தகப்பனால் சம்மதிக்காமல் முடியாமல் இருக்க முடியவில்லை.

"மாமா , மாமி கிட்ட சொல்லிட்டு போகணும்ப்பா... அவங்களைப் பார்க்க போக மட்டும் பெர்மிசன் கொடுங்கோ..."

"அதெல்லாம் நீ அங்கே போகத் தேவையில்லை..." என்றபடி பரத் அங்கே வந்தான்... அவள் சகோதரனிடம் பேசாது தந்தையைப் பார்த்தாள்.

"பேசாம இரு பரத்..." மகனை அதட்டிய அர்ஜூன் மகளிடம்
,

"நீ போயிட்டு வாம்மா..." என்க...

"நானும் உன் கூட வர்றேன்..." என்றபடி பரத் தங்கையுடன் கிளம்பினான்...

வேறுவழியின்றி ஆராதனா அண்ணனை அழைத்துக் கொண்டு சுந்தரியை காண சென்றாள். அடுத்த அரை மணி நேரத்தில் அவர்கள் வீட்டின் முன் சென்று நின்று அழைப்பு

மணியை அழுத்தினாள் ஆராதனா. சில நொடிகளில் கதவை திறந்த கனிஷ்கா அங்கு நின்று கொண்டிருந்த பரத்தை கண்டு திகைத்து நின்றாள்.

"கனி , வேலைக்குப் போகலையா ?" ஆராதனா கேட்கவும் தன்னுணர்வு அடைந்த கனிஷ்கா பதில் சொல்லாது பரத்தை முறைத்து பார்த்தாள்.

தங்கையின் பாதுகாப்பிற்காக உடன் வந்த பரத் சிறிதும் கனிஷ்காவை பற்றிச் சிந்திக்கவில்லை. இந்த நொடியை கடக்க முடியாது அவன் பயங்கரமாக உணர்ந்தான். தான் பேசிய வார்த்தைகளின் வீரியம் அவனைப் பெரிதாய்த் தாக்கியது. கனிஷ்கா அவனை எரித்துவிடுவது போல் பார்த்தவள் ,

"உடம்பு சரியில்லை மன்னி... நீங்க உள்ளே வாங்கோ..." என்றவள் பரத்தை அழைக்காது உள்ளே சென்றாள்.

"என்ன செய்யுது கனி... ?" ஆராதனா அக்கறையாய் அவளது நெற்றி , கழுத்தில் கை வைத்து பார்த்தாள்.

"டெம்பரேச்சர் இருக்கு கனி... மாத்திரை போட்டியா ? இல்லை எழுதி தரவா ?"

அப்போது தான் பரத் கனிஷ்காவை ஊன்றி கவனித்தான். அவள் முகமெல்லாம் சிவந்து , கண்கள் வீங்கி , இமைகள் தடித்துப் பல நாட்கள் காய்ச்சலில் விழுந்தவள் போன்று இருந்தாள். அவனது மனம் குற்றவுணர்வில் குமைந்தது. ஆனாலும் அவள் தன்னை அடித்தது ஒரு ஆணாய் அவனால் ஜீரணித்துக் கொள்ள முடியவில்லை.

"மாத்திரை போட்டிருக்கேன் மன்னி..." என்றவள் ,

"நீங்க உட்காருங்கோ... அம்மா அப்பாவுக்குச் சாப்பாடு ஊட்டிண்டு இருக்கா... சித்த இருங்கோ , கூப்பிடறேன்."

"இல்லை... நானே போய்ப் பார்க்கிறேன்." என்ற ஆராதனா அண்ணனை பார்த்து ,

"நீங்க உட்காருங்கோ அண்ணா..." என்று கூறிவிட்டு அறையை நோக்கி சென்றாள்.

கனிஷ்கா ஒன்றும் கூறாது சமையலறைக்குச் சென்றுவிட்டாள். பரத் அங்கு அமராது நேரே சமையலறை நோக்கி சென்றான். சீதா வேலைக்குச் சென்றிருந்தாள். வைதேகி அசதியில் படுத்திருந்தாள். அவளது மகன் அடுத்த வீட்டிற்கு விளையாட சென்றிருந்தான். யாருமில்லாதது அவனுக்குச் சாதகமாகி போனது.

"ம்க்கும்..." என்று தொண்டையைச் செருமியவனைக் கண்டு திடுக்கிட்டுப் போய்த் திரும்பி பார்த்த கனிஷ்கா அங்குப் பரத்தை கண்டதும் அலட்சியமாய்ப் பார்த்து வைத்தாள்.

"என்ன தைரியம் இருந்தால் என்னையவே அடிப்ப... ?" அவன் நெருங்கி வந்து அவளது கைகளைப் பிடித்துக் கொண்டு கேட்க... அவனது எதிர்பாராத இந்தச் செயலில் அவள் தனது கையை இழுத்துக் கொள்ள முயன்றபடி ,

"நீங்க மட்டும் அப்படித் தப்பா பேசலாமா ? பொண்ணுங்கன்னா கிள்ளுக்கீரையா உங்களுக்கு ?"

"ஓஹோ... நான் பேசியதுக்குத் தான் அடிச்சியா... ? அப்போ ஐஞ்சு வருசத்துக்கு முன்னாடி நீ என்னைப் பார்த்துத் தப்பா பேசினியே... அதுக்கு என்ன பதில் சொல்ல போற ? அதாம்மா நீ என் கிட்ட ஐ லவ் யூ சொன்னியே..." என்றவனை அவள் திகைப்புடன் பார்க்க...

"அதுக்கு நானும் பதிலுக்கு உன்னை அடிக்கவா ?" என்றவன் மேலும் அவள் அருகில் நெருங்கி வந்தான்...

"சும்மா சும்மா வம்பு பண்ணினேள்... நடக்கிறதே வேற..."

"என்னடி பண்ணுவ... ?" அவன் தெனாவெட்டாய் கேட்க...

"மன்னியை கத்தி கூப்பிடுவேன்..." என்றவள் அடுத்த நொடி ,

"மன்னி..." என்று உரக்க கத்தி அழைத்தாள்...

"எதுக்குடி இப்படிக் கத்துற... ?" அவன் பின்னால் திரும்பி பார்த்தபடி அவளது வாயை தனது வலக்கையால் பொத்தினான்...

அவனது கை ஸ்பரிசத்தில் அவள் திகைத்து போய் உறைந்து நின்றாள்... அவள் அமைதியாகவும் அவன் என்னவென்று திரும்பி பார்த்தான்... அவன் தான் செய்த காரியத்தை உணர்ந்து வேகமாய்த் தனது கையை விலக்கியவன் அவளது திகைத்த தோற்றத்தை கண்டு அவனும் திகைத்து நின்றான்.

"கனி , என்னாச்சு... ?"

வெகு அருகில் கேட்ட ஆராதனாவின் குரலில் பரத் வெலவெலத்துப் போனான். பரத் சமையலறையை விட்டு வெளியேறும் முன் ஆராதனா அங்கு வந்து சேர்ந்தாள். அண்ணன் அங்கே நிற்பதை கண்டு அவள் வியப்பாய் புருவத்தை உயர்த்தினாள்...

"அண்ணா , நீங்க எங்கே இங்கே ?"

"தொண்டை வறண்டு இருமலா வந்துச்சு... அதான் தண்ணி குடிக்கலாம்ன்னு..." அவன் இழுத்தான்...

"திடுப்புன்னு இவரை இங்கே பார்த்ததும் பயந்துட்டேன் மன்னி..." கனிஷ்கா அவனைக் காட்டி கொடுக்காது பேசினாள். அதைக் கண்டு பரத் நிம்மதியுற்றான். ஆனாலும் அவன் அதை வெளிக்காட்டி கொள்ளவில்லை.

"தண்ணி குடிச்சீங்களா அண்ணா... ?" ஆராதனா கேட்கவும்...

"இல்லை வேண்டாம் , பட்டு... நாம கிளம்பலாமா ?" என்று பரத் கேட்க...

ஆராதனா எல்லோரிடமும் விடைபெற்றுக் கொண்டு கிளம்பினாள்... பரத் கனிஷ்காவை கண்டு கொள்ளாது கிளம்ப... கனிஷ்காவோ அவனை முறைத்துக் கொண்டு நின்றிருந்தாள்.

****

ஆராதனா ஜெய்ப்பூர் விமான நிலையத்தில் இருந்து வெளியில் வந்தாள். அவள் இராஜஸ்தான் மாநிலத்தில் இருந்த ஒரு கிராமத்திற்குச் சேவைக்காக அனுப்பட்டு இருந்தாள். அவர்களது மருத்துவமனையின் சார்பாக மக்களுக்கு இலவச சேவை செய்ய வேண்டி மருத்துவர்களை இது போன்று அனுப்புவது வழக்கம். அதுவும் விருப்பமுள்ள மருத்துவர்கள் மட்டுமே சேவை செய்யலாம். இதற்கு மருத்துவர்கள் முன்பே விண்ணப்பிக்க வேண்டும். ஆராதனா ஏற்கெனவே இதற்கு விண்ணப்பித்து இருந்தாள். அது இப்போது தான் மருத்துவமனை நிர்வாகத்தால் ஏற்றுக் கொள்ளப்பட்டு இருக்கிறது. அதை ஒரு வாய்ப்பாகப் பயன்படுத்திக் கொண்டு அவள் திருமணப் பிரச்சனையில் இருந்து விடுபட வேண்டி மன நிம்மதிக்காக இங்கே வந்திருக்கிறாள்.

உண்மையில் அவள் செல்ல வேண்டியது அஸ்ஸாம் மாநிலத்தில் உள்ள ஒரு கிராமத்திற்கு... விமான நிலையத்தில் பெற்றோரிடம் விடைபெற்று செக்கின் செய்யும் போது மருத்துவமனை சார்பாக வந்த ஒருவர் அவளிடம் ஒரு கவரை கொடுத்துவிட்டு சென்றார். அதில் இராஸ்தானில் உள்ள டோக்பூருக்கு செல்ல வேண்டிய மருத்துவர் வராததால் அவளை அங்குச் செல்லுமாறு நிர்வாகம் கேட்டுக் கொண்டது. விமானத்திற்குத் தாமதமாகி விட்டதால் அவள் இதைப் பற்றிப் பெரிதாக யோசிக்கவில்லை.

ஜெய்ப்பூரில் இருந்து டோக்பூருக்கு செல்ல அவளுக்கு என்று தனியே ஜீப் வந்திருந்தது... அதில் ஏறியவள் வெளியில் வேடிக்கை பார்த்தபடி வந்தாள். அங்கிருந்த கட்டிடங்களும் , மக்கள் எல்லோருமே அவளுக்கு வித்தியாசமாகத் தெரிந்தனர். தன்னிடம் இருந்த புகைப்படக் கருவியில் புகைப்படம் எடுத்தபடி வந்தவளுக்கு அப்போதும் தனது பெற்றோருக்கு அழைத்துத் தான்

வந்திருக்கும் இடத்தைப் பற்றிச் சொல்ல வேண்டும் என்று தோன்றவில்லை...

சுமார் ஐந்து மணி நேர பயணத்திற்குப் பிறகு அவள் செல்ல வேண்டிய கிராமம் வந்தது. அவள் அதைப் பிரமிப்புடன் பார்த்தபடி வந்தாள்... பாலைவன சோலையாகக் காட்சியளித்த அந்தக் கிராமம் அவளை வியப்பின் உச்சத்திற்கே அழைத்துச் சென்றது. அவள் தங்க வேண்டிய வீடு வந்ததும் அவள் ஜீப்பிலிருந்து கீழே இறங்கினாள். பழமையும் , புதுமையும் கலந்து அந்த மண்ணின் மணத்தோடு கட்டியிருந்த அந்த வீடு அவளது மனதினை பெரிதும் கவர்ந்தது. அதன் சுவற்றில் தீண்டப்பட்டிருந்த ஓவியங்கள் அவளது கருத்தை கவர... அவள் அதைப் புகைப்படம் எடுப்பதற்காகப் புகைப்படக் கருவி மூலம் அதை உற்று நோக்கினாள்... அப்போது அதை மறைத்தார் போன்று ஒரு உருவம் இடையில் வந்து நின்றது...

அவள் சலிப்புடன் , " த்ச்சு..." என்றபடி நிமிர...

"வெல்கம் பேபி..." என்று விரிந்த புன்னகையுடன் தன்னை வரவேற்ற விஷ்ணுபிரஹானை கண்டு அவள் அதிர்ந்து போய் நின்றாள்!!!

திருத்தமாகும்...!!!

"நீங்க... நீங்க எங்கே இங்கே ?"

விஷ்ணுபிரஹானை எதிர்பாராது அங்குக் கண்டதும் ஆராதனா திகைத்து தான் போனாள். எவனைக் காண பயந்து அவள் ஓடி ஒளிய நினைத்தாளோ... அவனே அவள் கண் முன் எனும் போது அவளது உள்ளமும் , உடலும் ஒருசேர அதிர்ந்தது.

ஆராதனா பிரயாணம் செய்து வந்ததில் சிறிது களைப்புற்றுத் தெரிந்தாலும் அவனது விழிகளுக்கு அவள் தேவதையாகத் தான் தெரிந்தாள். கருப்பு நிற ஜீன்சும் , வெள்ளை நிற கையில்லாத குர்தியும் அணிந்தா , நீண்ட கூந்தலை உருட்டி , சுருட்டி பெரிய க்ளிப்பில் அடக்கி , மாசுமருவற்ற மதி முகத்தில் வில் போன்ற புருவங்களுக்கு மத்தியில் சிறு கருப்பு நிற ஒட்டு பொட்டு மட்டும் ஒட்டி , வேறெந்த ஒப்பனையும் இல்லாது நின்றிருந்த மங்கையவள் அவனை மயக்கி அவனது மனதினை பூ போல் சத்தமில்லாது கொய்தாள்.

"என் வீட்டில் நான் இல்லாமல் வேறு யார் இருப்பாங்க ?" இரு கைகளையும் கட்டி கொண்டு கேள்வியாய் ஒற்றைப் புருவத்தை ஏற்றி இறக்கியவனைக் கண்டு அவளுக்கு உள்ளுக்குள் சிலீரென்றது...

"அப்படின்னா... ?" அவள் திகிலுடன் அவனைப் பார்த்தாள்.

"உன்னைக் கடத்திட்டு வந்திருக்கிறேன் பேபி..." என்றவனது விழிகளில் விசமம் வழிந்தது.

"என்னது... ?" அவள் திகைப்பில் விழி விரித்தாள்.

"உன் வாயிலிருந்து ' ஐ லவ் யூ ' என்கிற மூன்றெழுத்து மந்திரத்தை கேட்காது நான் உன்னை விடப் போவதில்லை." என்றவனது வார்த்தையில் அத்தனை தீவிரம் இருந்தது...

"அதுக்கு வேற ஆளை பாருங்கோ..." என்று சிலிர்த்து கொண்டவள் தனது உடமைகளைத் தூக்கி கொண்டு தான் வந்த ஜீப்பில் ஏற திரும்பியவள் அங்கு நின்றிருந்த ஜீப் மாயமாகி போனதை கண்டு திகைத்து நின்றாள்.

"என்ன பேபி , ஃப்ரீசாகி நின்னுட்ட ?"

அவனது கேலி குரல் அவளது காதோரம் ஒலித்தது... அதில் திடுக்கிட்டவள் அவனைத் திரும்பி பார்த்தாள். தனதருகில் நின்று கொண்டிருந்தவனைக் கண்டு எரிச்சலுற்றவள் அவனை நிமிர்ந்து பார்த்தா ,

"தள்ளி நில்லுங்கோ..." என்று கோபத்தோடு கத்தினாள்...

"ஓகே ஓகே..." என்று விரிந்த புன்னகையுடன் அவளை விட்டு விலகி நின்றவன் ,

"இப்போ எப்படி இங்கே இருந்து போகப் போற பேபி... ? இந்த வில்லன் கிட்ட இருந்து எப்படித் தப்பிக்கப் போற ?" அவன் நக்கலாய் கேட்க...

"ஏன் போக முடியாதா ? ஜீப் இல்லைன்னா என்ன ? என் இரண்டு கால்கள் இருக்கே..."

"பாலைவன வெயில் பத்தி உனக்குத் தெரியாது பேபி... செருப்பை மீறி வெயிலின் சூடு உன் காலை பதம் பார்த்துவிடும். ஜாக்கிரதை..."

"உங்களுக்கு வெயில் பரவாயில்லை..." என்றவள் வீம்புடன் அங்கிருந்து செல்ல முயன்றாள். அவள் குறுக்கே வழி மறிப்பது போல் வந்து நின்றவன் ,

"எது சொன்னாலும் நம்பிருவியா ? பேபி , பேபி..." என்று அவன் வாய்விட்டு சிரிக்க... அவள் புரியாது குழப்பத்துடன் அவனை ஏறிட்டு பார்த்தாள்.

"நீ நம்ம ஹாஸ்பிட்டல் சார்பாகத் தான் இங்கே வந்திருக்க... அதில் எந்தவித பொய்யும் இல்லை..." என்றவனை அவள் நம்ப முடியாது பார்த்தாள்.

"அம்மா தாயே , என்னை நம்பு..." என்று அவன் கூற...

"உங்களை நம்புவதா ? நிச்சயம் அது என்னால் முடியாது." அவளது வார்த்தையில் அவனது முகம் கன்றி கருத்துப் போனது.

"இந்த விசயத்தில் என்னை நீ முழுதாய் நம்பலாம். இது நான் தத்தெடுத்திருக்கும் கிராமம்." என்றவனை அவள் வியப்பாய் பார்க்க...

"ம் , உண்மை தான்... தொழிலில் வரும் லாபத்தில் இது போன்று கிராமங்களின் அடிப்படை தேவைகளைப் பூர்த்திச் செய்வது எனது வழக்கம். ஏனோ இந்தக் கிராமம் என்னுடைய மனதை மிகவும் பாதித்து விட்டது. முதன்முதலில் இதைப் பார்க்கும் போது எந்தவித அடிப்படை வசதிகளும் இல்லாது , பஞ்சத்தில் அடிப்பட்டு , பட்டினி கிடந்து எலும்பும் , தோலுமாய் இருந்த இந்த மக்களைப் பார்த்த போது மனசுக்கு ரொம்பக் கஷ்டமா இருந்துச்சு... இந்த மக்களோட நிலையை மாத்தணும்ன்னு நினைச்சேன்... இத்தனை வருடங்களில் நிறைய மாற்றங்களைக் கொண்டு வந்தாலும் நிறைய விசயங்களில் இவங்களை மாற்ற முடியலை... அதுக்கு ஒரு பெண்ணின் துணை தேவைப்படுகிறது. அதுவும் பெண் மருத்துவரின் துணை... அதுக்காகத் தான் நான் உன்னை இங்கே வரவழைத்தது. இது என்னுடைய தனிப்பட்ட முடிவு தான். ஆனால் நான் வரவழைச்சதன் நோக்கம் தவறானது கிடையாது."

நீளமாகப் பேசி முடித்தவனை அவள் ஆச்சரியமாகப் பார்த்தாள். கல்லுக்குள் இத்தகைய ஈரம் இருக்கிறதா என்று...

"என்ன , நம்ப முடிலையா ?"

"உண்மையில் நம்ப முடியவில்லை தான். ராட்சசனுக்குள் கருணை இருக்கிறதே." இதைக் கூறும் போதே அவளது இதழ்களில் புன்னகை தவழ்ந்தது.

"என்னைப் பற்றி ஒன்றுமே தெரியாது நீயே எப்படி என்னை ராட்சசன்னு முடிவு பண்ணுவ ?" அதற்கு அவள் பதில் கூறாது அமைதியாகி போனாள். அவளைப் பார்த்தவன் ,

"சரி , நமக்குள் சண்டை வேண்டாம்... பிரெண்ட்ஸ்..." என்றபடி அவன் தனது கையை அவள் முன் நீட்டினான். அவள் தனது கையை நீட்டாது அவனை நிமிர்ந்து பார்த்தாள். அவன் புரியாது அவளைப் பார்த்தான்.

"நாம ரெண்டு பேரும் பிரெண்ட்ஸா ? அபத்தமா பேசாதீங்கோ..." அவளது வார்த்தைகளில் அவனுள் உல்லாசம் பொங்கியது. விரிந்த புன்னகையுடன் அவளைப் பார்த்தவன் ,

"அப்போ நாம ரெண்டு பேரும் யாரு ?" கேலி போல் கேட்க...

"எதிரிகள்..." என்று கூறியபடி அவள் முறைத்தாள்.

"எதிரியே ஆனாலும் கண்ணியமான எதிரி நான்... அதனால் நீ என்னைக் கண்டு பயப்படத் தேவையில்லை."

"உங்களைக் கண்டு நான் ஏன் பயப்படணும் ?"

"வீட்டுக்குள் வராமல் வெளியில் இருந்தபடி பேசிக்கிட்டு இருப்பதைப் பார்த்தால் பயம் மாதிரி தான் தெரியுது." அவன் தனது பிரெஞ்சு ஃபியரை தடவியபடி கூற...

"நீங்க இப்படி எல்லாம் பேசினால் நான் வந்த வழியே திரும்பி போயிருவேன்." அவள் எச்சரித்தாள்.

"அப்போ உள்ளே வா..." அவன் சிரியாமல் கூற... அவனை உறுத்து விழித்தவள் ,

"எனக்கு நீங்க சில பிராமிஸ் பண்ணி தரணும்."

"சரி , சொல்லு..."

"நான் இங்கே இருக்கும் வரை அபத்தமா என் கிட்ட பேச கூடாது."

"அபத்தமான்னா ?" அவன் புரியாது அவளைப் பார்த்தான்.

"அதான் ' ஐ லவ் யூ ' சொல்லு... ஆட்டுக்குட்டி சொல்லுன்னு நீங்க என் கிட்ட சொல்ல கூடாது. அதாவது தேவையில்லாத பேச்சு நமக்கு இடையே இருக்கக் கூடாது." என்றவளை உற்று பார்த்தவன் பின்பு சிறுசிரிப்புடன் ,

"சரி , அப்புறம்... ?" என்று கேட்க...

"என்னோட பிரைவசியில் நீங்க தலையிட கூடாது. நம்மளோட கடந்த காலத்தை நினைவுப்படுத்துற மாதிரி நீங்க எதையும் பேச கூடாது. அப்புறம்..." என்று மேலே சொல்ல போனவள் பின்பு அதைச் சொல்ல முடியாது அமைதியாகி போனாள்.

"அப்புறம் , என்ன ? சொல்லு..." அவன் ஊக்குவிக்க...

"நான் வேறொருத்தரை திருமணம் செய்யப் போகிற பெண்... அதனால் என்னுடைய பெயருக்குக் களங்கம் விளைவிக்கிற மாதிரி நீங்க நடந்துக்கக் கூடாது..."

அவளது வார்த்தைகளில் அவனுள் சுள்ளென்று கோபம் எழுந்தது. முயன்று தன்னை அடக்கி கொண்டவன் ,

"நான் மூன்று பெண்களுடன் பிறந்து வளர்ந்தவன்... என் அம்மாவை புரிந்து கொண்டவன். அதனால் எந்தப் பெண்ணையும் காயப்படுத்தவோ , இல்லை களங்கப்படுத்தவோ எனக்குத் தெரியாது. இது யாருக்கு தெரியுமோ இல்லையோ , உனக்கு நன்றாகத் தெரியும்..." என்றவனின் வார்த்தைகளில் அவனையும் அறியாது எரிச்சல் எட்டிப்பார்த்தது.

"உங்க மனைவி அர்ச்சனாவை விட்டுட்டீங்களே..." அவளும் கோபத்துடன் பதிலடி கொடுத்தாள். அதைக் கேட்டு அவனது முகம் சிறுத்துப் போனது.

"நிச்சயம் இது மறுப்பதற்கு இல்லை..." என்றான் அவன் அகம்பாவமாய்...

"உண்மையை ஒத்துக்கிட்டதுக்கு நன்றி..." என்றாள் அவள் விறைப்பாக...

"இந்த லிஸ்ட்டில் நீயும் அடக்கம் என்பதை மறந்துட்டு பேசுற ஆராதனா..." என்றவனைப் பார்த்தவள் விழிகளில் சொல்லொண்ணா வேதனை தெரிந்தது. அதை அவனால் உணர முடியவில்லை... அதனால் அவனது முகம் கடினமாய் மாறியிருந்தது.

"இப்போதைக்கு வார்த்தைகளால் தான் என்னால் உத்திரவாதம் கொடுக்க முடியும். என்னுடன் இருந்து பார்... செயலிலும் உத்திரவாதம் கொடுக்கிறேன்."

அவள் அமைதியாக இருக்கவும் அவளைப் பார்த்தவன் , " இன்னும் நம்பிக்கை வரலையா ?" என்று கேட்க...

அவள் ஒன்றும் பேசாது வீட்டை நோக்கி நடந்தாள். அவன் புன்சிரிப்புடன் அவளைப் பின்தொடர்ந்தான்.

"உள்ளே போ..." கதவருகே நின்று கொண்டு உள்ளே செல்வதா ? வேண்டாமா ? என்று யோசித்துக் கொண்டிருந்தவளின் காதோரம் குனிந்து கனிவாக அவன் கூற...

ஆராதனா ஒன்றும் பேசாது வீட்டினுள் நுழைந்தாள். வெளியில் இருந்த வெயிலின் கடுமை தெரியாதவாறு வீட்டின் உள்ளே சற்றுக் குளுமையாக இருந்தது. இராஜஸ்தான் கலாச்சாரத்தில் இரு அறைகளை உள்ளடக்கியதாய்க் கனக்கச்சிதமாக இருந்தது அந்த வீடு. அவள் அதை ஆச்சரியத்துடன் பார்த்தாள். அங்கிருந்த ஒரு அறையைச் சுட்டிக்காட்டியவன் ,

"அது தான் உன்னுடைய ரூம்..." என்க...

சரியென்று தலையசைத்தபடி நகர்ந்தவள் பின் நின்று அவனைத் திரும்பி பார்த்தா , " நீங்களும் இங்கே தான் தங்குவீங்களா ?" என்று அபத்தமாகக் கேட்க...

"பார்றா... வந்த முதல் நாளே என்னை வீட்டை விட்டுத் துரத்துவதில் குறியா இருக்க..." என்று அவன் அவளைக் கிண்டலடிக்க... அவள் தன் தவறை உணர்ந்து நாக்கை கடித்தாள்.

"எனக்கு இந்த ஒரு வீடு தான் இருக்கு... வேணும்ன்னா வெளியில் திண்ணையில் படுத்துக்கவா ?" என்று அவன் கேலியாய் கேட்க...

"ஐயோ..." என்று அவள் பதறி போய் அவனைப் பார்க்க...

"நான் அந்த ரூமில் தங்கியிருக்கேன்..." என்றவன் ,

"அமெரிக்காவில் இருந்தவள் இப்படிக் கேட்பது ஆச்சரியமா இருக்கு... நீ இங்கே இருக்கும் பதினைந்து நாட்களும் இரயில் சிநேகிதம் மாதிரி என்னை நினைச்சுக்கோ... என்ன ஓகேவா ?"

"ம் , ம்..." என்று தலையாட்டியவள் அறைக்குள் செல்ல முனைய...

"இப்ப ஈவினிங் ஆகிருச்சு... டீ குடிச்சிட்டு ரிலாக்ஸ் பண்ணு... வீட்டு வேலைக்கு நம்ம ஊர் ஆளுங்க தான் இருக்காங்க... அதனால் நீ பயப்படத் தேவையில்லை... இப்போ நான் வெளியில் போயிட்டு வர்றேன்..." என்றவன் அவளது பதிலை எதிர்பாராது வெளியில் சென்றுவிட்டான்...

அறைக்குள் நுழைந்தவள் தனது உடமைகளைக் கட்டிலில் வைத்து விட்டு அங்கிருந்த ஜன்னல் வழியே வெளியில் வேடிக்கை பார்த்தாள். பாலைவனத்தில் ரோஜா தோட்டத்தைக் கண்டு அவளது விழிகள் வியப்பில் விரிந்தது. ஆம் , வீட்டை சுற்றி அழகாகத் தோட்டம் அமைக்கப்பட்டு இருந்தது. அதனால் தான் வெளியிலின் தாக்கம் தெரியவில்லை போலும்... சொட்டு நீர்ப்பாசனம் முறையில் தோட்டத்தில் பூச்செடிகள் , காய்கறி தோட்டம் எல்லாமே பயிரிடப்பட்டு இருந்தது.

"அட , இரக்கமற்ற பிசினஸ்மேனுக்குள் இத்தனை ரசனையா ?" அவள் வாய்விட்டு சொல்லி கொண்டாள்.

அவள் பிரயாண களைப்பு தீர குளித்து முடித்து வேறு உடை மாற்றிக் கொண்டு அறையை விட்டு வெளியில் வந்த போது சமையல்க்கார பெண் அவளுக்குத் தேநீரும் , பிடி கொழுக்கட்டையும் கொண்டு வந்து கொடுத்துவிட்டு போனாள். இனிப்பு மற்றும் காரம் என்று இரு வகைகளில் இருந்த கொழுக்கட்டை மிகுந்த ருசியாக இருந்தது... பசியில் அதை உண்டு தேநீர் குடித்தவள் பின்பு பொழுது போகாது தோட்டத்திற்கு வந்தாள்.

தான் இங்கு விஷ்ணுபிரஹானுடன் இருப்பது தந்தை மற்றும் சகோதரர்களுக்குத் தெரிந்தால் என்னவாகும் ? என்று யோசித்தபடி அவள் நின்றிருந்தாள். நிச்சயம் அவர்கள் அவளைத் திட்டத்தான் போகிறார்கள். ஒரு பெண்ணாய் அவளது மனது அங்கிருந்து கிளம்பத் துடித்தது. ஆனால் ஒரு மருத்துவராய் இன்னொரு மனது அவளை இங்கிருக்கச் சொன்னது. இங்கு அப்படி என்ன பிரச்சனைகள் இருக்கக்கூடும் என்று அவளால் ஊகிக்க முடியவில்லை... விஷ்ணுபிரஹான் கூறியதை பார்த்தால் நிச்சயம் இது பெண்கள் சம்பந்தப்பட்ட பிரச்சனை தான் என்பது அவளுக்குப் புரிந்தது. அதனால் அவள் பெண்களின் துயரை களையவே நினைத்தாள்...

தந்தையிடம் பேச எண்ணியவள் வீட்டினுள் சென்று தனது கைப்பையில் இருந்து அலைப்பேசியை எடுத்தாள். அப்போது தான் கவனித்தாள் , அதில் சிக்னல் இல்லாததை... அவள் அவசரமாக வெளியில் வந்து மீண்டும் அலைப்பேசியைப் பார்க்க... அப்போதும் அலைப்பேசியில் சிக்னல் இல்லை...

"ம்ப்ச்..." என்றபடி அவள் கையை உதற...

"என்ன பிரச்சனை... ?" என்று கேட்டபடி விஷ்ணுபிரஹான் அங்கு வந்தான்.

"சிக்னல் இல்லை..." அவள் அலைப்பேசியைக் காண்பித்தாள்.

"ஓ... இங்கே சிக்னல் கிடைக்காது... ஏதாவது அவசரமா ஃபோன் பண்ணணும்ன்னா பக்கத்தில் இருக்கும் டவுனுக்குத் தான் போகணும்."

"அச்சோ..." அவள் தலையில் கை வைக்க...

"ஏனஂ ?" அவன் புரியாது அவளைப் பார்த்தான்.

"அப்பா கிட்ட பேசணும்... இல்லைன்னா அவர் எனக்கு என்னவானதோன்னு பயப்படுவாரு..." என்றவளை அவன் இமைக்காது பார்த்தான்.

எல்லாம் தெரிந்து தானே அவன் அவளை இங்கே கடத்தி வந்தது. ஆமஂ , அவன் அவளைக் கடத்தி கொண்டு தான் வந்திருக்கிறான். அது அவளுக்குத் தெரியாது... மற்றவர்களுக்கு இனி தான் தெரிய வரும்... இன்னும் இரண்டு நாட்களில் ஆராதனாவிடம் இருந்து எந்தவித தகவலும் கிடைக்கவில்லை என்றதும் அவளது வீட்டினர் அவளை நாலாப்புறமும் தேடுவார்கள்... அப்போது தான் அவள் கடத்தப்பட்டு இருப்பதை அவர்கள் அறிவார்கள்.

' யாருக்கு யார் மாப்பிள்ளை பார்ப்பது ? யாருக்கு யார் கல்யாணம் பேசுவது ? இங்கிருந்து ஆராதனா போகும் போது என்னவளாகத் தான் போக வேண்டும்... அதை நான் நடத்தி காண்பிப்பேன். ' மனதிற்குள் சவாலாய் நினைத்தபடி அவளைப் பார்த்தவனஂ ,

' சாரி பேபி... உன்னை என்னவளாக்க இதை விட வேறுவழி எனக்குத் தெரியவில்லை... என்னை மன்னித்துவிடு ' என்று அவன் அவளிடம் மானசீகமாக மன்னிப்பு கேட்டுக் கொண்டான். பிறகு மனதை மறைத்தவனாய் அவளைப் பார்த்து புன்னகைத்தபடி ,

"நான் டவுனுக்குப் போகும் போது உன்னைக் கூட்டிட்டு போகிறேன்..." என்று கூறியவனை நம்பி அவள் வெள்ளை மனதுடன் பதிலுக்குப் புன்னகை சிந்தினாள்.

கடத்தப்பட்டவருக்குத் தெரியாது கடத்துவதும் தனிக் கலை தான் போலும்... அதை அறியாத அப்பாவியாய் அவள் அவனிடம் பேசி கொண்டிருந்தாள். அவன் பேச்சை மறந்தா , தன்னை மறந்து அவளைப் பார்த்திருந்தான். மாலை வேளை இளம் மஞ்சள் நிற வெயில் மேனியில் விழுந்ததால் பேரழகுடன் காட்சியளித்த ஆராதனாவின் அழகு அவனுள் சொட்டு சொட்டாய் இறங்கியது. தலையைக் குலுக்கி தன்னைச் சமன் செய்து கொண்டவன் ஆராதனாவை நோக்கி ,

"இந்தக் கிராமத்து மக்கள் அவங்களுக்காக நீ இங்கே வந்திருப்பது தெரிஞ்சு உனக்காக வரவேற்பு நிகழ்ச்சி ஏற்பாடு பண்ணியிருக்காங்க... நைட் சாப்பிட்டுட்டு அங்கே போகலாம்." என்க...

"எனக்காகவா ?" அவள் கூச்சத்துடன் அவனைப் பார்த்தாள்.

' நீ அவங்க ராஜாவின் மகாராணி அல்லவா... அதற்காகத் தான் இந்த வரவேற்பா ' என்று மனதிற்குள் நினைத்தவன் வெளியில் அவளைக் கண்டு புன்னகைத்தான்.

இரவு உணவு முடிந்து இருவரும் ஊரின் நடுவே இருந்த பெரிய திடலை நோக்கி நடந்தனர். இருள் கவிழ்ந்த அந்த வேளை ஆராதனாவினுள் சிறிது பயத்தைக் கிளப்பியது. அவள் விஷ்ணுபிரஹான் அருகே ஒட்டி கொண்டு நடந்து வர... அவளது பயத்தை உணர்ந்தவனாய் அவன் அவளது கரத்தினை இறுக பற்றிக் கொண்டான். அதில் பாதுகாப்பாய் உணர்ந்தவள் நிம்மதியுடன் அவனுடன் நடந்தாள்.

திடலில் மக்கள் அனைவரும் கூடியிருந்தனர். ஊர் பெரியவர் போலிருந்தவர் அவர்களை வரவேற்று அமர வைத்தார். இராஜஸ்தான் பாரம்பரிய நடனங்களில் ஒன்றான பாவை(Bhavai) நடனம் முதலில் இடம் பெற்றது. கண்ணாடி வேலைப்பாடுகள் செய்யப்பட்ட நீண்ட பாவாடை , இரவிக்கை அணிந்த பெண்கள் தலையில் பானைகளைச் சுமந்து கொண்டு சுழன்று சுழன்று ஆடினர்.

ஆராதனா அவர்களது நடன லயத்தில் ஈர்க்கப்பட்டவளாய் தன்னை மறந்து உற்சாகமாய்க் கைத்தட்டி ஆர்ப்பரித்தாள். உணர்வுகளை வெளிப்படுத்தாது கட்டுப்படுத்தி வாழும் விஷ்ணுபிரஹானுக்கு அவளது செயல் ஆச்சரியத்தை ஏற்படுத்தியது. சேயை ரசிக்கும் தாயை போன்று அவனது விழிகள் அவளது மகிழ்ச்சியை ரசித்துப் பார்த்தது... ஏதோ உள்ளுணர்வு உந்த அவனைத் திரும்பி பார்த்தவள் ' என்ன ?' என்பது போல் புருவத்தை உயர்த்தினாள். அவன் ' ஒன்றுமில்லை ' என்பது போல் தலையசைத்தான்.

அடுத்து கூமர்(Ghoomar) எனப்படும் கிராமிய நடனம் இடம்பெற்றது... அந்தப் பெண்களும் வேலைப்பாடுகள் கொண்ட பாவாடை , இரவிக்கை அணிந்து கிராமிய பாடலை பாடியபடி சுழன்று சுழன்று ஆடினர்.

" Palak Buhaaru Aangno
(Hold Your gaze to the path/ground)
Raani Sa Padhraaye
(As the queen is arriving)
Ghoomar Ramwa Re Aap Padharo Saa...
(We welcome You to dance ghoomar with us)
Aavo Ji Aavo Ji Ghoomardi Khelva Ne
(Come and let's dance/play ghoomar)
Padharo Sa Ghoomardi Khelva Ne
(We welcome You to dance ghoomar)"

என்று பாடியபடி அவர்களது மகாராணியான ஆராதனாவை ஆட அழைத்தனர்... முதலில் மறுத்த ஆராதனா பின்பு விஷ்ணுபிரஹானை பார்த்தாள்... அவளது மகிழ்ச்சிக்காக உலகத்தையே அவளது காலடியில் வைக்கத் தயாராக இருப்பவன் இதையா வேண்டாம் என்று சொல்ல போகின்றான்! அவன் புன்முறுவலுடன் சம்மதமாய்த் தலையசைத்தான். அவள் சந்தோசத்துடன் எழுந்து சென்று அந்தப் பெண்களுடன் இணைந்து ஆடினாள். ஆராதனா பரதநாட்டியம் முறைப்படி கற்று தேர்ந்திருந்ததால் அவர்களது நடனத்தை அவள் சுலபமாகப் புரிந்து கொண்டு சுழன்று சுழன்று ஆடினாள்.

இளஞ்சிவப்பு தொள தொள பருத்தி கால்சராயும் , மேலே கருப்பு கையில்லாத பருத்தி சட்டையும் , கழுத்தை சுற்றி இளஞ்சிவப்புத் துப்பட்டா துணியும் அணிந்து இருந்த தேவதையின் அழகில் அவனது மனம் விரும்பியே மயங்கி போனது. இதுநாள் வரை கல்லை போன்ற , மண்ணைப் போன்று உணர்வில்லாது பார்த்திருந்தவளை இன்று அவனது பார்வை பருவ மங்கையாய் கண்டு ரசித்துக் கொண்டிருந்தது. ' இவள் என்னவள் ' என்கிற கர்வம் அவனுக்கு முகத்தில் அப்பட்டமாய்த் தெரிந்தது.

"சார்க்க , பொஞ்சாதின்னா ரொம்ப விருப்பமோ ?" அவனது பார்வையை உணர்ந்து அருகிலிருந்த ஊர் பெரியவர் அவரது மொழியில் அவனிடம் கேட்க... அவனோ அதன் அர்த்தம் புரிந்தவனாய் அவரைக் கண்டு வெட்கப் புன்னகை சிந்தினான்.

"ஹப்பா , இடுப்பு வலிக்குது... எப்படித் தான் இப்படி ஆடுறாங்களோ... ?" என்றபடி ஆராதனா மூச்சு வாங்க அவன் அருகில் வந்து தொப்பென்று அமர்ந்தாள்.

அவளது சிற்றிடையை ரசனையுடன் பார்த்தவன் , " நீயும் அழகா ஆடின பேபி..." என்று அவன் மயக்கம் தெளியாதவனாய்க் கூறினான்.

"அப்படியா ?" மூச்சு வாங்க விழி விரித்துக் கேட்டவளின் ஏறியிறங்கிய எழிலில் அவனுக்கு நடனம் ஆடாமலேயே மூச்சு வாங்கியது.

"உண்மையா..." என்று கூறி புன்னகைத்தவனின் புன்னகை அவளையும் தொற்றிக் கொண்டது...

இரவு நேரமாகி விட்டதை உணர்ந்து விஷ்ணுபிரஹான் ஆராதனாவை அழைத்துக் கொண்டு வீடு வந்து சேர்ந்தான். வீட்டிற்குள் நுழைந்ததும் அவன் ,

"குட் நைட்..." என்றபடி விடைபெற...

அவளும் இரவு வணக்கம் கூறியபடி தனது அறைக்கு வந்தாள். அவனது கண்ணியம் அவளறிந்த ஒன்று தான்

என்பதால் நிம்மதியான , ஆழ்ந்த உறக்கம் அவளை வந்து தழுவி கொண்டது...

அங்கு அவனுக்கோ உறக்கம் வரவில்லை... ஜன்னல் வழியே தெரிந்த முழுமதியை பார்த்தபடி அவன் நின்றிருந்தான். தான் செய்தது சரியா ? தவறா ? என்று அவனுக்குத் தெரியவில்லை... அவனுக்குத் தெரிந்தது எல்லாம் ஒன்றே ஒன்று தான்... அது , ஆராதனாவை கை நழுவி விடக்கூடாது என்பதே... அவளுக்காக அவன் செய்த தில்லுமுல்லு வேலைகள் அவனது மனதில் வலம் வந்தது.

ஆராதனா தனக்குத் திருமணம் என்று அவள் கூறிய போது அவனுக்கு உலகமே வெறுத்துப் போனது போலானது... ஆனாலும் அவன் நம்பிக்கையைக் கைவிடாது அடுத்து என்ன செய்வது ? என்று யோசித்துக் கொண்டிருந்தான்... அப்போது தான் அவன் அவளை மருத்துவமனை விழாவில் பார்த்தது , கடைசியாக அவனிடம் அவள் தலையசைத்து விடைபெற்றது எல்லாம் நிகழ்ந்தது. அந்த ஒரு நிகழ்வு அவனுக்கு மிகுந்த நம்பிக்கையைக் கொடுத்தது. அப்போது தான் மருத்துவர் ஒருவர் சேவைக்காகக் கிராமம் ஒன்றிற்குச் சென்ற நிகழ்வு நடந்தது. உடனே அவன் பரபரப்பாக ஆராதனாவின் சுய குறிப்புகளை ஆராய்ந்தான். அவன் வேண்டியது போல் அவளும் சேவைக்காக விண்ணப்பித்து இருந்தாள்.

உடனே அவன் மருத்துவமனை மின்னஞ்சல் மூலம் அவளுக்கான சேவை செய்யும் ஊரை பரிந்துரைத்து அவளை அங்குக் கிளம்பி செல்லுமாறு வேண்டி கேட்டுக் கொண்டான்... அதுவும் மருத்துவமனை சார்பாக... அதை நம்பி அவளும் கிளம்பிவிட்டாள். ஆனால் மின்னஞ்சலில் இருக்கும் ஊருக்கு அவளைச் செல்ல விடாது தடுத்து விமானநிலையத்தில் இருந்தபடி அவளது பிரயாணத்தை மாற்றி அமைத்து விட்டான் அந்தப் புத்திசாலி.

யாருக்கும் அவன் அவளைக் கடத்தியது தெரியாது. சிவசுப்ரமணியம் மருத்துவமனை மின்னஞ்சலை ஆராய்ந்து பார்த்தால் ஒழிய இந்த நிகழ்வு அவருக்கும்

தெரியாது போகும். அர்ஜூன் மட்டும் இரண்டு நாட்களில் மகளைத் தேடி சிவசுப்ரமணியத்திடம் வந்து கேள்வி கேட்பான்... அப்போது தான் அவள் காணாமல் போயிருப்பது எல்லோருக்கும் தெரிய வரும்.. அப்படியே தெரிந்தாலும் எல்லோரும் அஸ்ஸாம் மாநிலத்தில் தான் தேடுவார்கள். அதற்கு நேர் எதிராக அமைந்திருக்கும் இராஜஸ்தானில் வந்து தேட மாட்டார்கள். அப்படியே அவர்கள் ஆராதனாவை தேடி கண்டுபிடித்தாலும் இங்கு வர சிறிது காலம் எடுக்கும்... இந்த இடைப்பட்ட காலத்தில் ஆராதனா மனதில் அவன் குடி போகப் போவது உறுதி... அவள் மனதில் அவன் காலத்தால் அழியாத கோலமாய் நிலைப்பெற வேண்டும் என்று அவன் விரும்பினான்.

ஏற்கெனவே ஒரு முறை புத்தியில்லாது அவசரப்பட்டு அவன் அவளைத் தொலைத்து விட்டு நிற்கின்றான். இனியும் அது போன்றதொரு மூடத்தனமான வேலையைச் செய்ய அவனுக்கு விருப்பம் இல்லை. அவள் மனதில் அவன் அவளது காதலனாக அழுத்தமாய்ப் பதிய வேண்டும்... அது மட்டுமே அவனது ஒரே குறிக்கோள்... அவளை இழப்பது என்பது உயிரை இழப்பதற்குச் சமம்... அதை இப்போது தானே அவனும் உணர்ந்து இருக்கின்றான்... அவன் உயிர்வலியை சுமந்தவனாய் தூக்கத்தைத் தொலைத்துவிட்டு வெகுநேரம் அப்படியே உறைந்து நின்றிருந்தான்.

மறுநாள் காலையில் எழுந்த ஆராதனா குளித்து முடித்து அறையை விட்டு வெளியில் வந்தாள். விஷ்ணுபிரஹானை அங்குக் காணவில்லை... சமையல்க்கார பெண்மணி அவளைத் தேடி வந்தவளை ,

"சாப்பிட வாங்கம்மா..." என்றழைக்க...

"அவர்..." என்று இழுத்தவளை கண்டோ ,

"ஐயா , தோட்டத்துக்குப் போயிருக்காங்க... இப்ப வந்திருவாங்க... உங்களைச் சாப்பிட்டு தயாரா இருக்கச் சொன்னாங்க..."

அவள் கூறியதை கேட்டு ஆராதனா உணவு உண்ண அமர்ந்தாள். இட்லி , சாம்பார் , சட்னி என்று இருந்த உணவை கண்டு அவள் வியப்பில் விழி விரித்தாள்.

"உங்களுக்குப் பிடிக்கும்ன்னு ஐயா செய்யச் சொன்னார்..." அதைக் கேட்டு ஆராதனாவின் விழிகள் இரண்டும் கலங்கி போனது... அவனுக்கு எப்படித் தனக்குப் பிடித்தது எல்லாம் தெரியும் ? என்று யோசித்தபடி அவள் குழப்பத்துடன் உணவை உண்டாள்.

அன்று மருத்துவமனை விழாவில் சிவேஷ்கந்தா அவளைப் பற்றி அறிந்து வைத்திருப்பதைக் கண்டு பொறாமை கொண்ட விஷ்ணுபிரஹான் அடுத்த இருபத்தினாலு மணி நேரத்தில் அவளைப் பற்றிய விபரங்களை ஒன்று விடாது துப்பறிந்து தெரிந்து கொண்டான் என்பதை அவள் அறிய மாட்டாளே!

ஆராதனா உணவு உண்டு முடிக்கும் போது விஷ்ணுபிரஹான் வெளியில் இருந்து வீட்டினுள் நுழைந்தான். அவள் கிளம்பி தயாராக இருப்பதைக் கண்டு ,

"பத்து நிமிசம்... இதோ வந்திர்றேன்." என்றவன் தனது அறைக்குள் சென்று மறைந்தான்.

சொன்னது போல் குளித்து , சாப்பிட்டு பத்து நிமிடங்களில் வந்தவனைக் கண்டு அவளுக்கு மெச்ச தோன்றியது. ஜீப்பில் அவளை அழைத்துக் கொண்டு அவன் ஊருக்குள் இருந்த ஆரம்பச் சுகாதார மையத்திற்கு வந்தான். அங்கு இருந்தவர்களிடம் அவளை அறிமுகப்படுத்தி விட்டவன் பின்பு அவள் புறம் திரும்பி ,

"நீ வேலையைப் பார் ஆராதனா... மதிய சாப்பாட்டுக்கு வந்து அழைத்துப் போகிறேன்..." என்றுரைத்து விட்டு அவன் அங்கிருந்து செல்ல... ஆராதனாவும் அவனை மறந்து தனது வேலையில் மூழ்கி போனாள்...

சரியாக மதியம் ஒரு மணிக்கு ஆராதனாவை அழைத்துச் செல்ல விஷ்ணுபிரஹான் அங்கு வந்தான். அவன் ஆராதனா இருந்த அறைக்குள் நுழைந்த போது அவள் மேசை மீது கவிழ்ந்து படுத்திருந்தாள்... அவன் என்னவோ , ஏதோவோ என்று பயந்து போய் அவளை நோக்கி விரைந்து வந்தான்...

"பேபி..." அவனது குரல் பதற்றத்துடன் அவளை அழைத்தது... அவனது அழைப்பில் தலை நிமிர்ந்த ஆராதனாவின் விழிகள் இரண்டும் கலங்கி சிவந்திருந்தது.

"என்னாச்சு பேபி... ?" அவளது கலக்கம் அவனையும் கலக்கமடையச் செய்தது...

"பிரஹான்..." என்றவளது விழிகளில் இருந்து கண்ணீர் வழிந்து கொண்டே இருந்தது.

அதைக் கண்டு அவனது நெஞ்சில் உதிரம் வடிந்தது...!!!

"உன் கண்ணில் நீர் வழிந்தால்
என் நெஞ்சில் உதிரம் கொட்டுதடி
என் கண்ணில் பாவை அன்றோ
கண்ணம்மா என்னுயிர் நின்னதன்றோ!"

திருத்தமாகும்...!!!

ஆராதனாவின் விழிகளில் வழிந்த விழிநீரை துடைத்தா , அவளை அள்ளியெடுத்து அணைத்து ஆறுதல் படுத்த விஷ்ணுபிரஹானின் கைகள் இரண்டும் துடித்தது. முயன்று தன்னைக் கட்டுப்படுத்திக் கொண்டவன் தனது கைகளைக் கால்சராயில் விட்டபடி அவளைப் பார்த்தா ,

"என்னம்மா ?" என்று ஒற்றை வார்த்தையில் அத்தனை அன்பையும் தேக்கி கேட்க... அதில் அவள் முற்றிலும் உடைந்தாள்.

"இங்கே பார் பேபி... இது ஹாஸ்பிட்டல்... நாலு பேர் வந்து போகும் இடம்... இங்கு இருந்துக்கிட்டு நீ அழுதால் எல்லோரும் என்னைத் தான் தப்பா எடுத்துப்பாங்க..." அவனது வார்த்தைகளில் தனது விழிகளைத் துடைத்துக் கொண்ட ஆராதனா தனது கைப்பையை எடுத்துக் கொண்டு எழுந்தாள்.

இருவரும் சேர்ந்து வீடு வரும் வரை அவர்களிடையே எந்தவித பேச்சும் இல்லை. வீட்டிற்கு வந்து மதிய உணவு உண்டு முடிக்கும் வரை அவன் அவளிடம் எதுவும் கேட்காது அமைதி காத்தான். பிறகே அவன் அவளிடம் கேள்வி கேட்டான்.

"நீ இவ்வளவு வருத்தப்படும் அளவுக்கு என்ன நடந்தது பேபி ?"

"இன்னைக்குச் செக்கப்புக்கு..." ஆராதனாவின் முகம் மீண்டும் கவலையுற்றது.

"செக்கப்புக்கு... ?" அவன் புரியாது அவளைப் பார்த்தான்.

"பதினான்கு வயசு சிறுமி..." மேலே சொல்ல முடியாது அவள் கண்ணீர் விட... அவனுக்கு விசயம் புரிந்து போனது...

"கர்ப்பமாக இருக்கிறாளாக்கும்..." அவன் சாதாரணமாகக் கேட்க... அவள் திகைப்புடன் அவனை நிமிர்ந்து பார்த்தாள்.

"ஆமா பிரஹான்... அவள் பனிரெண்டு வயதில் பெரியவளாகிட்டாளாம்... உடனே அவளைக் கல்யாணம் பண்ணி கொடுத்துட்டாங்களாம்... அவளுக்கும் , அவளுடைய கணவனுக்கும் கிட்டத்தட்ட பதினான்கு வயது வித்தியாசம். பொம்மை வைத்து விளையாடும் குழந்தையைப் போய்... ச்சீ... என்ன மனிதன் அவன்... அவளுடைய பெற்றோருக்கு தான் அறிவில்லை என்றால் , அவனுக்கு எங்கே அறிவு போனது... பனிரெண்டு வயது பெண்ணைத் திருமணம் செய்து அவளுடன் வாழ்ந்த , இப்போது அவள் நிறைமாத கர்ப்பிணி பெண்... குழந்தையைச் சுமக்கும் அளவுக்கு அவளுக்கு வயதும் இல்லை... உடலில் வலுவும் இல்லை... புத்தகத்தைத் தூக்கி சுமந்து கொண்டு பள்ளிக்கூடம் போகும் பெண்ணைப் போய் இப்படிக் குழந்தையைச் சுமக்க வைத்திருக்கிறார்கள். அந்தச் சிறுமியை பார்க்கும் போது ரொம்பப் பாவமாக இருக்கு... இன்னும் ஐந்து நாட்களுக்குள் அவளுக்குப் பிரசவம் ஏற்பட்டு விடும். அவள் எப்படி வலி தாங்கி , பிள்ளையைப் பெற்று... ப்ச்ச , முடியவில்லை பிரஹான்... ரொம்ப வலிக்குது..." பேசும் போதே அவளது விழிகளில் இருந்து தாரை தாரையாகக் கண்ணீர் வழிந்தது...

"இதற்காகத் தான் நான் உன்னை இங்கே வரவழைத்தது. இங்குள்ள மக்களுக்குக் கல்வியறிவு இல்லாததால் தான் இப்படி எல்லாம் நடக்கிறது... போதிய கல்வியறிவு கொடுப்பதற்கு எல்லா ஏற்பாடுகளும் செய்துவிட்டேன். ஆனால் பெண்களிடம் போய்த் தனிப்பட்ட முறையில் பேச உன்னைப் போன்ற பெண் மருத்துவரால் தான் முடியும்... சிறுவயது திருமணம் , சிறுவயதில் கர்ப்பம் அடைதல் , அந்த நாட்களில் ஏற்படும் சுகாதாரப் பிரச்சனை , குடும்பக் கட்டுப்பாடு இவைகள் பற்றிய விழிப்புணர்வை நீ தான் இவங்க கிட்ட ஏற்படுத்தணும். ஆண்களிடம் நான் பேசி பார்த்து விட்டேன்... அவர்கள் நான் கூறுவதற்குச் செவி சாய்க்கவில்லை... நீ தான் பெண்களிடம் அவர்களுக்கு ஏற்படவிருக்கும் ஆபத்தைப் பற்றிக் கூற வேண்டும்.

எனக்காக நீ இதைச் செய்வாயா ?" அவன் தனது வலக்கரத்தை அவள் முன் நீட்டினான்.

"நிச்சயமாக..."

அவள் தனது விழிகளைத் துடைத்துக் கொண்டு அவனது கரத்தின் மீது தனது கரத்தினை வைத்தாள். அவளது கரத்தினை அவன் பத்திரமாகப் பொத்தி வைத்துக் கொண்டான். இனி அவளை விடவே முடியாது என்பது போல்...

"பிரஹான்..." அவளது அழைப்பில் தன்னுணர்வு பெற்றவன் ,

"என்ன ?" என்க...

"கை..." அவள் கூறவும் , அவன் அவளது கையை மெல்ல விடுவித்தான்.

அன்றிலிருந்து ஆராதனா விஷ்ணுபிரஹான் கூறியது போல் பெண்களிடையே மெல்ல பேசி அவர்களிடையே விழிப்புணர்வை ஏற்படுத்த முயற்சி செய்தாள். இதற்காகத் தனது பேச்சை மொழி பெயர்க்க ஒரு செவிலிப்பெண்ணை உடன் வைத்து கொண்டாள்.

"சின்ன வயசில் கல்யாணத்தை முடித்தால் தான் இதுங்க காதல் , கத்திரிக்காய்ன்னு ஓடி போகாம இருக்கும்... யார் கூடயாவது ஓடி போயிட்டா எங்க மானம் மரியாதை என்னவாகிறது..."

"குழந்தை பெற்றுக் கொள்வது பெண்ணின் கடமை... இதை மறுக்கச் சொல்றீங்களா ? முடியாது..."

"நாப்கினா ? அப்படின்னா என்ன ? எங்களுக்குத் துணி தான் சௌகரியம்... கண்டதை உபயோகித்தால் அது தீட்டு..." என்று ஒவ்வொருவரும் ஒவ்வொன்றை கூறி அவள் கூறியதை ஏற்க மறுத்தனர். அதில் அவள் தான் சோர்ந்து போனாள்.

"ஒரே நாளில் மாற்றம் வந்துவிடாது பேபி... தொடர்ந்து முயற்சி செய்..." என்று விஷ்ணுபிரஹான் அவளை ஊக்குவித்தான்.

இந்தப் பிரச்சனையில் ஆராதனா தனது வீட்டினரை பற்றி நினைக்க மறந்தாள்... ஆனால் அவளது வீட்டினர் அவளை மறக்கவில்லை... இரண்டு நாட்களாக மகளிடம் இருந்து அழைப்பு வராதது கண்டு அர்ஜூனுக்கு உள்ளுக்குள் பயம் வந்து தொற்றிக் கொண்டது. அவன் உடனே சிவசுப்ரமணியத்திற்கு அழைத்தான்.

"நானே உங்களை அழைக்கணும்ன்னு நினைச்சேன் அர்ஜூன்... நீங்களே கூப்பிட்டீங்க..." என்றவரை கண்டு அர்ஜூன் அமைதியானான்.

"என்ன விசயம் சொல்லுங்க சிவா ?"

"இன்னும் ஐந்து நாட்களில் ஆவணி பிறக்க போகுது... எங்க ஜோதிடர் ஆவணி கடைசியில் முகூர்த்த தேதி குறித்துக் கொடுத்திருக்கிறார்... உங்களுக்கு ஓகே தானே... ?"

"எங்களுக்கு ஓகே தான் சிவா..."

"மண்டபம் , கேட்டரிங் , டெக்கரேசன் எல்லாத்துக்கும் இப்பவே சொல்லியாச்சு... ஆவணி பிறந்து அழைப்பிதழ் மட்டும் தான் அடிக்கணும்... அதுவும் ஒரே நாளில் கொடுக்கிறதா சொல்லியிருக்கான்... சிவேஷ்க்கும் , ஆராவுக்கும் திருமணத்திற்கு உடைகள் வாங்கணும்... அது மட்டும் தான் பாக்கி..."

"அதுவும் ஆவணி பிறக்கட்டுமே சிவா..." அர்ஜூனின் கூற்றுக்குச் சிவசுப்ரமணியம் சரியென்று சம்மதித்தார்.

"அப்புறம் சிவா..."

"சொல்லுங்க அர்ஜூன்..."

"பட்டுவோட ஃபோன் எடுக்க மாட்டேங்குது... எனி ப்ராப்ளம் ? அங்குள்ள ஹாஸ்பிட்டல் நம்பர் கொடுக்க முடியுமா ?"

"எந்த ஹாஸ்பிட்டல் நம்பர் ? ஏன் ஃபோன் எடுக்கலை ?" சிவசுப்ரமணியம் புரியாது கேட்டார். அர்ஜூன் ஆராதனா மருத்துவமனை சார்பாகச் சேவைக்காக அஸ்ஸாம் சென்ற விசயத்தைக் கூற...

"ஓ காட்... நான் எப்படி இதைச் செய்வேன்... ? அதுவும் கல்யாண பெண்ணைப் போய்க் கேம்ப்புக்கு அனுப்பவேனா ?" சிவசுப்ரமணியம் பதறிப் போனார்... அதைக் கேட்டு அர்ஜூனுக்கும் பதற்றம் தொற்றிக் கொண்டது.

"உங்க ஹாஸ்பிட்டலில் இருந்து தானே மெயில் வந்திருந்தது... அது எப்படி உங்களுக்குத் தெரியாம இருக்கும்... ?"

"வெயிட் அர்ஜூன்... எல்லா விசயங்களையும் நான் தலையில் போட்டுக் கொள்வது இல்லை... இங்குள்ள மேனேஜ்மெண்ட் டீமுக்கு கூப்பிட்டு பேசிட்டு சொல்றேன்..." என்று அலைப்பேசியை வைத்த சிவசுப்ரமணியம் உடனே சென்னை மருத்துவமனை நிர்வாகத்திற்கு அழைப்பு எடுத்தார். ஐந்தே நிமிடத்தில் அவர் மீண்டும் அர்ஜூனை தொடர்பு கொண்டார்...

"அர்ஜூன் , எங்க மெயில் ஐடியில் இருந்து தான் ஆராவுக்கு மெயில் போயிருக்கு... ஆனால் நான் அதை அனுப்பலை... நிர்வாகமும் இதை மறுக்கிறாங்க... அப்படி என்றால்... ?" தீவிர யோசனையுடன் நெற்றியை நீவி விட்டு கொண்டவர் ,

"ஒருவேளை விஷ்ணுவா இருக்குமோ ?" என்று கேட்க... அதைக் கேட்டு அர்ஜூன் செயலிழந்தவன் போலானான்...

' ஐயோ , என் பட்டு... ' அவனது மனம் பயத்தில் அரற்றியது.

"என்ன சொல்றீங்க சிவா ?"

"இது சந்தேகம் தான்... நூறு சதவீதம் உண்மையான்னு தெரியலை... ஏன்னா எங்க மெயில் ஐடி பாஸ்வேர்டு

கொஞ்ச பேருக்கு தான் தெரியும். அதில் விஷ்ணுவும் ஒருத்தர்..."

"அவனா மட்டும் இருக்கட்டும்... அவனது உயிர் எனது கைகளில்..." என்று கோபத்துடன் அழைப்பை துண்டித்தான் அர்ஜூன்...

உடனே தனது மகன்களை அழைத்து விசயத்தைக் கூறி விஷ்ணுபிரஹான் எங்கே இருக்கிறானꣳ ? என்று கண்காணிக்கச் சொன்னான். விசயம் கேள்விப்பட்டுச் சிவேஷ்கந்தாவும் அங்கு வந்து சேர்ந்தான். விஷ்ணுபிரஹான் சென்னையில் தான் இருக்கிறான் என்று அவனது அலைப்பேசி எண்ணை வைத்து கண்டுபிடித்தனர். அதுவும் இரண்டு நாட்களாக அவன் ஒரு ப்ராஜெக்ட் விசயமாக அலுவலகத்தில் தங்கி இருக்கிறான் என்று முரளி கூறியதாகக் கூறினார்கள் ஸ்ரீராமுமꣳ , பரத்தும்...

"இல்லை ஸ்ரீ... எனக்கு என்னமோ நம்பிக்கை இல்லை... விஷ்ணு இங்கில்லை... அவனோட செல்ஃபோனை இங்கு வச்சிட்டு போயிட்டு நமக்கு ஆட்டம் காண்பிக்கிறான்... என்னோட ஊகம் சரின்னா அவன் பிடியில் தான் நம்ம பட்டு இருக்கணும்..." என்று அர்ஜூன் நிதானமாக யோசித்துக் கூற...

"அவன் நம்ம பட்டுவை என்ன பண்ணினானோ ?" பரத் கோபத்தில் கத்தினான்...

"பட்டு..." என்று அவந்திகாவால் மகளை நினைத்து அழத்தான் முடிந்தது.

"ம்மꣳா , விஷ்ணு பட்டுவை ஒண்ணும் பண்ண மாட்டான்... பயப்படாதீங்க..." ஸ்ரீராம் அன்னைக்கு ஆறுதல் அளித்தான்.

"அப்போ எதுக்குப் பட்டுவை கடத்தணும்... ?" அன்னையின் கேள்விக்கு அவனிடம் பதில் இல்லை... காதலꣳா ? காழ்ப்புணர்ச்சியꣳா ? எது விஷ்ணுபிரஹானை

ஆட்டிப்படைக்கின்றதா ? என்று அவனுக்குத் தெரியவில்லை...

"யாருக்கும் இந்த விசயம் தெரிய வேண்டாம்... பட்டுக் கேம்ப் போயிருக்கிறதாவே இருக்கட்டும்..." என்ற அர்ஜூன் ,

"நிச்சயம் பட்டு அஸ்ஸாம் மாநிலத்துக்குப் போயிருக்க வாய்ப்பில்லை... வேறு எங்கேயோ தான் அவன் அவளைக் கடத்திட்டு போயிருக்கணும்... முதலில் முரளியை நம்ம கஸ்டடியில் எடுத்து விசாரி ஸ்ரீ..." என்று கூறியதும் ஸ்ரீராமும் , பரத்தும் சரியென்று எழுந்தனர்...

அடுத்தச் சில நிமிடங்களில் முரளியை தங்களது விசாரணையின் கீழ் கொண்டு வந்தனர்... அர்ஜூன் சொன்னது போல் விஷ்ணுபிரஹான் சென்னையில் இல்லை... அவன் எங்கிருக்கிறான் ? என்று எவ்வளவோ கேட்டு பார்த்தும் முரளி , ' அஸ்ஸாம் ' என்று பதில் சொன்னானே தவிர... அவனுக்கும் விஷ்ணு இருக்கும் இடம் பற்றி எதுவும் தெரியவில்லை...

"இதுக்கு மேல அடிச்சா இவன் செத்து போயிருவான்ப்பா... விஷ்ணு இவன் கிட்டேயும் உண்மையைச் சொல்லலை போலிருக்கு... இப்போ என்ன பண்ணலாம்... ?"

"நம்ம பவரை யூஸ் பண்ணி ஒரே நாளில் எல்லா மாநிலத்திலும் பட்டுவை தேட சொல்லு ஸ்ரீ... முக்கியமா விஷ்ணு ஃபோட்டோவை காண்பித்துத் தேட சொல்." அர்ஜூன் கட்டளை விதிக்க... மகன்கள் அவனது கட்டளையை உடனே நிறைவேற்றினர்...

அர்ஜூன் மனம் முழுவதும் விஷ்ணுபிரஹான் மீதான வன்மமே அதிகம் இருந்தது. அவன் மட்டும் நேரில் இருந்தான் உயிரை விட்டிருந்திருப்பான்...

****

இதை அறியாத விஷ்ணுபிரஹான் ஆராதனாவுடன் இருக்கும் ஒவ்வொரு கணத்தையும் பொக்கிசம் போல் மனதில் போற்றிப் பாதுகாத்தான். அவள் அருகில் இருந்து

பார்க்கும் போது தான் அவளது குழந்தைத்தனம் அவனுக்குத் தெரிய வந்தது... அதையும் ஆசையுடன் ரசித்துப் பார்த்தான் அந்தத் தாயுமானவன்... மொத்தத்தில் அவன் ஆராதனாவை ஆராதனை செய்யும் சேவகனாக மாறிப் போயிருந்தான்.

அன்றொரு நாள் ஆராதனா சமையல்க்கார பெண்மணியுடன் இணைந்து பசு மாட்டில் இருந்து பால் கறக்க பயிற்சி எடுத்து கொண்டிருந்தாள். அதைக் கண்டவாறு அங்கு வந்து சேர்ந்தான் விஷ்ணுபிரஹான்... அவனைக் கண்டதும் அவளுக்கு உற்சாகம் தொற்றிக் கொண்டது...

"பிரஹான் இங்கே பாருங்க..." என்றவள் மாட்டின் மடியில் இருந்த பாலை அப்படியே தனது வாயுக்குள் பீய்ச்சி அடித்தாள்...

"சூப்பர் டேஸ்ட்டா இருக்கு..." என்று அவனிடம் பரிந்துரை வேறு...

அவனோ வார்த்தைகள் மறந்து போனவனாய் அவளது முகத்தினைப் பார்த்தபடி அசையாது நின்றிருந்தான்... அவள் தனது வாயை சுற்றித் தெளிந்திருந்த பாலை நாக்கை வெளியில் நீட்டி வழித்துச் சப்பு கொட்டி ருசித்துக் கொண்டிருந்தாள்... அவளது முகத்தில் ஆங்காங்கே தெளிந்திருந்த பால் துளிகள் ஆணவனின் தாபத்தை அதிகரித்தது... அவளது மதி முகத்தை இருகரம் கொண்டு பற்றி அந்தப் பால் துளிகளைத் தனது இதழ் என்னும் தூரிகைகளால் சுத்தம் செய்திட விழைந்தது அவனது ஆசை கொண்ட மனம்... சிறிது நேரம் அங்கே இருந்திருந்தால் அதையும் அந்தக் கள்வன் செய்திருப்பான் தான்... அதற்குப் பயந்தே அவன் அவசரமாக அங்கிருந்து நகர்ந்தான். அவள் ஒன்றும் புரியாது அவனைப் பார்த்தவள் அசட்டையாகத் தனது தோள்களைக் குலுக்கி கொண்டு தனது பணியைச் செவ்வனே தொடர்ந்தாள்...

அன்றிரவு ஆராதனா ஆழ்ந்து உறங்கி கொண்டிருக்கும் போது அவளின் அறை கதவு படபடவெனத் தட்டப்பட்டது...

"ஆராதனா... பேபி..." விஷ்ணுபிரஹானின் குரல் கிணற்றில் இருந்து ஒலிப்பது போல் அவளுக்குக் கேட்டது...

"ப்ளீஸ் அத்து (அத்தானின் சுருக்கம்)... கொஞ்சம் நேரம் தூங்கிக்கிறேன்..." என்று அவள் முனங்கி கொண்டே குப்புற கவிழ்ந்து படுத்து கொண்டாள்...

வெளியில் நின்றிருந்தவனுக்கு அவள் தன்னை ' அத்தா ' என்றழைத்தது காதில் விழவில்லை... அது அவனது தூரதிர்ஷ்டமே... விழுந்திருந்தால் அவள் மனதில் தான் அழுந்த பதிந்திருக்கிறோம் என்பது அவனுக்குத் தெரிந்திருக்குமே... விதி அங்கேயும் சதி செய்தது..

"எழுந்துக்கோம்மா... ஒரு எமெர்ஜென்சி கேஸ்..." அவன் சற்று குரலை உயர்த்தி அழைத்தான்.

அதில் படக்கென்று எழுந்து அமர்ந்தவளுக்கு அப்போது தான் அவள் இருக்கும் இடம் நினைவில் உறைத்தது... அவள் வேகமாய் எழுந்து சென்று கதவை திறந்தாள்...

"பேபி , ஒரு எமெர்ஜென்சி கேஸாம்... உடனே கிளம்பு..." என்று அவன் அவளை அவசரப்படுத்த...

"வாங்கோ..." என்று கிளம்பியவளை கை நீட்டி தடுத்தவன்

,

"போய் டிரெஸ் மாத்திட்டு வா..." என்க...

அப்போது தான் அவள் தன்னைக் குனிந்து பார்த்தவள் மானசீகமாகத் தலையில் அடித்துக் கொண்டு அறைக்குள் நுழைந்து கதவை தாளிட்டு கொண்டாள்... விஷ்ணுபிரஹான் அந்த நேரத்திலும் அவள் நின்றிருந்த நிலையை மனக்கண்ணில் கண்டவனாய் தலையைக் கோதியபடி தனக்குள் சிரித்துக் கொண்டான். இரவு உடையில் எழிலோவியமாய் நின்றிருந்த பாவையவளின் அழகு அவனைப் பித்தனாக்கி இருந்தது...

"மயக்கும் மோகினி பிசாசு..." அவன் மெல்ல கிறக்கமாய் முணுமுணுத்துக் கொண்டான்...

"பிரஹானஂ , வாங்கோ..." என்றபடி வந்தவளை கண்டு அவனது மயக்கம் தெளிந்தது... அவசரநிலை புரிந்து அவளை ஜீப்பில் ஏற்றிக் கொண்டு மருத்துவமனையை நோக்கி அவன் பறந்தான்...

அந்தப் பதினான்கு வயது சிறுமிக்கு தான் பிரசவ வலி ஏற்பட்டு இருந்தது. அந்தப் பகுதியில் இந்த மாதிரி பிரசவங்கள் சகஜம் என்பதால் அரசாங்கம் கூட அவர்களிடம் தங்களது சட்டங்களைப் பிரயோகப்படுத்த யோசித்தது... ஏனெனில் அவர்களது ஓட்டு அரசியல்வாதிகளுக்கு முக்கியமே... அதனால் வாய்மூடி மௌனியாக அனைத்தையும் கண்டும் காணாது இருந்தது.

ஆராதனா அங்கு வந்து பார்த்த போது அந்தச் சிறுமி வலி தாங்கி கொள்ள முடியாது மூச்சு வாங்க படுத்திருந்தாள். சிறுமியிடம் அவள் என்னவென்று சொல்லி புரிய வைப்பாள்... அவளுக்குத் திகைப்பாக இருந்தது.

"கொஞ்ச நேரம் தான் வலியை பொறுத்துக்கிட்டா , மூச்சை அடக்கிக்கிட்டு குழந்தையைப் புஷ் பண்ணும்மா..." என்க...

"முடியலை டாக்டர்... ரொம்ப வலிக்குது..." என்று சிறுமி வலி தாங்காது கண்ணீர் வடித்தாள்...

"நீயும் முயற்சி செய்தால் தான் குழந்தை நல்லபடியாகப் பிறக்கும் பேபி..." என்று அவள் சிறுமியின் தலையைக் கோதி கொடுத்து ஆறுதல் படுத்தினாள்...

மிகுந்த சிரமப்பட்டு அந்தச் சிறுமி அழகான பெண் குழந்தையைப் பெற்றெடுத்தாள்... அடுத்த நொடி சிறுமி மூச்சு வாங்க சிரமப்பட்டவளாய் வேக வேகமாய் மூச்சை இழுத்து விட்டவளின் உடல் திடீரென்று தூக்கிவாரி போட்டது... தேகம் எல்லாம் குளிரில் விறைத்திருக்க ஜன்னி கண்ட சிறுமியின் உடல் இரு முறை தூக்கி போட்டது... மூன்றாவது முறை சிறுமி நிரந்தரமாகத் தனது மூச்சினை நிறுத்தி இருந்தாள்.

"பேபி , ப்ளீஸ் வேக்கப் பேபி..." ஆராதனா கண்கள் கலங்க சிறுமியின் நெஞ்சில் இருகரங்களையும் வைத்து மீண்டும் மீண்டும் அழுத்தினாள். அந்தோ பரிதாபம் சிறுமி கண் விழிக்கவே இல்லை...

ஆத்திரத்துடன் வெளியில் வந்த ஆராதனா அங்குக் கூடியிருந்த அவளது கணவனி , அவளது பெற்றோரை கண்டு கண்டபடி சத்தம் போட்டாள்... அவள் தமிழில் கத்தியது அவர்களுக்குச் சுத்தமாய்ப் புரியவில்லை... ஆனால் அவளது கண்ணீர் அவர்களுக்கு ஏதோ விபரீதத்தை உணர்த்தியது.

"எங்க பொண்ணுக்கு என்னவானது ?" சிறுமியின் பெற்றோர் ஆராதனாவிடம் கேட்க... ஆராதனாவோ அதை உணராது கத்தி கொண்டிருந்தாள்...

ஆராதனாவின் கோபக்குரல் கேட்டு வெளியில் நின்றிருந்த விஷ்ணுபிரஹான் மருத்துவமனைக்குள் ஓடி வந்தான். அதற்குள் அந்தச் சிறுமியின் கணவன் ஆராதனா அருகில் கோபத்துடன் வர எத்தனித்த போது விஷ்ணுபிரஹான் அவர்களுக்கு இடையில் வந்து நின்றான். ஆராதனாவை பாதுகாப்பாய் தனது வலக்கையால் அரவணைத்து கொண்டவனி ,

"ரிலாக்ஸ் பேபி... என்ன நடந்தது ?" என்று பரிவோடு கேட்க...

"அந்தச் சின்னப் பொண்ணு..." மேலே பேச முடியாது ஆராதனா துக்கம் தாங்காது பொங்கி பொங்கி அழுதாள்... அதிலேயே அவனுக்கு நடந்த விபரீதம் புரிந்து போனது... அவளது தலையை ஆறுதலாய் வருடி கொடுத்தவனி ,

"எதனால் இப்படியானது ?" என்று கேட்க...

"பிரசவ வலியை தாங்குற வயசா அந்தப் பொண்ணுக்கு... வலி தாங்க முடியாம உயிரை விட்டு விட்டாள்..." என்று அழுகையுடன் கூறியவளி ,

"இந்த மலமாடை வலியை தாங்கியிருக்கச் சொல்லணும்... அப்போ தெரியும் அந்தப் பொண்ணு பட்ட பாடு... கொஞ்சமும் ஈவு இரக்கம் இல்லாதவன்... எப்படிக் கல்லு மாதிரி நிற்கிறான் பாருங்கோ... இவனை எல்லாம்..." சிறுமியின் கணவனைப் பார்த்து அவள் ஆத்திரத்தில் பல்லை கடித்தாள்.

விஷ்ணுபிரஹான் அவளை அமைதிப்படுத்தியவன் அங்கிருந்தவர்களிடம் நடந்த விசயத்தை எடுத்துக் கூறினான். சிறுமியின் வீட்டார் அவளது மரணத்தை விசாரிக்கக் காவல்நிலையத்திற்குச் செல்ல போவதாகக் கூற...

"போங்கடா போங்க... அங்கே போனால் நீங்க தான்டா களி திங்கணும்... நானில்லை..." என்று ஆராதனா அதற்கும் எகிறினாள்.

"ப்ளீஸ் பேபி... கொஞ்ச நேரம் அமைதியாயிரு..." அவளிடம் கெஞ்சி கேட்டுக் கொண்ட விஷ்ணுபிரஹான் சிறுமியின் வீட்டாரை சமாதானப்படுத்தி மேற்கொண்டு ஆகவேண்டிய காரியங்களைப் பார்க்க சொல்லிவிட்டு ஆராதனாவை அழைத்துக் கொண்டு வீடு வந்து சேர்ந்தான்.

வரும் வழியெல்லாம் அழுது கொண்டே வந்த ஆராதனாவை அவன் சமாதானப்படுத்த முயலவில்லை... வீட்டிற்குள் நுழைந்த பிறகும் அழுது கொண்டே இருந்தவளை கண்டு அவன் ,

"ப்ச் , விடு பேபி..." என்று ஆயாசத்துடன் கூற...

"எப்படி விட முடியும் ? சாகிற வயசா அவளுக்கு ? அவள் மனசில் எத்தனை ஆசைகள் இருந்திருக்கும்... அத்தனையும் அவளோடயே செத்து போயிருச்சு... அவனுக்கு என்ன ? பொண்டாட்டி செத்தா புது மாப்பிள்ளை... அந்தப் பழமொழிக்கு ஏற்ப நாளைக்கே அவன் குழந்தையைப் பார்த்துக்கன்னு சாக்கு சொல்லிட்டு வேறொருத்தியை கல்யாணம் பண்ணிக்கிட்டு சந்தோசமா வாழுவான்... ஆண்களுக்கு எல்லாம் பெண்கள் செக்ஸ்

டாய்ஸ் அவ்வளவு தான்... பெண்களுக்குன்னு தனி உணர்வுகளஂ , ஆசைகளஂ , விருப்பங்கள் இருக்கும் என்பதைக் கூடப் புரிஞ்சிக்க முடியாத ஜடங்கள்..." அவள் அழுகையுமஂ , ஆத்திரமுமாய் வெடித்துச் சிதறினாள்.

அவளது வார்த்தைகள் ஒவ்வொன்றும் அவனைச் சவுக்கடியாய் அடித்து வீழ்த்தியது. மனம் ரணமாக அப்படியே கல்லாய் சமைந்து நின்றிருந்தவன் பின்பு அவளை ஏறிட்டு பார்த்தஂ ,

"உன்னுடைய ஆசைகளஂ , விருப்பங்கள் என்ன பேபி... ?" என்று மெல்ல கேட்க...

அதில் அவளது அழுகை நின்று போனது... ஆத்திரம் வடிந்து போனது... அவள் திகைப்புடன் அவனைப் பார்த்திருந்தாள்... அவனது வார்த்தைகள் அவளது ரணத்தைக் கிளறிவிடப் போதுமானதாய் இருந்தது...

"இப்போ அது தெரிஞ்சு நீங்க என்ன செய்யப் போறீங்க மிஸ்டர். விஷ்ணுபிரஹான்... ? அது உங்களுக்குத் தேவையில்லாத ஒன்று..." அடக்கப்பட்ட கோபத்துடன் கூறியவள் தனது அறைக்குள் நுழைந்து கதவை சாற்றிக் கொண்டாள்.

அவன் நெடுநேரம் அப்படியே நின்றிருந்தான்...!

****

கடந்த இரண்டு நாட்களாக விஷ்ணுபிரஹான் ஆராதனாவை பார்த்துக் கொண்டு தான் இருக்கின்றான்... அவள் சோக சித்திரமாய் வீட்டை வளைய வந்து கொண்டிருந்தாள்... எங்கேயும் செல்லவில்லை... அவளது சிரிப்பஂ , துடிப்பஂ , துள்ளல் எல்லாமே காணாமல் போயிருந்தது. அவளது இந்த மாற்றம் அவனை மிகவும் வருத்தியது...

"இப்போ என்ன நடந்து போச்சுன்னு இப்படிச் சோகமா இருக்க... ? ஒரே நாளில் இங்கே மாற்றத்தை ஏற்படுத்திவிட

முடியாது பேபி... கொஞ்சம் கொஞ்சமா தான் மாற்றத்தை கொண்டு வரணும்... போ , போய்க் கிளம்பி வா..."

"நான் எங்கேயும் வரலை..." அவள் இரு கைகளையும் கட்டி கொண்டு முறுக்கி கொண்டாள்...

"அம்மா தாயே... நீ எதுக்கு இங்கே வந்திருக்கன்னு உனக்கு ஞாபகம் இருக்கா... ?" என்றவனை அவள் முறைத்து பார்க்க...

"சொன்ன பேச்சு கேட்டு கிளம்பணும்..." அப்போதும் அவள் கிளம்பாது இருக்க...

"உன்னுடைய மனசுக்கு பிடிச்ச மாதிரியான இடத்துக்குத் தான் கூட்டிட்டு போறேன்... கிளம்பி வா..." அவனது தன்மையான பேச்சில் அவள் அதற்கு மேல் பிடிவாதம் பிடிக்காது கிளம்பினாள்.

"கேமிராவும் எடுத்துக்கோ..." என்று அவன் ஞாபகப்படுத்த... அவள் அதையும் எடுத்துக் கொண்டு கிளம்பினாள்.

விஷ்ணுபிரஹான் ஆராதனாவை நேரே அழைத்துச் சென்ற இடம் அவனது தோட்டத்திற்கு... பாலைவன நிலத்தில் சொட்டு நீர்ப்பாசன முறையில் அவன் காய்கறி தோட்டம் , பூந்தோட்டம் என்று ஏக்கர் கணக்கில் பயிரிட்டு இருந்தான். அதைக் கண்டதும் அவளது முகம் மலர்ந்து போனது...

"கிரேட் ஜாப் பிரஹான்..." என்று அவள் அவனைப் பாராட்ட... அதைக் கேட்டு அவனது முகம் பெருமையில் பூரித்துப் போனது...

"தேங்க்ஸ் பேபி..."

"ராட்சசனுக்குள் இப்படி ஒரு ரசனையா ?" அவள் நம்ப முடியாது கடைசியில் கேட்டே விட்டாள்...

"என்னைப் பற்றி உனக்கு என்ன தெரியும் ? நீ என்னைப் பற்றி ஜீரோ பெர்சென்ட் கூடத் தெரிஞ்சு வச்சிக்கலை..." என்று அவன் கூற...

அவளது முகம் ஒரு மாதிரியாய் மாறிப் போனது... அவளது முகம் பார்த்ததும் தான் ஏன் அப்படிப் பேசினோம் ? என்று அவன் தன்னைத் தானே நொந்து கொண்டான். அவளோ அவனைக் கண்டு கொள்ளாது புகைப்படம் எடுத்து கொண்டிருந்தாள்...

"இந்தப் பூவின் பெயர் என்ன பிரஹான் ?" மீண்டும் அவள் சகஜமாக அவனை அழைத்துப் பேசவும் தான் அவனும் தனது சங்கடத்தை மறந்து அவளுடன் பேச ஆரம்பித்தான்...

"உங்களுக்கு எப்படி இப்படி ஒரு ஐடியா வந்தது ?"

"அரபு நாடுகளில் இந்த முறையைத் தான் பயன்படுத்துறாங்க... அதைப் பார்த்து தான் நானும் முயற்சி செய்தது... இப்போ கை மேல் நல்ல பலன்... என்னைப் பார்த்து மத்தவங்களுக்கும் விவசாயத்தின் மேல் ஆர்வம் வந்திருக்கு... பாலைவனம் மனம் குளிரும் சோலைவனமாகும் நாள் வெகுதொலைவில் இல்லை..." என்றவன் அவளுக்கு இங்குப் பயிர் செய்யும் முறையை விளக்கி கூறினான்...

"எனக்கு ரொம்ப நாள் ஆசை... இங்கே நெல் பயிர் செய்யணும்ன்னு..."

"இங்கே பாலைவனத்திலா ?" அவள் ஆச்சரியத்துடன் வாயை பிளந்தாள்... காய்கறி , பூந்தோட்டம் எல்லாம் சொட்டு நீர்பாசன முறையில் பயிரிடப்படுவது... ஆனால் நெல் பயிர்கள் அப்படி இல்லையே... அதை அவள் அவனிடத்தில் கேட்கவும் செய்தாள்...

"நீ சொல்வது நூற்றுக்கு நூறு சரியே... ஆனால் இப்போது அரபு நாடுகளில் பாலைவனத்தில் , அதுவும் கடல் நீரில் நெல் பயிரிட்டு அசத்தியிருக்காங்க..." அவன் கூறியதை கேட்டு அவளும் அசந்து போனாள்...

"சீனாவின் ' கலப்பு அரிசியின் தந்தை ' என்று போற்றப்படும் யுவான் லாங்பிங்(Yuan Longping) கலப்பு அரிசி வகைகளை உருவாக்குவதில் உலக அளவில் புகழ்

பெற்றவர்... அவர் தான் இதற்கு உதவி செஞ்சிக்கிறார்... இஸ்ரேல் , ஆஸ்திரேலியா எல்லாம் உப்பு நீரை தூய்மைப்படுத்தி நன்னீராக மாற்றி அதில் நெற்பயிர்களை விளைவிக்கும் முயற்சியில் இறங்கி இருக்கும் போது... சீனா சத்தம் இல்லாது உப்பு நீரில் வளரக்கூடிய நெல் பயிர்களை உருவாக்கும் ஆராய்ச்சியில் பல வருடங்களாக ஈடுபட்டு வருகிறது... யுவான் லாங்பிங் கண்டறிந்த நெல் பயிர் தான் இப்போது அரபு நாடுகளில் பயிரிடப்பட்டு அறுவடையும் செய்தாயிற்று... பாலைவன தட்பவெட்பநிலையைச் சமாளித்து வளரக்கூடிய திறன் படைத்தது இந்த நெற்பயிர்கள்... அதைத் தான் நான் இங்கேயும் கொண்டு வர முயற்சி செய்கிறேன்..."

"உங்க முயற்சி வெற்றியடைய வாழ்த்துக்கள் பிரஹான்..." அவனது எண்ணம் அவளுள் பெரும் பிரமிப்பை ஏற்படுத்தி இருந்தது.

"தேங்க்ஸ் பேபி..." என்றவன் ,

"நாம் நம் விவசாய மண்ணை மீத்தேனுக்குத் தாரைவார்த்து கொடுத்துக் கொண்டிருக்கிறோம்... ஆனால் விவசாயமே தெரியாத நாடு அதில் சக்கை போடு போடுது... எத்தகைய முரண்பாடு இது..." அவனது முகம் வேதனையைப் பிரதிபலித்தது...

"பிரஹான்..." அவள் கவலையுடன் அவனைப் பார்த்தாள்...

"ப்ச்... ஏதேதோ பேசி உன்னைப் போர் அடித்து விட்டேன்... சாரி பேபி..." என்றவன் ,

"ஒட்டக சவாரி போகலாமா... ?" என்று கேட்க...

"ஓ... எஸ்..." என்று அவள் ஆர்வத்துடன் குதூகலமாகக் குதித்தாள்...

"உன்னைப் பார்த்தால் மெடிக்கல் கேம்ப் வந்த மாதிரி தெரியலை... ஏதோ டூர் வந்த மாதிரி இருக்கு..." அவன் அவளைக் கிண்டலடிக்க... அடுத்த நொடி அவளது முகம் வாடி போனது...

"அப்பாவுக்கு ஃபோன் பண்ணி பேசணும்... ரொம்ப நாளாகிருச்சு... அவங்க என்னை ரொம்ப மிஸ் பண்ணுவாங்க..." அதைக் கேட்டு அவனது முகம் ஒரு மாதிரியாய் மாறிப் போனது... நொடியில் தன்னைச் சமாளித்துக் கொண்டவனாய் ,

"நான் டவுனுக்குப் போகும் போது உன்னைக் கூட்டிட்டு போகிறேன்..." என்று எப்போதும் போல் அவளைச் சமாதானப்படுத்தினான்... அவளும் அதிலேயே சமாதானமாகி போனாள்...

ஒட்டகத்தில் தனியே ஏற ஆராதனா பயப்பட... விஷ்ணுபிரஹான் முதலில் ஏறிக் கொண்டு அவள் ஏறுவதற்கு உதவி செய்தான்... அவள் ஏறியதும் ஒட்டகம் எழுந்து நிற்க... அதில் அவள் பிடிமானம் கிடைக்காது நிலைதடுமாறிப் பின்னால் அவன் மீதே சாய்ந்தாள்...

இத்தனை நாள் தாபம் அவனை உந்தி தள்ள... இது தான் சாக்கு என்று மன்னவன் மங்கையவளின் இடையை இறுக்கி பிடித்தான்...! அவனது செயலில் அவள் திகைத்து போய் அவனை ஏறிட்டு பார்த்தாள்...!!!

திருத்தமாகும்...!!!

ஆராதனாவின் திகைத்த பார்வையில் தான் விஷ்ணுபிரஹானுக்குத் தான் செய்திருக்கும் காரியத்தின் வீரியம் புரிந்தது. அவன் உடனே தனது கைகளை அவளது இடையில் இருந்து எடுத்தால் அவன் தவறு செய்தது போலாகி விடும். அவன் செய்தது தவறில்லை என்றே அவன் நினைத்தான். அவள் அவனுக்குச் சொந்தமானவள் என்கிற எண்ணம் அவனது மனதில் ஆழ வேரூன்றி இருந்தது. அதனால் அவன் தனது கைகளை விலக்கி கொள்ளவே இல்லை...

ஆராதனா விஷ்ணுபிரஹானின் கை தனது இடையைத் தழுவி இருப்பதைக் கண்டு அவள் என்ன மாதிரியாக உணர்ந்தாள் என்று அவளுக்கே தெரியவில்லை... ஒருவித அவஸ்தையுடன் சங்கடத்துடன் நெளிந்தவள் சற்று கோபத்துடன் அவனை நிமிர்ந்து பார்த்தாள்.

"கையை எடுங்க பிரஹான்..." என்று அவள் கண்டிப்புடன் கூற...

"எனக்குக் கைகளை எடுப்பதில் எந்தவித ஆட்சேபணையும் இல்லை..." என்றவன் அடுத்த நொடி தனது கைகளை விலக்கினான்... அவள் தான் ஒட்டகத்தின் அசைவில் பிடிமானம் இல்லாது மீண்டும் அவன் மீது சாய்ந்தாள்...

"இதுக்குத் தான் சொன்னேன் பேபி..."

அவளது காதோரம் கிசுகிசுத்தவன் அவளது இடையை விருப்பமாய் இறுக்கி பிடித்துக் கொண்டான்... அவனது செய்கையில் அவள் தான் உறைந்து போனாள்... ஒட்டக சவாரியில் இருந்து பாதியில் இறங்கவும் முடியாது... அவள் மெல்லவும் முடியாதா , முழுங்கவும் முடியாது அவனது அருகாமையில் திணறி கொண்டிருந்தாள்... அவளது நிலையை அவனும் உணர்ந்தானோ என்னவோ! மீண்டும் அவளது காதோரம் குனிந்தா ,

"பேபி , அங்கே பார்... சூரியன் அஸ்தமனமாகும் அற்புதமான அழகினை பார்..." என்று அவன் கூற...

அவனது குரலில் திரும்பி பார்த்த ஆராதனா அப்படியே ஸ்தம்பித்துப் போனாள்... மேற்கில் ஆதவன் மெல்ல மறைந்து கொண்டிருந்தான்... கண்ணுக்கு எட்டிய வரை தெரிந்த பாலைவன மணல் சூரியனின் கதிரொளியால் தங்கப்பாளங்களாய் ஜொலித்தது. நிலமங்கையின் முகம் மின்னும் பொன்னாய்த் தகதகத்திருக்க... அவளது நெற்றியிலிட்ட சிவப்புக் குங்குமமாய்ப் பகலவன் அழகாய் வட்டமாய் ஜொலித்தான்...

"வாவ் , சூப்பர் சீன்..." என்று சிலிர்த்தபடி ஆராதனா அந்த அற்புதமான காட்சியைத் தனது புகைப்படக் கருவியில் பதிந்து கொண்டாள்...

அவள் கீழே விழாதிருக்குமாறு விஷ்ணுபிரஹான் தனது கைகளை அவளது இடையில் அழுத்தமாய்ப் பதித்துக் கொண்டான்... அவனுக்கு அவளின் அழகை விட ஆதவனின் அழகு ஒன்றும் அதிஅற்புதமாகத் தெரியவில்லை... அவனைப் பொறுத்தவரை அவள் தான் அவனுக்கு எட்டாவது அதிசயம்...!

எவ்வளவு நேரம் ஒட்டக சவாரி செய்ய முடியும்...! அதுவும் முடிவுக்கு வந்தது... முதலில் கீழே இறங்கிய விஷ்ணுபிரஹான் ஆராதனா இறங்குவதற்காகத் தனது கையை நீட்டினான். அவள் அவனது கையைத் தட்டிவிட்டு விட்டு ஒட்டகத்தின் மீதிருந்து துள்ளி குதித்து இறங்கியவள் ,

"என்னைய என்ன பயந்தாங்கோலின்னு நினைச்சீங்களா ?" என்று முறைப்புடன் கூற...

"அப்படியா... ? சரி சரி , நீ தைரியசாலின்னு நான் ஒத்துக்கிறேன்... வா , இன்னொரு ரவுண்ட் போகலாம்..." என்று அவன் அவளது கையைப் பிடித்திழுக்க...

"அதெல்லாம் ஒண்ணும் வேண்டாம்... இன்னும் சுத்தி பார்க்க வேண்டியது நிறையிருக்கு..." தனது கெத்தை விட்டு கொடுக்காது அவள் அங்கிருந்து நகர்ந்தாள்... அவன் புன்சிரிப்புடன் அவளைப் பின்தொடர்ந்தான்.

பாலைவனத்தில் அவளது கலை கண்ணிற்கு மட்டும் அப்படி என்ன தான் தென்பட்டதோ ? அவள் புகைப்படமாய் எடுத்து தள்ளி கொண்டே இருந்தாள்... சிறிது நேரம் சென்றதும் தான் அவள் தனது செருப்பை மீறி மணலின் சூட்டினை உணர துவங்கினாள்... கல்லும் , முள்ளும் , சூடும் , குளிரும் பதம் பார்க்காத மலர் பாதங்கள் அல்லவா ? அதனால் தான் சிறு சூட்டினையும் அவளால் தாங்கி கொள்ள முடியவில்லை...

"பிரஹான்..." என்று அவனை அழைத்தவளின் விழிகள் கலங்கி போனது...

அவளது அழைப்பில் திரும்பி பார்த்தவன் அவள் கால் மாற்றி மாற்றி அவஸ்தையுடன் நின்று கொண்டிருப்பதைக் கண்டு வேகமாய் அவளை நோக்கி ஓடி வந்தான்...

"சுடுதா பேபி ?" கேட்டவனின் குரலில் தான் எத்தனை வலி!

"ம் , ம்..."

கண்களில் கண்ணீர் அரும்பத் தலையசைத்தவளை கண்டவன் நொடி நேரம் கூடத் தாமதிக்காது அவளது பாதங்களைத் தனது பாதங்களின் மீது ஏறி நிற்க செய்தவன் அவளைத் தன்னோடு சேர்த்து அணைத்துக் கொண்டான்... அவனது எதிர்பாராத செயலில் அவள் திகைப்பாய் அவனை அண்ணாந்து பார்த்தாள். இருவரது தேகமும் ஒன்றை ஒன்று உரசி கொண்டு நிற்க... விழிகள் நான்கும் ஸ்தம்பித்து உறைந்து போயிருந்தது... அவளைக் காப்பதற்காக அவன் செய்த செயல் தான் என்றாலும் இப்போது அவனை அவளிடம் இருந்து காப்பதற்கு வழியில்லாது போனது... பெண்ணவளின் நீண்ட , அகன்ற

மயக்கும் விழிகளின் வீச்சினில் அவன் விரும்பியே தன்னைத் தொலைத்தான்...

அந்நேரம் பார்த்து புழுதி புயல் சுழன்று அடித்தது... பாலைவன மணல் சுழல் காற்று போல் மேலெழுந்து சுழன்று அடித்ததைக் கண்டு விஷ்ணுபிரஹான் சட்டென்று சுதாரித்துக் கொண்டவனாய் ஆராதனாவின் முகத்தைத் தனது நெஞ்சோடு பதித்து அவளைத் தான் அணிந்திருந்த மேல் கோட் மூலம் தாய் பறவை தனது சேயை அடைகாப்பது போல் அவளைப் பாதுகாத்தான்...

ஆராதனா அவனது இதயத்தின் துடிப்பை உணர்ந்தாள்... அவனது இதயத்தின் துடிப்பு தனக்கானது என்று ஒரு காலத்தில் நினைத்தவள் அவள்... ஆனால் இன்றோ ??? கதையே மாறி போயிருக்கிறதே... அவனது மனைவி அர்ச்சனாவின் ஞாபகம் அவளுள் எழுந்ததும் அவள் அவனைத் தள்ளிவிட்டு விட்டு அகல நினைக்கும் முன் இருவருமே தரையில் வீழ்ந்து கிடந்தனர்.

யார் தங்களைத் தள்ளிவிட்டது ? என்று இருவரும் சுதாரித்துக் கொண்டு பார்க்கும் முன் விஷ்ணுபிரஹானை அர்ஜூனும் , ஸ்ரீராமும் இணைந்து அடிக்க... பரத்தோ தங்கையின் தலைமுடியை கொத்தாக பற்றித் தூக்கி நிறுத்தி ,

"உனக்குக் கொஞ்சமும் வெட்கமா இல்லையாடி... அவனைக் கட்டிப்பிடிச்சிக்கிட்டு நிற்கிற... அவன் ஏற்கெனவே கல்யாணமானவன்... அது உன் நினைப்பில் இருக்கா... ? நீ இன்னொரு வீட்டுக்கு வாழ போகிறவள்... அதாவது உன் நினைப்பில் இருக்கா ? அப்படி நினைப்பிருந்தால் இப்படி நீ எங்களைக் கேவலப்படுத்தி இருக்க மாட்ட..." என்று கேட்டுக் கொண்டே தங்கையின் இரு கன்னங்களிலும் சராமாரியாக அடித்தான்...

மகளின் மீது சிறு துரும்பு கூடப்படாது வளர்த்த அர்ஜூன் இப்போது மகன் மகளை அடிப்பதை கண்டு அமைதியாக இருந்தான்... அவனது அடக்கப்பட்ட ஆத்திரம் எல்லாம் விஷ்ணுபிரஹான் மீது திரும்பியது... அர்ஜூன்

விஷ்ணுபிரஹானை அடித்துத் துவம்சம் செய்தான். எதிர்பாராத தாக்குதலில் முதலில் அடிவாங்கிய விஷ்ணுபிரஹான் பின்பு சுதாரித்துக் கொண்டு அவர்களை எதிர்க்க தயாரானான்...

விஷ்ணுபிரஹான் பாலைவனத்தில் பசுமை புரட்சி செய்ததை ஒரு பிரபல பத்திரிக்கை பேட்டி எடுத்துச் சென்றிருந்தது... இத்தனை நாள் பிரசுரிக்காது இருந்த பேட்டியை நேற்று தான் அது தனது பத்திரிக்கையில் பிரசுரித்தது... ஊடக தொடர்பில்லாத விஷ்ணுபிரஹான் இதை அறியவில்லை... ஆனால் அதைக் கண்ட பரத் உடனே தனது தந்தையிடம் வந்து விசயத்தைக் கூற... மூவரும் கிளம்பி வந்து விஷ்ணுபிரஹானை விசாரித்து இங்கே வந்து சேர்ந்தனர்... வந்தவர்கள் கண்ட காட்சி அவர்களது இரத்தத்தைக் கொதிக்கச் செய்தது...

"அவன் உன்னைக் கடத்திட்டு வந்திருக்கிறான்... நீ கொஞ்சமும் வெட்கம் இல்லாம அவனோட ஒட்டி உறவாடிக்கிட்டு இருக்க... இப்போ நாங்க சிவேஷ் வீட்டுக்கு என்ன பதில் சொல்வோம்... ? என் தங்கை விரும்பி தான் அவன் கூடப் போனாள்ன்னா... ? இல்லை அவனுடனான உறவை புதுப்பிக்கப் போனாள்ன்னா ? எதைச் சொல்வது ? சொல்லுடி... ?" பரத் ஆங்காரமாய்க் கர்ஜித்தபடி தங்கையை அடித்தான்...

"பரத் , அவளுக்கு ஒண்ணும் தெரியாது... அவளை விட்டு விடு..." விஷ்ணுபிரஹான் தன்னை அடிக்க முயன்ற அர்ஜூன் மற்றும் ஸ்ரீராமை தடுத்தபடி கூறினான்...

"அண்ணா சொல்றது உண்மையா ?"

சகோதரன் அடித்த அடியை வாங்கிக் கொண்டு உயிரை தனது கண்களில் தேக்கியபடி தன்னைப் பார்த்து கேட்ட ஆராதனாவின் அறியாமையில் அந்த நொடி விஷ்ணுபிரஹான் உள்ளுக்குள் செத்து தான் போனான்... தனது கயமையை எண்ணி எண்ணி அவன் மனதிற்குள் குமைந்து போனான்.

"அவன் எப்படி உண்மையைச் சொல்வானஂ ? உன்னைக் கடத்திட்டு வந்து உன்னுடைய பெயருக்குக் களங்கம் விளைவித்தஷ , உன்னுடைய கல்யாணத்தை நிறுத்துவது தானே அவனுடைய திட்டம்... அதை எப்படி ஒத்து கொள்வான்... ? திருட்டு ராஸ்கல்..." பரத் அடக்கப்பட்ட கோபத்தில் பல்லை கடித்தான்...

விஷ்ணுபிரஹான் திகைப்புடன் பரத்தை பார்த்தான்... பின்பு ஆராதனாவை பார்த்தவனின் விழிகள் அவளிடம் யாசித்தது... ' என்னைத் தவறாக எண்ணி விடாதஷ ' என்று... அவள் மனதில் தான் ஆழப்பதிய வேண்டும் என்பதற்காகத் தானே அவன் அவளைக் கடத்தியது... அது மட்டும் அவனுக்குத் தெரிந்தால் போதும்... அடுத்த நொடி அவன் அவளைத் தன்னுடையவளாக்கி அவளைத் தனது உள்ளங்கையில் வைத்து தாங்குவானே...!!!

முன்பு ஆராதனா விசயத்தில் அவன் செய்த பிழைகள் எல்லாவற்றையும் இப்போது சரி செய்ய அவன் துடித்தான்... அப்படிப்பட்டவன் அவளைக் களங்கப்படுத்தி மேலும் மேலும் பிழைகள் புரிய நினைப்பானஂா ???

"விடுங்கண்ணா..." பரத்தின் பிடியில் இருந்து தன்னை விடுவித்துக் கொண்டு நேரே விஷ்ணுபிரஹானை நோக்கி வந்த ஆராதனஂா ,

"நீங்க என்னைக் கடத்திண்டு வந்தது உண்மையஂா ?" என்று ஒருவித தீவிரத்துடன் கேட்க...

அவளது கேள்வியில் விஷ்ணுபிரஹான் உள்ளுக்குள் கொஞ்சம் கொஞ்சமாய்ச் செத்துக் கொண்டிருந்தான்... எத்தனையோ பிழைகளை அசால்ட்டாய் செய்தவன் தான் அவன்... ஆனால் இந்தப் பிழையைச் செய்துவிட்டு பெண்ணவளை காண முடியாது அவனது விழிகள் தாழ்ந்தது...

"என் மேல் சத்தியமா உண்மையைச் சொல்லுங்கோ..." கடைசிச் சொட்டு நம்பிக்கையைத் தனது வார்த்தைகளில்

ஊற்றி ஒருவித பரபரப்புடன் கேட்டவளிடம் பொய் கூறி ஏமாற்ற இயலாது அவனால் ,

"ஆம் , உனக்கே தெரியாது உன்னைக் கடத்திட்டு தான் வந்தேன்... ஹாஸ்பிட்டல் சார்பாக உனக்கு மெயில் அனுப்பியது நான் தான்... ஏர்போர்ட்டில் வைத்து நீ போகும் ஊரை மாற்றி அமைத்ததும் நான் தான்... இவை எல்லாவற்றையும் செய்தது நான் தான்..." என்று அவன் கூறிக் கொண்டே போக... மீண்டும் மீண்டும் விஷ்ணுபிரஹான் தனது பெண்மையனை , தனது காதலை கேவலப்படுத்துவதைக் கண்டு அவளால் தாங்கி கொள்ள முடியவில்லை...

"இந்த முறையும் என்னை ஏமாத்திட்டீங்க பிரஹான்... ரொம்ப வலிக்குது..." ஆராதனா தனது விழிகளில் வலி தேக்கியபடி கூறியவள் அடுத்த நொடி உணர்வற்ற மரமாய்க் கீழே சரிந்தாள்...

"பட்டு..." என்றபடி அர்ஜூன் மகளைத் தாங்கி பிடித்தான்...

விஷ்ணுபிரஹான் ஆராதனா கூறிய வார்த்தையில் உணர்வற்று போய் நின்றான் என்றால் , அவளது உணர்வற்ற நிலையைக் கண்டு அவன் மொத்தமாய் உயிரற்றுப் போனான்... இதைத் தங்களுக்குச் சாதகமாக்கி கொண்ட சகோதரர்கள் இருவரும் தங்களது தங்கையின் இந்த நிலைக்கு விஷ்ணுபிரஹான் தான் காரணம் என்றெண்ணி அவனை அடித்துத் துவம்சம் செய்தனர்... தன்னவளுக்குத் தான் செய்த பாவத்திற்குப் பிராயச்சித்தமாக அவன் அத்தனை அடிகளையும் மௌனமாக வாங்கிக் கொண்டான்... திருப்பி அடிக்க அவனுக்கு விருப்பம் இல்லை... அவன் வாங்கிய ஒரு அடி கூட அவனுக்கு வலிக்கவில்லை... ஏனெனில் அவனது உணர்வுகளைத் தான் அவனவள் மொத்தமாய்க் களவாடி சென்றுவிட்டாளே!!!

இருவரும் முன்பிருந்தே ஒருவரை ஒருவர் காதலிக்கவில்லை... உறவினால் வந்த உரிமையில் ஒரு நெஞ்சம் தெரிந்தே காதலில் விழுந்தது... உறவினால் வந்த

உரிமையை விட்டு கொடுக்க முடியாது இன்னொரு நெஞ்சம் தெரியாது காதலில் விழுந்தது. ஆனால் காதலில் விழுந்தவர்களை விட அதிக வலியை இருவரும் அனுபவித்து விட்டனர்...

"போதும் ஸ்ரீ... அவனை விட்டு விடு... செத்துர போறான்..." என்று மகன்களைத் தடுத்த அர்ஜூன் மகளைக் கைகளில் ஏந்தி கொண்டு தாங்கள் வந்த ஜீப்பை நோக்கி ஓடினான்...

இருவரும் விஷ்ணுபிரஹானை அம்போவென விட்டு விட்டு தந்தையைப் பின்தொடர்ந்தனர்... உணர்வற்ற நிலையில் தன்னவள் அவளது தந்தையுடன் செல்வதை உணர்ந்த விஷ்ணுபிரஹானின் மனதில் சொல்லொண்ணா வலி எழுந்தது... அந்த வலி அவனுள் ஆவேசத்தைக் கிளப்பியது. ஆராதனாவை யாருக்கும் விட்டு கொடுக்க முடியாது என்கிற ஆவேசம் அவனுள் அலை அலையாய் பரவியது...

"உன்னை யாருக்கும் விட்டு கொடுக்க மாட்டேன் பேபி... நீ எனக்கானவள்... எனக்கு மட்டுமே சொந்தமானவள்..." என்று மெல்ல முணுமுணுத்தவனின் நினைவுகள் கொஞ்சம் கொஞ்சமாய் மங்க ஆரம்பித்தது...

****

ஆராதனா தவிப்புடன் தனது அறையினுள் அமர்ந்திருந்தாள்... அவள் சென்னை வந்து ஒழு வாரமாகி விட்டது. அன்று அவள் மயக்கம் தெளிந்த போது ஜெய்ப்பூரில் இருக்கும் நட்சத்திர விடுதியின் அறையில் இருந்தாள்... சுற்றிலும் கவலை தொய்ந்த முகத்துடன் தந்தை , சகோதரர்கள் நின்றிருந்தனர்... அவள் கண் விழித்தது தெரிந்ததும் அவர்கள் மூவரும் அவளைச் சூழ்ந்து கொண்டனர்...

"பட்டா , இப்போ எப்படி இருக்கும்மா... ?" என்று தந்தை கேட்க... அவள் கண்ணீருடன் தந்தையைப் பார்த்தாள்...

"ப்பா... என்னை நம்புங்கோ... நான்... பரத் அண்ணா சொல்ற மாதிரி தப்பான பொண்ணு இல்லை..."

என்றவளின் தவிப்பை கண்டு ஸ்ரீராம் தம்பியை முறைத்தான்... பரத் பதில் பேசாது அமைதியாகத் தலைகுனிந்தான்...

"சூறாவளி மாதிரி மணல் பறந்ததால அவர் என்னைப் பாதுகாக்க தான் அப்படிச் செஞ்சார்... மற்றபடி நீங்க நினைக்கிற மாதிரி எதுவும் கிடையாது... நான் சர்வீஸ் பண்ணத்தான் இங்கே வந்தது... வேணும்ன்னா வெர்ஜினி..." மகள் மேலே சொல்ல போவதை ஊகித்தவனாய் அர்ஜூன் அவளது வாயை மூடியவன் ,

"அப்பா உன்னை நம்பறேன்டா... ப்ளீஸ் , இது மாதிரி எல்லாம் பேசாதே..." என்று வலியுடன் கூற... ஆராதனா தாங்க முடியாது முகத்தை மூடி கொண்டு அழுதாள்...

சகோதரர்கள் இருவரும் தங்களுக்கு இருந்த கோபத்தில் தங்கையின் வார்த்தைகளைக் கூர்ந்து கவனிக்கத் தவறிவிட்டனர்... தந்தையோ தனது மகளை எப்போதும் மகளாகவே பார்த்ததால் அவளது வார்த்தைகளின் அர்த்தத்தை ஊன்றி கவனிக்கவில்லை...

"இங்கே பார் பட்டு... யாரும் உன்னைத் தப்பா நினைக்கலை... பரத் ஏதோ கோபத்தில் பேசிவிட்டான்... அதுக்கு எந்தவித அர்த்தமும் இல்லை... சிவேஷ் வீட்டில் யாரும் உன்னைத் தப்பா பேசலை... அது தான் நமக்கு முக்கியம்... அது தான் உனக்குத் தேவை..." ஸ்ரீராம் அவள் அருகில் அமர்ந்து அவளது தலையை வருடி கொடுத்து ஆறுதல் படுத்தினான்... ஆராதனா கதறிக் கொண்டு அண்ணன் நெஞ்சில் சாய்ந்து அழுதாள்...

அன்றே ஆராதனாவுடன் எல்லோரும் சேர்ந்து சென்னைக்குக் கிளம்பி வந்துவிட்டனர்... ஆனால் ஆராதனாவால் டோக்பூரை விட்டு வெளிவர முடியவில்லை...

"அண்ணா , அவர் எப்படி இருக்கார் ?" தன்மையாகப் பேசும் ஸ்ரீராமிடம் இதைக் கேட்டு அவனின் முறைப்பை அவள் பரிசாகப் பெற்று கொண்டாள்...

"அவன் எப்படிப் போனா உனக்கு என்ன பட்டா ? என்னைக் கேட்டால் அவன் உயிர் போனால் கூடக் கவலையில்லை என்றே தோன்றுகிறது..." அவன் மிகுந்த எரிச்சலில் படபடத்துவிட்டு செல்ல... அவளுக்குத் தான் பயத்தில் மனம் படபடவென அடித்துக் கொண்டது...

அவள் எப்படியாவது விஷ்ணுபிரஹானின் நலன் பற்றி அறிய விரும்பினாள்... ஆனால் அதைச் செய்ய முடியாதபடி அவள் வீட்டுக் காவலில் வைக்கப்பட்டாள்... திருமணம் முடியும் வரை மருத்துவமனைக்குக் கூடச் செல்ல கூடாது என்று அவளுக்குத் தடை உத்தரவு போடப்பட்டது... அவளது அலைப்பேசி முதற்கொண்டு அவளிடம் இருந்து பறிக்கப்பட்டது...

"இந்தத் திருமணம் முடிவதற்குள் அவன் என்னென்ன பிரச்சனைகள் கிளப்ப போகிறானோ ? வெளியில் இருந்து பிரச்சனை கிளப்பினால் சமாளித்து விடலாம்... ஆனால் உன்னைக் கிளப்பிவிட்டுப் பிரச்சனை பண்ணினால் எங்களால் சமாளிக்க முடியாது... நீ நிதர்சனத்தை ஏற்றுக் கொண்டு திருமணத்திற்குத் தயாராகு... இல்லை அவனால் நீ அசிங்கப்பட வேண்டி வரும்..." என்று அர்ஜூன் மகளை எச்சரித்தான்... அது உண்மை என்று அறிந்த ஆராதனா வேறுவழியின்றி அமைதி காத்தாள்...

இருந்தும் மனது கேட்காது அன்னையின் அலைப்பேசியை யாருக்கும் தெரியாது எடுத்து வந்தவள் அதிலிருந்து சுந்தரிக்கு அழைத்தாள்... அவர் எடுத்ததும் இவள் பேச வாய்ப்பு அளிக்காது புலம்பி தீர்த்து விட்டார்...

"எந்தப் படுபாவியோ விஷ்ணுவை அடிச்சு பாலைவன மணலில் தூக்கி எறிஞ்சிண்டு போயிட்டான் ஆரு... வெயிலிலும் , குளிரிலும் ஒரு நாள் முழுக்கக் கிடந்திருக்கிறான்... அந்தப் பக்கமாய் வந்த யாரோ ஒரு புண்ணியவான் அவனைக் காப்பாத்தி சென்னை அட்ரெஸ் கண்டுபிடிச்சு எங்களுக்குத் தகவல் சொன்னான்... மாமா , வைதேகியை வச்சுக்கிட்டு நான் எங்கே அங்கே போக... ?

விஷ்ணுவோட பிஏ முரளி போய் விஷ்ணுவை கூட்டிண்டு வர சொல்லலாம்ன்னு நினைச்சால் அவனும் அடிப்பட்டுப் படுத்த படுக்கையாய் இருக்கான்... கடைசியில் வைதேகியோட ஆத்துக்காரர் தான் விஷ்ணுவை போய் அழைச்சிண்டு வந்தார்... இப்போ விஷ்ணு ஹாஸ்பிட்டலில் இருக்கான்... நான் தான் அவனைப் பார்த்துக்கிறேன்... அவன் பொண்டாட்டின்னு ஒருத்தி இருக்காளே அவள் கூட அவனை வந்து எட்டிப்பார்க்கலை... எல்லாம் என் தலையெழுத்து..." என்று அவர் மூக்கால் அழுது புலம்பினார்...

கர்ப்பிணியாய் இருக்கும் அர்ச்சனாவை மருத்துவமனைக்கு வர வேண்டாம் என்று விஷ்ணுபிரஹான் அர்ச்சனாவுக்குத் தகவல் சொல்லியனுப்பியதை சுந்தரி அறிந்திருக்கவில்லை...

"எந்த ஹாஸ்பிட்டல் மாமி... ?" கேட்கும் போதே அவளது குரல் நடுங்கியது...

சுந்தரி மருத்துவமனை பெயரை கூறியதும் அவள் அழைப்பை துண்டித்தாள்... பின்பு அலைப்பேசியில் சுந்தரியின் அலைப்பேசி எண்ணை அழித்தவள் அதைச் சமத்தாக எடுத்த இடத்தில் கொண்டு போய் வைத்து விட்டு வந்துவிட்டாள்...

எப்படி விஷ்ணுபிரஹானை சென்று சந்திப்பது ? என்று ஆராதனா தீவிர யோசனையில் ஆழ்ந்தாள்... அதற்கும் நல்ல நேரம் வந்தது... அன்று தாலிக்கு பொன் உருக்கும் நிகழ்ச்சிக்காக அவளது பெற்றோர் , சகோதரர்கள் எல்லோரும் சிவேஷ்கந்தா வீட்டிற்குச் சென்றிருந்தனர்... முறைப்படி இந்த நிகழ்வு ஆராதனா வீட்டில் அதாவது பெண் வீட்டில் வைத்து தான் நடைபெற வேண்டும்... சில கசப்பான அனுபவங்களால் இந்த வைபவத்தை மாப்பிள்ளை வீட்டில் வைத்துக் கொள்ளச் சம்மதித்து அங்குச் சென்றிருந்தனர்.

இதைச் சாக்காக வைத்து ஆராதனா விஷ்ணுபிரஹானை சந்திக்க மருத்துவமனையை நோக்கி ஆட்டோவில் சென்றாள்... மருத்துவமனை வரவேற்பில்

விஷ்ணுபிரஹானை அனுமதித்து இருக்கும் அறையை விசாரித்தவள் அங்கு விரைந்து சென்றாள்... அவள் சென்ற நேரம் அவனுடன் யாருமில்லை... அதை எண்ணி நிம்மதி அடைந்தவளாய் உள்ளே நுழைந்தாள்...

கட்டிலில் சாய்ந்து அமர்ந்திருந்த விஷ்ணுபிரஹானின் உடலில் ஆங்காங்கே கட்டு போடப்பட்டு இருந்தது... வெயிலிலும் , குளிரிலும் அவன் வாடி வதங்கியதால் அவனது தேகம் சற்று கருத்துக் காணப்பட்டது... மற்றபடி அவன் மிகவும் சாதாரணமாகத் தான் இருந்தான்.

"வா பேபி..." அவன் அவளைக் கூர்மையாக அளவிட்டபடி வரவேற்றான்...

இன்று பொன் உருக்கும் வைபவம் என்பதால் அவந்திகா மகளுக்கு அலங்காரம் செய்துவிட்டிருந்தாள்... மெல்லிய சரிகை கரையிட்ட பட்டுப்புடவை உடுத்தி , நீண்ட முடியை சடை பின்னி மல்லிகைப்பூ வைத்து அதைத் தோள் இருமருங்கிலும் தொங்க விட்டு , எடை அதிகம் இல்லாத மெல்லிய நகை அணிந்திருந்தவளின் காதுகளில் மட்டும் குடை ஜிமிக்கி ஊஞ்சலாடியது... அதைக் கண்டவனின் மனமும் அவளது அழகில் தாபமாய் ஊஞ்சலாட துவங்கியது...

ஆராதனா அங்கிருந்த நாற்காலியை எடுத்து அவன் அருகில் போட்டு அமர்ந்தவள் அவனை ஏறிட்டு பார்த்தாள்... அவனது இமைக்காத பார்வையைச் சந்திக்க முடியாது தனது பார்வையைத் தாழ்த்தியவள் ,

"அப்பா , அண்ணங்க செஞ்ச தப்புக்கு நான் மன்னிப்பு கேட்டுக்கிறேன்..." என்று இருகரங்கள் கூப்பி அவள் அவனிடம் மன்னிப்பு வேண்டினாள்... அவன் பதில் பேசாது அமைதி காத்தான்...

"நீங்களும் , நானும் பிரிஞ்சது பிரிஞ்சதாகவே இருக்கட்டும்... அதைப் புதுப்பிக்க நினைக்காதீங்கோ... புதுப்பிக்க நினைச்சா அசிங்கப்படப் போவது நான் தான்... தயவுசெஞ்சு என்னைப் புரிஞ்சுக்கோங்க..." என்று

தன்னிடம் இறைஞ்சியவளை கண்டு அவனது உள்ளம் துடித்த போதும் அவன் வெளியில் எதையும் காட்டி கொள்ளாது மௌனமாக இருந்தான்... அவன் தனது பார்வையை அவள் மீதிருந்து விலக்கி கொள்ளவில்லை.

"எந்த ஜென்மத்தில் யாருக்கு என்ன பாவம் செய்தேனோ ? என் வாழ்க்கை இப்படியாகி விட்டது... அதே நிலைமை உங்க மனைவி அர்ச்சனாவுக்கு வர வேண்டாம்..."

தன்னுடைய துன்ப நிலையைக் கூடப் பொருட்படுத்தாது அடுத்தப் பெண்ணான அர்ச்சனாவை நினைத்து வருந்தும் ஆராதனாவை கண்டு அவனது உள்ளம் அவள்பால் உருகித்தான் போனது... அந்தக் கணம் பெண்ணவள் அவள் தான் வேண்டுமென்று அவனது மனம் பிடிவாதம் பிடித்தது...

"குழந்தைகள் உண்டாகி இருக்கும் அவங்க ரொம்பப் பாவம்... நீங்க கொஞ்சம் அவங்களை நினைச்சு பாருங்கோ... அதை விட்டுட்டு என் மனசில் என்ன இருக்குன்னு தெரிஞ்சு உங்களுக்கு என்னவாகப் போகுது ?"

அப்போதும் அவன் பேசாது அமைதி காத்தான்... அவனது வாழ்க்கையைப் போன்றே அவனது மனமும் புரியாத புதிர் தான் போலும்...

"நமக்குள் நடக்கும் கண்ணாமூச்சி விளையாட்டு இத்தோடு போதும்ன்னு நான் நினைக்கிறேன்..." என்றவள் சட்டென்று அந்தக் காரியத்தைச் செய்தாள்... அதைக் கண்டு அவன் அதிர்ந்து தான் போனான்...

அதே நேரம் சிவேஷ்கந்தா வீட்டில் தாலிக்கு பொன் உருக்கி கொண்டிருந்தார்கள்...!!!

தனது கையிலிருந்த பொருளை பார்த்த ஆராதனாவுக்குத் துக்கம் பொங்கியது... அழுகை பீறிட்டது... முயன்று தனது உணர்வுகளை மறைத்துக் கொண்டு அவனைத் தைரியமாக நிமிர்ந்து பார்த்தவள் ,

"இத்தனை நாளாய் நம்ம ரெண்டு பேருக்கும் இடையில் பாலமாய் இருந்தது இது ஒண்ணு தான்... இப்போ இதுவும்..." என்றவள் நிறுத்தி அவனது கையைப் பற்றித் தனது கையிலிருந்த பொருளை எடுத்து அவனது கரத்தில் வைத்தாள்...

"இத்தோடு நம்ம உறவு முடிஞ்சு போச்சு... இனியும் நீங்க என்னைத் தொந்தரவு செய்யாதீங்கோ... என் வாழ்க்கையை நிம்மதியா வாழ விடுங்கோ... இப்போ என்னிடம் எஞ்சியிருப்பது கற்பு ஒண்ணு தான்... அதையும் கேட்டுராதேள்..." அவனிடம் இருகரம் கூப்பிக் கெஞ்சி கேட்டு கொண்டவள் அடுத்த நொடி அந்த அறையை விட்டு வெளியேறி விட்டாள்...

விஷ்ணுபிரஹான் தனது கையிலிருந்ததை வெறித்துப் பார்த்தபடி அமர்ந்திருந்தான்... எந்த நிலையிலும் பெண்ணவளை விட்டு விட அவன் விரும்பவில்லை... அவனுள் எப்போதும் எழும் எண்ணமானது இன்று வீறுகொண்டு எழுந்து அவனை வெறி பிடித்தவனாக்கியது...!

****

இடைப்பட்ட நாட்களில் அர்ஜூன் ஸ்ரீராம் , சீதா திருமணத்தையும் ஆராதனா திருமணத்தோடு நடத்திவிட எண்ணினான்... அப்போது அவன் பரத்தை பார்த்தா ,

"உனக்குக் கனியை பேசி முடிக்கலாம்ன்னு இருக்கேன்... நீ என்ன நினைக்கிற பரத் ?" என்று கேட்க... பரத்தோ ஆடு திருடியவன் போல் பேந்த பேந்த முழித்தான்...

"அந்த வீட்டுப் பெண் எனக்கு வேண்டாம்ப்பா... அதுவும் அவள் எனக்குச் சரிப்பட்டு வர மாட்டாள்..." என்று அவன் அவசரமாக மறுத்தான்...

"ஏன்... ?" அர்ஜூன் கூர்மையான பார்வையால் மகனை துளைத்தெடுத்தான்...

"கனி என்னை விட ரொம்பச் சின்னப் பொண்ணுப்பா..."

"காதலிக்கும் போது அது உனக்குத் தெரியலையா பரத்... ?"

"அப்பா..." பரத் தூக்கிவாரி போட தந்தையைப் பார்த்தான்...

"அன்னைக்குக் கனியை பத்தி பேசும் போது உனக்குப் புரையேறிச்சே அப்பவே எனக்கு உன் மனசு புரிஞ்சு போச்சு... இப்போ இல்லை , ஐஞ்சு வருசத்துக்கு முன்னாடியே உன் பார்வையும் , மனசும் அந்தப் பொண்ணு பின்னாடி போனதை நானே என் கண்ணால் பார்த்தேன்..."

' ஐயோ அப்பா... அது வயசு கோளாறு... அப்போ அந்த லூசு காதலை சொல்லியதால் வந்த கிறக்கம் அது... இப்ப ரெண்டு பேருக்கும் இடையில் இருக்கும் கோளாறு தெரிஞ்சா நீங்க என்ன சொல்வீங்களோ ?' அவன் மனதிற்குள் புலம்பியபடி வெளியில் அப்பாவியாய் அப்பாவை பார்த்தான்...

"டேய் , சொல்லவே இல்லை..." ஸ்ரீராம் தம்பியை மகிழ்ச்சியாய் அணைத்துக் கொண்டான்...

"அப்போ மூன்று கல்யாணமும் ஒரே மேடையில் வைத்து கொள்ளலாம்..." அவந்திகா தனது பங்கிற்குச் சந்தோசப்பட்டாள்...

' காலம் முழுவதும் கனி கையால் அடி வாங்கணும்ன்னு விதி எழுதியிருந்தால்... அதை மாற்றவா முடியும் ?' பரத் மனதிற்குள் புலம்பியபடி வெளியில் சிரித்து வைத்தான்...

அதே மாதிரி கனிஷ்கா வீட்டில் பரத்துக்கும் , அவளுக்குமான திருமணத்தைப் பற்றிக் கூற... அவள் வேண்டவே வேண்டாம் என்று மறுத்தாள்...

"எதுக்குடி வேண்டாம் ? பிள்ளையாண்டான் நல்ல லட்சணமா , சிவப்பா நம்ம ஆத்து பையன் மாதிரி அழகா தானே இருக்கான்... அதை விடத் தொழிலில் நல்ல கெட்டிக்காரன்... இதைவிட உனக்கு என்ன வேணும் ?"

' அயோக்கிய ராஸ்கல்... அவன் உலக அழகனாவே இருந்தாலும் நேக்கு வேண்டாம் ' மனதில் புலம்பிய கனிஷ்கா வெளியில் என்ன சொல்வதா ? என்று தெரியாது விழித்தாள்...

"உன் நல்லதுக்குத் தான் நான் சொல்றேன்... பெரியவா எங்க பேச்சை கேளு கனி..." சுந்தரி அவளை அதற்கு மேல் பேச விடவில்லை...

ராகவன் செய்தி கேட்டுச் சந்தோசப்பட்டார்... சுந்தரி தனது மகனிடம் விசயத்தைக் கூறினார்... விஷ்ணுபிரஹான் அப்போது தான் மருத்துவமனையில் இருந்து வீட்டிற்கு வந்திருந்தான்... அவனது உடல்நிலை சிறிது தேறியிருந்தது... விசயம் கேள்விப்பட்டவன் முகத்தில் எந்தவித மாறுதலையும் காட்டாதா ,

"ரொம்பச் சந்தோசம்..." என்று மட்டும் கூறினான்... ஆனால் அவனது மனதில் பெரும் புயல் மையம் கொண்டிருந்தது...

ஆனாலும் அவன் ஒரு சகோதரனாய் மனம் கேட்காது கனிஷ்காவை நேரில் சந்தித்துப் பேசினான்... அவன் மருத்துவமனையில் இருந்த போது மற்ற இரு தங்கைகளும் அவனை வந்து பார்த்துவிட்டுப் போனார்கள்... ஆனால் கனிஷ்கா மட்டும் வரவில்லை... அதை அவனும் பெரிதாக எடுத்து கொள்ளவில்லை...

"கனி , பரத்தை கல்யாணம் பண்ண உனக்குச் சம்மதமா ?" என்று கேட்டான்...

"அது எதுக்கு உனக்கா ?" அவள் கோபத்துடன் கேட்க...

"மனசு ஒத்து போகாம கல்யாணம் பண்ணிக்கிட்டா வாழ்க்கை கேலிக்கூத்தாகி போயிரும்..."

"என் வாழ்க்கையைப் பார்த்துக்க நேக்கு தெரியும்... உன் வேலையைப் பார்..." என்று படபடத்த கனிஷ்கா அதற்குப் பின் அவனிடம் பேசவில்லை... அவனும் ஒன்றும் கூறவில்லை...

அன்னைக்காக விஷ்ணுபிரஹான் பரத் , கனிஷ்கா திருமணத்தை ஏற்றுக் கொண்டான்... ஸ்ரீராம் போன்று பரத் பக்குவமானவன் அல்ல... அவன் ஒரு அரைவேக்காடு... மொட்டை தலைக்கும் , முழங்காலுக்கும் முடிச்சு போடுபவன்... அது ஒன்று தான் அவனுக்கு உறுத்தியது... அர்ஜூன் மகன் தவறு செய்தால் கண்டிப்பாகக் கண்டிப்பான் என்பது தெரியுமாதலால் அவன் அமைதி காத்தான்...

கனிஷ்கா திருமணத்திற்குச் சம்மதித்தது பற்றிக் கேள்விப்பட்ட பரத்திற்கு அதிர்ச்சியாக இருந்தது... இதில் ஏதும் உள்குத்து இருக்கிறதோ என்று அவன் சந்தேகம் கொண்டான்...

' வாடி வா... உன்னைக் கவனிச்சிக்கிறேன்... ' என்று அவன் வன்மமாய்த் தனது கன்னத்தைத் தடவி கொண்டான்...

ஒரு அண்ணனாகத் தங்கைகளின் திருமண வேலைகளைத் தான் பார்த்துக் கொள்வதாகக் கூறிய விஷ்ணுபிரஹான் அந்த வேலைகளில் முழுவீச்சாக இறங்கினான்... திருமண விசயமாகச் சில நேரங்களில் ராகவன் , சுந்தரி சார்பாக அவன் தான் அர்ஜூனிடம் பேச வேண்டி வந்தது... அர்ஜூனும் ராகவனின் உடல்நிலையைக் கருத்தில் கொண்டு பல்லை கடித்துக் கொண்டு அவனுடன் பேசினான்... ஆனால் எந்தக் காரணம் கொண்டும் விஷ்ணுபிரஹான் ஆராதனாவை சந்திக்க முற்படவில்லை... திருமண வேலைகள் சம்பந்தமாகக் கலந்தாலோசிக்கவும் அவளது வீடு தேடி வரவில்லை... அதனால் அர்ஜூன் , ஸ்ரீராம் , பரத் மூவரும் சற்று நிம்மதி அடைந்தனர்...

ஒரு நல்ல நாளில் மணமக்களுக்குப் புடவை , நகைகள் வாங்குவதற்காகக் கடைக்கு வந்திருந்தனர் எல்லோரும்... திருமணத்திற்கு இன்னும் இரண்டு வார காலமே இருந்தது... மூன்று திருமணமுமே அவசரமாக நிச்சயிக்கப்பட்ட திருமணம் என்பதால் இப்போது தான் உடை எடுக்க வந்திருந்தனர்... ஆராதனா மற்றும்

சிவேஷ்கந்தா குடும்பத்தினர் கடைக்கு வந்து முன்பே காத்திருந்தனர்... சீதாவும் , கனிஷ்காவும் இன்னமும் வரவில்லை... பத்து நிமிடங்கள் கழித்து விஷ்ணுபிரஹானுடன் அவனது மூன்று தங்கைகளும் வந்து இறங்கினர்... கனிஷ்காவிற்கு இந்த ஏற்பாடு பிடிக்கவில்லை என்றாலும் எல்லோர் முன்பும் சகோதரனை விட்டு கொடுக்க முடியாது அவள் அமைதி காத்தாள்...

விஷ்ணுபிரஹான் வந்ததைச் சிவசுப்ரமணியம் , பார்வதி , சிவேஷ்கந்தா மூவரும் விரும்பவில்லை... அதை அவர்கள் வெளிப்படையாகத் தங்களது முகத்தில் காட்டினர்... அவர்களைப் பொறுத்தவரை அவன் வில்லன் அல்லவா!

அதை எல்லாம் கண்டு கொள்ளாது நேரே அர்ஜூனிடம் வந்த விஷ்ணுபிரஹானன் , " அம்மா அப்பாவை பார்த்துக்கிறதுக்காக வீட்டில் இருக்காங்க... அதனால் தான் நான் என் தங்கைகளை அழைத்து வர வேண்டியதாய் போயிற்று..." என்று மன்னிப்பு வேண்டும் குரலில் கூறியவனைக் கண்டு அர்ஜூன் ஆச்சரியமாகப் பார்த்தான்... அவனுக்கு ஏதும் ஞாபகமறதி நோயோ என்றோ!

"வேலையைப் பார்க்கலாமா ?" புன்னகையுடன் கேட்டவனைக் கண்டு அர்ஜூன் சுதாரித்துக் கொண்டான் ,

"ம்..." என்றபடி நகர்ந்தான்...

விஷ்ணுபிரஹான் யாரையும் கண்டு கொள்ளாது அங்கிருந்த நாற்காலியில் அமர்ந்தபடி தனது அலைப்பேசியில் எதையோ நோண்டி கொண்டிருந்தான்... அவன் வந்ததை அவனது குரலில் இருந்து தெரிந்து கொண்ட ஆராதனா அவன் பக்கம் திரும்பாது இறுகி போய் அமர்ந்திருந்தாள்... அவளது மனம் பயத்தில் படபடவென அடித்துக் கொண்டது...

ஆராதனாவின் ஒவ்வொரு அசைவையும் தனது அலைபேசியில் இருந்த கேமிரா வழியே பார்த்துக்

கொண்டிருந்த விஷ்ணுபிரஹானின் முகத்தில் விசம புன்னகை விரிந்தது...!!!

திருத்தமாகும்...!!!

தனக்குப் பின்னால் விஷ்ணுபிரஹான் அமர்ந்திருக்கிறான் என்கிற நினைவே ஆராதனாவை இயல்பாக இருக்க விடவில்லை... அவள் சிவேஷ்கந்தா அருகில் நெருப்பின் மீது அமர்ந்திருப்பது போல் அவஸ்தையுடன் அமர்ந்திருந்தாள்... சிவேஷ்கந்தாவோ அவளிடம் இயல்பாக அங்கிருந்த புடவைகளைச் சுட்டிக்காட்டி அவளது விருப்பத்தைக் கேட்டுக் கொண்டிருந்தான்... அவன் எந்தப் புடவை எடுத்து காட்டினாலும் அவள் சரி , சரியென்று தலையசைக்க... ஒரு கட்டத்தில் அவனுக்குமே இது சலித்துப் போனது...

"ப்ச் , என்ன ஆராதனா நீங்க ? உங்களுக்கு என்ன பிடிக்குமோ அதை வாய் திறந்து சொன்னால் தானே எனக்குத் தெரியும் ?" அவனது சலிப்பான குரலில் திடுக்கிட்டவள் ,

"உங்களுக்குப் பிடிச்சதை எடுங்க சிவேஷ்..." என்று மெல்லிய குரலில் கூற...

"ஓ... நீங்க அப்படி வர்றீங்களா ?" என்று புன்னகையுடன் கூறியவன் தனக்குப் பிடித்ததை எடுக்கத் துவங்கினான்...

ஆராதனாவின் அவஸ்தையைக் கண்டு விஷ்ணுபிரஹான் என்ன நினைத்தானோ ? அங்கிருந்து எழுந்தவன் ஆராதனா மறுபக்கம் அமர்ந்திருந்த வைதேகி அருகில் வந்தார் ,

"எனக்குக் கொஞ்சம் வேலை இருக்கிறது... புடவை எடுத்து முடிச்சதும் என்னைக் கூப்பிடு..." என்றவன் தங்கையின் பதிலை எதிர்பாராது வேகமாய் வெளியேறி விட்டான்...

அவன் சென்றதும் தான் ஆராதனாவால் இயல்பாக மூச்சு விட முடிந்தது...

அர்ஜூன் அவந்திகா அருகில் வந்தார் , " நம்ம பட்டுவுக்கு என்ன விலையில் புடவை எடுக்கிறியோ அதே விலையில்

பூக்குட்டிக்கும் , சுபிக்கும் புடவை எடுத்திரு அம்மு... அப்படியே மௌனி சிஸ்டர் , ரஞ்சித் பேமிலிக்கும் சேர்த்து எடுத்திரு... எனக்கு எடுக்கும் போது துரைக்கும் , நந்துவுக்கும் (துரையின் ஒரே மகன் , இரண்டு பெண்களுக்கு நடுவில் பிறந்தவன்) எடுத்திரு..." என்க... அவள் சரியென்று கூறினாள்...

பூரணியிடம் அர்ஜூன் இழந்த அன்பை எல்லாம் சேர்த்து வைத்து ஈடுகட்டியவள் துரையின் மூன்றாவது மகள் சுப்ரஜா... அதனாலேயே அர்ஜூனுக்கு அவள் மீது தனிப்பாசம் உண்டு. அவளைத் தனது மருமகளாக்கி கொள்ள வேண்டும் என்று அவன் ஆசைப்பட்டான்... ஸ்ரீராம் அல்லது பரத் இருவரில் யாராவது ஒருவருக்கு அவளைத் திருமணம் முடித்துவிட வேண்டும் என்று அவன் நினைத்திருந்தான்... அப்போது தான் பரத்தின் விழிகள் கனிஷ்காவின் பின் செல்வதைக் கண்டான். அர்ஜூனால் மகனது விருப்பத்திற்கு மறுப்பு கூற முடியாது... அதனால் பரத் விசயத்தில் அவன் அமைதியாகி போனான்... அடுத்து ஸ்ரீராம் அவனுக்கு நம்பிக்கை நட்சத்திரமாகத் தெரிந்தான்... ஆனால் அவன் சீதாவை விரும்பியது அர்ஜூனுக்குச் சற்று அதிர்ச்சி தான்... ஸ்ரீராம் எதையும் நிதானத்துடன் அணுகுபவன்... அவன் சுப்ரஜாவை விரும்பியிருந்தால் அதற்கு எந்தத் தடையும் இல்லையே... ஆனால் அவன் அதைச் செய்யாது சீதாவை விரும்பும் போதே அவனது மனம் அர்ஜூனுக்குப் புரிந்து போனது... அதனால் தான் அவன் மறுப்பு சொல்லாது மகனது காதலுக்குச் சம்மதம் சொன்னது... அர்ஜூனுக்குத் தனது விருப்பத்தை விட மகன்களது விருப்பமே முக்கியமானதாக இருந்தது.

மகன்களைப் போன்றே மகளும் யாரையாவது காதலித்து இருந்திருக்கலாமோ ? என்றே அவனுக்குத் தோன்றியது... அப்படிக் காதலித்து இருந்தால் ஆராதனாவின் வாழ்க்கை இந்நேரம் மகிழ்ச்சியாக இருந்திருக்குமோ ? என்கிற எண்ணம் அவனுள் எழாமல் இல்லை... இனியாவது அவளது வாழ்வு மகிழ்ச்சியாக இருக்க வேண்டும் என்று அவன் வேண்டி கொண்டான்...

சீதா தனது அருகில் அமர்ந்திருந்த ஸ்ரீராமை ஏறிட்டு பார்த்தவள் அவனிடம் எதையோ கேட்க நினைத்து பின்பு அதைக் கேட்காது தனது தலையைக் குனிந்து கொண்டாள்... இப்படியே அவள் செய்து கொண்டிருந்ததைக் கண்ட ஸ்ரீராம் அவளது கையைப் பிடித்துத் தனது கரங்களுக்குள் பொத்தி வைத்து கொண்டவன் ,

"என்ன விசயம் சீதா ? ஏன் படபடப்பா இருக்க... ?" என்று தன்மையாகக் கேட்க...

"உங்களுக்கு என் மேல் கோபம் இல்லையே ?" அவள் பயந்து கொண்டே கேட்க...

"உன் மேல் கோபமா ? அதுவும் நானா ? ஜோக் அடிக்காதே சீதா..." என்று சட்டென்று சிரித்தவனைக் கண்டும் அவளது அச்சம் போகவில்லை... அவள் குனிந்தபடி அமர்ந்திருந்தாள்...

"நான் எதுக்கு உன் மேல் கோபப்படணும் சீதா... ?"

"அண்ணா பண்ணிய காரியத்துக்கு..." மேலே சொல்லாது தயங்கி நிறுத்தியவளை பார்த்தவனின் முகம் உணர்வுகளைத் தொலைத்தது...

"உன் அண்ணன் பண்ணிய காரியத்துக்கு அவன் மேல் நான் கொலைவெறியில் இருக்கேன்... இப்பவும் அவனைப் பார்க்கும் போது எல்லாம் என் ரத்தம் கொதிக்குது சீதா... அவன் இதை விட என் தங்கையைக் கேவலப்படுத்த முடியாது... அவனுக்கும் இரண்டு தங்கைகள் இருக்காங்க என்கிற நினைப்பு சிறிதும் இல்லாது... ச்சே , என்ன மனிதன் அவன்..."

ஸ்ரீராம் அடக்கப்பட்ட கோபத்தில் வார்த்தைகளைக் கடித்துத் துப்பினான்... அவனை அச்சத்துடன் பார்த்த சீதாவின் முகம் பயத்தில் வெளிறிப் போனது... அதைக் கண்டவன் தன்னைக் கட்டுப்படுத்திக் கொண்டா ,

"கல்யாணம் முடியும் வரை... அதுவும் உன் அப்பா , அம்மாவுக்காக அவனைச் சகிச்சிக்கிறேன்... நம் கல்யாணத்துக்குப் பிறகு அவனுடனான உறவு நமக்குத் தேவையில்லை சீதா... புரிந்திருக்கும் என்று நினைக்கிறேன்..."

அவனது வார்த்தைகள் சீதாவிற்கு மிகுந்த கஷ்டமாக இருந்த போதும் அவளுக்கும் வேறுவழி தெரியவில்லை... அதனால் அவள் மௌனமாகத் தலையசைத்தாள்... ஏனெனில் விஷ்ணுபிரஹான் செய்தது மாபெரும் தவறு... இந்த விசயம் வீட்டில் மற்றவர்களுக்குத் தெரியாது... சீதாவிற்கு மட்டுமே தெரியும்... ஸ்ரீராம் அவளிடம் எதுவும் மறைக்கக் கூடாது என்று எண்ணியதால் அவளிடம் மட்டும் இதைக் கூறினான்... அவள் யாரிடமும் கூற மாட்டாள் என்கிற நம்பிக்கை ஒரு புறம் இருந்தாலும் , அவனுக்குமே தனது மன வருத்தத்தை யாரிடமாவது இறக்கி வைக்க வேண்டும் என்று தோன்றியது... அந்தளவிற்கு அவன் மன அழுத்தத்திற்கு ஆளாகி இருந்தான்...

"சீதா , இந்தப் பட்டு எப்படியிருக்கு... ?"

ஸ்ரீராம் எடுத்த புடவையைக் கண்டு சீதாவின் விழிகள் வியப்பில் அகன்றது... அடர் சிவப்பு நிற பட்டுப்புடவையில் கொடி போன்று சன்னமான சரிகைகள் பின்னி பிணைந்திருக்க , புடவையின் விளிம்பில் மட்டும் அடர் பச்சை நிறம் வந்து எடுப்பாகக் காட்சியளித்துப் புடவைக்குத் தனியழகினை கொடுத்தது...

"சூப்பரா இருக்குன்னா..." என்று அவள் முகம் விகசிக்கக் கூற... ஸ்ரீராம் சிரித்தபடி அதை எடுத்து தனியே வைத்தான்...

அடுத்து அவன் மென்மையான ரோஜா வண்ண பட்டுப்புடவையை எடுத்து அவளிடம் காட்டினான்... கண்ணுக்கும் , உடலுக்கும் உறுத்தாத மெல்லிய சரிகை வேலைப்பாடு கொண்டமைந்த அந்தப் புடவையை அவள் புரியாது பார்க்க... அவனோ உதடுகளில் இரகசிய புன்னகையைச் சிந்தியபடி ,

"நமக்கே நமக்கான தனிப்பட்ட நேரத்திற்கானது..." என்று கூறி வசீகரமாய் அவளைப் பார்த்தான்... பாவையவள் அதன் அர்த்தம் புரிந்தவளாய் செங்காந்தள் மலராய் சிவந்தாள்.

பரத் தன்னருகில் அமர்ந்திருந்த கனிஷ்காவை விசித்திரமாய்ப் பார்த்திருந்தான்... அருகில் அவன் இருப்பதைக் கூடப் பொருட்படுத்தாது அவள் பாட்டிற்குப் புடவைகளைப் பார்த்து கொண்டிருந்தாள்... அதைக் கண்டு அவனுக்குக் கோபம் பொத்துக் கொண்டு வந்தது... தன்னை ஒரு மனுசனாய் மதிக்காது இருப்பவளை அப்படியே விட்டால் அவன் பரத் இல்லையே...

"கல்யாணம் நம்ம ரெண்டு பேருக்கும் தான்..." என்றான் அவன் கோபத்தில் பல்லை கடித்தபடி... அவனைத் திரும்பி பார்த்தவள் ,

"அப்படியா ? இது நேக்கு தெரியாதே..." என்றாள் அசட்டையாக... அதைக் கேட்டு அவனது இரத்த அழுத்தம் தான் அதிகரித்தது.

"என்னடி திமிரா ?"

"ஆமான்னு சொன்னா என்ன செய்றதா உத்தேசம்... ?" அவள் தெனாவெட்டாய் கேட்க...

"திமிரை அடக்குவதாய் உத்தேசம்..."

"ஹ..." என்றபடி அலட்சியமாய் அவன் புறம் தனது பார்வையை வீசினாள் அவனது வருங்கால மனைவி...

"புடவை நல்லா இருக்கான்னு என் கிட்ட ஒரு வார்த்தை கேட்காம நீ பாட்டுக்கு புடவையைச் செலக்ட் பண்ணி அடுக்கிக்கிட்டே போற... இது கொஞ்சமும் நல்லாயில்லை..." அவன் அவளை எச்சரித்தான்...

"புருசன் தான் என் விருப்பத்துக்கு அமையலை... அட்லீஸ்ட் புடவையாவது என் விருப்பத்துக்கு அமையட்டுமே..." அவள் நொடித்துக் கொள்ள... அவளது வார்த்தைகள் அந்த ஆறடி

ஆண்மகனை மிகச் சரியாகச் சீண்டி அவனைப் பெரிதும் காயப்படுத்தியது...

"உன் கிட்ட மனுசன் பேசுவனா..." அவன் கோபத்துடன் எழுந்து சென்றுவிட்டான்.

' அப்போ அன்னைக்கு நீங்க பேசியது மட்டும் சரியான்னா ?' அவன் பேசிய வார்த்தைகள் மீண்டும் மீண்டும் அவளது காதில் ஒலித்து அவளது காதல் மனதை வலிக்கச் செய்தது. அதற்கு மேல் அவளால் புடவையைத் தேர்வு செய்ய முடியவில்லை... தலைவலிப்பது போலிருக்க... அமைதியாகத் தலைகுனிந்தபடி அமர்ந்திருந்தாள்...

"பரத் , இங்கே என்ன பண்ணிக்கிட்டு இருக்க... ?" பரத் தனியாக நின்றிருப்பதைக் கண்டு அர்ஜூன் அவன் அருகில் வந்து கேட்டான்...

"ஃபோன் பண்ண வந்தேன்ப்பா..." கையிலிருந்த அலைப்பேசியைக் காண்பித்தான் மகன்...

"இதெல்லாம் வாழ்க்கையில் ஒரு தடவை வர்றது பரத்... பிசினஸ் எங்கேயும் போயிராது... போ , போய்க் கனிக்கு புடவை எடுக்கிறதில் உதவி செய்..." அவன் மகனை அனுப்பி வைத்தான்...

பரத் சலிப்புடன் மீண்டும் கடைக்குள் வந்தான்... அங்குக் கனிஷ்கா புடவை எடுக்காது அமைதியாக இருப்பதைக் கண்டு அவன் யோசனையாய் அவளைப் பார்த்தபடி அவள் அருகில் வந்தமர்ந்தான்...

"என்ன ஒரு புடவை கூடச் செலக்ட் பண்ணலையா ? நீ செலக்ட் பண்ணிய வேகத்துக்கு இந்நேரம் கடையே காலியாகி இருக்கும்ன்னு நினைச்சேனே...." என்று அங்கலாய்ப்பது போல் தன்னைக் கிண்டலடித்தவனை அவள் திரும்பி பார்த்து முறைத்தாள்...

இளஞ்சிவப்பு நிறத்தில் உடல் முழுவதும் சரிகைகள் அடர்ந்திருந்த பட்டுப்புடவை காண்பதற்கு அத்தனை

அழகாய் இருந்தது... அதை எடுத்துக் கையில் வைத்து அழகு பார்த்தவன் ,

"புடவை நல்லா தான் இருக்கு... ஆனா உனக்கு நல்லாயிருக்குமான்னு சந்தேகமா இருக்கு... நீ கட்டினால் புடவையோட அழகு குறைஞ்சிருமோ..." அவளைக் கேலி செய்தபடி அவன் தனது சந்தேகத்தைக் கேட்க... அவள் அதை அவனது கைகளில் இருந்து வெடுக்கென்று பறித்தபடி ,

"அப்போ இதைத் தான் நான் கல்யாணத்துக்குக் கட்ட போறேன்... புடவை அழகு குறைஞ்சாலும் நேக்கு கவலையில்லை..." என்று முகத்தைத் தூக்கி வைத்துக் கொண்டு கூறியவளை கண்டு அவனுக்குச் சிரிப்பு வந்தது...

அதைப் பில் போட அனுப்பியதும் பரத் தனது கைகளை உயர தூக்கி சோம்பல் முறித்தவாறு , " ஹப்பாடா , வந்த வேலை முடிஞ்சிருச்சு..." என்று கூறியபடி கனிஷ்காவை பார்த்து நமட்டுச் சிரிப்புச் சிரித்தான்...

அவள் ' அடப்பாவி ' என்பது போல் அவனைப் பார்த்து வைத்தாள்... அவனோ குறும்பு புன்னகையுடன் கண்சிமிட்டியபடி எழுந்து சென்றுவிட்டான்... அதில் அவள் தான் மனம் தடுமாற அமர்ந்திருந்தாள்... பாவையவளின் மனதினை தடுமாறச் செய்ய மாயக்கண்ணின் ஒற்றைக் குறும்பு புன்னகை போதுமானதாய் இருந்தது.

சிவேஷ்கந்தா அடர் அரக்கு நிறத்தில் பட்டுப்புடவையைத் தேர்வு செய்ய... மறுபரிசீலனை இல்லாது ஆராதனா அதற்குச் சம்மதித்தாள்... அதே போல் நகைகளும் தேர்வு செய்யப்பட்டு எல்லோரும் கிளம்பும் நேரம் விஷ்ணுபிரஹான் அங்கு வந்து சேர்ந்தான்... அவன் வருகையை அறிந்திராத ஆராதனா நாற்காலியில் இருந்து எழுந்தாள்... சிவேஷ்கந்தா தானும் எழுந்தவன் அவளது கையைப் பிடித்துக் கொள்ள... அவளும் வேறுவழியில்லாது தனது கரத்தினை விலக்காது அமைதி காத்தாள்... அதைப் பார்த்தபடி வந்த விஷ்ணுபிரஹானின் மனதில் எரிமலை

கனன்ற போதும் வெளியில் எதையும் காட்டி கொள்ளாது புன்னகை முகமாய்க் காட்சியளித்தான்...

தங்கைகள் தனிப்பட்ட முறையில் வாங்கிய உடைகளுக்கு , நகைகளுக்குப் பணத்தைச் செலுத்தியவன் அவர்களை அழைத்துக் கொண்டு செல்லும் போது அர்ஜூன் அவன் அருகில் வந்தான்.

"விஷ்ணு , நீ இதே போல் இந்தக் கல்யாணம் முடியும் வரை நல்ல பிள்ளையாக நடந்து கொண்டால் ரொம்பச் சந்தோசம்... இல்லையென்றால் வீண் விபரீதங்களை நீ சந்திக்க நேரிடும்..." என்று அவனை மிரட்டினான்...

விஷ்ணுபிரஹான் ' அப்படியா ?' என்பது போல் கேலியாய் புருவத்தை உயர்த்தினான்... ஆனால் பார்ப்பவர்களுக்கு என்ன ? என்று அவன் கேட்பது போல் தோன்றும்...

"நீ என் மகள் வாழ்க்கையில் விளையாட நினைத்தால் உன் இரண்டு தங்கைகளின் வாழ்க்கை என் இரண்டு மகன்களின் கைகளில் இருக்கிறது... தங்கைக்காக எனது மகன்கள் என்ன வேணும்ன்னாலும் செய்வாங்க... அதனால் ஒரு அண்ணனாய் நீ உன் பொறுப்பு உணர்ந்து நடந்து கொள்..." என்று அர்ஜூன் அவனை எச்சரித்தான்...

"நிச்சயமாய்... ஒரு அண்ணனாய் என் தங்கைகளின் வாழ்க்கை பத்தி எனக்கும் அக்கறை இருக்கிறது..." என்று புன்னகை மாறாது கூறியவன் தனது தங்கைகளை அழைத்துக் கொண்டு காரை நோக்கி செல்ல... அர்ஜூன் அவனைக் கண்டு அசந்து போய் நின்றான்...

காரிலேறி அமர்ந்த விஷ்ணுபிரஹான் கடையின் வாயிலை திரும்பி பார்த்தான்... ஆராதனாவின் கை இன்னமும் சிவேஷ்கந்தாவின் கைக்குள் இருப்பதைக் கண்டவன் அவளை ஒரு பார்வை பார்த்தான்... தீக்கங்குகளாய் ஜொலித்த அவனது வேட்டை பார்வையில் ஆராதனா தன்னையும் அறியாது தனது கரத்தினைச் சிவேஷ்கந்தாவின் பிடியில் இருந்து விலக்கி கொண்டாள்...

அவள் தன்னைக் கவனித்துக் கொண்டிருப்பதைக் கண்டு அவனது உதடுகளில் உல்லாச புன்னகை உதயமானது... அவளிடம் மட்டும் விடைபெறும் நோக்கில் லேசாகத் தலையசைத்தவன் அடுத்த நொடி விருட்டென்று தனது காரை வேகமாய்க் கிளப்பிக் கொண்டு சென்றான்...

அவன் சென்ற பிறகும் ஆராதனா திக்பிரம்மை பிடித்தார் போன்று நின்றிருந்தாள்... அவள் எப்படி வீடு வந்து சேர்ந்தாளா ? என்று அவளிடம் கேட்டால் அது அவளுக்கே தெரியாது...

"பட்டா , உன் ரூமுக்கு வா... எந்தப் பிளவுஸை அளவுக்குக் கொடுக்கலாம்ன்னு உன் கிட்ட இருக்கிற பிளவுஸை எல்லாம் போட்டு காண்பி..." அன்னை தன்னை அழைக்கவும் தான் ஆராதனாவிற்குச் சுயவுணர்வு வந்தது.

ஒன்றும் பேசாது அன்னையுடன் இணைந்து தனது அறையை நோக்கி நடந்தாள்... அறைக்குள் நுழைந்த ஆராதனா தனது அலமாரியை திறந்து இரவிக்கையைத் தேடி கொண்டிருக்க... அவந்திகா அங்கிருந்த சோபாவில் அமர்ந்து தனது கையிலிருந்த பைகளில் இருந்து இப்போது வாங்கி வந்த பட்டுப்புடவைகளை வெளியில் எடுத்துப் பிரித்துப் பார்த்து கொண்டிருந்தாள்.

"பட்டா , சிவேஷ்க்கு நல்ல ரசனை... எவ்வளவு அழகா செலக்ட் பண்ணியிருக்கான் பாரு..." அன்னை சிவேஷ்கந்தாவை சிலாகித்துப் பேசவும் ஆராதனா சட்டென்று திரும்பி பார்த்தாள்... அவளது மனம் அவளையும் அறியாது வேறொரு ரசனைக்காரனை நினைத்துப் பார்த்தது.

"உன் நிறத்துக்கு ரொம்பப் பொருத்தமா இருக்கும் பட்டு..." மீண்டும் அன்னையின் குரலில் சுயவுணர்வு அடைந்தவள் அங்கு வந்து பார்த்தாள்...

அவந்திகாவின் கையிலிருந்த பட்டுப்புடவையைக் கண்டு அவள் அதிர்ச்சியுற்றாள்... ஏனெனில் அது சிவேஷ்கந்தா தேர்வு செய்த பட்டுப்புடவை அல்ல... அவன் தேர்வு செய்தது

அடர் அரக்கு நிற பட்டுப்புடவை... ஆனால் இந்தப் பட்டுப்புடவையோ தங்க நிறத்தில் தகதகவென ஜொலித்தது... தங்க நிறத்தில் அடர் அரக்கு , பச்சை மற்றும் வெள்ளை கற்கள் பதிக்கப்பட்டு , அதே மூன்று வர்ண பட்டு நூல் கொண்டு நுணுக்கமான வேலைப்பாடுகள் செய்திருந்த புடவையின் நேர்த்தியே சொல்லாமல் சொல்லியது ' என்னைத் தேர்ந்தெடுத்தவன் மிகுந்த ரசனைக்காரன் ' என்று...

ஆராதனாவிற்கு மீண்டும் விஷ்ணுபிரஹானின் நினைவு வந்தது... இது அவனது வேலையோ என்று...!!!

"இங்கே பாருடி பட்டு... கூடவே ரெடிமேட் பிளவுஸும் இருக்கு... வாவ் , நாம சொல்லி தைச்சா கூட இப்படித் தைக்க மாட்டாங்கடி பட்டு..." என்று வியந்த அவந்திகா அந்த இரவிக்கையை எடுத்து மகளின் கண்முன் விரித்துக் காட்டினாள்...

அரக்கும் , பச்சையும் கலந்த மாந்தளிர் நிறத்தில் இருந்த இரவிக்கை துணியில் விதவிதமான கற்கள் கொண்டு வேலைப்பாடுகள் செய்து , முதுகு புறத்தின் ஒரு பக்கம் மணமகன் குதிரையில் வருவது போலவும் , மறுபக்கம் மணமகள் பல்லக்கில் வருவது போலவும் , இடையில் நாதஸ்தவரம் வாசிப்பவர்கள் , நடன மங்கைகள் எல்லோரும் இருப்பது போலவும் மிகவும் நேர்த்தியான , நுணுக்கமான வேலைகள் செய்யப்பட்டு இருந்தது.

"இதைப் போட்டு பாரு பட்டு... அளவு சரியில்லைன்னா சரி பண்ணிக்கலாம்..."

அன்னை கூறியதற்கு மறுப்பு தெரிவிக்காது அந்த இரவிக்கையை அணிந்து பார்த்தவள் அது கச்சிதமாகத் தனக்குப் பொருந்தியிருப்பதைக் கண்டு இன்னமும் அதிர்ந்து போனாள்...

' பேபி , நான் வாங்கிக் கொடுத்த பிளவுஸ் உனக்குன்னு அளவெடுத்துத் தைத்தது போல் கச்சிதமா பொருந்தியிருக்கு ' விஷ்ணுபிரஹான் தனது காதோரம்

கிசுகிசுப்பது போன்றதொரு பிரம்மை அவளுள் எழுந்தது... தனது மனதில் அலைகடலாய் ஆர்ப்பரித்த உணர்வுகளை விழி மூடி கட்டுப்படுத்திக் கொண்டவளை அன்னையின் குரல் நிகழ்காலத்திற்கு அழைத்து வந்தது...

"பிளவுஸ் சரியா இருக்கு பட்டு... உனக்கு ரொம்ப அழகாயிருக்கு..." என்று மகளைப் பாராட்டிய அவந்திகா மற்ற புடவைகளைக் கையில் எடுத்துக் கொண்டாள் ,

"இந்தப் பிளவுசையே அளவுக்குக் கொடுத்துடலாம் பட்டு... பத்திரமா கழட்டி கவரில் போட்டு வை..." என்றபடி அறையை விட்டு வெளியேற...

வேறு உடை மாற்றிய ஆராதனா திருமண முகூர்த்த புடவையைக் கையில் எடுத்து வைத்தபடி அப்படியே அமர்ந்திருந்தாள்... எவ்வளவு நேரம் அப்படியே அமர்ந்திருந்தாளோ... அலைப்பேசியில் குறுஞ்செய்தி வந்ததற்கான ஒலியில் நினைவு கலைந்து அலைப்பேசியை எடுத்து பார்த்தாள்... சிவேஷ்கந்தாவிடம் பேசுவதற்காக அவளின் அலைப்பேசி அவளிடமே கொடுக்கப்பட்டு இருந்தது.

' புடவை , நகைகள் பிடித்திருக்கிறதா ?' அவள் நினைத்தது சரியே என்பது போல் விஷ்ணுபிரஹானின் எண்ணில் இருந்து அவளுக்குக் குறுஞ்செய்தி ஒன்று வந்திருந்தது...

' கடவுளே , புடவை மட்டுமில்லாது நகைகளுமா ?' அவள் அவசரமாக நகை பெட்டிகளைத் தேடி எடுத்து வேகமாய் அதைப் பிரித்துப் பார்த்தாள்... நெற்றியில் வைக்கும் நெற்றிச்சுட்டியில் இருந்த , இடுப்பில் அணியும் ஒட்டியாணம் முதல் காலில் அணியும் கொலுசு வரை அத்தனையிலும் வைரம் பதிக்கப்பட்டு நெருப்பாய் ஜொலித்தது...

' எப்படி இத்தனை நகைகள் இங்கு வந்தது ? அம்மா , அப்பா சரியா கவனிக்காது விட்டு விட்டாங்களா ? இல்லை சிவேஷ் வீட்டில் வாங்கிக் கொடுத்தது என்று நினைத்து

விட்டார்களா ?' அவளுக்கு யோசித்து யோசித்துத் தலைவலி வந்தது தான் மிச்சம்...

நிச்சயம் இது விஷ்ணுபிரஹானின் திருவிளையாடல் தான் என்பதில் அவளுக்குச் சிறிதும் ஐயமில்லை... ஆனால் இதை எப்படித் தந்தையிடமும் , சகோதரர்களிடமும் கூறுவதா ? என்று தெரியாது அவள் விழித்துக் கொண்டிருந்தாள்... அவள் இந்த விசயத்தைக் கூறினால் ஒன்றா , விஷ்ணுபிரஹான் பாதிக்கப்படுவது நிச்சயம்... ஏனெனில் அவனைக் குற்றுயிரும் , குலையுயிருமாய் அடித்துப் போட்டவர்கள் தான் அவளது தந்தையும் , சகோதரர்களும்... இரண்டா , விஷ்ணுபிரஹான் செய்த வேலையால் அவனது தங்கைகள் திருமணம் பாதிக்கப்படும்... தங்களது தங்கையின் வாழ்வில் விளையாடும் விஷ்ணுபிரஹானின் தங்கைகளைத் திருமணம் செய்ய அவளது சகோரர்கள் விரும்ப மாட்டார்கள்... இந்த விசயம் வெளியில் தெரிந்தால் நிச்சயம் ஒரு பிரளயம் வெடிக்க வாய்ப்பு இருக்கிறது... அதனால் ஆராதனா இந்த விசயத்தை வெளியில் சொல்லாது தனக்குள் போட்டு உழட்டி கொண்டாள்...

திருமண நாள் நெருங்க நெருங்க மணப்பெண்ணிற்குரிய களை அவளது முகத்தில் இல்லவே இல்லை... எந்நேரமும் சோக சித்திரமாய் ஏதோ யோசனையில் இருந்தவளை கண்டு எல்லோருக்கும் வருத்தமாக இருந்தது... அவளது மன வருத்தம் புரிந்து எல்லோரும் அமைதியாக இருந்தனர்...

அங்கே சீதா திருமணநாளிற்காக எதிர்பார்ப்புடன் காத்திருந்த போதும் அவளது மனதில் இனம் புரியாத ஒரு உணர்வு வாட்டி வதைத்தது... ஒருவேளை பெற்றோரை பிரிய வேண்டி வருவதால் கூட அப்படி இருக்கலாம் என்று நினைத்து அவள் தனது மனதினை தேற்றி கொண்டாள்... கனிஷ்காவோ எப்போதும் போல் விட்டேற்றியாக இருந்தாள்... பரத்தை திருமணம் செய்து கொண்டு தான் ஒன்றும் சந்தோசமாக வாழ போவதில்லை என்று அவளுக்கு உறுதியாகத் தெரிந்தது... திருமணத்திற்குப்

பின் அவனை எப்படிச் சமாளிப்பதா ? என்று அவள் தனக்குள் யோசித்தபடி இருந்தாள்...

திருமணத்திற்கு இரண்டு நாட்களுக்கு முன் வைதேகிக்கு பிரசவ வலி ஏற்பட்டது... எட்டரை மாதங்களே ஆன நிலையில் அவளுக்குப் பிரசவ வலி எடுத்திருப்பது கண்டு எல்லோருக்கும் பயம் பிடித்துக் கொண்டது... மருத்துவமனைக்கு அழைத்துச் செல்லும் முன் சுந்தரி ஆராதனாவிற்கு அழைத்து விசயத்தைச் சொல்லிவிட்டு சென்றார்... அதே போல் விஷ்ணுபிரஹானுக்கும்...

"கல்யாணத்தைக் கிட்டத்தில் வச்சிக்கிட்டா , அதுவும் அவங்க வீட்டு பெண்ணுக்கு நீ டெலிவரி பார்க்க போறது எனக்கு என்னமோ சரியாப்படலை..." அவந்திகா மகளைத் தடுத்தாள்... விஷ்ணுபிரஹானை மகள் சந்திக்க நேரிடும் என்று எண்ணித்தான் அவள் தடுத்தது...

"ம்மா , ஒரு டாக்டரா தான் நான் அங்கே போறேன்... வேற எந்த உறவு முறையும் வச்சிக்கிட்டு உறவு கொண்டாட போகலை..." என்று பதில் அளித்த ஆராதனா மருத்துவமனைக்குக் கிளம்பி சென்றாள்...

மருத்துவமனை வந்து வைதேகியை பரிசோதித்துப் பார்த்த பின்பே ஆராதனாவால் நிம்மதி மூச்சுவிட முடிந்தது...

"மாமி , குழந்தை வளர்ச்சி நல்லாயிருக்கு... உங்க பேர குழந்தைக்கு இப்பவே உலகத்தைப் பார்க்கணும்னு ஆசை போலிருக்கு... அதான் அவசரப்படுது..." என்று கூறி அவள் புன்னகைக்க...

"கடவுளே..." என்று கடவுளுக்கு நன்றி கூறிய சுந்தரி தனது விழிகளைத் துடைத்துக் கொண்டா ,

"அம்மான் மாதிரி போல... விஷ்ணுவும் எட்டரை மாதத்தில் பிறந்துட்டான்..." என்று அவர் பூரிப்புடன் கூற... அதைக் கேட்டு ஆராதனா அமைதியாகி போனாள்...

விசயம் கேள்விப்பட்டு விஷ்ணுபிரஹான் அங்கு வந்து சேர்ந்தான்... நேருக்கு நேர் அவனைக் கண்ட போதும்

ஆராதனா அவனை யாரோ போல் பார்த்தபடி கடந்து சென்றுவிட்டாள்... அதைக் கண்டவனது மனம் மிகவும் அடிப்பட்டுப் போனது...

' இன்னும் இரண்டு நாளில் திருமணத்தை வைத்துக் கொண்டு அவள் உன்னைக் காதல் பார்வையா பார்ப்பாளா , மடையா ?' அவனது மனசாட்சி அவனைக் கோபமாய்த் திட்டியது... இருந்தாலும் அவன் அடங்க மறுத்துக் கோபமாய்ச் சிலுப்பிக் கொண்டான்...

சிறிது நேரத்தில் அங்கு வந்து சேர்ந்தனர் வைதேகியின் கணவன் மற்றும் அவனது பெற்றோர்... வைதேகியின் மாமியாருக்கு ஆராதனா திருமண விசயம் இப்போது தான் தெரியும்... அதுவும் நாளிதழில் வந்த செய்தி மூலம்... அவர் ஆராதனா தனது மருமகளுக்குப் பிரசவம் பார்க்க கூடாது என்று போர்க்கொடி தூக்கினார்...

"ஏன ?" விஷ்ணுபிரஹான் கோபமாய்க் கேட்டான்...

"இவளை மாதிரி கேடுகெட்டவ பிரசவம் பார்த்தா பிறக்கிற குழந்தையும் அவளைப் போல் தான் வளரும்... அதுவும் பிறக்க போறது பெண் குழந்தைன்னு ஜாதகத்தில் இருக்கு... இவளை மாதிரி ஒரு பொம்மனாட்டி எங்க குடும்பத்துக்கு வேண்டாம்..." அவர் நீட்டி முழக்க...

"ஆராதனாவை பத்தி உங்களுக்கு என்ன தெரியும ? அவள் ஒரு தேவதை பெண்... அவளை மாதிரி ஒரு பெண் குழந்தை பிறக்க நீங்க கொடுத்து வச்சிருக்கணும்..." அவன் அவரைக் கண்டு சத்தம் போட்டான்...

அவனது வார்த்தையில் ஆராதனா அப்படியே உறைந்து போனாள்... விஷ்ணுபிரஹான் வாயிலிருந்தா தன்னைப் பற்றி இப்படிப்பட்ட உயர்ந்த கருத்துக்கள் வருகிறது என்று... சொல்லொண்ணா உணர்வுகள் அவளைத் தாக்கியதில் அவளுக்கு ஓவென்று வாய்விட்டு அழ வேண்டும் போலிருந்தது...

"அப்படிப்பட்ட தேவதையை நீ ஏன்டாப்பா தவறவிட்ட ?" அவர் நக்கலாய் கேட்க...

"அது என் பெர்சனல் விசயம்..." என்று அவரைப் பார்த்து கூறியவன் ஆராதனா புறம் திரும்பி ,

"இங்கே எதுக்கு வேடிக்கை பார்த்துக்கிட்டு இருக்க... போ , போய் வேலையைப் பார்..." என்று அவளைச் சத்தம் போட்டு அனுப்பி வைத்தான்... பின்பு வைதேகியின் கணவன் கேசவன் புறம் திரும்பி ,

"கேசவ் , உங்கம்மாவை கொஞ்ச நேரம் வாயை மூடிக்கிட்டு இருக்கச் சொல்லுங்க... அப்புறம் தங்கையோட மாமியார்ன்னு கூடப் பார்க்க மாட்டேன்..." என்று அவன் கோபமாய்க் கர்ஜிக்க...

விஷ்ணுபிரஹான் குணமறிந்த கேசவன் தனது அன்னையைச் சத்தம் போட்டான்... அவர் முணுமுணுத்தபடி அமைதியாகி போனார்...

அரை மணி நேரத்தில் வைதேகி அழகான பெண் குழந்தையைப் பெற்றெடுத்தாள்... எல்லோரும் முகம் மலர்ந்தனர்... கேசவனின் தாய் மட்டும் முகத்தைத் திருப்பிக் கொண்டார்...

ஆராதனா பிரசவத்தை முடித்துவிட்டு தனது அறைக்கு வந்தாள்... அவளது மனதில் ஏதேதோ சஞ்சலங்கள்... மேசை மீது கவிழ்ந்து படுத்தவளின் விழிகளில் இருந்து தாரை தாரையாகக் கண்ணீர் வடிந்தது... ஏனென்று தெரியவில்லை... எதற்கு என்று தெரியவில்லை... மனதில் சந்தோசமா ? துக்கமா ? அதுவும் அவளுக்குத் தெரியவில்லை... ஆனாலும் அவளுக்கு அழ வேண்டும் போலிருந்தது...

விஷ்ணுபிரஹான் கூறிய ' அவள் ஒரு தேவதை பெண் ' என்கிற வார்த்தை மீண்டும் மீண்டும் அவளது காதில் ஒலித்தது...

' இப்போது தான் நான் தேவதைன்னு உங்களுக்குத் தெரிஞ்சதா... ? இது ஏன் முன்பே தெரியவில்லை... ? காலம் கடந்து இப்போ போய் இப்படிச் சொல்றீங்களே... முடிந்தது... எல்லாம் முடிந்தது... இரண்டு நாட்களில் என் வாழ்க்கையே முடிந்தது ' அவளது மனது சத்தமாய் ஓலமிட்டு அழுது கரைந்தது.

"பேபி..." விஷ்ணுபிரஹானின் குரலில் அவள் விலுக்கென்று நிமிர்ந்தாள்...

"ப்ச் , இப்போ என்ன நடந்து போச்சுன்னு இப்படி அழற ?" என்று கூறியவனை உறுத்து விழித்துக் கொண்டே தனது விழிகளைத் துடைத்து கொண்டவள் அவனுக்குப் பதில் கூறாது தனது கைப்பையை எடுத்துக் கொண்டு வீட்டிற்குக் கிளம்பத் தயாரானாள்...

"என் கூடப் பேச மாட்டியா ?" அவனது குரலில் இருந்த ஏதோ ஒன்றில் அவள் அப்படியே நின்றாள்... ஆனால் அவனைத் திரும்பி பார்க்கவில்லை...

"பேசுமளவுக்கு நமக்கு இடையில் ஒண்ணுமே இல்லை மிஸ்டர். விஷ்ணுபிரஹான்..."

"ஒண்ணுமே இல்லையா ?" என்று கேட்டபடி அவன் அவள் முன் வந்து நின்று அவளது முகத்தை உற்று நோக்கினான்...

"இல்லை..." அழுத்தம் திருத்தமாய்க் கூறியவளை கண்டு அவனது உதடுகளில் ரகசிய புன்னகை மலர்ந்தது...

"அதை நான் சொல்லணும் பேபி..." என்றவனைக் கண்டு அவள் உள்ளுக்குள் திடுக்கிட்டாலும் வெளியில் தைரியமாக அவனை நிமிர்ந்து பார்த்தாள்...

"உன்னுடைய திருமணத்திற்கு அட்வான்ஸ் வாழ்த்துக்கள்..." அவன் சிரித்தபடி தனது கையை அவள் புறமாய் நீட்டினான்...

"உங்க வாழ்த்து எனக்குத் தேவையில்லை..." அவள் அவனைச் சுற்றிக் கொண்டு செல்ல முயன்றாள்...

"நானே தேவையில்லை என்று சொல்பவளாயிற்றே... என் வாழ்த்து எதற்கு உனக்கு ?"

"அதே தான்... புரிந்து கொண்டால் சரி..."

"உன்னுடைய திருமணத்திற்கு எனக்கு எல்லாம் அழைப்பு கிடையாதா ?" என்றவனை எரித்துவிடுவது போல் பார்த்தவள் ,

"நீங்க வர தேவையில்லை..." என்று அவள் நிர்தாட்சண்யமாய் மறுத்து கூற...

"நானில்லாமல் உனக்குத் திருமணமா ? நடக்க விட்டுருவேனா... ?" என்றவனது வார்த்தையில் , பார்வையில் பாவையவள் அச்சத்தில் உறைந்தாள்...!!!

திருத்தமாகும்...!!!

மருதாணி போடுவதற்கு ஏற்றார் போன்று தனது இரு கைகளையும் நீட்டியபடி குனிந்த தலை நிமிராது அமர்ந்திருந்தாள் ஆராதனா... இளம் சிவப்பு புடவை அணிந்தா , கழுத்தா , காதுகளா , கைகள் மற்றும் கால்களில் ரோஜாப்பூக்கள் மற்றும் மல்லிகைப்பூ கொண்டு அழகுற செய்யப்பட்ட அணிகலன்களை அணிந்து பார்ப்பதற்கு அந்தத் தேவலோக பெண்ணே வானிலிருந்து கீழிறங்கி வந்தது போல் அத்தனை அழகாய் இருந்தாள்... வட இந்தியர்களின் சடங்கான மருதாணி இடும் விழா இப்போது தென்னிந்தியாவையும் விட்டு வைக்கவில்லை... அதிலும் சிவேஷ்கந்தாவின் அன்னை பார்வதி இந்த விழாவை நடத்தியே ஆகவேண்டும் என்று திட்டவட்டமாகக் கூறிவிட்டார்... அவர்கள் வீட்டு இளைய தலைமுறைகளின் விருப்பம் இதென்று...

ஆராதனாவின் இரு பக்கமும் சீதா மற்றும் கனிஷ்கா இருவரும் அமர்ந்திருந்தனர். சீதா மஞ்சள் நிற புடவை அணிந்தா , மஞ்சள் நிற ரோஜா கொண்டு செய்யப்பட்ட அணிகலன்கள் அணிந்து மஞ்சள் தேவதையாக இருந்தாள்... தன்னவளின் அழகில் மெய்மறந்து போன ஸ்ரீராம் கண்களில் சீதாவை தவிர வேறு யாரும் பதியவில்லை... அவனது பார்வையில் சீதா முகம் சிவக்க தலைகுனிந்து கொண்டாள்...

கனிஷ்கா ஆரஞ்சு வண்ண புடவை உடுத்தி , ஆரஞ்சு வண்ண ரோஜா பூக்களால் செய்யப்பட்ட அணிகலன்கள் அணிந்து சாமந்தி மலர் போல் மலர்ந்து மணம் வீசினாள்... பரத் நண்பர்களுடன் பேசியபடி அவளைக் கண்டும் காணாதவாறு பார்த்துக் கொண்டிருந்தான். கனிஷ்காவோ அவனைச் சிறிதும் கண்டு கொள்ளவில்லை... தனது அருகில் அமர்ந்திருந்த அக்கா மகன் ஹரீஷிடம் வம்பு வளர்த்து கொண்டிருந்தாள்... அவனது அன்னை வைதேகி குழந்தை பிறந்திருப்பதால் மருத்துவமனையில்

இருந்தாள்... உடன் அவளது கணவன் கேசவன் துணையிருந்தான்...

ஆராதனாவிற்கு எப்போதடா இந்த விழா முடியும்... இங்கிருந்து எழுந்து செல்லலாம் என்று தவிப்புடன் அமர்ந்திருந்தாள்... சிவேஷ்கந்தா விழிகளில் காதலோடு அவளைப் பார்த்திருக்க... அவளோ தன்னை நிமிர்ந்தும் பாராது அமர்ந்திருப்பதைக் கண்டு அவனது விழிகள் யோசனையுடன் இடுங்கியது...

ஆராதனாவின் மனமோ சிவேஷ்கந்தாவிடம் இல்லையே... அவளது மனம் விஷ்ணுபிரஹானிடம் அல்லவா சிக்கியிருக்கிறது... நேற்று காலையில் அவன் பேசிய பேச்சுக்களே அவளது காதில் மீண்டும் மீண்டும் ஒலித்தது...

" நானில்லாமல் உனக்குத் திருமணமா ? நடக்க விட்டுருவேனா... ?" விஷ்ணுபிரஹான் கூறியதை கேட்டு அவள் அதிர்ந்து போய் அவனைப் பார்த்தாள்...

" இதுக்கு எதுக்கு இத்தனை அதிர்ச்சி பேபி ? உனக்கு மட்டும் தான் திருமண நடக்கப் போகிறதா ? இல்லையே... கூடவே என் தங்கைகளுக்கும் சேர்த்து தானே... அவர்களது அண்ணனாகிய நான் இல்லாது அவர்களது திருமணம் எப்படி நடக்கும் ?" ஒற்றைப் புருவத்தை உயர்த்தியபடி கேலியாய் கேள்வி கேட்டவனைக் கண்டு மெல்ல இயல்புக்கு திரும்பியவள் மேலும் அவனிடம் வாதாடாது அங்கிருந்து கிளம்பி வந்துவிட்டாள்...

இப்போது விஷ்ணுபிரஹான் இங்கு எங்கோ இருக்க வேண்டும்... அவன் அங்கு இருப்பதை மனதில் உணர்ந்தவளாய் ஆராதனா நிமிர்ந்து பார்க்க பயந்தாள்... அவனைக் கண்டால் அவள் கோழை போல் மனதளவில் செயலிழந்து போவாள்... அதற்காகவே அவள் யாரையும் நிமிர்ந்து பார்க்கவில்லை...

" மேம் , கொஞ்சம் நிமிர்ந்து பாருங்க..."

யாரோ யாரையோ சொல்கிறார்கள் என்றெண்ணி ஆராதனா அமைதியாக இருந்தாள்... மருதாணி போடும் பெண் அவளிடம் ,

" மேம் , ஃபோட்டோகிராபர் உங்களைத் தான் சொல்கிறார்..." என்று கூற...

வேறுவழியின்றி ஆராதனா குடை போல் கவிழ்ந்திருந்த தனது இமைகளை மெல்ல உயர்த்தினாள்... தொடுவானில் மலரும் பகலவனை ஒத்திருந்தது அவளது அந்தச் செயல்... அவளது மைவிழிகளின் தீட்சண்யம் காண்போரை மயங்க செய்தது... சிவேஷ்கந்தா அவளது விழி வீச்சில் மயங்கி நிற்க... ஆராதனாவோ புகைப்படக்காரரின் அருகாமையில் நின்று கொண்டிருந்த விஷ்ணுபிரஹானை கண்டு முதலில் திகைத்தவள் பின்பு அவனது தோற்றம் கண்டு இமைக்க மறந்தாள் , சுவாசிக்க மறந்தாள் , தன்னை மறந்து அமர்ந்திருந்தாள்...

விஷ்ணுபிரஹான் குடுமி போன்று சற்று நீண்டிருந்த தனது தலைமுடியை அழகாய் படிய தலையோடு ஒட்டி ' கிராப் போல் வெட்டியிருந்தவன் , தனது பிரெஞ்சு பியரை மழித்துவிட்டு உதடுகளின் மேலிருந்த மீசையைக் கற்றையாய்க் கச்சிதமாகக் கத்தரித்து இருந்தான். இந்த விழாவிற்கு ஏற்றார் போன்று ஷெர்வானி அணிந்து கம்பீரமாக இருந்தவனின் ஆளை அசரடிக்கும் அழகாள் , அதுவும் அவளுக்குப் பிடித்தவிதத்தில் இருந்த அவனது அழகு அவளுள் சொட்டு சொட்டாய் இறங்கியது... அவள் அவனை விரும்பிய போது விரும்பாத தோற்றத்தில் இருந்தவன் , இப்போது அவள் அவனை விரும்ப முடியாத நிலையில் இருக்கும் போது விரும்பிய தோற்றத்தில் இருப்பதைக் கண்டு அவள் விரக்தியாய் தனக்குள் சிரித்துக் கொண்டாள்...

முரண்பாட்டிற்கு மறுபெயர் தான் விஷ்ணுபிரஹானோ!!!

ஆராதனாவின் இமைக்காத பார்வையினைக் கள்வன் கண்டு கொண்டானோ...!!! விஷ்ணுபிரஹான் முகம் கொள்ளா புன்னகையுடன் அவளைக் கண்டு குறும்பாய்

கண்சிமிட்டி புன்னகைத்தான்... அவனது புன்னகையில் தன்னை மீட்டு கொண்டவள் மீண்டும் தனது விழிகளைத் தாழ்த்தி கொண்டாள்... அவளது அந்தச் செயலையும் அவன் ரசனையுடன் பார்த்து வைத்தான்...

இருவரது மௌன பரிபாசையை மௌனமாய்ப் பார்த்துக் கொண்டிருந்த சிவேஷ்கந்தாவின் உள்ளம் கோபத்தில் கொந்தளித்தது... ஏற்கெனவே விஷ்ணுபிரஹானுடன் ஆராதனா டோக்பூரில் இருந்த விசயம் கேள்விப்பட்டு அவன் சற்று ஏமாற்றம் அடைந்திருந்தான்... இப்போது எரியும் நெருப்பில் எண்ணையை ஊற்றுவது போல் இந்த நிகழ்வு கண்டு அவனது ஆத்திரம் எல்லையைக் கடக்க முயற்சித்துக் கொண்டிருந்தது... அவன் தன்னை முயன்று அடக்கி கொண்டு அமர்ந்திருந்தான். அவனது காதல் நெஞ்சில் சிறு கீறல் தோன்றியிருப்பதை அவனே உணரவில்லை... சிறு கீறல் பெரும் பிளவாகப் பிளக்க கூடிய அபாயம் இருப்பதை அந்நேரம் அவன் உணரவே இல்லை...

அர்ஜூனன் , அவந்திகா , சுந்தரி மற்றும் சக்கர நாற்காலியில் அமர்ந்திருந்த ராகவன் இந்த நிகழ்வை பார்த்து ரசித்துக் கொண்டிருந்தனர்... அர்ஜூனன் , அவந்திகாவிற்கு மகளுடைய வாழ்க்கை நல்லபடியாக அமைய போவதை நினைத்து அத்தனை மகிழ்ச்சி... ராகவன் மற்றும் சுந்தரிக்கு மகள்கள் இருவருக்கும் நல்ல வாழ்வு அமைய போகும் மகிழ்ச்சி இருந்தாலும் ஆராதனாவை இழப்பது என்பது அவர்களுக்குப் பெருத்த வருத்தமாக இருந்தது... அவர்களது விழிகள் மகனை ஆதங்கத்துடன் பார்த்தது... விஷ்ணுபிரஹான் எதையும் கண்டு கொள்ளாது தொழில் வட்டார நண்பர்களிடம் பேசி கொண்டிருப்பதைக் கண்டு அவர்களுக்குக் கோபம் கோபமாக வந்தது...

எத்தகைய சொர்க்கத்தை , புதையலை அவன் இழந்திருக்கிறான்... இதை மகன் சிறிதும் உணர்ந்தானா ? என்று அவர்களுக்கு மகன் மீது கவலையும் , கோபமும் ஒருங்கே எழுந்தது...

துரை தனது மனைவி மௌனிகா , மகள் சுப்ரஜாவுடன் அங்கு வந்திருந்தான்... விஷ்ணுபிரஹான் எந்தவித குற்றவுணர்வும் இல்லாது புன்னகையுடன் வலம் வருவதைக் கண்டு துரை பல்லை கடித்தான்...

" மாப்ள , இவனை இன்னுமா உயிரோட விட்டு வச்சியிருக்க... இந்நேரம் இவனைக் கொன்னு புதைச்ச இடத்துல புல்லு முளைச்சிருக்க வேண்டாமா ?" துரையின் வார்த்தைகளில் அடக்கப்பட்ட கோபம் வெளிப்பட்டது...

" விடு மச்சி... என்னோட மருமகள்களோட அண்ணனா அவன் இங்கு வந்திருக்கிறான்... தங்கைகள் வாழ்வு பத்தின பயம் அவன் மனதில் இருக்கும்..." அர்ஜூன் அவனைச் சமாதானப்படுத்தினான்...

" என்னமோடா... நீ பண்றது எனக்குக் கொஞ்சம் கூடப் பிடிக்கலை... அன்னைக்கே அவனைப் போட்டுத் தள்ளியிருந்தால் இன்னைக்கு அவன் நம்ம முன்னாடி இவ்வளவு தெனாவெட்டா அலைஞ்சிக்கிட்டு இருக்க மாட்டான்..."

" துரை , எனக்கு மட்டும் உன்னைப் போல் கோபம் இல்லைன்னா சொல்ற... உன்னை விட அதிக ஆத்திரம் எனக்கிருக்கு... ஆனா என் பொண்ணு என் கிட்ட வாங்கின சத்தியம் என்னை அடக்கி வாசிக்க வைக்குது..." என்று கூறியவனின் முகம் வேதனையைப் பிரதிபலித்தது... அதைக் கண்ட துரை மனம் கசந்தான்...

" விடு மாப்ள... ஏதோ தெரியாம பேசிட்டேன்... நீ இதைப் பத்தி யோசிக்காம வேலையைப் பார்..." என்று நண்பனை ஆறுதல்படுத்தியவன் அங்கிருந்து நகர்ந்தான்...

உணவு பரிமாறும் இடத்தில் துரை மேற்பார்வை செய்து கொண்டிருந்தான்... எல்லா உணவுகளும் தயார் நிலையில் இருந்தது... துரித உணவுகள் மட்டும் சூடாகச் செய்து கொடுப்பதற்காகச் சமைக்கப்படாமல் காத்திருந்தது... எல்லாவற்றையும் திருப்தியுடன் ஒரு பார்வை பார்த்த துரை

அங்கிருந்து செல்ல முயன்ற போது விஷ்ணுபிரஹான் அவன் எதிரில் வந்தான்...

" ஹாய் மாமா... பார்த்து ரொம்ப நாளாச்சு... எப்படியிருக்கீங்க... ?" என்று விரிந்த புன்னகையுடன் கேட்டவனைக் கண்டு துரை முறைத்துக் கொண்டிருந்தான்...

" எதுக்கு முறைக்கிறீங்க மாமா ? பிரெண்ட்ஸ்... ?" என்றபடி விஷ்ணுபிரஹான் தனது வலக்கையைத் துரை புறமாய் நீட்டினான்...

" நீயும் , நானும் பிரெண்ட்ஸா ? உன் வயதென்ன ? என் வயதென்ன ?" துரை வார்த்தைகளைக் கடித்துத் துப்பினான்...

" நட்பிற்கு வயது ஒரு தடையில்லை..." என்று விஷ்ணுபிரஹான் கண்சிமிட்டி சிரித்தான்...

" உன் நட்பு எனக்குத் தேவையில்லை... நீ எங்களுக்கு எதிரி..." என்று துரை எரிச்சலுடன் மொழிந்தான்...

" எதிரியா ? இல்லையே... நான் உங்களோட..." என்றவனைக் கையமர்த்தித் தடுத்த துர ,

" தேவையில்லாது பேச வேண்டாம்..." என்க...

" நான் உங்களுடைய சம்பந்தி என்று சொல்ல வந்தேன்... எனது இரண்டு தங்கைகளை உங்க வீட்டுப் பையன்களுக்கு மணம் முடித்துக் கொடுக்கப் போகிறேன் இல்லையா ?"

" உன் உருப்படாத வாதத்தைக் கேட்க எனக்கு விருப்பம் இல்லை..." என்ற துரை விஷ்ணுபிரஹான் இருந்த இடத்தை விட்டு வேகமாய் அகன்றான்...

விஷ்ணுபிரஹான் சிரித்தபடி அங்கிருந்து சென்றான்... அவனது மனக்கண்ணில் அவனது தேவதை பெண்ணின் அழகு முகமே ஊர்வலம் வந்தது... அதில் அவனது முகம் இன்னமும் அதிகமாய் மலர்ந்து போனது...

விஷ்ணுபிரஹான் மீண்டும் மண்டபத்தினுள் வந்த போது மணமக்கள் தத்தம் ஜோடியுடன் அமர்ந்திருந்தனர்... ஆராதனாவும் , சிவேஷ்கந்தாவும் அருகருகே அமர்ந்திருப்பதைக் கண்டு அவனது முகத்தில் இருந்த சிரிப்பு மறைந்து போனது... அவனது முகம் உணர்வுகளைத் தொலைத்து இறுகி போனது... அவன் அமைதியாக வந்து அங்கிருந்த நாற்காலியில் அமர்ந்தான்...

ஸ்ரீராம் சீதாவின் கைகளைப் பற்றியபடி உற்று நோக்கி கொண்டிருந்தான்... சீதாவின் கைகளில் வரைந்திருந்த மருதாணியில் அவனது பெயரை தேடி கொண்டிருந்தான்... அவர்களது பெயர்களுக்கு ஏற்றார் போன்று சீதாராமனின் உருவங்களை மருதாணியில் வரைந்திருப்பதைக் கண்டு ஸ்ரீராம் மனம் மயங்கி போனான்... சீதாவின் கைகளை மென்மையாய் வருடியபடி ,

" உன் கைகளுக்கு மருதாணி ரொம்ப அழகாயிருக்கு..." என்றவனது குரல் மயக்கத்துடன் ஒலித்தது...

" ஷ் , எல்லோரும் நம்மையே பார்க்கிறாங்கன்னா..." என்று அவள் வெட்கத்துடன் மொழிந்தபடி தலைகுனிந்து கொண்டாள்... அதைக் கண்டு சிரித்தவன் அவளது கைகளில் மறைந்திருந்த தனது பெயரின் எழுத்துக்களைச் சரியாகக் கண்டுபிடித்துக் கூறினான்... அதில் சீதாவின் மனம் விரும்பியே மயக்கம் கொண்டது...

பரத் கனிஷ்காவின் கைகளைக் கடமையே என்று பிடித்துக் கொண்டிருந்தான்... கடமையே என்றாலும் பெண்ணவளின் கைகளின் மென்மையில் ஆணவன் மனம் அவனையும் அறியாது தொலைந்து கொண்டிருந்தது... இருந்தாலும் வீம்பு கொண்டு இறுக்கமாய் அமர்ந்திருப்பது போல் காட்டி கொண்டான்... சிறிது நேரம் கழித்து அவளது கையை விட்டவன் ,

" இது ரொம்பக் கஷ்டமான வேலை..." என்று புன்னகையுடன் கூறியபடி தனது இரு கைகளையும் சரணடைவது போல் தூக்கினான்... அவனது புன்னகையில்

கனிஷ்கா மனம் மயங்கிய போதும் வெளியில் அவனைக் கண்டு முறைத்தாள்...

" ஐயோ , பயமாயிருக்கே..." பரத் போலியாக அலறியபடி அங்கிருந்து ஓட்டம் எடுக்க... உறவினர்கள் அவனது செயலை பார்த்து கொல்லென்று சிரித்தனர்... அதைக் கண்டு கனிஷ்கா கோபத்தில் பல்லை கடித்தாள்...

சிவேஷ்கந்தா தனது மனஸ்தாபங்களை எல்லாம் ஒதுக்கி வைத்துவிட்டு ஆராதனாவின் கைகளைப் பிடித்துக் கொண்டு தனது பெயரின் எழுத்துக்களைத் தேடும் பணியில் ஈடுபட்டு இருந்தான்... ம்ஹூம் , எத்தனை முறை தேடியும் அவனால் அவனது பெயரை கண்டுபிடிக்க முடியவில்லை... அவன் கண்டுபிடித்த ஒரே ஒரு எழுத்து 'A' மட்டுமே... அவனால் தனது தோல்வியைத் தாங்கி கொள்ள முடியவில்லை... அவன் முகம் கறுக்க விருட்டென்று அங்கிருந்து அகன்றான்...

ஆராதனா சிவேஷ்கந்தாவை கவனித்தால் அல்லவா , அவனது செயலுக்காக வருந்துவதற்கு... அவளது பார்வையோ விஷ்ணுபிரஹானின் முகத்தில் அல்லவா நிலைத்திருந்தது... அவனது இறுகிய முகத்தில் , அவனது விழிகளில் தெரிந்த ரௌத்திரத்தில் அவள் அச்சத்தில் உறைந்து போயிருந்தாள்... நாளை வேறு ஒருவன் கையால் தாலி வாங்கிக் கட்டி கொள்ளப் போகும் இந்த நேரத்திலும் விஷ்ணுபிரஹான் தன்னைப் பாதிப்பதை உணர்ந்து அவள் மனதிற்குள் நடுநடுங்கி போயிருந்தாள்...

உணவு அருந்த சென்ற போதும் விஷ்ணுபிரஹானின் பார்வை தன்னை ஊடுருவது போல் , துரத்துவது போல் அவளுள் ஒருவித மாயத்தோற்றம் தோன்றியதில் அவள் அவசரம் அவசரமாகத் தனது உணவினை முடித்துக் கொண்டு தனது அறைக்குச் செல்ல நினைத்தாள்...

" ம்மா , ரூமுக்கு போகலாம்..." என்று அவள் அன்னையை அழைக்க...

உறவினர்களுடன் பேசி கொண்டிருந்த அவந்திகா வேறுவழியின்றி மகளுடன் சென்றாள்... ஆராதனாவை தனியே விடக் கூடாது என்று அர்ஜூனின் உத்தரவு...

" பட்டூ , ஏன் உன் முகம் வாடியிருக்கு... ?" என்று அவந்திகா மகளிடம் அக்கறையுடன் கேட்க...

" ஒண்ணுமில்லைம்மா..." என்று சுரேத்தே இல்லாது பதில் கூறிய மகளைக் கண்டு அந்த அன்னையின் மனம் கனத்துப் போனது...

" பட்டு..."

" சொல்லுங்கம்மா..." அன்னையின் அழைப்பில் சட்டென்று தன்னைச் சுதாரித்துக் கொண்டாள் ஆராதனா...

" நடந்து முடிஞ்சதை எண்ணி வருத்தப்படுறதை விட்டுட்டு... இனி நடக்கப் போறது நல்லதா அமையணும்ன்னு வேண்டிக்கோடி... உன் மனசு நேக்கு புரியுது... ஆனா எல்லோருக்கும் நினைச்ச மாதிரி வாழ்க்கை அமைஞ்சிரது இல்லை... உன் வாழ்க்கை இப்படித்தான் இருக்கணும்ன்னு அந்தக் கடவுள் நீ பிறக்கும் போதே உன் தலையில் எழுதிட்டான் போலும்... மனசை தேத்திண்டு சந்தோசமாயிரு..."

" மம் , சரிம்மா..." என்றவள் முயன்று தனது முகத்தை மலர்ச்சியாக வைத்து கொண்டாள்...

" இப்போ தான் நிம்மதியா இருக்கு..."

அவந்திகா நிம்மதியுடன் கூறும் போது அர்ஜூனின் சொந்தக்கார பெண்மணி ஒருத்தர் அங்கு வந்தார்... அவந்திகாவுடன் அவர் பேசி கொண்டிருக்க... ஆராதனா மெல்ல விலகி சற்றுத் தள்ளியிருந்த பால்கனியை நோக்கி நடந்தாள்... பால்கனியை அவள் நெருங்கவும்... ஒரு உருவம் அவளது கையைப் பிடித்து இழுக்கவும் சரியாக இருந்தது...

" ஆ..." என்று கத்த போனவளின் வாயை இறுக மூடிய உருவம் ,

" நான் தான்..." என்று குரல் கொடுக்க... அதில் குரலுக்குச் சொந்தக்காரனை உணர்ந்த ஆராதனாவின் தேகம் இறுகியது...

" ரொம்பச் சந்தோசமாயிருக்கியா கல்யாண பெண்ணே... ?" என்று கேட்டபடி அவளை அங்கிருந்த சுவற்றில் சாய்த்தான் விஷ்ணுபிரஹான்...

அவள் பதில் கூறாது அவனை உறுத்து விழித்தாள்... அவனோ அசராது அவளது பார்வையைத் தாங்கி நின்றவனி ,

" டூ யூ லவ் மீ பேபி... ?" என்று நிறுத்தி , நிதானமாயி , அழுத்தம் திருத்தமாய் அவளிடம் கேட்க... அவளோ திகைப்புடன் விழிகள் இரண்டும் தெறித்துவிடுவது போல் அவனைப் பார்த்து வைத்தாள்...

" நாளைக்குக் கல்யாணத்தை வச்சிண்டு இது என்ன அபத்தமான கேள்வி... ?" அவள் அடக்கப்பட்ட கோப குரலில் சீறினாள்...

" எனக்குத் தேவையான கேள்வி..." என்று அவன் அமர்த்தலான குரலில் பதில் அளித்தான்... அவள் உதடுகளை இறுக்கமாய் வைத்தபடி அவனைப் பார்த்து முறைத்தாள்...

" வழியை விடுங்கோ... அம்மா பார்த்தால் பிரச்சனை ஆகிரும்..."

" கடைசித் தடவையாய்க் கேட்கிறேன்... உன் மனதில் நான் இருக்கிறேனா ? நீ என்னைக் காதலிக்கிறியா ?"

" ம்ப்ச்..." என்று சலித்தவள் அவனது முகத்தைப் பார்க்காது வேறெங்கோ பார்த்தபடி ,

" இல்லை..." என்றாள் அழுத்தம் திருத்தமாய்...

அவளது வார்த்தையில் அவனது முகம் ஆத்திரத்தில் செந்தணலாய் ஜொலித்தது... சட்டென்று தனது முகபாவனையை மாற்றியமைத்து கொண்டவன் அவளது

இரு கைகளை எடுத்து தனது கைகளுக்குள் பொத்தி வைத்துக் கொண்டான்... அவனது செயலில் அவளது உள்ளம் படபடத்தது... அது அச்சமா ? இல்லை வேறு எந்த உணர்வா ? என்று தெரியாது அவள் உள்ளுக்குள் அலைபாய்ந்து கொண்டிருந்தாள்... அவனோ அவளைக் கண்டு கொள்ளாது அவளது கைகளில் வரைந்திருந்த மருதாணியின் மீது தனது ஆள்காட்டி விரலை வைத்தான் ,

"P...R...A...H...A...A...N...A...A...R...A...A" என்று ஒவ்வொரு வார்த்தையாகத் தேடி தேடி உச்சரித்தவனைக் கண்டு அவள் ஆச்சரியத்துடன் பார்த்தாள்...

" பிரஹானாரா..." என்று அவன் எல்லா எழுத்துக்களையும் சேர்த்து ஒற்றை வார்த்தையில் கூறவும் அவளது ஆச்சரியம் அதிர்ச்சியாகி போனது...

" பிரஹான் ப்ளஸ் ஆரா... பிரஹானாரா. இதில் சிவேஷ்கந்தாவை தேடினால் எப்படிக் கிடைக்கும்... ?" அவன் மிதப்பாய் தனது புருவங்களை உயர்த்தினான்...

" நாளைக்கு நீ கட்ட வேண்டிய உன் புடவை , நகைகளைத் தேர்வு செய்த மாதிரி , இதோ நீ கையில் போட்டியிருக்கும் மருதாணியில் என் பெயரை எழுதிய மாதிரி..." என்று நிறுத்தியவன் அவளை உற்று நோக்கியபடி ,

" உனக்கு யார் கணவனா வரணும்ன்னு தீர்மானிக்கப் போறதும் நான் தான்..." என்று ஒருவித தீவிரத்துடன் கூற...

" பிரஹான்... தப்பு மேல தப்பு பண்றீங்க..." அச்சத்துடன் கூறியவளின் தாடையில் தனது வலக்கையை அழுத்தமாய்ப் பதித்து நெரித்தபடி அவளது முகத்தை நிமிர்த்தியவன் ,

" இவ்வளவு நாள் நான் பண்ணியது தான் தப்பு... இனி நான் பண்ண போறது எல்லாம் சரியானதே..." என்று கோபமாய்க் கர்ஜித்தவனைக் கண்டு அவளது முதுகு தண்டுவடம் அச்சத்தில் சில்லிட்டது...

இவ்வளவு நேரம் ஆராதனாவிடம் இருந்த தைரியம் விடைபெற்று செல்ல... அவளது விழிகள் இரண்டிலும் விழிநீர் கரை கட்டி நிற்க... அவள் தவிப்புடன் அவனைப் பார்த்தாள்... அவளது விழி வீச்சில் அவன் என்ன கண்டானோ ? அவன் மெல்ல தனது கையைத் தளர்த்தினான்...

" நீங்க பண்ண போகிற காரியத்தால உங்களோட தங்கைகள் வாழ்க்கை தான் பாதிக்கப்படப் போகுது... இதை நீங்க கொஞ்சமும் உணரலையா ?"

" அப்போ நீ என்னைக் காதலிக்கிறேன் சொல்லு..." சற்று முன்னிருந்த அவனது கோபம் பறந்து போயிருக்க... அந்த இடத்தை மகிழ்ச்சி இடம் பிடித்துக் கொண்டது...

' நான் உங்களைக் காதலிக்கிறேன் என்று சொல்வதால் எதுவும் மாறப் போவதில்லை... ஏன் இப்படி என்னை இம்சிக்கிறீங்க ?' அவள் மனதிற்குள் அழுதாலும் வெளியில் திடமாய்க் காட்டி கொண்டாள்...

" பிரஹான் , நீங்க கேட்பது உங்களுக்கே சரியாயிருக்கா... ? உங்களுக்குன்னு உங்க மனைவி இருக்கும் போது என் கிட்ட இப்படிக் கேட்பது நியாயமா ? இதை அவங்க கேட்டா நிச்சயம் வருத்தப்படுவாங்க... நீங்க விரும்பி செய்துக்கிட்ட கல்யாணம் அது... அது நிலைச்சு நிற்க முயற்சி செய்யுங்க... உங்க வாழ்க்கை அர்ச்சனாவோடு... என் வாழ்க்கை சிவேஷ்கந்தாவோடு... இதை மாற்ற முயற்சிக்காதீங்க..."

ஆராதனா பேச பேச அவளை இமைக்காது பார்த்து கொண்டிருந்தவன் அவள் பேசி முடித்ததும் ,

" உன் லெக்சர் முடிந்ததா ? ம் , கிளம்பு..." என்றவன் கையால் அவளைப் போகும்படி சைகை செய்தான்... அவள் அசையாது அழுத்தமாய்ப் பதிலுக்காக அவனைப் பார்த்திருந்தாள்...

" உங்கம்மா உன்னைத் தேடுறாங்க..." என்று அவன் எட்டிபார்த்தபடி கூற...

" ஐயோ..." என்றவள் அங்கிருந்து நகர்ந்து தானும் எட்டிப்பார்த்தாள்... அங்கு இன்னமும் அவந்திகா உறவினர் பெண்மணியுடன் பேசி கொண்டிருப்பதைக் கண்டு அவள் திரும்பி பார்த்து அவனை முறைத்தாள்...

" ஓ... உனக்குப் போக விருப்பம் இல்லையா ? அப்போ வா , என் கூட..." என்று அவன் புன்னகையுடன் அவளது கையைப் பிடிக்க வர... அவனது செய்கையில் பயந்து போனவளாய் அவள் வேகமாய் அங்கிருந்து சென்றுவிட்டாள்...

அவள் போவதை பார்த்தபடி நின்றிருந்த விஷ்ணுபிரஹான் முகத்தில் புன்னகை தொலைந்து போய் ஒருவித இறுக்கம் வந்து ஒட்டி கொண்டது... அவன் இயலாமையில் ஆத்திரத்துடன் வலக்கை முஷ்டி இறுக சுவற்றில் ஓங்கி குத்தினான்... கையிலிருந்த வலியை விட அவனது நெஞ்சில் இருந்த வலி அதிகம்...!!!

****

மணப்பெண் அலங்காரம் முடிந்து தன்னைக் கண்ணாடியில் பார்த்த ஆராதனா தனது அழகினை கண்டு பிரமிக்க முடியாது திக்பிரம்மை பிடித்தார் போன்று அமர்ந்திருந்தாள்... இன்னும் சற்று நேரத்தில் அவள் திருமதி. சிவேஷ்கந்தாவாகப் போகின்றாள்... அவளது மனம் இரு புறமும் மாறி மாறி யோசித்துக் கொண்டிருந்தது... என்ன யோசித்தும் , என்ன சமாதானம் கூறிய போதும் அவளால் இந்தத் திருமணத்தை முழுமனதுடன் ஏற்றுக் கொள்ள முடியவில்லை... பெற்றோருக்காக என்றாலும் அவளால் நடப்பதை ஜீரணித்துக் கொள்ள முடியவில்லை...

' கடவுளே! இந்த நொடி ஏதாவது மாயம் நிகழ்த்தி என்னுயிரை எடுத்து விடேன்... ' என்று அவள் மனதிற்குள் வேதனையுடன் அரற்றினாள்... தற்கொலை செய்து

கொள்ளும் அளவிற்கு அவள் கோழை பெண்ணும் அல்ல... ஆனால் இன்று அவளது போராட்ட மனநிலை அவளை இந்த நிலைக்குத் தள்ளியது...

இதை எல்லாம் விடச் சிவேஷ்கந்தா தனது கழுத்தில் தாலி கட்டும் போது அவளால் எப்படி விஷ்ணுபிரஹானின் முகத்தைப் பார்க்க முடியும் ? அதை நினைக்கும் போதே அவள் தனக்குள் கூனிக்குறுகி போனாள்...

விஷ்ணுபிரஹானால் ஏதும் பிரச்சனை வந்திருமா ? என்று அதை வேறு எண்ணி அவள் தனது மனதினை போட்டு உழட்டி கொண்டிருந்தாள்.

ஆராதனா மீண்டும் தனது பிம்பத்தைக் கண்ணாடியில் பார்த்தாள்... அவள் அணிந்திருந்த புடவை , நகைகள் அனைத்தும் விஷ்ணுபிரஹான் வாங்கித் தந்தது... இவை அனைத்தும் அவளது பிறந்த வீட்டு சீர் என்று பார்வதி நினைத்துக் கொண்டார்... ஆனால் அவந்திகாவோ , இவை அனைத்தும் புகுந்த வீட்டு சீர் என்று நினைத்து கொண்டிருக்கிறாள்... இதுவரை யாரும் வாய் திறந்து இந்த விசயத்தைக் கேட்கவில்லை... அதனால் ஆராதனா தப்பித்தாள்... விஷ்ணுபிரஹான் வாங்கிக் கொடுத்த புடவையில் அவள் மணமேடையில் அமர்ந்து வேறொருவன் அவளது கழுத்தில் தாலி கட்டும் துர்பாக்கிய நிலையை எண்ணி எண்ணி குமைந்து போனாள்...

" எல்லாம் சரியா இருக்கா பட்டு ? நீ சித்த நேரம் தனியா இருந்துக்குவியா ? நான் போய்ச் சீதா , கனியை பார்த்துட்டு வந்திர்றேன்... அவாளோட அம்மா அப்பாவை கவனிக்கப் போயிருக்காளாம்..." அவந்திகா அவளிடம் கூறிவிட்டு அறையை விட்டு வெளியேறினாள்...

ஆராதனாவுடன் அழகு நிலையத்தில் இருந்து வந்த பெண்கள் இருவர் மட்டுமே நின்றிருந்தனர்... துரையின் மனைவி மௌனிகா , மகள் சுப்ரஜா இருவரும் வரவேற்பில் நின்றிருந்ததால் அவள் அருகில் யாருமில்லை...

அதே நேரம் விஷ்ணுபிரஹான் காபி தட்டோடு தங்கைகள் இருந்த அறைக்குள் நுழைந்தான். வைதேகிக்கு குழந்தை பிறந்திருப்பதால் அவளால் திருமணத்திற்கு வர முடியவில்லை... அவளது கணவனும் , மாமியார் இருவரும் அவளுடன் மருத்துவமனையில் இருந்தனர்...

" ம்மா , நீங்க போய் அப்பாவுக்குச் சாப்பாடு கொடுத்துட்டு வாங்க... பிறகு சாப்பாடு கொடுக்க நேரமிருக்காது..." அவன் தனது அன்னையிடம் கூற...

" சீதா , கனி கூட யாரிருப்பா... ?" சுந்தரி தயங்கினார்...

" அவங்க மாமியாரை வர சொல்லி இருக்கேன்... நீங்க கவலைப்படாம போங்க..." என்றவன் அவரை நிறுத்தி தனது கையிருந்த காபி தம்பளர் ஒன்றை எடுத்து அன்னையிடம் நீட்டி ,

" குடிச்சிட்டு போங்க..." என்க... மகனது அக்கறையில் தாயின் மனம் குளிர்ந்து போனது...

சுந்தரி காபி குடித்துவிட்டு வெளியேறியதும் தங்கைகள் பக்கம் திரும்பிய விஷ்ணுபிரஹானும் , " உங்களுக்கு வேறு தனியா சொல்லணுமா ?" என்று அதட்ட... அவர்கள் இருவரும் மௌனமாகக் காபியை எடுத்து பருகினர்...

ஒரு சகோதரனாய் தங்கைகளின் மணப்பெண் அலங்காரத்தைக் கண்டு பூரித்தவன் விழிகள் லேசாகக் கலங்கியது... எந்த அண்ணனுக்கும் வரும் உணர்வு தான் இது... வைதேகி திருமணத்தின் போது அவனது அத்தனை வேதனையிலும் அவளது பிரிவு அவனை வாட்டத்தான் செய்தது... இதோ இப்போதும் அதே போன்றதொரு மனநிலையில் தான் அவன் இருக்கின்றான்... அன்றும் இன்றும் அவனின் வேதனை என்றுமே மாறப் போவதில்லை... அவன் தனக்குள் விரக்தியாய் சிரித்துக் கொண்டான்...

" உனக்குக் கொஞ்சம் கூட வருத்தமா இல்லையா ?" கனிஷ்காவின் குரலில் அவன் அவளைக் கூர்ந்து

பார்த்தான்...

" எதுக்கு ?"

" மன்னி கல்யாணத்தைப் பத்தி கேட்டேன்..."

" நீ அதை அவள் கிட்ட தான் கேட்கணும்... என் கிட்ட எதுக்குக் கேட்கிற... ?" என்று ஒற்றைப் புருவத்தைத் தூக்கியபடி நக்கலாய் பதிலளித்த அண்ணனை கண்டு கனிஷ்கா கோபத்தில் பல்லை கடித்தாள்...

" விடு கனி... அண்ணா , நீங்க போங்கோ..." சீதா தான் இருவருக்கும் இடையில் புகுந்து பிரச்சனை வராது காப்பாற்றினாள்...

அங்கிருந்து கிளம்பப் போனவன் பின் நின்று தங்கைகள் புறம் திரும்பி , " உங்க வாழ்க்கையோடு என் பிரச்சனை சேர்த்து வச்சு பார்க்காதீங்க... அப்படிப் பார்த்தீங்கன்னா உங்க சந்தோசம் போயிரும்... அதனால் நீங்களும் சந்தோசமா இருந்து உங்க ஆத்துக்காரரையும் சந்தோசமா வச்சுக்கோங்க..." என்று அறிவுரை கூற...

" ம்க்கும்..." என்று கனிஷ்கா நொடித்துக் கொள்ள...

" பாவம் பரத்..." என்று அவளைப் பார்த்து கூறியவன் பின்பு வாய்விட்டுச் சிரித்தான்... கனிஷ்கா அண்ணனை முறைத்து பார்க்க... அதைக் கண்டு விஷ்ணுபிரஹான் சிரித்தபடி அங்கிருந்து வெளியேறினான்...

" அண்ணாவை இப்படிப் பார்க்கும் போது பழைய அண்ணாவை திரும்பப் பார்க்கிற மாதிரியிருக்கு... பழைய அண்ணாவா இருந்திருக்கக் கூடாதான்னு மனசுக்கு ரொம்ப வருத்தமாயிருக்கு சீதா..." கனிஷ்கா அக்காவிடம் கூறினாள்...

" கனி , நீ மன்னி நிலையில் இருந்து யோசிக்கிற... நிச்சயம் அது தான் சரி... ஆனா அண்ணாவோட நிலையில் இருந்து கொஞ்சம் யோசிச்சு பார்... காதலிச்சதை தவிர அண்ணா வேறென்ன பாவம் பண்ணினார்... அதற்கு

அவருக்குக் கொடுத்த தண்டனை ரொம்பவும் அதிகமானது... இப்போ உனக்குக் கல்யாணமாகப் போகுது... அண்ணாவோட நிலையில் உன்னை நிறுத்தி பார்..."

" அதுக்காக அண்ணா அப்படிப் பண்ணலாமா ? அவனோட சந்தோசம் தான் முக்கியம்ன்னா எதுக்கு மன்னியோட வாழ்க்கையில் புகுந்து குழப்பம் விளைவிக்கணும்... ?"

" அது அவங்க இரண்டு பேரும் பேசி தீர்க்க வேண்டிய விசயம்... நீயும் , நானும் பேசுவதால் எதுவும் மாறப் போவதில்லை... இப்போ மன்னிக்கு வேற வாழ்க்கை அமைய போகுது... அந்தச் சந்தோசத்தை மட்டும் மனதில் வச்சுக்கோ.... தேவையில்லாத கசடுகள் வேண்டாம்..." என்று சீதா தங்கைக்கு அறிவுறுத்தினாள்... கனிஷ்கா பெருமூச்சு விட்டபடி சரியென்று தலையசைத்தாள்...

விஷ்ணுபிரஹான் தங்கைளிடம் விடைபெற்றுச் செல்லும் போது ஆராதனா இருந்த அறையைத் தாண்டி தான் செல்ல வேண்டியிருந்தது... அவன் அறையை நெருங்கவும் அவந்திகா ஆராதனா அறையில் இருந்து வெளியில் வரவும் சரியாக இருந்தது... அவனைக் கண்டதும் அவந்திகாவிற்கு என்ன பேசுவதா ? என்று தெரியவில்லை...

" நீங்க எங்கே ?"

" தங்கைகளுக்குக் காபி கொடுக்க வந்தேன்..." என்றவன் தனது கையிலிருந்த காபி தம்பளர் அடங்கிய தட்டினை காண்பித்தான்...

அவனது அந்தச் செயலில் அவந்திகாவின் மனம் நெகிழ்ந்து தான் போனது... அழகா , அறிவா , கம்பீரம் என அனைத்தும் ஒருங்கே பெற்ற ஆண்மகன் அவன்... அந்த ஒரு காரணத்திற்காகத் தானே அவனை அர்ஜூன் , அவந்திகாவிற்குப் பிடித்திருந்தது... ஆனால் அப்படிப்பட்டவன் செய்த துரோகத்தைத் தான் அவர்களால்

இன்னமும் நம்ப முடியவில்லை... அன்பை பிரதிபலிக்கும் விஷ்ணுபிரஹான் விழிகளைப் பார்த்தால் அவன் கயவன் என்று யாரும் கூறிவிட மாட்டார்கள்... அப்படிப்பட்டவன் எப்படி இப்படித் துரோகியாக மாறிப் போனானஃ ?

" சீதா , கனி உங்களுக்காகத் தான் காத்துக்கிட்டு இருக்காங்கம்மா..." விஷ்ணுபிரஹானின் வார்த்தையில் தனது யோசனையைத் தள்ளி வைத்தவளின் மனம் அவனது ' அம்மா ' என்றழைப்பில் சற்று தடுமாறியது... முயன்று தன்னைச் சமாளித்துக் கொண்ட அவந்திகா அவனிடம் எதுவும் பேசாது அவனைத் தாண்டி சென்றாள்... ஒரு அன்னையாய் அவந்திகாவின் உணர்வுகளை அவனால் புரிந்து கொள்ள முடிந்தது...

" பேபி விசயத்தில் ரொம்பவே சொதப்பிட்ட விஷ்ணு..." தனக்குள் முணுமுணுத்து கொண்டவன் ஒரு பெருமூச்சு விட்டபடி ஆராதனா இருந்த அறையைப் பார்த்தான்...

இத்தனை நேரம் அவனது விழிகளில் இருந்த கனிவு மறைந்து அதில் கோபம் வந்து ஆக்ரமித்துக் கொண்டது. அவனது உதடுகளில் இருந்த புன்னகை தொலைந்து அது இறுக்கமாய் இறுகி போனது... இன்னொருவன் கையால் தாலி வாங்க தயாரான ஆராதனாவை கண்டு அவனால் ஜீரணிக்க முடியவில்லை... அவனது மனதில் எப்போதும் தோன்றும் அதே எண்ணம் இப்போதும் அவனுள் தோன்றியது...

' நான் அவளை அணு அளவும் பாதிக்கவில்லையா ? நான் தான் கெட்டவன்... அப்படியே இருந்துட்டுவிட்டுப் போகிறேன்... ஆனால் நீ நல்லவள் தானேடி... அப்புறம் எப்படி என் விசயத்தில் நீ பொய்த்து போன ?' அவனது மனம் ஆற்றாமையில் விடாது புலம்பியது...

' இதோ இந்த நொடி வரை விஷ்ணுபிரஹான் நல்லவன் தான்... எனக்குத் தீமை செய்தவர்களைக் கண்டு கொள்ளாது இருக்கப் பழகியவன் தான்... ஆனால் இனி நான் அப்படி இருக்கப் போவதில்லை... முக்கியமாக உனக்குமஃ , உன் பெற்றோரஃ , அண்ணன்களுக்கும் நான்

கெட்டவன் தான்... பார்க்கலாம்டி நீயா ? நானா ? என்று... உன் வாயால் ' நீ என்னைக் காதலிப்பதாய் ' சொல்ல வைக்கலை... என் பெயர் விஷ்ணுபிரஹான் இல்லை... ' மனதிற்குள் ஆத்திரத்துடன் சபதம் எடுத்து கொண்டவன் அடுத்த நொடி விருட்டென்று அங்கிருந்து அகன்றான்...!!!

திருத்தமாகும்...!!!

மணமகன் அறையில் பரத் தனது தந்தையிடம் சத்தம் போட்டுக் கொண்டிருந்தான்... அர்ஜூனோ அவனை எப்படிச் சமாதானம் செய்வது ? என்று தெரியாது விழித்தான்... ஸ்ரீராம் ஒன்றும் பேசாது தம்பியின் பேச்சை வேடிக்கை பார்த்துக் கொண்டிருந்தான்...

"என்னப்பா நான் சொல்லிக்கிட்டே இருக்கேன்... நீங்க பேசாம இருந்தால் என்ன அர்த்தம் ?" பரத்திற்குக் கோபம் கோபமாய் வந்தது...

"நீ சொல்வது போல் செய்ய எனக்கு விருப்பம் இல்லை பரத்... மூன்று திருமணங்களும் ஒரே நேரத்தில் நடக்கணும்... நீங்க மூணு பேரும் ஒரே நேரத்தில் அவங்கவங்க மணப்பெண் கழுத்தில் தாலி கட்டணும்... இது தான் என்னுடைய விருப்பம்..." அர்ஜூன் உறுதியாகக் கூறினான்...

"விஷ்ணு ஏதாவது குழப்பம் பண்ணினால்... ? அதனால் தான் சொல்றேன்ப்பா... முதலில் பட்டுவோட கல்யாணம் முடியட்டும்..." தீர்மானமாக மறுத்துக் கூறினான் பரத்...

"சரி , உன் பேச்சிற்கே விடறேன் பரத்... அப்படி அவன் தகராறு பண்ணினால் நீ உன் திருமணத்தை நிறுத்திருவியா ?" அர்ஜூன் மகனிடம் கேட்க...

"நிச்சயம் நிறுத்திவிடுவேன்..." உறுதியாய் கூறிய பரத்தை கண்டு அர்ஜூன் திடுக்கிட்டுப் போனான்...

"பரத்... கல்யாணம் விளையாட்டு காரியம்ன்னு நினைச்சியா ?" அர்ஜூன் மகனை அதட்டினான்...

"வேறு என்ன தான்ப்பா செய்றது ?" பரத் சலித்துக் கொள்ள...

"நான் சொல்றதை கேள்..." அர்ஜூன் முடிவாகக் கூற...

"அண்ணா..." என்றபடி பரத் ஸ்ரீராம் முகத்தைப் பார்க்க...

"அப்பா சொல்றதும் சரி தான் பரத்... பட்டுவோட கல்யாணம் நமக்கு முக்கியம் தான்... அதே போல் நம்மை நம்பி வர்ற நம்ம துணைகளும் நமக்கு முக்கியம்... அதனால் ஒரே நேரத்தில் மூன்று திருமணங்களும் நடப்பது தான் எனக்கு நல்லதுன்னு தோணுது..."

"என்னவோ போங்க..." பரத் எரிச்சலுடன் வெளியே செல்ல போனவன் பின்பு தான் மணமகன் என்பதை உணர்ந்து நொந்தபடி அறைக்குள் வந்தமர்ந்து அலைப்பேசியை எடுத்து பார்த்துக் கொண்டிருந்தான்...

முதலில் சீதாவும் , கனிஷ்காவும் மணமேடைக்கு அழைத்து வரப்பெற்று தங்களது இணை அருகில் சென்றமர்ந்தனர். பரத்திற்கும் , கனிஷ்காவிற்கும் இடையில் ஒரு ஆள் அமரும் அளவில் இடைவெளி இருந்தது... மந்திரம் உச்சரித்துக் கொண்டிருந்த அய்யர் இவர்கள் இருவரையும் கண்டு ,

"கொஞ்சம் நெருக்கமாய் உட்காருங்கோ... இந்தக் காலத்தில் ஒருத்தருக்கு ஒருத்தர் ஈஷிண்டு மடியிலேயே உட்கார்றா... நீங்க என்னடான்னா... ?" அவர் சலித்துக் கொள்ள...

"நீரு அய்யரா ? இல்லை... ?" கனிஷ்கா தான் சொல்ல வந்ததைச் சொல்லாது நிறுத்திவிட்டு அய்யரை கண்டு முறைத்தாள்...

"இது உமக்குத் தேவையா... ? வந்தோமா... மந்திரத்தை ஓதினோமா... தாலியை எடுத்து கொடுத்தோமான்னு போயிக்கிட்டே இருங்க... இல்லைன்னா இந்த அடாவடி உங்களை நார் நாரா கிழிச்சிருவாள்..." பரத் கூறியதை கேட்டு அய்யர் தனது வாயை இறுக மூடி கொள்ள... அதற்கும் கனிஷ்கா பரத்தை முறைத்தாள்... அதைப் பார்த்த அய்யர் பரத்திடம் ,

"அம்பி , இப்போ நேக்கு நன்னா புரியுது... எதுக்கும் நீர் ராத்திரி படுக்கும் போது கூட ஹெல்மேட்டோட படும்வோய்... இல்லைன்னா உம்ம உயிருக்கு உத்திரவாதம்

இல்லை..." அவர் கூறியதை கேட்டு பரத் வாய்விட்டுச் சிரித்தான்...

கனிஷ்கா தன் முன்னால் இருந்த தேங்காயை எடுத்து அய்யர் தலையில் போடலாமா ? வேண்டாமா ? என்று படுதீவிரமாய்த் தனக்குள் யோசித்துக் கொண்டிருந்தாள்... அதைக் கண்டு கொண்ட பரத் அவள் புறம் சற்று சரிந்தா ,

"நம்ம சண்டையில் பாவம் அவர் தலையை ஏன் உருட்டுற... ?" என்று கேலி போல் கேட்க... அவள் அடக்கப்பட்ட கோபத்துடன் புசுபுசுவென்று மூச்சு விட்டபடி அமர்ந்திருந்தாள்.

இந்தத் திருமண நிகழ்வை முழுமனதுடன் , காதலுடன் எதிர்கொண்டது சீதா , ஸ்ரீராம் இருவர் மட்டுமே... சீதாவை கண்டதும் ஸ்ரீராம் மனதில் விஷ்ணுபிரஹான் கூடப் பின்னுக்குச் சென்றுவிட்டான்... அவன் மனதில் சீதாவின் மீதான காதலே மிகுந்திருந்தது... சீதா மனதில் காதல் இருந்ததோ இல்லையோ! ஸ்ரீராமின் காதலில் கவரப்பட்டவளாய் அவள் மிகுந்த மகிழ்ச்சியோடு காணப்பட்டாள்...

அர்ஜூன் , அவந்திகா , சுந்தரி , சக்கர நாற்காலியில் ராகவன் நால்வரும் மூன்று திருமணத்தை ஒன்று சேர்ந்தார் போன்று பார்த்து ரசிப்பதற்காக மணமேடை முன் சற்று தள்ளி நின்றிருந்தனர்...

இந்தத் திருமணத்திற்கு விஜயின் தந்தை சேதுபதி வருகை தந்திருந்தார்... ஏனெனில் விஜய் ஸ்ரீராமின் நெருங்கிய நண்பன்... இப்போது தான் இருவரும் பேசி கொள்வது இல்லை... ஆனால் விஜய் பரத்துடன் அதே நட்புடன் இருந்தான்... அதுவும் விஷ்ணுபிரஹானை வீழ்த்துவதற்காக... விஷ்ணுபிரஹானை பார்த்த சேதுபதிக்கு சற்றுக் கோபம் வந்தது... அதேசமயம் மகனை நினைத்து ஆதங்கமாகவும் இருந்தது. அவன் செய்த தவறு விஷ்ணுபிரஹானுக்குச் சாதகமாகி போனதை எண்ணி அவர் வருத்தம் கொண்டார்... இரு ஆண்களை விடப் பெண்ணான அர்ச்சனாவை நினைத்து அவர் தனது

கோபத்தினைக் கட்டுப்படுத்திக் கொண்டார்... அர்ச்சனாவின் மனநிம்மதி இப்போது முக்கியமல்லவா!

இறுதியாக ஆராதனா மணமேடைக்கு அழைத்து வரப்பட்டாள்... மணப்பெண் அலங்காரத்தில் , தங்க நிற பட்டில் தங்கமாய் ஜொலித்தவளை கண்டு கூடியிருந்தோர் மெய்மறந்து போயினர்... இத்தனை அழகா இவள்! என்று... தலைகுனிந்தபடி சபையின் முன்வந்து நின்றவள் தனது இருகைகளையும் கூப்பியபடி சற்று நிமிர்ந்து சபையினரை கண்டு வணக்கம் தெரிவித்தாள்... அப்போது அவள் தனக்கு நேரெதிரே நின்றிருந்த விஷ்ணுபிரஹானை கண்டு அதிர்ந்தவளாய் நின்றிருந்தாள்...

அதேநேரம் விஷ்ணுபிரஹானும் அவளைத் தான் பார்த்துக் கொண்டிருந்தான்... தான் தேர்வு செய்த பட்டுப்புடவையில் தேவதையாய் ஜொலித்தவளை அவனது விழிகள் முதன்முறையாய் உரிமையாய் தாபத்துடன் விழுங்கி கொண்டது... அவன் தன்னருகில் இருந்த யாரையும் பொருட்படுத்தவில்லை... அவனது ஊடுருவும் பார்வையில் அவள் தான் தனது தலையைத் தாழ்த்த வேண்டியிருந்தது...

மணமேடையில் அமர்ந்திருந்த சிவேஷ்கந்தாவோ கொந்தளித்துக் கொண்டிருந்தான்... ஆராதனாவின் பார்வை விஷ்ணுபிரஹான் மீது விழுந்ததையும் , பதிலுக்கு விஷ்ணுபிரஹான் அவளை விழுங்கி விடுவது போல் பார்த்ததையும் கண்டு அவனது கோபம் எகிறியது... அதைவிட ஆராதனா கட்டியிருந்த புடவை அவனது கருத்தை கவர்ந்து அவனை இன்னமும் ஆத்திரத்தில் கொதிக்கச் செய்தது... இது அவன் தேர்வு செய்த பட்டுப்புடவை இல்லையே... மொத்தத்தில் சிவேஷ்கந்தாவின் மனதினில் இருந்த காதல் காணாமல் போய் இப்போது கோபம் புகுந்து அவனை ஆட்டுவித்தது...

"பட்டு வா..." அவந்திகா ஆராதனாவின் கையைப் பிடித்தழைக்க... அதில் நிமிர்ந்த ஆராதனா தன்னை நோக்கி வரும் விஷ்ணுபிரஹானை கண்டு கண்ணிமைக்க மறந்தவளாய் திகைத்து போய் அசையாது நின்றிருந்தாள்.

அவனோ இயல்பான புன்னகையுடன் அவளை நெருங்கினான். அதைக் கண்டு அவளது விழிகள் இரண்டும் அகல விரிந்தது.

அதைக் கண்டு சிவேஷ்கந்தா ஆத்திரத்துடன் மணமேடையை விட்டு எழ போனான். சிவசுப்ரமணியம் அவனது தோளில் கை வைத்துத் தடுத்துவிட்டார். அவன் அதிர்வுடன் அவரைப் பார்த்தான். அவரோ தனது மனைவி பார்வதியிடம் விழிகளால் எதையோ சொல்லி கொண்டிருந்தார்.

மற்றவர்கள் சுதாரித்துக் கொண்டு அவர்கள் அருகில் வருவதற்குள் விஷ்ணுபிரஹான் ஆராதனா அருகில் வந்துவிட்டான். ஆராதனா அவனைக் கண்டு பயத்தில் ஓரடி பின்னால் நகர்ந்தாள். அவனோ அவளது பயத்தைக் கண்டு கொள்ளாது அவள் முன் மண்டியிட்டு அமர்ந்தான். அவனது செயலை கண்டு எல்லோரும் அதிர்ந்து நின்றிருந்தனர். குடும்பத்திலும் சரி , தொழில்முறையிலும் சரி அவனைப் பற்றி அறிந்தவர்கள் அவனின் இத்தகைய செயலை திகைப்புடன் பார்த்திருந்தனர். அவர்களை எல்லாம் விட ஆராதனா தான் அதிர்ச்சியில் நெஞ்சை பிடித்துக் கொண்டு நின்றிருந்தாள்.

விஷ்ணுபிரஹானோ அதையெல்லாம் கண்டு கொள்ளாது அவளை நிமிர்ந்து பார்த்து தனது வலக்கையை நீட்டினான். அதில் அவன் அவளுக்காக வாங்கிக் கொடுத்த தங்க கொலுசு இருந்தது.

"இதைப் போட மறந்துட்டியே பேபி..." என்றவன் அத்தனை பேர் முன்னிலையில் அவளது வலக்காலை பற்றித் தனது மடி மீது வைத்துக் கையிலிருந்த கொலுசை அவளது பாதத்தில் அணிவித்தான்.

அன்று அவன் அர்ச்சனா கால்கள் பற்றிக் கொலுசு அணிவித்த காட்சியினால் விளைந்த துக்கம் அவளுள் மெல்ல கரைவது போல் அவளுக்குத் தோன்றியது. ஆனாலும் அவனை நம்ப முடியாது அவள் விழியகல

பார்த்திருந்தாள். தன்னை விட அர்ச்சனா அவனுக்கு எந்தளவிற்கு முக்கியம் என்று அவளுக்குத் தெரியுமே!

இரண்டு கால்களிலும் கொலுசை அணிவித்தவன் அவளைப் பார்த்து புன்னகையுடனஂ , " இப்போ தான் நீ அழகாயிருக்கப் பேபி..." என்று கண்சிமிட்டியபடி கூறினான்...

உறைந்திருந்த எல்லோரும் உயிர் பெற்று அவர்கள் அருகில் வந்தனர். ஸ்ரீராமஂ , பரத் மணமேடையை விட்டு எழ முயற்சித்த போது அர்ஜூன் பார்வையால் அவர்களைத் தடுத்துவிட்டு தான் மட்டும் மகளை நோக்கி சென்றான். அவனுடன் துரையும் இணைந்து நடந்தான்.

அப்போது தான் விஷ்ணுபிரஹான் அந்தக் காரியத்தைச் செய்தான். யாருமே அதைச் சற்றும் எதிர்பார்க்கவில்லை. ஆமஂ , அவன் அவளுக்கும் அவனுக்குமான உறவை பகிரங்கமாக எல்லோருக்கும் அறிவித்துக் கொண்டிருந்தான்... ஆனால் வேறுவிதத்தில்... யாருமே தவறாக எண்ண முடியாத விதத்தில்... அது தான் விஷ்ணுபிரஹான்...!!!

"எல்லோருக்கும் வணக்கம்... எனது தங்கைகள் மற்றும் மச்சான்கள் திருமணத்திற்கு வருகை தந்திருக்கும் அனைவரையும் என் சார்பாகவுமஂ , என் மனைவி மிஸஸ். ஆராதனா விஷ்ணுபிரஹான் சார்பாகவும் வருக வருகவென வரவேற்கிறேன்." விஷ்ணுபிரஹான் வார்த்தையில் ஆராதனா விழிகள் கலங்க திகைப்புடன் அவனைப் பார்த்தாள்.

"அன்னைக்கு ஹாஸ்பிட்டலில் வச்சும் இப்படித்தானே பார்த்தே... எதுக்குடி இத்தனை சந்தேகமஂ ? உன் கணவன் நான் தானமே ? அப்போ மிஸஸ். விஷ்ணுபிரஹான் நீ தான்... நீ மட்டும் தான்." என்று அவள் காதருகில் குனிந்து ரகசியம் பேசியவனைக் கண்டு அவள் தான் பேயறைந்தது போலானாள்.

"விஷ்ணு..." அர்ஜூனின் கர்ஜனை குரலை கேட்டு கொஞ்சமும் அலட்டாது திரும்பி பார்த்த விஷ்ணுபிரஹானன் ,

"சொல்லுங்க மாமா..." என்று இலகுவான குரலில் கேட்க...

"யாருக்கு யாரு மாமாடா ?" அர்ஜூன் கோபத்துடன் அவனது சட்டையைப் பிடிக்க வர... அதைத் தடுத்த விஷ்ணுபிரஹானன் ,

"உங்க பொண்ணு என் மனைவின்னா... எனக்கு நீங்க மாமனார் தானே ?" ஒற்றைப் புருவத்தைக் கேலியாய் தூக்கியபடி பார்த்தவனைக் கண்டு எல்லோருக்குமே ஆத்திரம் தலைக்கேறியது.

"நீ பண்றது கொஞ்சமும் சரியில்லை... அதான் எங்க வீட்டு பொண்ணு வேண்டாம்ன்னு தூக்கி எறிஞ்சிட்டு போயிட்டியே... இப்போ என்ன புதுசா கதை பேசுற ?" துரை கோபத்தில் கண்டபடி கத்தினான்.

"புதுக் கதை இல்லை... எல்லாம் பழைய கதை தான்..." என்ற விஷ்ணுபிரஹானின் முகமும் , குரலும் இறுகி போனது...

"எதுடா பழைய கதை... ? உனக்கும் , பட்டுவுக்கும் டிவோர்ஸ் முடிந்து நீங்க ரெண்டு பேரும் பிரிஞ்சது உனக்கு ஞாபகம் இல்லையா ?" அர்ஜூன் கோபத்தில் கத்தினான்.

"அது யுஎஸ் கோர்ட்டில்... இந்திய கோர்ட் எங்களுக்கு இன்னமும் விவாகரத்து கொடுக்கவில்லை... அதனால் இந்திய சட்டப்படி இப்பவும் நாங்க கணவனன் , மனைவி தான். என் மனைவிக்கு இரண்டாம் முறையாக இன்னொருவனைக் கல்யாணம் பண்ணி வைப்பதை என்னால் பார்த்துக் கொண்டு சும்மாயிருக்க முடியாது. அதை மீறி நீங்க பண்ண நினைத்தால்..." என்றவனின் பார்வை திருமணத்திற்கு வருகை தந்திருந்த காவல்துறை ஆணையரை நோக்கி சென்றது.

"அங்கிள் , இதைச் சட்டப்படி தடுக்க எனக்கு உரிமை இருக்கிறது அல்லவா ?" என்று அவரைப் பார்த்து கேட்க...

அவர் எழுந்து அங்கு வந்தவர் அர்ஜூனை பார்த்தார் , " அர்ஜூன் , அவர் சொல்வதிலும் பாயிண்ட் இருக்கு. சட்டப்படி உங்க பொண்ணோட கணவர் அவர்... அவர் நினைச்சா உங்க ஒட்டுமொத்த குடும்பத்தையும் ஜெயிலில் தள்ள முடியும்... நாசுக்காகப் பேசி இதிலிருந்து வெளியில் வர பாருங்க..." என்று அறிவுறுத்திவிட்டுச் சென்றுவிட்டார்.

"சட்டமே என் பக்கம் மாமா..." என்று விஷ்ணுபிரஹான் கேலியாய் கூற...

"அந்தச் சட்டம் உன் இரண்டாவது திருமணத்தின் போது எங்கே போயிருந்தது... ?" அதே கேலியுடன் அர்ஜூன் கேட்க... அதைக் கேட்டு விஷ்ணுபிரஹான் முகம் ஒரு மாதிரியாய் மாறிப் போனது. ஆனாலும் கெத்தை விட்டு கொடுக்காது நிமிர்ந்து அர்ஜூனை பார்த்தவன் ,

"அப்போ நீங்க வந்து தடுத்திருக்க வேண்டியது தானே... ?" என்று கொஞ்சமும் அடங்காது கிண்டலாய் கூற... அதைக் கேட்டு எல்லோரின் இரத்த அழுத்தமும் ஏகத்துக்கும் எகிறியது.

சுந்தரி , சீதா , கனிஷ்கா மூவருக்கும் மட்டுமே சற்று நிம்மதியாக , சந்தோசமாக இருந்ததது , விஷ்ணுபிரஹானின் இந்த அவதாரம் கண்டு... ராகவன் மட்டும் மகனை கோபத்துடன் பார்த்திருந்தார்.

தந்தையின் பேச்சை கேட்காது தனது கழுத்தில் இருந்த மாலையைக் கழற்றி தூக்கி எறிந்தபடி கோபத்துடன் அங்கு வந்தான் சிவேஷ்கந்தா...

"எனக்கு அப்பவே தெரியும்... இந்த விசயம் இப்படித்தான் முடியும்ன்னு..." என்று அவன் ஆராதனாவை பார்த்து கோபத்துடன் கத்தினான்.

"ஹலோ பிரதர் , அங்கே என்ன பேச்சு... ? இங்கே என்னைப் பார்த்து பேசு.. ?" என்று விஷ்ணுபிரஹான்

தெனாவெட்டுடன் கூற...

"சரி , உன் கிட்டேயே கேட்கிறேன்... அன்னைக்கு நீயே அவளைக் கடத்திட்டு போனியா... ? இல்லை இவளே உன் கூட வந்தாளா... ?" என்று எகத்தாளத்துடன் சிவேஷ்கந்தா பேச... அதைக் கேட்டு ,

"டேய்..." என்றபடி ஸ்ரீராம் , பரத் கோபத்துடன் மணமேடையை விட்டு எழ முயல...

"உங்க ரெண்டு பேர் வாழ்க்கையாவது நல்லபடியா இருக்கணும்... சித்த நேரம் பேசாம இருங்கோடா..." அவந்திகா மகன்களைக் கண்டு கண்ணீர் குரலில் இறைஞ்ச...

"அதுக்குன்னு அவன் நம்ம பட்டுவை பார்த்துக் கேவலமா பேசுவான்... அதைப் பார்த்துட்டுச் சும்மாயிருக்கச் சொல்றீங்களா ?" பரத் கோபத்துடன் கத்தினான்...

"யாரோ ஒருத்தன் கூட இணைச்சுத் தப்பா பேசலையே... அவளோட ஆம்படையான் கூடத் தானே... பரவாயில்லை..." என்று அவந்திகா கூற...

ஸ்ரீராமும் , பரத்தும் ஆச்சரியமாய் அன்னையைப் பார்த்தனர். ஸ்ரீராம் தனது தவறை உணர்ந்தவனாய் அமைதியாய் இருக்க... ஆனால் பரத்தால் அப்படி அமைதியாக இருக்க முடியவில்லை... விஷ்ணுபிரஹான் மீதிருந்த கோபம் அவனுக்கு இன்னமும் நீங்கவில்லை. விஷ்ணுபிரஹானும் , ஆராதனா இடையில் பானக துரும்பாய் அர்ச்சனா இருக்கிறாளே...!!!

பரத் மணவறையை விட்டு எழுந்து அங்குச் சென்றான். அதைக் கண்டு ஸ்ரீராமும் எழுந்து சென்றான். பரத் கோபமாய் வருவதைக் கண்டு விஷ்ணுபிரஹான் எச்சரிக்கையுடன் அவனைப் பார்த்தான்.

“ உன்னால் தான்டா ஒவ்வொரு முறையும் என் தங்கை அசிங்கப்படுகிறாள்... உன்னை... ” என்றபடி பரத் அவனை அடிக்க வர...

“ என் தங்கைக்குக் கணவனாகப் போகிறாய் என்று பார்க்கிறேன்... இல்லையென்றால் நடப்பதே வேறு... ” என்று கர்ஜித்தபடி விஷ்ணுபிரஹான் பரத்தின் கையைப் பிடித்துத் தள்ளிவிட்டான். நிலை தடுமாறிய பரத்தை ஸ்ரீராம் தாங்கி கொண்டான்.

அன்று பரத்திடம் அடிவாங்கிய சிங்கம் இன்று சிலிர்த்துக் கொண்டு எதிர்த்து நின்றது. அன்றும் ஆராதனாவிற்காகத் தான் அவன் அடிவாங்கினான். இன்றும் அவளுக்காகத் தான் அவன் எதிர்த்து நிற்கின்றான். பரத்திடம் இருந்து அவனின் பார்வை சிவேஷ்கந்தாவிடம் வந்தது...

"என் மனைவியை நான் கடத்திட்டுப் போனால் தான் என்ன ? அவள் என் கூட வந்தால் தான் என்ன ? இதிலென்ன தப்பியிருக்கு ? உன் கூட வந்தா தான் தப்பு பிரதர்..." அதே எகத்தாளம் சிறிதும் குறையாது கூறினான் விஷ்ணுபிரஹான்.

"அப்போ அவள் கட்டியிருக்கும் புடவை , போட்டிருக்கும் நகைகள் எல்லாம்... ?" சிவேஷ்கந்தா கோபத்தில் சீறினான்.

"இது என்னடா கேள்வி ? என் தங்கைகள் கல்யாணத்துக்கு என் மனைவிக்கு நான் வாங்கிக் கொடுப்பதைக் கேள்வி கேட்க நீ யார் ?" கடைசி வரியை குறிப்பிடும் போது விஷ்ணுபிரஹானின் விழிகளில் கனல் தெறித்தது.

சிவஷ்கந்தாவின் ஆத்திரம் முழுவதும் ஆராதனா மீது திரும்பியது. அவளோ நடப்பதை புரிந்து கொள்ள முடியாது , திருவிழாவில் தொலைந்து போன குழந்தை மாதிரி திருதிருவென விழித்திருந்தாள்.

"ச்சீ... இத்தனை கேவலமான பெண்ணை நான் என் வாழ்நாளில் சந்தித்தது இல்லை... அவன் வாங்கிக் கொடுத்த புடவை , நகையைப் போட்டுக் கொண்டு நான் கட்ட போகும் தாலியை வாங்க தயாரான உன் பத்தினித்தனத்தை என்னவென்று சொல்வது... ?"

சிவேஷ்கந்தாவின் வார்த்தையில் அர்ஜூன் வெகுண்டு எழுந்தான்... அதற்குள் விஷ்ணுபிரஹான் ,

"என்னடா சொன்ன... ?" என்றபடி சிவேஷ்கந்தாவின் முகத்தில் ஓங்கி ஒரு குத்து விட்டான். அதைத் தாங்க முடியாது அவன் மூக்கில் இருந்து இரத்தம் வழிய தள்ளாடினான்.

"அவள் பத்தினி தான்டா... என்னோட பத்தினி... இன்னொரு தடவை அவளைப் பேசி பார்... உன் உடம்பில் உயிர் தங்காது..." என்ற விஷ்ணுபிரஹானின் கரங்கள் ஆராதனாவை தோளோடு சேர்த்து ஆறுதலாய் அணைத்துக் கொண்டது. அவனது கோபத்த , வெறுப்பைத் தாங்கியவளுக்கு அவனது இந்த ஆறுதல் அவளது துக்கத்தைக் கிளறவிடப் போதுமானதாய் இருந்தது.

"ச்சீ , கையை எடுங்கோ..." என்றபடி அவனது கையைத் தள்ளிவிட்டவள் அவனை விட்டு விலகி நின்றாள்...

"பேபி..." என்று அவன் அழைக்க...

"போதும்... திரும்பத் திரும்ப என்னைக் கேவலப்படுத்தி என்னை உயிரோட சாகடிக்காதீங்கோ... என்னை விட்டு போயிருங்கோ.. வேணும்ன்னா இந்திய கோர்ட்டிலும் டிவோர்ஸ் வாங்கிக்கலாம்." என்று இரு கரங்களைக் கூப்பிக் கோபமும , ஆதங்கமுமாய் வெடித்தவளை கண்டு விஷ்ணுபிரஹான் திகைத்துப் போனான்.

"பட்ட , சிவேஷ் சொல்றது உண்மைய ? நீ கட்டியிருக்கும் புடவ , நகைகள் யார் வாங்கிக் கொடுத்தது... ?" அர்ஜூன் உணர்வற்ற குரலில் கேட்க... அதைக் கேட்டு ஆராதனாவின் முகம் வெளுத்துப் போனது.

"அப்பா..."

"எனக்குப் பதில் மட்டும் தான் தேவை..."

"அவர் எடுத்துக் கொடுத்தது தான்..." தவறு செய்துவிட்ட சிறுகுழந்தை போல் தலையைக் குனிந்து கொண்டு அவள் கூற... மகளது வார்த்தையில் அர்ஜூன் உயிரோடு மரித்துப் போனான்.

"எங்க கிட்டயிருந்து ஏன் மறைச்ச... ?" அர்ஜூன் ஆதங்கத்துடன் கேட்டான்.

"அன்னைக்கு மாதிரி அவரை எதுவும் செஞ்சிருவீங்களோன்னு பயந்து..." என்றவளை விழிகள் பளபளக்க பார்த்தான் விஷ்ணுபிரஹான்... அர்ஜூனோ போதும் என்பது போல் கையை உயர்த்திச் சைகை செய்தான்.

"அவன் சொல்வது போல் நீ அவனுக்கு நல்ல மனைவியாகத் தான் நடந்திருக்க... ஆனா எங்க பொண்ணா... ???" மகளைக் கேள்வியாய் பார்த்தபடி நிறுத்தியவன் ,

"என் கை தவறி போன பட்டு திரும்ப வரணும்ன்னு உனக்காகத் தவமா தவமிருந்தேன். உன்னை உங்கம்மா பத்து மாசம் வயித்தில் சுமந்தாள்... ஆனா நான் உன்னை என் நெஞ்சில் சுமந்தேன். அதுக்கு நீ நல்ல கைம்மாறு பண்ணிட்ட... உனக்கு நல்லது நினைச்ச பெத்த தகப்பனை விட... உனக்குக் கெடுதல் நினைச்ச உன் கணவன் உனக்குப் பெருசா போயிட்டான் இல்லையா ?" என்று கேட்ட அர்ஜூன் மகளை வெறுமையாய் பார்த்தபடி அங்கிருந்து நகர்ந்தான்.

"மாப்ள , தப்பு பண்றடா... அவன் வேற பொண்ணைக் கல்யாணம் பண்ணி இருக்கான்... அப்போ நம்ம பொண்ணு வாழ்க்கை... ?" துரை நண்பனை தடுத்தான்.

"அது தெரிந்து தான் அவளிடம் அவனை வேண்டாம்ன்னு சொன்னேன்... அது தெரிந்திருந்தும் அவள் அவனை நம்மிடம் இருந்து காப்பாத்தி இருக்கிறாள்... இதிலிருந்தே தெரியலையா ? அவளுக்கு நம்மை விட அவன் தான் முக்கியம்ன்னு... இனி அவள் பாடு , அவன் பாடு...

நமக்கென்ன வந்தது..." என்று விட்டேற்றியாய் கூறியபடி நண்பனை கடந்து சென்றான் அர்ஜூன்.

"அப்பா..." என்றபடி ஓடிவந்து அவனது கால்களில் விழுந்து கதறியழுத மகளின் கண்ணீர் கூட அவனது மனதினை மாற்றவில்லை...

"பேபி..." என்றபடி விஷ்ணுபிரஹான் அவளது தோளை தொட... அவளோ அவனைத் தீப்பார்வை பார்த்தாள். இது எல்லாம் அவன் எதிர்பார்த்தது தானே... அவளது முறைப்பை கண்டு கொள்ளாது அவன் அவளைத் தூக்கி நிறுத்தி தன்னுடன் சேர்த்து அணைத்துக் கொண்டான். அவளோ அவனது பிடியில் இருந்து திமிற... அவனோ அவளை விட்டு இம்மியளவும் அசையவில்லை.

அர்ஜூன் நேரே ராகவனிடம் சென்ற , " உங்க மகள்களுடைய கல்யாணம் நடக்கணும்ன்னா முதலில் உங்க மகனை இங்கிருந்து போகச் சொல்லுங்க... அப்படியே உங்க மருமகளையும்..." என்று கடுமையுடன் கூற... ராகவன் கோபத்தோடு தனது மகனை உறுத்து விழித்தார். சுந்தரியோ செய்வதறியாது திகைத்து நின்றார்...

"நான் போய்விடுகிறேன்... இனி என் தங்கைகள் வாழ்க்கை பற்றி எனக்குக் கவலை இல்லை... ஏனெனில் ஒருவன் இந்த நாளுக்காகக் கிட்டத்தட்ட எட்டு வருசங்களா காத்துக்கிட்டு இருக்கான்... இதுக்காக அவன் போட்ட திட்டங்கள் தான் எத்தனை..." என்ற விஷ்ணுபிரஹானின் பார்வை ஸ்ரீராமை நோக்கி சென்றது.

அவனது பார்வையை உணர்ந்த ஸ்ரீராம் தனது பார்வையை வேறெங்கோ திருப்பிக் கொண்டான். குற்றமுள்ள நெஞ்சு குறுகுறுத்தது போலும். அவரவர் யோசனையில் இருந்தவர்கள் இவர்கள் இருவரையும் கவனிக்கவில்லை. கவனித்துப் பார்த்திருந்தால் புரிந்திருக்கும்...

"நிச்சயம் சீதாவின் வாழ்க்கை நல்லபடியாக அமையும். அதே போல் கனியின் வாழ்க்கையும்..." என்ற

விஷ்ணுபிரஹான் தனது சின்னத் தங்கையை நோக்கினான்.

"நீ அண்ணி கூடச் சேர்ந்து வாழ்றதுக்காக நான் எத்தகைய துன்பத்தையும் தாங்க தயார்..." மணமேடையில் அமர்ந்தபடி கனிஷ்கா முகம் மலர கூற... தங்கை தன்னிடம் பேசிவிட்ட சந்தோசத்தில் விஷ்ணுபிரஹான் விழிகள் பனிக்கத் தங்கையைப் பார்த்தா ,

"தேங்க்ஸ் கனி..." என்றான் சத்தமாக... அண்ணனா , தங்கை பாசப்பிணைப்பை கண்டு பரத் கணிஷ்காவை பார்த்து முறைத்தான். கனிஷ்கா மாதிரி ஏன் ஆராதனா இருக்கவில்லை ? என்று அவனுக்குக் குமைச்சலாக இருந்தது.

பின்பு அர்ஜூன் முன் வந்து நின்ற விஷ்ணுபிரஹானா , " என் தங்கைகளுக்காகத் தான் நான் இவ்வளவு நாள் அமைதி காத்தேன்... இனி பயமில்லை... மணவறையில் இருந்து அவர்களை எழ விடாது செய்யும் போதே தெரிந்து போனதா , அவர்கள் மீதான உங்க அக்கறை... அதற்கு நன்றி... ஆனா..." என்றவன் நிறுத்திவிட்டா ,

"உங்களுக்குமா , எனக்கும் ஒரு கணக்கு ஒண்ணு பாக்கி இருக்கு... இனி அதன் விளைவுகளைச் சந்திக்கத் தயாராயிருங்க..." என்று கோபத்துடன் கூறியவனின் மனக்கண்ணில் அன்று டோக்பூர் பாலைவனத்தில் ஆராதனாவிற்காகத் தான் அடிவாங்கிய நிகழ்வே வலம் வந்தது. ஆண்மகனாய் அவன் தோற்று கோழை போல் அடிவாங்கித் தொய்ந்து விழுந்தது அன்று தான்...

அடுத்தக் கணம் ஆராதனாவின் கரத்தை இறுக பற்றியவன் அவளை அழைத்துக் கொண்டு செல்ல... அவளோ ,

"விடுங்கோ , விடுங்கோன்னு சொல்றேன்ல..." என்று கதறி துடித்தாள்... அது எல்லாம் செவிடன் காதில் ஊதிய சங்கு போலானது.

"இப்போ விடப் போறேளா இல்லையா ?" அவள் பெருங்குரலெடுத்து கத்த... அதில் அவளைத் திரும்பி பார்த்தவன் ,

"ஆராதனா..." என்று சற்று குரலை உயர்த்தி அதட்டினான்...

"விட்டு விட்டால்... ? அந்தக் கேடுகெட்டவனுக்கு மனைவியாகப் போகிறாயா ? அது நான் உயிருள்ள வரை நடக்காது. எவ்வளவு தைரியம் இருந்தால் என் கண் முன்னாடியே அவன் கையால் தாலி வாங்கிக் கட்ட தயாராகுவ... உன்னை எல்லாம் சும்மா விடக் கூடாதுடி... உன்னை..." என்றவனது கை இன்னமும் அழுத்தமாய் அவளது கையை இறுக பற்றியது. அவள் வலி தாங்க முடியாது ' ஷ் ' என்று முனங்கினாள். அவளை ஒரு பார்வை பார்த்தபடி மணமேடையில் நின்றிருந்த சிவசுப்ரமணியத்தை நோக்கி விஷ்ணுபிரஹான் ,

"எந்தப் பிரச்சனையும் இல்லாது உங்க மகன் கல்யாணம் நடக்கணும்ன்னு தான் நேத்து ராத்திரி நான் உங்க கிட்ட வந்து பேசியது. ஆனா உங்க மகன் அதை எல்லாம் கெடுத்துட்டான். என் மனைவியைக் கேவலப்படுத்திய ஒருவனுடன் தொழிலில் பங்குதாரராய் இருக்க எனக்கு விருப்பம் இல்லை... அதனால் இன்றோடு உங்களது பங்குகளை என்னிடம் கொடுத்துவிட்டு விலகி கொள்ளுங்கள்..." என்க...

அதற்குக் கோபமாய்ப் பதிலடி கொடுக்க முற்பட்ட சிவேஷ்கந்தாவை விழிகளால் எரித்தபடி , " நீங்களாகக் கௌரவமாக விலகி கொண்டால் உங்களுக்கு நல்லது. நானாக லீகல் ஆக்சன் எடுத்தால்... ? அசிங்கப்படப் போவது நீங்க தான்..." என்றான்.

எல்லோரையும் பகைத்துக் கொண்டு விஷ்ணுபிரஹான் தன் மனைவியின் கையை இறுக பற்றியபடி மண்டபத்தை விட்டு வெளியேறினான்.

கார் நிறுத்துமிடம் வந்ததும் மனைவியைப் பார்த்தா , " காரிலேறு..." என்று கூறியவனைக் கண்டு அவள்

முறைத்தபடி அசையாது நின்றிருந்தாள்.

"சொன்ன பேச்சு கேளு ஆராதனா..." அவனுக்குக் கோபம் வந்தது.

"நான் உங்க மனைவின்னா... உங்க வீட்டில் இருக்கிறவங்க உங்களுக்கு யாரு ? அவங்க உங்க மனைவின்னா... அப்போ நான் உங்களுக்கு யாரு... ?" என்று கேட்டவளை சில நொடிகள் இமைக்காது பார்த்தவன் பின்பு வாய்விட்டுச் சிரித்தான்...

"இது தான் உன் கவலையா ? அப்போ நீ என் கூட நம் வீட்டுக்கு வருவதில் எந்தப் பிரச்சனையும் இல்லை... அப்படித்தானே ?" என்று அவன் சிரித்தபடி கேட்க...

"நான் உங்க வைப்பாட்டியா ? இல்லை அவங்களா... ?"

அவள் ' நான் உன் மனைவியா ? இல்லை அவளா ?' என்று கேட்டிருந்தால் அந்தக் கேள்வியின் அர்த்தமே வேறு... ஆனால் அவளது இந்தக் கேள்வி அனர்த்தமாக இருந்ததில் அவனது கோபம் எல்லையைக் கடந்தது.

"இங்கு யாரும் யாருக்கும் வைப்பாட்டி இல்லை... மனைவி மட்டும் தான்..." என்று ஆவேசமாய்ப் பொரிந்தவன் அவளின் பதிலை எதிர்பார்க்காது கார் கதவை திறந்து அவளை உள்ளே தள்ளி கதவை சாத்தியவன் மறுபக்கம் வந்து காரை எடுத்தான்.

ஆராதனாவோ திகைப்பில் அவனை விழிவிரிய பார்த்திருந்தாள்... இருவருமே அவனுக்கு மனைவியா ? அவளுக்கு அதன் அர்த்தம் அறிந்து உமட்டி கொண்டு வந்தது.

அவர்கள் இருவரும் கிளம்புவதற்கும் கெட்டிமேள சத்தம் மண்டபத்தில் ஒலிக்கவும் சரியாக இருந்தது. அந்தச் சத்தம் அவனைப் பாதிக்கவில்லை. ஆனால் அவளை மிகவும் பாதித்தது. தனது உறவுகளிடம் இருந்து அவன் தன்னைப் பிரித்து அழைத்துக் கொண்டு போவது அவளுக்கு அத்தனை வேதனையாக இருந்தது.

அடுத்த அரைமணி நேரத்தில் தனது வீட்டு வளாகத்தினுள் காரை செலுத்தியவன் வீட்டின் முகப்பின் முன் காரை நிறுத்திவிட்டு ஆராதனாவை கீழிறங்க சொன்னான்... அவள் பயத்துடன் கீழே இறங்கினாள்.

"வா..." அவன் சகஜமாக அழைத்தபடி அவளது கையைப் பற்றிக் கொண்டு வீட்டினுள் சென்றான்.

வரவேற்பறைக்கு அவளை அழைத்து வந்தவன் அங்கிருந்த சோபாவில் சாவகசமாக அமர்ந்தபடி தனது இரு கரங்களையும் தலைக்குப் பின்னால் கொண்டு சென்று நெட்டி முறித்தபடி ,

"இப்போது தான் நிம்மதியா இருக்கு... உன்னை இங்கு வரவழைக்க என்னலாமோ பிளான் பண்ணினேன்... இவ்வளவு ஏன் உன்னைக் கடத்தலாம்ன்னு கூட நினைச்சேன்..." என்று குறும்பாய் கூறியபடி கண்சிமிட்டியவனை வெறுமையாய் பார்த்தபடி அவள் நின்றிருந்தாள்.

"எது எப்படியோ ? என்னுடன் நீ இருப்பதே எனக்கு ரொம்பச் சந்தோசம்..." என்றவனைக் கண்டோ ,

"அன்று அர்ச்சனா இடையில் வந்தது போல்... இனிமேல் எந்த அஞ்சனா வர போகிறாளோ ? உங்களை நம்பி என் வாழ்க்கையைப் பணயம் வைக்க நான் தயாராக இல்லை..." என்று உறுதியுடன் கூறியவளை கண்டு அவனுக்குக் கோபம் வந்த போதும் அதை அடக்கி கொண்டவன் சோபாவில் இருந்து எழுந்து அவள் முன் வந்து நின்றான். தனது இரு கைகளையும் கட்டியபடி தனது முழு உயரத்திற்கும் நிமிர்ந்து நின்றவனைக் கண்டு அவளுக்கு உள்ளுக்குள் குளிரெடுத்தது.

"எப்படியும் நீங்க என்னைக் கேவலப்படுத்த தான் போறேள்... அப்போ மனைவியா ? இப்போ வைப்பாட்டியா ? அது தானே உங்க விருப்பமும் கூட..." அவளது பயம் சிறு தேம்பலாக வெளிப்பட்டது.

கழிவிரக்கத்தில் அவளது விழிகளில் கண்ணீர் கரை கட்டி நின்றது.

மனைவியின் கண்ணீர் , அவளது வார்த்தைகளின் அர்த்தம் அந்த ஆறடி ஆண்மகனை நிலைக்குலைய செய்யப் போதுமானதாய் இருந்தது. தனது கைகளை மேலும் இறுக்கி கட்டி கொண்டு தனது உள்ளத்து உணர்வுகளைக் கட்டுப்படுத்திக் கொண்டவன் அவளை இமைக்காது பார்த்தான்... அவனது பார்வையில் அவளது காதல் இதயம் அந்த நிலையிலும் உறைந்து போனது.

அவளது விழி வீச்சில் சுகமாய் மூழ்கி போகத் துடித்தவன் மெல்ல தன்னைச் சுதாரித்துக் கொண்டு , " ஒரு வருசமா , ரெண்டு வருசமா... நீயும் , நானும் கல்யாணம் பண்ணி ஐஞ்சு வருசங்களாகிருச்சு... இந்த ஐஞ்சு வருசத்தில் நான் கொஞ்சம் கூட உன்னைப் பாதிக்கலையா ? இதுக்கு எனக்குப் பதில் தெரிய வேண்டாமா ?" என்று ஒவ்வொரு வார்த்தைக்கும் அழுத்தம் கொடுத்து கேட்டவனைக் கண்டு அவள் திகைத்துப் போய்ப் பார்த்தாள்.

"நான் போன்னு சொன்னால் நீ போயிருவியா ?" என்றவனது கதிர்வீச்சு பார்வை அவளது உள்ளத்தை ஊடுருவி சென்று அவளது மனதில் இருப்பதைப் படிப்பது போலிருந்தது.

அன்றைய நாளின் துக்கம் அவளுள் எழுந்தது. அதே போல் அவளது காதலும்... அந்தக் காதலுக்காக அவள் கதறித் துடித்தது அவளுக்குத் தானே தெரியும்... எத்தனை அழகாக ஆரம்பித்த திருமண வாழ்க்கை... யார் கண்பட்டதோ அத்தனையும் ஒருநாள் முடிவுக்கு வந்தது. இல்லை இல்லை , அவள் கணவனான அவன் தான் முடித்து வைத்தான்.

"எனக்கு உன் மேல் எந்தவித இன்ட்ரெஸ்ட்டும் இல்லை... நான் அர்ச்சனாவை கல்யாணம் பண்ணிக்கப் போகிறேன். அதற்கு நீ தடையாக இருக்கிற... அதனால் நீயும் , நானும் மியூச்சுவல் அன்டர்ஸ்டாண்டிங்கில் பிரிந்து விடலாம்."

சில மாதங்களுக்கு முன் விஷ்ணுபிரஹான் கூறிய வார்த்தைகள் இன்னமும் அவளது காதுகளில் ஒலிக்கிறதே.

"போன்னு நீங்க சொன்னதா தான் எனக்கு ஞாபகம்..." மெல்லிய குரலில் கூறியவளுக்குத் துக்கம் தொண்டையை அடைத்தது.

"உனக்கு உண்மையில் என் மேல் காதல் இருந்தால் நீ என்னை விட்டு போயிருப்பியா ? என் சட்டையைப் பிடித்துக் கேள்வி கேட்டுச் சண்டை போட்டு இருப்பாய் தானே... இதிலிருந்தே தெரியுதே , நான் உனக்கு முக்கியம் இல்லைன்னு..."

முற்று பெற்ற வாழ்க்கைக்குத் தொடரும் போட நினைக்கும் மன்னவனின் வார்த்தைகளில் அவள் தான் செய்வதறியாது விக்கித்துப் போய் நின்றிருந்தாள்...!!!

திருத்தமாகும்...!!!

கணவனது வார்த்தைகளில் அப்படியே விக்கித்துப் போய் நின்றாள் ஆராதனா. அவள் மனதிலா காதல் இல்லை ? அவளது இதயம் முழுவதும் தளும்ப , தளும்ப அவன் மீதான காதல் இருக்கிறதே... அந்தக் காதல் தானே அவனிடத்தில் எந்தக் கேள்வியும் கேட்டு அவனைச் சங்கடப்படுத்த விடாது விலகி போகச் சொன்னது... அந்தக் காதல் தானே அவளது வேதனையை விழுங்கி கொண்டு அவனுடைய மகிழ்ச்சிக்கு வழி விடச் சொன்னது... அந்தக் காதல் தானே அவனுக்காக அவளையே மெழுகாகக் கரைய செய்தது. இதோ இப்போது கூட மனம் நிறையக் காதல் இருந்தும் அவனது சந்தோசம் , நிம்மதிக்காக அவள் அவனை விட்டு விலகி இருக்கிறாளே. அதைக் கூட உணராத மூடனாய் கணவன் பேசுவது கேட்டு அவளுக்கு ஆற்றாமையாக இருந்த அதே சமயம் கோபமும் கூடவே எழுந்தது.

"நான் எதுக்கு உங்க கிட்ட சண்டை போடணும் ?" வீம்பாகக் கேட்டவளை கண்டு விஷ்ணுபிரஹானின் உதடுகளில் புன்னகை எட்டிப்பார்த்தது.

"காதல் இருந்தால் உரிமை தானாக வருமாம்... அது ஏன் உனக்கு வரலை ?"

அவளால் தனது காதலை அவனிடத்தில் ஒத்து கொள்ளவும் முடியவில்லை... மறுக்கவும் முடியவில்லை. அவளது காதல் நெஞ்சம் இருதலை கொள்ளி எறும்பாய்த் தத்தளித்தது.

"உங்களிடத்தில் காதலும் இல்லை... கடமையும் இல்லை. எந்தக் கேள்வியும் கேட்கவும் விருப்பமும் இல்லை."

"ஓஹோ... அப்படி என்றால் சிவேஷ்கந்தாவிடம் கேள்வி கேட்க உரிமை இருக்கிறதோ ?" என்றவனை உறுத்து விழித்தவள் ,

"நிச்சயம் இருக்கிறது... அவர் எனக்காக , என் அப்பா பார்த்த மாப்பிள்ளை." என்றவளை கண்டு விழிகள் சிவக்க கோபத்துடன் அவளை அடிப்பதற்காகக் கையை

உயர்த்தியவன் முயன்று தன்னைக் கட்டுப்படுத்திக் கொண்டான்.

"அப்போ உனக்கு நான் யாரம்மா... ?" அவனது நக்கல் குரல் அவளது செவியைத் தீண்டி அவளது முகத்தைக் கோபத்தில் சிவக்க செய்தது.

"அவன் உன்னைக் கல்யாணம் பண்ணுவதைக் கை கட்டி கொண்டு வேடிக்கை பார்க்க நான் என்ன கையாலாகாதவன்னு நினைச்சியா ? அன்னைக்கு ராத்திரி மண்டபத்தில் உன்னிடம் பேசிவிட்டு போன அடுத்த நொடி சிவசுப்ரமணியம் முன்னாடி போய்த் தான் நின்னேன். அவர் கிட்ட எல்லா விசயத்தையும் தெளிவா சொல்லி அப்பவே இந்தக் கல்யாணத்தைத் தடுத்து நிறுத்திட்டேன்." என்றவனை அவள் அதிர்ச்சியாகப் பார்த்தாள்.

"கண்ணால் கபளீகரம் செய்வது என்பது இது தானா பேபி ?" என்றவனது வலக்கை நீண்டு அவளது இருவழிகளையும் சுற்றி காற்றில் வட்டம் போட்டது.

அவனைக் கோபமாய் முறைக்க முயன்றவளால் ஏனோ அவனது கண்களைப் பார்க்க முடியாது தனது விழிகளைத் தாழ்த்தி கொண்டாள். அவனது கூரிய பார்வை அவளது மனதினை தடதடக்கச் செய்தது. அவளுடன் இருந்த காலத்தில் அவன் அவளை ரசித்துப் பார்த்தது இல்லை. உயிரற்ற ஜட பொருளும் அவளும் ஒன்று தான் அவனுக்கு... இப்போது அவள் உயிருள்ள அழகு பாவையாய் அவனது கண்களுக்கு விருந்தளித்தாள். அவளை ரசிக்க அவன் மறக்கவில்லை. அவளது தலை முதல் கால் வரை அவனது பார்வை அவளை ரசனையுடன் தழுவி சென்றது.

"இப்படி வெட்கப்படுறதும் நல்லா தான் இருக்கு..." அதற்கும் அவன் கருத்து தெரிவிக்க... அவளுக்கு என்ன செய்வதா ? என்றே தெரியவில்லை.

"எப்படி இருந்தாலும் இன்னைக்கு உன்னுடைய கல்யாணம் சிவேஷுடன் நடந்திருக்காது." என்றவனை இப்போது

அவள் திகைப்பு குறைந்து பார்த்தாள். அவன் அளிக்கும் அதிர்ச்சிகள் அவளுக்குப் பழகி போய்விட்டது போலும்.

"பின்னே... என் மனைவிக்கு வேறு ஒருவன் தாலி கட்ட நான் விட்டுருவேனா ? அதெல்லாம் விடச் சிவசுப்ரமணியத்துக்கு என்னுடைய சகாயம் தொழிலில் தேவைப்படுகிறது. அதனால் நான் என்ன சொன்னாலும் மறுபேச்சுப் பேசாமல் அவர் கேட்பார். நீ இன்னமும் என் மனைவியாகத் தான் இருக்கிறாய் என்பதை அவருக்குத் தெளிவாக எடுத்துரைத்தேன். மீறினால் அவரது குடும்பம் ஜெயிலில் களி திங்க வேண்டிருக்கும் என்று கூறினேன். அதற்கு மேலும் உன்னை மருமகளாக்க அவர் என்ன முட்டாளா ? இன்னைக்கு நான் உன்னை என் மனைவின்னு அறிமுகப்படுத்தாவிட்டால் நீ எல்லோர் முன்பும் அசிங்கப்பட்டு இருப்பாய் ஆராதனா. ஆம் , சிவேஷ் தாலி கட்ட வேண்டியது உன் கழுத்தில் இல்லை. அவனது அத்தை மகள் கழுத்தில்... அப்படிப் பார்த்தால் நீ அசிங்கப்படாமல் உன்னை நான் காப்பாற்றி இருக்கிறேன் பேபி. இதுக்கே நீ எனக்கு நன்றி சொல்லணும்."

"அதான் என் அப்பாவிடம் என்னை அசிங்கப்படுத்தியாச்சே... இதைவிட வேறு என்ன வேணும் ? என் அப்பா என்னை வெறுத்து விட்டார். இனி காலத்துக்கும் அவர் என்னை மன்னிக்க மாட்டார்." அவளது கலங்கிய குரலில் , கண்ணீர் நிரம்பிய விழிகளில் அவன் மிகவும் அடிபட்டுப் போனான்.

எல்லாம் சரியாக , அவன் திட்டமிட்டபடி தான் நடந்தது. ஆனால் அர்ஜூன் மகளை வெறுத்தது , அதுவும் தன் பொருட்டு வெறுத்தது , அவனே சற்றும் எதிர்பார்க்காதது. அவளது நிலைக்காக அவன் மிகவும் வருந்தினான்.

"ஐயம் சாரி பேபி... இப்படி நடக்கும் என்று நான் எதிர்பார்க்கலை." அவன் உண்மையாய் அவளிடத்தில் மன்னிப்பு வேண்டினான்.

"பொய் சொல்லாதீங்க... என்னைக் கேவலப்படுத்துறது தான் உங்களுக்குப் பிடித்தமானதாயிற்றே."

"நான் அப்படி எல்லாம் நினைப்பேனா ? உன்னைக் கேவலப்படுத்தினால் அது என்னைக் கேவலப்படுத்துவது மாதிரி பேபி."

"பொய்... பொய்க்காரன்... ஏமாற்றுக்காரன்... ஐ ஹேட் யூ." என்று கோபத்தில் கத்தியவளை நோக்கி அவன் நெருங்கி வர முற்பட்ட போது... அவள் அங்கிருந்து வெளியில் ஓடி சென்றாள்.

ஆராதனாவுக்குத் தனிமை கொடுக்க எண்ணியவனாய் விஷ்ணுபிரஹான் தளர்ந்து போய் அங்கிருந்த சோபாவில் அமர்ந்தான். ஆராதனா விசயத்தில் தான் செய்த பிழையை எவ்வாறு சரி செய்யப் போகிறோம் ? என்று அவனுக்கு மிகுந்த கவலையாக இருந்தது. ஒரு காலத்தில் ஒரு பெண்ணவளை காதலித்தவன் தான் அவன்... ஆனால் இன்று மனைவியான பெண்ணவளிடத்தில் தனது காதலை சொல்ல முடியாது அவன் தவித்தான்.

ஆம் , காதல் தான்... அன்று பாலைவன மண்ணில் தனது செயலில் விளைந்த தாக்கத்தில் நினைவிழந்து மயங்கி சரிந்த ஆராதனாவிடம் அவன் முதன்முறையாக மானசீகமாய்க் காதலாய் மண்டியிட்டான். அதுவரை அவள் வாய் வார்த்தையால் தன்னைக் காதலிப்பதை ஒத்துக் கொள்ள வேண்டும் என்று நினைத்தவன் , முதன்முறையாகத் தனது மனதில் ஆராதனா சிம்மாசனமிட்டு வீற்றிருப்பதை அன்று அவன் உணர்ந்தான். அதன் பின்பு மருத்துவமனையில் அவனைச் சந்திக்க வந்த ஆராதனா அவளது கழுத்தில் இருந்த அவன் கட்டிய தாலியை கழற்றி கொடுத்த அந்தக் கணம் அவன் உயிரோடு மரித்துப் போனான். அவனும் , அவளும் பிரிந்த பின்பும் , அவளுக்கு வேறு ஒருவனை மணமகனாக முடிவெடுத்த பின்பும் அவன் கட்டிய தாலி அவளது கழுத்தில் இருப்பதை அறிந்து கொண்ட பின்பு தானே அவன் தனது முடிவில் உறுதியாக நின்றது. அவளது மனதில் இடம் பிடிக்க வேண்டும் என்பதற்காகத் தானே அவளைக் கடத்தி செல்ல அவன் முடிவு எடுத்தது. அவனுக்கும் , அவளுக்குமான உறவை பறைச்சாற்றிய

தாலியை அவள் கழற்றி கொடுத்த அந்தக் கணம் தான் அவளை எக்காரணம் கொண்டும் தன்னால் விட்டு கொடுக்க முடியாது என்பதை அவன் உணர்ந்தான்.

"ஆராதனா , எப்போது உனது மனதை திறப்பாய் ?" அவன் ஆதங்கத்துடன் முணுமுணுத்துக் கொண்டான்.

ஆராதனா தாலியை கழட்டாது அதற்கு முக்கியத்துவம் கொடுத்த போதே அவனுக்குத் தெரிந்து போனது... அவன் அவளுக்கு எத்தனை முக்கியம் என்று... அதை அவள் வாயால் கேட்க நினைத்து அவன் அத்தனை பிரம்மபிரயத்தனம் செய்கிறான். ஆனால் அவள் அசைந்து கொடுப்பதாய் தெரியவில்லை. ஏனெனில் அவன் அவளுக்கு இழைத்த துரோகம் அப்படிப்பட்டது. அதை அவனது மனம் ஏற்றுக் கொண்டாலும் , ஆண் என்னும் தன்னகங்காரம் அவனை அவளிடத்தில் மண்டியிட செய்யவில்லை. அவள் அவளாகவே அவனைத் தேடி வர வேண்டும் என்று அவனது மனம் எதிர்பார்க்கிறது.

"என் மீதான உன் காதலை நீ உன் வாயால் சொல்ல வேண்டும். அதற்காகத் தான் நான் காத்திருக்கிறேன்." என்றவனுக்குத் தெரியவில்லை , அது மிகவும் கடினமான காரியம் என்று... பெண்ணவளிடத்தில் எந்தளவிற்குக் காதல் இருக்கிறதோ , அதைவிட அதிகமாய்க் காயம் இருக்கிறது என்பதை அவன் உணரவில்லை.

ஆராதனா காதலை சொல்ல வேண்டும் என்று நினைத்தவனால் அவள் மீதான தன் காதலை அவளிடம் சொல்ல தைரியம் வரவில்லை. கடந்த காலக் காயம் அவன் வாயை கட்டி போட்டது. காதல் என்ற பெயரில் மனைவியை இழக்க அவன் தயாராக இல்லை.

விஷ்ணுபிரஹானிடம் இருந்து தப்பித்தோம் , பிழைத்தோம் என்று வெளியில் ஓடி வந்த ஆராதனா அங்கிருந்த தோட்டத்தில் தஞ்சம் புகுந்தாள். அடுத்து என்ன செய்வது ? என்று தெரியாது அவள் விழித்தாள். பாசமான தந்தையைப் பிரிந்த துக்கம் ஒரு புறம் , காதல் கணவனிடத்தில் தனது காதலின் கௌரவத்திற்காகப்

போராடும் துயரம் மறுபுறம் என்று எல்லாம் அவளை வாட்டி வதைத்தது.

அவள் காதலை சொல்ல வேண்டும் என்று அவன் எதிர்பார்த்து இருக்க... அவளோ அவன் மனம் அறியாது தனது காதலை வாய் திறக்க மறுத்தாள். காதல் என்ற பெயரில் மீண்டும் தான் கோமாளியாக முடியாது என்பதில் அவள் உறுதியாக இருந்தாள்.

இருவரது சொல்லப்படாத காதல் உணர்த்தப்படுமோ ? இல்லை உணரப்படுமோ ? அது காலம் கைகளில்..!

****

"அப்போ நாங்க கிளம்பறோம்..." சுந்தரி இருகரங்கள் குவித்து அர்ஜூன் மற்றும் அவந்திகாவிடம் வேண்டினார்.

மகள்கள் இருவரையும் நல்லபடியாக அவர்களது புகுந்த வீட்டுக்கு அழைத்து வந்தாயிற்று. மணமக்கள் பால் , பழம் உண்டு முடித்து விட்டனர். அதற்கு மேல் சுந்தரியால் அங்கிருக்க முடியவில்லை. என்ன இருந்தாலும் விஷ்ணுபிரஹான் அவரது மகன்... ஆராதனா அவரது மருமகள்... அவர்களுக்கு இடம் இல்லாத வீட்டில் தான் மட்டும் இருப்பதற்கு அவருக்கு மனம் ஒப்பவில்லை. மகள்களது வாழ்க்கையை விட மகனது தன்மானம் அவருக்கு முக்கியமாகப் பட்டது.

அர்ஜூன் ஒன்றும் பேசாது வெறுமனே தலையசைக்க... அவந்திகா தான் வாய் திறந்தாள்.

"நைட் சாப்பிட்டுட்டு போகலாமே..."

"இல்லை , வேண்டாம் சம்பந்தி... வீட்டில் போட்டது போட்டபடி வந்திட்டேன். இனி போய்த் தான் எல்லா வேலைகளையும் பார்க்கணும்." என்ற சுந்தரி அவந்திகாவின் கைகளைப் பிடித்துக் கொண்டா ,

"என் மகள்கள் ஏதேனும் தவறு செய்தால் கண்டிக்காம , அன்பா எடுத்து சொல்லுங்கோ. கண்டிப்பா அவா ரெண்டு

பேரும் கேட்பா. ரொம்பப் பாசமா வளர்த்த பொண்ணுங்க. பத்திரமா பார்த்துக்கோங்கோ." என்று சுந்தரி கண்கலங்கினார்.

"அதெல்லாம் கவலைப்படாதீங்கோ. என் பொண்ணு மாதிரி பார்த்துக்கிறேன் மன்னி." என்ற அவந்திகா ஒரு நொடி அமைதியாக இருந்தவள் பின்பு சுந்தரியை பார்த்தா ,

"எங்க பட்டுவை..." என்றவளுக்கு மேலே பேச முடியாது கண் கலங்கியது.

"அவந்திகா..." அர்ஜூன் மனைவியைக் கண்டித்தான்.

"நீங்க சித்த சும்மாயிருங்கோ." அவந்திகாவின் பேச்சிற்கு மறுபேச்சு பேசுவானோ ? நம் அர்ஜூன். அவன் அப்படியே அமைதியாகி போனான்.

"பட்டுவை நீங்க தான் பத்திரமா பார்த்துக்கணும். ஒரு பொண்ணாய் என் மகளோட மனசு நேக்கு புரியுது. ஆனா உங்க மகன் தான் என்ன நினைக்கிறார்ன்னு நேக்கு புரிய மாட்டேங்குது. அவளை வேண்டாம்ன்னு ஒதுக்கி வச்சவரும் அவர் தான். இப்போ வேணும்ன்னு அழைச்சிண்டு போயிருக்கிறதும் அவர் தான். அதுக்காக நான் வருத்தப்படலை. இனியாவது பட்டுவோட வாழ்க்கை நல்லாயிருந்தால் போதும். அது தான் நேக்கு வேணும். நீங்க அவளைப் பத்திரமா பார்த்துக்குவேள்ன்னு நேக்கு நம்பிக்கை இருக்கு."

மனைவியின் பேச்சினை கேட்ட அர்ஜூன் யோசனையாய் புருவத்தை உயர்த்தினான்.

"ஆரு உறவு முறையில் எனக்கு மாட்டு பொண்ணா இருந்தாலும் அவள் நேக்கு மகள் தான். அவளை நான் நன்னா பார்த்துக்குவேன். நீங்க கவலைப்படாதீங்கோ."

சுந்தரி அவந்திகாவை சமாதானப்படுத்தி விட்டு கணவனை அழைத்துக் கொண்டு சென்றார். செல்லும் முன் மகள்களுக்கு அறிவுரை கூறவும் மறக்கவில்லை. சீதாவை

பற்றி அவருக்கு நன்கு தெரியும். அவரது பயம் எல்லாம் அவரது சின்ன மகளைப் பற்றித் தான்.

"இங்கே பார் கனி , நம்ம ஆத்துல பேசுற மாதிரி இங்கேயும் எடுத்தெறிஞ்சு பேசிறாதே. மாப்பிள்ளை ரொம்பக் கோவக்காரரா இருப்பார் போலிருக்கு. பார்த்து அனுசரிச்சு நடந்துக்கோ." என்று அறிவுரை கூற...

"ம் , பார்க்கலாம் , பார்க்கலாம்..." என்று விட்டேற்றியாகக் கூறிய கனிஷ்காவை பார்த்தா ,

"உன்னைப் பகவான் தான் காப்பாத்தணும்..." என்றுவிட்டு அவர் சென்றுவிட்டார்.

சுந்தரி சென்றதும் அர்ஜூன் அவந்திகாவை தீப்பார்வை பார்த்தான். அதில் அவள் உள்ளுக்குள் நடுநடுங்கி போனாள். ஆனாலும் வெளியில் காட்டி கொள்ளாது அமைதியாக நின்றாள்.

"நீ பேசியது எல்லாம் சரி தான். ஆனால் நீ அவனுடைய இரண்டாவது கல்யாணத்தை மறந்துட்டு பேசுற." அதைக் கேட்டு அவந்திகா விக்கித்துப் போனாள். இதை எப்படி அவள் மறந்தாள் ? எல்லாத் தாயை போலவும் தனது மகளது வாழ்க்கை நன்றாக இருந்தால் போதும் என்று நினைத்து விட்டாளோ ? அதற்கு இடையூறாக இருக்கும் விசயத்தை அவள் எப்படி மறந்தாள் ?

"இனி தான் உன் மகளுக்கு விசப்பரீட்சை காத்திருக்கிறது." என்ற அர்ஜூன் மனைவியின் முகத்தைப் பாராது அங்கிருந்து அகன்று விட்டான். அவந்திகா செய்வது அறியாது திகைத்திருந்தாள்.

சீதா , கனிஷ்கா என்ன சொல்வதா ? என்று தெரியாது அமைதி காத்தனர். தங்களது சகோதரனை பற்றி முழுவதும் தெரிந்தவர்கள் தான். ஆனால் அர்ச்சனா விசயம் மட்டும் அவர்களுக்குப் புரியாத புதிராக இருக்கிறது.

காரிலேறிய சுந்தரி நேரே காரை மகனது வீட்டை நோக்கி விடச் சொன்னார். கேள்வியாய் பார்த்த ராகவனை ,

"நம்மளோட அனுசரணை இப்போது ஆருவுக்குத் தேவைப்படுது. உங்க மகன் கிட்ட அவள் தனியா மாட்டிண்டு என்ன பாடு படுறாளோ ? அதனால் நான் அவா ரெண்டு பேரு கூட இருக்கிறதா முடிவு பண்ணிருக்கேன்." என்று சுந்தரி தீர்மானமாகக் கூற... ஆராதனாவிற்காக ராகவன் தனது மகனது வீட்டிற்குச் செல்ல சம்மதித்தார்.

****

வெகுநேரம் கழித்தும் ஆராதனா வீட்டினுள் வரவில்லை என்றதும் விஷ்ணுபிரஹான் அவளைத் தேடி வெளியில் வந்தான். அவள் கல்மேடையில் அமர்ந்தபடி இன்னமும் யோசனையில் ஆழ்ந்திருந்தாள். அவள் அருகில் சென்று அமர்ந்தவன் அவளது காதருகில் குனிந்தான் ,

"ஹாய் பேபி..." என்று கிசுகிசுக்க... அதில் பதறி போய்த் திரும்பி பார்த்தவள் அவனது அருகாமையில் இன்னமும் பதறி போய்ப் பதட்டத்துடன் எழுந்து நிற்க முயற்சித்தாள். அவளது கைப்பற்றி அவளை அமர வைத்தவன் ,

"ஹேய் ரிலாக்ஸ் பேபி... பப்ளிக்ல உன்னை ஒண்ணும் செய்ய மாட்டேன். அதுவும் உன் விருப்பம் இல்லாமல்..." என்க... அவள் அவனை முறைத்து பார்த்தாள்.

"இப்படியே அலங்காரத்துடன் எத்தனை நேரம் இருப்பதாய் உத்தேசம் ?"

"அதில் உங்களுக்கு என்ன கஷ்டம் ?" அவள் முறைப்புடன் கேட்க...

"கஷ்டமா ? பேபி , பேபி..." இரு கைகளையும் தலைக்கு மேல் செலுத்தி கழுத்துக்குப் பின்னால் அடை கொடுத்துக் கல்மேடையில் சாய்ந்தபடி அவளை அணு அணுவாய் புன்னகையுடன் ரசித்துப் பார்த்தவன் ,

"நீ இப்படி அலங்காரத்துடன் இருப்பது தான் எனக்கும் பிடிச்சியிருக்கு." என்று கிறக்க குரலில் கூறியவனைக் கண்டு அவள் திடுக்கிட்டு விழிக்க...

"என்னென்னமோ தோணுது... ஆனா எதுவும் செய்ய முடியாதபடி என் நிலை இருக்கு." என்று சலித்துக் கொண்டே எழுந்தவன் அவளது கைப்பற்றி எழுப்பி அவளை வீட்டினுள் அழைத்துச் சென்றான். அவளோ பலியாடு போல் அவன் பின்னால் சென்றாள்.

மேலே மாடியில் இருந்த அவனது அறைக்குப் பக்கத்து அறைக்கு அவளை அழைத்துச் சென்றவன் , " இது தான் உன்னுடைய ரூம்..." என்று அவளுக்குச் சுட்டிக்காட்ட... அவனது இந்தச் செயல் , சொல் அனைத்தும் அவளுள் பழைய நினைவுகளைக் கிளறிவிட... அவள் ஆத்திரத்துடன் அவனை ஏறிட்டாள்... அவனோ அவளது கோபம் எதனால் ? என்று தெரியாது அவளைப் புரியாது பார்த்தான்.

"அப்பவும் இப்படித்தான் செஞ்சேள்... இப்பவும் இப்படித்தான் செய்றேள்... நீங்க கொஞ்சமும் மாறலை. மாறவும் மாட்டீங்கோ... அதை , நேக்கு நன்னா தெரியும். ஆனா இந்த நாடகம் எதற்காக... ? அப்போ ஐஞ்சு வருசம் கழிச்சு கழட்டி விட்ட மாதிரி... இப்போ எத்தனை நாளில் என்னைக் கழட்டி விடலாம்ன்னு ப்ளான் பண்ணியிருக்கேள்."

அவளது வார்த்தைகளில் அவனது விழிகளில் மின்னல் வெட்டியது. அவளது ஆழ்மனதினை புரிந்து கொண்டவனாய் அவனது உதடுகளில் மந்தகாச புன்னகை தவழ்ந்தது. அவனால் நம்பவும் முடியவில்லை... நம்பாமல் இருக்கவும் முடியவில்லை. அவளது மனதின் எதிர்பார்ப்பு அறிந்து அவன் சந்தோச வானில் பறந்தான்.

ஒரு காலத்தில் அவன் ஒரு பெண்ணைக் காதலித்தவன் தான்... ஆனால் இன்று அவன் இந்தப் பெண்ணவளிடம் உணரும் உணர்வு வித்தியசமானவை... அவளை அள்ளி எடுத்து முகரச் சொல்லி அவனது தாபம் கொண்ட மனது துடிக்கிறதே... அய்யய்யோ , இந்த உணர்வை அவனால் கட்டுப்படுத்த முடியவில்லையே! அதைச் செய்தால் அவள் தன்னைத் தவறாக நினைப்பாளோ ? பெண்ணவள் மனம் காயப்படுமோ ? என்று குழம்பியவனாய் அவன் தன்

தலைமுடியை கோதி தன்னை ஆசுவாசப்படுத்திக் கொள்ள முயன்றான்... முயற்சி மட்டுமே... ஆனால் முடியவில்லை.

"அய்யய்யயோ ஆனந்தமே!
நெஞ்சுக்குள்ளே ஆரம்பமே!
நூறு கோடி வானவில்
மாறி மாறி சேருதே!
காதல் போடும் தூறலில்
தேகம் மூழ்கி போகுதே!
ஏதோ ஒரு ஆச!
வா வா கதை பேச
அய்யய்யோ..." என்று இமான் அவனது நெஞ்சில் இன்னிசை இசைத்தார்.

மனைவியின் மனதினை உணர்ந்தவனாய் , " டூ யூ லவ் மீ பேபி ?" என்று அழுத்தமாய்க் கேட்டபடி ஆராதனாவை உற்று நோக்கிய விஷ்ணுபிரஹானின் விழிகளில் விசமம் வழிந்தது.

"இத்தனை நாள் கழித்து இதைக் கேட்க உங்களுக்கு வெட்கமாய் இல்லை." என்று அவள் கோபத்துடன் சீறினாள். அவளது காயப்பட்ட மனம் கோபமாய்ச் சீறியது.

எப்போதும் அவன் இந்தக் கேள்வியைக் கேட்டால் ' இல்லை ' என்று ஒரேடியாக மறுக்கும் ஆராதனா இன்று அதற்கு வேறு பதிலை அளித்திருக்கிறாள். அதை நினைத்து அவனது உதடுகளில் புன்னகை அரும்பியது.

"நிச்சயம் வெட்கமாய் இல்லை..." என்று மறுத்தவனைக் கண்டு அவள் உறுத்து விழிக்க...

"இனி நான் இந்தக் கேள்வியை உன்னிடம் கேட்க மாட்டேன் பேபி." என்று அவன் சமாதானமாய்க் கூற...

அவள் சிறு நிம்மதியுடன் அவனைப் பார்த்தாள். மனம் நிறையக் காதலை வைத்துக் கொண்டு பொய் கூறும் அவலம் இனி அவளுக்கு இல்லையே. அவளது மனதினை

படித்தவனாய் அவன் அட்டகாசமாய் வாய்விட்டுச் சிரித்தான்.

"பேபி , பேபி... இன்னும் நீ சின்னப் பிள்ளையாவே இருக்கிறியே. இனி இந்தக் கேள்வியை நான் கேட்பதாய் இல்லை. ஏனென்றால்... ?" என்று அவளை அழுத்தமாய்ப் பார்த்தவன் ,

"இனி நீ என்னை மட்டும் தான் காதலித்தாக வேண்டும். என் கூட மட்டும் தான் வாழ்ந்தாக வேண்டும். வேறு ஆப்சன் உனக்கு இல்லை." என்றான் அவன் கர்வமாய்...

"என்ன பிளாக்மெயில் பண்றீங்களா ? நீங்க என்ன கற்காலத்திலா வாழ்றீங்க ? பெண்களைப் பலவந்தப்படுத்துவதற்கு... இது கலிகாலம் , கணினி காலம். பெண்கள் ஒண்ணும் ஆண்களின் அடிமை கிடையாது. கிட்டே வந்தீங்க , கொன்னுருவேன் கொன்னு..." என்றவளை கூர்ந்து பார்த்தவன் ,

"என்னைப் பார்த்தால் உனக்கு எப்படித் தெரியுது ? பெண்ணைப் பலவந்தப்படுத்திக் காரியம் சாதிக்கும் வில்லன் மாதிரியா ?"

தன் மேனி மீது உரசியபடி நின்று கொண்டிருந்தவனை ஏறிட்டு பார்த்தவளுக்கு அவன் வில்லன் இல்லை என்றே தோன்றியது. என்ன தான் அவன் அவளுக்குத் துரோகம் இழைத்த போதும் இன்னமும் அவளது மனம் அவனைக் கதாநாயகனாகத் தான் கொண்டாடுகிறது. அவள் அவனைக் காதலிப்பதனால் வந்த எண்ணமா இது... ? இல்லையே , அவளுடன் அவன் வாழ்ந்த போது அவன் காட்டிய கண்ணியம் அப்படிப்பட்டது! அதனால் வந்த எண்ணமே இது!

' முட்டாள் ஆரா... அவன் உன்னை அழகாய் தவிர்த்து வந்ததை அவனது கண்ணியம் என்று நீ கொண்டாடுகிறாயா ? நீ இப்படி இருப்பதால் தான் அவன் உன்னை இந்தப்பாடு படுத்துகிறான். ' அவளது மனசாட்சி அவளிடம் கோபம் கொண்டு கத்தியது.

"நீயே வருவ பேபி... பிரஹானஂ , நான் உங்களைக் காதலிக்கிறேன். நீங்க இல்லாம என்னால் வாழ முடியாதுன்னு நீயே உன் வாயால் சொல்லுவ... அதுவரை என் விரல் நுனி கூட உன் மேல் படாது." என்றவனஂ ,

"இப்போதாவது என்னை நம்புகிறாயா ? நான் வில்லனில்லை ஹீரோன்னு..." என்று கேட்க...

"மண்ணாங்கட்டி... நான் உங்களைத் தேடி வருவேனா... ? நெவர்... அது ஒருபோதும் நடக்காது."

அவள் கோபத்தில் தலையைச் சிலுப்பிக் கொண்டாள். அவள் வேகமாய்த் தலையைச் சிலுப்பிக் கொண்டதில் அவளது முகத்தின் மீது விழுந்த முடிக்கற்றைகளை மென்மையாக ஒதுக்கிவிட்டவனின் முகமும் மென்மையைத் தத்தெடுத்தது.

"நடக்கும்... நடக்காமல் நானும் விட மாட்டேன். அதுக்கு நீயுமஂ , நானும் பிரிஞ்சியிருந்தால் சரிவராது. அதனால் காதலோ , ஊடலோ நாம் இருவரும் ஒரே வீட்டில் சேர்ந்து இருந்து கொண்டாடலாம். என்ன , ஓகேவா பேபி ?" என்று கண்சிமிட்டி கேட்டவனைக் கண்டு கட்டி வைத்து உதைக்க வேண்டும் போலிருந்தது அவளுக்கு...

"ஊடல் தான் நமக்குள்ளே... காதல் இல்லை..." என்று அவள் வெடுக்கென்று கூற...

"உனக்கு ஊடலஂ , எனக்குக் காதல்... ஓகே." என்றபடி அவன் அவளது முகம் நோக்கி குனிய... அவள் சிறிதும் அச்சமின்றி அவனைப் பார்த்து முறைத்து கொண்டிருந்தாள். அதைக் கண்டவன் அவளிடமஂ ,

"கொஞ்சமாவது வெட்கப்படு பேபி... நீ இப்படி முறைக்கிறதை பார்த்தால் எனக்கு என்னென்னவோ தோணுதே..." கொஞ்சலுமஂ , கெஞ்சலுமாய்க் கூறிய விஷ்ணுபிரஹான் அவளுக்குப் புதிது.

அவனது புதுப் பரிமாணத்தைக் கண்டு முதலில் திகைத்த ஆராதனாவின் முகத்தில் மெல்ல அவளையும் அறியாது

புன்னகை வந்து ஒட்டி கொண்டது. அதைத் திருப்தியுடன் பார்த்தவன் ,

"ரை...ட்..." என்று அழுத்தி கூறியபடி மீண்டும் அவளது முகம் நோக்கி குனிய...

அவள் வியப்பும் , தவிப்புமாய் அவனைப் பார்த்தாள். அவன் அருகில் வந்தால் அவள் உருகி கரைய போவது உறுதி... அதே போல் அவள் அவனிடம் அவமானப்படப் போவதும் உறுதி. தனது இயலாமையைக் குறித்து அவளது விழிகளில் கண்ணீர் கரை கட்டி நின்றது.

"ச்சு... எதுக்கு இந்த அழுகை... ? நான் சொன்னால்... சொன்ன சொல் காப்பாற்றுவேன்." என்று அவளது விழிகளைப் பார்த்துத் தீர்க்கமாய்க் கூறியவன் , தான் பற்றியிருந்த அவளது கையில் அழுத்தம் கொடுத்து அவளை ஆறுதல்படுத்திவிட்டு அவளை விட்டு விலகி சென்றான்.

அவள் தான் அவனது அருகாமையில் இருந்து வெளிவர முடியாது தவித்து நின்றாள். அவனை அணைத்துக் கொண்டு அவனது நெஞ்சில் சாய்ந்து தனது துயர் எல்லாம் நீங்க ஓவென்று கதறியழ வேண்டும் போலிருந்தது அவளுக்கு... காயப்படுத்தியவனிடமே காயத்திற்கான மருந்தை தேடுவது விந்தையிலும் விந்தை! அவளது கண்ணில் கரை கட்டியிருந்த கண்ணீர் கரை தாண்டி உடைப்பெடுத்து கீழே விழுந்து வழிந்தோடியது.

ஏற்கெனவே கானல் நீரை நம்பி ஏமாந்து போன முட்டாள் மனது மீண்டும் மீண்டும் கானல் நீரை நம்பி ஏமாந்து போகின்றதே! என்று அவளுக்குத் தன் மீதே கோபம் வந்தது.

திருத்தமாகும்...!!!

"பேபி..." கணவனது குரலில் தனது அழுத விழிகளை அவசரமாகத் துடைத்துக் கொண்ட ஆராதனா வேகமாய் வாயிலை நோக்கி திரும்பி பார்த்தாள்.

"சாரி ஃபார் த டிஸ்டர்பென்ஸ்... உன்னை இங்கே எதுக்கு அழைச்சிட்டு வந்தேன்னு சொல்லவே இல்லையே ?" என்ற விஷ்ணுபிரஹான் அறைக்குள் நுழைந்து அங்கிருந்த அலமாரியை திறந்தா ,

"இதில் உனக்கு வேண்டிய டிரெஸ் இருக்கு. எனக்குத் தெரிஞ்சதை வாங்கி வச்சிருக்கேன். வேறு எதுவும் வேணும்ன்னா சொல்லு... வாங்கிட்டு வரலாம்."

"எனக்கு எதுவும் தேவையில்லை." அவள் வெடுக்கென்று கூற...

"ஏன் ?"

"நான் இங்கே இருக்கப் போறதில்லை."

"அப்போ எங்கே இருக்கப் போவதாய் உத்தேசம் ?" அவனது வார்த்தைகளில் கேலி தெறித்தது.

"எங்கப்பா , நீங்க எல்லாம் இல்லைன்னா என்னால் தனிச்சு வாழ முடியாதா ? எனக்கு என்னுடைய படிப்பு இருக்கு. அது காலம் முழுவதும் எனக்குக் கை கொடுக்கும்." என்று நிமிர்ந்து நின்றவளை கண்டு அவன் மனதிற்குள் மெச்சினான்.

"குட் , இப்படித்தான் பெண்கள் தலை நிமிர்ந்து நிற்கணும்." என்று அவன் வாய் வார்த்தையிலும் அவளைப் பாராட்டினான்.

"உங்க பாராட்டு எனக்குத் தேவையில்லை." என்றவள் அவனது முகம் பாராது வாயிலை நோக்கி நடக்க...

விஷ்ணுபிரஹான் அவளுக்கு முன் வாயிலை நோக்கி சென்றவன் அறை கதவை தாழிட்டபடி அவளை உற்றுப் பார்த்தான். அவள் மனதிற்குள் பயந்தாலும் வெளியில் விறைப்பாக நின்றாள்.

"நீ மிஸஸ். விஷ்ணுபிரஹான்... என்னுடைய மனைவி. அதனால் நீ இங்கே இருந்து தான் ஆகணும்."

"நான் மட்டும் தான் உங்க மனைவியா ?" அவள் வேண்டுமென்றே குத்தலாகக் கேட்க... அதற்குப் பதில் கூறாது அவளை ஆழ்ந்து பார்த்தவன் ,

"இந்த வீட்டை விட்டு வெளியில் ஒரு அடி எடுத்து வைத்து தான் பாரேன்." உணர்ச்சி துடைத்த குரலில் கூற...

அவனது இறுகிய முகமும் , அவனது உணர்வற்ற குரலும் அவளுள் கிலியை ஏற்படுத்தியது. அவள் பயத்தில் அங்கிருந்த சுவற்றைப் பற்றுகோளாக பற்றிக் கொண்டு அதில் சாய்ந்து நின்று அவனை அச்சத்தோடு பார்த்தாள்.

"நீ நல்லவிதமா நடந்துக்கிட்டால் எந்தப் பிரச்சனையும் இல்லை. நானும் வில்லன் இல்லை. நான் உன்னுடைய ஹீரோம்மா." என்று குறும்பாய் கண்சிமிட்டி கூறியவன் கதவை திறந்து கொண்டு வெளியேறினான்.

விஷ்ணுபிரஹான் சென்றதும் ஆராதனா ஓய்ந்து போனவளாய் அப்படியே தரையில் சரிந்து அமர்ந்தாள். எவ்வளவு நேரம் அப்படியே அமர்ந்திருந்தாளோ...

"ஆரும்மா..." சுந்தரியின் அழைப்பில் அவள் அடித்துபிடித்துக் கொண்டு எழுந்தாள். அதில் சற்று நிலை தடுமாறியவளின் தோள் பற்றி நேராக நிற்க செய்த விஷ்ணுபிரஹான் ,

"பார்த்தூ , கவனம்..." என்று மனைவியை எச்சரிக்க...

"உன் கிட்ட தான்டா அவள் கவனமா இருக்கணும்." மகனை கடிந்தபடி மருமகளைத் தனது கைகளில் தாங்கி கொண்டார் சுந்தரி.

"மாமி..." என்று கூவியபடி அவரை அணைத்துக் கொண்டு அழுதாள் ஆராதனா.

"அழாதே ஆரு... அதான் நான் வந்துட்டேனே." என்று மருமகள் முதுகினை ஆதரவாய் வருடியபடி சுந்தரி ஆறுதல் கூறினார். அவரது வார்த்தையில் ஆராதனா திகைப்பாய் அவரை நிமிர்ந்து பார்த்தாள்.

"இந்தத் தடியன் கிட்ட உன்னைத் தனியா விட்டுண்டு என்னால் நிம்மதியா இருக்க முடியாது. அதான் நான் இங்கேயே வந்துட்டேன்." என்று மருமகளிடம் கூறியவர் மகனிடமஃ ,

"நானுமஃ , உன் தோப்பனாரும் இனி இங்கே தான் இருக்கப் போறோம். நீ ஆரு கிட்ட ஏதாவது வம்பு பண்ணின... நாங்க சும்மாயிருக்க மாட்டோம்." என்க... அவனோ சந்தோசத்தில் பேச வார்த்தை வராது அன்னையைப் புன்னகையுடன் பார்த்திருந்தான்.

"இவர் இங்கே அழைச்சிண்டு வந்ததில் இருந்து என் கிட்ட வம்பு தான் பண்ணிண்டு இருக்கார் மாமி." ஆராதனா சிறுமியாய் மாறி மாமியாரிடம் புகார் வாசித்தாள்.

"இனி அவன் உன் கிட்ட வம்பு பண்ணட்டும். ரெண்டு அடி கொடுக்கிறேன். நீ கவலைப்படாதே." சுந்தரி அவளை அணைத்துக் கொள்ள...

மாமியாரஃ , மருமகள் அன்பு பிணைப்பை சிறிது பொறாமையுடன் பார்த்துக் கொண்டிருந்தான் விஷ்ணுபிரஹான்.

"எனக்கு இங்கே இருக்க ஒரு மாதிரியாய் இருக்கு. நான் இங்கிருந்து போகணும். அதுக்கு அவர் கிட்ட பெர்மிசன் வாங்கிக் கொடுங்கோ மாமி."

மனைவியின் வார்த்தையில் அவனது முகம் இறுகி போனது. அவன் யோசனையாய் தனது அன்னையைப் பார்த்தான்.

"இங்கே பார் ஆரு... நான் உன் கூட இருக்கும் போது உனக்கு என்ன பயம் ? விஷ்ணு உன்னை ஒண்ணும் பண்ண மாட்டான்." என்று அவளைத் தேற்றியவர் ,

"பாரு , முகம் எல்லாம் வாடி போய்க் கிடக்கு. போய் முகத்தைக் கழுவிட்டு வந்து வேறு புடவை மாத்திக்கோ." என்க...

"அதைத் தான்ம்மா நானும் சொல்லிக்கிட்டு இருக்கேன்." என்றான் அவன் சலிப்பான குரலில்... மகனை முறைத்த சுந்தரி ஆராதனாவிடம் ,

"நீ போம்மா..." என்று ஆராதனாவை குளியலறைக்கு அனுப்பி வைத்தவர் பின்பு மகன் புறம் திரும்பினார்.

அன்னையின் தீர்க்கமான பார்வையில் அதுவரை இருந்த விளையாட்டுத்தனத்தைக் கைவிட்டவனாய் தனது முழு உயரத்திற்கும் நிமிர்ந்து நின்றான் விஷ்ணுபிரஹான்.

"விஷ்ணு , இது விளையாட்டு இல்லை... வாழ்க்கை. ஏற்கெனவே நீ ஆரு வாழ்க்கையில் விளையாடியது போதும். இனியும் அவள் வாழ்க்கையில் விளையாடாதே."

"ம்மா..." மேலே பேச போனவனைக் கையமர்த்தித் தடுத்தவர் ,

"அவள் என்ன ஜட பொருள்ன்னு நினைச்சியா ? ரத்தமும் , சதையும் உள்ள உயிருள்ள மனுசிடா. நீ எத்தனை தரம் தான் அவள் மனசை நோகடிப்ப ?" என்று உக்கிரமாகக் கேட்க...

"அப்படி எல்லாம் இல்லைம்மா..." தன் மனதில் உள்ளதை அவரிடம் எப்படிச் சொல்வது என்று தெரியாது அவன் பரிதவிப்புடன் அவரைப் பார்த்தான்.

"நோக்குக் கல்யாணமாகும் போதே அர்ச்சனா இறந்த காலம்ங்கிறது நோக்கு புரிஞ்சிருக்கணும். ஆனா அதை உணராம நீ..." என்றவரது நா தழுதழுத்தது. பின்பு தன்னை நிதானப்படுத்திக் கொண்டவர் ,

"இப்போ நீயே ஆருவை உன் கூட அழைச்சிண்டு வந்திருக்க. நேக்கு ரொம்பச் சந்தோசம். ஆனா நீ மறுபடியும் அர்ச்சனா பின்னாடி போக மாட்டேன்னு என்ன நிச்சயம் ?"

இப்போது விஸ்ணுபிரஹானுக்கும் , அர்ச்சனாவுக்கும் இடையே என்ன உறவு இருக்கிறது ? என்பது பற்றி ஆராயச் சுந்தரி விரும்பவில்லை. மாறாக மகன் , மருமகளது வாழ்க்கை நல்லபடியாக அமைய வேண்டும் என்பதே அவரது வேண்டுதலாக இருந்தது.

"ஆராதனா மட்டும் தான் என் மனைவி... இது உங்க மேல சத்தியம்."

தனது வலக்கையைத் தாயின் தலை மீது வைத்த விஷ்ணுபிரஹான் அடுத்த நொடி விருட்டென்று அங்கிருந்து சென்றுவிட்டான். அதைக் கேட்டு சுந்தரி நிம்மதி அடைந்தார். மகன் மீது அவருக்கு நிரம்ப நம்பிக்கை இருந்தது. அதற்குள் ஆராதனா குளியலறையில் இருந்து வெளியில் வந்தாள்.

"புடவையை மாத்திண்டு வாம்மா ஆரு... சாப்பிட போகலாம்." சுந்தரி சாதாரணமாகச் சொல்ல... அவளால் தான் அங்கு ஒட்ட முடியவில்லை.

"மாமி , நேக்கு இங்கே இருக்கப் பிடிக்கலை."

"இந்த மாமி மேல் நோக்கு நம்பிக்கை இருக்கானோ ?" அதற்கு அவள் மௌனமாய்த் தலையாட்டினாள்.

"அப்போ எனக்காக நீ இங்கே இரு." என்றவர் அவளது முகத்தை வாஞ்சையுடன் பற்றி ,

"விஷ்ணு ஒண்ணும் கெட்டவன் இல்லை ஆரு." என்க...

"அவர் கெட்டவர்ன்னு நான் சொல்லலையே மாமி..." அவளது வார்த்தையில் அவரது முகத்தில் வெளிச்சம் பரவியது.

"ஆனா நேக்கு மட்டும் அவர் கெட்டவரா போயிட்டாரே." என்றவளது முகம் வேதனையில் கசங்கியது.

"இப்போ என் வாழ்க்கையை நினைச்சு நேக்குப் பயமாயிருக்கு மாமி."

மெத்த படித்த பெணண் , அழகு நிரம்பப் பெற்ற பெண் அவள்... அவள் இப்படிக் கலங்குவது கண்டு சுந்தரியின் விழிகளும் கலங்கியது.

"இந்தத் தடவை மாமியை நம்பு ஆரு." மகனது சத்தியத்தின் மீது நம்பிக்கை கொண்டவராய் அவர் கூற... பெரியவர்களை எதிர்த்து வாதிட்டு மறுத்து பேசி பழக்கம் இல்லாததால் ஆராதனா அமைதி காத்தாள்.

"சாப்பிட வா..." என்ற சுந்தரி அறையை விட்டு வெளியேற... ஆராதனா அறை கதவை தாளிட்டு விட்டு புடவையை மாற்ற துவங்கினாள்.

வரவேற்பறைக்கு வந்த சுந்தரி அங்குக் கண்ட காட்சியில் கண் கலங்கி போனார். ராகவன் சோபாவில் அமர்ந்திருக்க... விஷ்ணுபிரஹான் அவரது காலடியில் தரையில் அமர்ந்திருந்தான். அவனது விழிகள் தந்தையின் முகத்தினை ஏக்கத்துடன் பார்த்திருந்தது. ராகவனோ மகனை பார்க்காது வேறு எங்கோ பார்த்திருந்தார்.

"விஷ்ணு..." தாயின் அழைப்பில் திரும்பியவன் முகம் வாட
,

"அப்பாவை என் கூடப் பேச சொல்லுங்கம்மா..." என்று சிறு பிள்ளையாய்ச் சிணுங்கினான்.

"ஏன்னா..." சுந்தரி கணவனை அழைக்க...

"உனக்காக , ஆருவுக்காக மட்டும் தான் நான் இங்கே வந்திருக்கேன்." ராகவன் ஒவ்வொரு வார்த்தையும் மெல்ல கூறினாலும் உறுதியாகக் கூறினார்.

"அப்போ எனக்காக இல்லையா ?" விஷ்ணுபிரஹான் அடிப்பட்ட குரலில் வினவினான்.

"இல்லை..." நிர்தாட்சண்யமாய் மறுத்தார் ராகவன். அதைக் கேட்டு அவன் வருந்தினான்.

"விஷ்ணா , அதான் அப்பா உன்னைத் தேடி வந்துட்டாரே. இன்னும் என்ன வருத்தம் ? போய்ச் சாப்பாடு ரெடியாகிருச்சான்னு பாரு."

"நீங்க சொல்றதும் சரி தான்ம்மா..." என்றபடி எழுந்தவன் ,

"சாப்பாடு ரெடியா இருக்கும்மா. ஏற்கெனவே செய்யச் சொல்லிட்டு தான் போனேன்." என்று கூற...

"அப்போ சரி... நீ போய் ஆருவை கூட்டிட்டு வா..." என்றவர் கணவரை நோக்கி வந்தார்.

அன்னையின் நோக்கம் புரிந்து அவன் தந்தையைத் தனது கைகளில் அள்ளியெடுத்து சக்கர நாற்காலியில் அமர வைத்தான். அவர்கள் இங்கு வந்த போதும் அவன் தான் சக்கர நாற்காலியை தவிர்த்து தந்தையைத் தனது கைகளில் தூக்கி கொண்டு வந்து சோபாவில் அமர வைத்தான். அதை நினைத்து சுந்தரியின் விழிகள் பனித்தது.

"அப்பாவை டைனிங் டேபிளுக்குக் கூட்டிட்டு போங்கம்மா... நான் ஆராதனாவை கூட்டிட்டு வர்றேன்." என்றவன் மாடியை நோக்கி செல்ல... ராகவன் தனது மகனை இமைக்க மறந்து பார்த்திருந்தார்.

"விஷ்ணு..." அவரது உதடுகள் மகனது பெயரை நெகிழ்வாய் உச்சரித்தது.

"நம்ம மகன் விஷ்ணு தான். இனி அவன் தப்பு பண்ண மாட்டான்னா..." என்ற மனைவியை அவர் கேள்வியாய் பார்க்க...

"ஏன்னு கேட்கப்படாது... தாய் அறியாத சூல் இருக்கானோ ?" மிடுக்காய் பதில் அளித்த சுந்தரி உணவு மேசையை நோக்கி சக்கர நாற்காலியை தள்ளி கொண்டு சென்றார். மனைவி கூறியதை கேட்டு ராகவன் உதடுகளில் புன்னகை தவழ்ந்தது.

ஆராதனா இருந்த அறையின் முன் போய் நின்ற விஷ்ணுபிரஹான் மூடியிருந்த கதவை தட்டினான். ஆராதனா கதவை திறந்ததும் அவளை ஏற இறங்க பார்த்தவன் அடுத்த நொடி அவளை உள்ளே தள்ளி சென்று கதவை சாத்தினான். அவள் திகைப்புடன் அவனைப் பார்த்தபடி சுவற்றில் சாய்ந்தாள். அவன் வாங்கி வைத்திருந்த புடவையில் தேவதையாய் காட்சியளித்த மனைவியை அவனது விழிகள் ரசனையுடன் விழுங்கி கொண்டது.

"வாங்கினப்போ கூட உனக்கு இத்தனை பொருத்தமா இருக்கும்ன்னு நினைக்கலை. இப்போ நேரில் பார்க்கிறப்போ உனக்குக் கச்சிதமா பொருந்தியிருக்கு." என்றவனது பார்வை கணவன் பார்வையாக அவளை ரசனையுடன் மொய்க்க...

அதில் லஜ்ஜையுற்றவள் வெடுக்கென்று அவனுக்கு முதுகு காட்டி நின்றாள். அவன் அவளுக்குப் புடவை கச்சிதமாகப் பொருந்தியிருக்கிறது என்று கூற... அவளோ அவன் இரவிக்கையைக் கூறுவதாக எண்ணி சங்கடத்துடன் திரும்பி நின்றாள். அவளது மனம் படபடக்க , முகம் கோபத்திலும் , வெட்கத்திலும் சிவக்க , அவள் தனது முகத்தைச் சுவற்றில் புதைத்து கொண்டாள்.

"ஹேய் , நான் உன்னை ஒண்ணும் பண்ண மாட்டேன்டி. திரும்பி நில்லு..." அவள் திரும்பி நின்றது ஏனென்று அவனுக்குப் புரியவில்லை.

"ம்ஹூம் , நீங்க வெளியில் போங்கோ." அவள் தனது லஜ்ஜையை மறைக்க எண்ணி சற்றுக் கோபம் போல் கூற...

"எதுக்கு... ?" அவன் புரியாது புருவத்தை உயர்த்தினான்.

"ப்ளீஸ்..." என்றவளை புரியாது சில நொடி பார்த்திருந்தவனுக்கு அவளது செயல் மெல்ல புரிய ஆரம்பித்தது. அதில் ஆணவன் மனம் ஆனந்தத்தில் இறக்கை கட்டி பறந்தது.

முன் பக்கமாய் அவள் புறம் சரிந்து அவளது காதோரம் அவன் குனிந்தான். அவனது செயலில் அவள் மிரட்சியுற்றவளாய் தலையை மட்டும் திருப்பிப் பார்த்தவள் அவனது அருகாமையில் நிலை தடுமாறி அவன் மீதே சாய்ந்தாள். அவளது இரு தோள்களையும் தாபத்தோடு பற்றிக் கொண்டவன் அவளது அழகில் மனம் மயங்கியவனாய் அவளது முகம் நோக்கி குனிய... அவளது விழிகள் இரண்டும் அச்சத்தில் சாசர் போன்று விரிந்தது. அவளது அச்சத்தில் சற்று நிதானித்தவன் அவளது நெற்றியில் மென்மையாய் முத்தமிட்டா ,

"தேங்க்ஸ் பேபி..." என்றான்... அவள் ' எதற்கா ?' என்று பார்வையால் வினவ...

"என்னோட அப்பா , அம்மாவை இங்கே வரவழைச்சதுக்கு... என்னோட தங்க வச்சதுக்கு. உனக்காகத் தான் அவங்க இங்கே வந்திருக்காங்க. அதுக்காகத் தான்..."

"மகன் மேல் அவ்வளவு நம்பிக்கை..." அவள் அலட்சியமாக இதழ்களைச் சுளித்தாள். சுளித்த அவளது இதழ்களைக் கபளீகரம் செய்ய ஆசை கொண்ட மனதினை அடக்கி கொண்டவன் அவளை ஆசையாகப் பார்த்தான்.

"அந்த நம்பிக்கையை இப்போ கூட நீ பார்த்துக்கிட்டு தானே இருக்க. தாலி கட்டிய உரிமையுள்ள மனைவி , அதுவும் என் கைகளுக்குள் , என் அணைப்பில்... அப்பவும் நான் கண்ணியம் காத்துக்கிட்டு இருக்கேனே. இந்த நம்பிக்கை ஒண்ணு போதாதா ?" என்று கூறி அவன் கண்சிமிட்ட... அப்போது தான் அவளுக்குத் தான் இருக்கும் நிலை நினைவுக்கு வந்தது. உடனே பதறியவளாய் அவள் அவனிடம் இருந்து விலகி நின்றாள். அவளது பதற்றத்தை ஒரு நொடி உற்று நோக்கியவன் பிறகா ,

"அம்மா சாப்பிட கூப்பிட்டாங்க..." என்று அவளை அழைத்துக் கொண்டு அறையை விட்டு வெளியேறினான்.

****

திருமணம் முடிந்து வீட்டிற்கு வந்த சேதுபதி உடனே மகனுக்கு அழைத்தார். அவரது அழைப்பை ஏற்ற விஜய் , " சொல்லுங்கப்பா..." என்க... அவர் மகனிடம் திருமண மண்டபத்தில் நடந்ததை ஒன்று விடாது கூறினார்.

"அப்போ அர்ச்சனா வாழ்க்கை... ?" விஜயின் குரலில் மட்டும் இல்லாது அவனது விழிகளிலும் சினமேறியது.

"அதை நீ தான் முடிவு பண்ணணும்." சேதுபதி மகனுக்கு லேசாக விசயத்தை உணர்த்த... அவனோ அதைத் தவறாகப் புரிந்து கொண்டான்.

"அர்ச்சனாவுக்கு யாரும் இல்லைன்னு அவன் நினைச்சுட்டானா ? அவளுக்கு நான் இருக்கேன். அர்ச்சனாவை விட்டுட்டு வேறு பெண்ணோட அவன் வாழ நான் அனுமதிப்பேனா ? நாளைக்கே நான் கிளம்பி இந்தியா வர்றேன்." என்றவன் அழைப்பை துண்டிக்க...

"நன் என்ன அர்த்தத்தில் சொன்னேன். இவன் என்ன அர்த்தத்தில் புரிஞ்சிக்கிட்டான்... விஜய் , உன் அவசர குணத்தால் தான் நீ எல்லாம் இழந்து தவிக்கிறாய்." மகனது வார்த்தையில் அந்தத் தகப்பன் தலையில் கை வைத்துக் கொண்டு அமர்ந்தார்.

அதே நேரம் சிவேஷ்கந்தா தனது வீட்டில் தனது உடைமைகளைப் பெட்டியில் எடுத்துக் கொண்டு வரவேற்பறைக்கு வந்தான். கேள்வியாய் பார்த்த தந்தையை நோக்கி ,

"நான் கொழும்பு போகிறேன்." என்றான் முறுக்கி கொண்டு... தொழில் மீதான மகனது அக்கறை கண்டு சிவசுப்ரமணியத்தால் பூரிக்க முடியவில்லை... மாறாக அவர் அவன் மீது கோபம் கொண்டார்.

"கூடவே உன் பொண்டாட்டியையும் கூட்டிட்டு போ..." என்று காட்டமாய் அவர் கூற...

"அவள் எதுக்கு... ?" அவன் வேண்டா வெறுப்பாய் தனது மனைவியைப் பார்த்தான். நல்ல அழகி தான் , படித்தவள்

தான்... அவனது அந்தஸ்திற்கு ஏற்றவள் தான். ஆனால் அவனது மனதிற்குப் பிடித்தவள் இல்லையே. அதனால் அவனுக்கு அவள் மீது வெறுப்பு தோன்றியது.

"இன்னைக்குக் கல்யாணம் முடிச்சவன் கேட்கிற கேள்வியாடா இது ?" என்று மகனை முறைத்த சிவசுப்ரமணியம் மருமகளை அழைத்து ,

"நீ உன் பெட்டியை எடுத்துட்டு வாம்மா... ரெண்டு பேரும் சேர்ந்து ஹனிமூன் போயிட்டு வாங்க..." என்க...

"அவளுக்கு இன்னமும் டிக்கெட் , விசா எடுக்கலை." தந்தையின் கோபம் அறிந்து சிவேஷ்கந்தா சமாளிக்கப் பார்த்தான்.

"அதெல்லாம் ஆன்லைனில் எடுத்தாச்சு." என்ற சிவசுப்ரமணியம் வேறு பேச்சு பேசவில்லை.

வேறுவழியின்றிச் சிவேஷ்கந்தா தனது மனைவியை அழைத்துக் கொண்டு ஹனிமூன் பயணமாகக் கொழும்பு நோக்கி பயணமானான்.

மாலை மயங்கி இரவும் கவிழ்ந்தது. மருமகள் இருவருக்கும் தன்னால் இயன்ற அறிவுரை கூறி அனுப்பி வைத்தாள் அவந்திகா. சீதா ஸ்ரீராமின் அறைக்குள் நுழைந்தாள். காதல் கொண்டு மணந்த திருமணமாக இருந்தாலும் இடையில் ஏற்பட்ட குழப்பம் இருவரின் மகிழ்ச்சியைச் சுத்தமாய்த் துடைத்திருந்தது.

"வா சீதா..." ஸ்ரீராம் அழைக்க... அவள் ஒன்றும் பேசாது பால் சொம்பை அருகில் இருந்த மேசை மீது வைத்து விட்டு அவன் அருகில் வந்து அமைதியாக நின்றாள்.

"உட்கார் சீதா..." அவள் அமர்ந்ததும் ஸ்ரீராம் ,

"இப்போ இருக்கும் மனநிலையில் நம் வாழ்க்கையை வாழ எனக்கு விருப்பம் இல்லை. நீ என்ன நினைக்கிற ?" என்று கேட்க... அவனை நிமிர்ந்து பார்த்த சீதா ,

"அண்ணா ஏன் உங்களைப் பார்த்து அப்படிச் சொன்னான் ? உங்களுக்கும் , அண்ணா வாழ்க்கை இப்படியானதுக்கும் ஏதும் சம்பந்தம் இருக்கா ? அப்படி என்ன திட்டம் போட்டீங்க ?"

சீதாவின் அடுக்கடுக்கான கேள்விகளில் அவனுக்கு வியர்த்து வழிந்தது. என்னவென்று பதில் சொல்வதை ? அவனது காதல் கை கூட அவளது அண்ணனின் காதலை அழித்தது பற்றிக் கூறவா முடியும் ? அப்படிக் கூறினால் அவனது காதல் அல்லவா அழிந்துவிடும். அவன் மெல்லவும் முடியாதை , விழுங்கவும் முடியாது தவித்தான்.

அதே நேரம் பரத்தின் அறைக்குள் நுழைந்த கனிஷ்கா பால் சொம்பை கொண்டு வந்து அங்கிருந்த மேசை மீது டொமென்று வைத்தாள். அதைக் கண்டு கோபம் கொண்ட பரத் ,

"என்னடி , ரொம்பத்தான் திமிர் காட்டுற..." என்றவனது கரம் அவனையும் அறியாது அவனது கன்னத்தைத் தடவி பார்த்தது. அதைப் பார்த்த கனிஷ்கா அன்றைய நாளின் நினைவில் களுக்கென்று சிரித்தாள். அதில் பரத்தின் ஆத்திரம் இன்னமும் அதிகரித்தது.

"தனியா என் கிட்ட , என் ரூமில் மாட்டிக்கிட்டு இருக்கும் போதே உனக்கு இவ்வளவு தெனாவெட்டா ? உன்னை என்ன செய்கிறேன்னு பாரு." என்றவன் அவளை நெருங்க முயல... அவனது எண்ணம் அறிந்து முதலில் திகைத்த கனிஷ்கா பின்பு தன்னைச் சுதாரித்துக் கொண்டு வீலென்று அலறினாள்.

"ஏய் பிசாசே , குட்டி சாத்தானே... எதுக்குடி இப்படிக் கத்துற ?" பரத் அவளைச் சத்தம் போட்டு அதட்டினான்.

மனைவிக்கு என்ன பதில் சொல்வதை ? என்று தெரியாது விழித்துக் கொண்டிருந்த ஸ்ரீராமின் காதில் கனிஷ்காவின் அலறல் சத்தம் விழுந்தது.

"சீதா , இது கனி சத்தம் மாதிரி இருக்கே ?"

"ஆமாங்க..." சீதா தனது கேள்விகளை மறந்தவளாய் கதவை நோக்கி செல்ல... நிம்மதி பெருமூச்சு விட்டபடி ஸ்ரீராம் அவளைப் பின்தொடர்ந்தான்.

"பரத் , பரத் , பரத்..." அர்ஜூன் , அவந்திகா , ஸ்ரீராம் மூவரும் மாறி மாறி பரத்தின் அறை கதவை தட்டினர்.

"மானத்தை வாங்கிட்ட..." பரத் மனைவியை முறைத்துக் கொண்டே போய்க் கதவை திறந்தான்.

"கனி எதுக்குடா கத்தினாள் ?" எல்லோரும் ஒரே மாதிரியான கேள்வி கேட்க...

"அது வந்து..." பரத் வெட்கப்படுவது போல் நடித்தான். கனிஷ்கா உள்ளே இருந்து வெளியில் எட்டிப்பார்க்கவில்லை.

என்ன நடந்து இருக்கும் ? என்று எல்லோரும் தானாக ஊகித்துக் கொண்டு அசட்டு புன்னகையுடன் அங்கிருந்து அகன்றனர். மீண்டும் கதவை சாற்றிவிட்டு வந்த பரத் ,

"இப்போ எப்படித் தப்பிக்கிறன்னு பார்க்கிறேன் ?" என்று தெனாவெட்டாய் கூற... கனிஷ்கா மீண்டும் கத்த வாயெடுக்கப் போனாள். அதில் பயந்து போன பரத் தனது இரு கரங்களையும் தலைக்கு மேல் கூப்பியபடி ,

"அம்மா தாயே , நீ நிம்மதியா படுத்து தூங்கு..." என்றவன் பால்கனியில் போய்த் தஞ்சம் புகுந்தான்.

படுக்கையில் படுத்த கனிஷ்கா கண்ணில் இருந்து கண்ணீர் வழிந்தோடியது. அன்று பரத் பேசிய வார்த்தைகள் ஒவ்வொன்றும் இன்னமும் அவளது காதுகளில் ஒலித்து அவளை உயிரோடு கொன்றது.

தங்களது அறைக்கு வந்த ஸ்ரீராம் அமைதியாகப் படுத்துக் கொள்ள... சீதாவும் எதுவும் பேசாது மறுபுறம் வந்து படுத்து கொண்டாள். ஆகமொத்தம் யாரும் உறங்கவில்லை. மனதில் நிம்மதி இருந்தால் தானே உறக்கம் வரும்!

****

இரவு உணவு முடிந்து பெற்றோருக்கு அவர்களது அறையைக் காண்பித்துவிட்டு , அவர்களுக்கு வேண்டிய வசதிகளைச் செய்து கொடுத்துவிட்டு வெளியில் வந்த விஷ்ணுபிரஹான் வரவேற்பறையில் அமர்ந்திருந்த மனைவியைக் கண்டான். அவளைக் கண்டதும் அவனது முகத்தில் வெளிச்சம் பரவியது. நேரே அவள் முன் வந்து நின்றவன் திடுமென அவளை அலேக்காகத் தனது கரங்களில் தூக்கினான்.

"விடுங்கோ... என்னை விடுங்கோ..." சிறு குழந்தையைத் தூக்குவது போல் தன்னைத் தூக்கிய விஷ்ணுபிரஹானின் கைகளில் இருந்து கீழிறங்குவதற்காக ஆராதனா அவனது பிடியில் இருந்து திமிறினாள். அவளது திமிறலை கண்டு கொள்ளாது மாடிப்படியில் ஏறியவன் ,

"ஷ் , ரொம்பத் திமிறினேன்னு வை... இப்படியே படியில் உருட்டி விட்டுருவேன்." என்று விழிகளை உருட்டி மிரட்டினான்.

"என்னைய வலுக்கட்டாயமா இங்கே இருக்க வச்சதும் இல்லாம , என் கை , காலை உடைக்கவும் ப்ளான் பண்றேளா ?" அவள் அவனைக் கண்டு முறைத்தாள்... இப்போது அவளது திமிறல் குறைந்து கோபம் அதிகரித்து இருந்தது. அதைக் கண்டு அவன் மனதிற்குள் சிரித்துக் கொண்டான்.

"ச்சேச்சே... அப்படி எல்லாம் செய்வேனாடி , என் செல்ல பட்டே..." அவனது ' பட்டு ' என்ற விளிப்பில் அவளுள் அவளது பெற்றோரின் நினைவுகள் சுனாமியாய் தாக்க... அவளது விழிகள் கலங்க ஆரம்பித்தது.

"என்னோட அப்பா , அம்மா கிட்டயிருந்து என்னைப் பிரிச்சிட்டேள்..." அவளது கலங்கிய விழிகளை உற்று நோக்கியவன் ,

"லூசாடி நீ... நீ என் கூடத்தான் இருக்கணும்... உங்கப்பா , அம்மா கூடயில்லை..." என்று அவன் கண்டிப்பும் , கறாருமாய்க் கூறினான்.

"நான் எதுக்கு உங்க கூட இருக்கணும்... ? உங்க மனைவி தான் உங்க கூட இருக்கணும்..." என்றவளை இமைக்காது பார்த்தவன் தனது அறை கதவை திறந்து உள்ளே அவளைத் தூக்கி சென்றான்.

"இங்கே எதுக்கு... ?" அவளது விழிகளில் பயம் வழிந்தது.

அவளை நிதானமாகக் கட்டிலில் அமர வைத்தவனஂ , " எதுக்கஂா ? புருசன் பொண்டாட்டியை எதுக்குப் பெட்ரூமுக்கு கூட்டிட்டு வருவான். நீயெல்லாம் டாக்டருக்கு படிச்சு என்னத்தைக் கிழிச்சியோ... ?" என்று ஒற்றைப் புருவத்தைக் கேலியாய் உயர்த்தியபடி கூறியவனின் வார்த்தையில் அத்தனை நக்கல் இருந்தது.

"தனியா ரூம் கொடுத்தஂா , அதுக்கும் சண்டை போட்ட... அதான் என்னோட ரூமுக்கு கூட்டிட்டு வந்துட்டேன்." என்றவனது வார்த்தையில் மட்டுமல்லாது விழிகளிலும் விசமம் வழிந்தது.

கணவனிடத்தில் வசமாகச் சிக்கி கொண்டோம் என்பதை உணர்ந்தவளுக்கு நா வறண்டு போனது. அச்சத்தில் உமிழ்நீரை விழுங்கியவளை கண்டவனின் பார்வை மெல்ல கணவன் பார்வையாக மாற ஆரம்பித்தது. அவன் மெல்ல அவளை நோக்கி குனிந்தான். அவள் பயத்தில் கட்டிலில் இரு கைகளை ஊன்றியபடி பின்னால் சாய்ந்தாள். அதைக் கண்டவன் சிரித்தபடி அவளது இரு கைகளையும் தட்டிவிட... அவள் அப்படியே மல்லாக்க விழுந்தாள். அவளது இரு பக்கமும் தனது இரு கைகளைக் கொண்டு சிறை செய்தவனஂ ,

"என்ன பேபஂி , இதுக்கே இப்படிப் பயந்தால் எப்படஂி ?" என்று அவன் மீண்டும் அவளைக் கேலி செய்ய... அதில் அவளது கோபம் மீண்டும் தலை தூக்கியது.

"தப்பான ஆளிடம் தப்பா நடந்துக்க முயற்சிக்கிறீங்க மிஸ்டர். விஷ்ணுபிரஹான்..." என்றவளை கண்டு அவனது விழிகள் சுருங்கியது.

"உங்க மனைவி அர்ச்சனா... நானில்லை..." என்றவளை அசராது பார்த்தவன் ,

"அப்படின்னு யார் சொன்னது... ?"

"ஏன்... ? நீங்க தானே அப்படிச் சொல்லிக்கிட்டு திரியறீங்க... ?" என்று வெடுக்கென்று கேட்டவளை கண்டு அவனது முகத்தில் உல்லாசம் பொங்கியது. அவளுக்குப் பக்கவாட்டில் பொத்தென்று விழுந்தவன் பின்பு அவளைப் பார்த்தபடி ஒருக்களித்துப் படுத்து தனது இடக்கையால் தலையைத் தாங்கியபடி அவளைக் கண்டு மந்தகாச புன்னகையை உதிர்த்தான்.

"நான் அப்படிச் சொன்னதை நீ கேட்டியா ?"

"நீங்க தானே அவளைக் கல்யாணம் பண்ணிக்கப் போறதா சொன்னீங்க... ?" அவள் குழப்பத்துடன் அவனைப் பார்த்தாள்.

"எங்க கல்யாணம் நடந்ததை நீ பார்த்தியா ?" அவனது வார்த்தைகள் கேட்டு அவள் கோபத்துடன் அவனை முறைத்தாள்.

"எதுக்குடி இப்படி முறைக்கற ? என்னோட அஃபிசியல் வொய்ப் நீ தான் , நீ மட்டும் தான்... வெளியில் உன்னைத் தானே என்னோட வொய்ப்ன்னு சொல்றேன். குடும்பத்திலும் சரி , தொழிலிலும் சரி , நீ தானே என் மனைவியா இருக்கிற. இது எல்லோருக்குமே தெரியுமே... நீ கண்ணை மூடிக்கிட்டு உளறினால் எல்லாம் மாறிருமா ?" அவன் கேள்வியுடன் புருவத்தை உயர்த்தினான்.

"போதும்... திரும்பத் திரும்பப் பொய் சொல்லாதீங்க... எப்பவும் போல் என்னுடைய குற்றவுணர்ச்சியைத் தூண்டிவிட்டு அதில் நீங்க குளிர் காயாதீங்க... இதுக்கு மேல் துன்பத்தைத் தாங்கும் சக்தி எனக்கு இல்லை..." என்றவள் மறுபுறம் திரும்பி மௌனமாய்க் கண்ணீர் வடித்தாள். அவளது முதுகு குலுங்கலில் இருந்து அவள் அழுவதை அவன் உணர்ந்தான்.

"இங்கே பார் ஆராதனா... உனக்கு என் மேல் இருக்கும் கோபம் மாதிரி எனக்கும் உன் மேல் கோபமிருக்கு... எவ்வளவு தைரியம் இருந்தால் நான் உயிரோடு உன் கண் முன்னாடி நிற்கும் போதே கண்டவனோடு மணவறையில் உட்கார தயாராகுவ... அதைப் பார்த்து எனக்கு அப்படியொரு ஆத்திரம் வரத்தான் செய்தது. இப்பவும் அந்தக் கோபம் இருக்கத்தான் செய்யுது. அதுக்காக அதையே பேசி உன்னை வருத்தப்பட வச்சு... அதைக் கண்டு சந்தோசப்பட என்னால் முடியலை. முடிந்து போனதை பேசிக்கிட்டு இருப்பதால் யாருக்கு என்ன பலன் ? முடிந்தால்... என்னைப் புரிஞ்சிக்கிட்டு என்னுடன் வாழு... இல்லையா , இப்படியே நண்பர்களா வாழ்ந்துட்டு போயிருவோம்..." என்றவன் அவளைத் தன்புறம் திருப்பி ,

"இது ஒண்ணும் நமக்குப் புதுசு இல்லையே... கடந்த ஐஞ்சு வருசமா நாம அப்படித்தானே வாழ்ந்துக்கிட்டு இருந்தோம்... என்னுடைய கண்ணியத்தைப் பத்தி உனக்கு நான் சொல்ல தேவையில்லை..." என்றவனைக் கண்டு அந்த நாள் ஞாபகம் வந்ததில் அவளது அழுகை இன்னமும் அதிகரித்தது.

மனைவியின் கண்ணீர் அவனைத் தீயாய் சுட்டெரிக்க... அவன் மனம் தாங்காதவனாய் அவளைத் தன்னோடு சேர்த்து அணைத்துக் கொண்டான். இத்தனை நாளாய் துயரத்தை தன்னுள் அடக்கி வைத்திருந்தவள் அவனது ஆறுதலான அணைப்பில் தனது அத்தனை துயரத்தையும் அழுகையில் கரைக்க ஆரம்பித்தாள்... வெகுநேரம் அழுதவளின் அழுகை மெல்ல நின்று சிறு தேம்பலாய் மாறிப் போனது. அவளது முகத்தைத் தனது நெஞ்சில் இருந்து நிமிர்த்தியவன் அவளது முகத்தைத் தனது இரு கரங்களில் தாங்கி ,

"எத்தனை நாளுக்குத் தான் நான் பிரம்மச்சாரியாகவே இருக்கிறது... சீக்கிரம் என்னைப் புரிந்து கொள் பேபி..." என்று கூறியவன் அவளது முன்நெற்றியில் தனது உதடுகளை மென்மையாய் பதித்தபடி ,

"மனுசனை உயிரோட கொல்றடி..." என்று மெல்லமாய் முணுமுணுத்தான்...

காதலில் பிழை விட்டவன் காதலில் பித்தாகி பிதற்றுகின்றான்...! என்னே ஒரு விந்தை...!!!

திருத்தமாகும்...!!!

விழிகள் மூடி தனக்குள் கரைந்து கொண்டிருந்த ஆராதனா கணவனது வார்த்தைகளைக் கவனிக்கவில்லை. ஆனால் அவனது தொடுகையில் திகைத்து விழிகளைத் திறந்தவள் அப்போது தான் தான் இருந்த நிலையைக் கண்டு அதிர்ந்து போனாள். விஷ்ணுபிரஹான் மல்லாக்க படுத்திருக்க... அவனது நெஞ்சில் இவள் சுகமாகச் சாய்ந்திருந்தாள். இதில் அவளது முகத்தினை அவனது கரங்கள் பாந்தமாய் ஏந்தியிருந்தது. அடுத்த நொடி தீச்சுட்டார் போன்று அவனிடம் இருந்து விலகியவள் படுக்கையில் இருந்து எழுந்து நின்றாள்.

"ஏனஂ ? என்னாச்சு பேபஂி ?" அவன் புரியாது கேட்டபடி எழுந்தமர்ந்தான்.

அவள் அவனையுமஂ , படுக்கையையும் மாறி மாறி பார்த்தாள். இரண்டுமே அவளுக்குச் சொந்தம் இல்லை. வேறு ஒருத்திக்குச் சொந்தம். அந்த நினைவே அவளை வேதனையில் உழல செய்தது.

"முதலில் உட்கார்..." அவன் தன்னருகில் இருந்த இடத்தைச் சுட்டிக்காட்டி கூற... அவளோ சற்றுத் தள்ளியிருந்த நாற்காலியில் சென்று அமர்ந்து கொண்டாள். அவளை ஒரு பார்வை பார்த்தவனஂ ,

"நடந்து முடிந்ததை நினைச்சு அழுதுகிட்டு இருந்தால் என்ன அர்த்தமஂ ? இனிமேல் நடப்பது நல்லதா நடக்கட்டுமே பேபி." அவளுக்குப் புரியும்படி தன்மையாக அவன் எடுத்து கூற... அவளோ விழிகளில் சீற்றம் மிக அவனை ஏறிட்டு பார்த்தவளஂ ,

"எல்லாத் தவறுகளையும் மன்னிக்கலாமஂ , மறந்திரலாம். ஆனால் அர்ச்சனாவை... ?" அவள் சொல்லும் போதே அவளது விழிகள் கோபத்தை மீறி கலங்க துவங்கியது. அதை அவனுக்குக் காட்டாதவாறு மறைத்து கொண்டாள்.

"அர்ச்சனாவுக்கு என்ன ?" அவன் புரியாது கேட்க...

"இதே வீட்டில் தானே அவங்க கூடச் சந்தோசமா இருந்தேள்... இப்போ இதே வீட்டிற்கு என்னை அழைச்சிண்டு வந்திருக்கேள். நீங்க எல்லாம் மனுசன் தானா ? உங்களுக்கு எல்லாம் கொஞ்சமும் மனசாட்சி இல்லையா ?" அதைக் கேட்டு அவனது முகம் இறுகி போனது.

"ஹனியை இங்கே அழைச்சிட்டு வந்தது இல்லை. அவள் இருப்பது வேறு வீட்டில்..."

"ஓ... வேற வீடா ?" இளக்காரமாகக் கேட்டவள் ,

"அவங்க பெரிய வீடா ? சின்ன வீடா ? ம்... நீங்க முதலில் என் கழுத்தில் தானே தாலி கட்டினேள். அப்போ நான் தான் பெரிய வீடு இல்லையா ? அவங்க உங்களுடைய சின்ன வீடு. அப்படித்தானே மிஸ்டர். விஷ்ணுபிரஹான்... ?" அவளது குரலில் அத்தனை நக்கல் தெரிந்தது.

விஷ்ணுபிரஹானின் முகம் உணர்வுகளைத் தொலைத்து இறுகியது. அடக்கப்பட்ட கோபத்துடன் மனைவியை ஏறிட்டு பார்த்தவன் ,

"அப்போ சொன்னது தான் இப்பவும் சொல்றேன். நமக்கு இடையில் தேவையில்லாம அர்ச்சனாவை இழுக்காதே. அதையும் மீறி இழுத்தேன்னு வச்சுக்கோ... நான் மனுசனா இருக்க மாட்டேன்." பல்லை கடித்தபடி கூறினான்.

"இப்போ மட்டும் மனுசனாவா இருக்கேள் ?" அவளது மனவலி அவளுக்கு... வலி தாங்க முடியாது அவள் கோபமாய்க் கத்தினாள்.

விஷ்ணுபிரஹான் கோபத்துடன் அவள் புறம் எழுந்து வந்தவன் , " ஆமாம்டி , நான் மனுசனா இருக்கப் போய்த் தான் உன் கிட்ட பேசிக்கிட்டு இருக்கேன். மற்ற ஆம்பிளைங்க மாதிரி இருந்திருந்தால் நடக்கிறதே வேற." ஆங்காரத்துடன் தனது வலக்கை ஆள்காட்டி விரலை அவளது முகத்துக்கு நேரே நீட்டி பேசினான்.

"என்ன செஞ்சிருவேளஂ ? அடிப்பேளா ?" அவளும் கோபத்துடன் அவனை முறைத்தாள்.

கோபத்தில் முகம் எல்லாம் செவ்வானமாய்ச் சிவக்க , மூக்கு நுனி மட்டும் கோவைப்பழமாய்த் தனியே சிவந்திருக்க... ஆராதனாவை பார்ப்பதற்கே அத்தனை அழகாய் இருந்தது. அவளது அருகாமையிலஂ , அழகில் மனதை பறிகொடுத்தவனாய் அவள் புறம் குனிந்தவனஂ ,

"இவ்வளவு அழகான பொண்டாட்டியை சைட் தான் அடிப்பாங்க. யாரும் கை நீட்டி அடிக்க மாட்டாங்கடி. நான் சொன்னது வேறு அர்த்தத்தில்..." என்று கண்சிமிட்டியவனைக் கண்டு அவள் மேலும் முறைத்து பார்த்தாள்.

"நீ பெரிய வீடா , சின்ன வீடு எல்லாம் இல்லை. என்னுடைய ஒரே ஒரு பொண்டாட்டி. அதுவும் க்யூட் பொண்டாட்டி..." அவனது குரலில் மட்டும் அல்லாது விழிகளிலும் கிறக்கம் வழிந்தது. அவனது இந்தப் பேச்சா , இந்தப் பரிணாமம் எல்லாம் அவளுக்குப் புதிது. ஆனால் அதை எல்லாம் அனுபவிக்க முடியாதபடி அவளது கடந்த கால வலி இருந்தது. அதனால் அவள் இறுகி போய் அமர்ந்திருந்தாள்.

"இப்படியொரு அழகான பொண்டாட்டியை பக்கத்தில் வச்சிக்கிட்டு கையைக் கட்டிட்டு வேடிக்கை பார்க்கணும்ன்னு எனக்கு எந்த வேண்டுதலும் இல்லை. ஆனால் உனக்காக , உன் மனசு மாறணும்ன்னு தான் நான் காத்துக்கிட்டு இருக்கிறேன்."

"பாருடா , சாத்தான் வேதம் ஓதுறதை... நானஂ , என் மனசு உங்களுக்கு முக்கியம். இதை நான் நம்பணுமாக்குமஂ ?" இப்போது அவள் அவனைக் கண்டு கேலி செய்தாள்.

"இல்லைன்னு சொல்லி தான் பாரேன்." அவனும் கேலியாய் கூற...

"அது தானே உண்மை..." அவளும் சளைக்காது பதில் சொன்னாள்.

"இங்கே பார் ஆராதனா... நான் உன்னை ஏமாத்தணும்ன்னு நினைச்சிருந்தால் ஐஞ்சு வருசத்துக்கு முன்னமே ஏமாத்தி இருப்பேன். உன் கூடக் குடும்பம் நடத்திட்டு அர்ச்சனாவையும் என் கூட அழைச்சிக்கிறதுக்கு எனக்கு ரொம்ப நேரமாகாது. இன்னைக்குப் பல ஆண்கள் வீட்டில் அப்படித்தான் இருக்காங்க. ஆனா நான் நேர்மையா உன் கிட்ட இருந்து விலகிய பின்பு தான் அர்ச்சனாவை என்னுடன் அழைத்தேன். அப்படிப் பார்த்தால் நான் நேர்மையானவன் தான்."

"ச்சீய்..." அவனது வார்த்தையில் அவளது உள்ளமும் , உடலும் கூசி போனது.

"இதோ இப்போதும் உன்னிடம் வரம்பு மீறாமல் கண்ணியமா தான் விலகி இருக்கிறேன்." என்றவன் அவளது முகம் நோக்கி இன்னமும் குனிந்த ,

"பெயரளவில் மிஸஸ். விஷ்ணுபிரஹானா இருக்கிற உன்னை உடலளவிலும் மிஸஸ். விஷ்ணுபிரஹானா மாத்த எனக்கு ஒரு நொடியாகாது. அதைச் செய்யவா ? இல்லை அது தான் உன் விருப்பமா ?" என்று அவன் ஒற்றைப் புருவத்தை உயர்த்தியபடி கேள்வியாய் அவளைப் பார்க்க... அதில் அவள் தான் வியர்த்து விதிர்த்து போனாள்.

நாற்காலியில் ஒடுங்கி அமர்ந்தபடி தன்னைப் பயத்துடன் பார்த்த மனையாளை கண்டு அவனது இதயம் வலித்தது. இதுவரை அவன் எந்தப் பெண்ணையும் வார்த்தையால் கூட வலிக்கச் செய்தது கிடையாது. ஆனால் மனைவியவளுக்கு அவன் அளித்த துன்பம் மிகவும் அதிகம். அதையும் சகித்துக் கொண்டு தன்னை மனதில் பூஜிக்கும் மனைவியவளை துன்புறுத்த அவனுக்கு விருப்பம் இல்லை.

உடலும் உடலும் இணையும் தாம்பத்தியத்தில் அவனுக்கு விருப்பம் இல்லை. மனமும் , மனமும் காதலாய் இணைய

வேண்டும். அவன் அவளுடன் இணையும் போது அவளது மனதில் அவன் மீதான காதல் பொங்கி பெருக வேண்டும். அவளுக்கு அவனைப் பிடிக்கும் என்பது அவனுக்கு நன்கு தெரியும். ஆனால் இப்போது இருக்கும் குழப்ப மனநிலையில் அவனது தொடுகை அவளை இன்னமும் குழப்பி அவளை உள்ளுக்குள் ஒடுக்கிவிடும் என்பதை அறிந்தவனாய் அவன் அவளை விட்டு விலகினான்.

"கண்டதையும் யோசிக்காம நம்ம வாழ்க்கையைப் பற்றி மட்டும் யோசி." என்றவன் ,

"அதுக்காக ரொம்பக் காலம் யோசிச்சிக்கிட்டே இருக்காதே. இப்பவே எனக்கு முப்பத்திரண்டு வயசு , உனக்கு இருபத்தியெட்டு வயசாச்சு... அப்புறம் பேரன் , பேத்தி எடுக்கிற வயசில் புள்ள , குட்டிங்களைப் பெத்துக்க வேண்டியிருக்கும்." என்று அந்த ரணகளமான நிலையிலும் குதூகலம் விடாது அவன் அவளைக் கலாய்த்தான்.

அவனது வெட்கமற்ற பேச்சில் அவள் தான் லஜ்ஜையுற்றாள். ' விவஸ்தை கெட்ட மனுசன் ' என்று அவள் மனதிற்குள் முணுமுணுத்து கொண்டாள். ஆனால் அவள் மனம் ஒன்று நினைக்க... அவளது வாய் ஒன்று அவனிடம் கேட்டது.

"அப்போ அர்ச்சனா வயிற்றில் இருக்கும் குழந்தைங்க..." அதைக் கேட்டதும் அவனது விழிகள் ஒரு நொடி சுருங்கி விரிந்தது.

"தேவைப்பட்டால் என்னுடைய இன்சியலை கொடுப்பேன்." ' அம்மாவாக நீ இருக்கும் பட்சத்தில்... ' முதலில் கூறியதை வாய்விட்டு சொன்னவன்... இரண்டாவது கூறியதை மனதிற்குள் சொல்லி கொண்டான். அதை அறியாத ஆராதனாவின் மனம் மிகவும் அடிப்பட்டுப் போனது. அவளது முகத்தை வைத்து அவளது மனதினை கணித்தவன் சற்று நிதானித்தான். இது கோபம் கொள்ளும் நேரம் இல்லை. அதனால் அவன் தணிவாகப் போக எண்ணினான்.

"நம்மிடையே அர்ச்சனாவை இழுக்காதே. இது தான் நான் உனக்குக் கொடுக்கும் கடைசி எச்சரிக்கை." என்று எச்சரித்தவன் போர்வையை எடுத்துத் தரையில் விரித்தபடி ,

"உனக்குக் கீழே படுத்துப் பழக்கம் இருக்காது. அதனால் நீ மேலே படுத்துக்கோ." என்றவன் கீழே படுத்துக் கொண்டான்.

ஆராதனா மனதிற்குள் புழுங்கியவளாய் அமர்ந்திருந்தாள். அர்ச்சனா என்ன அவளுக்குச் சொந்தக்காரியா ? அவளைப் பற்றி இவள் பேசுவதற்கு ? அவர்களது வாழ்க்கையில் அவன் தானே அவளை அழைத்து வந்தது. அப்போது அவன் தான் அதற்குப் பதில் சொல்ல வேண்டும். அவளது மனம் கோபமாய் முறுக்கி கொண்டது.

அதையே தான் விஷ்ணுபிரஹானும் நினைத்துக் கொண்டிருந்தான். அர்ச்சனா பற்றிய உண்மையை மனைவியிடம் கூறிவிடுவோமா ? என்று... ஆனால் அதன் பிறகு ??? அதுவே அவனது வாயை கட்டி போட்டது. அவன் தெரிந்தே செய்த தவறு இது. எப்படிச் சரி செய்வது ? என்று தெரியாது அவன் விழித்தான்.

இருவரது மனதிலும் கடந்த காலம் விரிந்தது...

****

ஐந்து வருடங்களுக்கு முன்பு...

"மாப்பிள்ளையைப் பிடிச்சிருக்கா பட்டு ?" அர்ஜூன் மகளிடம் கேட்டான்.

புகைப்படத்தில் இருந்த விஷ்ணுபிரஹானை பார்த்த ஆராதனாவின் விழிகளில் மின்னல் அடித்தது. மனதில் இனம் புரியாத சந்தோசம் பெருகியது. பெற்றோர் பார்த்த மணமகன் தனக்கும் பிடித்தவனாய் அமைந்ததில் அவள் மிகவும் மகிழ்ந்து போனாள்.

"பிடிச்சிருக்குப்பா..." நாணத்துடன் கூறிய மகளைக் கண்டு அர்ஜூன் நிறைவாய் புன்னகைத்தான். அதன் பிறகு திருமண வேலைகள் மும்முரமாக நடைபெற்றது.

ஒருநாள் மதிய பொழுதில் உணவு உண்ணும் போது அவந்திகா மகளிடம் , " உனக்குப் பிடிச்ச சிக்கன் ஃப்ரை பண்ணியிருக்கேன். எடுத்துக்கோ பட்டு." என்க...

"வேண்டாம்மா..." என்ற மகளை அன்னை விசித்திரமாகப் பார்த்தாள்.

"அவங்க... அவங்க..." நாணத்துடன் தட்டில் கோலம் போட்ட மகளைக் கண்டு அவந்திகாவின் விழிகள் ஆச்சரியத்தில் விரிந்தது.

"எவங்க... ?"

"அதான்... அத்த , பிரஹான் அத்தான்..."

மகள் யாரை சொல்கிறாள் என்று புரிந்ததும் அவந்திகாவின் முகத்தில் புன்னகை வந்து ஒட்டி கொண்டது.

"மாப்பிள்ளைக்கு என்ன ?"

"அவர் அசைவம் சாப்பிட மாட்டாராம்."

"ஓஹோ..." என்று அவந்திகா மகளைக் கிண்டலடித்தாள்.

"ம்மா..." என்று சிணுங்கிய மகளைத் தன்னுடன் அணைத்துக் கொண்ட அவந்திகா ,

"இப்போ தான் எனக்குப் பெருமையா இருக்கு பட்டு. நீ என்னுடைய மகள்ன்னு ப்ரூப் பண்ற. புருசன் மனசறிஞ்சு நடந்துக்கிட்டா வாழ்க்கையில் எந்தத் துன்பமும் நெருங்காது. அதே மாதிரி கட்டின கணவர் கிட்ட ஈகோ பார்க்காதே. ஈகோ தான் தாம்பத்திய வாழ்க்கைக்கு முதல் எதிரி." என்று அறிவுரை கூறினாள்.

"ம்மா , உங்க பாசையைச் சொல்லி கொடுங்கம்மா. அப்படியே உங்க பழக்கவழக்கங்களையும்..." என்று ஆர்வமாகக் கேட்ட மகளைக் கண்டா ,

"கட்டாயம் சொல்லி தர்றேன். பட்டா , அப்பா உறவு முறையில் மாப்பிள்ளை பார்த்து இருக்கலாமோ ? எங்க பழக்கவழக்கம் உனக்குப் பழக்கம் இல்லையே." என்று கவலையாகக் கேட்டாள்.

ஏனெனில் ஆராதனா அர்ஜூனிடம் அதிகம் வளர்ந்ததால் அவனுடைய பழக்கவழக்கங்கள் தான் அவளுக்கு வந்திருந்தது. அவளுக்கு மட்டுமல்ல ஸ்ரீராம் , பரத் இருவருக்குமே.

"எனக்கு அவரைப் பிடிச்சிருக்கும்மா." மகள் கூறும் போதே அவளது முகம் வெட்கத்தில் சிவந்ததைக் கண்டு அவந்திகா மனதிற்குள் திருப்திப்பட்டுக் கொண்டாள்.

ஆராதனா திருமணக் கனவில் மூழ்கியிருக்க... விஷ்ணுபிரஹானோ தந்தைக்கு உடல்நலம் சரியில்லை என்று அமெரிக்காவில் இருந்து பறந்து வந்தவன் தனது திருமண விசயத்தைக் கேட்டு அதிர்ந்து போனான்.

"யாரை கேட்டு என்னுடைய கல்யாணத்தை முடிவு பண்ணுனீங்க ?" அவன் தனது தந்தை ராகவனிடம் சண்டைக்கு நின்றான்.

"யாரை கேட்கணும் ?" ராகவனும் சளைக்காது பதில் கொடுத்தார். சுந்தரி இருவரிடையே கைகளைப் பிசைந்து கொண்டு நின்றிருந்தார்.

"என்னைக் கேட்கணும்." என்றான் அவன் நெஞ்சை நிமிர்த்திக் கொண்டு...

"கேட்டால் மட்டும் என்ன சொல்லிர போற ? கல்யாணம் வேண்டாம்ன்னு சொல்லுவ..."

"இப்போதும் அதையே தான் சொல்றேன். எனக்குக் கல்யாணம் வேண்டாம்."

"உன்னை இப்படியே விட முடியாது." முகத்தில் புதர் போன்று மண்டியிருக்கும் தாடியுடன் நின்றிருக்கும் மகனை கண்டு ராகவனின் இதயம் இரத்த கண்ணீர் வடித்தது.

"நான் இப்படியே இருந்துட்டு போறேன். எனக்கு என்ன அவசரம் ? தங்கைகளுக்குக் கல்யாணம் பண்ணி வைக்கலாம்." அடுத்தடுத்து இருக்கும் மூன்று தங்கைகளை முன்னிறுத்தி அவன் தனது திருமணத்தைத் தள்ளி போட நினைத்தான்.

"அதுக்காகத் தான் உன்னைக் கல்யாணம் பண்ணிக்கச் சொல்றேன்." என்ற தகப்பனை புரியாது பார்த்தான் விஷ்ணுபிரஹான்.

"வைதேகிக்கு நல்ல வரன் ஒண்ணு வந்திருக்கு." அதைக் கேட்டு அவனது முகத்தில் மகிழ்ச்சி படர்ந்தது.

"பேஷா பண்ணிரலாம்ப்பா."

"அவளுக்குச் சீர் நிறையச் செய்ய வேண்டியிருக்கு."

"அதெல்லாம் செஞ்சிரலாம்ப்பா. நம்ம கிட்ட இல்லைன்னாலும் கடன் வாங்கிச் செய்யலாம். கடனை அடைக்க என்னால் முடியும்."

தனக்குத் தைரியம் சொன்ன மகனை ராகவன் பெருமையுடன் பார்த்தார். அவருக்கு மகனை பற்றி நன்கு தெரியும். இப்போது அவர் போராடுவது மகளது திருமணத்திற்காக அல்ல... மகனுடைய வாழ்க்கைக்காக... இப்படியே விட்டால் அவனது வாழ்க்கை அழிந்து போய் விடுமோ ? என்று அவருக்குப் பயமாக இருந்தது.

"எப்படி அடைப்ப ? உன் படிப்புக்கு வாங்கின கடன் , வீட்டு லோன்னு எதுவுமே இன்னும் அடைபடலை."

"சரி , அதுக்கும் என் கல்யாணத்துக்கும் என்ன சம்பந்தம் ?"

"உனக்குப் பார்த்து இருக்கும் பெண் வீடு பெரிய இடம். அவங்க நம்ம வைதேகியின் திருமணத்தையும் சேர்த்து

தான் நடத்துறாங்க. அவளுக்கு வேண்டிய சீர் வரிசை எல்லாம் அவங்களே செய்றாங்க. அப்படிப்பட்ட நல்ல இடத்தை எப்படி விட முடியும் ?"

ஸ்ரீராம் தான் இந்தத் திட்டத்தை அர்ஜூனிடம் கூறியது. வைதேகி திருமணத்தைத் தாங்கள் பார்த்துக் கொள்வதாகக் கூறினால் அவர்கள் விஷ்ணுபிரஹான் திருமணத்திற்குச் சம்மதிப்பார்கள் என்று...

"அப்படி எதுக்கு நம்ம பொண்ணை வலுக்கட்டாயமா அங்கே கொண்டு போய்த் திணிக்கணும் ?" அர்ஜூனுக்கு இந்த விசயம் பிடிக்கவில்லை.

"ப்பா , இந்தக் காலத்தில் எந்தக் கெட்ட பழக்கமும் இல்லாத பையன் கிடைக்கிறது ரொம்பக் கஷ்டம்ப்பா. விஷ்ணு நம்ம பட்டுவுக்கு ஏத்தவன். நீங்க வேணா விசாரிச்சு பார்த்துக்கோங்க."

"அதெல்லாம் விசாரிச்சுப் பார்த்துட்டேன். நீ சொன்ன மாதிரி பையன் நல்ல மாதிரி தான். வசதி நம்ம அளவுக்கு இல்லைன்னாலும் நல்ல பையனா இருக்கப் போய்த் தான் நான் சம்மதிக்கிறேன்." என்று தான் அர்ஜூன் இந்தத் திருமணத்திற்குச் சம்மதித்தது. ஆனால் விஷ்ணுபிரஹானின் இன்னொரு பக்கத்தை அர்ஜூன் அறியாது போனது அவனது தூரதிர்ஷ்டமே...

"அப்போ என்னை விலைக்கு விக்கப் போறீங்களா ?" விஷ்ணுபிரஹான் கோபத்துடன் தந்தையிடம் கேட்டான்.

"அப்படின்னு நீ நினைச்சால் நான் ஒண்ணும் சொல்வதற்கு இல்லை. நீ இந்தக் கல்யாணத்துக்குச் சம்மதிச்சு தான் ஆகணும். முடியாதுன்னு சொன்னால் என் பிணத்தைத் தான் பார்ப்ப..." ராகவனின் உறுதியான குரலில் அவனது உறுதி ஆட்டம் காண ஆரம்பித்தது.

"ஏன்னா..." சுந்தரி வேதனையுடன் அவரை அழைக்க...

"என்னைச் சமாதானப்படுத்துறதை விட்டுட்டு நீ உன் மகனை கல்யாணத்துக்குச் சம்மதிக்கச் சொல்லு." என்ற

ராகவன் அங்கிருந்து சென்றுவிட்டார்.

"விஷ்ணு..." அன்னையின் அழைப்பில் அவரைத் திரும்பி பார்த்தவன் ,

"ம்மா , எல்லாம் தெரிஞ்சிருந்தும்..." மேலே பேச முடியாது அவனது விழிகள் கலங்கியது. வருடங்கள் கடந்த போதும் அவனது வலி தீரவில்லையே.

"நடந்து முடிஞ்சது முடிந்ததாக இருக்கட்டும். இனி நடக்கவிருப்பது நல்லதாக இருக்கட்டுமே விஷ்ணு."

"எனக்கே கீதாசாரமா ?" என்று அவன் விரக்தியாய் சிரித்தான்.

"விஷ்ணு..." சுந்தரி மகனை அனுதாபத்தோடு பார்த்தார். ராஜா போன்றிருந்த மகன் இன்று இப்படி இருப்பதைக் காண அவரால் சகிக்க முடியவில்லை.

"யார் கிட்ட எப்படிப் பேசி இந்தக் கல்யாணத்தை நிறுத்தணும்னு எனக்குத் தெரியும்." என்றவன் அங்கிருந்து சென்றுவிட... மகனது வார்த்தையில் சுந்தரி திகைத்து நின்றார்.

விஷ்ணுபிரஹான் ஆராதனா வீட்டை பற்றி விசாரித்தவன் தன்னைப் பற்றிய விசயத்தைச் சொல்ல தன் வயதை ஒத்த ஸ்ரீராமை தேர்ந்தெடுத்தான். அவனை நேரில் சந்தித்துத் தனக்குத் திருமணத்தில் நாட்டம் இல்லை என்றும , அதற்கான காரணத்தையும் தெளிவாக எடுத்துரைத்தான். ஸ்ரீராமிற்குத் தான் ஏற்கெனவே எல்லாம் தெரியுமே. அதனால் மேம்போக்காக விஷ்ணுபிரஹானிடம் ,

"இப்படின்னு எனக்குத் தெரியாது. எல்லாவற்றையும் நான் பார்த்துக்கிறேன்." என்று அவனைச் சமாதானப்படுத்தி அனுப்பி வைத்தான்.

****

மணமேடையில் அமர்ந்திருந்த விஷ்ணுபிரஹான் கடும்கோபத்தில் தகித்தான். அவனது விழிகள் ஸ்ரீராமை

தேடி அலைபாய்ந்தது. திருமணத்தை நிறுத்துகிறேன் என்று ஸ்ரீராம் கூறியதால் சற்றுத் தைரியமாக இருந்தான் விஷ்ணுபிரஹான். கடைசிவரை ஸ்ரீராம் திருமணத்தை நிறுத்த எந்தவித முயற்சியும் எடுக்காது இருப்பதைக் கண்டு கோபமுற்று அவன் தனது தந்தையிடம் வாதாட... ராகவனோ முழம் கயிறை அவன் முன் நீட்டி ,

"உன் விருப்பம் பெரிதா ? இல்லை என் உயிர் பெரிதா ?" என்று கேட்க... கோபத்தில் சீறிய அந்த ஆறடி மனிதன் பாசத்திற்குக் கட்டுப்பட்டுப் பெட்டி பாம்பாய் அடங்கிப் போனான்.

அவனுக்குத் தனது சந்தோசத்தை விடக் குடும்பத்தின் சந்தோசம் தான் முக்கியம். அவனது குடும்பம் அன்பால் பிணைந்த கூடு. அதைக் கலைக்க அவனால் முடியவில்லை. அவன் வேதனையை அடக்கியபடி திருமண மேடையில் அமர்ந்தான். ஸ்ரீராமோ தனது தவறை உணர்ந்திருந்ததால் விஷ்ணுபிரஹான் கண்ணில் அவன் படவில்லை. மற்றொரு மேடையில் கேசவன் மணமகனாக அமர்ந்திருந்தான். இரு திருமணங்களும் ஒன்றாக நடக்க இருந்தது.

அர்ஜூனன் , அவந்திகா மகளின் திருமணத்தில் சந்தோசமாக வலம் வர... ராகவன் , சுந்தரி மகனை நினைத்து மன இறுக்கத்துடன் வலம் வந்தனர். பரத் தங்கை திருமணத்தில் பரபரப்பாக வளைய வந்தான். கனிஷ்காவின் விழிகள் அவனையே பின்தொடர்ந்தது. அண்ணனின் திருமணப் பேச்சு வார்த்தை முடிந்ததில் இருந்து அவள் பரத்தை கண்டு வருகிறாள். அவனது அழகில் , கம்பீரத்தில் , வேலை செய்யும் சுறுசுறுப்பில் என்று அவளது பதின்பருவ வயது மனம் விரும்பியே அவன் புறம் சாய்ந்தது. வேறு எதைப் பற்றியும் சிந்திக்காது குழந்தை குமரியவள் மன்னவன் பால் நேசம் கொண்டாள்.

மண்டபத்தின் பின்புறம் ஏதோ வேலையாகச் சென்ற பரத்தை தொடர்ந்து கனிஷ்கா சென்றாள். அவள்

தைரியத்தை வரவழைத்துக் கொண்டு அவனை அழைத்தாள்.

"ஏன்னா..." என்று தன்னை அழைத்தவளை பரத் நின்று திரும்பி பார்த்தான்...

தங்கள் வீட்டு மாப்பிள்ளையின் சின்னத் தங்கை தன்னை அழைத்தது அவனுக்கு முதலில் திகைப்பாய் இருந்தது. அதே நேரம் அவனுக்கு இருந்த வேலை பரபரப்பில் அவள் அழைத்தது பெருத்த எரிச்சலை உண்டு பண்ணியது... அதைவிட அவளது ' ஏன்னா ' அழைப்பு அவனது புருவத்தை யோசனையாய் சுருங்க வைத்தது... ஏனெனில் இந்த அழைப்பு மனைவி கணவனை மட்டும் அழைக்கும் பிரத்யேக அழைப்பு... அவனது அன்னை தந்தையை அப்படி அழைப்பதை அவன் அடிக்கடி கேட்கின்றானே...

"நேக்கு... நேக்கு..." என்று திணறியவளை கண்டு அவனுள் எரிச்சல் மறைந்து சற்றுச் சுவாரசியம் தோன்றியது... அவனுள்ளும் வயது கோளாறு எட்டிப்பார்த்தது. அதனால் அவன் கிண்டலாக ,

"நோக்கு என்ன... ?" என்று கேட்டான். தாயின் பாசை அவனுக்கும் சில சமயம் வரும்...

"நேக்கு உங்களை ரொம்பப் பிடிச்சியிருக்குன்னா... ஐ லவ் யூன்னா..."

பட்டாம்பூச்சி போல் இமைகள் படபடவெனப் படபடக்க , முகம் செங்காந்தள் மலர் போன்று வெட்கத்தில் சிவந்திருக்க அவனைக் காதலாய் பார்த்த பாவையவளை அவன் அதிர்ச்சியாகப் பார்த்தான். பின்பு சுற்றுமுற்றும் பார்த்தவன் அவளது கைப்பற்றி ஓரமாக அழைத்துச் சென்றான். அவளோ மையலுடன் அவன் இழுத்த இழுப்பிற்கு அவன் பின்னே சென்றாள்.

"உனக்கு அறிவில்லை... உன் வயசு என்ன ? என் வயசு என்ன ? இந்த வயசில் உனக்குக் காதல் கேட்குதா ? அறைஞ்சேனா ?" என்று கையை ஓங்கியவனைக் கண்டு

பயந்து போனவளின் விழிகளில் கண்ணீர் நிரம்பியது. அவளது கண்ணீர் கண்டு என்ன நினைத்தானோ ? தனது கையைக் கீழிறக்கியவன் அவளிடம் தன்மையாக ,

"இந்த வயசில் காதல் எல்லாம் வேண்டாம். நல்லா படி..." என்க... அதற்குத் தலையாட்டியவளை கண்டு அவனுக்குச் சிரிப்பு வந்தது.

"இந்த விசயத்தை நானும் யார் கிட்டேயும் சொல்ல மாட்டேன். அதே மாதிரி நீயும் சொல்ல கூடாது."

"ம்..." என்று ஒத்து கொண்டவளை கண்டு நிம்மதியுற்றவனாய் அவன் சென்றுவிட்டான்.

அவன் சொன்னதை எல்லாம் செய்தவள் அவன் மீதான காதலை மட்டும் மறக்கவில்லை. விளையாட்டுத்தனமாய்த் தோன்றிய காதல் காலம் கடந்து விருட்சமாய் அவளது மனதில் வளர்ந்து நின்றது.

திருமண வீட்டில் என்ன முயன்றும் பரத்தின் விழிகள் கனிஷ்கா மீது மீது அடிக்கடி படிந்து படிந்து மீண்டது. அவன் அவளைப் பார்த்தது அக்கறையால் தான்... ஆனால் அர்ஜூனோ பரத் அவளை நேசிப்பதாகத் தப்பாக எண்ணி கொண்டான். இருவரின் வயதின் பொருட்டு அவன் இதைப் பற்றி மகனிடம் பேசவில்லை. சரியான சமயம் அமைந்த போது தான் அவன் மகனிடம் இதைப் பற்றிக் கேட்டது.

திருமண வைபவத்தில் மாப்பிள்ளை காசி யாத்திரை செல்ல வேண்டும். விஷ்ணுபிரஹான் அப்படியே மண்டபத்தை விட்டு தப்பித்து ஓடிவிடலாமா ? என்று கூட எண்ணினான். ஆனால் சுற்றியிருந்த கூட்டம் அதற்கு விடவில்லை. வேறுவழியின்றி அவன் உள்ளே வந்தான்.

தந்தையின் மடியில் அமர்ந்திருந்த ஆராதனா கழுத்தில் மங்கல நாணை கொண்டு சென்று மூன்று முடிச்சிட்டு அவளைத் தன்னவளாக்கி கொண்டான். ஆனால் அவன் அவளைச் சிறிதும் ஏறிட்டும் பார்க்கவில்லை. அவனது மனம் முழுவதும் வெறுப்பு மண்டியிருந்தது.

' திருமணம் மட்டும் தானே நீங்க பண்ணி வைக்க முடியும் ? அதுக்குப் பிறகான வாழ்க்கை என் விருப்பம்... அதில் தலையிட யாருக்கும் உரிமை இல்லை. ' என்று அவன் வன்மத்துடன் நினைத்தான்.

அவனது வெறுப்பிற்கு , வன்மத்திற்குப் பலியாகப் போவது சின்னஞ்சிறு பெண்ணின் காதல் மனம் என்பதை அப்போது அவன் அறியவில்லை.

எல்லா மணமக்களும் ஆர்வத்துடன் எதிர்பார்க்கும் முதலிரவு அவர்களுக்கும் வந்தது. ஆராதனா ஆர்வமும் , ஆசையுமாய் அறைக்குள் நுழைய... விஷ்ணுபிரஹானோ அவள் வருவதற்கு முன் தூங்கி இருந்தான். அதைக் கண்டு முதலில் திகைத்தவள் பின்பு அவனைப் பார்த்தபடி நின்றிருந்தாள். அவனது செயல் கண்டு அவள் தவறாக நினைக்கவில்லை. மாறாக அசதி என்று நினைத்து கொண்டாள். அதே போல் தான் அவன் திருமணத்திற்கு முன் தன்னிடம் பேசாததைக் கூட அவள் பொருட்படுத்தவில்லை. அவந்திகா கூடக் கவலைப்பட்டுக் கேட்ட போது ,

"காலம் முழுசும் பேசத்தானே போகிறோம்." என்று அவள் அன்னையைச் சமாதானப்படுத்தினாள்.

"அதானே... என் பட்டுச் சொல்றது சரி தான். நீயும் , நானும் கல்யாணத்துக்கு முன்னாடி பேசி , பழகிட்டா இருந்தோம். இப்போ நல்லா வாழலையா ?" அர்ஜூன் மகளுக்குப் பரிந்து வர...

"நான் கொஞ்சம் சுதாரிக்கலைன்னா நம்ம வாழ்க்கை அந்தரத்தில் ஆடியிருக்கும். மௌன சாமியார்." கணவனுக்கு வார்த்தையால் குட்டு வைத்தாள் அவந்திகா.

"உன்னை மாதிரி நம்ம பட்டுவும் அவள் வாழ்க்கையைப் பார்த்து கொள்வாள். உன்னுடைய சாமர்த்தியம் அவளுக்கு இருக்கு." கணவனது வார்த்தையில் சற்று சமாதானமானாள் அவந்திகா.

அதை நினைத்து பார்த்தபடி அமர்ந்திருந்தாள் ஆராதனா. பின்பு யுஎஸ் போவதற்கு வேண்டிய ஆயத்தங்களைச் செய்ய ஆரம்பித்தாள். ஆம் , அவள் மருத்துவ மேற்படிப்புக்காக யுஎஸ் போக இருந்தாள். அப்போது தான் விஷ்ணுபிரஹான் வரன் வந்தது. அவனும் யுஎஸ்சில் இருந்தது அவளுக்கு மிகவும் வசதியாகப் போனது.

அடுத்து வந்த நாட்கள் ஆராதனா யுஎஸ் கிளம்புவதற்கு ஆயத்தமானாள். அவளது வேலை பரபரப்பில் கணவனது பாராமுகத்தை , ஒதுக்கத்தை அவள் கவனிக்கவில்லை. அவள் அதைக் கண்டு கொள்ளாததால் அவளது பெற்றோரும் அவனைப் பற்றி அறிந்திருக்கவில்லை. விடுமுறை கிடைக்கவில்லை என்று விஷ்ணுபிரஹான் முதலில் யுஎஸ் கிளம்பி போய்விட்டான். அதற்கு அடுத்து இருபது தினங்கள் கழித்தே ஆராதனா யுஎஸ் கிளம்பி சென்றாள்.

ஆராதனாவை அழைத்துச் செல்ல வந்த விஷ்ணுபிரஹான் அவளிடம் எதுவும் பேசவில்லை. அமைதியாக , அழுத்தமாகக் காரை ஓட்டியபடி வந்தான். அவளும் வெளியில் வேடிக்கை பார்ப்பதில் ஆர்வம் காட்டியதால் அதைப் பெரிதாகக் கண்டு கொள்ளவில்லை. அதைவிடப் பெண்களுக்கே உண்டான இயல்பான கூச்ச குணம் கணவனிடம் இயல்பாகப் பழக விடாது தடுத்தது.

தனது வீட்டிற்கு மனைவியை அழைத்து வந்த விஷ்ணுபிரஹான் அவளுக்கு என்று தனி அறையைக் காட்டிய போது அவள் உள்ளுக்குள் அதிர்ந்து தான் போனாள். ஆனால் அதை வாய்விட்டுக் கணவனிடத்தில் கேட்காது அமைதியாகத் தனது அறைக்குச் சென்றாள். அதன் பிறகு வந்த நாட்கள் அமைதியாகச் சென்றது. அவள் தனது படிப்பில் கவனமாக இருந்தாள். அவனோ தனது வேலையில் பிசியாக இருந்தான். அப்படியே இருவரும் வீட்டில் இருந்தாலும் தேவைக்குப் பேச்சு என்று அவர்களது நாட்கள் உருண்டோடியது. அவள் தனது நண்பர்கள் வட்டத்தைப் பெருக்கி கொண்டு அவர்களுடன் ஊரை சுற்றி

பார்க்கலானாள். விஷ்ணுபிரஹானை எந்தவிதத்திலும் அவள் தொந்தரவு செய்யவில்லை.

விஷ்ணுபிரஹான் தான் மனதை போட்டு உழட்டி கொண்டான். பிறகு மனதினை ஒரு நிலைப்படுத்திக் கொண்டவன் மனைவியிடம் பேச வந்தான்.

"உன் படிப்பு முடியும் மட்டும் நமக்குள் எதுவும்..." மேலே சொல்ல முடியாது அவன் வேறு எங்கோ பார்க்க... அதைப் புரிந்து கொண்டவளாய் அவள் புன்னகையுடன் ,

"சரி..." என்றாள்.

அவன் தனக்காக ஒதுங்கி இருப்பதைக் கண்டு அவள் சந்தோசித்தாள். அவன் மீதான அவளது நேசம் பன்மடங்கு பெருகியது. அதனால் அவள் நிம்மதியாகத் தனது படிப்பில் கவனத்தைச் செலுத்தினாள். ஒரு மனைவியாகத் தனது கடமையை அவளால் செய்ய முடியவில்லை என்றாலும் , ஒரு தோழியாய் அவனுக்கு நிறைய உதவிகளைச் செய்தாள். வீட்டு வேலை , சமைப்பது என்று எல்லாம் அவனுக்காகப் பார்த்து பார்த்து செய்தாள். அவனும் இதை எல்லாம் கண்டும் காணாமல் கடந்து வந்தான்.

அந்தச் சமயத்தில் தான் வைதேகியின் வளைகாப்பு விழா வந்தது. அதற்கு விஷ்ணுபிரஹான் மனைவியை அழைத்துக் கொண்டு இந்தியா வந்தான். திருமணமான உடனேயே வைதேகி குழந்தை உண்டாகி விட்டாள். அதைச் சுட்டிக்காட்டி வைதேகியின் மாமியார் ஆராதனாவை ஜாடையாய் குத்தி காட்டி பேசினார். அதில் மனமுடைந்த ஆராதனா கண்ணீர் ததும்பிய விழிகளுடன் கணவனை ஏறிட்டு பார்த்தாள். அதில் அவனது உள்ளம் அவனது கடந்த காலத்தில் சிக்குண்டு தவித்தது.

விழா முடிந்து வீட்டிற்கு வந்த பிறகும் என்ன முயற்சித்தும் அவனது கடந்த கால வலி அவனை விட்டு போகவில்லை. அவனது ஆத்திரம் முழுவதும் அவனது தந்தை , ஸ்ரீராம் , அவளது தந்தை என்று எல்லோர் மீதும் திரும்பியது. ஆனால் அதற்குப் பலிக்கிடாவானது அவள் தான்... ஆனால்

அவளே அவன் விரித்த வலையில் தானாக வந்து விழுந்தது தான் விந்தையிலும் விந்தை.

அதற்கு அட்சாரமாக விஷ்ணுபிரஹானஂ , " நான் தனியே தொழில் தொடங்க போகிறேன். எனக்குப் பணம் வேண்டும்." என்று ஆராதனாவிடம் கேட்க... எப்போதும் இது போல் பேசாதவன் இப்போது இப்படிப் பேசுவது கண்டு வியப்புற்றவள் ஒன்றும் பேசாது சென்றுவிட்டாள். அவளது அமைதி கண்டு அவன் அவமானத்தில் குறுகி போனான். தான் நினைத்தது தவறோ ? என்று தனக்குள் வெட்கி போனான்.

அடுத்தச் சில நாட்களில் அவள் தனது பெயரில் இருந்த சொத்துக்கள் முழுவதையும் அவனது பெயருக்கு மாற்றி அமைத்த போது அவன் வாயடைத்துப் போனான். ஏனெனில் அர்ஜூனின் மொத்த சொத்துக்களில் பாதிக்கு பாதி ஆராதனாவின் பெயரில் இருந்தது. முதன்முறையாக அவனுக்கு அவள் மீது நல்லெண்ணம் வந்தது அப்போது தான். அவளுக்காவே அவன் ஸ்ரீராமிடம் மோதாது ஒதுங்கி போனான். அவளது சொத்துக்களைப் பிரிப்பதன் மூலம் ஸ்ரீராமிடம் மோதி வம்பு சண்டையை வளர்த்து ஆராதனாவை தனது வாழ்வில் இருந்து அழகாய் அப்புறப்படுத்த எண்ணி தான் அவன் இப்படிக் கேட்டது. ஆனால் அது நடக்கவில்லை. மாறாக ஆராதனாவின் தன்னலமற்ற அன்பில் விஷ்ணுபிரஹான் தான் அடக்கி வாசிக்க வேண்டி இருந்தது.

ஆராதனா நல்ல எண்ணத்தில் செய்தது பின்னால் அதுவே அவளுக்குப் பிரச்சனையாகி போனது. அவன் தொழிலஂ , தொழில் என்று நாடு நாடாக ஓடி கொண்டிருக்க... அவள் படிப்பில் தனது கவனத்தைச் செலுத்தினாள். இருவரும் சந்திக்கும் நேரம் மிகவும் குறைந்து போனது. அவன் இருக்கும் நேரம் அவளுக்கு வேலை இருக்கும். அவள் இருக்கும் நேரம் அவனுக்கு வேலை இருக்கும். அப்படிப்பட்ட நேரம் பார்த்து தான் அவன் அவளைச் சந்திக்க வந்தான். பிறகு தானே தெரிந்தது , அவளைத் தவிர்க்க வேண்டி தான் அவன் அப்படிச் செய்தது என்று... அவள் தான்

குற்றவுணர்வில் குமைந்து போவாள். தான் அவனுக்கு நல்ல மனைவியாக நடக்கவில்லையோ என்று... அவளது குற்றவுணர்வில் அவன் குளிர் காய்ந்தான் என்று சொல்வது தான் மிகச் சரி...

இப்படித் தாமரை இலை தண்ணீர் போன்று அவர்களது வாழ்க்கை ஒரு வருடம் , இரண்டு வருடங்கள் அல்ல , ஐந்து வருடங்கள் ஒட்டாது ஓடி சென்றது. அதற்கு அவளது படிப்பை காரணம் காட்டி அவன் விலகியே இருந்தான். மருத்துவப் படிப்பு கடல் போன்றது. அதில் படிப்பதற்கு நிறைய இருந்ததால் அவளும் அதில் மூழ்கி போனாள்.

ஐந்து வருடங்கள் கடந்த பின்பு ஒருநாள் இந்தியாவில் இருந்து யுஎஸ் வந்த விஷ்ணுபிரஹான் கையோடு விவாகரத்துப் பத்திரத்தை கொண்டு வந்திருந்தான். அதை அவள் முன் நீட்டிய போது அவள் அதிர்ந்து போய் அவனைப் பார்த்தாள். அவன் அவளைப் பார்த்தால் தானே அவளது அதிர்ச்சி அவனுக்குத் தெரியும்.

"எனக்கு உன் மேல் எந்தவித இன்ட்ரெஸ்ட்டும் இல்லை... நான் அர்ச்சனாவை கல்யாணம் பண்ணிக்கப் போகிறேன். அதற்கு நீ தடையாக இருக்கிற... அதனால் நீயும் , நானும் மியூச்சுவல் அன்டர்ஸ்டாண்டிங்கில் பிரிந்து விடலாம்."

இயந்திரத்தன்மையுடன் சொல்லியவன் அடுத்த நொடி வீட்டை விட்டுச் சென்றிருந்தான். அவன் செல்வதை அவள் நம்ப முடியாது பார்த்திருந்தாள். அப்போது அவன் கூறிய அர்ச்சனா என்கிற பெயர் கூட அவளது காதில் விழவில்லை. அவளது மனம் துயரத்தில் துவண்டிருந்தது.

மீண்டும் அவன் வீட்டிற்கு வந்த போது அவன் கொடுத்த விவாகரத்துப் பத்திரத்தில் ஆராதனா கையெழுத்து போட்டு மேசை மீது வைத்திருந்தாள். அதன் அருகில் வீட்டுச் சாவி மற்றும் அந்த மாத வரவு , செலவு கணக்கு அடங்கிப் புத்தகம் , மீதியிருந்த டாலர்கள் எல்லாம் இருந்தது. இப்படி ஒரு செயலை அவளிடம் இருந்து அவன் எதிர்பார்க்கவில்லை. அவள் தன்னிடம் சண்டை போடுவாள் , குறைந்தபட்சம் அழுது கரைவாள் என்று

நினைத்தான். அது எதுவும் நடக்காதது அவனுக்குப் பெருத்த ஏமாற்றமாக இருந்தது. அவன் மனம் தளர்ந்து போனவனாய் சோபாவில் அமர்ந்தான். அவன் மனதில் அர்ச்சனாவின் நினைவுகளை விட ஆராதனாவின் நினைவுகளே அதிகம் இருந்தது. அதை அவன் மனதார உணரவில்லை.

விஷ்ணுபிரஹான் ஆராதனாவிடம் இருந்து விவாகரத்துப் பெற்றது கேட்டு ராகவன் அதிர்ச்சியில் படுத்த படுக்கையானார். அர்ஜூனன் , அவந்திகா திகைத்து போயினர். மகளைத் தங்களுடன் வந்து இருக்கும்படி வலியுறுத்தினர். ஆனால் அவள் அங்கு வர மறுத்து விட்டாள். ஸ்ரீராமிற்கு விஷ்ணுபிரஹான் மீது கோபம் இருந்த போதும் அவன் மீது கோபம் கொள்ள முடியவில்லை. ஏனெனில் தவறு முழுவதும் அவன் பக்கம் இருந்ததே. ஆனால் பரத்திற்கு அந்தத் தடை இல்லையே. தங்களது சொத்தை வைத்துக் கொண்டு தங்களையே ஆட்டம் காண செய்த விஷ்ணுபிரஹான் மீது அவனுக்குப் பெருத்த கோபம் எழுந்தது. அதனால் அவன் தொழிலில் விஷ்ணுபிரஹானோடு நேரிடையாக மோதினான். அப்படியிருந்தும் விஷ்ணுபிரஹானை அவனால் வெற்றிக் கொள்ள முடியவில்லை.

தன்னை உயரத்தில் அமர வைத்து விட்டு அமைதியாக ஒதுங்கி சென்ற ஆராதனா மீது நியாயத்திற்கு விஷ்ணுபிரஹானிற்கு நேசம் பெருகி இருக்க வேண்டும். மாறாகக் காயம் பட்ட அவனது நெஞ்சம் அவள் மீது கோபம் கொண்டது.

' ஐந்து வருடங்களில் நான் அவளைக் கொஞ்சமும் பாதிக்கவில்லையா ? விட்டால் போதும்ன்னு என்னை விட்டு ஓடிவிட்டாளே. அவ்வளவு சீக்கிரத்தில் அவளை என்னை விட்டு போக விட்டு விடுவேனா ?' என்று அவன் மனதிற்குள் கொதித்தான். அதற்கு ஏற்றார் போன்று அவன் சாதுர்யமாய்க் காய் நகர்த்தினான். இறுதியில் அவன் தான் அவள் மீது காதலில் விழுந்தான்.

இப்போது ஆராதனாவிடம் தனது காதலை சொல்ல முடியாது , அதே சமயம் தன் மீதான அவளது காதலை உயிர்பிக்க முடியாது விஷ்ணுபிரஹான் தவிக்கின்றான். இதற்கு எல்லாம் காரணம் அவன் தனது மனதினை அறியாது செய்த பிழை. அதுவும் பெரும் காதல்பிழை...!!!

"என் காதல்பிழை நீயடி..." கடந்த காலத்தை நினைத்து பார்த்தவனின் உதடுகள் மெல்ல முணுமுணுத்தது!!!

திருத்தமாகும்...!!!

அதிகாலையில் எப்போதும் போல் விழிப்பு வந்த ஆராதனா மெல்ல விழிகளைத் திறந்தாள். அப்போது தான் அவளுக்குச் சுற்றுப்புறம் உறைக்கச் சட்டென்று தன்னைக் குனிந்து பார்த்தாள். நாற்காலியில் அமர்ந்த நிலையிலேயே அவள் உறங்கி போயிருந்ததை உணர்ந்தாள். இரவு வெகுநேரம் தூங்காது விழித்திருந்தவள் எப்போது உறங்கினாள் என்று அவளுக்கே தெரியவில்லை. பின்பு ஞாபகம் வந்தவளாய் அவள் தரையைப் பார்த்தாள். அங்கு விஷ்ணுபிரஹான் தரையில் போர்வையை விரித்துப் படுத்திருந்தான். வயிற்றின் மீது இரு கைகளையும் கோர்த்துக் கொண்டு மல்லாக்க படுத்திருந்தவனின் முகத்தில் மட்டும் வேதனையின் சாயல் மிச்சம் இருந்தது. அதைக் கண்டு அவளது மனம் சுணங்கி போனது. ஒருவேளை அர்ச்சனாவை நினைத்து வேதனை கொள்கிறானோ ? என்று வலியோடு நினைத்தவள் அங்கிருக்கப் பிடிக்காது எழுந்து குளியறைக்குள் சென்றாள்.

அவனது கவலை , வேதனை எல்லாம் அவளைப் பற்றித் தான் என்பதை அவள் அறியவில்லை. இரவு முழுவதும் மனைவியைப் பற்றி நினைத்து வேதனை கொண்டவன் அந்த நினைவிலேயே தூங்கியதால் அந்த வேதனை இன்னமும் அவனது முகத்தில் மிச்சமிருந்தது.

ஆராதனா குளித்து முடித்து விஷ்ணுபிரஹான் அவளுக்காக வாங்கி வைத்திருந்த உடைகளில் ஒரு சுடிதாரை எடுத்து அணிந்து கொண்டாள். புடவை அணிந்தால் இரவிக்கை அணிய வேண்டும். நிச்சயம் அது கணவனை நினைவுப்படுத்தும்... எதற்கு வம்பு ? என்று அவள் சுடிதாரை அணிந்தாள்.

' அதெப்படி உன்னவன் ஞாபகம் உனக்கு வராது போகும். சுடிதாருக்குள் போட்டிருக்கும்... ' மனசாட்சி அவளிடம் நியாயமாய்க் கேள்வி கேட்க முனைந்த போது அவள் பதறி போய் மானசீகமாய் அதன் வாயை மூடினாள். அடுத்து அது

சொல்ல இருக்கும் வார்த்தைகளின் அர்த்தம் உணர்ந்தவளாய் அவள் திகைத்து நின்றாள்.

' கடவுளே ' என்று அவள் லஜ்ஜையுடன் முகத்தை மூடி கொண்டாள்.

பின்பு அவள் குளியலறை கதவை திறந்து தலையை மட்டும் வெளியில் நீட்டி பார்த்தாள். நல்லவேளையாக விஷ்ணுபிரஹான் எழும்பவில்லை. தப்பித்தோம் , பிழைத்தோம் என்று அவள் வெளியில் ஓடி வந்துவிட்டாள். நேரே கீழிறங்கி வந்தவள் பூஜையறையில் இருந்து மணி சத்தம் வருவதைக் கண்டு அங்குச் சென்றாள். அங்குச் சுந்தரி சாமி கும்பிட்டுக் கொண்டிருந்தார். ஒரே நாளில் மகனது வீட்டில் பாந்தமாகப் பொருந்தி கொண்டவரை கண்டு அவள் ஆச்சரியமாகப் பார்த்தாள்.

அவளைக் கண்டதும் புன்னகைத்த சுந்தரி தீபாராதனை தட்டை அவள் புறம் நீட்டினார். அவள் கும்பிட்டதும் அதிலிருந்த குங்குமத்தை எடுத்து அவளது நெற்றியில் வைத்து விட்டவர் பின்பு அவளது உச்சி வகிட்டில் வைத்துவிட்டார். அதில் அவளது விழிகள் இரண்டும் கலங்கியது. அவளது கலக்கத்தைக் கண்ட சுந்தரி அவளை ஆறுதலாக அணைத்துக் கொண்டார்.

"எல்லாம் சரியாகும். விஷ்ணு என் மகன்ங்கிறதுக்காகச் சொல்லலை. அவன் ரொம்ப ரொம்ப நல்லவன். ஆனா உன் கிட்ட மட்டும் தான்..." என்று நிறுத்தியவர் அவளை வாத்சல்யத்துடன் பார்த்தா ,

"நீங்க புதிதாய் வாழ்க்கையை ஆரம்பிச்சிருக்கும் இந்த நேரத்தில் நான் பழசை பேச விரும்பலை. இனியாவது உங்க வாழ்க்கையில் சந்தோசம் நிறைந்து இருக்கணும்." என்றவர் தனது புடவை தலைப்பால் கலங்கிய தனது விழிகளைத் துடைத்துக் கொண்டார்.

தன் பொருட்டு அவர் கலங்குவதைக் கண்ட ஆராதனா பேச்சை மாற்றும் பொருட்டா , " மாமா எழுந்துட்டாரா ?" என்று கேட்க...

"அப்பவே எழுந்துட்டார். அவருக்குக் காபி கொடுத்துண்டு தான் வந்தேன். உன்னைக் கூட்டிண்டு போறேன் , வா..." என்ற சுந்தரி மருமகளை அழைத்துக் கொண்டு சென்றார்.

அறைக்குள் நுழைந்த ஆராதனா ராகவன் அருகில் சென்று அமர்ந்து அவரைப் பார்த்த , " குட்மார்னிங் மாமா..." என்று புன்னகையுடன் கூற... மருமகளது புன்னகை அவரது முகத்தில் மகிழ்ச்சியை வரவழைத்தது.

"குட் மார்னிங்..." என்று அவர் பதிலுக்குக் கூற...

"பிஸியோதெரபி பண்ணுனீங்களா ?"

"இல்லை ஆரு... டாக்டருக்கு இந்த வீடு தெரியாதே. நாளைக்குத் தான் இங்கே வர சொல்லணும்." சுந்தரி அவளுக்குப் பதில் அளித்தார்.

"பரவாயில்லை மாமி... நான் சொல்லி தர்றேன்." என்ற ஆராதனா ராகவனுக்குப் ' பிஸியோதெரபி ' எனப்படும் கைகள , கால்களுக்கு அசைவு கொடுக்கும் உடற்பயிற்சியைச் சொல்லி கொடுக்கத் தொடங்கினாள். அதைக் கண்ட சுந்தரி நிம்மதியுற்றவராய் தனது வேலைகளைப் பார்க்க சென்றார்.

"ஆரு..." மாமனார் அழைப்பில் அவரை நிமிர்ந்து பார்த்தவள ,

"என்ன மாமா ?" என்க...

"என்னை மன்னிச்சிரும்மா..." அவரது வருத்தத்தில் தனது வேதனையை மறைத்து கொண்டவள ,

"எதுக்கு மன்னிப்பு எல்லாம் மாமா. நீங்க நல்லது நினைச்சு தான் பண்ணினேள். ஆனா அது தவறா போனதுக்கு நீங்க என்ன பண்ணுவேள ?" என்று சமாளிக்க... அதை உணர்ந்தவராய் ராகவன ,

"உன்னோட நல்ல மனசுக்கு எந்தக் குறையும் வராது." என்று அவளை ஆசிர்வதித்தார்.

பயிற்சி முடிந்ததும் ராகவனைச் சக்கர நாற்காலியில் அமர வைத்து அவரது காலில் எண்ணெய் ஊற்றி தேய்த்தாள் ஆராதனா. கேரள ஆயுர்வேத சிகிச்சை முறையையும் முயற்சித்துக் கொண்டிருந்தனர். அப்போது விஷ்ணுபிரஹான் அங்கு வந்தான். ஆராதனா தனது தந்தைக்குச் செய்யும் பணிவிடை கண்டு அவனது விழிகள் பனித்தது.

பெண் என்பவள் புகுந்த வீட்டிற்குக் கணவனுக்குத் தாரமாக வருவதைக் காட்டிலும் , அவனைச் சார்ந்தவர்களுக்குத் தாயாக வர வேண்டும். அப்படி வந்தால் அந்த வீட்டில் பிரச்சனை என்பதற்கு இடமே இல்லை. அப்படியொரு தாயுமானவள் ஆராதனா என்பதை உணர்ந்து கொண்டவனுக்கு நெஞ்சம் நெகிழ்ந்தது. அதுவும் அவள் தரையில் அமர்ந்து கொண்டு ராகவனின் காலில் எண்ணெய் தேய்த்துக் கொண்டிருந்தது கண்டு அவனது விழிகள் கசிந்தது. அவளது வீட்டில் அவள் இளவரசி... அவளது பெற்றோர் அவளைத் தங்க தட்டில் வைத்து தாங்குவார்கள். அதை அவன் அங்கிருந்த நாட்களில் கண்ணால் கண்டிருந்தான். அப்படிப்பட்ட இளவரசி தனது வீட்டில் தாதியாய் மாறி தனது தந்தைக்குப் பணிவிடை செய்வது கண்டு அவனுக்குப் பேச வார்த்தை வரவில்லை.

மெல்ல அவர்கள் அருகில் சென்றவன் ஆராதனா அருகில் , தந்தையின் முன் மண்டியிட்டு அமர்ந்து தந்தையை நோக்கி , " அப்பா..." என்றழைக்க... மகனின் வருகையை உணர்ந்த ராகவன் அவன் புறம் திரும்பவில்லை.

"என் கிட்ட பேசுங்கப்பா..." அவன் தவிப்புடன் தந்தையின் முகத்தைப் பார்த்தான்.

"இவனைப் போகச் சொல்லு ஆரு." அவர் மகனிடம் பேசாது மருமகளிடம் பதில் பேசினார்.

"ப்ளீஸ் பேபி , அவரை என்னிடம் பேச சொல்லு... அவர் என் கூடப் பேசி கிட்டத்தட்ட ஆறு மாசமாச்சு." அவன் மனைவியிடம் கெஞ்சினான். அவனை அதிசயமாகப் பார்த்த ஆராதனா ,

"மாமா..." என்று ராகவனை அழைக்க...

"நீ இதில் தலையிடாதே ஆரு." ராகவன் கண்டிப்பாகக் கூற... அவள் செய்வதறியாது விழித்தாள்.

"அப்பா..." விஷ்ணுபிரஹான் அவரது கைகளைப் பிடிக்க... ராகவன் தனது வலக்கையால் அவனது கையை உதறி தள்ளினார்.

உடல்நலம் சரியில்லாத மனிதருக்குள் இத்தனை சக்தியா! அவர் உதறியதில் மண்டியிட்டு அமர்ந்திருந்த விஷ்ணுபிரஹான் நிலைகுலைந்து போய்ப் பின்னால் சாயப் போனான். அதற்குள் சுதாரித்துக் கொண்ட ஆராதனா அவனது தோள்களில் கை வைத்து அவன் கீழே விழாதவாறு பிடித்துக் கொண்டாள். அவளது செயலில் , தொடுகையில் விஷ்ணுபிரஹான் மனதில் இளையராஜா சிம்பொனி வாசித்தார்.

"மாமா , ஏன் இப்படிப் பண்றேள் ? உங்களுக்கும் , அவருக்குமான பந்தம் காலம் காலமாய்த் தொடர்வது... ஆனா நான் இடையில் வந்தவள். எனக்காக உங்க மகனை நீங்க பகைச்சுக்காதேள். இது எனக்கு ரொம்பக் குற்றவுணர்ச்சியைக் கொடுக்குது. என்னைப் பொறுத்தவரை அவர் எப்படி வேணா இருந்துட்டு போகட்டும். ஆனா உங்களுக்கு எல்லாம் அவர் நல்ல மகன் , சகோதரன். என்னை வச்சு அவரது பாசத்தை எடை போடாதேள். ப்ளீஸ் , அவர் கிட்ட பேசுங்கோ மாமா."

தனக்காகத் தனது தந்தையிடம் வாதிட்ட மனைவியைக் கண்டு அவனது நெஞ்சம் காதலில் கரைந்து போனது. அவன் தனது தோள்களைப் பற்றியிருந்த அவளது கைகளுக்கு மேல் தனது கைகளை வைத்து அழுத்தம் கொடுத்தான். அவனது செயலில் பேசி கொண்டிருந்தவளின் வார்த்தைகள் தடை பெற்றது. அவள் திகைப்பாய் அவனைத் திரும்பி பார்த்தாள்.

"தேங்க்ஸ்டி பொண்டாட்டி..." என்று அவளைப் பார்த்து சொன்னவன் நிறைவாய் புன்னகைத்தான். அந்தப்

புன்னகையில் அவளது காதல் நெஞ்சம் சற்றுத் தடம் புரளத்தான் செய்தது. தள்ளியிருந்தே அவளைக் காதலால் ஆட்டுவிப்பவன் இப்போது அருகில் இருந்து அவளைச் சித்தம் கலங்க செய்தான்.

அப்போது தான் கணவனது தோள்கள் மீது தனது கைகள் இருப்பதைக் கண்டவள் சட்டென்று தனது கைகளை எடுத்துக் கொள்ள முயற்சித்தாள். அவனோ அவளது கைகளை விடாது அழுத்தமாக பற்றி இருந்தான்.

இருவரையும் கண்ட ராகவன் முகத்தில் புன்னகை பரவியது. மனதில் நிம்மதி தோன்றியது.

"பிரஹானஂ , என்னதிதூ ? மாமா இருக்காங்க..." அவள் சங்கடத்துடன் நெளிய... அவளது சங்கோஜத்தில் அவன் மெல்ல அவளது கைகளை விடுவித்தான்.

தனது கைகளை விருட்டென்று எடுத்து கொண்டவள் அப்போது தான் தனது கைகளில் இருந்த எண்ணெயை கவனித்தாள். பிறகு பயத்துடன் அவனது சட்டையைப் பார்த்தாள். அவனது சட்டையின் இரு தோள் பகுதியிலும் அவளது கை எண்ணெய் தடத்துடன் அழுத்தமாய்த் தனது முத்திரையைப் பதித்திருந்தது. அவளது பார்வையில் அவன் புரியாது பார்க்க... அவளோ அவனது சட்டையைச் சுட்டிக்காட்டினாள். அதைக் குனிந்து பார்த்தவன் பின்பு சிரித்தபடி ,

"துவைக்காது பொக்கிசமாயஂ , பத்திரமாய்ப் பாதுகாக்க வேண்டிய பரிசு இது..." என்று கண்சிமிட்டி புன்னகைத்தவன் எழுந்து நின்றான். பின்பு தனது தந்தையைப் பார்த்தவனஂ ,

"எனக்கு நம்பிக்கை இருக்கு. நீங்க என் கூடப் பேசுவீங்கன்னு..." என்று அவன் கூற... அதற்கு முறைத்து பார்த்தவரை கண்டூ ,

"ஏன்னா மேலிடமே எனக்குப் பலமா சிபாரிசு பண்ணி இருக்காங்க. அதனால் சீக்கிரமே காரியம் நடக்கும்ன்னு

நம்பிக்கை இருக்கு." என்றவன் தந்தையை இறுக அணைத்துவிட்டு அறையை விட்டு வெளியில் சென்றுவிட்டான்.

"படுவா..." என்று முணுமுணுத்த ராகவனின் உதடுகளில் புன்னகை நெளிந்தது. அதைக் கண்ட ஆராதனா அவரை ஆச்சரியமாகப் பார்த்தாள்.

"மாமா..." என்றழைத்தவளை பார்த்த ராகவன் ,

"நீ விஷ்ணு கூடச் சந்தோசமா வாழ்ந்தால் மட்டுமே நான் அவன் கூடப் பேசுவேன்." என்று கூற... அவரது வார்த்தைகளில் அவளது முகம் ஒரு மாதிரியாக மாறினாலும் தன் மீதான அவரது பாசம் கண்டு அவள் மனம் நெகிழ்ந்து போனவளாய் அவரது கைகளை அன்போடு பற்றிக் கொண்டாள். அவர் தனது வலக்கையால் அவளது கையைத் தட்டி கொடுத்தார்.

****

காலையில் எழுந்த பரத் அறையில் மனைவி இல்லாததைக் கண்டு பெருமூச்சு விட்டான். ' ஹாப்பாடி சைரன் ரூமில் இல்லை... தப்பிச்சேன்டா சாமி. ' என்று கடவுளுக்கு நன்றி சொல்லியபடி குளியலறைக்குள் நுழைந்தான். குளித்துவிட்டு மீண்டும் அவன் அறைக்குள் நுழைந்த நொடி கனிஷ்காவின் வீலென்ற அலறல் சத்தம் கேட்டது. அதைக் கேட்டுப் பதற்றம் அடைந்தவன் தனது இடுப்பில் தழுவியிருந்த துண்டை நழுவ விடாது இறுக பிடித்துக் கொண்டான். அவள் கத்திய கத்தலில் எங்கே துண்டு நழுவி விடுமோ ? என்கிற பயம் தான் அதற்குக் காரணம்...

"எதுக்குடி இப்படிக் கத்தி என் மானத்தை வாங்கிற ?" என்று கேட்டவனை முறைத்து பார்த்தவள் ,

"நீங்க இப்படி அரைக் குறையா வந்தால் கத்தாம என்ன செய்றதா ?" என்றவளை கண்டு அவனுள் எரிச்சல் மறைந்து உல்லாசம் பொங்கியது.

"நான் அரைக் குறையா வந்தா உனக்கு என்னடி ? அப்படி வெட்கம் வந்தால் திரும்பி நிக்கணும். இப்படிக் காணாததைக் கண்ட மாதிரி ஈன்னு பார்த்துக்கிட்டு இருக்கக் கூடாது. நீ பார்க்கிறதை பார்த்து எனக்குத் தான் வெட்கமா இருக்கு." என்று சிரித்தபடி சொன்னவன் உடை மாற்ற வேண்டி அலமாரியை திறந்தான்.

"ஆமாம் , நீங்க பெரிய மன்மத ராசா ?" கனிஷ்கா கோபத்துடன் இடுப்பில் கை வைத்தபடி புசுபுசுவென்று மூச்சு விட்டு கொண்டிருந்தாள்.

"அது நீ பார்த்த பார்வையிலேயே தெரியுது." பரத் அவளைத் திரும்பி பார்த்து கிண்டலாய் சிரித்தான்.

"இங்கே பாருங்கோ... தேவையில்லாம பேசாதீங்கோ." என்று அவள் ஆள்காட்டி விரலை நீட்டியபடி அவன் அருகில் வர...

"தேவையில்லாம கத்துறது நீ தான். நானில்லை..." அவனது அழுத்தமான குரலில் திடுக்கிட்டவள் அப்போது தான் அவன் அருகில் தான் வந்து நிற்பதை உணர்ந்தாள். அவள் முகம் சிவக்க சட்டென்று அவனை விட்டு விலகி நிற்க... அவளது முகச் சிவப்பை கண்டு அவனுள்ளும் ஏனோ இனம் புரியாத ஒரு உணர்வு. அவன் அமைதியாக இரு கரங்களையும் கட்டியபடி அவளது முகத்தினைப் பார்த்திருந்தான்.

அவள் ஒன்றும் பேசாது நகரப் போனாள். அவளைச் சொடக்கிட்டு அவன் அழைக்க... அவளோ திரும்பி பார்க்கவில்லை என்றாலும் அப்படியே நின்றாள்.

"நான் உன்னை ஒண்ணும் செய்ய மாட்டேன். அதனால் நீ இப்படி வீல் , வீல்ன்னு கத்தி என் மானத்தை வாங்காதே." அவன் கூறியதும் அவள் பதில் ஏதும் கூறாது மேலே நடக்கத் துவங்க... அதைக் கண்டு அவனுள் கோபம் எழுந்தது.

"நீயே என்னைத் தேடி வந்தாலும் நீ எனக்கு வேண்டாம்." அவள் அடித்ததை மனதில் வைத்துக் கொண்டு அவன் அப்படிக் கூறினான்.

"நானா ? உங்களைத் தேடியா ? நோ நெவர் ?" என்றவள் தலையைச் சிலுப்பிக் கொண்டு அறையை விட்டு வெளியில் சென்றாள்.

"போடி போ..." கோபத்துடன் முணுமுணுத்தவன் உடை மாற்ற துவங்கினான்.

பரத் உடை மாற்றி விட்டு உணவு மேசைக்கு வந்த போது அங்குக் குடும்பத்தினர் அனைவரும் ஒன்றாக அமர்ந்திருந்தனர். உணவு பரிமாறிக் கொண்டிருந்த மனைவியைப் பார்த்தவன் ஒன்றும் பேசாது உணவு உண்ண ஆரம்பித்தான்.

"அப்பா..." ஸ்ரீராம் தனது தந்தையை அழைத்தான்.

"என்ன ஸ்ரீ ?"

"நான் கம்பெனிக்குப் போகிறேன். சீதாவும் வேலைக்குப் போக முடிவு செய்திருக்கிறாள்."

மகனது முடிவு கேட்டு அர்ஜூனுக்கு வருத்தமாக இருந்தது. திருமணம் முடிந்து தேனிலவுக்கு என்று எல்லா ஏற்பாடுகளும் செய்தும் மகன்களால் தேனிலவு செல்ல முடியாததை நினைத்து அவன் வருத்தம் கொண்டான். கூடவே மகளது நினைவு எழுந்து அவனது மனதினை கவலையில் அரித்தது. அவன் கோபத்தில் மகளிடம் கடுமையாக நடந்து கொண்டாலும் மகளைப் பற்றிய நினைவுகள் அவனைக் கரையானாய் அரித்துக் கொன்றது.

"ம் , சரி..." என்று அவன் மகனிடம் சம்மதம் கூறினான்.

"ப்பா , நானும் கம்பெனிக்கு போகிறேன்." என்று பரத் கூற... அவனைப் பார்த்த அர்ஜூன் கனிஷ்காவை கேள்வியாய் பார்த்தான். அவளோ கவனமுடன் உணர்வுகளைத் துடைத்த முகத்துடன் நின்றிருந்தாள்.

"மருமகளையும் உன் கூட அழைச்சிட்டு போ..." என்றான் அர்ஜூன் உத்தரவாக...

"அவள் எதுக்கு ?" பரத் அவசரமாக இடைமறித்தான்.

"நீயும் வெளியில் போயிட்டா அந்தப் பொண்ணு தனியா இங்கே என்ன பண்ணுவாள் ?"

"நீங்க , அம்மா இருக்கீங்க தானே."

"எங்களுக்கு வேறு வேலையிருக்கு." அர்ஜூன் அசராது கூற...

வேறுவழியின்றிப் பரத் மனைவியை உடன் அழைத்துச் செல்ல சம்மதித்தான். கனிஷ்காவும் மாமனார் வார்த்தைக்காகக் கணவனுடன் செல்ல முடிவு எடுத்தாள். பரத் அமைதியாகக் காரோட்ட... கனிஷ்காவும் எதுவும் பேசாது அமைதியாக வந்தாள்.

ஸ்ரீராம் சீதாவை அவளது வங்கியின் முன் இறக்கி விட்டவன் , " மதிய சாப்பாட்டுக்கு அழைக்க வர்றேன்." என்க...

"இல்லை வேண்டாம். கடையில் வாங்கிக்கிறேன்." என்றவள் அவனிடம் விடைபெற மறந்து வங்கியினுள் நுழைந்தாள்.

அவள் செல்வதைக் கண்டு பெருமூச்சு விட்ட ஸ்ரீராம் காரை கிளப்பினான். எப்போதும் காலையில் ஸ்ரீராம் அலுவலகம் செல்லும் முன் சீதாவின் வங்கிக்கு வந்து சிறிது நேரம் கதை பேசிவிட்டு தான் செல்வான். ஆனால் இன்று அவன் அதைச் செய்யாது கிளம்ப... சீதா அதைக் கூட உணராதவளாய் செல்வதைக் கண்டு அவனுக்கு வேதனையாக இருந்தது. அதே சமயம் அவளிடம் பேசுவதற்கும் அவனுக்குப் பயமாக இருந்தது.

அலுவலக அறைக்குள் நுழைந்த பரத் தனது நாற்காலியில் அமர்ந்தபடி மனைவியைச் சொடக்கிட்டு அழைத்தான். '

இவனை... ?' என்று பல்லை கடித்தபடி அவனைப் பார்த்தாள் கனிஷ்கா.

"இங்கே நான் உனக்குச் சம்பளம் கொடுக்கும் முதலாளி. நீ கை நீட்டி சம்பளம் வாங்கும் தொழிலாளி. புருசனஂ , பொண்டாட்டி எல்லாம் வெளியில் தான். என்ன புரிஞ்சதா ?" என்று அதட்டும் குரலில் கூற...

"புரிஞ்சது முதலாளி..." ' முதலாளி ' என்கிற வார்த்தையை வேண்டுமென்றே அழுத்தி கேலியாய் உரைத்தவளை கண்டு இப்போது அவன் பல்லை கடித்தான்.

"போடி..." என்று அவன் கோபத்தோடு அவளது இருக்கையைக் காட்ட...

"என்னது ' டி ' யா ? நான் என்ன உங்களுக்குப் பொண்டாட்டியா ? உங்க கிட்ட வேலை பார்க்க வந்தா இப்படித்தான் டி போட்டு கூப்பிடுவேளா ? எனக்கு நியாயம் கிடைக்கத் தொழிற்சங்கத்தைக் கூட்ட போறேன். நான் யார்ன்னு உங்களுக்குக் காட்டுறேன்." என்று அவள் கொதித்து எழுந்து அறையை விட்டு வெளியேற முயல...

"உயிரை வாங்காத... நில்லுடி." பரத் அடக்கப்பட்ட கோபத்துடன் அவளைப் பார்த்துக் கத்தினான்.

"அப்போ மன்னிப்பு கேளுங்கோ." இரு கைகளையும் கட்டியபடி அவள் வினவ... சிறிது நேரம் அவளை முறைத்து பார்த்தவனஂ ,

"பொண்டாட்டியை டி போட்டு பேசலாம்." என்றான் கெத்து குறையாது.

"அப்போ நான் உங்க பொண்டாட்டியானா ?" அவள் அப்பாவியாய் விழி விரித்துக் கேட்க...

"மன்னிப்பை விடப் பொண்டாட்டின்னு ஒத்துக்கிறது மேல்... போ , போய் வேலையைப் பார்." அவன் தனது முறைப்பை விடாது கூற...

"அப்படி வாங்க வழிக்கு..." என்றவள் கெத்தாகத் தனது இருப்பிடத்தில் வந்து அமர்ந்தாள்.

கனிஷ்கா எப்போதும் போல் தனது வேலையில் மூழ்கி விட... பரத் தான் வேலையில் கவனம் செலுத்த முடியாது அவனது பார்வை அவள் மீது அடிக்கடி படிந்து படிந்து மீண்டது. அதை அவள் உணர்ந்தாலும் பெரிதாக அலட்டி கொள்ளவில்லை.

சரியாகப் பத்து மணிக்கு பரத்தின் அலைப்பேசி அலறியது. எடுத்து பேசியவனின் முகம் ஒரு மாதிரியாய் மாறிப் போனது. அந்த அழைப்பு துண்டிக்கப்பட்டதும் மீண்டும் அவனது அலைப்பேசி அலறியது. தொடர்ந்து வந்த அழைப்புகளை எடுக்காது தவிர்த்தவன் மனைவியைக் கோபமாகப் பார்த்தான்.

"கனி..." அவனது அழைப்பில் தெரிந்த கோபத்தில் அவள் அவனைத் திரும்பி பார்த்தாள். அவனது முகம் வழக்கத்திற்கு மாறாகக் கோபத்தில் கடுகடுத்து இருப்பதைக் கண்டு அவள் யோசனையுடன் எழுந்து வந்தாள். தன் முன் வந்து நின்றவளை முறைத்து பார்த்தவன் ,

"உன் அண்ணன் மனசில் என்ன நினைத்து கொண்டிருக்கிறான் ?" என்று கோபமாய்க் கேட்க... அவள் புரியாது திகைத்து விழித்தாள்.

"அண்ணா என்ன பண்ணினான் ?"

"என்ன பண்ணினானா ? கன்ஸ்ட்ரக்சன் கம்பெனியில் வேலை பார்த்த எல்லாத் தொழிலாளர்களையும் அவன் கம்பெனிக்கு வேலைக்குக் கூட்டிட்டு போயிட்டான். இப்போ எந்தச் சைட்டிலேயும் , எந்த வேலையும் நடக்கலை. எல்லாம் உன் அண்ணனால் வந்தது. அவனை... ?" பரத் கோபத்துடன் கை முஷ்டிகளை இறுக்கினான்.

இதைக் கேட்ட கனிஷ்காவுக்குப் பெரும் அதிர்ச்சியாகத் தான் இருந்தது. யார் பக்கம் நிற்பது ? என்று தெரியாது

அவள் திகைத்து நின்றாள்.

"எங்க கிட்டேயே விளையாடி பார்க்கிறானா ? அவனைப் போல் நானும் இறங்கி அடித்தால் என்ன நடக்கும் தெரியுமா ?" அவன் உக்கிரத்துடன் கேட்க... அவள் பதில் தெரியாது விழித்தாள்.

பரத் உடனே அண்ணனுக்கு அழைத்தான். ஏற்கெனவே விசயம் கேள்விப்பட்டு இருந்த ஸ்ரீராம் விட்டேற்றியான குரலில் ,

"அவன் என்னவோ பண்ணிட்டு போகட்டும். நாம இதுக்கு என்ன தீர்வுன்னு மட்டும் யோசிப்போம்." என்று கூற...

"அவனை ஒண்ணும் பண்ண வேண்டாமா ?"

"வேண்டாம் , விடு..."

"அது எப்படிண்ணா அவனைச் சும்மா விட முடியும் ?"

"விடுன்னு சொன்னால் விட்டு விடு பரத்." என்ற ஸ்ரீராம் எரிச்சலுடன் அலைப்பேசியை அணைத்தான்.

இனி இது போல் நிறைய நடக்கும். எல்லாவற்றிற்கும் தயாராக இருக்க வேண்டும் என்று ஸ்ரீராம் தனது மனதினை திடப்படுத்திக் கொண்டான்.

****

விஷ்ணுபிரஹானின் வரவிற்காகப் பதற்றத்துடன் காத்திருந்தாள் ஆராதனா. அவளுமே விசயத்தை மாலையில் தான் கேள்விப்பட்டாள். அந்தக் கணமே விஷ்ணுபிரஹானை அழைத்துக் கேட்க வேண்டும் என்று நினைத்தவளுக்கு வேலைப்பளு அழுத்தியதில் அவனைத் தொடர்பு கொள்ள முடியவில்லை. வேலையை முடித்துக் கொண்டு அவனது அலைப்பேசிக்கு தொடர்பு கொண்டால் அவன் அழைப்பை எடுக்கவில்லை. அதனால் அவள் வீட்டிற்கு விரைந்து வந்தாள். ஆனால் அவன் இன்னும் வீட்டிற்குத் திரும்பவில்லை.

இரவு பதினோரு மணிவாக்கில் வீட்டிற்கு வந்த விஷ்ணுபிரஹான் தனக்காக வரவேற்பறையில் காத்திருந்த மனைவியை ஓரக்கண்ணால் பார்த்தாலும் அவளைக் கண்டு கொள்ளாது தனது அறையை நோக்கி சென்றான். அவன் பின்னேயே அறைக்குள் சென்றவள் ,

"நீங்க பண்றது கொஞ்சம் கூடச் சரியில்லை." முகத்தில் எள்ளும் கொள்ளும் வெடிக்கக் கேட்க... அவன் மனைவியைச் சுவாதீனமாகப் பார்த்தபடி கட்டிலில் அமர்ந்து தனது கழுத்தில் இருந்த டையை நிதானமாகக் கழற்றினான்.

"நான் ஒண்ணுமே பண்ணலையேடி." என்று குறும்புடன் கண்சிமிட்டியபடி கேட்டவனின் முகத்தில் நாள் முழுவதும் உழைத்த களைப்பை மீறித் தாராளமாகப் புன்னகை மலர்ந்தது.

"நான் அதைச் சொல்லலை." அவள் கோபமாய் அவனை முறைத்தாள்.

"நான் எதைச் சொன்னேன்னு உனக்குத் தெரியுமா ?" என்று கேலியாய் , கேள்வியாய் புருவத்தை உயர்த்தியவன் தலையில் எதையாவது போட்டு உடைக்கலாமா ? என்று யோசித்தபடி சுற்றும் முற்றும் பார்த்தவளின் விழிகளில் அங்கிருந்த பூச்சாடி தென்பட்டது.

"கொலையும் செய்வாள் பத்தினின்னு கேள்விப்பட்டு இருக்கேன். ஆனா இப்போ தான்டி நேரில் பார்க்கிறேன். மீ பாவம் , என்னயிருந்தாலும் நான் உன்னுடைய அருமை புருசன் இல்லையா ?" இரு கைகளையும் தலையின் மீது பாதுகாப்பாய் வைத்துக் கொண்டு பயப்படுவது போல் நடித்தவனைக் கண்டு அவளுக்குச் சற்றுச் சிரிப்பு வந்தது.

"சிரிப்பு வந்தா சிரிச்சரணும் பேபி."

"ப்ச் , பேச்சை மாத்தாதீங்கோ. நான் கேட்டதுக்குப் பதில் சொல்லுங்கோ." அவள் விடாப்பிடியாய் நிற்க...

"நான் என்ன பண்ணினேன்னு நீ சொன்னால் தானே எனக்குத் தெரியும் ?" அவன் நகைச்சுவையைக் கைவிட்டவனாய் அவளை ஆழ்ந்து பார்த்தான்.

"உங்களால் அப்பாவோட பிசினஸில் நஷ்டமாமே ?" என்றவளை தீர்க்கமாய்ப் பார்த்தவன் ,

"ஆமா , அதுக்கென்ன... ?" என்றான் அலட்சியமாக...

"அவா என்ன பாவம் பண்ணினா ? இப்படிப் படுத்தி எடுக்கறேள்."

"நான் படுத்தி எடுக்கிறதில் அவங்க காலடியில் வந்து கதறி விழணும். நாங்க தப்பு பண்ணிட்டோம்ன்னு. அதான் எனக்கு வேணும்." என்று கொஞ்சமும் இரக்கம் இல்லாது அவன் கூற... அவனை வெறுப்புடன் பார்த்தவள் ,

"சாடிஸ்ட்..." என்று கோபமாய்ச் சீற...

"நான் சாடிஸ்ட் தான். நான் இப்படித்தான்... அவங்க அவங்க தப்பை உணர்ந்து உன் காலடியில் வந்து விழணும். அவங்களுக்கு நீ எந்தளவுக்கு முக்கியம்ங்கிறதை அவங்க உணரணும். இல்லைன்னா உணர வைப்பேன். ஒரு செகண்ட்ல உன்னைத் தூக்கி போட்டுட்டாங்கல்ல. அதே மாதிரி உன்னைத் தேடி அவங்களை வரவழைப்பேன்." என்றவனைக் கண்டு அவள் பேச இயலாது வாயடைத்து போய் நின்றாள்.

அவனைப் பாம்பு என்பதா ? இல்லை பழுது என்பதா ? அது அவளுக்கே தெரியவில்லை!!!

"நீ அப்படியென்ன பெரிய தப்பு பண்ணிட்ட. கட்டின புருசனை விட்டு கொடுக்காது இருந்தது தவறா ? அதுக்காக உன்னைத் தன்னோட மகள் இல்லைன்னு உங்கப்பா சொல்வாரா ?" என்று கோபத்துடன் கத்தியவன் அவள் அருகே வந்து அவளது விழிகளை நேருக்கு நேர் நோக்கியபடி ,

"எனக்காக உன்னைப் பெத்தவங்க , கூடப்பிறந்தவங்களை விட்டுட்டு வந்திருக்க. அதுக்காக நான் செய்யும் சிறு கைம்மாறு இதுன்னு வச்சுக்கோயேன்." என்றான் அவளுக்குப் புரியும்படி...

"நான் எங்கே வந்தேன்... ? நீங்க தான் என்னைத் தள்ளிட்டு வந்திருக்கேள்." என்று அவள் முகத்தைத் திருப்பிக் கொண்டாள்.

"ஹா ஹா..." என்று அட்டகாசமாய் வாய்விட்டு சிரித்தவன்
,

"தள்ளிட்டு வந்தாலும் அழகான பிகரை தானே தள்ளிட்டு வந்திருக்கேன்." இமை சிமிட்டியவனைக் கண்டு அவள் இயலாது பார்த்தாள். அவனோ சிரிப்பு மாறாது அவளைப் பார்த்திருந்தான். பிறகு அவனையே உற்று நோக்கியவள்
,

"நீங்க பொய் சொல்றேள்..." என்று சந்தேகமாக அவனைப் பார்க்க... அதைக் கேட்டு அவனது விழிகளில் மெச்சுதல் வந்தது.

"புத்திசாலிடி நீ... பிசினஸ்க்காரன் பொண்டாட்டின்னு நிரூபிக்கிற."

"நான் பிசினஸ்க்காரர் பொண்ணு." அவள் முறுக்கி கொள்ள...

"அது எல்லாம் இறந்த காலம். இப்போ நீ என் மனைவி... இது தான் நிரந்தரம்."

"ப்ச் , அதை விடுங்கோ... நீங்க பண்ணிய இந்தக் காரியம் ஒருநாள் ராத்திரியில் சாதிச்சிருக்க முடியாது." என்றவள் அவனைக் கூர்ந்து பார்த்த ,

"அதனால் பல நாள் திட்டமிட்டுக் கனக்கச்சிதமா காரியத்தை முடிச்சிருக்கீங்க." என்று கோபத்தோடு கூற...

அவனும் தனது சிரிப்பை கைவிட்டவனாய் அங்கிருந்த ஜன்னல் புறம் சென்று வெளிப்புறம் வேடிக்கை பார்த்தவன்

பின்பு அவளைத் திரும்பி பார்த்தூ ,

"ஆமா , இது நான் பல நாள் திட்டம் போட்டு செய்தது தான்." என்றான் அசால்ட்டாக... அவனது வார்த்தையில் அவன் புறம் கோபமாய் வந்தவளி ,

"இப்படி ஒரு குரூர புத்தி உங்களுக்குள் இருக்கும்ன்னு நான் நினைக்கவே இல்லை." என்று அவனது சட்டையைப் பிடித்துக் கொண்டு கேட்க...

"உன்னைப் பொறுத்தவரையில் நான் தான் வில்லனாச்சே. வில்லன் இப்படித்தான் செய்வான்." அவனது குரல் இறுகி போய் ஒலித்தது. அதை அவள் கவனிக்கவில்லை.

"என்னைப் பழிவாங்கிறதா நினைச்சு என் குடும்பத்தைப் பழிவாங்குறேளா ? ஏன் இப்படிப் பண்றேளி ? இதுக்கு நீங்க எனக்கு விசம் கொடுத்து கொன்னுருங்கோ. இந்தக் கண்றாவி எதையும் பார்க்காம நான் நிம்மதியா போய்ச் சேருவேன்." ஆங்காரமுமி , அழுகையும் கலந்து ஒலித்தது அவளது குரல்...

அடுத்த நொடி விஷ்ணுபிரஹான் மனைவியின் குரல்வளையை இறுக பிடித்திருந்தான். அவனது விழிகள் இரண்டும் ஆத்திரத்தில் தீக்கங்குகளாய் ஜொலித்தது. அவனது கோபத்தினைக் கண்ட ஆராதனா அதிர்ச்சியில் சிலையாய் சமைந்தாள்.

திருத்தமாகும்...!!!

மனைவியின் விழிகளில் தெரிந்த அதிர்வில் தன்னையே வெறுத்தவனாய் விஷ்ணுபிரஹான் தனது கையை விலக்கி கொண்டான். ஆராதனா தன்னை ஆசுவாசப்படுத்திக் கொள்வதற்காகச் சுவற்றில் சாய்ந்து நின்றாள். வேக மூச்சுகள் எடுத்துத் தன்னைச் சமன் செய்து கொள்ளும் மனைவியவளை கண்டு அவனது மனம் வலித்தது. அவளைப் பார்க்காது ஜன்னல் புறம் திரும்பியவன் ,

"இந்த மாதிரி பேசுறது இதுவே கடைசி முறையா இருக்கட்டும் ஆராதனா. இன்னும் நாம வாழவே ஆரம்பிக்கலை. அதுக்குள்ள சாவை பத்தி பேசுறியே." என்றவனது குரலில் என்ன தான் இருக்கிறதோ ? என்று தெரியாது அவள் விழித்தாள்.

"உன்னை இழந்துடுவேனோன்னு நான் தவிச்ச தவிப்பு எனக்குத் தான் தெரியும். திரும்ப அந்த வேதனையை எனக்குக் கொடுக்காதே."

முன்பொரு காலத்தில் வேறு ஒரு பெண்ணைக் காதலித்தவன் தான் அவன். அவளிடம் கூறிய அதே வார்த்தைகளை இதோ தாலி கட்டிய மனைவியிடமும் கூறுகின்றான். அவளைக் காதலித்ததைப் போல் இல்லை இல்லை... அதைவிட அதிகமாய் அவன் தன் மனைவியை நேசிக்கின்றான். ஆனால் அதை எப்படி நிரூபிப்பதோ ? எப்படிச் சொல்வதோ ? என்று தெரியாது அவன் தனக்குள் தவிக்கின்றான். தனக்கு மட்டும் ஏன் இந்த நிலைமை ? ஒருத்தியை காதலித்தோ , அவளையே மணந்தோ , காலம் முழுவதும் அவளுடன் மனமொத்து வாழும் வாழ்க்கை தனக்கு மட்டும் ஏன் அமையவில்லை ? அவன் என்ன குணக்கேடனா ? இல்லை பெண் பித்தனா ? இல்லை கெட்டவனா ? எதுவுமே இல்லையே... அவன் செய்த ஒரே தவறு காதல் வயப்பட்டது. அன்று சுகமாக இருந்த ஒன்றோ , இன்று வேதனையாக மாறி அவனை உயிரோடு கொல்கிறதே.

அவனது கரங்கள் ஜன்னல் கம்பியை இறுக பற்றியது. அவனது முகம் சொல்லொண்ணா வேதனையைப் பிரதிபலித்தது. கணவனது வார்த்தைகளில் ஆராதனா வாயடைத்து போய் நின்றாள். அவன் என்ன கூறுகின்றானஂ ? என்று அர்த்தம் புரியாது அவள் திகைத்து போய் நின்றிருந்தாள். அப்போது அவள் புறம் திரும்பிய விஷ்ணுபிரஹானஂ ,

"அன்னைக்கு உன் அப்பஂா , அண்ணன்ங்க என்னை அடிச்சு போட்டுட்டு உன்னைக் கூட்டிட்டு போகும் போது நான் தவிச்சது எனக்குத் தான் தெரியும். அதுவும் நீ மயங்கி விழுந்ததைப் பார்த்து நான் உயிரோடு செத்து போனேன். இன்னொரு முறை என்னை அதை அனுபவிக்கச் சொல்கிறாயஂா ? சொல்லு ஆராதனா..." தன்னைப் பார்த்து வினவிய கணவன் இப்படி எல்லாம் பேசுவானஂா ? என்று அவள் திகைப்பு நீங்காது அவனைப் பார்த்திருந்தாள்.

"அப்போ நான் பண்ணியது தவறு. அந்தத் தவறஂு , நீ மயங்கி விழும் அளவுக்கு உன்னைப் பாதிச்சு இருக்குன்னு தெரிஞ்சதுக்கு அப்புறம் நான் நானாக இல்லை. முற்றிலும் செயலிழந்து போய்க் கோழையாகி போனேன்." என்று வேதனையுடன் கூறியவனின் முகம் திடுமென ஆத்திரத்தில் ஜொலித்தது.

"நான் செயலிழந்து இருக்கும் போது கோழை போல் என்னைத் தாக்கிய உன் அப்பஂா , அண்ணன்களை நான் திருப்பி அடிக்க வேண்டாமஂா ? அவங்களுக்கு வெட்கமா இல்லையஂா ? செத்த பாம்பை திரும்பத் திரும்ப அடிக்கிறதுக்கு... ஏன்னா அன்னைக்கு நான் அப்படியொரு மனநிலையில் தான் இருந்தேன். அன்னைக்கு உனக்காகத் தான் நான் அமைதியா எல்லாவற்றையும் தாங்கிட்டேன். அதற்காக எல்லா நேரமும் அமைதியாகப் போறதுக்கு நான் ஒண்ணும் புத்தன் இல்லை. நானும் மனிதன் தான்... எனக்கும் உணர்வுகள் இருக்கிறது. ஒரு ஆணை அவமானப்படுத்தினால் என்ன நடக்குமஂ ? என்பதற்கு அவர்களுக்குச் சின்னச் சாம்பிள் தான் காட்டி இருக்கிறேன். இனி தான் மெயின் பிக்சர் இருக்கிறது." என்றவனஂ ,

"எனக்கு மனைவியா , நீ என்னுடன் இருக்கணும் ஆராதனா. அதுக்கு இடைஞ்சலா யார் வந்தாலும் இது தான் கதி." என்று அவன் கோபத்துடன் முடித்துக் கொள்ள...

கணவன் பேசியதை அவளால் நம்ப முடியவில்லை. ஒருமுறை காயமடைந்த இதயம் மீண்டும் காயமடையப் பயந்தது. அவனை நம்ப மறுத்தது. தனது தந்தை , சகோதரர்களுக்குத் தொழிலில் நஷ்டம் என்றதும் , அதுவும் தனது கணவனால் ஏற்பட்டது என்று தெரிந்ததும் , ஆராதனா எல்லாப் பெண்களையும் போல் பிறந்த வீட்டுப் பாசத்தில் வேதனையில் உழன்றாள்.

"அதுக்காக அவங்க தொழிலில் நஷ்டத்தை ஏற்படுத்துறது எந்த விதத்தில் நியாயம் ?"

"எனக்கு இது தான் நியாயம்... இனியொரு முறை அவங்க நம்ம பக்கம் தலை வச்சுப் படுக்கக் கூடாது. நம்மளை நினைச்சும் பார்க்க கூடாது. முக்கியமா என் கிட்டயிருந்து உன்னைப் பிரிச்சு கூட்டிட்டு போக நினைக்கக் கூடாது." அதைக் கேட்டதும் அவளுள் புசுபுசுவென்று கோபம் எழுந்தது.

"என்னமோ நீங்க தப்பே பண்ணாத மாதிரி பேசுறேள் ? நீங்க பண்ணிய தப்புகளை மறந்துட்டு பேசுறதன் விளைவு தான் நடந்தது எல்லாம். முடிஞ்சது எல்லாம் முடிஞ்சதா இருக்கட்டும். இப்போ அவங்க நஷ்டத்தைத் திருப்பிக் கொடுத்திருங்கோ. இனி அவங்களுக்கு இடைஞ்சலா இருக்காதேள்." கோபத்தோடு ஆரம்பித்தவள் முடிக்கும் போது கெஞ்சலுடன் முடித்தாள்.

அவன் மனதால் அடிப்பட்டவன் என்பதால் அவளது வார்த்தைகளுக்கு அடிபணிய மறுத்தான். அதனால் அவன் பேச மறுத்து அமைதியாக இருந்தான்.

"இது தான் உங்க முடிவா ?" அவள் அவனைக் கூர்மையாகப் பார்த்தாள்.

"ஆம்..." என்றவனின் பார்வையும் அவளைத் துளைத்தெடுத்தது.

"மிஸ்டர். விஷ்ணுபிரஹான் , எங்கப்பா , அண்ணாக்களைப் பத்தி தெரியாம பேசுறேள்." அவளது வார்த்தைகள் கேட்டு அவன் கேலியாய் புருவத்தைத் தூக்கினான். அவள் அதைக் கண்டு கொள்ளாதூ ,

"நான் சொன்னதுக்காகத் தான் உங்களை இன்னும் உயிரோடு விட்டு வச்சிருக்காங்க. இல்லைன்னா... ?" என்று நிறுத்திவிட்டுத் தன்னைப் பார்த்தவளை கண்டு அவனது உதடுகள் இளக்காரமாய் வளைந்தது.

"இல்லைன்னா என்ன பண்ணிருவாங்க ? உயிரை எடுத்துருவாங்களா ? எடுக்கச் சொல்லித்தான் பாரேன்." அவனது குரல் தெனாவெட்டாய் ஒலித்தது.

"சொல்ல மாட்டேன்னு நினைப்பா ?" அவள் அடக்கப்பட்ட ஆத்திரத்தில் கத்தினாள்.

"அப்படி ஒரு விசயத்தை நீ நினைக்கக் கூட மாட்டேன்னு எனக்குத் தெரியும். அப்படியே அவங்க என் உயிரை எடுக்க நினைச்சாலும் , என்னை எப்படிக் காப்பாத்திக்கணும்ன்னு எனக்குத் தெரியும். அதைப் பத்தி நீ கவலைப்படாதே பேபி." என்று கூறியவனின் உதடுகளில் புன்னகை நெளிந்தது.

"தொழில் என்னுடையது பிரஹான். நான் உங்களுக்கு இதை நடத்தி செல்லும் அதிகாரம் மட்டும் தான் கொடுத்து இருக்கேன்." அவள் அவனைச் சரியான இடம் பார்த்து அடித்தாள். ஒரு கணம் அவளைக் கூர்ந்து பார்த்தவன் பின்பு நிதானமாக ,

"தெரியும் , நான் யுஎஸ் சிட்டிசன் என்பதால் தொழிலை நடத்தும் அதிகாரத்தை மட்டும் எனக்குக் கொடுத்து இருந்த. ஆனா இப்பவும் அதே நிலைமை தான்னு உனக்கு எப்படித் தெரியும் ? இப்போது நான் ஒரு இந்திய குடிமகன்..." என்றான் அவன் சிறிதும் அலட்டி கொள்ளாது...

"அப்போ... ?" அவள் அதிர்ச்சியாக அவனைப் பார்த்தாள்.

"எப்பவோ உன்னுடைய சொத்துக்களை என்னுடைய பெயருக்கு மாத்திக்கிட்டேன். என்னைத் தொழிலதிபரா , அதுவும் மல்ட்டி மில்லியனரா மாத்தினதுக்கு நன்றி பேபி." அவன் தான் செய்த துரோகத்திற்கு அலட்டாது நன்றி கூறினான்.

"ஏமாத்துக்காரன்..." அவள் கோபத்தோடு அவனை முறைத்தாள்.

"என்ன பேபி இது ? நீ தானே எனக்கு எல்லாம் எழுதி கொடுத்த... நானா கேட்டேன். இப்போ வந்து இப்படிப் பேசுற ? திஸ் இஸ் நாட் ஃபேர் பேபி." என்றவன் அட்டகாசமாய் வாய்விட்டுச் சிரித்தான்.

"துரோகி..." அவள் வெறுப்புடன் அவனைப் பார்க்க... அவளை உற்று நோக்கியவன் பின்பு புன்னகையுடனே ,

"தேங்க்யூ..." என்றான்.

ஆராதனா அவனது புன்னகையைக் காண பிடிக்காதவளாய் வெறுப்புடன் முகத்தைத் திருப்பிக் கொண்டாள். அவளைக் கண்டு பெருமூச்சு விட்டவனே ,

"மாசா மாசம் நான் அனுப்பும் மெயில்களை நீ செக் பண்றியா ? இல்லையா ?" என்று கேட்க...

"பிச்சை போட்டதைப் பத்தி நான் நினைச்சு கூடப் பார்க்கிறது இல்லை." அவள் எப்போதும் கொடுப்பது போல் சூடாகப் பதிலளித்தாள்.

அதைக் கேட்டு நியாயத்திற்கு அவனது தன்மானம் அவமானத்தில் பொசுங்கி இருக்க வேண்டும். ஆனால் அவனோ உவகையுடன் அவளைப் பார்த்திருந்தான். தனக்கு முதுகு காட்டி நின்றிருந்தவளின் பின்புறம் நெருங்கி நின்று அவளது காதருகே குனிந்தவன் தனது வாய் குவித்து அவளது காதிலாடிய சிறு மணி போன்ற தொங்கட்டானை நோக்கி காற்றை ஊதினான். அவனது

மூச்சு காற்று பட்டு அவளது தேகம் சிலிர்த்து பிடறி மயிர்க்கால்கள் குத்திட்டு நின்றது. அவளது உள்ளத்தில் அவன் இருப்பதைச் சொல்லாமல் சொல்லியது அவளது மேனியின் சிலிர்ப்பு. அதை உணர்ந்து கொண்டவனின் முகத்திலோ எதையோ வெற்றிக் கொண்ட மகிழ்ச்சி தாண்டவமாடியது.

அவனது செயலில் அவள் திடுக்கிட்டுப் போய்ச் சட்டென்று திரும்பி பார்த்தாள். இதழ்களுமம் , இதழ்களும் உரசி கொள்ளும் தூரத்தில் இருவரும் நின்றிருப்பதைக் கண்டு அவள் திகைப்புடன் பின்னால் நகர... அவனோ சிறு சிரிப்புடன் முன்னால் நகர்ந்தான்.

"கிட்டே வராதேள்..." அவளுக்குப் பேச வார்த்தை வராது நா சதிராடியது.

"இதுக்கே இப்படிச் சொன்னால் எப்படிப் பேபி ? இன்னும் நிறைய இருக்கே. டாக்டருக்கே ட்யூசன் எடுக்கணும் போலிருக்கே." நமட்டு சிரிப்புடன் கூறியவனைக் கண்டு அவள் அதிர்ந்து போய் நின்றாள்.

"எதுவா இருந்தாலும் தள்ளி நின்னு பேசுங்கோ."

"இந்த விசயத்தைத் தள்ளி நின்னு பேச முடியாது. உன்னைக் கட்டிப்பிடிச்சா , முத்தம் கொடுத்து கொஞ்சிக்கிட்டே பேசணும்."

' அடப்பாவி ' என்பது போல் அவள் வாய் திறந்தா , விழி விரிந்து திகைப்பில் நிற்க... அவன் அவளது தாடையில் கை வைத்து அவளது வாயை மூடினான். அதில் அவளுக்குச் சுயவுணர்வு வர... அவள் கோபத்துடன் அவனது கைகளைத் தட்டிவிட்டாள். சிரித்தபடி விலகியவனம் ,

"என் மேல் வச்ச நம்பிக்கைக்கு நன்றி." என்க... எதற்கு என்று அவளுக்குப் புரியாவிட்டாலுமம் ,

"நம்பிக்கை... அதுவும் உங்க மேல்... குட் ஜோக்..." என்றவளம் ,

"இங்கே பாருங்கோ... உங்களுக்குமம் , எனக்கும் தான் பிரச்சனை. இனிமேல் எங்கப்பா , அண்ணாக்களை வம்பிழுக்க வேண்டாம்." என்று உறுதியான குரலில் கூற...

"அதே தான் நானும் சொல்றேன். இது எனக்கும் என் மாமனாரம் , மச்சான்ங்களுக்கும் இடையில் நடக்கும் பிரச்சனை. இடையில் நீ வர வேண்டாம்."

"ப்ச்..." என்று அவள் சலித்துக் கொள்ள...

"இது என்னோட தன்மான பிரச்சனை. நீ விலகி இருப்பது நல்லது." அவன் கடினமான குரலில் கூறினான்.

"நீங்க இப்படியே பண்ணிண்டு இருந்தால் நான் உங்கள் விட்டு விலகி போயிருவேன்." என்றவள் அவனைத் தீர்க்கமாய்ப் பார்த்தாள்.

"எனக்குத் தெரியாம நீ இங்கே இருந்து ஒரு அடி கூட எடுத்து வைக்க முடியாது. இன்னைக்குத் தனியா ஹாஸ்பிட்டல் போயிட்டு வந்த தைரியமா ? ஆனா நீ என்னுடைய காவலில் இருக்கிறங்கிற தைரியத்தில் தான் நான் என் வேலையைப் பார்க்க போனது. என்ன புரியலையா ? உன்னைச் சுற்றி என்னுடைய பாதுகாப்பு ஆட்கள் இருந்துட்டே இருப்பாங்க. ஆனா நீ அவங்களைப் பார்க்க முடியாது."

"ச்சீ வேவு பார்க்கிறேளா ?" அவள் முகத்தை அருவருப்புடன் சுளித்தாள்.

"நிச்சயம் இல்லை. நீ பாதுகாப்பாய் இருக்கிறாயா ? என்பதை உறுதிப்படுத்திக் கொள்கிறேன். அவ்வளவே..."

"இப்படியே பண்ணிண்டு இருங்க... உங்க பாதுகாப்பை மீறி ஒரு நாள் நான் கற்பூரமாய்க் காற்றில் கரைஞ்சு போகத்தான் போறேன்." அவளது வார்த்தைகளில் அவனது முகம் இறுகி போனது.

"திரும்பத் திரும்ப இதையே சொல்லாதே ஆராதனா."

"நீங்களும் திரும்பத் திரும்ப இதையே செய்யாதேள்." அவளும் பிடிவாதமாக...

"இப்போ உனக்கு என்ன தான் வேணும் ?" அவன் எரிச்சலாகக் கேட்க...

"அவங்க கூட இருந்த வரைக்கும் நல்ல மகளா , தங்கையா நான் நடந்துக்கலை. உங்களுக்காகத் தான் நான் அப்படி நடந்துக்கிட்டேன். ஆனா இப்போ... ?" என்றவளுக்கு விழிகளில் குளம் கட்டியது.

பெண்ணவளின் மனம் புரிந்ததில் அவன் அமைதியாய் நின்றிருந்தான். பிறந்த வீட்டில் இருக்கும் போது கணவனான தன் நினைவிலும் , இங்கே இருக்கும் போது பிறந்த வீட்டு நினைவிலும் மனைவி இருப்பதை அவன் உணர்ந்து கொண்டான். அதற்காக அவன் கோபம் கொள்ளவில்லை.

"அப்போ எனக்கு ஒரு பிராமிஸ் பண்ணு..." அவன் தனது வலக்கையை அவள் முன் நீட்டினான்.

"என்ன... ?" அவள் பயத்துடன் அவனைப் பார்த்தாள்.

"எந்தச் சூழ்நிலையும் நீ என்னை விட்டுப் போகக் கூடாது." என்றவனை அவள் திகைப்புடன் பார்த்தாள்.

"இதுக்கு நீ ஒத்துக்கிட்டால்... நானும் நீ சொல்றதை கேட்கிறேன்."

நாளை அவளது நிலை என்ன ? என்பது அவளுக்கே தெரியவில்லை. இப்போது கூட அவள் விஷ்ணுபிரஹானுக்காக அவனுடன் இருக்கவில்லை. அவனது பெற்றோருக்காகத் தான் இங்கே இருக்கிறாள். அவனுடனான அவளது வாழ்க்கை எப்படி இருக்கும் ? எப்படிப் போகும் ? என்பது பற்றி அவளுக்குத் தெரியவில்லை. இதில் இப்படி ஒரு வாக்கு கொடுக்க அவளால் எப்படி முடியும் ?

"முடியாது..." என்றவள் அங்கிருந்து செல்ல முயன்றாள்.

"அப்போ நானும் என்னுடைய முடிவை மாத்திக்க முடியாது." என்றான் அவனும் தீர்மானமாய்...

"முடிவு எப்போதும் உங்களுக்குச் சாதகமா இருக்காது மிஸ்டர். பிரஹான்." அவள் வீராப்புடன் கூற...

"அதையும் பார்க்கலாம்..." என்றவன் உடை மாற்ற செல்ல எண்ணி திரும்பியவன் பின்பு அவளை நோக்கி ,

"சாப்பிட்டியா ?" என்று கேட்க... அவனது வார்த்தையில் அவளது விழிகள் கலங்கியது.

"உங்க இந்த வார்த்தைக்காக நான் காத்திருந்தேன்னா இந்த ஐஞ்சரை வருசமா சாப்பிட்டு இருக்க முடியாது. என்னைப் பார்த்துக்க நேக்கு தெரியும்." என்றாள் வெடுக்கென்று... அவளது வார்த்தைகள் ஒன்றுவிடாது அவனது மனதில் முள் போல் தைத்து வலிக்கச் செய்தது. ஆனாலும் வலியை தாங்கி கொண்டா ,

"அப்போ சாப்பிட்டாச்சு அப்படித் தானே... நல்லது." என்றவன் உடையை மாற்றிக் கொண்டு கீழே படுத்தான்.

அவனைப் பார்த்தபடி மறுபக்கம் வந்தவள் கட்டிலில் ஏறி படுத்தாள். அவன் உண்டானா ? என்று எப்படிக் கேட்பத ? என்று தெரியாது அவள் வெகுநேரம் புரண்டு புரண்டு படுத்து கொண்டிருந்தாள்.

"நான் சாப்பிட்டுட்டு தான் வந்தேன் பேபி. குட் நைட்..." அவளது அலைப்புறுதல் எதனால ? என்பதை அறிந்தவனாய் அவன் பதில் கூறினான்.

அவள் திகைப்புடன் எழும்பி அவனைப் பார்க்க... அவனோ அவளைப் பார்த்து கண்சிமிட்டிவிட்டு மறுபக்கம் திரும்பி படுத்துக் கொண்டான். அந்தக் கணம் அத்தனை கசப்பையும் மீறி இருவரது இதழ்களிலும் புன்னகை நெளிந்தது.

****

பரத்துமம் , கனிஷ்காவும் வீட்டிற்கு வர இரவு மிகவும் தாமதமாகி போனது. பரத்துடன் உடனிருந்து அனைத்து வேலைகளையும் கனிஷ்காவும் இழுத்து போட்டுக் கொண்டு செய்தாள். வேறு ஆட்களிடம் பேசி அவர்களை வேலைக்கு அமர்த்திவிட்டு வர இவ்வளவு நேரம் பிடித்தது. பரத் தந்தையுடன் பேசிவிட்டு வரும் போதும் கனிஷ்கா கட்டிலில் படுத்து நன்கு உறங்கி இருந்தாள்.

' நல்லவேளை தூங்கி விட்டாள். ' என்று நினைத்தவன் குளித்துவிட்டு வந்து கட்டிலின் மறுபக்கம் வந்து படுத்தான். அருகில் படுத்திருந்த மனைவியின் முகத்தைப் பார்த்தவனுக்கு ஆச்சரியமாக இருந்தது. இந்தப் பால் வடியும் முகமா எடுத்தெறிந்து பேசுகிறது ? என்று...

"வாயாடி..." என்று முணுமுணுத்தவன் அவளைப் பார்த்தபடி உறங்கி போனான்.

ஸ்ரீராம் களைப்புடன் வந்ததைக் கண்டு சீதா எதுவும் பேசவில்லை. அவளது அண்ணன் செய்த காரியம் வேறு அவளுக்குத் தெரிந்திருந்தது. அதனால் அவள் வாயை மூடி கொண்டாள். அதுவே அவனுக்கும் சாதகமாகி போனது. எதுவும் பேசாது அமைதியாகப் படுத்துக் கொண்டான்.

அர்ஜூன் படுத்திருந்தாலும் உறங்கவில்லை என்பதை அறிந்த அவந்திகா அவன் அருகில் வந்து அமர்ந்தாள்.

"ஏன்னா..." என்றவளை அவன் கேள்வியாய் பார்த்தான்.

"நாளைக்கு நான் நம்ம பட்டுவை பார்க்க போகலாம்ன்னு இருக்கேன்."

"எதுக்கு ? நாம வேண்டாம்ன்னு அவனுக்குச் சப்போர்ட் பண்ணியவளை நீ எதுக்குப் பார்க்க போகணுமம் ? அதுவும் இன்னைக்கு அவன் பண்ணி வச்சிருக்கிற வேலைக்கு..." அர்ஜூன் பல்லை கடித்தான்.

"தொழில் பத்தி நேக்குத் தெரியாது. நான் நம்ம பட்டுவை மட்டும் தான் பார்க்கிறேன்." அவள் சளைக்காது பதில் கொடுக்க...

"உன் பொண்ணுக்கு அவன் துரோகம் பண்ணி இருக்கான். அதை மறந்துட்டு நீ பேசுற அவந்திகா." அர்ஜூனின் குரல் உயர்ந்தது. அதற்கு எல்லாம் அவள் பயப்படுவாளா என்ன ?

"உங்களுக்கு ஒரு ஷர்மிளா மாதிரி... உங்க மருமானுக்கு ஒரு அர்ச்சனா..." என்று அவள் அசராது பதில் கொடுக்க... அதைக் கேட்டு அவன் தான் அசந்து போனான்.

"அது வேறு... இது வேறு..." அர்ஜூன் அவசரமாக இடைமறிக்க...

"அந்த வித்தியாசத்தைக் கண்டுபிடிச்சால் தானே புரியும். அதுவரை யார் மேலும் பழி போடாதீங்கோ. நீங்க வரலைன்னா போங்கோ. நான் போறேன்." என்று உறுதியாய் கூறியவள் மறுபக்கம் வந்து படுத்து கொண்டாள்.

அவந்திகா படுத்ததும் உறங்கிவிட... அர்ஜூன் யோசனையுடன் படுத்திருந்தான்.

****

மறுநாள் காலையில் ஸ்ரீராம் தனது அலுவகத்திற்கு வந்த நேரம் விஜய் அவனைக் காண காத்திருந்தான். நண்பனை கண்டதும் ஸ்ரீராமின் முகம் மலர்ந்தது.

"எப்போடா இந்தியா வந்த... ?" என்று கேட்டபடி ஸ்ரீராம் விஜயை அணைத்துக் கொள்ள... அவனது அணைப்பில் அடங்காது திமிறிய விஜய் ,

"வராமல் போயிருவேன்னு நினைச்சு தான் இப்படி ஒரு காரியத்தைச் செய்தியா ?" என்று அடக்கப்பட்ட கோபத்துடன் கேட்டான்.

"விஜய் , என்ன சொல்ற ?" ஸ்ரீராம் திகைப்புடன் அவனைப் பார்த்தான்.

"உன் தங்கச்சி வாழ்க்கை நல்லா இருக்கணும்ங்கிறதுக்காக அர்ச்சனா வாழ்க்கையைப் பாழாக்கிட்டியேடா பாவி." இதற்கு என்ன பதில்

சொல்வது ? என்று தெரியாது ஸ்ரீராம் விழித்தான். அவன் சத்தியமாக இப்படியொரு வார்த்தைகளை விஜய் வாயிலிருந்து வரும் என்று எதிர்பார்க்கவில்லை.

"விஜய் , நீ ஏதோ தப்பா..." ஸ்ரீராம் பேசும் முன் தனது கையுயர்த்தி அதைத் தடுத்த விஜய் ,

"போதும் நிறுத்து ஸ்ரீ... அர்ச்சனாவுக்கு யாரும் இல்லைன்னு நினைச்சிட்டியா ? அவளுக்கு நானிருக்கேன். உன் தங்கச்சியும் , அவனும் எப்படிச் சந்தோசமா வாழ்றாங்கன்னு நானும் பார்க்கிறேன்." என்று ஆத்திரத்தில் பொரிய... அத்தனை நேரம் பொறுமையாய் இருந்த ஸ்ரீராம் தனது பொறுமையைக் கைவிட்டவனாய் ,

"விஜய் , நீ பேசுறது ரொம்பத் தப்பு. யாருடைய வாழ்க்கையில் யார் வந்து குழப்பம் பண்றது ? இனியொரு தடவை இந்த மாதிரி பேசினேன்னு தெரிந்தால்... ?" என்று நிறுத்தியவனைக் கேலியாய் பார்த்த விஜய் ,

"என்னடா பண்ணுவ... ?" என்று கேட்க...

"நான் ஒண்ணும் பண்ண மாட்டேன். அவன் பண்ணுவான் எல்லாம். அவன் யாருன்னு உனக்கே நல்லா தெரியும். விஷ்ணுபிரஹான்..."

"விஷ்ணுபிரஹான்... விஷ்ணுபிரஹான்... விஷ்ணுபிரஹான்... ச்சே , அவன் பெயரை கேட்டாலே எனக்கு எரிச்சலா இருக்கு. அப்படி என்ன தான் இருக்கு அவன் கிட்ட... ?" விஜய் எரிச்சல் தாங்காது உரக்க கத்தினான்.

"அதை நீ அர்ச்சனா கிட்ட தான் கேட்கணும்." ஸ்ரீராம் குறிபார்த்து அவனைத் தாக்கினான். அதில் விஜய் சற்று செயலிழந்து போனான். அவனது முகம் அவமானத்தில் கறுத்துப் போனது.

"நிச்சயம் ஏதோ ஒரு ஸ்பெசல் இருக்கு விஜய். இல்லைன்னா என் அம்மா , அவனோட அம்மா ,

அவனுடைய தங்கைகளஂ , ஆராதனஂா , அர்ச்சனான்னு ஒரு கூட்டமே அவனுக்குச் சப்போர்ட் பண்ணுமஂா ? லேடிஸ் சைக்காலஜி தெரிந்தவன் அவன்..."

"ச்சீ... உனக்கு வெட்கமா இல்லை ஸ்ரீ... அவனை ஆட விட்டு வேடிக்கை பார்த்துக்கிட்டு இருக்க..." என்ற விஜயை கண்டு ஸ்ரீராமின் முகம் உணர்வுகளைத் தொலைத்தது.

"சில தவறுக்குப் பிராயச்சித்தம் உண்டு. சில தவறுக்குத் தண்டனை மட்டும் தான் தீர்வு. நான் செய்த தவறுக்கு நான் தண்டனையை அனுபவிக்கிறேன். அதுவும் விரும்பியே..." என்ற ஸ்ரீராமின் பார்வை விஜயை துளைத்தெடுத்தது. அவனது பார்வையைத் தாங்க முடியாது விஜய் அங்கிருந்து விருட்டென்று கிளம்பி சென்றான்.

ஸ்ரீராம் சக்தி இழந்தவனாய் அங்கிருந்த நாற்காலியில் தொப்பென்று அமர்ந்தான்.

"மிஸ்டர். ஸ்ரீராமஂ , நான் வேறு பெண்ணைக் காதலித்தவன்... என்னால் அவளை மறக்க முடியவில்லை. இந்த ஜென்மத்தில் அவளை மறக்க முடியும்ன்னு எனக்குத் தோணலை. வீணே உங்க தங்கை வாழ்க்கையைப் பாழாக்கிக்காதீங்க. அதுவும் உங்களுக்கு இருக்கிறது ஒரே ஒரு தங்கை. அவள் சீரும் சிறப்புமாய் வாழ வேண்டிய பொண்ணு. என்ன இப்படிப் பேசுகிறானேன்னு ஆச்சரியமா இருக்கஂா ? நானும் மூன்று தங்கைகளுடன் பிறந்தவன் தான். அதனால் பெண்களின் வலி எனக்குப் புரியும். நான் என் வாழ்க்கைக்காக உங்க கிட்ட பேச வரலை. உங்க தங்கை வாழ்க்கைக்காகத் தான் பேச வந்திருக்கிறேன். ப்ளீஸஂ , இந்தக் கல்யாணத்தை எப்படியாவது தடுத்து நிறுத்திருங்க. நான் எங்க வீட்டில் பேச முடியாத சூழ்நிலையில் இருக்கேன். அதனால் தான் உங்க கிட்ட பேச வந்திருக்கேன்."

அன்று பேசிய விஷ்ணுபிரஹானின் கெஞ்சும் குரல் மீண்டும் மீண்டும் ஸ்ரீராமின் காதில் ஒலித்து அவனை வேதனைக்குள்ளாக்கியது.

' தவறு செய்துவிட்டேன் பட்டு... இப்போ அவன் கிட்ட இருந்து உன்னை மீட்கும் வழியும் தெரியவில்லை. அவனை எதிர்க்கும் துணிவும் எனக்கு இல்லை. நான் என்ன செய்யட்டும் ?' அவன் தனக்குள் புலம்பியபடி அமர்ந்திருந்தான்.

****

மறுநாள் காலையில் ஆராதனா எழும்பும் போது விஷ்ணுபிரஹான் சந்தியாவந்தனம் முடித்துக் கொண்டு பால்கனியில் இருந்து அறைக்குள் வந்தான். பஞ்சகச்சத்துடன் அவனைப் பார்க்க கூச்சம் கொண்டவளாய் அவள் தனது பார்வையைத் தழைத்துக் கொண்டு குளியலறை நோக்கி செல்ல முற்பட... அவனோ அவளது வெட்கத்தை ரசித்தவனாய் உற்சாகத்தில் விசிலடித்தான்.

"நல்லா நேரா பார்த்துச் சைட் அடிக்கலாம் பேபி. நான் உன் புருசன் தான்." என்று கேலி வேறு...

"இப்படி உங்களைப் பார்ப்பது எனக்கு என்ன புதுசா ? இதில் வெட்கப்படுறதுக்கு... ?" அவன் உண்மையைக் கூறினாலும் அதை ஏற்றுக் கொள்ள மறுத்து அவள் அவனைக் குதறிவிடும் நோக்கில் கூற... அதைக் கேட்டுப் புன்னகை மாறாது நின்றவன் ,

"ஐஞ்சு வருசமா கட்டின பொண்டாட்டி சைட் அடிச்சது கூடத் தெரியாம இருந்திருக்கியே விஷ்ணு. உன்னை எல்லாம் என்ன பண்றது ?" அவன் தனது வலக்கை ஆள்காட்டி விரலை முகத்துக்கு நேரே நீட்டி தன்னைத் தானே கலாய்த்துக் கொள்ள... அதைக் கண்டு அவள் எரிச்சலுடன் குளியலறைக்குள் புகுந்து கொண்டாள்.

அடுத்தக் கணம் அவனது முகம் புன்னகையைத் தொலைத்தது. காலம் கடந்து வந்த ஞானோதயம்... அவன் தனது வாழ்க்கையை மீட்டெடுக்க மிகவும் கஷ்டப்பட வேண்டியிருக்கும். அதை அவனும் உணர்ந்தே இருந்தான்.

அதற்காக மனைவியவளை அப்படியே விட்டு விட அவனுக்கு மனமில்லை...

ஆராதனா குளித்துவிட்டு அறைக்குள் நுழையும் போது விஷ்ணுபிரஹான் அங்கு இல்லை. அவள் நிம்மதியுடன் தனது உடைகளை மாற்றினாள். அவள் உடையை மாற்றிக் கொண்டு கீழே வந்த போது அங்கு வரவேற்பறையில் விஷ்ணுபிரஹான் தனது அன்னையுடன் பேசி கொண்டிருந்தான். அப்போது சுந்தரி மகனிடம் ,

"ஆரு வெறுங்கழுத்தா இருக்கிறது பார்க்க நேக்கு மனசுக்கு ரொம்பக் கஷ்டமா இருக்கு விஷ்ணு. நல்ல நாள் பார்த்து அவள் கழுத்தில் தாலி கட்டு விஷ்ணு. இல்லைன்னா பார்க்கிறவா தப்பா நினைப்பா..." என்று கூற...

அதைக் கேட்டு ஆராதனா திடுக்கிட்டவளாய் கணவனைப் பார்த்தாள். அதே நேரம் அவனது பார்வையும் அவள் மீது தான் இருந்தது. நிதர்சனம் நெற்றி பொட்டில் அடித்ததில் அவளது கைவிரல்கள் தன்னிச்சையாய் அவளது வெறுங்கழுத்தை வருடி பார்த்தது.

அவன் செய்தது துரோகம் என்றால்... அவள் செய்ததும் துரோகம் அல்லவா!!! துரோகமும் , துரோகமும் சமமாகி போவது போரில் மட்டுமல்ல... வாழ்க்கையிலும் தான்...!

திருத்தமாகும்...!!!

விஷ்ணுபிரஹான் வேறு பெண்ணைத் திருமணம் செய்வதற்காகத் தன்னை விட்டு விலகி போனது ஏமாற்றமா , துரோகம் என்றால்... தானும் காதலோடு மனம் நிறைய அவனைச் சுமந்து கொண்டமா , அவன் கட்டிய தாலியை கழுத்தில் சுமந்து கொண்டு வேறு ஒருவனைத் திருமணம் செய்யத் தயாரானதற்கு என்ன பெயரஃ ? அவனாவது அவள் மீது காதல் கொள்ளவில்லனெ , அவளை ஒரு பொருட்டாகக் கூட மதிக்கவில்லை. ஆனால் அவளுக்கு அவன் மீது காதல் இருந்ததே... அவள் அவனைத் தானே தன் உயிர் மூச்சாய் நினைத்து வாழ்ந்திருந்தாள். ஆராதனாவுக்குத் தன்னைக் குறித்தே அத்தனை அருவருப்பாக இருந்தது. அதிலும் தாலியை அவனிடம் கழற்றி கொடுத்ததை நினைத்து மனதிற்குள் துக்கத்தில் குமுறினாள்.

தவறு செய்துவிட்டோமோ ? என்று அவள் தனக்குள் வேதனையில் உழன்றாள். கணவன் எப்படிப்பட்டவனாக இருந்த போதும் அவள் தன் நிலையில் உறுதியாக இருந்திருக்க வேண்டுமோ ? பெற்றோருக்காக என்றாலும் தன்னிலை மாறியிருக்கக் கூடாதோ ? தான் ஏன் இப்படிப் புத்தி கெட்டு போய் நடந்து கொண்டோமஃ ? என்று அவளுக்கு வருத்தமாக இருந்தது. அவளால் கணவனது முகத்தை நேருக்கு நேர் காண முடியவில்லை. அவள் குற்றவுணர்ச்சியில் தலைகவிழ்ந்து நின்றிருந்தாள்.

அவளைப் பார்த்தபடி அமர்ந்திருந்த விஷ்ணுபிரஹான் அன்னையிடமஃ , " அர்த்தம் இல்லாது நடந்த திருமணம் அர்த்தம் இல்லாது போய்விட்டது. இனியாவது திருமண வாழ்வின் அர்த்தம் புரிந்து வாழ வேண்டும். அதுக்கு எனக்குக் கொஞ்ச நாள் அவகாசம் கொடுங்கம்மா." என்று கூறி முடித்துக் கொண்டான். அவனது வார்த்தைகளில் ஆராதனா திகைப்புடன் அவனை ஏறிட்டு பார்த்தாள்.

"என்னவோ விஷ்ணு... எல்லாம் நல்லப்படியாக நடந்தால் சரி... ?" என்றுரைத்துவிட்டு சுந்தரி எழுந்து சென்றுவிட்டார்.

சுந்தரி சென்றதும் விஷ்ணுபிரஹான் மனைவி அருகில் வந்தான். ஆராதனா தவிப்புடன் அவனைப் பார்த்தாள். அவளையும் அறியாது அவள் தனது மனதின் உணர்வுகளை விழி வழியே பிரதிபலித்தாள். அவனும் முதன்முறையாய் அவளது தவிப்பை உணர்ந்தவனாய் அவளது கைகளை ஆறுதலாகப் பற்றியவனꣳ ,

"இந்தக் கால அவகாசம் உனக்குத் தான்... எனக்கு இல்லை." என்று தெளிவாக எடுத்துரைக்க... அவள் பதில் கூற முடியாது அமைதியாக நின்றாள்.

"பட்டு..."

திடுமென ஒலித்த அவந்திகாவின் குரலில் ஆராதனா சட்டென்று தனது கைகளைக் கணவனது பிடியில் இருந்து விடுவித்துக் கொள்ள முயல... விஷ்ணுபிரஹானோ எந்தவித அவசரமும் இல்லாது தனது கைகளை மெதுவே விலக்கி கொண்டவன் பெரும் புன்னகையுடனꣳ ,

"வாங்க அத்தை..." என்று மாமியாரை அழைத்தபடி வாயிலை நோக்கி சென்றான். மகள் மற்றும் மருமகனது இணக்க நிலையைக் கண்டு சந்தோசப்பட்டுக் கொண்டே உள்ள நுழைந்த அவந்திகா ,

"நல்லா இருக்கேளா மாப்ளே... ?" என்று மருமகனிடம் நலம் விசாரித்தாள்.

"உங்க மகள் என் கூட இருக்கும் போது என் நலத்துக்கு என்ன குறைவு ? நான் ரொம்ப ரொம்ப நல்லாயிருக்கேன்." என்றவன் புன்னகையுடன் தனது மனையாளை பார்த்தான். அவனது பதிலில் அவந்திகா நிம்மதியுற்றாள். ஆனால் ஆராதனா கணவனைக் கவனிக்காது தனது அன்னையை நோக்கி விரைந்து வந்தவள் ,

"அம்மா..." என்றழைத்தபடி அன்னையைக் கட்டி கொண்டு அழுதாள்.

"ச்சீய் , அசடு மாதிரி அழுதுண்டு இருக்காதே பட்டு. டாக்டர் மாதிரி கம்பீரமா இரு." அவந்திகா மகளை ஆறுதலாய் அணைத்த போதும் அவளைக் கடிய தவறவில்லை.

"அப்படிச் சொல்லுங்க அத்தை. எப்போ பாரு , கண்ணுல டேம் திறந்து விடுறதே இவளுக்கு வேலையா போச்சு." விஷ்ணுபிரஹான் போலியாய் சலித்துக் கொள்ள... அன்னையின் தோள் வளைவில் இருந்து முகத்தை மட்டும் நிமிர்த்திக் கணவனைப் பார்த்த ஆராதனா அவனைக் கோபமாய் முறைத்தாள்.

"அத்தை , உங்க பொண்ணு கட்டின புருசன்னு கூடப் பார்க்காம என்னைக் கண்டு முறைக்கிறாள் பாருங்க..." விஷ்ணுபிரஹான் மனைவியைக் கண்டு விசமமாய்க் கண்சிமிட்டியபடி மாமியாரிடம் புகார் வாசித்தான்.

"பட்டு..." என்று அவந்திகா மகளை அதட்ட... அதற்கும் ஆராதனா கணவனை முறைக்க... அவனோ ' எப்புடி ?' என்பது போல் அவளைப் பார்த்து கேலியாய் ஜாடை காட்டிவிட்டு அங்கிருந்து அகன்றான்.

அதற்குள் சுந்தரி அங்கு வந்துவிட்டார்... அவந்திகாவை கண்டதும் அவர் ,

"வாங்கோ... வாங்கோ..." என்று முகம் மலர வரவேற்க...

"எப்படி இருக்கேள் மன்னி ? அண்ணா எப்படி இருக்கார் ?"

"நல்லா இருக்கோம் அவந்தி..."

"மன்னி , அவர் பேசியதுக்கு நான் மன்னிப்புக் கேட்டுக்கிறேன். அவர் ஏதோ கோபத்தில்..." கணவனது செயலுக்காக அவந்திகா சுந்தரியிடம் மன்னிப்பு கேட்டாள்.

"எல்லோருக்கும் வரும் கோபம் தானே. ஆனா ஆரு ரொம்ப நல்ல பொண்ணு. அவளை எல்லோர் முன்பும் அப்படிக் கோச்சுண்டு இருக்க வேண்டாம்." சுந்தரி கூறியதை கேட்டு ஆராதனாவின் முகம் சுருங்கி போனது. அவந்திகா அமைதியாகக் கேட்டு கொண்டாள்.

"அண்ணாவை பார்க்க போகலாமா ?" அவந்திகா கேட்டதும் சுந்தரி அவளை ராகவன் இருந்த அறைக்கு அழைத்துச் சென்றார். அவந்திகாவை கண்ட ராகவன் ,

"வாம்மா..." என்று சந்தோசத்தோடு வரவேற்றார்.

"நல்லா இருக்கேளா ?" அவந்திகா புன்னகையுடன் கேட்க...

"ஆரு மாதிரி மாட்டு பொண்ணு கிடைச்சிருக்கும் போது என் சௌக்கியதுக்கு என்ன குறை ? பெத்த பொண்ணு போல் என்னைப் பார்த்துக்கிறாள்."

ஒரு காலத்தில் ஆராதனா தங்களை விட ராகவன் , சுந்தரி மீது பாசம் வைத்திருந்ததைக் கண்டு அவந்திகா கோபம் கொண்டாள் தான். ஆனால் இன்று ஒரு அன்னையாக மகள் புகுந்த வீட்டில் பாராட்டு பெறுவதைக் கேட்டு அவள் புளங்காகிதம் அடைந்தாள்.

"இப்போ கொஞ்சம் நன்னா பேசுறார். கை , கால் தான் இன்னும் சரியாகலை." சுந்தரி கணவனது ஆரோக்கியத்தைப் பற்றிக் கூற... அதை அமைதியாகக் கேட்டு கொண்டாள் அவந்திகா.

அப்போது விஷ்ணுபிரஹான் காபி கோப்பைகளுடன் அங்கு வந்தான். அவன் காபி கொண்டு வருவதைக் கண்ட அவந்திகா ,

"பட்டா , என்ன இதா ? மாப்பிள்ளையை வேலை ஏவிண்டு... இனி நீ தான் இதெல்லாம் செய்யணும் ?" என்று மகளைக் கடிய...

"இருக்கட்டும் அத்தை." என்றவன் முதலில் அவந்திகாவுக்குக் காபியை கொடுத்துவிட்டு பின்பு தனது பெற்றோருக்குக் கொடுத்தான்.

“உங்களுக்கு... ?” அவந்திகா அவனிடம் கேட்க... அவன் அதற்குப் பதில் அளிக்கும் முன் ஆராதனா முந்தி கொண்டா ,

“அவர் காபி குடிக்க மாட்டார்.” என்றுரைக்க...

அதைக் கேட்டு அவனது விழிகள் காதலில் மின்னியது. அவன் விழிகளில் நேசம் கசிய தனது மனைவியின் முன் சென்று காபி கோப்பையை நீட்டினான்.

"உனக்காக ஸ்பெசலா , டபுள் ஸ்ட்ராங்கா , சுகர் குறைவா போட்டு காபி கலந்து இருக்கேன். குடிச்சிட்டு எப்படி இருக்குன்னு சொல்லு ?"

விழிகளில் ஆர்வம் மின்ன காதலோடு கேட்டவனின் பார்வை , செயலுக்கான அர்த்தம் புரிய வேண்டியவளுக்குப் புரியவில்லை. ஆனால் அவந்திகாவுக்கு மருமகனது மனம் புரிந்தது. தன் மகள் மீது அவன் கொண்டிருக்கும் நேசம் உண்மையே என்று அந்தக் கணம் அவள் உணர்ந்து கொண்டாள். ஆராதனாவோ அவனை முறைத்துக் கொண்டே காபி கோப்பையைக் கையில் எடுத்தவள் ,

"நான் உங்களைக் கேட்டேனா ?" என்று வெடுக்கென்று உரைத்தவள் அவனைப் பார்க்காது காபியை பருகினாள். அவளது வெடுவெடுவென்ற பேச்சில் அவனது முகம் சுருங்கி போனது. அதை அவந்திகா அவதானித்தபடி இருந்தாள்.

காபியை ஒரு மடக்கு குடித்த ஆராதனாவின் முகத்தில் ஆச்சரியம் வந்து போனது. தன்னுடைய விருப்பம் கணவனுக்கு எப்படித் தெரியும் ? என்று... அதை அவனிடம் கேட்கவா முடியும் ? அதனால் அவள் அமைதியாகக் காபியை பருகினாள்.

கிளம்பும் முன் அவந்திகா மகளைத் தனியாக அழைத்துப் பேசினாள். ஆராதனாவோ முகத்தைத் தூக்கி வைத்தபடி நின்றிருந்தாள்.

"எப்படியிருக்கப் பட்டு ?"

"எப்படி நல்லா இருக்க முடியும் ? இங்கே இருக்கவே நேக்கு உடம்பெல்லாம் கூசுது."

"ஏய் என்னடி இப்படிப் பேசுற ? இது உன்னோட ஆம்படையான் மனை. இங்கே இருக்கிறதுக்கு உனக்கு எதுக்குக் கூசுது ?" அவந்திகா மகளை அதட்டினாள். அதற்கு ஆராதனா அமைதியாக இருக்கவும்...

"மாப்பிள்ளையைப் பார்த்தால் உன் மேல் அன்பா இருக்கிற மாதிரி தான் இருக்கு. ஏதோ போதாத காலம் நீங்க ரெண்டு பேரும் பிரிஞ்சு இருந்தது. இப்போ ஒண்ணு சேர்ந்துட்டேள். இனியாவது அவர் மனசை புரிஞ்சிண்டு நடந்துக்கோ பட்டு."

"ம்மா , தப்பு எல்லாம் என் மேல் இருக்கிற மாதிரி பேசறேள். நீங்க அர்ச்சனாவை மறந்துட்டு பேசறேள்." அவள் வலியுடன் கூற... மகளது வலியை உணர்ந்தவளாய் அவளை அணைத்துக் கொண்ட அவந்திகா ,

"சரி நீ சொல்ற மாதிரி வச்சுக்குவோம். அர்ச்சனா தான் முக்கியம்ன்னா அவர் அவள் கூடவே போயிருக்கலாம் இல்லையா ? அவர் தன்னோட தவறை உணர்ந்து உன்னைத் தேடி வரணும்ன்னு எந்த அவசியமும் இல்லையே. அப்படித் தேடி வர்ற அளவுக்கு உன் கிட்ட அவருக்கு என்ன தேவை இருக்கு ?"

அதற்கு ஆராதனா பதில் கூறாது முகம் வேதனையில் கசங்க அன்னையை ஏறிட்டு பார்த்தாள்.

"என்னடி இப்படி வருத்தபடுற ?"

"ம்மா , என்னால் இதை எல்லாம் ஜீரணிக்க முடியலைம்மா. அவர் மனசுல நான் மட்டும் தான் இருக்கணும். அவர் மனசு , உடம்பு இரண்டிலும் சுத்தமானவரா இருக்கணும். கட்டியவர் கிட்ட நான் இதை எதிர்பார்க்கிறது தப்பா ? ராமனை போல் புருசன் வேணும்ன்னு தான் எல்லாப் பொண்ணுங்களும் நினைப்பா. நானும் அதுக்கு விதிவிலக்கு இல்லை. ஆனா இவர் அப்படி இல்லையே ?" என்று கண் கலங்கிய மகளைக் கண்டு அவந்திகாவுக்கு மிகவும் வருத்தமாக இருந்தது.

பெண்களுக்கே உண்டான சாபக்கேடா இது ? என்று அவந்திகாவுக்கு மிகுந்த வேதனையாக இருந்தது. அவளும் இப்படி ஒரு இடரில் இருந்து வெளிவந்தவள் தானே. கணவனுக்காக எல்லாவற்றையும் சகித்துக் கொண்டவள். இதோ இந்த நொடி கூட அவன் மீது சிறிதும் அருவருப்பு இல்லாதவள். ஏனெனில் அவன் மீது எந்தத் தவறும் இல்லையே. தவறு என்று தெரியாது தவறில் விழுந்தவன் அவன்... தனது வேதனையை மறக்க வேறொரு வேதனையை விலைக்கு வாங்கியவன். அதனால் தான் அவந்திகாவால் கணவனைத் தவறாக நினைக்க முடியவில்லை. அதே போல் இப்போது மருமகனையும் தவறாக நினைக்க முடியவில்லை.

"இதுக்கு என்ன பதில் சொல்றதுன்னு நேக்கு தெரியலை பட்டு. ஆனா எல்லோர் வாழ்க்கையும் கடவுளால் ஆசிர்வதிக்கப்பட்டு நல்லா அமையறது இல்லை. சிலர்

நல்லவங்களா இருந்தாலும் விதி அவங்களைக் கெட்ட வழிக்கு இழுத்துண்டு போயிருது. அதுக்காக அவங்க கெட்டவங்க இல்லை. அவங்களுக்கு உள்ளேயும் ஒரு நல்ல மனசு இருக்கு. உன் கணவரும் அப்படிப்பட்ட ஒருவரா இருக்கலாம் இல்லையா ? உன் கணவர் மனசில் அப்படி என்ன தான் இருக்குன்னு நீ தான் கண்டுபிடிக்கணும்..." என்றவள் மகளது தாடையைப் பற்றியபடி ,

"நீ என் மகள் பட்டு. வாழ்கையில் ஜெயிச்சு காட்டணும். இப்படிக் கோழை மாதிரி அழுதுண்டு இருக்கக் கூடாது." என்று அறிவுரை கூற...

"எதுக்கு இந்த அவஸ்தைம்மா ? எனக்கு யாரும் வேண்டாம்." ஆராதனா விட்டேற்றி குரலில் கூறினாள்.

மகளின் வருத்தம் புரிந்தவளாய் அமைதி காத்த அவந்திகா பின்பு , " ஒரு மாற்றமா நம்ம வீட்டுக்கு வர்றியா பட்டு ?" என்று மகளிடம் கேட்க...

"அப்பா தான் என்னை வேண்டாம்ன்னு சொல்லிட்டாரே. இனி அவரா கூப்பிட்டா தான் நான் நம்ம வீட்டுக்கு வருவேன்." மகள் முடிவாய் , உறுதியாய் கூற... அவந்திகா தான் கலங்கிய மனதுடன் மகளிடம் விடைபெற்றாள்.

வாயிலுக்கு வந்த அவந்திகா அங்கு நின்றிருந்த விஷ்ணுபிரஹானை தனியே அழைத்தாள். அவன் ஒன்றும் புரியாது மாமியாரை நோக்கி வந்தான்.

"அர்ச்சனா யாரு ?" நேரிடையாகக் கேட்ட மாமியாரை அவன் திகைப்புடன் பார்த்தான். பின்பு சமாளித்துக் கொண்டு ,

"என்னுடைய மனைவி ஆராதனா மட்டும் தான்." என்று உறுதியுடன் கூற...

"நீங்க பட்டுவை அப்படி உங்க மனைவின்னு நினைச்சிருந்தால் இடையில் இந்த ஆறு மாச காலப் பிரிவு வந்திருக்காதே." என்றவளின் பார்வை மருமகனை துளைத்தெடுத்தது. மகளுக்கு ஏற்ற மாதிரி ஆறுதல் கூறிவிட்டு வந்த போதும் அவந்திகாவுக்கு மருமகன் மீது கோபம் இருக்கத்தான் செய்தது.

' அது என் தவறு தானஂ ' என்று ஒத்து கொள்ளாது விஷ்ணுபிரஹானஂ , " இப்போதும் ஆராதனா என் மனைவின்னு நான் நினைப்பதால் தான் இத்தனை இடர்களுக்கு இடையில் அவளை என்னுடன் அழைத்து வந்தது." என்று அவன் கெத்து குறையாது கூற...

"இந்த நினைப்புச் சாகும் வரை இருந்தால் எல்லோருக்கும் நல்லது." என்று கம்பீரமாக உரைத்த அவந்திகா அவனிடம் விடைபெற்று சென்றாள்.

' ஹப்பா சாமி , அம்மாவுக்குப் பொண்ணே பரவாயில்லை. என்னவொரு ஷார்ப்...! ' விஷ்ணுபிரஹான் தனது தலையைக் குலுக்கி கொண்டான்.

****

இரவு ஒன்பது மணியை நெருங்கி கொண்டிருந்தது. ஆராதனா தன்னிடம் பரிசோதனைக்கு வந்த கர்ப்பிணி பெண்கள் அனைவருக்கும் பரிசோதனை செய்து முடித்திருந்தாள். அவள் கிளம்பலாம் என்று நினைத்த போது அவளது அறை கதவை திறந்து கொண்டு

விஷ்ணுபிரஹான் உள்ளே நுழைந்தான். அவனைக் கண்டதும் ஆச்சரியத்தில் விரிந்த அவளது விழிகள் , அவனின் பின்னே வந்த அர்ச்சனாவை கண்டதும் சுருங்கி போனது. அவளது முகம் இறுகி போனது. அவளது உணர்வுகளை அவதானித்த விஷ்ணுபிரஹான் ,

"லேட்டா வந்ததற்குச் சாரி பேபி..." என்று மன்னிப்பு வேண்ட...

"அப்பியான்ட்மென்ட்டும் எடுக்கலை." ஆராதனா சுள்ளென்று பதில் கொடுக்க...

"அதான் சாரி கேட்கிறேன்ல்ல..." என்று அவன் சற்று தணிந்து போனான். அர்ச்சனா அவன் மனைவியிடம் தணிந்து பேசுவதை நமட்டு சிரிப்புடன் பார்த்திருந்தாள்.

ஆராதனா பெருமூச்சு விட்டுத் தன்னைச் சமன்படுத்திக் கொண்டவள் அர்ச்சனாவை பார்த்த , " உட்காருங்க..." என்க...

விஷ்ணுபிரஹான் அர்ச்சனா அமர்வதற்காக நாற்காலியை பின்னுக்கு நகர்த்திக் கொடுத்தான். அதைக் கண்ட ஆராதனா மனதில் பெரும் பூகம்பம் வெடித்தது. அவள் தன் மனதின் உணர்வுகளை வெளியில் காட்டாது இருக்கப் பெருமுயற்சி செய்து அதில் வெற்றியும் பெற்றாள்.

"நர்ஸ் இவங்களுக்குப் பிபி பாருங்க..." என்று அவள் செலிவிப்பெண்ணிடம் உரைத்தாள்.

செவிலிப்பெண் அர்ச்சனாவுக்கு இரத்த அழுத்தத்தைப் பரிசோதிக்க... ஆராதனா அர்ச்சனாவின் கோப்பை புரட்டி பார்த்தாள். விஷ்ணுபிரஹான் மனைவியையே பார்த்திருந்தான். அன்று அவன் வேண்டுமென்றே அவளை வம்பிழுப்பதற்காக அர்ச்சனாவிடம் குழைந்து குழைந்து பேசி அவளை வெறுப்பேற்றினான். ஆனால் இன்றோ அவளது முக வாட்டத்தைக் கண்டு அவன் மனமுருகி நின்றான்.

இரத்த அழுத்தம் பரிசோதனை செய்த பின்பு ஆராதனா அர்ச்சனாவின் எடையைப் பார்க்க சொன்னாள். போன தடவை இருந்ததை விட அர்ச்சனாவின் உடல் எடை மிகவும் குறைந்திருந்தது. ஒரு மருத்துவராய் அர்ச்சனாவின் உடல்நலம் பற்றிக் கவலை கொண்டவளாய் ,

"என்ன பிரஹான் , நான் சொன்னதை நினைவில் வச்சிருக்கீங்களா ? இல்லையா ? அவங்களுக்குப் பிபி கொஞ்சம் அதிகரிச்சு இருக்கு. அப்புறம் அவங்க வெயிட் போன தடவை பார்த்ததுக்கு இப்போ ரொம்பவும் குறைஞ்சிருக்கு. ஸ்கேன் பண்ணி பார்த்தால் தான் தெரியும் , குறைஞ்சது பேபிஸோட எடையா ? இல்லை அர்ச்சனாவோடதான்னு ?" ஆராதனா படபடவெனப் பொரிய... விஷ்ணுபிரஹான் பதில் சொல்ல முடியாது திணறினான்.

"விஷ்ணு மேல் எந்தத் தப்பும் இல்லை டாக்டர். அவங்களைச் சத்தம் போடாதீங்க." அர்ச்சனா புன்னகையுடன் கூற...

' இவரைச் சொன்னால் இவளுக்கு ஏன் வலிக்குது ?' ஆராதனா மனதிற்குள் கோபமாய் முணுமுணுத்து கொண்டாள்.

"நீங்க ஸ்கேன் பார்க்கிற ரூமில் வெயிட் பண்ணுங்க." அர்ச்சனாவை செவிலிப்பெண்ணுடன் அனுப்பி வைத்தாள் ஆராதனா.

அடுத்து தானும் எழ போகும் போது அவளுடன் இணைந்து எழுந்த விஷ்ணுபிரஹானஂ , " அர்ச்சனாவை உன் கிட்ட செக்கப்புக்கு கூட்டிட்டு வந்தது உனக்கு வருத்தமா இருக்கலாம்." என்று கூற...

"இருக்கலாம் இல்லை... இருக்கு. போதுமஂா ? அதுக்கு என்ன செய்யப் போறேளஂ ?" காட்டமாகக் கேட்டவளை அவன் புன்னகையுடன் பார்த்தான்.

"அர்ச்சனா உன் வாழ்க்கையில் வர மாட்டாள். அதுக்கு நான் கியாரண்ட்டி."

"அப்போ உங்க வாழ்க்கையில் வருவாளஂா ?" இடக்குமடக்காகக் கேள்வி கேட்டவளை கண்டும் அவனது புன்னகை முகம் மாறவில்லை.

"நமக்கு இடையில் வர மாட்டாள். போதுமஂா ?" அவனது தணிவான பதிலை கேட்டு ஆராதனா அமைதியாக இருந்தாள்.

"உன்னைக் காயப்படுத்த கூடாதுன்னு தான் பார்க்கிறேன். ஆனா எனக்கு வேறுவழி தெரியலை. நீ தான் அர்ச்சனாவுக்கு நல்லபடியா பிரசவம் பார்ப்பேன்னு எனக்குள் ஒரு நம்பிக்கை. அதனால் தான் அவளை உன் கிட்ட அழைச்சிட்டு வந்தது. மத்தபடி உன்னை வேதனைப்படுத்தணும்ங்கிற எண்ணம் எனக்கு இல்லை." என்றவனஂ ,

"நான் வெளியில் வெயிட் பண்றேன்." என்றுரைத்துவிட்டு வெளியில் சென்றுவிட...

ஆராதனா தலையில் கை வைத்தபடி அப்படியே அமர்ந்தாள். அவளது மனம் ஒரு நிலையில் இல்லாது தவித்தது. என்றும் இல்லாத வண்ணமாக அவளிடம் விளக்கம் கொடுத்த கணவனின் இந்த முகம் அவளுக்கு முற்றிலும் புதிது. பத்து நிமிடங்கள் அப்படியே அமர்ந்திருந்தவள் பிறகு எழுந்து அறையை விட்டு வெளியில் வந்தாள்.

ஸ்கேனிங் அறைக்குள் நுழையும் முன் அங்குப் போடப்பட்டு இருந்த நாற்காலியில் அமர்ந்து அலைப்பேசியை நோண்டி கொண்டிருந்த கணவனைப் பார்த்த ஆராதனா அப்படியே நின்றாள். எல்லோரிடமும் கேட்பது போல் அவனிடமும் அந்தக் கேள்வியைக் கேட்க அவளுக்கு நா வரவில்லை. என்ன சமாதானம் செய்ய முயன்ற போதும் அவள் மனதில் பெரும் வேதனை ஒன்று அழுத்தியது. ஆனாலும் ஒரு மருத்துவராய் தனது கடமையைச் செய்ய நினைத்தவளாய் அவள் கணவனைப் பார்த்தா ,

"மிஸ்டர். விஷ்ணுபிரஹான்..." என்றழைக்க... அதில் நிமிர்ந்து பார்த்தவன் அங்கு மனைவியைக் கண்டதும் முகம் மலர எழுந்து நின்றான்.

"வர லேட்டாகும்ன்னு நினைச்சேன்..." என்றவன் அவளது களைத்து போன முகத்தை அப்போது தான் கவனித்துப் பார்த்தான்.

"ரொம்ப டயர்டா இருக்கியே பேபி ? வேலை அதிகமா ?" என்று அவளிடம் அக்கறையுடன் விசாரிக்க... அதற்குப் பதில் தராது உணர்வில்லாத முகத்துடன் ,

"ஸ்கேனில் குழந்தைங்களைப் பார்க்க வரலையா ?" என்று கேட்க...

அவளது வார்த்தைகளில் அவன் விழிகள் மின்ன அவள் அருகில் வந்தவன் சட்டென்று அவளது வயிற்றில் கை

வைத்தான். அவனது செயலில் அவள் தான் அரண்டு போனாள். நல்லவேளையாக அந்த இரவு நேரத்தில் அவனையும் , அவளையும் தவிர அங்கு வேறு யாரும் இல்லை.

"அது எப்படிப் பேபி ?" என்று ஆச்சரியமாகக் கேட்டவனை அவள் புரியாது பார்க்க...

"நான் சூரிய பகவானும் இல்லை... நீ குந்தி தேவியும் இல்லை. என் விரல் நுனி கூட உன்னைத் தொட்டது இல்லை. அப்படி இருக்கும் போது எப்படிக் குழந்தை ? ஒருவேளை என்னையும் அறியாமல் தூக்க கலக்கத்தில்... ?" ஒற்றைப் புருவத்தைத் தூக்கியபடி நமட்டு சிரிப்புடன் கேட்டவனைக் கண்டு அவளது முகம் கோபத்திலும் , வெட்கத்திலும் சிவந்தது.

"ச்சீ போடா..." என்று முணுமுணுத்தபடி அவள் அவனது கையைத் தட்டி விட்டாள்.

அவளது வார்த்தைகளைக் கேட்டவன் ஏதோ விருது கிடைத்தது போல் வாயெல்லாம் பல்லாக நின்றிருந்தான். அவள் அவனிடம் கேட்டதை மறந்து ஸ்கேனிங் அறை கதவின் மீது கை வைத்தவள் பின்பு ஞாபகம் வந்தவளாய் அவனிடம் ,

"உள்ளே வரலையா... ?" என்று கேட்க...

"இல்லை... நீயே பாரு. ஃபாரின் க்ளையண்ட் கிட்ட பேச வேண்டியிருக்கு." என்று அவன் சமாளிக்க... அவள் அவனை யோசனையுடன் பார்த்தபடி உள்ளே நுழைந்தாள்.

ஆராதனா நாற்காலியில் அமர்ந்து அர்ச்சனாவிற்கு ஸ்கேன் செய்யும் வரை அவளது மனதில் விஷ்ணுபிரஹான் அவளது வயிற்றில் கை வைத்து பார்த்த காட்சியே மீண்டும் மீண்டும் வலம் வந்தது. குழந்தைகள் என்றதும் அவன் ஏன் அர்ச்சனாவை பற்றிக் கேட்காது தன்னை நோக்கி வந்து தன் வயிற்றில் கை வைத்தான் ? அவளுள் பெரும் யோசனை உழன்றது.

"டாக்டர்..." செலிவிப்பெண் அவளை அழைக்கவும் தான் அவள் சுயவுணர்வு பெற்றாள்.

அப்போது கணினி திரையை உற்று நோக்கி கொண்டிருந்த அர்ச்சனாவை கண்டு ஆராதனாவுக்குச் சிரிப்பு வந்தது.

"ஸ்க்ரீனில் அப்படியென்ன பார்க்கிறீங்க ?"

"குழந்தைகள் யார் ஜாடையில் இருக்காங்கன்னு பார்த்தேன்."

"உங்களை மாதிரி , பிரஹான் மாதிரி தான் இருப்பாங்க. இதில் என்ன சந்தேகம் ?" புன்னகை மாறாது கூறிய ஆராதனாவை பார்த்த அர்ச்சனாவின் முகம் ஒரு மாதிரியாய் மாறியது. அர்ச்சனாவை இமைக்காது அவதானித்தபடி அமர்ந்திருந்தாள் ஆராதனா.

"என்னை மாதிரி இருந்தால் போதும் டாக்டர்." தன்னைச் சமாளித்துக் கொண்டு பதில் உரைத்தாள் அர்ச்சனா. அதைக் கேட்ட ஆராதனா அசால்ட்டாகத் தோள்களைக் குலுக்கியபடி வெளியில் வந்தாள். அர்ச்சனா உள்ளே உடை மாற்றிக் கொண்டிருந்தாள்.

தன்னைக் கண்டதும் அவசரமாக அலைப்பேசியைக் காதுக்குக் கொடுத்த கணவனைக் கண்ட ஆராதனாவின் இதழ்களில் நமட்டுச் சிரிப்பு தோன்றியது. அவள் வேண்டுமென்றே அவன் முன் வந்து நின்று சொடக்கிட்டு அவனை அழைத்தாள்.

"ஹி ஹி... என்ன பேபி ?" அவன் அசடு வழிந்தபடி அவளை ஏறிட்டு பார்க்க...

"இதே இது நானும் குழந்தை உண்டானால் இப்படித்தான் ஸ்கேன் பார்க்க வராம வெளியில் உட்கார்ந்துட்டு இருப்பீங்களா பிரஹான் ?"

முதலில் அவளது வார்த்தைகளுக்கு அர்த்தம் புரியாது விழித்தவன் பின்பு அதன் அர்த்தம் புரிந்ததும் நாற்காலியில் இருந்து துள்ளி குதித்து எழுந்தவன் ,

"அதுக்கு முன்னாடி நீ என்னை உன் கிட்ட நெருங்க விடணும் பேபி. கிட்டே வராம பேபி எப்படி வரும் ?" சரசமாகக் கூறியபடி தன்னை நெருங்கியவனைக் கண்டு திகைத்து போன ஆராதனா பின்னால் நகர்ந்தபடி ,

"சிசிடிவி கேமிரா இருக்கப் போகுது. தள்ளி நில்லுங்கோ..." என்க...

"உன் சேர்மன் சரியான லூசுடி. எங்கே கேமிரா வைக்கணும்ன்னு அவனுக்குத் தெரியலை. விவஸ்தை கெட்டவன்..." அவன் தன்னைத் தானே திட்டி கொண்டான்.

"அவரை அப்படி எல்லாம் திட்டாதீங்க. அவர் ரொம்ப ஸ்டிரிக்ட்." அவள் கேலி புன்னகையுடன் அவனை எச்சரித்தாள்.

"அவன் பார்த்தா பார்த்துட்டு போகட்டும். நான் கேட்ட கேள்விக்குப் பதில் சொல்ல ? " அவன் தாபத்தோடு வினவ...

"முதலில் நான் கேட்ட கேள்விக்குப் பதில் சொல்லுங்க மிஸ்டர். விஷ்ணுபிரஹான்..." அவள் இரு கைகளையும் கட்டி கொண்டு அவனைப் பார்த்து மிடுக்காய் கேட்டாள்.

அதுவரை இருந்த விளையாட்டுத்தனத்தைக் கைவிட்டவனாய் அவள் அருகில் வந்த விஷ்ணுபிரஹான் அவளை அலேக்காகத் தனது கரங்களில் ஏந்தி கொண்டான்.

"பிரஹான் , என்ன பண்றீங்க ?" ஆராதனா லஜ்ஜையுற்றவளாய் அவனது பிடியில் இருந்து திமிறினாள்.

"நீ தானே பதில் கேட்ட... சொல்றதை விடச் செயலில் காட்டினால் நன்றாக இருக்கும் அல்லவா ?" என்றபடி அவளை ஸ்கேனிங் அறைக்குள் தூக்கி சென்றவன் அங்கிருந்த சிறு படுக்கையில் அவளைப் படுக்க வைத்தான். பின்பு அவளது நெற்றியில் மென்மையாய் இதழ் பதித்த ,

"இப்படிச் செய்திருப்பேன்." என்று அவன் கூற... ஆராதனா கணவனது செயலில் அவனை இனிய அதிர்வுடன் பார்த்திருந்தாள். ஏதோ இனம் புரியாத உணர்வுகள் அவளது மனக்கதவை ரகசியமாய்த் தட்டியது.

"இதெல்லாம் சீக்கிரம் நடப்பதற்கு நீ மனசு வைக்கணும் பேபி." அவன் அவளது காதருகில் குனிந்து ரகசியம் பேச...

அதன் அர்த்தம் உணர்ந்தவளின் உள்ளமும் , உடலும் சிலிர்த்தது. அதே போல் அவனது மனமும் மெல்ல புரிய ஆரம்பித்தது. அந்த நேரம் அவள் அன்னை கூறிய அறிவுரைகளும் அவளது மனதில் நிலைத்து நின்று முதன்முறையாகக் கணவன் பக்கம் இருந்து அவளை யோசிக்க வைத்தது. ஆராதனா மெல்ல கணவனை ஏறிட்டு பார்த்தாள். அவளது பார்வையை உணர்ந்தவனாய் விஷ்ணுபிரஹானும் அவளையே பார்த்திருந்தான். இருவரது விழிகளும் ஒன்றை ஒன்று பிரிய மறுத்து அப்படியே இமைக்காது ஸ்தம்பித்து நின்றது.

இருவரது இணைக்க நிலையைப் புன்னகையுடன் பார்த்திருந்த அர்ச்சனாவின் விழிகளில் கண்ணீர் தளும்பி நின்றது. அவளது மனதில் ஏக்கம் முளைத்தது.

யாரின் மனதை யாரறிவாரோ...!!!

"சொல்ல முடியாத காதலும்
சொல்லில் அடங்காத நேசமும்
எண்ண முடியாத ஆசையும்
உன்னிடத்தில் தோன்றுதே"

திருத்தமாகும்...!!!

"இன்னமும் ஒண்ணு செஞ்சிருப்பேன்... அதைச் சொல்லவா , செய்யவா ?" கணவன் அனுமதி கேட்கும் போதே ஆராதனாவுக்குத் தெரிந்து போனது , அவன் இடக்குமடக்காக ஏதோ சொல்ல போகின்றான் என்று...

"வேண்டாம்..." ஆராதனா அவசரமாகத் தனது வலக்கையை எடுத்து விஷ்ணுபிரஹானின் உதடுகள் மீது வைத்தாள்.

அவனது வாய்க்கு தான் அவளால் பூட்டு போட முடிந்தது. ஆனால் அவனது விழிகளின் பார்வை வீச்சுக்கு அவளால் பூட்டு போட முடியவில்லையே. அவனது பார்வை அவளது முகத்தை விட்டு கீழிறங்கி அவளது வயிற்றின் மீது நிலைத்து நின்றது. அன்று வேறு அவள் புடவை கட்டியிருந்தாள். அவன் அவளைத் தூக்கி வந்து படுக்க வைத்ததில் அவளது புடவை சற்று விலகி அவளது வெண்ணிற வயிறு லேசாக வெளியில் தெரிந்தது. அவனது பார்வையை உணர்ந்தவள் அவசரமாகப் புடவையை இழுத்து மூடி கொண்டு வேகமாக எழுந்து அமர்ந்தாள்.

"இங்கேயும் முத்தம் கொடுத்திருப்பேன்." என்று அவள் புறம் குனிந்து ரகசியமாய்க் கூறியவனின் சூடான மூச்சுக்காற்றை அவளது நெற்றி உணர்ந்தது. அதில் அவளது முகம் வெட்கத்தில் சிவந்தது. ' என்ன இப்படிப் பேசுகிறானஃ ?' என்று அவள் யோசித்துக் கொண்டே அவன் புறம் இருந்து தனது பார்வையைத் திருப்ப முயன்றவள் அப்போது தான் அங்கு அர்ச்சனா நின்றிருப்பதைக் கண்டாள். அர்ச்சனாவின் முகத்தில் இருந்த புன்னகை , விஷ்ணுபிரஹானின் செயலை அவள் ரசிப்பது போல் நின்றிருந்த விதம் எல்லாவற்றையும் உற்று கவனித்தாள் ஆராதனா.

"அர்ச்சனா இருக்காங்க..." என்று அவள் கணவனுக்கு ஞாபகப்படுத்த... அப்போது தான் அவனும் அர்ச்சனாவை கவனித்தான்.

"அது வந்து ஹனி... அர்ச்சு..." என்று மேலே பேச முடியாது திணறியவன் சிறு வெட்கத்துடன் தனது வலக்கையைக் கொண்டு பின்னங்கழுத்தை வருடியபடி தனது பார்வையை வேறு பக்கம் திருப்பிக் கொண்டான். ஆணவனின் முகமும் வெட்கத்தில் சிவக்க ஆரம்பித்தது. ஆண்களின் வெட்கமும் அழகு தான் போலும். விஷ்ணுபிரஹான் பார்ப்பதற்கு அத்தனை அழகாக இருந்தான். ஆராதனா அவனை இமைக்காது பார்த்திருந்தாள்.

"மாமை , நீங்க நடத்துங்க..." என்று அர்ச்சனா சிரித்தபடி அறையை விட்டு வெளியில் வந்தாள்.

அடுத்து ஆராதனாவும் எழுந்து நிற்க... விஷ்ணுபிரஹான் அவளை அழைத்துக் கொண்டு வெளியில் வந்தான். மனைவியின் மாற்றத்தை குறித்து அவன் பெரிதும் ஆராயவில்லை. இயல்பாய் நடந்த ஒரு செயலாகத் தான் அவன் இதைக் கருதினான். அதனால் அதைப் பற்றி அவன் பெரிதாகச் சிந்திக்கவில்லை. தங்களுக்குள் இணக்கம் வந்துவிட்டதாய் அவன் உணரவும் இல்லை. ஆனால் அவள் கணவனுக்கும் சேர்த்து சிந்தித்தாள். யோசிக்க ஆரம்பித்தாள்.

மருத்துவமனையை விட்டு மூவரும் வெளியில் வந்தனர். ஆராதனா தனது காரை நோக்கி நடக்க ஆரம்பிக்க... விஷ்ணுபிரஹான் அவள் அருகில் வந்தை ,

"உன் காரை நாளை எடுத்துக் கொள்ளலாம். நீ என்னுடன் வா..." என்றழைக்க...

"இல்லை வேண்டாம். நீங்க போங்க..." என்றவளது பார்வை காரருகே நின்றிருந்த அர்ச்சனாவின் மீது நிலைத்திருந்தது. அதை அவன் உணர்ந்து கொண்டாலும் அவளைக் கண்டு கொள்ளாது அவளது கரம் பற்றி ,

"நீ வா..." என்று அவன் தனது காரை நோக்கி அவளை அழைத்துச் சென்றான். ஆராதனா வேறுவழியின்றிக் கணவனைப் பின்தொடர்ந்தாள். முதலில் இருந்த ஆராதனாவாக இருந்திருந்தால் மறுப்பு சொல்லி

சத்தியாகிரகம் செய்திருப்பாள். இப்போது அவளால் கணவனைத் தவறாக நினைக்க முடியவில்லை.

அவன் அர்ச்சனாவிற்குக் காரின் பின்கதவை திறந்துவிட்டவன் மனைவிக்கு முன்னால் இருந்த கதவை திறந்துவிட்டான்.

"மं , ஏறு பேபி..." பின்கதவை சாற்றியபடி அவன் கூற... ஆராதனா மறுபேச்சின்றிக் காரினுள் ஏறியமர்ந்தாள். அவளது செயலில் உற்சாகம் அடைந்தவன் உல்லாசமாய் விசிலடித்தபடி மறுபக்கம் வந்து அமர்ந்தான்.

காரை கிளப்பியவன் சாலை போக்குவரத்தில் கலந்தபடி , " டின்னருக்கு ஹோட்டலுக்குப் போகலாமா ?" என்று கேட்க... அவன் அர்ச்சனாவிடம் கேட்கின்றான் என்று நினைத்துக் கொண்டு ஆராதனா பேசாது வெளியில் வேடிக்கை பார்த்துக் கொண்டு வந்தாள்.

"பேபி , உன் கிட்ட தான் கேட்கிறேன்." அவளது கரம் தொட்டு அவன் கேட்க...

"என்னையா ?" அவள் சந்தேகமாக அவனைப் பார்த்தாள்.

"உன்னைத் தான் பேபி..." என்று அவன் சிரிப்புடன் கூற... அவள் தயக்கத்துடன் அர்ச்சனாவை திரும்பி பார்த்தாள்.

"எனக்கு ஓகே ஆராதனா... நீங்க மாமூ கேட்டதுக்குப் பதில் சொல்லுங்க."

அப்போது தான் ஆராதனா கவனித்தாளं , அர்ச்சனா தன் கணவனை ' மாமி ' என்று அழைப்பதை... இப்போது அவளால் அவர்களைத் தவறாக நினைக்கவும் முடியவில்லை. அதே சமயம் அவர்களுக்குள் என்ன உறவு இருக்கிறது ? என்பதை அவளால் புரிந்து கொள்ளவும் முடியவில்லை. அவள் குழப்பத்துடன் அமர்ந்திருந்தாள்.

"பேபி..." கணவனது குரலில் அவனைப் பார்த்தவள் சம்மதமாய்த் தலையசைத்தாள். அதைக் கண்டவன் உற்சாகமாய்க் காரை ஓட்டினான்.

கணவன் தனது கையைப் பிடித்தபடி வருவதை அப்போது தான் ஆராதனா உணர்ந்தாள். அர்ச்சனா இருப்பதை உணர்ந்து அவள் சங்கடத்துடன் தனது கையை விலக்கி கொள்ள முயல... அதற்கு அவன் விடவில்லை. அவன் ஒரு கையால் வெகு லாவகமாய்க் காரை ஓட்டினான். அவனது செயலில் அவள் முகம் சிவக்க ஜன்னல் புறம் திரும்பி கொண்டாள்.

நட்சத்திர விடுதிக்கு சென்று இறங்கிய போது ஆராதனா திகைத்து போனாள். ஏனெனில் அவளுக்கு இந்த உணவகத்தின் உணவுகள் மிகவும் பிடிக்கும்.

"எனக்கு இங்கிருக்க ரெஸ்ட்ராண்ட் பிடிக்கும்ன்னு உங்களுக்கு எப்படித் தெரியும் ?" அறியாமையுடன் கேட்டவளை புதிராகப் பார்த்தவன் ,

"உன்னைப் பத்தி எனக்கு எல்லாம் தெரியும். ஒண்ணே ஒண்ணைத் தவிர..."

கடைசி வரியை கூறும் போது அவனது குரலில் இருந்த வேறுபாட்டை உணர்ந்து ஆராதனா அவனை நிமிர்ந்து பார்த்தாள். அவனது விழிகள் மயக்கத்துடன் தனது மேனி மீது தவழ்வதைக் கண்டு அவள் தனது விழிகளை நாணத்துடன் தாழ்த்தி கொண்டாள். அர்ச்சனா இவர்களைக் கண்டும் காணாதது போல் பார்த்திருந்தாள். விஷ்ணுபிரஹான் அவன் மனைவியோடு இப்படி இருப்பதில் அவளது மனம் நிறைந்திருந்தது. அவளுமே இதைத் தான் விரும்பினாள். இத்தனை நாள் மனதில் பாரமாய் உறுத்தி கொண்டிருந்த ஒரு உணர்வு இப்போது விடுபட்டது போல் அவள் லேசாக உணர்ந்தாள்.

மூவரும் உள்ளே சென்று அங்கிருந்த ஒரு மேசையில் அமர்ந்தனர். விஷ்ணுபிரஹான் இரு பெண்களுக்கும் வேண்டிய உணவை அவனே ஆர்டர் கொடுத்தான். ஆராதனாவுக்கு அவள் விரும்புவது போல் எளிதில் ஜீரணிக்கக் கூடிய சூப் , சாலட் , சப்பாத்தி என்று ஆர்டர் செய்தான். அதே போல் அர்ச்சனாவுக்குப் பிடித்த ' சாட் ' எனப்படும் துரித உணவு வகைகளை ஆர்டர் கொடுத்தான்.

இதை எல்லாம் பார்த்திருந்த ஆராதனா தனக்குள் யோசித்தபடி அமர்ந்திருந்தாள்.

உணவு உண்டு முடித்துவிட்டு அங்கிருந்து கிளம்பும் போது விஜய் மூவரையும் பார்த்துவிட்டான். அவனது விழிகளின் சிவப்பிலேயே தெரிந்தது , அவன் அளவிற்கு அதிகமாகக் குடித்திருக்கிறான் என்று... அவனைக் கண்டதும் அர்ச்சனா பயத்துடன் விஷ்ணுபிரஹானின் கையைப் பிடித்துக் கொண்டாள். அவனும் ஆறுதலாக அவளது கையைத் தட்டி கொடுத்தான். அவர்களை நோக்கி வந்த விஜயோ அர்ச்சனா புறம் திரும்பாது ஆராதனா புறம் திரும்பி ,

"உனக்குக் கொஞ்சமும் வெட்கமா இல்லை. திரும்ப இவன் கூட வந்திருக்க..." என்று கோபத்துடன் கத்தினான். ஆராதனாவுக்கு விஜய் யாரென்று தெரியவில்லை. அவளது சகோதரனின் நண்பனாக அவன் இருந்த போதும் அவள் அவனைப் பார்த்தது இல்லை.

"விஜய் , வார்த்தையை அளந்து பேசு..." விஷ்ணுபிரஹான் விஜயின் சட்டையைப் பிடித்துவிட்டான்.

"அப்படித்தான்டா பேசுவேன். நீ வந்து , போயி விளையாடுறதுக்கு அர்ச்சனா வாழ்க்கை என்ன உனக்கு ப்ளே கிரவுண்ட்டா ?" விஜய் ஏகத்துக்கும் எகிறினான்.

"டேய்..." விஷ்ணுபிரஹானின் கைகள் விஜயின் சட்டையைப் பிடித்து முறுக்கியது.

"அர்ச்சனா வாழ்க்கைக்கு ஒரு பதிலை சொல்லுடா..." என்று விஷ்ணுபிரஹானிடம் கூறியவன் அர்ச்சனா புறம் திரும்பி ,

"நீ கவலைப்படாதே ஏஞ்சல். உனக்கு நான் இருக்கேன். உன் வாழ்க்கைக்கு நான் கியாரண்ட்டி." என்று கூற... அதைக் கேட்க சகிக்க முடியாத அர்ச்சனா விஜயை கண்டு தனது இரு கரங்களையும் கூப்பி ,

"ப்ளீஸ் , போயிருங்க..." என்று கூற... அதைக் கேட்டு விஜய் திகைத்தான்.

அவளது கூப்பிய கரங்களை , அவளது கலங்கிய விழிகள் அந்த ஆறடி ஆண் மகனை கலங்க செய்தது. ஏதோ ஒரு உணர்வு அவனது மனதை போட்டு பிசைந்ததில் அவன் தனது வலக்கரத்தை கொண்டு நெஞ்சினை நீவி கொண்டவனை ,

"உனக்காகப் போறேன்... ஆனா இவனை இப்படியே விடமாட்டேன். கேட்க ஆளில்லைன்னு நினைச்சிட்டானா ? உனக்கு நானிருக்கேன் ஏஞ்சல். நான் இருக்கேன்." என்றவன் போதையில் தள்ளாடியபடி நடந்து செல்ல... அர்ச்சனா அழுதபடி காரினுள் ஏறியமர்ந்தாள்.

ஆராதனாவும் காரிலேறி அமர... விஷ்ணுபிரஹான் அமைதியாகக் காரை எடுத்தவன் தனது இடக்கையால் மனைவியின் வலக்கையை ஆறுதலாக பற்றிக் கொண்டான். விஜயின் வார்த்தைகளில் அரண்டு போயிருந்த ஆராதனாவுக்கு அவனது ஆறுதல் மிகவும் தேவைப்பட்டது. அவளது விழிகள் கலங்கி போயிருந்தது. அதே சமயம் விஜய் யார் ? என்கிற கேள்வியும் அவளது மனதினை போட்டுக் குடைந்தது.

முதலில் அர்ச்சனா வீட்டிற்குச் சென்றவர்கள் அவளை இறக்கி விட்டனர். உடன் இறங்கிய விஷ்ணுபிரஹானை தடுத்த அர்ச்சனா ,

"ஆராதனா என்னுடன் வரட்டும்..." என்க... அவன் புன்னகையுடன் தோள்களைக் குலுக்கியபடி காரினுள் அமர்ந்துவிட்டான். ஆராதனா மட்டும் அர்ச்சனாவுடன் இறங்கினாள். அதற்குள் அர்ச்சனாவின் அன்னை மங்கை கதவை திறந்து கொண்டு வெளியில் வந்து நின்றார்.

சற்று தள்ளி ஆராதனாவை அழைத்துச் சென்ற அர்ச்சனா அவளது கைகளைப் பற்றிக் கொண்டு , " விஜய் பேசியதுக்கு நான் மன்னிப்புக் கேட்டுக்கிறேன். அவர் பேசியதை மனசில் வச்சுக்காதீங்க. நீங்களும் , மாமூவும் சந்தோசமா வாழணும். அது தான் எனக்கு வேணும்." என்று கூற... அதற்கு ஆராதனா சிறு புன்னகையைப் பதிலாகக் கொடுத்தாள்.

"மாமூ ரொம்ப நல்லவர் ஆராதனா." என்று அர்ச்சனா கூற...

"எல்லோருக்கும் நல்லவர் தான்... ஆனால் எனக்கு... ? நல்ல பழக்கவழக்கங்கள் இருந்தால் மட்டும் ஒருத்தர் நல்லவராகிட முடியாது. எந்தச் சூழ்நிலையிலும் கட்டிய மனைவியைக் கைவிடாது இருப்பது தான் நல்ல ஆண்மைக்கு அழகு , நல்ல ஆணுக்கு அழகு. அப்படிப் பார்த்தால் உங்க மாமூ... ?" என்று அவள் கேள்வியாக அர்ச்சனாவை பார்த்தாள். அர்ச்சனாவின் முகம் ஒரு மாதிரியாய் மாறிப் போனது.

"உங்களைக் காயப்படுத்தணும்ன்னு நான் இதைச் சொல்லை. ஒரு மனைவியாய் என் இடத்தில் இருந்து பாருங்க. உங்களுக்கு நான் சொல்றது புரியும்."

அர்ச்சனாவுக்கு அவள் கூறுவது புரிந்தது. ஆராதனா கூறிய உண்மை அவளது மனதினை சுட்டதில் அவள் ஸ்தம்பித்துப் போய் நின்றாள்.

"நான் எதையும் பாசிட்டிவ்வா எடுத்துக்கிற பொண்ணு. அதே போல் கொஞ்சம் பிடிவாதம் , அழுத்தம் அதிகம். அதனால் தான் என்னால் இந்தப் பிரச்சனையில் இருந்து இவ்வளவு விரைவா மீண்டு வர முடிந்தது. அதே சமயம் அவரைத் தேடி போகக் கூடாது என்பதில் நான் தெளிவா இருந்தேன். ப்ச் , நடந்து முடிந்ததை எதுக்குப் பேசிக்கிட்டு... இனிமேல் நடப்பது நல்லதாக நடக்கட்டும்." என்று விடைபெற்றவள் பின்பு ஞாபகம் வந்தவளாய் ,

"உடம்பை பார்த்துக்கோங்க. நீங்க ஆரோக்கியமா இருந்தால் தான் உங்க குழந்தைங்க ஆரோக்கியமா இருக்கும்." என்று கூற... அதற்கு அர்ச்சனா பதில் பேச இயலாது மௌனமாகத் தலையசைத்தாள்.

ஆராதனா சென்றதும் மங்கை மகள் அருகில் வந்தார். ஆராதனா பேசியது அனைத்தையும் அவர் கேட்டிருந்தார். அவருக்கு அவள் மீது கோபம் வந்தது. தனது மகளைப் பேச இவள் யாரென்று...

"என்ன பேச்சு பேசிட்டுப் போறா பாரு ?" என்று அவர் படபடவெனப் பொரிந்தார்.

"அவங்க நிலையில் என்னை வச்சு பாருங்கம்மா." என்று அமைதியாகக் கூறிய மகளை அவர் திகைப்புடன் பார்த்தார்.

"அவங்க பேசியதில் தப்பே இல்லை. இதுவே கொஞ்சம் தான். இன்னொருத்தங்களா இருந்திருந்தா இன்னமும் பேசியிருப்பாங்க..." என்று கூறியவள் வீட்டிற்குள் சென்றாள். மங்கை தனக்குள் முணுமுணுத்தபடி மகளின் பின்னே சென்றார்.

விஷ்ணுபிரஹானி , ஆராதனா வீடு வரும் வரை எதுவும் பேசி கொள்ளவில்லை. அவளது கையைப் பிடித்தபடி வந்தவன் வீடு வந்தும் விடவில்லை. இருவரும் சேர்ந்து வீட்டிற்குள் நுழைந்த போது வீடு அமைதியாக இருந்தது. ஏற்கெனவே சுந்தரியிடம் கூறியிருந்ததால் அவர் காத்திராது உறங்க சென்றுவிட்டார். இருவரும் மௌனமாக அறைக்கு வந்தனர். விஷ்ணுபிரஹான் உடை மாற்ற சென்றான்.

"பிரஹான்..." மனைவி அழைத்ததும் அவன் திரும்பி பார்த்தான்.

"என்ன பேபி ?" அவனது விழிகளில் வழிந்த காதல் அவளை உறைய செய்தது.

"அர்ச்சனா பத்தி சொல்லணும்."

"எதுவும் பிரச்சனையா ?" அவனது முகம் பதட்டத்தைத் தத்தெடுத்தது.

"ஆமா , குழந்தைகள் எப்போதும் போல் ஆரோக்கியமா இருக்கு. ஆனா அவங்க எடை தான் ரொம்பவும் குறைஞ்சு போயிருக்கு. அதோடு பிபி வேறு... இப்படியே இருந்தால் டெலிவரி அப்போ பிரச்சனை ஆகிரும். வலியை தாங்கிக்கிற அளவுக்கு அவங்க உடலும் இல்லை , மனசும் இல்லை..."

"இப்போ என்ன பண்றது பேபி ?" அதைக் கேட்டு அவன் மிகவும் கலங்கி போனான்.

"அவங்களை ரொம்பக் கவனமா பார்த்துக்கணும்." என்றுரைத்தவள் அங்கிருந்து அகல முயன்றாள்.

அடுத்த நொடி அவன் அவளது கையைப் பற்றித் தன்னை நோக்கி இழுத்தவன் சட்டென்று அவளை அணைத்துக் கொண்டான். கணவனது செயலில் அவள் திகைத்து விழித்தாள்.

"பேபி , எனக்கு என்னமோ பயமாயிருக்கு. ஹனியை எப்படியாவது காப்பாற்றிக் கொடு. அவள் நீண்ட ஆயுளோடு வாழ வேண்டும். ப்ளீஸ் பேபி... எனக்காக..." என்றவன் ஆறுதல் வேண்டி அவளது கழுத்தில் ஆழமாய் முகம் புதைத்தான். அதில் அவள் சிலையாகச் சமைந்தாள். கணவனாக இருந்தாலும் ஆணவனின் முதல் அணைப்பு அவளது காதல் மனதை காதலாய் உருக்கியது.

காட்டிய கணவன் மனைவியை அணைத்துக் கொண்டு இன்னொருவளை ' ஹனி ' என்று அழைக்கின்றான்... அவளது உயிருக்காக மனைவியிடத்தில் இறைஞ்சுகின்றான். அப்படியிருந்தும் அவளால் அவன் மீது கோபம் கொள்ள முடியவில்லை. அர்ச்சனாவிடம் கடிந்து பேசிய மாதிரி கூட அவனிடம் கடிந்து பேச முடியவில்லை. மாறாக அவள் அவனுக்காக மட்டுமே சிந்தித்தாள்.

"பிரஹான் , என்னதிது சின்னப் பிள்ளை மாதிரி... இப்போ மெடிக்கல் வோர்ல்ட் எவ்வளவோ முன்னேறி இருக்கிறது. அர்ச்சனாவுக்கு எந்தவித ஆபத்தும் இல்லாமல் நான் பார்த்துக்கிறேன்." அவள் தான் அவனைத் தேற்ற வேண்டியதாய் போயிற்று.

"தேங்க்ஸ் பேபி..." என்றபடி அவளை விட்டு விலகியவன் இயல்பு போல் அங்கிருந்து விலகி செல்ல... அவள் தான் அவனது செயலில் அப்படியே நின்றிருந்தாள்.

சிறிது நேரம் கழித்தூ , " பேபி..." என்ற கணவனது அழைப்பில் சுயவுணர்வு பெற்றவள் அவனை ஏறிட்டு பார்க்க...

"தூங்கலையா ?" அவன் கூறியதும் மௌனமாகத் தலையசைத்தவள் குளியலறை நோக்கி சென்றாள்.

ஆராதனா குளித்துவிட்டு வரும் போது விஷ்ணுபிரஹான் கீழே படுத்து உறங்கி இருந்தான். படுக்கையில் படுத்து கண்மூடியவள் திடீரென்று திடுக்கிட்டு எழுந்தாள். அவள் குளித்துவிட்டு வந்த போதும் இன்னமும் அவளது கழுத்து வளைவில் கணவனது ஸ்பரிசத்தை , அவனது சூடான மூச்சுக் காற்றை அவள் உணர்ந்தாள். பின்பு கீழே படுத்திருந்தவனைத் திரும்பி பார்த்தவள் வெகுநேரம் அவனைப் பார்த்தபடி அமர்ந்திருந்தாள்.

****

மறுநாள் காலையில் மங்கை , " அர்ச்சனா..." என்று மகளை அழைத்தபடி அவளது அறைக்குள் வந்தார்.

"என்னம்மா ?" கட்டிலில் அமர்ந்து புத்தகம் படித்துக் கொண்டிருந்தவள் அன்னையை நிமிர்ந்து பார்த்தாள்.

"அவர் வந்திருக்கிறார் ?" பதற்றத்தோடு கூறிய அன்னையை அவள் யோசனையாகப் பார்த்தாள்.

"யார் ?"

"விஜய்..." பெயரை கேட்டதும் அர்ச்சனாவின் முகம் இறுகி போனது.

"அவரைப் பார்க்க எனக்கு விருப்பம் இல்லைன்னு சொல்லிருங்க." அடக்கப்பட்ட கோபத்துடன் அவள் கூற...

"எனக்கு உன்னைப் பார்க்க விருப்பம் இருக்கு..." என்றபடி விஜய் அவளிருந்த அறைக்குள் நுழைந்தான்.

அவ்வளவு நேரம் அர்ச்சனாவிடம் இருந்து கோபம் மறைந்து மனம் பயத்தில் படபடக்க ஆரம்பித்தது. ஏனோ அவனைக்

கண்டால் மட்டும் அவள் அவளாக இல்லை. அவளது தைரியம் அவளை விட்டு ஓடி போய்விடுகிறது. ஆதரவு இழந்து தவிக்கும் சிறு பிள்ளையாய் அவளது மனம் தடுமாறிவிடுகிறது. அவள் தவிப்போடு புத்தகத்தை இறுக பிடித்தபடி அமர்ந்திருந்தாள்.

"நான் அர்ச்சனாவுடன் தனியா பேசணும்." விஜய் சொன்னதைக் கேட்டு அர்ச்சனா மறுத்து பேசும் முன் மங்கை அங்கிருந்து வெளியேறி இருந்தார்.

அர்ச்சனா அவனைப் பார்க்க பிடிக்காதவளாய் தனது பார்வையை வேறு பக்கம் திருப்பிக் கொண்டாள். அவன் அதைக் கண்டு கொள்ளாது அங்கிருந்த நாற்காலி ஒன்றை அவள் பக்கம் எடுத்து போட்டுக் கொண்டு அமர்ந்தான்.

"நீ எதைப் பத்தியும் கவலைப்படாதே. உன் விருப்பம் போல் உன் வாழ்க்கை அமையும். அதுக்கு நான் பொறுப்பு... நீ மகிழ்ச்சியா இருக்கணும். அது தான் எனக்கு வேணும்." என்றவனைக் கண்டு வெடுக்கென்று திரும்பியவள் அவனை உறுத்து விழித்தா ,

"என் வாழ்க்கை... என் விருப்பம்... என் மகிழ்ச்சி... எதுன்னு உங்களுக்குத் தெரியுமா ?" என்று கேட்டாள். என்ன தான் கோபம் இருந்த போதும் அவளது வார்த்தைகள் விரக்தியாய் தான் வெளிவந்தது.

"ஏஞ்சல்..." அவன் ஏதோ கூற முயல...

"தயவுசெஞ்சு அப்படிக் கூப்பிடாதீங்க... நான் தேவதை இல்லை. சாதாரண மனுசி. உயிரும , உணர்வுமுள்ள சாதாரண மனுசி." என்று அவள் கோபமாய் வெடித்துச் சிதறினாள்.

"எனக்கு நீ ஏஞ்சல் தான் அர்ச்சனா..." அவள் தன்னைப் புரிந்து கொள்ள மாட்டாளா ? என்கிற தவிப்போடு அவனது வார்த்தைகள் வெளிவந்தது.

"உங்களுக்கு அந்த வார்த்தைக்கு அர்த்தம் தெரியாது. நீங்க ஒரு அரக்கன்... ராட்சசன்..." என்று கத்தியவளுக்குப்

புரையேறியது.

அதில் பதற்றம் அடைந்த விஜய் அருகில் இருந்த தண்ணீர் குவளையில் இருந்த தண்ணீரை தம்பளரில் ஊற்றி அவளிடம் நீட்டினான். அவனது அந்தச் செயலில் அவளது மனம் நெகிழ்ந்தது. ஆனால் காயம்பட்ட மனமோ அதை ஏற்காது ஒதுக்கியது. தண்ணீரை வாங்கியவள் அடுத்த நொடி அதைக் கீழே ஊற்றினாள்.

"அர்ச்சனா..." அவன் விக்கித்துப் போய் அவளைப் பார்த்தான்.

"ரொம்ப ஸ்மார்ட்டா ஆக்ட் கொடுக்க வேண்டாம் மிஸ்டர். விஜய். சிறுத்தை எப்போதும் தனது புள்ளிகளை மாற்றிக் கொள்ளாது. அப்படிப்பட்ட ஒருவர் தான் நீங்க..." வெறுப்புடன் கூறியவளை அவன் உணர்வில்லாது பார்த்தான்.

"இப்போ நீங்க வெளியில் போறீங்களா ? இல்லையா ?" என்று அவள் ஆக்ரோசத்துடன் கத்தினாள்.

அர்ச்சனாவின் மேடிட்ட வயிற்றை ஒரு நொடி பார்த்த விஜய் மறுநொடி எதுவும் பேசாது அங்கிருந்து விறுவிறுவென வெளியேறினான். அவன் செல்வதைப் பார்த்தபடி அமர்ந்திருந்த அர்ச்சனாவின் மனதிலும் , விழிகளிலும் வெறுமை மட்டுமே...

****

அன்று தாலி பிரித்துக் கோர்க்கும் நிகழ்ச்சி அர்ஜூனின் வீட்டில் நடைபெற்றது. அதற்காக அவந்திகா சம்பந்தியை அழைத்தவள் மகளையும் , மருமகனையும் சேர்த்து அழைத்தாள். ஆனால் ஆராதனா வருவதற்கு மறுப்பு தெரிவித்து விட்டாள். அதனால் சுந்தரி மட்டும் அங்கு வந்திருந்தார். ராகவன் உடல்நிலை காரணமாக அங்கு வரவில்லை. இரு மகள்களும் தத்தம் கணவருடன் ஜோடியாக அமர்ந்திருந்ததைக் கண்டு சுந்தரியின் விழிகள் பனித்தது. அவரது மகன் தவறு செய்த போதும் அவரது

மகள்களை ராணி போன்று வைத்திருக்கும் சம்பந்தி வீட்டாரை அவர் நன்றியுடன் பார்த்தார்.

சீதாவிற்குத் தாலி கோர்க்கும் வைபவம் இனிமையாக நடந்து முடிய... அடுத்து கனிஷ்காவிற்குத் தாலி பிரித்துக் கோர்க்கும் நிகழ்வு நடைபெற்றது.

"பரத் , தாலியை மட்டும் பிடிச்சுக்கோ." என்று அவந்திகா மகனிடம் கூற...

பரத் தாலியை மனைவியின் நெஞ்சின் மீது வைத்துப் பிடித்திருந்தான். தங்க சங்கிலியில் தாலி கோர்க்கும் வரை அதைக் கீழே இறக்காது பிடித்திருக்க வேண்டும். கனிஷ்கா கணவனது அருகாமையில் முகத்தில் எள்ளும் கொள்ளும் வெடிக்கக் கோபமாய் அமர்ந்திருந்தாள். அதைக் கண்டவன் விழிகள் பளபளக்க வேண்டுமென்றே தனது கையை அவள் மேனி மீது அழுத்தி வைத்துக் கொண்டான். அவள் திடுக்கிட்டு போய் அவனை ஏறிட்டு பார்த்தாள்.

' இப்போ கத்துடி... பார்க்கலாம்... ' அவன் தெனாவெட்டாய் சத்தம் இல்லாது தனது உதட்டை அசைத்தான். அவள் திகைத்து விழிக்க... அவனோ நமட்டு சிரிப்புடன் அவளைப் பார்த்திருந்தான்.

தாலி பிரித்துக் கோர்த்ததும் மனைவியை இடித்துக் கொண்டு அமர்ந்த பரத் , " எங்கே போச்சு உன் பேவரைட் வீல்ங்கிற சத்தம் ?" என்று கேட்டபடி அவளை இடையோடு சேர்த்து அணைத்தவன் அவளது வெற்றிடையில் அழுத்தமாய்த் தனது கையைப் பதித்துக் கொண்டான்.

என்ன தான் கோபம் இருந்த போதும் கனிஷ்கா தனது காதல் கணவனது தொடுகையில் உருகத்தான் செய்தாள். பரத் வேண்டுமென்றே தான் அவளை வம்பிழுக்க இப்படிச் செய்தது. ஆனால் பெண்ணவளின் மென்மையில் ஆணவன் மனம் குழைந்து தான் போனது. அதன் விளைவு அவனது கை அவளது இடையில் அழுத்தமாய்த் தனது தடத்தைப் பதித்தது.

விழா முடிந்து அனைவரும் சென்றதும் ஸ்ரீராம் மனைவியைத் தேடி வந்தான். அவள் வேலையாய் சமையலறையில் நின்றிருந்தாள். அவளது கைப்பிடித்துத் தங்களது அறைக்கு அழைத்து வந்தவன் ,

"சீதா , நான் உன் கிட்ட கொஞ்சம் பேசணும்." என்க...

"சொல்லுங்கோன்னா..."

"முதலிரவு அன்னைக்கு நீ கேட்ட கேள்விக்குப் பதில் வேண்டாமா ?" என்றவனை ஆழ்ந்து பார்த்தவள் ,

"வேண்டாம்..." என்றாள் உறுதியான குரலில்...

"சீதா..." அவன் அதிர்வுடன் அவளைப் பார்த்தான்.

"நீங்க என் கிட்ட சொல்ல கூடிய விசயமா இருந்தால் இந்நேரம் சொல்லியிருப்பேள். நீங்க சொல்லாம தவிர்க்கும் போதே நான் புரிஞ்சிண்டேன். இது எனக்குத் தேவையில்லாத விசயம்ன்னு. உங்க மனசை கஷ்டப்படுத்துற எதுவும் நீங்க சொல்ல வேண்டாம்ன்னா." என்ற மனைவியை அவன் காதல் பொங்க பார்த்தான்.

"என்னைப் புரிஞ்சிக்கிட்டதுக்குத் தேங்க்ஸ் சீதா."

"இப்போ நான் போகலாமா ?"

"ம் , போ..." என்க...

மனைவி சென்றதும் ஸ்ரீராம் கட்டிலில் அமர்ந்தான். அடுத்தடுத்து விஷ்ணுபிரஹான் கொடுக்கப் போகும் இக்கட்டுகளை எப்படிச் சமாளிப்பது ? என்று அவன் தீவிரமாக யோசிக்க ஆரம்பித்தான். ஏனெனில் விஷ்ணுபிரஹான் விசயம் அவனது பெற்றோர் மற்றும் சகோதரனுக்குத் தெரியாது. இவ்வளவு ஏன் ஆராதனாவுக்குக் கூடத் தெரியாது. அப்படி இருக்கும் போது இனி வரும் நாட்களில் நிச்சயம் அர்ஜூனுக்குச் சந்தேகம் வரும். அப்படிச் சந்தேகம் வந்தால் அர்ஜூன் ஸ்ரீராமை தான் கேள்விகளால் துளைத்து எடுத்து விடுவான். என்ன யோசித்தும் எந்தத் தீர்வும் அவனுக்குக் கிடைக்கவில்லை.

****

காலையில் சந்தியாவந்தனம் செய்துவிட்டு அறையினுள் வந்த விஷ்ணுபிரஹான் அங்கிருந்த மனைவியை ஆச்சரியமாகப் பார்த்தான். வழக்கமாக அவன் வரும் சமயம் அவள் அறையில் இருக்க மாட்டாள். இன்று என்னவானது அவளுக்கு ? என்று யோசித்தபடி அவன் அவளைப் பார்த்தான்.

"பிரஹான் , சீக்கிரம் உங்கப்பா ரூமுக்கு வாங்கோ."

"எதுக்கு ?"

"சொல்றேன் வாங்கோ..." என்றபடி திரும்பி போக நினைத்தவள் பின் நின்று திரும்பி பார்க்காமலேயே ,

"இப்படியே வராதேள். ஒழுங்கா டிரெஸ் பண்ணின்டு வாங்கோ." என்று கூறிவிட்டு அவனது பதிலை எதிர்பாராது சிட்டாக ஓடிவிட்டாள். அதைக் கேட்டவன் உதட்டில் புன்னகை நெளிந்தது.

அவன் உடையை மாற்றிக் கொண்டு தந்தையின் அறைக்குச் சென்ற போது ஆராதனா அங்கிருந்தாள். கணவனைக் கண்டதும் ,

"வாங்கோ..." என்று அருகில் அழைத்தாள்.

"மாமாவோட கை , காலில் எண்ணெய் தேய்த்து மசாஜ் பண்ணி விடுங்கோ." என்க... அவன் ஆச்சரியத்தோடு மனைவியைப் பார்த்தவன் பின்பு தந்தையைக் கேள்வியாய் பார்த்தான்.

"அவன் ஒண்ணும் பண்ண வேண்டாம்." தந்தையின் வார்த்தையில் அவனது முகம் காற்று போன பலூனாய் சுருங்கி போனது.

"அப்படி எல்லாம் சொல்ல கூடாது மாமா. அவர் உங்க மகன் தானே." ஆராதனா கெஞ்சலாய் வற்புறுத்தவும்... வேறுவழியின்றி ராகவன் மருமகளுக்காக மகனை எண்ணெய் தேய்க்க அனுமதித்தார்.

விஷ்ணுபிரஹான் சந்தோசத்துடன் கீழே தரையில் அமர்ந்து தந்தையின் பாதத்தைத் தனது மடியில் தாங்கி கொண்டு அதில் எண்ணெய் தேய்த்து மசாஜ் செய்ய ஆரம்பித்தான்.

"அப்பா , எங்களுக்குச் சின்னப் பிள்ளையில் இப்படி எண்ணெய் தேய்த்து விடுவேளே... ஞாபகம் இருக்கா ?" அவனது கேள்வியில் அவரது நினைவுகள் அந்தக் காலக்கட்டத்திற்கே பயணப்பட்டது.

"நான் , வைதேகி , சீதா மூணு பேரும் சமத்தா எண்ணெய் தேய்ச்சுக்குவோம். ஆனா கனி மட்டும் முடியாதுன்னுட்டு கத்திக்கிட்டே வீட்டை சுத்தி ஓடுவாள். அவளைப் பிடிச்சு இழுத்துண்டு வந்து அவள் அழ , அழ நீங்க எண்ணெய் தேய்ச்சு விடுவேள். அந்தக் கோபத்தில் அவள் அன்னைக்கு முழுக்க உங்க கிட்ட பேச மாட்டாள். பிறகு நீங்க சாக்லேட் வாங்கிண்டு வந்து அவளைத் தாஜா பண்ணுவேளே." அவன் முகம் விகசிக்கத் தந்தையைப் பார்த்து கூற...

அவருக்கு இப்போது மகனைப் பார்க்கும் போது சின்ன வயது விஷ்ணுபிரஹானை பார்ப்பது போலிருந்தது. மகனது பேச்சில் மனம் நெகிழ்ந்த ராகவன் தனது வலக்கையால் அவனது தலையை வருடி கொடுத்தார். அவரது செயலை நம்ப முடியாது பார்த்தவன் விழிகள் கலங்க ,

"அப்பா..." என்றழைத்தபடி அவரது மடியில் தலைசாய்ந்தான். அவனது விழிகளில் விழிநீர் துளிர்த்தது.

"ஏன்னா..." என்றழைத்தபடி அங்கு வந்த சுந்தரியை அறை வாயிலில் தடுத்து நிறுத்திய ஆராதனா தந்தை , மகனை சுட்டிக்காட்டினாள். சுந்தரி புரியாது அங்குப் பார்த்தவர் இருவரது பாச பிணைப்பை கண்டு வாயடைத்துப் போனார். அவரது விழிகள் கலங்கி போனது. மனம் நெகிழ்ந்து போனது. பின்பு மருமகளைப் பார்த்தவர் அவளை அணைத்து உச்சி முகர்ந்தார் ,

"சாதிச்சிட்டே ஆரு... நீ சாதிட்ட." என்று நா தழுதழுத்தார்.

மாமியாருமம் , மருமகளும் தத்தம் கணவர்மாரை நெகிழ்வுடன் பார்த்திருந்தனர்.

****

அன்றிரவு கணவனுக்காக ஆவலுடன் காத்திருந்தாள் ஆராதனா. அவளது மனம் சந்தோசத்தில் திக்குமுக்காடி இருந்தது. களைப்புடன் வீட்டிற்குள் நுழைந்த விஷ்ணுபிரஹான் அங்கு வரவேற்பறையில் தனக்காகக் காத்திருந்த மனைவியை ஓரக்கண்ணால் பார்த்தபடி அன்று போல் இன்றும் கண்டு கொள்ளாது சென்றான். அவளோ அவனின் பின்னேயே ஓடிவந்தாள்.

"பிரஹான்..." அறைக்குள் நுழைந்தவனை அவள் அழைக்க...

"என்ன சொல்லு... ?"

"நான் கேள்விப்பட்ட விசயம் உண்மையா ?" கேட்கும் போதே அவளது முகம் மலர்ந்து இருந்தது.

"நீ என்ன விசயம் கேள்விப்பட்டேன்னு எனக்கு எப்படித் தெரியுமம் ?" அவனது உதடுகளில் நமட்டுச் சிரிப்புத் தவழ்ந்தது.

"அப்பா கம்பெனியில் இருந்து வேலைக்கு எடுத்த ஆட்களைத் திருப்பி அனுப்பிட்டீங்களாமே... அப்புறம் நஷ்டத்தையும் திருப்பிக் கொடுத்திட்டீங்களாம்."

"ஆமாம்..." என்றான் அவன் புன்னகையுடன்...

"நான் சொன்னதுக்காகவா... ?" அவள் ஆர்வத்துடன் அவனது முகத்தைப் பார்த்தாள்.

"ம்ஹூம் இல்லைடி பொண்டாட்டி..." என்று அவளது மூக்கை பிடித்து ஆட்டியவனம் ,

"காலையில் நீ அப்பா கிட்ட எனக்காகப் பேசியதுக்காக..." என்றான் சிரிப்பை அடக்கி கொண்டு கூற...

"ஓ..." என்றாள் அவள் ஏமாற்றத்துடன்...

சிறிது நேரம் எந்தப் பேச்சும் கணவனிடம் இருந்து வராது இருப்பதை அறிந்து அவள் அவனை நிமிர்ந்து பார்த்தாள். அப்போது அவனது விழிகள் மட்டும் அவளைக் கண்டு சிரிக்க... அவனது விசமம் புரிந்து அவளது முகத்திலும் புன்னகை தோன்றியது.

"ப்ராடு அத்து..." அவள் மகிழ்ச்சியுடன் தனக்குள் முணுமுணுத்து கொண்டாள்...!!!

திருத்தமாகும்...!!!

"எண்ணரும் நலத்தினாள் இனையள் நின்றுழிக்
கண்ணொடு கண்ணினை கவ்வி ஒன்றை ஒன்று
உண்ணவும் நிலை பெறாது உணர்வும் ஒன்றிட
அண்ணலும் நோக்கினான் அவளும் நோக்கினாள்"

"கற்பனை செய்யவும் முடியாத அழகையுடைய சீதை கன்னி மாடத்தில் அழகுடன் நின்ற போது , இராமன் மற்றும் சீதையுடைய கண்கள் ஒன்றை ஒன்று கவர்ந்து , இருவரும் மகிழ்ச்சி அடையவும் , அவர்களுடைய மனங்கள் அலைபாய்ந்து பின்னர் இரண்டும் ஒன்று சேர... இராமனும் சீதையைப் பார்த்தான். சீதையும் ராமனை பார்த்தாள்."

விஷ்ணுபிரஹான் கணீரென்ற குரலில் இராமாயாணத்தைக் கதாகலாட்சேபம் போல் தந்தைக்கு விவரித்துச் சொல்லி கொண்டிருந்தான். அவனது உணர்வுப்பூர்வமான காந்த குரலில் அனைவரும் மெய்மறந்து அவனைப் பார்த்திருந்தனர். ராகவன் , சுந்தரி மகனை பெருமையாகப் பார்த்தனர் என்றால் , ஆராதனா கணவனைக் காதலோடு பார்த்திருந்தாள்.

அவள் அவனை முதல் முறையாகப் புகைப்படத்தில் கண்ட காட்சி அவள் கண்முன் தோன்றியது. அழகாகத் தலைமுடியை வெட்டிவிட்டு , சீராக நறுக்கி விடப்பட்ட மீசையுடன் , வசீகரப் புன்னகையுடன் கம்பீரமாய் இருந்த விஷ்ணுபிரஹானின் முகம் அவளது மனதினை விட்டு அகலவில்லை. அவனைக் கண்ட கணம் தான் காதலில் விழுந்த நினைவுகள் அவளுள் சுகமாய் எழுந்தது. அவள் விழிகளில் காதல் வழிய கணவனைப் பார்க்க... அதே நேரம் அவனும் அவளைப் பார்த்திருந்தான். அவளுக்கு அவனைப் பிடிக்கும் என்று அவனுக்குத் தெரியும். ஆனால் இத்தனை பிடித்தம் இருப்பதை இன்று தான் அவன் உணர்ந்தான். விழிகள் நான்கும் காதலோடு ஒன்றை ஒன்று பார்த்திருந்தது. இருவருமே புதிதாய்ப் பிறந்தது போல் உணர்ந்தனர்.

"பார்த்த விழி பார்த்தபடி பூத்து இருக்க
காத்திருந்த காட்சி இங்குக் காண கிடைக்க..
ஊன் உருக உயிர் உருக தேன் தரும் தடாகமே
வழி வருக வழி நெடுக ஒளி நிறைக வாழ்விலே
பார்த்த விழி பார்த்தபடி பூத்து இருக்க
காத்திருந்த காட்சி இங்குக் காண கிடைக்க..."

கிட்டத்தட்ட நான்கு மாதங்கள் கடந்துவிட்டிருந்தது. இந்த நான்கு மாதங்களில் எத்தனையோ நிகழ்வுகள் நடந்து முடிந்திருந்தது. வைதேகியின் பெண் குழந்தைக்கு ஒரு மாதம் முடிந்த பின்னர்ப் பெயர் வைக்கும் வைபவம் நடைபெற்றது. அதில் விஷ்ணுபிரஹானஂ , ஆராதனா தம்பதி சமேதராய் கலந்து கொண்டனர். அதே போல் ஆராதனா அர்ச்சனாவுடன் நட்புறவு கொண்டிருந்தாள். இதெல்லாம் அவளது கணவனுக்காக என்றால் மிகையில்லை. ஏனென்றால் குழந்தை என்றதும் விஷ்ணுபிரஹானுக்கு ஆராதனா தான் ஞாபகம் வந்தாள். அர்ச்சனாவோ , அவளது குழந்தைகளோ அல்ல... மோசமான கணவன் இருக்கலாம்... ஆனால் மோசமான தந்தை இருக்க முடியாது. அதிலும் அவன் அர்ச்சனா , குழந்தைகளைக் காண ஸ்கேனிங் அறைக்கு வர தயங்கியது எல்லாம் அவன் மீது அவளுக்கு நன்மதிப்பை ஈட்டி தந்தது. அதே போல் அர்ச்சனாவிற்கு வளைகாப்பு நடத்த வேண்டும் என்று ஆராதனா கணவனிடம் கூறிய போது சரியென்றவன் அந்த விழாவில் பட்டும் படாமல் தான் நடந்து கொண்டான். அர்ச்சனா மீதான அவனது உரிமை , அன்பு எந்தளவிற்கு ? என்பதைப் பற்றி அவள் தெளிவாக உணர்ந்தது அன்று தான்... இவை எல்லாம் அவளை யோசிக்க வைத்தது. கணவனைக் கவனிக்கச் சொன்னது. அவன் மேல் அவளது நேசத்தைத் திருப்பி இருந்தது.

இந்த நான்கு மாத இடைவெளியில் கணவனின் மனதினை தெரிந்து கொள்வதற்காக ஆராதனா பெரிதும் முயற்சித்தாள். ஆனால் அவளால் முயற்சி மட்டுமே செய்ய முடிந்தது. அவனின் மனதில் இருப்பதை அவளால்

கண்டறிய முடியவில்லை. அதே சமயம் அவன் அவள் மீது எல்லையற்ற அன்பு செலுத்தியதை அவளால் உணர முடிந்தது. ஆரோக்கியமான தாம்பத்தியத்திற்கு இது மட்டும் போதாதே... மனமும் மனமும் ஒன்றிணைய வேண்டுமே. அவன் நினைத்தது போல் தான் அவளும் நினைத்தது. ஆனால் இதற்காக வேண்டி யார் முதலடி வைப்பது என்பதில் இருவரிடையே ஒருவித தயக்கம் இருந்து கொண்டே இருந்தது.

ஆராதனா அவள் மனதை திறக்கும் போது தானும் தனது மனதில் இருப்பதைச் சொல்லலாம் என்று விஷ்ணுபிரஹானும் , கணவன் அவனது மனதினை திறக்கும் போது தனது மனதினை சொல்லலாம் என்று அவளும் , தங்களது காதலை சொல்லாது தள்ளி போட்டுக் கொண்டே வந்தனர். அவன் அவளது காதலை உணர்ந்திருந்தான். அவளோ அவனது மனதினை உணர முற்பட்டு கொண்டிருந்தாள். என்ன இருந்தாலும் காயப்பட்ட மனது இல்லையா!

அடுத்து விஷ்ணுபிரஹான் ராமாயணத்தில் வரும் சுந்தரகாண்ட பகுதியை சொல்ல ஆரம்பித்தான். அசோகவனத்தில் சீதை அடைந்த துயரை கூறும் பகுதி இது. அவன் தனது உருக்கமான குரலில் அதைக் கூறிக் கொண்டிருந்தான். சீதை அடைந்த துன்பம் கேட்போர் கல் மனதினையும் கரைக்கும். ராகவன் , சுந்தரி இருவரும் கண்ணீர் மல்க அதைக் கேட்டு கொண்டிருந்தனர். ஆராதனாவோ சீதாதேவியோடு தன்னைப் பொருத்தி பார்த்து பெரும்துயர் கொண்டாள்.

"கொடுமையான வார்த்தைகளைப் பேசி , அரக்கிகள் சீதையைப் பயமுறுத்தியபோது , மிதிலை நாட்டு இளவரசியான சீதை மனம் நொந்து கண்ணீர் வடித்தார். வெள்ளமாகப் பெருகிய கண்ணீரினால் தன் மார்புகளை நனைத்துக்கொண்டு , வருத்தமான சிந்தனையினால் மனம் கலங்கி , அவர் எல்லையற்ற சோகத்தில் மூழ்கினார். அரக்கிகளின் மிரட்டலால் நடுங்கி , முகம் வெளுத்துப் போய் , புயலால் சாய்க்கப்பட்ட வாழைமரம்

போல் கீழே சாய்ந்தார் சீதை. அவர் உடல் நடுங்கியபோது , ஒற்றைப் பின்னலாக இருந்த அவர் தலைமுடியும் ஒரு பாம்பு போல் ஆடியது. அரக்கிகள் பேச்சுக்களால் இவ்வாறு நிலைகுலைந்து போயிருந்தாலும் , தன் கற்பைக் காப்பாற்றிக் கொள்வது என்ற மன உறுதியுடன் சீதை , கண்களில் நீர் மல்க கம்மிய குரலில் சொன்னார்."

"ஒரு மானிடப் பெண் ராவணனின் மனைவியாக இருப்பது முறையாகாது. நீங்கள் எல்லோரும் உங்கள் விருப்பப்படி என்னைக் கடித்துத் தின்னலாம். உங்கள் வார்த்தைகளுக்கு நான் இணங்கப் போவதில்லை. கண்களிலிருந்து பெருகிய கண்ணீர் மார்பில் வழிந்த நிலையில் , சீதை மேலும் சொன்னார். மனிதர்களின் வாழ்நாள் பற்றிப் பெரியோர்கள் சொல்லியிருப்பது , அதாவது ஒருவர் அவருக்கு விதிக்கப்பட்ட நேரத்தில்தான் இறந்து போவார் என்று சொல்லியிருப்பது உண்மைதான். இல்லாவிட்டால் , நான் எப்படி ஒரு கணம் கூட உயிர் வாழ முடியும். இந்த அரக்கிகளின் கொடிய சொற்களால் காயப்படுத்தப்பட்டு , ராமரிடமிருந்து பிரிந்ததால் ஏற்பட்ட துயரால் பாதிக்கப்பட்டிருக்கும் நான் எவ்வாறு உயிர் வாழ்கிறேன் ? ராவணனால் சிறை பிடிக்கப்பட்டு , அரக்கிகளால் இவ்வாறு அச்சுறுத்தப்பட்ட சீதைக்குத் தப்பிக்கும் வழி தெரியவில்லை. தன் கூட்டத்திலிருந்து பிரிக்கப்பட்டு , ஓநாய்களால் சூழப்பட்டு , அச்சுறுத்தப்பட்ட மான் குட்டியைப் போல் இருந்த சீதை , அந்தத் துயரைப் பொறுக்க முடியாமல் தனக்குள் மூழ்கினார்."

"துயரத்தினால் மனம் உடைந்த சீதை பூக்கள் மிகுந்த ஒரு அசோக மரத்தின் கிளையைப் பிடித்தபடி , தன் கணவனைப் பற்றி நினைக்க ஆரம்பித்தார்... அவர் இவ்வாறு பலவிதங்களில் வருந்தினார்."

"ஓ , ராமா , ஓ லக்ஷ்மணா , ஓ என் தாய் கௌசல்யா தேவி , ஓ சுமித்ரா தேவி! என்ன செய்வதென்று அறியாத இந்தப் பேதைப் பெண் புயலில் சிக்கிக்கொண்ட கப்பலைப் போல் மூழ்கிக் கொண்டிருக்கிறேன். வெள்ளத்தினால் அடித்துச் செல்லப்படும் நதியின் கரையைப் போல் ,

ராமரைப் பார்க்காததால் , அரக்கிகள் காவலில் இருப்பதாலும் விளைந்த துயரத்தினால் நான் அழிக்கப்பட்டுக் கொண்டிருக்கிறேன். தாமரை போன்ற கண்களும் , சிங்கம் போன்ற நடையும் கொண்ட , எப்போதும் நன்றி உடையவராகவும் , மற்றவர்களுக்கு இனிமையானதையும் , நன்மை பயப்பதையும் பேசிக் கொண்டிருக்கும் ராமரைக் கண்ணால் கண்டு மகிழும் அதிர்ஷ்டசாலிகள் பலர் இருக்கிறார்கள். ”

“ உயிரைக் கொல்லும் விஷத்தைக் குடித்தவளைப் போல , ராமரிடமிருந்து பிரிக்கப்பட்ட என் உயிரைக் காப்பாற்றுவது கடினம். இப்படி ஒரு துரதிர்ஷ்டமான நிலை எனக்கு நேர , நான் போன ஜென்மங்களில் என்ன பாவமெல்லாம் செய்திருக்க வேண்டுமோ! அந்தப் பாவங்களுக்காகத்தான் நான் இந்தக் கொடுமையான துன்பங்களை அனுபவித்துக் கொண்டிருக்கிறேன் போலும். அரக்கிகள் காவலில் இருக்கும் என்னால் ராமரைப் பார்ப்பது இயலாத செயல். துயரினால் வாட்டப்பட்டிருப்பதால் , நான் என் வாழ்க்கையை முடித்துக் கொள்ள விரும்புகிறேன். மனித வாழ்க்கை வெறுக்கத்தக்கத , குறிப்பாக அது மற்றவர்களின் கட்டுப்பாட்டில் இருக்கும்போது. ஏனெனில் , அந்த நிலையில் ஒருவர் தன் விருப்பப்படி இறந்துபோகும் உரிமையைக் கூட அது அவரிடமிருந்து பறித்து விடுகிறது."

"இது போன்ற சோகமான எண்ணங்களில் ஈடுபட்ட , சீதை மிகவும் துயரத்துக்கு ஆளானார்."

விஷ்ணுபிரஹான் தனது குரலை துயரத்தில் தோய்த்து உருக்கமாகச் சுந்தரகாண்ட பகுதியை கூற... மகனது நினைவாற்றலை கண்டு வியந்தபடி அமர்ந்திருந்தார் ராகவன். சிறுவயதில் மகனுக்கு இருக்கும் நினைவாற்றல் மற்றும் கதை சொல்லும் பாங்கு வைத்து அவர் தான் அவனுக்கு நிறையக் கதைகள் சொல்லி கொடுத்தார். கதாகலாட்சேபம் நடக்கும் இடங்களுக்குத் தவறாது மகனை அழைத்துச் செல்வார். அவனும் அதை அப்படியே உள்வாங்கிக் கொண்டு வீட்டிற்கு வந்ததும் அப்படியே

சொல்வான். அதை நினைத்தபடி ராகவன் பூரித்து அமர்ந்திருந்தார்.

அப்போது ' ஹக் ' என்கிற தேம்பல் ஒலி கேட்டது... அதைக் கேட்டு விஷ்ணுபிரஹான் திரும்பி பார்த்தான். ஆராதனா கலங்கிய விழிகளுடன் அழுகையைக் கட்டுப்படுத்திக் கொண்டு அவனையே பார்த்திருந்தாள். கணவன் தன்னைப் பார்த்ததும் அவள் கழிவிரக்கம் தோன்ற மனம் வெட்கியவளாய் வாயில் கை வைத்தபடி அழுகையை அடக்கி கொண்டு அங்கிருந்து ஓடினாள். மனைவியின் மனதினை உணர்ந்தவனாய் , அவளது துயரை அறிந்தவனாய் விஷ்ணுபிரஹான் அவளை வேதனையுடன் பார்த்திருந்தான். பின்பு அவன் கதாகலாட்சேபத்தில் கவனத்தைச் செலுத்தினான்.

"விஷ்ணு..." தந்தை தன்னை அழைக்கவும் அவன் கேள்வியாய் அவரைப் பார்த்தான்.

"போய் ஆருவை சமதானப்படுத்து." என்க...

"அப்பா..." அவன் தயங்கினான்... தந்தையுடன் இருக்கும் பொழுதினை இழக்க அவன் விரும்பவில்லை. அதற்காக மனைவி தேவையில்லை என்று அர்த்தம் இல்லை. அவன் இருதலை கொள்ளி எறும்பாய் தவித்தான்.

"என்னை விட உனக்கு ஆரு தான் முக்கியம். அவள் மனதில் இருக்கும் துயரை என்னால் களைய முடியாது. கணவனான நீ தான் அதைக் களைய வேண்டும். என் மாட்டு பொண்ணு இதுவரை அழுதது போதும். இனிமேல் அவள் அழ கூடாது." அவர் கண்டிப்பும் , கறாருமாய் உரைக்க... வேறுவழியின்றி எழுந்த விஷ்ணுபிரஹான் தனது அறையை நோக்கி சென்றான்.

அங்கு ஆராதனா கட்டிலில் அமர்ந்து முழுங்காலில் முகம் புதைத்து அழுது கொண்டிருந்தாள். அவளைக் கண்டதும் அவனது முகம் வேதனையில் கசங்கியது. அவளது இத்தனை துன்பத்திற்கும் அவன் மட்டும் தானே காரணம்.

அவள் அருகே வந்தவன் கட்டிலில் அமர்ந்து கொண்டு அவளது தோளில் கை வைத்தான்.

"பேபி..." என்றழைக்க... அவளோ அவனை நிமிர்ந்தும் பாராது அழுகையில் கரைந்து கொண்டிருந்தாள்.

"ப்ச் , இப்போ எதுக்கு இந்த அழுகை ? நான் ராமனும் இல்லை... நீ சீதாதேவியும் இல்லை."

அவன் சொன்னதோ வேறு அர்த்தத்தில்... அவள் புரிந்து கொண்டதோ வேறு அர்த்தத்தில்... அடுத்த நொடி ஆராதனா ஆங்காரத்துடன் தனது இரு கைகளால் அவனது சட்டையைப் பிடித்துக் கொண்டவள் அவனை நிமிர்ந்து நோக்கி ,

"நான் சீதாதேவி தான்... இல்லைன்னு நீங்க எப்படிச் சொல்லலாம் ? என்னைப் பத்தி உங்களுக்கு என்ன தெரியும் ? சீதை அடைஞ்ச துன்பத்தை விட அதிகத் துன்பத்தை நான் அடைஞ்சு இருக்கேன். சீதைக்காவது தெரியும் , அவள் கணவன் , கொழுந்தன் பேச்சை மீறியதால் வந்த துன்பம் இது என்று... ஆனா நேக்கு... ?" அவளது இதழ்கள் அழுகையில் பிதுங்கியது. அதைக் கண்டு அவனுக்குப் பாவமாக இருந்தது.

"ஏன் ? எதுக்கா ? என்ன தப்பு செஞ்சேன்னு தெரியாமலே தண்டனை அனுபவிச்சு இருக்கேன். நான் என்ன பாவம் பண்ணினேன் ? எதுக்கு இந்தத் தண்டனைன்னு மனசு கிடந்து துடிக்கும். சில சமயம் டிப்ரசன் கூட வந்திருக்கு. என்ன பார்க்கிறேள்... டக்டர்சும் மனுசங்க தான். எங்களுக்கும் உணர்வுகள் இருக்கு. வெளியில் எவ்வளவு தான் பக்குவப்பட்ட பெண்ணா நான் நடந்துக்கிட்டாலும் உள்ளுக்குள்... ?"

அவனது காதலை எண்ணி அவள் ஏங்கி தவித்தது அவளுக்கு மட்டும் தானே தெரியும். அதை அவனிடம் வாய்விட்டு சொல்ல அவளுக்குப் பெரும் தயக்கமாக இருந்தது. அவன் மனதை அறியாது அவனிடம் தன்னைப் பற்றிப் பேச அவள் பயந்தாள். மனைவியின் துயரம்

உணர்ந்த விஷ்ணுபிரஹான் அவளை அள்ளியெடுத்து ஆறுதல் சொல்லவிழைந்தான். ஆனால் அவளது மனத்துயர் நீங்க அவள் மனம் விட்டு பேச வேண்டும். அதனால் அவன் அவளைப் பேச விட்டு அமைதியாகப் பார்த்திருந்தான்.

"அப்படி டிப்ரசனில் இருக்கும் போது செத்துரலாம் போலிருக்கும். ஆனா நான் செத்துட்டா பிரச்சனை என்னோடு முடிஞ்சு போறது இல்லை. அது உங்களையும் சேர்த்து பாதிக்கும்ன்னு நினைச்சு தான் நான் அந்த எண்ணத்தை மாத்திக்கிட்டேன்."

தனக்காக ஒவ்வொன்றையும் பார்த்தா , பார்த்தா , யோசித்தா , யோசித்துச் செய்திருக்கும் மனைவியவளை கண்டு அவனது நேசம் இன்னமும் அதிகரித்தது. அதேசமயம் தனது சந்தோசம் தான் முக்கியம் என்று அவளைத் தூக்கி எறிந்த தன்னைக் குறித்து அவன் மனம் வெட்கி போனான். அவன் அவமானத்தில் தலைகுனிந்து அமைதியாக அமர்ந்திருந்தான்.

"உயிர் வாழ்றதுக்கும் உங்களைத் தான் நினைச்சேன். சாகுறதுக்கும் உங்களைத் தான் நினைச்சேன். நான் நானாக இருக்க முடியலை. நீங்களா தான் இருக்கேள். நான் சீதை இல்லாம வேறு யார் சீதை ?" அவள் ஆக்ரோசத்துடன் கேட்க...

அவளது ஒவ்வொரு வார்த்தையிலும் அவளது மனதினை உணர்ந்தவனாய் அவன் நிமிர்ந்து அவளைப் பார்த்து அவளது விழிகளோடு தனது விழிகளைக் கலந்தவன் ,

"நான் அந்த அர்த்தத்தில் சொல்லை பேபி..." என்க... அவள் திகைத்து போய் அவனது சட்டையில் இருந்த தனது கரங்களை விலக்கினாள்.

"சீதையோட ஆசையும் , அவள் தனது கணவனது பேச்சை மீறி நடந்துக்கிட்டது தான் அவளது துன்பத்திற்குக் காரணம். ஆனா உன் துன்பத்துக்கு நான் மட்டும் தான் காரணம்... நீ இல்லை. சீதையை விட நீ பல மடங்கு

உயர்ந்தவள். அதைத் தான் நான் சொல்ல வந்தது. கோபப்படுறதா இருந்தா என் கிட்ட கோபப்படு. திட்டறதா இருந்தா என்னைத் திட்டு. அடிக்கிறதா இருந்தா என்னை அடி... ஆனா இப்படி உன்னை நீயே வருத்திக்காதே. ப்ளீஸ்..."

அவள் அவனை வியப்பாய் இமைக்காது பார்க்க... அழுதழுது சிவந்திருந்த அவளது முகத்தைத் தனது கைகளில் தாங்கியவன் ,

"அழுதாலும் அழகா தான்டி இருக்க..." என்றபடி கோபத்தில் சிவந்த , விடைத்திருந்த அவளது நாசியின் நுனியில் தனது உதடுகளால் அழுந்த முத்தமிட்டான்.

அவனது அருகாமையில் , அவனது திடீர் முத்தத்தில் அவள் திகைப்புற்று விழி விரிய அவனைப் பார்த்தாள். அவனோ அவளது விழிகளைச் சந்திக்காது நாசிக்கு இணையாகச் செர்ரி பழம் போல் சிவந்திருந்த அவளது இதழ்களில் தனது பார்வையைப் பதித்தான். கணவனது பார்வை சென்ற இடம் , அவனது விழிகளில் வழிந்த தாபம் இவற்றைக் கண்டவளுக்கு நெஞ்சம் படபடத்தது. அவளது இதழ்கள் தானாகப் பயத்தில் நடுங்கியது.

"பிரஹான் , ப்ளீஸ்..." நடுங்கும் இதழ்களிடையே அவளது வார்த்தைகளும் நடுங்கி கொண்டே வெளிவந்தது. அதிலும் அவனது சூடான மூச்சுக்காற்று அவளது முகத்தில் பட்டதில் அவளது உள்ளம் வெண்ணெயாய் உருகியது.

மனைவியின் மனம் புரிந்து அவன் மெல்ல அவளை விட்டு விலகினான். அவளோ இதற்காகக் காத்திருந்தார் போன்று கட்டிலில் இருந்து இறங்கியவள் வேகமாய் அறையை விட்டு வெளியில் ஓடினாள். அவள் செல்வதைப் பார்த்தபடி நின்றிருந்த விஷ்ணுபிரஹான் முகத்தில் அப்படியொரு புன்னகை...

"நீயெல்லாம் எப்படிடி டாக்டருக்கு படிச்ச ?" அவன் கிறக்கத்தோடு முணுமுணுத்துக் கொண்டான்.

****

பரத் தண்ணீர் குடிப்பதற்காகச் சமையலறையை நோக்கி சென்றான். இரவு பதினோரு மணியாகியும் அவனது மனைவி அறைக்கு வந்தபாடில்லை. அப்படியே அவள் வந்தாலும் அவன் அருந்துவதற்காகத் தண்ணீர் எடுத்து வைக்கும் அளவிற்கு எல்லாம் நல்ல மனசு அவளுக்குக் கிடையாது. யாருக்கு வந்த விருந்தோ என்று... இல்லை , இல்லை , விருந்தாளி போன்று தான் அவள் அவனது அறையில் இருக்கிறாள். இந்த லட்சணத்தில் அவள் தண்ணீர் எடுத்து வைத்துவிட்டாலும்... அவன் பல்லை கடித்தபடி சமையலறைக்குள் நுழைந்தான்.

அங்குக் கனிஷ்கா குளிர்சாதன பெட்டியை திறந்து என்னவோ எடுத்து கொண்டிருந்தாள். அவளுக்கு மறுபக்கம் குளிர்சாதன பெட்டியின் கதவில் தண்ணீர் பிடிக்கும் பில்டர் இருந்தது. வேண்டுமென்றே அவளை இடித்துக் கொண்டு அவன் மறுபக்கம் சென்றான். இப்போது எல்லாம் அவன் தான் அவளை வம்பிழுப்பது. அப்படி அவன் அதிரடியாக இருந்தால் தான் அவள் அமைதியாக இருக்கிறாள். அதனால் அவன் தனது கெத்தை விட்டு கொடுப்பதாய் இல்லை. அவளும் அவன் வம்பிழுப்பதற்குப் பயந்து அமைதியாக ஒதுங்கி போனாள்.

அவன் இடித்துக் கொண்டு செல்வதைக் கண்டு யாரென்று தெரியாது கனிஷ்கா ' வீலென்று ' அலற போக... அடுத்த நொடி அவளது இதழ்களை அவனது உதடுகள் சிறை செய்திருந்தது. இரவின் அமைதியான பொழுதில் அவள் இப்படி அலறினால் கேட்பவர் என்ன நினைப்பர் ? அதனால் தான் அவன் அவளது வாயை அடைக்க எண்ணி இப்படிச் செய்தது! அவளை வாயடைக்கச் செய்ய நினைத்தவன் இப்போது அவன் தான் வாயடைத்து போய் நின்றான். பெண்ணவளின் இதழ் மென்மையில் ஆணவன் முற்றிலும் கரைந்து தான் போனான். அவளது இதழ்கள் பஞ்சு மிட்டாயா ? அல்லது ஜவ்வு மிட்டாயா ? என்கிற ஆராய்ச்சியில் அவன் ஈடுபட்டான்.

கணவனது இதழொற்றலில் கனிஷ்கா மொத்தமாய் உருகி போனாள். அவளது காதல் நெஞ்சம் அப்படியே வெளிப்பட்டுக் கணவனிடத்தில் மொத்தமாய்ச் சரண்டைந்தது. காதலை உணர்ந்த அவளும் , காதலை உணராது அவனும் இதழ் யுத்தத்தில் மூழ்கி இருந்தனர்.

அப்போது அங்கு வந்த சீதா தான் கண்ட காட்சியில் திகைத்து போய் அப்படியே பின்னடைய... அவளின் பின்னேயே வந்த ஸ்ரீராமின் மீது மோதி நின்றாள்.

"சீதா , என்னாச்சு ?" என்று கேட்டபடி அவன் அவளைப் பிடித்து நிறுத்தினான்.

கணவனுக்கு இருமல் வரவும் அவள் சுடுநீர் எடுக்க எண்ணித்தான் இங்கு வந்தது. வந்து பார்த்தால்... ? அவளது முகம் வெட்கத்தில் சிவந்தது. ஸ்ரீராம் புரியாது சமையலறைக்குள் நுழைய முயல...

"ராம் , வேண்டாம்..."

"ஏன் ?" அவன் குழப்பமாய் அவளைப் பார்த்தான்.

"அங்கே... அங்கே..."

"அங்கே என்ன ?"

"உங்க தம்பியும் , கனியும்..." என்றவள் வெட்கம் தாளாது தங்களது அறையை நோக்கி ஓட...

முதலில் புரியாது விழித்த ஸ்ரீராம் பின்பு புரிந்தவனாய் முகம் மலர தனது மனையாளை துரத்தி கொண்டு ஓடினான். அறைக்குள் நுழைந்தவன் கதவை சாற்றிவிட்டு அதன் மீது மனைவியைச் சாய்த்தவன் அவள் மீது தான் சாய்ந்து நின்றான். அவனது செயலில் சீதா விழி விரித்து ஆச்சரியமாய்க் கணவனைப் பார்த்தாள். அவனும் புன்னகையுடன் அவளைப் பார்த்திருந்தான்.

சில மாதங்களுக்கு முன் விஷ்ணுபிரஹான் தங்களிடம் இருந்து எடுத்த வேலையாட்களையும் , அதனால் விளைந்த நஷ்டத்தையும் திருப்பிக் கொடுத்திருந்தான்.

அதைக் கண்டு பரத் கூட விஷ்ணுபிரஹானிடம் கோபம் கொண்டான்.

"பரத் , விஷ்ணு யாரோ ரோட்டில் போகிறவன் இல்லை. நம்ம பட்டுவோட கணவன். நம்ம மனைவிகளின் அண்ணன். இந்த உறவு தொழிலோடு முடிந்து போகும் உறவு இல்லை. இதை மனதில் வைத்துக் கொண்டு பேசு." என்று கண்டிப்போடு தம்பியிடம் பேசியவன் தானே விஷ்ணுபிரஹானுக்கு அழைத்தான். அவன் அழைப்பான் என்று எதிர்பார்த்திருந்த விஷ்ணுபிரஹான் உடனே அழைப்பை எடுத்தான்.

"தேங்க்ஸ் விஷ்ணு..." என்று ஸ்ரீராம் அவனிடம் நன்றியுரைக்க...

"நீ பண்ணிய வேலைக்கு நான் உன் மேல் கொலைவெறியில் இருக்கேன்." அவன் சொன்னதும் ஸ்ரீராம் அமைதியாய் இருக்க...

"என்னை அடிச்சு போட்டுட்டு என் மனைவியை என்னிடம் இருந்து பிரிச்சுட்டு போனதை என்னால் உயிர் உள்ள வரை மறக்க முடியாது." விஷ்ணுபிரஹான் சினத்துடன் கூற... அதைக் கேட்டு ஸ்ரீராம் திகைப்புற்றான். அவனது காதலுக்கு இடைஞ்சலாக இருந்த தன்னை அவன் மன்னிக்க மாட்டான் என்று ஸ்ரீராம் எண்ணியிருக்க... அவனோ வேறு கதை கூறுகின்றானே...

"விஷ்ணு , அன்னைக்கு... அர்ச்சனா..." என்று ஆரம்பிக்க... ஒரு நொடி அமைதியாக இருந்த விஷ்ணுபிரஹான் ,

"முடிந்து போன கதையைப் பத்தி பேசாதே. உன்னுடைய அந்தத் தவறை என் தங்கைக்காக மன்னிக்கிறேன். அதுக்காக நீ செய்த எல்லாத் தவறையும் அல்ல..." என்க...

"இது போதும் விஷ்ணு... இந்த விசயம் தான் என் மனசில் நெருஞ்சி முள் போல் உருத்தி கொண்டிருந்தது. ரொம்பத் தேங்க்ஸ்..." என்று ஸ்ரீராம் நன்றி கூற...

"நன்றி சொல்றதா இருந்தால் உன் தங்கைக்குச் சொல்லு... ஆராவுக்காகத் தான் நான் இதைச் செய்தது." என்றவன் அழைப்பை துண்டித்து விட்டான்.

ஸ்ரீராம் சந்தோசத்துடன் அலைப்பேசியை வைத்தான். அதே சந்தோசத்துடன் தங்கையைச் சென்று பார்க்க... ஆராதனா அவனிடம் சாதாரணமாகப் பேசினாலும் முன்பு இருந்த ஒட்டுதல் அவளிடத்தில் இல்லை என்பதை அவன் உணர்ந்தான். அதை அவளிடம் கேட்ட போது அவள் கூறிய காரணம் கேட்டு திகைத்துப் போனான்.

"இரண்டு இடத்திலும் நான் செய்யாத தவறுக்குத் தண்டனை அனுபவிக்கிறேன். இதுக்கு மேல் நான் ஒண்ணும் பேச விரும்பலை. நீங்க மன்னியோட சந்தோசமா இருங்கோ... என்னைப் பத்தி கவலைப்பட வேண்டாம்." என்றவள் அங்கிருந்து சென்றுவிட்டாள்.

அதிலிருந்து இதுவரை ஸ்ரீராமை அழுத்தியிருந்த மனப்பாரம் அகன்றாலும் , அவன் தங்கையை எண்ணி கவலையுற்று இருந்தான். அதனால் தான் அவனால் தனது மனைவியிடத்தில் கணவனாய் நெருங்க முடியவில்லை. அதை நினைத்தபடி அவன் தனது மனைவியைப் பார்த்திருந்தான்.

"சீதா , என் மேல் கோபம் வருதா ?"

"எதுக்கு ?" அவள் புரியாது புருவத்தைச் சுருக்கினாள்.

"நான் உன்னைக் காக்க வைக்கிறேன்னு..."

"அதெல்லாம் ஒண்ணும் இல்லைன்னா..." அவள் முகம் சிவக்க தலைகுனிந்தாள்.

"உன் மேல் எனக்கு எந்தக் கோபமும் , வருத்தமும் கிடையாது சீதா. நான் உன்னை மனமார காதலிக்கிறேன். ஆனா... ???"

"ஆனா... ?" அவள் கவலையுடன் கணவனைப் பார்த்தாள்.

"பட்டுவோட வாழ்க்கை சரியானதும் தான் நமக்குள்..." அவன் முடிக்காது அவளைப் பார்த்தான்.

"புரியுதுன்னா... கவலைப்படாதேள்." அவள் ஆறுதலாகப் புன்னகைத்தாள்.

அதைக் கண்டு அவனும் நிம்மதியுற்றவனாய் அவளுக்கு வழி விட்டு நின்றான். அவள் படுக்கையின் ஒரு பக்கம் வந்து படுத்துக் கொள்ள... அவன் மறுபக்கம் வந்து படுத்துக் கொண்டான்.

அதே நேரம் பரத் தன்னவளின் இதழ்களில் சுகமாய்ப் புதைத்திருந்தான். நேரம் செல்ல செல்ல தனது கைகளில் தொய்ந்து விழுந்தவளை உணர்ந்தவனாய் அவன் உணர்வுகள் வடிய அவளை விலக்கி நிறுத்தினான். கனிஷ்கா தன்னைத் தானே கடிந்து கொண்டவளாய் மறுபக்கம் திரும்பி நின்று கொண்டாள்.

"ஈர்ப்புக்கே இப்படின்னா... உண்மையா காதலிச்சு இருந்தால்... ?" பரத் மனைவியைக் கண்டு கிண்டலடித்தான். அவனது கிண்டலை கேட்க சகிக்காதவளாய் ,

"பிஏவை படுக்கையறைக்குக் கூப்பிடும் புண்ணியவானை காதலிக்க எல்லாம் முடியாது." என்றவளின் தலைமுடியை கொத்தாக பற்றித் தன்புறம் திருப்பியவன் அவளைக் கண்ட ,

"இந்த வாய் தான்டி உன்னை இந்தளவுக்குக் கொண்டு வந்திருக்கு." என்று கடுமையுடன் கூற... அவனது செயலில் அவளுக்கு வலித்த போதும் வலியை அடக்கி கொண்ட ,

"இதுவும் இல்லைன்னா என்னை ஐஞ்சு காசுக்கு கூட மதிக்க மாட்டேள்." அவள் அவனை முறைத்துக் கொண்டு கூறினாள். அதில் கோபம் கொண்டவன் அவளது முகத்தைத் தன்னை நோக்கி இழுத்த ,

"இப்போ மட்டும் யாருடி உன்னை மதிச்சது... தாலி கட்டிய பாவத்துக்குக் கூட வச்சிருக்கேன்." என்று கடுகடுத்தவன்

அடுத்த நொடி அவளைத் தள்ளிவிட்டுச் சென்றான்.

திடுமெனப் பரத் அவளைத் தள்ளி விட்டதில் கனிஷ்கா பிடிமானமின்றிக் குளிர்சாதன பெட்டியின் மீதே விழுந்தாள். பின்பு அவள் தன்னைச் சுதாரித்துக் கொண்டு நேராக நின்றாள். சற்று முன் தித்தித்த அவளது இதழ்கள் இப்போது தீயாய்த் தகித்தது. அவளது மனம் கலங்கிய போதும் அவள் விழிகள் கலங்காது மனவுறுதியுடன் நின்றிருந்தாள்.

****

"ஹாய் அர்ச்சனா , எப்படி இருக்கீங்க ?" அர்ச்சனாவின் நலம் விசாரித்தபடி அங்கு வந்து சேர்ந்தாள் ஆராதனா.

"நல்லா இருக்கேன் ஆரு..." அர்ச்சனா புன்னகையுடன் பதில் அளித்தாலும் அவளது புன்னகையில் ஜீவன் இல்லை என்பதை உணர்ந்து கொண்டாள் ஆராதனா.

"பார்த்தால் அப்படித் தெரியலையே. வர வர உங்களோட ஆரோக்கியம் குறைஞ்சிக்கிட்டே வருதே." கவலை தோய்ந்த குரலில் கூறினாள் ஆராதனா.

"ப்ச் , அது கிடக்குது ஆரு... நான் கேட்ட நெல்லிக்காய் ஊறுகாய்க் கொண்டு வந்தியா ? போன தடவை செம டேஸ்ட்டா இருந்தது."

அர்ச்சனாவின் வளைகாப்பின் போது அவள் ஆசைப்பட்டாள் என்பதற்காக ஆராதனா கொஞ்சமாய் நெல்லிக்காய் ஊறுகாய்ச் செய்து கொண்டு வந்திருந்தாள். அதைக் கொடுத்துவிட்டு தினமும் பயத்துடன் அர்ச்சனாவிற்கு இரத்த அழுத்தத்தைப் பரிசோதித்துப் பார்த்தது அவளுக்குத் தானே தெரியும். அவளது கணவன் அர்ச்சனாவின் உயிரை அவளிடம் அல்லவா ஒப்படைத்து இருக்கிறான்.

"ஊறுகாய் எல்லாம் எடுக்கக் கூடாது. இது டாக்டரோட ஸ்ட்ரிக்ட் ஆர்டர்." என்று ஆராதனா மறுத்துவிட... அர்ச்சனாவின் முகம் வாடி போனது.

அதைக் கண்டு கொள்ளாது ஆராதனா அர்ச்சனாவின் உடல்நிலையைப் பரிசோதித்தாள். எல்லாம் சாதாரணமாக இருந்தது. அப்போது அர்ச்சனாவின் அன்னை மங்கை அங்கு வந்தார். ஆராதனாவை கண்டதும் ,

"வாம்மா , ஆரு... சாப்பிட்டியா ? இல்லைன்னா சாப்பிட்டுட்டு தான் போகணும்." என்று உபசரித்தார்.

அன்று ஆராதனா மகளிடம் அப்படிப் பேசியதில் அவருக்குச் சிறிது வருத்தம் இருந்தது தான். ஆனால் இத்தனை மாதங்களாகத் தனது மகளிடம் அவள் காட்டும் அன்பு அவரது மனதினையும் மாற்றி இருந்தது.

"இன்னும் சாப்பிடலை... அதனால் தானே லன்ச் டைம் பார்த்து இங்கே வந்தது." கண்சிமிட்டியபடி கூறிய ஆராதனா குறும்பாகச் சிரித்தாள்.

"நல்ல பொண்ணு... ரெண்டு பேரும் சாப்பிட வாங்க..." என்றழைத்துவிட்டு மங்கை செல்ல... இருவரும் அவரைப் பின்தொடர்ந்தனர்.

அர்ச்சனாவை அமர வைத்து உணவை பரிமாறிய ஆராதனா தனக்கும் பரிமாறிவிட்டு அமர்ந்தாள். அவளைப் பார்த்தபடி உண்ட அர்ச்சனாவின் விழிகள் கலங்கியது. ' இவள் ஒரு தேவதை பெண் ' என்றே அவளுக்குத் தோன்றியது. ஆராதனாவின் நல்ல மனது அவளுக்குக் கூட வருமா ? என்று அவளுக்குத் தெரியவில்லை. அந்த விதத்தில் ஆராதனா அவளுக்குக் கடவுளாகத் தான் தோன்றினாள்.

உணவை முடித்துக் கொண்டு ஆராதனா காரிலேறும் போது அங்கு ஒரு கார் புயல் போல் வந்து நின்றது. அதிலிருந்து இறங்கிய விஜய் ஆத்திரத்துடன் அவளை மறித்தார் போன்று வந்து நின்றிருந்தான். ஆராதனா திகைப்புடன் அவனைப் பார்க்க... அர்ச்சனா அதிர்வுடன் அவனை நோக்கினாள்.

"ஏய் , எதுக்குடி இங்கே வந்த ? அர்ச்சனாவை கொஞ்சம் கொஞ்சமா கொன்னுட்டு உன் இடத்தை ஸ்திரமாக்கி கொள்ள நினைக்கிறியா ?" என்று அவன் காட்டுக் கத்தலாய்க் கத்தினான்.

ஆராதனா தன்னை நிலைப்படுத்திக் கொண்டவள் , " இது என்ன கேள்வி சார் ? ஒரு டாக்டர் எதுக்கு வருவாங்க ? நான் என் பேஷண்ட்டை பார்க்க வந்தேன்." என்று இரு கரங்களையும் கட்டியபடி அமர்த்தலாகக் கூறினாள். அவளது தைரியத்தைக் கண்டதும் அர்ச்சனாவும் சிறிது தைரியமுற்றாள்.

"இவளை நம்பாதே ஏஞ்சல்... இவள் உன் வாழ்க்கையை அழிக்க வந்தவள்." விஜய் அர்ச்சனாவிடம் இறைஞ்சும் குரலில் கூற...

"அப்போ உங்க வார்த்தைகளை மட்டும் நான் நம்ப வேண்டுமா ?" அர்ச்சனா இறுகிய குரலில் அவனைத் திருப்பிக் கேள்வி கேட்டாள்... அதைக் கேட்டு விஜய் வாயடைத்துப் போனான்.

"முதலில் இங்கிருந்து போங்க விஜய்... என்னை நிம்மதியா இருக்க விடுங்க. ப்ளீஸ்..." இரு கரங்கள் கூப்பி வேண்டியவளை வேதனை பொங்க பார்த்திருந்தவன் அடித்த நொடி அமைதியாக விலகி சென்றான்.

அர்ச்சனாவின் வீட்டு வாயிலை தாண்டும் போது விஜய் காரின் முன்னிருந்த கண்ணாடி வழியே அர்ச்சனாவை பார்த்தான். நிறைமாத வயிற்றுடன் அவள் நின்றிருந்தவிதம் அவனது மனதினை அசைத்துப் பார்த்தது. தவறு செய்துவிட்டோமோ ? என்று அவன் மனதிற்குள் தவித்தான். அதற்காக அவனால் பெண்ணவளிடத்தில் மன்னிப்பு கூடக் கேட்க முடியவில்லை. ஏனெனில் அவன் செய்த தவறு அப்படி...

இங்கு யாருமே தவறான மனிதர்கள் கிடையாது. ஒருவரது எண்ணங்களும் , செயல்களுமே சில நேரங்களில் தவறாகி போகிறது. அதை அவர் உணர்ந்து தன்னைத்

திருத்தி கொள்ளும் போது அவர் நல்லவராக மாறிவிடுகின்றார்.

"டேக் கேர் அர்ச்சனா... எந்த உதவி தேவைப்பட்டாலும் எந்த நேரமானாலும் உடனே எனக்கு ஃபோன் பண்ணுங்க." ஆராதனா கூற... அதற்கு அர்ச்சனா மௌனமாகத் தலையாட்டினாள். ஆராதனா மருத்துவமனைக்குக் கிளம்பி சென்றாள்.

அன்றிரவு விஷ்ணுபிரஹான் ஆராதனாவிடம் , " விஜய் உன் கிட்ட வம்பிழுத்தானா ?" என்று கேட்க...

"வம்பு எல்லாம் இழுக்கலை. இங்கே ஏன் வந்தன்னு கேட்டார்."

"நீ அங்கே போறதுக்கு இவன் கிட்ட பெர்மிசன் வாங்கணுமாக்கும்." என்று அவன் கொதிக்க...

"விடுங்க பிரஹான்... அவர் பேசியதை நான் மைண்ட் பண்ணிக்கலை." என்று அவள் அவனை ஆறுதல்படுத்த...

"தேங்க்ஸ் பேபி..." அவன் மனமார நன்றி கூற... அவள் புன்னகையுடன் குளியலறைக்குள் புகுந்து கொண்டாள்.

நள்ளிரவில் ஆராதனாவின் அலைப்பேசி அலறியது. அந்தச் சத்தத்தில் எழுந்த ஆராதனா அழைப்பை உயிர்ப்பித்துக் காதில் வைத்தாள். மறுபுறம் கூறிய செய்தியில் பரபரப்பு உற்றவளாய் அலைப்பேசியை அணைத்துவிட்டு விஷ்ணுபிரஹானை எழுப்பினாள்.

"என்ன பேபி ?" அவன் தூக்க கலக்கத்தில் எழுந்தமர்ந்தான்.

"அர்ச்சனாவுக்கு வலி வந்திருச்சாம்." என்றவள் அவசரமாக உடை மாற்ற துவங்கினாள்.

ஆராதனாவுக்கு இந்த மாதிரி நள்ளிரவு பொழுதில் மருத்துவமனை செல்லுவது ஒன்றும் புதிதில்லை. ஆனால் அர்ச்சனா என்றதும் தான் அவள் கணவனை எழுப்பியது.

அர்ச்சனாவை நினைத்து அவளுக்குமே சிறிது பயமாக இருந்தது.

இருவரும் சேர்ந்து மருத்தவமனைக்குக் கிளம்பி வந்தனர். அதற்குள் அர்ச்சனாவை பிரசவ அறையில் வைத்துக் கவனித்துக் கொண்டிருந்தனர். அர்ச்சனாவின் உடல்நிலை பிரசவ வலியை தாங்கி கொள்ளும்படி இல்லை... இரத்த அழுத்தம் , இரட்டை குழந்தைகள் வேறு... அதனால் ஆராதனா அவளுக்கு அறுவை சிகிச்சை செய்ய முடிவெடுத்தாள். அதற்கான கையொப்பம் வாங்க வேண்டி அவள் ஒரு பாரத்தை எடுத்துக் கொண்டு கணவன் முன் வந்து நின்றாள். அவன் என்னவென்று நிமிர்ந்து பார்த்தான்.

"டெலிவரி கொஞ்சம் சிக்கலாக இருக்கும் போலிருக்கு. அதனால் கையெழுத்து வேணும்." உணர்வில்லாது கூறியவள் பாரத்தை அவனிடம் நீட்டியபடி அவனது முகத்தைக் கூர்ந்து நோக்கினாள்.

விஷ்ணுபிரஹான் அந்தப் பாரத்தை வாங்கி எல்லாவற்றையும் நிரப்பியவன் கீழே கையொப்பம் இருந்த பகுதி வந்ததும் கை நடுங்க அப்படியே இருந்தான்.

"கையெழுத்து போடுங்க பிரஹான். டைமாச்சு..." அவள் அவனை அவசரப்படுத்தினாள்.

அவளை நிமிர்ந்து பார்த்த விஷ்ணுபிரஹானின் விழிகள் கலங்கி சிவந்திருந்தது. ஒரு காலத்தில் இது போல் கையெழுத்திட ஆசை கொண்டவன் தான் அவன்... ஆனால் இன்று அந்த ஆசையே நெருப்பள்ளி தலையில் கொட்டியது போல் தகிக்கின்றதே. அதை எப்படி மனையாளிடத்தில் கூறுவது ? என்று அவன் மனம் கசங்கினான். இந்த நொடி பூமி இரண்டாகப் பிளந்து தன்னை விழுங்கிவிடக் கூடாதா ? என்று அவனுக்கு அத்தனை அவமானமாக இருந்தது. இதுவரை அவன் யாருக்காகவும் , எதற்காகவும் தலைகுனிந்தது இல்லை. ஆனால் இப்போது முதன்முறையாகத் தவறு செய்துவிட்டு மனையாள் முன் தலைகுனிந்து இருக்கிறான்.

அவனது மனநிலையை உணர்ந்தவளாய் ஆராதனா அவனது முகத்தை நிமிர்த்தியவள் அவனது விழிகளுக்குள் தனது விழிகளைக் கலந்தபடி ,

"விஜயை ஃபோன் போட்டு வரவழைங்க... பெர்மிசன் கேட்கணும்." என்றாள் நிதானமான குரலில்...

மனையாளின் வார்த்தையில் விஷ்ணுபிரஹான் திகைப்புற்று அவளைப் பார்த்திருந்தான்...!!!

திருத்தமாகும்...!!!

"ரொம்ப யோசிக்காதேள் பிரஹான்... சீக்கிரம் விஜயை கூப்பிடுங்கோ." ஆராதனாவின் குரலில் தன்னைச் சுதாரித்துக் கொண்ட விஷ்ணுபிரஹான் தனது முகத்தினை அழுந்த துடைத்துக் கொண்டு ,

"விஜய் நம்பர் எனக்குத் தெரியாது. மங்கை ஆன்ட்டி அல்லது ஸ்ரீராம் கிட்ட கேளு." என்றான்.

மங்கை அர்ச்சனா அருகில் இருந்தார். அதனால் அவரிடம் கேட்க விருப்பம் இல்லாது ஆராதனா கணவனை நோக்கி
,

"ஸ்ரீராம் ? என் அண்ணாவா ?" என்று கேட்க... அவன் ஆமென்று தலையசைத்தான்.

அவன் மறந்தும் ஆராதனாவை நேர்கொண்டு பார்க்கவில்லை. அவளைப் பார்க்க அவனுக்கு விருப்பம் இல்லை என்று சொல்லிவிட முடியாது. அவனால் அவளைப் பார்க்க இயலவில்லை. தவறே செய்திராதவன் திடுமெனச் சந்தர்ப்ப சூழ்நிலையில் தவறு செய்ய நேர்ந்தால் அவனது நிலைமை விஷ்ணுபிரஹானின் நிலைமையை ஒத்து தான் இருக்கும். மனசாட்சி இருப்பவர்களுக்கு மட்டுமே தவறின் ஆழம் புரியும்.

அதற்குள் ஆராதனா ஸ்ரீராமிற்கு அழைத்திருந்தாள். அலைப்பேசியைக் காதில் வைத்தவாறு கணவனிடம் , " அண்ணாவுக்கு விஜயை எப்படித் தெரியும் ?" என்று கேட்க...

"பிரெண்ட்ஸ்..."

அதைக் கேட்டவள் ஒன்றும் பேசவில்லை. மறுபுறம் ஸ்ரீராம் எடுத்ததும் அவனிடம் விஜய்க்கு அழைத்து மருத்துவமனைக்கு வர சொல்லுமாறு கேட்டு கொண்டாள்.

"என்னாச்சு பட்டு ?" அண்ணனின் பதட்டமான குரலில் ,

"அர்ச்சனாவுக்கு ஆபரேசன் பண்ணனும்." என்று மட்டும் உரைத்துவிட்டு அவள் அலைப்பேசியைத் துண்டித்துவிட்டாள்.

தலைகுனிந்தபடி அமர்ந்திருந்த கணவனிடத்தில் நிறையப் பேச அவளது மனது துடித்தது. ஆனால் அவளது கடமை அவளை அழைத்ததில் அவள் உள்ளே விரைந்தாள். அறுவை சிகிச்சைக்குத் தயாராகிக் கொண்டிருக்கும் போதே விஜய் வந்துவிட்டான். அவனைத் தொடர்ந்து அவனது தந்தை சேதுபதியும் , ஸ்ரீராமும் அங்கு வந்துவிட்டனர்.

விஜய் தலை கலைந்தது , கண்கள் சிவந்தது , உன்மத்தம் பிடித்தார் போன்று மருத்துவமனை வராந்தாவில் வேகமாக நடந்து வந்தான்.

"எங்கே என் ஏஞ்சல் ?" அவன் கத்திய கத்தலில் அந்த மருத்துவமனையே அதிர்ந்தது.

விஜயின் சத்தத்தில் பிரசவ அறையை விட்டு வெளியில் வந்த ஆராதனா அவனிடம் சென்றது , " கொஞ்சம் கத்தாம இருங்க. சிஸ்டர் அந்த ஃபாரத்தை எடுத்து வந்து இவர் கிட்ட கொடுங்க." என்று கூற...

அதை வாங்கிய விஜய் அர்ச்சனாவின் பெயரை தவிர வேறு எதையும் எழுத தெரியாது விழித்தான். ஆராதனா இரு கைகளையும் கட்டியபடி அவனைப் பார்த்து கொண்டிருந்தாள்.

"நீங்களே இதைப் பில்அப் பண்ணிக்கோங்க... கீழே மட்டும் நான் சைன் பண்ணி தர்றேன்." என்றவன் வேகமாக மருத்துவமனை சேர்க்கை படிவத்தின் கீழே கையெழுத்திட்டு அவளிடம் நீட்டினான்.

கணவன் என்கிற இடத்தில் விஜய் கையெழுத்து போட்டிருப்பதைக் கண்டு ஆராதனா பெரிதும் வியப்பு அடையவில்லை. ஏற்கெனவே அவள் கணித்து வைத்திருந்ததை விஜய் மெய்யாக்கி இருக்கிறான்

அவ்வளவே. விஜயை கண்டதும் அர்ச்சனாவின் விழிகளில் அவளது கலக்கத்தை மீறி அதில் தோன்றும் ஏக்கம் ஆராதனாவை யோசிக்க வைத்தது. ஏனெனில் அப்படியொரு ஏக்கம் ஆராதனா அவளது கணவனைக் காணும் போது அவளது விழிகளில் தோன்றுமே. அதேசமயம் அர்ச்சனா விஷ்ணுபிரஹானை பார்க்கும் போது அவளது விழிகளில் அன்பு மட்டுமே தெரியும். அவனும் அப்படியே. இதை எல்லாம் விட விஜயின் விழிகள் அர்ச்சனாவிடம் காதலை யாசிப்பது அப்பட்டமாகத் தெரியும். அதே போல் அர்ச்சனா அணிந்திருக்கும் தாலி ஆராதனாவுக்கு விஷ்ணுபிரஹான் அணிவித்தது போல் இருக்கவில்லை. அது வித்தியாசமாக இருந்தது. விஷ்ணுபிரஹானை பற்றி ஆராதனாவுக்கு நன்கு தெரியும். அவன் எந்த உயர்நிலைக்குப் போனாலும் அவன் அவனது கலாச்சாரத்தை விட்டு கொடுக்க மாட்டான் என்பது. இதெல்லாம் தான் அவளை யோசிக்க வைத்தது. இதோ அவை எல்லாம் உண்மை என்று நிரூபித்து இருக்கிறான் விஜய்.

ஆராதனா விஜயை தன்னுடன் அழைத்துக் கொண்டு உள்ளே சென்றாள். நடப்பதை எல்லாம் இறுகிய முகத்துடன் பார்த்திருந்தான் விஷ்ணுபிரஹான். ஸ்ரீராம் அவன் அருகில் அமர்ந்த போதும் அவனால் விஷ்ணுபிரஹானுக்கு ஆறுதல் கூற முடியவில்லை. அவன் அமைதியாக அமர்ந்திருந்தான்.

உள்ளே வந்த விஜய் அர்ச்சனா படும் அவஸ்தையைக் கண்டு பதற்றத்துடன் அவள் அருகில் சென்றான். ஆராதனா அவனைப் பின்தொடர்ந்தாள்.

"ஏஞ்சல்..." அவன் விழிகள் கசிய அவளது கையைப் பிடித்தான்.

அடுத்த நொடி தீச்சுட்டார் போன்று தனது கையை உதறினாள் அர்ச்சனா. பிரசவ வலியில் துடித்துக் கொண்டிருக்கும் மென்மையான பெண்ணவளுக்கு இத்தனை வலிமை எங்கே இருந்து வந்தத ? ?

"ச்சீ... என்னைத் தொடாதே." அவள் ஆக்ரோசமாய்க் கத்தினாள்.

"ஏஞ்சல்... என்னை மன்னித்துவிடு. நான் தெரியாமல் செய்த தவறை மன்னித்துவிடு." அவனது உதடுகள் விடாது முணுமுணுத்தது. அதைக் கேட்டு அர்ச்சனாவின் விழிகளில் இருந்து கண்ணீர் வழிந்தது.

"நான் செய்த தவறுக்காகத் தான் நீங்க செய்த அத்தனை அநியாயத்தையும் பொறுத்துக்கிட்டேன். ஆனா நீங்க... ?" என்றவள் தனது வயிற்றைத் தடவியபடி ,

"உங்க குழந்தைகள் இல்லைன்னு சொல்ல உங்களுக்கு எப்படி மனசு வந்தது ? என் குழந்தைகளுக்கு அப்பா யார்ன்னு எனக்கு மட்டும் தெரிந்தால் போதும். அதை யாருக்கும் நிரூபிக்க வேண்டிய அவசியம் எனக்கு இல்லை." என்றவள் கண்ணில் இருந்து விடாது கண்ணீர் வடிந்தது.

அர்ச்சனா கூறியதை கேட்டு ஆராதனா வருத்தமுற்றாள். இது பெண்களுக்கே உண்டான சாபக்கேடா ? எத்தனை நாளைக்குத் தான் பெண்ணவள் சீதையைப் போல் தீக்குளிப்பாள் ? சமூதாயத்திற்காக , கணவனுக்காக என்று... இருவருக்கும் இடையில் என்ன பிரச்சனை ? என்று தெரியாத போதும் ஒரு பெண்ணாய் அவளுக்கு அர்ச்சனாவை கண்டு பாவமாக இருந்தது.

"வார்த்தையால் கொல்லாதே ஏஞ்சல். இப்போது நான் உன்னைப் புரிஞ்சிக்கிட்டேன். இது என் குழந்தைகள் தான். எனக்கு நல்லா தெரியும்." என்றவனை நம்பாது பார்த்தவளை கண்டு அவன் ,

"என்னை நம்பு ஏஞ்சல். முதலில் இருந்த விஜய் இப்போ இல்லை. உன் மேல் எனக்குக் கோபம் இருந்தது உண்மை தான். ஆனால் அன்னைக்குத் துணிக்கடையில் உன்னைத் தூக்கினப்போ உன் மனசை நான் உணர்ந்துக்கிட்டேன். நீ என்னைத் தவிர வேறு யார் கிட்டேயும் உன் உணர்வுகளை வெளிப்படுத்த மாட்டேன்னு."

அன்று துணிக்கடையில் விஜய் அர்ச்சனாவை தொட்டு தூக்கிய போது அவள் அவனது கரங்களில் நெகிழ்ந்ததை அவன் உணர்ந்தே இருந்தான். மனைவியாய் தனது கரங்களில் நெகிழ்ந்தவளை கண்டு அவன் ஒரு ஆணவனாய் , கணவனாய் கர்வம் கொண்டான். அவனது அத்தனை நாள் கோபமும் சட்டென்று காணாமல் போனது அவளது மனதினை உணர்ந்ததில்... அவளது நெகிழ்வே சொல்லாமல் சொல்லியது அவளது மனதில் அவன் மட்டுமே என்று. அன்று முதல் இன்று வரை அவன் தனது நடத்தைக்காக அர்ச்சனாவிடம் மன்னிப்பு கேட்க முயற்சித்துக் கொண்டே இருக்கின்றான். ஆனால் அவள் அவனை மன்னிக்க மறுக்கிறாள்.

"ரொம்ப லேட்டா புரிஞ்சிக்கிட்டீங்க விஜய்..." அர்ச்சனாவின் இதழ்கள் விரக்தியாய் விரிந்தது.

"எனக்கு மன்னிப்பே கிடையாதா ?"

"மன்னிக்கும் அளவுக்கு நான் ஒண்ணும் கடவுள் இல்லை." அவள் வலியோடு விழிகளை மூடி கொண்டாள். மழலைகள் கொடுத்த மேனியின் வலியா ? அல்லது மன்னவன் கொடுத்த மனவலியா ? எதென்று அவளுக்குத் தெரியவில்லை.

"அண்ணா..." ஆராதனா விஜயை அழைத்தாள்.

"என்னையவா கூப்பிட்டீங்க ?" அவன் ஆச்சரியமாய் அவளைத் திரும்பி பார்த்தான்.

"ஆமா , என் தோழி அர்ச்சனாவின் கணவர் எனக்கு அண்ணா தான்." என்று ஆராதனா அழுத்தம் திருத்தமாய்க் கூறினாள். உடன்பிறப்புகள் இல்லாத விஜய் உடனடியாக ஆராதனாவை தனது சகோதரியாகத் தத்தெடுத்துக் கொண்டான்.

"தேங்க்ஸ் சிஸ்..." என்றவனது மனம் நெகிழ்ந்து போயிருந்தது.

"இப்போ அர்ச்சனாவோட உடல்நிலை ரொம்ப மோசமா இருக்கு. சீக்கிரம் ஆபரேசன் பண்ணணும்." என்று ஆராதனா கூறியதும் அவளது கைகளைப் பிடித்துக் கொண்ட விஜய் ,

"என் ஏஞ்சலை எப்படியாவது காப்பாத்தி கொடும்மா. ப்ளீஸ்..." என்று இறைஞ்சினான்.

எதிரியாக எண்ணியவளிடம் அவன் கோழையாய் கண்ணீர் விட்டுக் கதறினான். காதல் வந்தால் எல்லாம் பறந்து போகும் போலும். ஆறடி மகன் மழலையாய் திகைத்து நின்றிருந்தான்.

"எல்லாம் நல்லபடியாக நடக்கும். இன்னும் அரை மணி நேரத்தில் நீங்க உங்க குழந்தைகளைப் பார்க்கலாம்." என்று ஆராதனா அவனுக்கு ஆறுதல் அளிக்க...

"ம்ஹூம் , என் குழந்தைகள்..." அந்த வலியிலும் அர்ச்சனா முணுமுணுக்க... அதைக் கேட்டு விஜயின் முகம் சுருங்கி போனது.

"குழந்தைகள் முகத்தைப் பார்த்ததும் எல்லாம் மறந்து போகும். நீங்க வெளியில் வெயிட் பண்ணுங்க அண்ணா."

"இல்லைம்மா... நான் என் ஏஞ்சலை விட்டு எங்கும் போக மாட்டேன்." என்று அவன் பிடிவாதம் பிடிக்க... அர்ச்சனா எவ்வளவோ மறுத்தும் விஜய் அவளுடன் இருந்தான்.

அதற்குத் தலைமை மருத்துவரிடமும் மற்றும் மருத்துவமனை நிர்வாகி என்கிற முறையில் விஷ்ணுபிரஹானிடமும் அனுமதி வேண்டப்பட்டது. இருவரும் உடனே அதற்கு அனுமதி அளித்தனர்.

அறுவை சிகிச்சை என்பதால் அர்ச்சனாவுக்கு வலி தெரியவில்லை. ஆனால் அவளது உணர்வுகள் விழித்திருந்தது. நவீன அறுவை சிகிச்சையில் இது ஒரு வர பிரசாதம். அவள் வலியில் முகம் சுளிக்காத போதும் விஜய் அவளது கைகளை விலக்கி கொள்ளவில்லை. ஏதோ தனது உயிரை பிடித்திருப்பது போல் அவன் மனைவியின்

கைகளைக் கெட்டியாகப் பிடித்திருந்தான். அவளுமே அவனது கைகளை விலக்கி கொள்ள மனம் இல்லாது இருந்தாள். அந்த நேரம் கட்டியவனின் ஆறுதல் அவளுக்குத் தேவைப்பட்டது போலும். அவன் அவளுக்குப் பலத்த மனக்காயத்தைக் கொடுத்த போதும் , அவளது மனம் அவனது அருகாமையில் தான் தைரியம் கொண்டதா , நிம்மதி கொண்டது. கணவன் உடனிருக்கும் தைரியத்தில் அவள் குழந்தைகளை நல்லவிதமாகப் பெற்றெடுத்து விடுவோம் என்று நம்பிக்கை கொண்டாள். அதன் விளைவு அவளது இரத்த அழுத்தம் சீரானது. அவளது மனம் உறுதி பெற்றது.

குழந்தை பிறப்பு என்பது எத்தகைய உன்னதமான ஒன்று என்பதை விஜய் அந்த நொடி உணர்ந்து கொண்டான். பெண்ணவளின் அர்ப்பணிப்பில் , தியாகத்தில் அவனது அகங்காரம் தொலைந்து போனது. அந்தக் கணம் அவன் தனது மனைவிக்குத் தாயுமானவனாகி போனான். ஒரு ஆணவன் பெண்ணவளை கௌரவிக்கும் இடம் பிரசவ அறை தான் போலும். ஆணவனுக்குப் போதி மரத்தடியோ அது...!!!

அடுத்த அரை மணி நேரத்தில் ஐந்து நிமிட இடைவெளியில் அடுத்தடுத்து அவர்களது மகவுகள் பூலோகத்தைத் தரிசனம் செய்ய வந்தனர். ஆண் ஒன்றா , பெண் ஒன்றாய் ' ஐடென்ட்டிக்கல் ட்வின்ஸ் ' என்பது போல் ஒரே மாதிரியான உருவ அமைப்புடன் குழந்தைகள் இருந்தனர். ஆராதனா சுத்தம் செய்த குழந்தைகளை எடுத்துக் கொண்டு சந்தோசத்துடன் விஜய் , அர்ச்சனா அருகில் வந்தா ,

"வாழ்த்துக்கள்..." என்க...

"தேங்க்ஸ்..." என்றபடி விஜய் தனது இரு கரங்களிலும் குழந்தைகளைத் தூக்கி கொண்டான். இரு குழந்தைகளின் ஸ்பரிசத்தை ஒரு தந்தையாய் அவன் ஒரே நேரத்தில் அனுபவிக்க நினைத்தான். இதுவரை அவன் இழந்தது

எல்லாம் போதும். அவன் மென்மையாய் தனது பிள்ளைகளின் பாதத்தில் முத்தமிட்டான்.

"ஏஞ்சலஂ , இங்கே பார்... நம் குழந்தைகள்..." என்று அவன் சந்தோச ஆரவாரத்துடன் மனைவி புறம் திரும்பினான்.

"குழந்தைகள் யாரை போல் இருக்காங்க ?" அவள் சோர்வுடன் விழிகளை மூடியபடி கேட்டாள்.

"என்னை மாதிரி தான் என் குழந்தைகள் இருக்காங்க..." என்று அவன் பெருமையுடன் கூற...

"என்னை நிரூபிக்கத் தீக்குளிக்க வேண்டுமோ என்று நினைத்திருந்தேன். நல்லவேளை உங்களைப் போல் பிறந்து என்னைத் தீக்குளிக்க விடாது செய்துவிட்டனர் என் குழந்தைகள்." மனைவியின் சவுக்கடியான வார்த்தையில் அவன் வலியில் துடிதுடித்தவனாய் அவளைப் பார்த்தான். அவன் அவளுக்குக் கொடுக்காத வலியா ? நொடியில் தன்னைச் சமாளித்துக் கொண்டு அவளைப் பார்த்தவன் அவளது நெற்றியில் மென்மையாய் முத்தமிட்டா ,

"உன்னைத் தீக்குளிக்க நான் விடுவேனா ஏஞ்சலஂ ? அதுக்கு முன் நான் தீக்குளித்து உன் புனிதத்தை இந்த உலகுக்கு எடுத்துரைப்பேன். நல்லதோ ? கேட்டதோ ? எதுவாக இருந்தாலும் இந்த விஜயை தாண்டி தான் அர்ச்சனாவிடம் போக வேண்டும்." என்று ஒருவித தீவிரத்துடன் உரைத்தான் அந்தக் காதல் தீவிரவாதி. அவளைக் கண்ட நாள் முதலாய் காதலாய் அவளைத் தனது இதயத்தில் சுமந்திருக்கும் அவனுக்குத் தானே தெரியுமஂ , அவள் சுகமான சுமை என்று...

கணவனது வார்த்தைகளில் அர்ச்சனா திகைத்து போனவளாய் அவனைப் பார்த்தாள். அவனும் பதிலுக்குச் சளைக்காது அவளைப் பார்த்தான். இறுதியில் அவள் தான் விழிகளை மூடி கொள்ள வேண்டியதாய் போயிற்று.

"பிடிவாதம்..." என்று அவள் முணுமுணுக்க...

"உன் மனதை வெல்வதில் மட்டுமே..." என்று அவன் புன்னகையோடு எடுத்துரைக்க...

அவளது இதழ்களிலும் மின்னல் கீற்றாய் புன்னகை தோன்றி மறைந்தது. அதைக் கண்டு அவனது மனம் நிம்மதியுற்றது. இனிவரும் காலங்களில் அவன் அவளைப் புரிந்து கொள்வான். தனது காதலால் அவளைக் குளிப்பாட்டி அவளது காதல் மனதினை மீட்டெடுப்பான் என்று நம்புவோமாக...!

"மிஸ்டர் & மிஸஸ். விஜய்... குழந்தைகளை என்னிடம் கொடுத்துட்டு நீங்க ரெண்டு பேரும் தனியா கொஞ்சிக்கோங்க..." ஆராதனா அவர்களைக் கிண்டலடித்தாள். அவர்கள் இருவரும் பேசி கொண்டது அவளுக்கு லேசாகப் புரிந்தாலும் அதைப் பெரிதாக அவள் கண்டு கொள்ளவில்லை.

"இந்தாங்க சிஸ்..." விஜய் முகம் சிவக்க அவளிடம் குழந்தைகளைக் கொடுத்தான்.

"நீங்க வெளியில் இருங்க... குழந்தைகளுக்கு ஃபீட் பண்ணிட்டு கொடுக்கிறேன்." என்று விஜயை அனுப்பியவள் அர்ச்சனாவிடம் குழந்தைகளைக் கொடுத்தாள்.

குழந்தைகள் பால் அருந்தியதும் ஆராதனாவே குழந்தைகளைத் தூக்கி கொண்டு வெளியில் வந்தாள். தனது பேர குழந்தைகளைச் சேதுபதியும் , மங்கையும் கொஞ்சி மகிழ்ந்தனர். ஸ்ரீராமும் நண்பனின் குழந்தைகளைத் தூக்கி கொஞ்சினான். பின்பு நண்பனிடம் ,

"விஜய் , இன்னும் என் மேல் கோபமா இருக்கியா ?" என்று பாவமாய்க் கேட்க... அடுத்த நொடி விஜய் தோழனை இறுக அணைத்துக் கொண்டான்.

"தேங்க்ஸ் விஜய்..." ஸ்ரீராம் சந்தோசம் அடைந்தான்.

இதை எல்லாம் உணராதவாறு எதையோ சிந்தித்தபடி அமர்ந்திருந்தான் விஷ்ணுபிரஹான். ஆராதனா வந்ததில் இருந்து கணவனைத் தான் கவனித்துக் கொண்டிருந்தாள். அவனது முகம் களையிழந்து காணப்பட்டதைக் கண்டு அவள் வருத்தமுற்றாள்.

"அண்ணா..." அவள் விஜயை அழைக்க...

"என்ன ஆராதனா ?" என்று அவன் கேட்க...

"வித் யுவர் பெர்மிசன்..." அவள் குழந்தைகளைக் கைகளில் வைத்தபடி தனது கணவனைப் பார்த்தாள்.

"விஷ்ணுவுக்கு இல்லாத உரிமையா ? அவன் இல்லைன்னா என் குழந்தைகள் இன்று உயிரோடு இல்லை. தாராளமாய் அவனிடம் போய்க் காண்பி." என்று விஜய் புன்னகை முகமாய்க் கூற... அவள் ஆச்சரியமாய் அவனைப் பார்த்தவள் நன்றி உரைத்துவிட்டு கணவனை நோக்கி நடந்தாள்.

"பிரஹான்..." மனைவியின் அழைப்பில் அடித்துபிடித்துக் கொண்டு எழுந்தான் அவன்...

"குழந்தைகள்..."

மனைவியின் கைகளில் பூக்குவியல் போன்று துயின்றிருந்த குழந்தைகளைக் கண்டு அவனது விழிகள் கலங்கியது. அவனது தேகம் எல்லாம் உணர்ச்சி வேகத்தில் தடதடத்தது. அவன் நடுங்கும் கைகளால் குழந்தைகளின் தலைகளை வருடி கொடுத்தான். பின்பு மனைவியைப் பார்க்க இயலாதவனாய் அவன் அங்கிருந்து அகன்றான். நீண்ட வரந்தாவில் விறுவிறுவென நடந்து செல்லும் கணவனைக் கண்டு திகைத்தவளாய் ஆராதனா நின்றிருந்தாள்.

அர்ச்சனா , விஜய் பேசி கொண்டதில் இருந்து ஆராதனா தானாக விசயத்தை ஊகித்து இருந்தாள். இப்போது கணவனது மனம் புரிந்தது. அவனது பொய்த்து போன காதலுக்காக , அவனது வேதனைக்காக அவள் மனதிற்குள்

ஊமையாகக் கதறி அழுதாள். அவள் அவனுக்காக அழ... அவனோ அவளுக்காக அழுதான். ஆம் , குற்றவுணர்வு மேலோங்க அவனால் மனைவியவளை நேருக்கு நேர் பார்க்க முடியவில்லை. அவளை நினைத்து அவனது மனதில் அத்தனை வேதனை...!

அடுத்தச் சில மணி நேரங்களில் அர்ச்சனா அறைக்கு மாற்றபட்டாள். விஜய் மனைவியுடன் இருந்தான். ஆராதனா ஸ்ரீராமை அழைத்துக் கொண்டு தனது அறைக்குச் சென்றாள். அவனை நாற்காலியில் அமர சொன்னவள் ,

"பிரஹான் , அர்ச்சனா , விஜய் மூன்று பேருக்கும் இடையில் என்ன சம்பந்தம் ?" நேரிடையாக அவள் கேட்க... பதில் கூற முடியாதபடி ஸ்ரீராம் தலைகவிழ்ந்து இருந்தான்.

"சொல்லுங்கோண்ணா..." அவள் சற்று குரலை உயர்த்தினாள். அதில் அவளது பிடிவாதம் தெரிந்தது. ஸ்ரீராம் கண்கள் கலங்க தங்கையை ஏறிட்டு பார்த்தவன் ,

"நான் தான் சம்பந்தம்..." என்க... அவள் அதிர்ச்சியுடன் அவனைப் பார்த்தாள்.

அதே நேரம் உறங்கும் குழந்தைகளை வருடி கொடுத்துக் கொண்டிருந்த விஜயின் மனதிலும் , அவனை இமைக்காது பார்த்திருந்த அர்ச்சனாவின் மனதிலும் கடந்த காலம் படமாக ஓடியது.

விஷ்ணுபிரஹான் பேய் துரத்துவது போல் காரை ஓட்டி கொண்டு வந்தவன் கடற்கரை ஓரமாய்க் காரை நிறுத்திவிட்டு அதன் கண்ணாடியை இறக்கவிட்டா , இருக்கையைப் பின்னுக்கு இழுத்தவன் அப்படியே சாய்ந்து கொண்டான். சில்லென்று வீசிய கடற்கரை காற்று கூட அவனது மனதின் வெம்மையைத் தணிய வைக்க முடியவில்லை. இதோ இதே கடற்கரையில் தான் அவனும் , அர்ச்சனாவும் மனதில் வலியோடு பிரிந்தது. அவன் அர்ச்சனாவை அணைத்துக் கொண்டு கதறியது எல்லாம் அவனுக்கு ஞாபகம் வந்தது. இப்போது அவன் அர்ச்சனாவை நினைத்து கலங்கவில்லை. இப்போது

அவனது மனதில் இருந்தது எல்லாம் மனைவியின் எண்ணங்களே. வேதனையோடு விழிகளை மூடி கொண்டவனின் மனக்கண்ணில் அவனது கடந்த காலம் படமாய் ஓடியது.

****

கிட்டத்தட்ட எட்டு வருடங்களுக்கு முன்...

மும்பையில் இருந்த அலுவலகத்தில் ஸ்ரீராம் பிசியாக இருந்த போது அவனது அலைப்பேசி அழைத்தது. எடுத்து பார்த்தவன் அதில் தெரிந்த விஜயின் எண்ணை கண்டதும் உற்சாக அழைப்பை உயிர்ப்பித்துப் பேச ஆரம்பித்தான்.

"என்னடா , உலகம் சுற்றும் வாலிபா... எப்போ இந்தியா வந்த ?"

"ஜஸ்ட் ஒன் வீக் ஆச்சு ஸ்ரீ..."

இருவரும் பரஸ்பர நலம் விசாரித்த , தொழில் பற்றிப் பேசி கொண்டு இருக்கும் போது விஜய் ஏதோ தயங்குவது போல் தெரிந்தது. அதை உணர்ந்து கொண்ட ஸ்ரீராம் ,

"சொல்லு மச்சி , என்ன விசயம் ?" என்று கேட்க...

"எல்லாம் காதல் படுத்தும் பாடு தான்டா..." என்ற விஜய் அர்ச்சனா பற்றிக் கூற ஆரம்பித்தான்.

இரண்டு நாட்களுக்கு முன்பு நண்பன் ஒருவனின் திருமணத்திற்கு விஜய் சென்றிருந்த போது அங்கு அர்ச்சனாவை கண்டிருக்கிறான். மணப்பெண் அவளது தோழி போலும். அதனால் அர்ச்சனா திருமணம் முடியும் வரை அங்கிருந்திருக்கிறாள். அவளைப் பார்த்த கணம் விஜயின் மனதில் காதல் தீ பற்றிக் கொண்டது. அன்றே அவளைப் பற்றிய விவரங்களை அவன் சேகரித்து விட்டான்.

"அவளோட அப்பா மும்பையில் பிசினஸ் பண்றவர் தான். உனக்குக் கூடத் தெரிந்திருக்கும் அவரை... மிஸ்டர். ராமநாதன்..."

ஸ்ரீராமிற்கு அவரைப் பற்றி நன்கு தெரியும். அவனுக்கு அவரிடம் தொழில்ரீதியாய் பழக்கம் இருந்தது. அவர் பெரிய தொழிலதிபர் தான். நல்ல வசதியான குடும்பம் தான். ஆனால் விஜய் அளவிற்கு வசதி கிடையாது.

"அப்பா இதுக்குச் சம்மதிச்சிட்டாங்களா விஜய் ?"

"என்னோட விருப்பத்துக்கு மாறா டாட் எதுவும் சொல்ல மாட்டார்."

"அப்போ என்னடா... அப்பாவை கூட்டிட்டு வந்து பொண்ணு கேளு. உன்னை வேண்டாம்ன்னு யாராவது சொல்வாங்களா ?" ஸ்ரீராமிற்கு நண்பனின் நற்பண்புகள் குறித்து எப்போதும் கர்வம் உண்டு. தன்னைப் போல் தான் விஜயும் என்பதால் தான் அவன் இவனோடு பழகினான். விஜய் கொஞ்சம் ஒரு மாதிரியாக இருந்திருந்தால் கூட அவன் அப்படியே ஒதுங்கி இருப்பான்.

"அதுக்கு முன்னாடி பொண்ணு வீட்டில் பேசி சம்மதம் கேட்டுக்கிறது நல்லதுன்னு நான் நினைக்கிறேன். பிடிக்கலைன்னா... அப்படியே விட்டுரலாம். அப்பாவை கூட்டிட்டு வந்து சங்கடப்படுத்த வேண்டாம்."

"வேண்டாம்ன்னு சொன்னா அப்படியே விட்டுருவியா விஜய்... ?"

"ம்ஹூம் விட மாட்டேன். அவளைத் தூக்கிட்டு வந்து தாலி கட்டுவேன். அவளுக்காக டாட்டை யார் முன்னாடியும் அசிங்கப்படுத்த முடியாது."

ஆனால் ஸ்ரீராம் இந்தக் கூற்றை ஏற்றுக் கொள்ளவில்லை. நேராகச் சேதுபதியிடம் விசயத்தைக் கூறிவிட்டான். அவரும் மகனின் விருப்பத்திற்காக அவனுக்குத் தெரியாது மும்பை வந்து ராமநாதனிடம் நேரிடையாகப் பேசினார். ஏற்கெனவே சேதுபதி பற்றித் தெரிந்திருந்த ராமநாதன் சந்தோசமாக உடனே சம்மதித்து விட்டார். ஒரே இனம் என்பதால் எல்லாமே சுமூகமாக முடிந்து போனது.

அதைவிடச் சேதுபதியின் அந்தஸ்தா , உயரம் ராமநாதன் கற்பனையில் எட்ட முடியாத ஒன்று.

விசயம் கேள்விப்பட்ட விஜய் சந்தோசத்தில் அர்ச்சனாவுடன் டூயட் பாடினான். விசயம் கேள்விப்பட்ட அர்ச்சனாவோ நேரே கண்ணீரோடு விஷ்ணுபிரஹான் முன் சென்று நின்றாள். அப்போது தான் அவன் அமெரிக்காவில் இருந்து விடுமுறைக்காக இந்தியா வந்திருந்தான். விசயம் கேள்விப்பட்டவன் ,

"ப்ச் , அழாதே ஹனி... அழுவதால் எதுவும் மாறிவிடப் போறதில்லை." என்று அவளைத் தேற்றினான்.

"மாமா , எனக்கு ரொம்பப் பயமாயிருக்கு... உங்களையும் , என்னையும் பிரிச்சிருவாங்களோன்னு பயமாயிருக்கு." அவள் அச்சத்துடன் அவனைப் பார்த்தாள்.

இரண்டு பேரும் ஒரே பள்ளியில் படித்தவர்கள். பத்து வயது விஷ்ணுபிரஹானுக்கும் , எட்டு வயது அர்ச்சனாவுக்கும் இடையில் தோன்றிய நட்பானது நாளடைவில் காதலில் வந்து நின்றது. எந்த வயதில் , எப்போது தோன்றியது இந்தக் காதல் என்று அவர்களுக்கே தெரியாது. பொம்மை போலிருக்கும் அர்ச்சனாவை அவனுக்கு மிக மிகப் பிடிக்கும். மற்ற காதலர்களைப் போன்று அவர்கள் ஒவ்வொரு இடமாகச் சுற்றியது இல்லை. கட்டிப்பிடித்தது இல்லை... முத்தம் கொடுத்தது இல்லை. ஏனெனில் அவன் தங்கைகளுடன் பிறந்து வளர்ந்து இருந்ததால் அர்ச்சனாவிடமும் அதே அன்பை தான் பிரதிபலித்தான். ஆணவன் மனதில் கடலளவு ஆசைகள் உண்டு தான். அவை எல்லாம் திருமணத்திற்குப் பிறகு தான் என்கிற கொள்கையில் அவன் உறுதியாய் இருப்பவன்.

"நீங்க ஒரு வேஸ்ட் பீஸ் மாமூ..." அர்ச்சனா கூட அவனைக் கிண்டலடித்து அவனை உசுப்பேற்றி விடுவாள். அதற்கு எல்லாம் அவன் அசர மாட்டான்.

"நம்ம கல்யாணத்துக்குப் பிறகு இதே வார்த்தைகளை நீ சொல்லு. அப்போ ஒத்துக்கிறேன்." என்று அவன்

கண்சிமிட்டி சிரிப்பான்.

"ச்சோ , ஸ்வீட் மாமூ..." என்றபடி அவனது கன்னத்தில் தனது இதழ்களை அழுத்தமாய்ப் பதித்துவிட்டு ஓடும் அர்ச்சனாவை அவன் மயக்கத்துடன் பார்த்திருப்பான். அவளைப் பிடித்திழுத்து மூச்சு திணற அவளை முத்தமிடும் எண்ணம் அவன் மனதில் ஓடினாலும் அதை அவன் செய்ய மாட்டான். அவனது பெற்றோரின் வளர்ப்பு அப்படிப்பட்டது...

விஷ்ணுபிரஹான் காதலில் காமத்தை கலக்க விரும்பவில்லை. காதலில் தாய்மையைக் கலக்க நினைத்தான். அதனால் தான் அவனது இளமை உணர்வுகள் எழும் போது எல்லாம் பெண்ணவள் பக்கம் இருந்து யோசித்து விலகி இருந்தான். காதலனாக இருந்தால் காதலியை தாயாக்கி இருப்பான். இவனோ தாய்மை உணர்வோடு அல்லவா அவளைப் பார்க்கின்றான். அதனால் அவளது பெண்மையைப் போற்றிப் பாதுகாத்தான்.

இதோ இப்போதும் விஷ்ணுபிரஹான் பதறாது நிதானமாகத் தான் யோசித்தான். அவன் தன்னை மட்டும் யோசிக்காது பெண்ணவளை பற்றியும் யோசித்தான்.

"நான் உங்க வீட்டுக்கு வந்து பெண் கேட்கவா ஹனி ?" அவள் ஆச்சரியமாய் அவனைப் பார்த்தாள்.

"மாமூவுக்குத் தைரியம் எல்லாம் வந்திருச்சு..." அந்த ரணகளமான நிலையிலும் அவள் குதூகலமாய் அவனைக் கலாய்த்தாள்.

"இதுக்கு எதுக்குத் தைரியம் வேணும் ?" அவன் புரியாது அவளைப் பார்த்தான்.

"ஒரு முத்தம் கொடுக்கக் கூடத் தைரியம் இல்லை. இதுக்கு மட்டும் எப்படித் தைரியம் வந்துச்சு ?" அவள் கேலியாய் அவனை ஓரக்கண்ணால் பார்த்தாள்.

"என்ன என்னை உசுப்பேத்தி விடுறியா ?" என்றவன் அவளை நெருங்கி நின்றான்.

எப்போதுமே அருகில் வராதவன் இன்று நெருங்கி வந்ததைக் கண்டு அவள் அச்சம் கொள்ளாது வியப்பு அடைந்தாள்.

"மாமூவுக்குத் தைரியம் வந்திருச்சு போலிருக்கு..." என்று அவள் கைகளைக் கட்டியபடி தலைசாய்த்து அவனைப் பார்த்தாள்.

விஷ்ணுபிரஹான் தனது இரு கரங்களையும் அவளது கழுத்திற்குப் பின்னால் கொண்டு சென்றவன் அவளது கூந்தலை கெட்டியாகப் பிடித்துக் கொண்டு அவளது முகத்தை நிமிர்த்தித் தன்னைப் பார்க்க செய்தவன் அடுத்த நொடி அவளது முகம் நோக்கி குனிந்தான். இருவருக்கும் இடையில் நூலிழை அளவு தான் இடைவெளி... அவனது அதிரடி செயலில் , அவனது அழுத்தமான பிடியில் வலியில் முகத்தைச் சுளிக்காது அர்ச்சனா அவனைக் காதலாய் பார்த்திருந்தவள் கிறக்கத்தில் விழிகளை மூடினாள். அவளது மயக்கம் ஆணவனுக்குப் புரியாமல் இல்லை. இதழோடு இதழ் அணைத்துக் கவி பாட அவனது மனம் துடித்த போதும் அவன் அதைச் செய்யவில்லை.

அவளது நெற்றியோடு நெற்றி முட்டியபடி , " முதலில் உங்கப்பா கிட்ட பெர்மிசன் கேட்போம். அதுக்குப் பிறகு இதை எல்லாம் வச்சுக்குவோம்." என்று கூறினான்.

மறுநாள் விஷ்ணுபிரஹான் அர்ச்சனாவுடன் அவளது வீட்டிற்குச் சென்றான். அவளின் வீட்டு வாயிலில் தனது இருசக்கர வாகனத்தை நிறுத்தியவன் அவளை அழைத்துக் கொண்டு உள்ளே சென்றான். அர்ச்சனாவிடம் இவ்வளவு நேரம் இருந்த சந்தோசம் மறைந்தது. பயத்தில் அவளது கால்கள் பின்னி கொண்டது.

"மாமை , பயமாயிருக்கு..." என்றபடி அவனுடன் ஒட்டி கொண்டாள்.

"எதுக்குப் பயப்படுற ? உங்கப்பா என்னை மறுக்க என்ன காரணம் இருக்க ?"

விஷ்ணுபிரஹான் கூறுவதிலும் அர்த்தம் இருந்தது. பள்ளி , கல்லூரிகளில் அவன் தான் ' டாப்பர் '. படிப்பிற்காகத் தங்க பதக்கம் பெற்றவன். இப்போது அமெரிக்காவில் டாலரில் கை நிறையச் சம்பளம் பெறுகின்றான். இனி வருங்காலத்தில் அவனது அந்தஸ்து உயர வாய்ப்பு இருக்கிறது. அந்த நம்பிக்கையில் தான் அவன் அப்படிக் கூறியது.

அப்போது தான் ஸ்ரீராம் ராமநாதனை சந்தித்துவிட்டு வெளியில் வந்தான். அவன் இவர்கள் இருவரையும் பார்த்துவிட்டான். ஆனால் இவர்கள் அவனைக் கவனிக்கவில்லை.

உள்ளே சென்ற விஷ்ணுபிரஹான் ராமநாதனிடம் தன்னைப் பற்றி அறிமுகப்படுத்திக் கொண்டான். பின்பு தங்களது காதல் கதையை அவரிடம் கூற... அவரோ மகளை வெறித்துப் பார்த்தபடி அமர்ந்திருந்தார். பின்பு முகத்தில் எந்தவித சலனமும் காட்டாதே ,

"எனக்கு யோசிக்க டைம் கொடுங்க..." என்று அவர் கூற... இருவரும் புன்னகையுடன் ஒருவரை ஒருவர் பார்த்து கொண்டனர்.

"தேங்க்யூ சார்." என்று சந்தோசமாய் எழுந்தவன் அர்ச்சனாவை கண்டு கண்சிமிட்டினான். அதை ராமநாதன் பார்த்து விட்டார். அவரது முகம் கோபத்தில் இறுகியது.

வெளியில் வந்த விஷ்ணுபிரஹான் அர்ச்சனாவிடம் , " இப்போ சந்தோசமா ஹனி ?" என்று கேட்டபடி அவளது முன்நெற்றியில் இதழ் பதித்தான். காதல் வெற்றியடைந்த மகிழ்ச்சியில் அவன் இருந்தான்.

"ரொம்பச் சந்தோசம் மாமு... உங்க வீட்டில் எதுவும் சொல்வாங்களா ?" அவள் கவலையுடன் கேட்க...

"ம்ஹூம் , அப்பாவுக்கு என் சந்தோசம் தான் முக்கியம்." என்றான் அவன் மறுப்பாக...

இந்தக் கூத்தை எல்லாம் பார்த்துக் கொண்டிருந்த ராமநாதனின் விழிகள் கோபத்தில் சிவந்தது. அவர் அருகில் அமர்ந்திருந்த மங்கை கணவரது கோபம் அறிந்தவராய் பயத்தில் நடுங்கி கொண்டிருந்தார்.

சற்றுமுன் ஸ்ரீராம் கூறிய விசயம் அவரது காதுகளில் திரும்பத் திரும்ப ஒலித்து அவரது சினத்தை மேலும் அதிகரித்தது. ஸ்ரீராம் விஷ்ணுபிரஹானுக்கு நல்லது செய்ய நினைக்க... விதியோ சதி செய்யக் காத்திருந்தது.

திருத்தமாகும்...!!!

நேற்று ஸ்ரீராம் விஷ்ணுபிரஹானும் , அர்ச்சனாவும் பேசி கொண்டிருப்பதைப் பார்த்து விட்டான். அதிலும் அவர்கள் காதலர்கள் என்று அறிந்ததும் அவன் அதிர்ந்து தான் போனான். ஏனெனில் அர்ச்சனா அவனது தோழனுக்குப் பார்த்திருக்கும் பெண் அல்லவா...! அதற்காகக் காதல் ஒன்றும் தவறில்லையே. விஷ்ணுபிரஹானும் தவறானவன் இல்லையே. உடனே அவன் தனது நண்பனுக்கு அழைத்தான். விஜயோ அந்தச் சமயம் பார்த்து வெளிநாடு சென்று இருந்தான். இனி அவனாக இவனை அழைத்தால் தான் உண்டு. ஸ்ரீராம் எரிச்சலுடன் அலைப்பேசியை மேசை மீது போட்டான். பின்பு சேதுபதியிடம் சொல்வோமா ? என்று யோசித்தான். பிறகு அந்த யோசனையையும் தள்ளி வைத்தான். அவனுக்கு இருந்த ஒரே தீர்வு ராமநாதன் மட்டுமே... அவர் மகளது காதலை புரிந்து கொள்வார் என்று நினைத்தான். அதேசமயம் அவனும் விஷ்ணுபிரஹானுக்கு நற்சான்றிதழ் அளிக்க முன்வந்தான். அவனது காதலியின் அண்ணனுக்காக அவன் இதைக் கூடச் செய்ய மாட்டானா என்ன ? அவன் முடிவு செய்த பிறகே ராமநாதனிடம் சென்று பேசியது.

இந்த விசயத்தில் விஜயும் பாதிக்கப்படக் கூடாது , விஷ்ணுபிரஹானும் பாதிக்கப்படக் கூடாது என்கிற நல்ல எண்ணத்தில் தான் அவன் ராமநாதனிடம் பேச போனது. ராமநாதன் அவன் சொன்னதை எல்லாம் கேட்டு கொண்டவர் ,

"நான் பார்த்துக்கிறேன் ஸ்ரீராம்..." என்றதோடு முடித்துக் கொண்டார்.

"சார் , விஷ்ணுவும் விஜய் மாதிரி நல்லவன் தான். அவனை விட இவன் எந்தவிதத்திலும் குறைந்தவன் இல்லை. அப்படிக் குறைவாக நீங்க எண்ணினால் விஷ்ணுவுக்கு என்னால் இயன்றளவு உதவி செய்ய என்னால் முடியும்."

' நான் எதிர்பார்க்கும் பணம் , அந்தஸ்து அவனிடம் இல்லையே. எனக்கு வர போகும் மாப்பிள்ளை எனக்குச் சரிக்கு சமமான அந்தஸ்தில் இருக்கணும். அவன் அப்படிக் கூட இல்லையே. ' மனம் முழுவதும் வெறுப்புடன் நினைத்தவர் வெளியில் ,

"அதான் நான் பார்த்துக்கிறேன்னு சொல்லிட்டேனே." என்று கூறி முடித்துக் கொண்டார்.

ஸ்ரீராம் பேசிவிட்டு வெளியில் வரும் போது தான் அவன் விஷ்ணுபிரஹானும் , அர்ச்சனாவும் இணைந்து வருவதைக் கண்டான். இருவரது ஜோடி பொருத்தத்தைக் கண்டு அவன் மனதிற்குள் சந்தோசம் அடைந்தான். வருங்கால மைத்துனின் சந்தோசத்தைத் தனது சந்தோசமாக எண்ணி அவன் சந்தோசம் கொண்டான். ஸ்ரீராம் மனநிம்மதியுடன் அங்கிருந்து அகன்றான்.

விஷ்ணுபிரஹான் தனது வீட்டில் தனது காதலை பற்றிச் சொன்னான். பெரிய தங்கைக்குத் திருமணம் முடிக்காது தான் திருமணம் செய்து கொள்வதற்காக வருந்துவதாகக் கூறியவன் ,

"எனக்கு வேறுவழி தெரியலைப்பா. அவளோட வீட்டில் கல்யாணத்துக்கு அவசரப்படுறாங்க. ஆண் நான் காத்திருக்க முடியும். பெண் அவளால் காத்திருக்க முடியாதுப்பா. தங்கைகள் மூவரும் என் பொறுப்பு. அவங்க கல்யாணம் என் பொறுப்பு. ப்ளீஸ் என்னை நம்புங்கப்பா." அவன் கெஞ்சாத குறையாக ராகவனிடம் கெஞ்சினான். சுந்தரிக்கு மகனது காதல் விசயம் சற்று அதிர்ச்சி தான்... ஒன்றும் பேசாது கணவரது முகத்தைப் பார்த்தார்.

ராகவன் ஒன்றும் கட்டுப்பெட்டி கிடையாது. மகன் காதலிக்கும் பெண் வேறு இனம் , அதனால் தங்களது மகள்களது வாழ்க்கை கேள்விக்குறியாகும் என்று தெரிந்திருந்த போதும் அவர் தனது ஒரே மகனின் சந்தோசத்தை மட்டுமே பார்த்தார். அவன் இது போல் கலங்கி அவர் பார்த்தது இல்லை.

"உன் சந்தோசம் தான் எங்க சந்தோசம் விஷ்ணு... நீ விரும்பின பொண்ணையே நோக்குக் கல்யாணம் பண்ணி வச்சிரலாம். இப்போ நோக்குச் சந்தோசம் தானே."

"சந்தோசம்ப்பா..." என்றவன் மகிழ்ச்சியில் அவரைத் தூக்கி சுற்றினான். கணவன் சம்மதித்து விட்டதைக் கண்டு சுந்தரியின் முகத்திலும் மகிழ்ச்சி தாண்டவமாடியது.

விஷ்ணுபிரஹான் அர்ச்சனாவின் புகைப்படத்தை அனைவரிடமும் காட்டினான். அவர்களது இனம் இல்லையே தவிர... அர்ச்சனாவிடம் எந்தக் குறையும் இல்லை. அவனுக்கு மிகப் பொருத்தமாக அவள் இருந்தாள். அதுவே பெற்றோருக்கு பெருத்த நிம்மதியை தந்தது.

மறுநாள் விஷ்ணுபிரஹான் அர்ச்சனாவை தேடி சென்ற போது அவளது வீட்டில் யாரும் இல்லை. அவன் அங்கிருந்த காவலாளியிடம் விசாரிக்க ,

"ராமநாதன் பெயரில் யாரும் இங்கு இல்லை..." என்று கூறி அவனை விரட்டி அடித்தான்.

அதைக் கேட்டு விஷ்ணுபிரஹான் திக்பிரம்மை பிடித்தார் போன்று நின்றிருந்தான். இந்தப் பரந்த உலகத்தில் முகவரி இல்லாது தொலைந்து போன தன்னவளின் முகவரியை அவன் எங்ஙனம் தேடுவானஂ ? அவன் பைத்தியக்காரன் போல் நடுத்தெருவில் நின்றிருந்தான்.

அர்ச்சனாவிற்கு அவன் அழைத்தான். ஆனால் அவளது அலைப்பேசி அணைத்து வைக்கப்பட்டு இருந்தது. விஷ்ணுபிரஹான் இது குறித்துக் காவல்துறையில் புகார் அளிக்க எண்ணிய போது ராகவன் தடுத்துவிட்டார்.

"வேண்டாம் விஷ்ணு... அடுத்தடுத்து மூணு பொம்மனாட்டி குழந்தைகளை வச்சிண்டு இருக்கேன். நீ யுஎஸ் போன பிறகு அதுக்கு வஂா , இதுக்கு வான்னு என்னைப் போலீஸ் ஸ்டேசனுக்கு அலைக்கழிச்சா என்னால் அலைய முடியாதுப்பா. அதைவிட நியூஸ் பேப்பரில் நியூஸ் வந்தால்

நம்பக் குடும்பமானம் தான் போகும்." மத்தியதர வர்க்கத்தின் பிரதிநிதியாக அவர் பேசினார்.

"அவளோட அப்பாவோட பிசினஸ் எல்லாம் இங்கே தான் இருக்கு. ஆனா குடும்பத்தை மட்டும் காணவில்லை என்றால்... ? அதான் எனக்கு யோசனையா இருக்கு." விஷ்ணுபிரஹானுக்கு முதன்முறையாக ராமநாதன் மீது சந்தேகம் வந்தது.

"விசயம் வெளியில் தெரியாம விசாரிச்சு பாரு விஷ்ணு..." ராகவன் கூற...

விஷ்ணுபிரஹான் நேரே ராமநாதனின் அலுவலகத்திற்குச் சென்றான். ஆனால் அங்கு அவன் வாயிலேயே மறிக்கப்பட்டான். தோல்வியுற்று திரும்பியவன் அர்ச்சனாவின் தோழிகளிடம் விசாரித்தான். அவர்களுக்கும் எதுவும் தெரியவில்லை.

ஸ்ரீராமிற்கு இது எதுவும் தெரியாது அவன் எப்போதும் போல் தனது தொழிலில் மூழ்கி இருந்தான். ஒரே நாளில் ராமநாதன் விதியை மாற்றியமைத்து இருப்பார் என்று அவன் கனவிலும் நினைத்து பார்க்கவில்லை. அவனுக்கு விசயம் தெரிந்த போதோ எல்லாம் அவனது கையை மீறிச் சென்றிருந்தது.

அதே நேரம் சென்னையில் அர்ச்சனா தனது தந்தையிடம் காதலுக்காகப் போராடி கொண்டிருந்தாள். ராமநாதனோ கல் நெஞ்சனாய் சிறிதும் அசைந்து கொடுக்காது அமர்ந்திருந்தார். நேற்று மதியம் சென்னை புறப்பட்டுச் சென்றார் ராமநாதன். வழக்கம் போல் தொழில் சம்பந்தமாக அவர் சென்றிருக்கிறார் என்று அம்மாவும் , மகளும் நினைத்து கொண்டனர். அன்று மாலையில் அவருக்கு நெஞ்சுவலி வந்து மருத்துவமனையில் சேர்த்து இருப்பதாகத் தகவல் வந்ததும் அம்மாவும் , மகளும் அடித்துப் பிடித்துக் கொண்டு சென்னைக்குக் கிளம்பினர். கிளம்பும் அவசரத்தில் அவள் விஷ்ணுபிரஹானிடம் சொல்லிவிட்டு வர மறந்து போனாள். அது தான் அவள் செய்த தவறு.

சென்னை வந்தவர்களை ராமநாதனே நேரில் வந்து அழைத்துச் செல்ல... இருவரும் குழம்பி போயினர். வீட்டிற்குச் சென்றதும் தான் அவர்களுக்கு விசயம் புரிந்தது. ராமநாதன் தனது ஜாகையைச் சென்னைக்கு மாற்றி விட்டார் என்பது. கூடிய விரைவில் தொழிலையும் சென்னைக்கு மாற்றி விடுவதாகக் கூறினார். அர்ச்சனாவின் மனதில் எச்சரிக்கை மணி அடித்தது. அன்று இரவு அவள் விஷ்ணுபிரஹானுக்குத் தகவல் தெரிவிக்க எண்ணி தனது அலைப்பேசியைத் தேட... அதுவோ ராமநாதனின் கைகளில் இருந்தது.

"இதையா தேடுற அர்ச்சனா ?"

"ஆமா அப்பா..." அவரது கைகளில் இருந்த தனது அலைப்பேசியைப் பார்த்தபடி அவள் கூற...

"இது உன் கிட்ட வரணும்ன்னா நீ நான் சொல்றதை கேட்கணும்." என்று கூறிய தந்தையை அவள் யோசனையாய் பார்த்தாள்.

"சொல்லுங்க..."

"நீ உன் காதலை மறந்துட்டு விஜயை கல்யாணம் பண்ணிக்கணும்." அதில் அதிர்ந்து போனவள் ,

"அப்பா..." என்று சிலையாக நின்றுவிட்டாள். மங்கை கணவனை எதிர்த்து வாதாடாது அமைதியாக நின்றிருந்தார். அவருக்குமே மகளின் காதல் அத்தனை உவப்பாக இல்லை.

"எஸ் அர்ச்சனா... அப்பாவோட கௌரவத்துக்காக நீ இதைச் செஞ்சு தான் ஆகணும்."

"முடியாதுப்பா..." அர்ச்சனா என்கிற சிலைக்கு உயிர் வந்தது. அவள் கன்னத்தில் வழிந்த கண்ணீரை துடைத்தபடி தந்தையைத் தைரியமாக எதிர்த்து நின்றாள்.

"முடியாதா ? பரவாயில்லை... உன் காதலன் நல்லபடியா யுஎஸ்க்கு போக வேண்டாமா ?" அவர் இப்படிக் கேட்டதும்

அவளுக்குத் திக்கென்று இருந்தது.

"என்ன சொல்றீங்க ?"

"நாட்டில் கேஸ்களுக்கா பஞ்சம் ஏதாவது ஒரு கேஸ் போட்டு அவனை உள்ளே தள்ளுவேன். அதுக்குப் பிறகு அவன் எப்படி யுஎஸ் போறான்னு பார்க்கிறேன் ? டாலரில் சம்பாதிக்கிற திமிர் தானே அவனை எனக்குச் சரிக்கு சமமா உட்கார வச்சது. அவன் என் கால் தூசி பெற மாட்டான். அவன் எனக்கு மாப்பிள்ளையா வர்றதா ? நோ நெவர்..." என்று அவர் ஆங்காரமாய்க் கூற...

அதைக் கேட்டு அர்ச்சனா தலைகுனியாது தைரியமாக அவரை நிமிர்ந்து பார்த்தவள் , " இதுக்கு எல்லாம் நான் பயந்துருவேன்னு நீங்க நினைச்சா அது உங்க தப்பு. நீங்க மட்டும் விஷ்ணு மேல் கேஸ் போட்டீங்க... அதுக்குப் பிறகு ஒரு நொடி கூட நான் உயிரோட இருக்க மாட்டேன். நான் உயிரோட இருக்கிறதால தானே நீங்க இப்படி எல்லாம் பேசுறீங்க ? நான் இல்லைன்னா நீங்க என்ன பண்ண முடியும் ?" அவள் தைரியமாக அவரை எதிர்த்து பேசினாள்.

ராமநாதன் மகளை ஆழ்ந்து பார்த்தவர் ஒன்றும் பேசாது சென்றுவிட்டார். அவர் சென்றதும் அர்ச்சனா கால்கள் துவள அப்படியே சரிந்து அமர்ந்தாள். அவளுக்கு விஷ்ணுபிரஹானை நினைத்து தான் கவலையாக இருந்தது. அவளைத் தேடி அவன் எங்கு எல்லாம் அலைந்து கொண்டிருக்கிறானோ ? என்று...

அடுத்து வந்த நான்கு நாட்களும் அரச்சனா வீட்டில் சிறை வைக்கப்பட்டாள். தன்னைச் சுற்றி என்ன நடக்கிறது ? என்று தெரியாது அர்ச்சனா கவலையில் மூழ்கி இருந்தாள். உயிரோட இருக்க மாட்டேன் என்று தந்தையிடம் கூறியவள் காதலனுக்காக நம்பிக்கையுடன் உயிரோடு இருந்தாள்.

அந்த நான்கு நாட்களில் சேதுபதியும் , ராமநாதனும் அர்ச்சனா , விஜய் திருமணத்திற்கு நாள் குறித்து விட்டனர். சேதுபதி அந்த விசயத்தை மகனுக்குச் சர்ப்ரைஸாகக் கொடுப்பதற்காக அவனுக்குத் தெரியாது

வைத்திருந்தார். அவர் ஸ்ரீராமிடம் மட்டும் விசயத்தைக் கூறினார். அவன் பதறியடித்துக் கொண்டு சென்னை வந்தான். சேதுபதியிடம் நேரில் விசயத்தைக் கூறி தடுப்பதற்காக... ஆனால் அவனால் அர்ச்சனாவின் காதலை பற்றிக் கடைசிவரை சேதுபதியிடம் கூற முடியாது போனது தான் இங்கு வேதனை.

ஆம் , ஸ்ரீராம் சென்னை வந்த நேரம் ராமநாதன் தற்கொலை செய்து கொண்டார். சாகும் முன் மகளுக்கு ஒரு கடிதம் எழுதி வைத்துவிட்டு தான் இறந்திருந்தார். அதில் ,

"நீ மட்டும் தான் உயிரை விட முடியும்ன்னு நினைக்காதே. என்னாலும் முடியும். விஜயோட நடக்க இருக்கும் உன் கல்யாணத்தை நிறுத்த நீ உயிரை கொடுக்க முன் வந்தால்... அதே இது உன் கல்யாணம் விஜயோடு நடக்க நான் என் உயிரை கொடுப்பேன். ஆம் , நீ விஜயை தான் கல்யாணம் பண்ணிக்கணும். இது தான் என் கடைசி ஆசை. இல்லை இல்லை கட்டளை. உன்னைப் பெற்று வளர்த்தவனின் ஆசையை நிறைவேற்றாது ஆவியாக அலைய வைத்துவிடாதே அர்ச்சனா. இறந்தும் எனக்கு நிம்மதி கொடு." என்று அவர் எழுதி இருந்தார்.

நல்லவேளையாக இந்தக் கடிதத்தை அவர் மகளின் அறையில் வைத்திருந்ததால் காவல்துறை இதைக் கண்டுபிடிக்கவில்லை. கடிதத்தைப் படித்த அர்ச்சனா ஒரு சொட்டுக் கண்ணீர் கூட விடவில்லை. அதுவே சொல்லாமல் சொல்லியது , அவள் தந்தையின் கட்டளைக்கு இணங்கி விட்டாள் என்று... தந்தை மீதான பாசம் காதலை வென்று விட்டது. மங்கை மௌனமாய்க் கண்ணீர் வடித்தார். மகளைக் கடியவும் முடியவில்லை.

சேதுபதி , விஜய் இருவரும் விசயம் கேள்விப்பட்டுத் திகைத்து போயினர். விஜய் உடனே வெளிநாட்டில் இருந்து வந்துவிட்டான். அவன் தான் ராமநாதனுக்கு வேண்டிய அனைத்து காரியங்களையும் செய்தான். ஸ்ரீராம் திரைமறைவில் ராமநாதனின் தற்கொலை வழக்கை சாதாரண வழக்காக மாற்றி மறைத்துவிட்டான். இது

பின்னாளில் யாருக்கும் பிரச்சனையைக் கொடுக்கக் கூடாது என்பதே அதற்குக் காரணம்.

ராமநாதன் தனது சொத்துக்களை எல்லாம் விற்று மனைவி பெயரில் பணமாக வங்கியில் போட்டிருந்தார். வீட்டையும் மனைவி பெயருக்கு வாங்கி இருந்தார். பொருளாதார ரீதியில் அவர் குடும்பத்தைத் தவிக்க விடவில்லை. குறித்த தினத்தில் விஜய் , அர்ச்சனா திருமணம் நடக்கவிருந்தது. அதை அர்ச்சனா எதிர்க்கவும் இல்லை... தடுக்கவும் இல்லை.

"அம்மா , நான் மாமூ... இல்லை , விஷ்ணுவை பார்த்து பேச அனுமதி கொடுங்க." என்று மட்டும் கேட்டாள். மங்கை தயங்கினார்.

"அப்பா உயிரை கொடுத்து என்னிடம் சத்தியம் வாங்கி இருக்கார். அதை நான் மீற மாட்டேன்ம்மா." என்று அவள் கூற... மங்கை சரியென்று சம்மதித்தார்.

அர்ச்சனா தனது அலைப்பேசியில் இருந்து விஷ்ணுபிரஹானுக்கு அழைத்தாள். அவளது அழைப்பில் அவன் பரபரப்புற்று உடனே அதை ஏற்றான்.

"விஷ்ணு , உடனே சென்னைக்குக் கிளம்பி வாங்க... நாம சந்திக்கும் இடத்தை மெசேஜ் பண்றேன்." என்று கூறியவள் அழைப்பை துண்டித்து விட்டாள்.

விஷ்ணுபிரஹான் சிறிதும் யோசிக்கக் கூடச் செய்யாது உடனே சென்னை கிளம்பி சென்றான். அர்ச்சனா கூறிய இடத்திற்கு அவளுக்கு முன்னதாக வந்து அவன் காத்திருந்தான். அது ஒரு கடற்கரை பகுதி. அது அர்ச்சனாவின் வீட்டிற்கு அருகில் தான் இருந்தது. அவனுக்கு அது தெரியாது. அவன் படபடப்பும் , சந்தோசமும் , பயமும் கலந்து அவளுக்காகக் காத்திருந்தான்.

சிறிது நேரம் கழித்து அர்ச்சனா அவனை நோக்கி வந்தாள். இருபது நாட்களுக்குப் பிறகு அவன் தனது காதலியை

நேரில் பார்க்கின்றான். அவன் அவளை நோக்கி புன்னகையுடன் ஓடி வந்தான்.

"எப்படி இருக்க ஹனி ?" மூச்சிரைத்தபடி கேட்டவனை இமைக்காது பார்த்திருந்தாள் அர்ச்சனா.

பதில் கூறாது தன்னையே பார்த்திருந்த அர்ச்சனாவின் மெலிந்த , சோர்ந்த தோற்றத்தை அப்போது தான் விஷ்ணுபிரஹான் உற்றுக் கவனித்தான்.

"என்னாச்சு ஹனி ? உடம்பு சரியில்லையா ?" அவன் கேட்டதற்குப் பதில் கூறாதே ,

"நீங்க எப்படி இருக்கீங்க மாமே ?" என்று கேட்க...

"உன்னைப் பார்க்காம நான் நானா இல்லை ஹனி. திடீர்ன்னு மும்பையை விட்டு போனதுக்குக் காரணம் என்ன ? உங்கப்பா எதுவும் சொன்னாரா ?" அவன் படபடப்பாய் கேட்டான்.

அதற்கும் அவள் பதில் கூறாது அமைதியாகக் கடற்கரை மணலில் அமர்ந்தாள். அவளைத் தொடர்ந்து அவனும் அவள் அருகில் அமர்ந்தான். அப்போதும் கண்ணியமான இடைவெளி விட்டு அமர்ந்தவனைப் பார்த்தவளின் விழிகள் கலங்க துவங்கியது. அவள் வேறொருவருக்குச் சொந்தமாகப் போவதை முன்பே அறிந்திருந்தானோ ? அதனால் தான் அவன் தன்னிடம் கண்ணியம் காத்தானோ ?

' உங்களை யாரு இப்படிக் கண்ணியமா நடந்துக்கச் சொன்னது மாமே ? எல்லா ஆண்களையும் மாதிரி நீங்க இருந்திருக்கக் கூடாதா ? அதைக் காரணம் காட்டியாவது நான் உங்களைக் கல்யாணம் பண்ணி இருந்திருப்பேனே. ' அவள் மனதிற்குள் ஊமையாக அழுதாள்.

"எதுவும் பிரச்சனையா ?" அவன் தான் முதலில் மௌனத்தைக் கலைத்தது.

"ம்..." என்றவள் நடந்தவைகளை மெல்ல அவனிடம் உரைக்க ஆரம்பித்தாள். அதைக் கேட்டவன் அதிர்ந்து போய் அவளைப் பார்த்தான். அவளது தந்தையின் தற்கொலையை அவன் முற்றிலும் எதிர்பார்க்கவில்லை.

"மாமை , அப்படிப் பார்க்காதீங்க... எனக்கு வேறவழி தெரியலை. அதனால் தான் நம்ம காதலுக்கு நான் சமாதி கட்ட வேண்டியதாய் போச்சு. என் அப்பா உயிரோட இருந்து நம்ம காதலை எதிர்த்து இருந்தால் கூட நான் கடைசி வரை போராடி இருப்பேன். ஆனா கோழை மாதிரி அவரோட வறட்டு கௌரவத்திற்காக நம்ம காதலை கொன்னுட்டாரு. இப்போ கூட நான் உங்க கூட வர தயார். ஆனா அவரோட பிணத்தின் மீது நம்ம வாழ்க்கையை ஆரம்பிக்கணுமா ? என் அம்மாவோட தாலியை இறக்கிட்டு நான் தாலி கட்டிக்கணுமா ? செத்த பிறகும் என்னை நிம்மதி இல்லாம செய்திராதேன்னு லெட்டர் எழுதிட்டு போன மனுசன் கிட்ட நான் என்ன பேச முடியும் ? அவரோட வார்த்தைக்குக் கட்டுப்பட்டுறதை தவிர வேறு ஒண்ணும் என்னால் செய்ய முடியலை. நான் வாழ்க்கையில் தோத்துப் போயிட்டேன் மாமூ. தோத்து போயிட்டேன்." என்று முகத்தை மூடி கொண்டு குமுறி குமுறி அழுதவளை கண்டு அவன் ஒன்றும் பேசாது வெறித்துப் பார்த்திருந்தான். அவனது விழிகள் அடக்கப்பட்ட துன்பத்தில் கலங்கி சிவந்திருந்தது.

"உன்னால என்னை விட்டுட்டு இருக்க முடியுமா ஹனி ?" அவனது வார்த்தைகள் துயரத்தில் தோய்ந்து வந்தது.

"வேறொருத்தன் கூடக் கல்யாணம் பேசிய பிறகும் இதோ இந்த நொடி வரை என் உயிர் என் கிட்ட தான் இருக்கு மாமூ." என்றவள் தனது உதட்டினை கடித்து அழுகையைக் கட்டுப்படுத்திக் கொண்டாள்.

"உன்னால் என்னை மறக்க முடியுமா ஹனி ?" அவளது உயிரில் , உணர்வில் கலந்திருப்பவன் அவன் அல்லவா!

"மறக்கணும் மாமூ... மறந்து தான் ஆகணும். இன்னொருத்தருக்குத் துரோகம் பண்ண முடியாதே." என்றவளின் விழிகளில் இருந்து கண்ணீர் வழிந்தோடியது.

உயிரில் கலந்தவனை மறப்பது என்பது உயிரையே துறப்பதற்குச் சமம் இல்லையா!

"நமக்கு மட்டும் ஏன் இந்தச் சாபம் ஹனி ?"

அவனால் பேச முடியவில்லை. துக்கம் தொண்டையை அடைத்தது. அவனைத் திரும்பி பார்த்த அர்ச்சனாவுக்கும் துக்கம் தொண்டையை அடைத்தது. அவன் நினைத்திருந்தால் இதோ இந்த நொடி கூட அவளை இழுத்துக் கொண்டு போய் அவனுக்குச் சொந்தமாக்கி இருக்கலாம். அது எதையும் செய்யாது தனது தந்தையின் வாக்கிற்காக , தனக்காக அமைதி காத்து இருப்பவனைக் கண்டு அவளுக்கு அத்தனை வேதனையாக இருந்தது. அடுத்தக் கணம் அவள் அவனது தோள் சாய்ந்து கதறியழுதாள். அவள் தனது துக்கம் மொத்தத்தையும் அழுகையில் கரைத்தாள்.

விஷ்ணுபிரஹானின் கை நீண்டு அவளுக்கு ஆறுதல் தர வேண்டி அவளைத் தன்னோடு சேர்த்து அணைத்துக் கொண்டது. அவனது அணைப்பில் காதலோ , காமமோ இல்லை. அவன் காதலனாகவோ , நண்பனாகவோ அவளுக்கு ஆறுதல் அளிக்கவில்லை. மாறாக ஒரு மனிதனாய் சக மனிதன் அடையும் துன்பத்திற்கு ஆறுதல் அளித்தான். அவனது விழிகளில் இருந்து கண்ணீர் வழிந்தோடியது.

அர்ச்சனா பிரிவை பற்றிப் பேசியதுமே அவன் உள்ளுக்குள் உயிரோடு மரித்துப் போனான். அவளைத் தன்னவளாக்க அவனது மனது துடித்த போதும் அவளது தந்தையின் வார்த்தைகளை மீறி அவனால் எதுவும் செய்ய முடியவில்லை. அதை மீறி அவன் அவளை மணந்து கொண்டால் அவளது தந்தையின் மரணம் அவர்களது வாழ்க்கை முழுவதும் உறுத்தலாகத் தொடரும். இருவரது நிம்மதியும் பறி போய்விடும். மற்றவர்களின் சுயநலத்திற்காக இரு காதல் நெஞ்சங்கள் தங்களது காதலை உயிரோடு கொன்று புதைத்தது.

"அர்ச்சனா..." தூரத்தில் இருந்து மங்கையின் குரல் கேட்டது. அர்ச்சனா திரும்பி பார்த்தாள்.

"அம்மா வந்துட்டாங்க..." என்றவள் விஷ்ணுபிரஹானை விட்டு விலகி அமர்ந்தாள். அவனும் தனது கையை விலக்கி கொண்டான்.

மங்கைக்குப் பயம்... எங்கே மகள் தனது காதலனுடன் ஓடி போய்விடுவாளோ ? என்று... இன்றைய காதல் அப்படித் தானே நாய்க்காதல் போன்று இருக்கிறது. அவருக்குத் தெரியவில்லை மகளது காதல் புனிதமான ஒன்று என்று. அது உடல் சார்ந்தது அல்ல... மனம் சார்ந்தது என்று.

"மாமா , போறேன்." என்றபடி எழுந்தவளுக்கு உள்ளுக்குள் துக்கம் மண்டியது.

"ஹ..." ' ஹனி ' என்றழைக்க வந்தவன் பின் நிறுத்தி , " அர்ச்சனா..." என்றழைக்க...

"ஹனின்னே கூப்பிடுங்க மாமூ... காதலை தான் நாம் இழந்திருக்கிறோம். அழைக்கும் முறையை அல்ல. நான் சாகும் வரை நீங்க எனக்கு மாமூ தான். நான் உங்களுக்கு ஹனி தான். நம்மைப் புரிஞ்சிக்கிட்டவங்க புரிஞ்சிக்கட்டும். புரியாதவங்களைப் பத்தி கவலையில்லை." என்றவளை கண்டு அவனால் தலையசைக்க மட்டுமே முடிந்தது.

"மாமா , இப்படியே இருந்துராதீங்க. நீங்க கல்யாணம் பண்ணிக்கணும். குழந்தை , குட்டிகளைப் பெத்துக்கணும். என்னைக்காவது ஒரு நாள் நான் உங்களைப் பார்க்கும் போது இந்த உலகத்திலேயே சந்தோசமான மனிதனா என் மாமூ இருக்கணும்."

"நான் சந்தோசமா இருப்பேனா ? இல்லையான்னு ? எனக்குத் தெரியலை. ஆனா நீ சந்தோசமா இருக்கணும் ஹனி. கணவன் , குழந்தைகள்ன்னு சந்தோசமா இருக்கணும். என்னைக்காவது ஒரு நாள் உன்னைப் பார்க்கும் போது உன்னுடைய புன்னகை முகத்தைத் தான்

நான் பார்க்கணும்." சொல்லும் போதே ஏதோ ஒரு உணர்வு அவனது மனதினை போட்டுப் பிசைந்தது.

தனது சந்தோசத்திற்காகக் காதலை மனதில் பூட்டி வைத்துக் கொண்டு பேசும் காதலனை கண்டு அவளது மனது பரிதவித்தது. அவனை அணைத்து ஆறுதல் கூற அவளது மனம் விழைந்தது. ஆனால் அதைச் செய்ய அவளால் முடியவில்லை. இப்போது அவள் அவனது காதலி அல்ல... விஜயின் வருங்கால மனைவி. அர்ச்சனா தன்னையே வெறுத்தவளாய் அங்கிருந்து ஓடலானாள். அவள் வெறிபிடித்தார் போன்று தாயை தாண்டி ஓட... மங்கை அவளது செய்கையைக் கண்டு திகைத்து நின்றவர் பின்பு தன்னைச் சுதாரித்துக் கொண்டு மகளைப் பின்தொடர்ந்தார்.

விஷ்ணுபிரஹான் அங்கேயே கடற்கரை மணலில் அமர்ந்திருந்தான். மனதில் துயர் மிகுந்ததில் அவன் தான் ஒரு ஆண் என்பதை மறந்தவனாய் ஓவென்று அழ ஆரம்பித்தான். அவனது துயரம் கண்டு காண சகிக்காத வானம் தானும் கூடச் சேர்ந்து அழுதது. மழையின் நீரில் அவனது கண்ணீர் அடித்துச் செல்லப்பட்டது.

அடுத்தச் சில நாட்களில் விஜய் , அர்ச்தனாவிற்குக் கோலாகலமாகத் திருமணம் நடைபெற்றது. அதற்கு ஒரு விருந்தினர் போல் விஷ்ணுபிரஹான் வந்திருந்தான். திருமணக் கோலத்தில் காதலியை காணும் போது அவனது நெஞ்சம் இரண்டாகப் பிளப்பது போல் வலி ஏற்பட்டது. அவனது மனம் அடிப்பட்ட குழந்தையாய் கதறியழ... அவனது விழிகள் லேசாகக் கலங்கியது. எங்கு இருந்தாலும் அவள் நன்றாக இருக்க வேண்டும் என்று அவனது காதல் நெஞ்சம் வாழ்த்தியது. அர்ச்சனாவின் கழுத்தில் தாலி ஏறிய அடுத்தக் கணம் விஷ்ணுபிரஹான் மண்டபத்தை விட்டு வெளியேறி இருந்தான்.

இதை எல்லாம் ஸ்ரீராம் மௌன சாட்சியாய்ப் பார்த்திருந்தான். அவனால் தனது நண்பனிடம் அர்ச்சனா பற்றிப் பேச முடியவில்லை. அவள் தனது அப்பாவிற்காகக்

காதலை துறந்து விஜயை திருமணம் செய்ய முன்வந்தது ஸ்ரீராமிற்குச் சற்று அதிர்ச்சி தான். வீணாக ஒரு பெண்ணின் வாழ்வு கெடுவதற்குத் தான் காரணமாகி விடக் கூடாதே என்று அவன் அமைதியாகி போனான்.

அடுத்த நாளே விஷ்ணுபிரஹான் அமெரிக்கா கிளம்பி சென்றுவிட்டான். அவனது காதல் தோல்வி வீட்டில் உள்ள அனைவருக்கும் தெரியும். ஆனால் யாரும் எதுவும் அவனைக் கேட்கவில்லை.

தந்தை மறைந்த துயரில் இருக்கும் அர்ச்சனாவிற்குச் சிறிது கால அவகாசம் கொடுத்தான் விஜய். அந்த இடைப்பட்ட காலத்தில் அவன் அவளிடம் நல்ல நண்பனாக நடந்து கொண்டான். அவள் அவனைப் பார்த்து சிறு புன்னகை பூத்தால் கூட அதை அவன் அப்படிக் கொண்டாடி மகிழ்ந்தான். அர்ச்சனாவும் அவனது சிறு பிள்ளைத்தனமா செயலில் கொஞ்சம் கொஞ்சமாய்த் தனது கூட்டில் இருந்து வெளியில் வந்தாள். அவளும் அந்தக் கால அவகாசத்தை விஷ்ணுபிரஹானை மறக்க பயன்படுத்திக் கொண்டாள். உணர்விலும் , உயிரிலும் கலந்தவனை அவ்வளவு சீக்கிரம் மறக்க இயலாது அவள் தனக்குள் தவித்தாள். அப்பொழுது எல்லாம் வலுக்கட்டாயமாக விஜயின் முகத்தை மனதில் இறுத்தி கொள்வாள். அவள் மெல்ல காதலனை மறந்து காதல் கணவனைக் காதலிக்கத் தொடங்கினாள்.

அவர்கள் தங்களுக்கு என்று வாழ்க்கையை ஆரம்பிக்கும் போது அர்ச்சனா தனது கணவனிடம் உண்மையை மறைக்கக் கூடாது என்று எண்ணி தனது காதலை அவனிடம் கூறினாள். அவனோ ஒன்றும் பேசாது அவளை அணைத்துக் கொண்டான். முதலில் பயத்தில் விதிர்த்தவள் மெல்ல மெல்ல அவனது செயல்களுக்கு உடன்பட்டாள். அங்கே அழகிய இல்லறம் அழகாக மலர்ந்தது... எல்லாம் முடிந்து எழுந்த விஜய் ,

"அவனை விட நான் நல்லா ஃபெர்பார்ம் பண்ணினேனா ?" என்று கேட்டு அவளது தலையில் கூடை தணலை அள்ளி

கொட்டினான். அவள் தணலின் தகிப்பு தாங்காது கூனி குறுகி போனாள்.

"என்னடி பத்தினி வேசம் போடுற ? இந்தக் காலக் காதலை பத்தி எனக்குத் தெரியாதா ? அவன் எங்கே எல்லாம் தொட்டானா ? எப்படி எல்லாம் தொட்டானா ?" என்று கேள்விகள் கேட்டு அவளை உயிரோடு கொன்றான்.

மனைவியானவளின் மனம் தனக்கே தனக்கு என்றிருக்க வேண்டும். அதில் தான் மட்டுமே கொலுவீற்றிருக்க வேண்டும் என்று ஆணவன் மனம் ஆசையாய் நினைத்திருந்தது. அந்த ஆசை நிராசையானதும் அவனது மனம் ஆத்திரத்தில் கொந்தளித்தது.

அதற்கு அடுத்து வந்த நாட்களில் விஜய் அர்ச்சனா கூறிய எதையும் பொருட்படுத்தவில்லை. எப்போதும் போல் கணவன் உரிமையை அவளிடம் நிலைநாட்டி விட்டு கூடவே வார்த்தை என்னும் நெருப்புத் துண்டங்களை அவள் மீது அள்ளி வீசி செல்வான். எல்லாவற்றையும் அர்ச்சனா பொறுத்து கொண்டாள். அவளைப் பொறுத்தவரையில் அவள் அவனிடம் உண்மையாக நடந்து கொண்டாள். அவளது மனதில் கணவனைத் தவிர வேறு யாரும் இல்லை. அதைச் சொன்னால் அவன் நம்பப் போவது இல்லை. அவளது மனதில் இருப்பதற்கு அந்தக் கடவுள் மட்டுமே சாட்சி.

வார்த்தையால் அவளை வதைத்து எடுத்த போதும் விஜய் அர்ச்சனாவை கை நீட்டி அடித்தது இல்லை. உடல்ரீதியாய் அவளைத் துன்புறுத்தியது இல்லை. அவனது மௌனமான காதலை மென்மையான தொடுகையில் அவளுக்கு உணர்த்தினானோ என்னமோ...! அவளைப் பேசிவிட்டு அவனும் நிம்மதியாய் இருந்தது இல்லை. அவனது வெளிநாட்டுப் பயணங்கள் அதிகரித்தது. அர்ச்சனாவை விட்டு மனதளவில் விலகியவன் இப்போது எல்லாம் அவளது அருகாமையைத் தவிர்க்க ஆரம்பித்தான். இவை எல்லாம் சேதுபதிக்குத் தெரியாமல் நடந்தது. இருவருமே

பெரியவர் முன் எதையும் காட்டி கொள்ள மாட்டார்கள். இப்படியாக அவர்களது வாழ்க்கை பட்டும் படாமல் கடந்தது.

அர்ச்சனா திருமணம் முடிந்து இரண்டு வருடங்கள் கழித்து ராகவனது பிடிவாதத்தால் , ஸ்ரீராமின் மறைமுகத் தூண்டுதலால் விஷ்ணுபிரஹான் , ஆராதனாவின் திருமணம் நடைபெற்றது. காதல் கணவன் , வெளிநாட்டில் அவனுடனான தனிமை வாழ்க்கை எனப் பல கனவுகளோடு அமெரிக்க மண்ணில் காலடி எடுத்து வைத்த ஆராதனாவுக்கு விஷ்ணுபிரஹானின் போக்கு வித்தியாசமாகப் பட்டது. பின்பு அவன் அவளது படிப்பு முடிப்பதற்காகக் காத்திருப்பதாகக் கூறியது அவளுக்கு அவன் மீது நன்மதிப்பு ஏற்பட்டது. அவள் இரண்டு வருட மேற்படிப்பு படித்து முடிந்ததும் அவன் மீண்டும் அவளுக்குச் ' சைக்காலஜி ' என்னும் மனித மனங்களைப் பற்றிய படிப்பை படிக்கச் சொல்லி விண்ணப்ப படிவத்தை வாங்கி வந்தான். அவனது அக்கறையில் அகம் மகிழ்ந்தவளுக்குத் தெரியவில்லை , அவன் அவளை விட்டு விலகி செல்வது. மற்றபடி ஏதாவது உதவி வேண்டுமானால் அவன் அதை உடனே செய்வான். அதைக் கணவனாகச் செய்தானா ? இல்லை நண்பனாகச் செய்தானா ? என்பது அவனுக்கு மட்டுமே வெளிச்சம். அதைத் தாண்டி அவனது உலகிற்குள் நுழைய பெண்ணவளுக்கு அவன் அனுமதி அளிக்கவில்லை.

ஒரு சிலரை போல் அவனால் காதலை தூக்கி போட்டுவிட்டு சந்தோசமாய் வாழ முடியவில்லை. அதற்காக அடுத்தவன் மனைவியைத் தவறாக நினைக்கும் அளவிற்கு அவன் கெட்டவனும் இல்லை. இப்போதும் அர்ச்சனாவை எங்கேயாவது பார்த்தால் சந்தோசமாக நலம் விசாரிக்கும் அளவிற்கு அவன் தன்னைத் தயார்படுத்தி இருந்தான். ஆனால் சில காயங்களுக்கு மருந்தில்லை. அது ஆறுவதும் இல்லை. காதல் கொடுத்த வேதனை அவன் உயிர் உள்ளவரை அழியாது வலி கொடுக்கும்.

ஐந்து வருடங்கள் கழித்து விஷ்ணுபிரஹான் அர்ச்சனாவை எதிர்பாராது சந்தித்தான். இரண்டு பேருமே இந்தச்

சந்திப்பை சற்றும் எதிர்பார்க்கவில்லை.

"மாமை , எப்படியிருக்கீங்க ?" உற்சாகத்துடன் கேட்ட இந்த அர்ச்சனா அவனது காதலி இல்லை , திருமதி. விஜய்... அதை உணர்ந்தவனாய் அவனும் ,

"நான் நல்லா இருக்கேன் ஹனி... நீ எப்படியிருக்க ?" என்று கேட்டான்.

"என்னைப் பார்த்தால் எப்படித் தெரியுதூ ?" எப்போதும் போல் அவள் தலைசாய்த்து கேட்க... அவளைப் புன்னகையுடன் பார்த்தவன் ,

"கொஞ்சம் குண்டான மாதிரியிருக்க..." என்றான் கேலியாய்...

"உண்மை தான் மாமூ... ஏழு வருசத்தில் ஐஞ்சு கிலோ ஏறிட்டேன்." அவள் தன்னைப் பார்த்தபடி கூறினாள்.

அதன் பிறகு இரண்டு பேரும் சாதாரணமாகப் பேசி கொண்டிருந்தனர். திடுப்பென ஞாபகம் வந்தவளாய் அர்ச்சனா அவனிடம் ,

"மாமூவுக்குக் கல்யாணம் ஆகிருச்சா ?" என்று கேட்க...

அந்த நொடி விஷ்ணுபிரஹான் மனதில் ஆராதனாவின் பிம்பம் வந்து போனது. ஆராதனா தினமும் காலையில் எழுந்ததும் அவளது அறையின் பால்கனியில் இருக்கும் கூடை நாற்காலியில் அமர்ந்து படித்துக் கொண்டிருப்பதை அவன் தனது அறையின் பால்கனியில் இருந்து தினமும் பார்ப்பான். சின்ன ஷார்ட்சும் , டீசர்ட்டுமாய் அவள் அமர்ந்திருப்பதைக் கண்டு அவன் தனக்குள் புன்னகைத்து கொள்வான்.

' நம்ம ஊராக இருந்தால் இந்நேரம் அப்பா , அம்மா சத்தம் போட்டு இருப்பாங்க. ' என்று நினைப்பவன் மறந்தும் அவளது உடை விசயத்தில் தலையிட மாட்டான்.

அதை நினைத்தபடி அவன் புன்னகை முகமாய் அமர்ந்திருந்தான். அர்ச்சனா அவனை விசித்திரமாய்ப்

பார்த்தபடி ,

"மாமூ..." என்று அவனது தோள் தொட்டு அசைக்க... தூக்கத்தில் இருந்து விழிப்பவன் போல் விழித்தவன் ,

"ஆங் , என்ன அர்ச்சனா ?" என்றான்.

"கல்யாணமாகிருச்சான்னு கேட்டேன்..."

"ம் , ஆகிருச்சு... ஐஞ்சு வருசமாச்சு."

"சூப்பர் மாமூ... அவங்க ஃபோட்டோ காட்டுங்களேன்." என்று அவள் ஆர்வமாகக் கேட்க...

"இப்போ என்னிடம் இல்லை. பிறகு காட்டுறேன்." என்று அவன் சமாளித்து விட்டான். உண்மையில் ஆராதனா புகைப்படம் அவனிடம் ஒன்று கூட இல்லை.

"குழந்தைகள் இருக்கா... ?" அவள் கேட்டதற்கு அவனது முகம் சிவந்து போனது.

"இல்லை..." தாம்பத்திய வாழ்க்கையைப் பற்றியே அவன் யோசிக்கவில்லை. இதில் குழந்தைகளைப் பற்றி அவன் எங்கே யோசிக்க ?

"உனக்கு... ?" அவன் அவளிடம் கேட்க...

"இன்னும் இல்லை..." அவள் சோகமாகக் கூற...

"எல்லாம் நல்லபடியாக நடக்கும்." அவளது கவலை புரிந்து அவன் ஆறுதல் கூறினான்.

இருவரும் பேசி கொண்டிருப்பதை விஜய் பார்த்துவிட்டான். விஷ்ணுபிரஹான் பற்றிய அனைத்து விசயங்களையும் அவன் அறிந்திருந்தான். ஸ்ரீராமின் தங்கையை அவன் திருமணம் செய்த போதே அவனுக்கு விசயம் விளங்கி போயிற்று. நேரே ஸ்ரீராமிடம் சென்று அவனைப் பார்த்து ' துரோகி ' என்று கூறி அவனுடனான நட்பை துண்டித்துக் கொண்டான். அதே போல் ஸ்ரீராமின் தங்கை திருமணத்திற்கு அவனும் செல்லவில்லை.

மனைவியையும் அனுப்பவில்லை. அனுப்பினால் தான் மணமகன் யாரென்று தெரிந்து போகுமே... விஜய் எல்லாவற்றையும் உள்ளுக்குள் வைத்து புழுங்கி கொண்டிருந்தான்.

அன்றிரவு விஜய் மனைவியிடம் வெறியாட்டம் ஆடிவிட்டான். பெண்ணவள் அதில் கதிகலங்கி போனாள். தான் செய்த தவறு தான் என்ன ? என்று அவளுக்குப் புரியவில்லை. இப்படி உடலை வதைப்பதற்கு அவன் வழக்கம் போல் வார்த்தைகளால் மனதை வதைத்து இருக்கலாம் என்றே அவள் நினைத்தாள். அந்தளவிற்கு அவளது உடல் காயப்பட்டுப் போனது. அதற்கு அடுத்து அவன் செய்த காரியம் அவனை அடியோடு வெறுக்கச் செய்தது.

"அவனை மனசில் நினைச்சிட்டு நீ என் கூட வாழ வேண்டாம். போடி , அவன் கிட்டேயே போ..." என்று நள்ளிரவில் பெண்ணவளை தனியே துரத்தி விட்டான்.

சேதுபதி மகனை தடுத்து நிறுத்திய போதும் அவன் அவரது பேச்சை கேட்கவில்லை. அத்தோடு அவன் விட்டானா ? மங்கைக்கு அழைத்துப் பேசி எந்தக் காரணம் கொண்டும் அர்ச்சனாவை வீட்டில் சேர்க்க கூடாது என்று மிரட்டினான். மீறினால் விளைவுகள் பயங்கரமாக இருக்கும் என்று எச்சரிக்கை வேறு.

அர்ச்சனா விஷ்ணுபிரஹானுக்கு அழைத்து விசயத்தைக் கூற வேண்டும் என்கிற எண்ணம் கூட இல்லாது விஜயின் வீட்டின் வாயிலில் அநாதையாய் நின்றிருந்தாள். காவலாளி இரக்கம் கொண்டு மங்கைக்கு அழைத்து விசயத்தைக் கூற... அவரோ செய்வதறியாது திகைத்தார். மருமகனது பேச்சை மீறவும் முடியவில்லை. மகளை இப்படி அநாதையாய் விடவும் முடியவில்லை.

மறுநாள் காலையில் பிரம்மை தெளிந்த அர்ச்சனா விஷ்ணுபிரஹானுக்கு அழைத்துப் பேசினாள். அவன் அடித்துப் பிடித்துக் கொண்டு அங்கு ஓடி வந்தான்.

விஜயிடம் சண்டை போட போனவனைத் தடுத்து நிறுத்திய அர்ச்சனா ,

"என்னை இங்கிருந்து கூட்டிட்டு போங்க மாமூ." கலங்கிய விழிகளுடன் கூறியவளை அப்போது தான் அவன் உற்றுக் கவனித்தான்.

அவளது முகம் , கைகளில் சில இடங்களில் கன்னி சிவந்திருந்தது. கழுத்துப் பகுதியில் பல் தடங்கள் இருந்தது. மொத்தத்தில் அவள் கலைந்த ஓவியமாக இருந்தாள். விசயத்தைப் புரிந்த கொண்ட அவன் ஒன்றும் பேசாது அவளை ஆறுதலாக அணைத்துக் கொண்டான். நேரே அவளை அழைத்துக் கொண்டு மருத்துவமனைக்கு வந்து அவளுக்குச் சிகிச்சை அளித்த பின்னரே வீட்டிற்கு அழைத்துச் சென்றான்.

அர்ச்சனாவை மறந்துவிட்டேன் என்று அவன் தனக்குள் சொல்லி கொண்டாலும் அவளது இந்த நிலையைக் கண்டதும் அவன் துடிதுடித்துப் போனது என்னவோ நிஜம். அவளுக்காக ஏதாவது செய்யத் தூண்டியது அவனது மனம்... அந்தக் கணம் தான் அவன் அர்ச்சனாவிற்காகத் தனது மனைவியைத் துறக்க முடிவு செய்தான். நிச்சயம் இல்லாத திருமண வாழ்வில் மேலும் மேலும் சிறையிருக்க அவனுக்குமே விருப்பம் இல்லை. அர்ச்சனாவிற்காக அவன் இந்த முடிவு எடுத்திருந்த போதும் அதில் ஆராதனாவின் நலனும் அடங்கிருந்தது எனப் பெண்ணவளின் மனதை அறியாது அவனாக எண்ணி கொண்டான். அது தான் அவன் செய்த ஒரே பிழை. பிடிக்கவில்லை என்றால் திருமணம் முடிந்த உடனேயே விவாகரத்து வாங்கி இருக்க வேண்டும். இத்தனை வருடங்கள் கழித்து அவளிடம் இருந்து பிரிவது என்பது வருத்தமான விசயமே... அவன் செய்த முட்டாள்த்தனமான இந்தக் காரியம் பின்னாளில் அவனுக்குப் பிரச்சனையாகி போனது.

"இங்கே பார் ஹனி... உனக்கு நானிருக்கிறேன். உன்னை நான் பத்திரமா பார்த்து கொள்கிறேன்." என்று

அர்ச்சனாவின் வாழ்க்கைக்கு அவன் உத்தரவாதம் அளித்தான்.

எப்படி ? எவ்வாறு ? என்பதைப் பற்றி எல்லாம் அர்ச்சனா யோசிக்கவில்லை. அந்தளவிற்கு விஜய் அவளது மனதினை ஆக்கிரமித்து இருந்தான். ஆணவனைப் போல் அல்லாது பெண்ணவள் அந்த இடத்தில் சிறிது யோசித்து இருக்க வேண்டுமோ ?

விஷ்ணுபிரஹான் ஒரு நல்ல தோழனாக அவள் மீது அக்கறை கொண்டு கூறினான். வாழ்க்கையில் பற்று இல்லாது இருந்தவனுக்குப் பற்றுகோளாக அர்ச்சனா மீண்டும் அவனது வாழ்வில் வந்தாள். அந்தப் பற்றுக்குப் பெயர் காதலோ , நட்போ , வேறு எதுவும் இல்லை. வெறும் அக்கறை மட்டுமே. மனதிற்குப் பிடித்தவர்கள் துன்பப்படும் போது அவர்களுக்கு எல்லாமுமாக இருக்க மனம் ஆசைப்படும். அப்படியொரு மனநிலையில் அவன் இருந்தான்.

அதன் விளைவு தான் விஷ்ணுபிரஹான் மனைவியிடத்தில் விவாகரத்து கேட்டது. யாரோ ஒருவரின் மனைவிக்காக இரக்கம் கொண்டவன் தன் மனைவியைத் தானும் அதே துன்ப நிலையில் விட்டு விட்டு செல்வதை அவன் உணரவில்லை. ஏனெனில் அந்தளவிற்கு அவனது மனைவி அவனது மனதில் பதியவில்லை. மனைவி மீது காதல் , நேசம் , அன்பு , பாசம் இதில் ஏதாவது ஒன்று இருக்க வேண்டும். இது எதுவுமே ஆராதனாவிடத்தில் அவனுக்குத் தோன்றவில்லை. அதனால் தான் அவன் சுலபமாக அவளைப் பிரிந்து வந்தான்.

இதற்கிடையில் அர்ச்சனா குழந்தைகள் உண்டாகி இருப்பதை அறிந்து அதுவும் இரட்டை குழந்தைகள் என்பதை அறிந்த விஜய் நேரே அவளிடம் வந்து சண்டையிட்டான்.

"ஏழு வருசமா குழந்தை இல்லாம இருந்தவளுக்கு இப்போ எப்படிடி குழந்தை வந்தது ? அதுவும் ட்வின்சாமே ? ச்சீ

உனக்கே அசிங்கமா இல்லை." என்று கோபத்தில் கத்தினான்.

அப்போது அர்ச்சனாவுடன் விஷ்ணுபிரஹான் இல்லை. அவன் வெளியூர் சென்று இருந்ததால் மங்கை தான் துணைக்கு இருந்தார். அவர் மருமகனை பிடித்துத் தடுத்தார்.

"இதற்கு நீங்களும் உடந்தை... குடும்பமே இப்படித்தான் போலும்." வழக்கம் போல் நெருப்பை அள்ளி கொட்டிவிட்டு அவன் சென்றுவிட்டான்.

அர்ச்சனா மரத்து போன மனநிலையில் இருந்தாள். அதன் பின் குழந்தைகள் மட்டுமே அவளது உலகமாய் மாறிப் போனது.

இந்தப் பிரிவில் ஆராதனா தனது தன்னலமற்ற அன்பால் அவளையும் அறியாது விஷ்ணுபிரஹான் மனதில் போராட்டத்தைத் தோற்றுவித்து இருந்தாள்... அவளைப் பிரிந்த மூன்று மாத கால இடைவெளியில் அவளது அன்பே அவனை அவள் பால் சாயச் செய்தது. அவனது மனதினை தடுமாறச் செய்தது. அவளது அன்பு மொத்தமும் தனக்கு மட்டுமே வேண்டும் என்று அவனைச் சுயநலமாகச் சிந்திக்கச் செய்தது.

தவறுவது மனித இயல்பு... அதைத் திருத்தி கொள்பவனே சிறந்த மனிதன். ஆனால் விஷ்ணுபிரஹான் தனது தவறை திருத்த நினைக்காது மனைவியவளை வருத்த நினைத்தான். அது தான் அவன் செய்த தவறு... அந்தத் தவறே அவனை மனைவி இடத்தில் காதலில் விழ செய்தது. அதை அவன் உணர்ந்து அர்ச்சனாவிடம் சொன்ன போது அவள் சந்தோசம் அடைந்தாள். அவளது வாழ்வு தான் வீணாய்ப் போய்விட்டது. அவனது வாழ்வாவது சந்தோசமாக இருக்கட்டும் என்று நினைத்தாள்.

விஷ்ணுபிரஹான் நினைத்து போல் அவன் மனைவி அவன் அருகில் இருந்த போதும் அவனால் நிம்மதியாக இருக்க முடியவில்லை. காரணமே இல்லாது ஒதுக்கி

தள்ளிய மனைவியவளிடம் அவன் தனது கடந்த காலக் காதலுக்கு என்ன விளக்கம் கூறுவான் ? அவனது குற்றுவுணர்ச்சியே அவனைக் கொஞ்சமாய்க் கொஞ்சமாய்க் கொன்று தின்று கொண்டிருந்தது.

"ஐயம் சாரி பேபி... நான் உன்னைக் கொஞ்சமும் நினைச்சு பார்க்கலை. அர்ச்சனா மேலிருந்த அக்கறையில் ஒரு சதவீதம் கூட நான் உன்னிடம் காட்டவில்லை. அப்படியிருந்தும் என்னை ஏன்டி இப்படி உயிருக்கு உயிராய் காதலிக்கிற ? நீ இப்படிக் காதலிக்கும் அளவுக்கு நான் ஒன்றும் யோக்கியமானவன் இல்லை. கடைந்தெடுத்த அயோக்கியன். என்னை நானே வெறுக்கிறேன் பேபி. நீயும் என்னை வெறுத்துவிடு. என்னை வெறுத்துவிடு. உன் காதலால் என்னைக் கொல்லாதே." விஷ்ணுபிரஹான் வெறிபிடித்தார் போன்று கத்தினான்.

விஷ்ணுபிரஹான் கடந்த காலக் காதலை அறிந்த ஆராதனா கண்களில் கண்ணீர் வழிய அமர்ந்திருந்தாள். அவளது இந்தக் கண்ணீர் கணவனுக்கானது , அவனது வலிக்கானது என்பதைச் சொல்லவும் வேண்டுமோ ? காதலியா ? மனைவியா ? என்று வரும் போது உயிருக்கு உயிராய் காதலித்த காதலி அவனுக்கு முக்கியமாகப் போய்விட்டாள். தாலி கட்டியதால் வந்த உறவாக இருந்தாலும் மனதளவில் ஒட்டாத உறவாகிய மனைவி பின்னுக்குப் போய்விட்டாள். இப்போது அவனது மனநிலை அவளுக்கு நன்கு புரிந்தது. அதற்காக அவள் வருத்தப்படவில்லை.

அப்படிப்பட்டவன் இப்போது தனக்காக இந்தளவிற்கு இறங்கி வந்திருப்பதே அவளுக்குப் போதுமானதாக இருந்தது. அர்ச்சனாவை சுமந்த மனதில் தன்னைக் கொலு வைக்க அவன் எந்தளவிற்குப் பாடுபட்டு இருப்பான் என்று இப்போது அவள் புரிந்து கொண்டாள். எந்தச் சூழ்நிலையிலும் அவளால் அவனை வெறுக்க முடியாது.

"ஐ லவ் யூ அத்து..." அவளது இதழ்கள் தானாக முணுமுணுத்துக் கொண்டது. அவளது நீண்ட விழிகளில்

விழிநீர் திரண்டது.

திருத்தமாகும்...!!!

எல்லாம் சொல்லி முடித்த ஸ்ரீராம் தங்கையின் முகத்தைப் பார்க்க முடியாதவனாய் தலைகுனிந்து அமர்ந்து இருந்தான். விஷ்ணுபிரஹானுக்கு நல்லது செய்ய எண்ணி தங்கையின் வாழ்க்கையைத் தான் பாழாக்கி விட்டதாய் அவன் மனதிற்குள் குற்றவுணர்ச்சியில் தவித்தான். என்று விஷ்ணுபிரஹான் ஆராதனாவிடம் இருந்து விவாகரத்து வாங்கினானோ அப்போதே அவனுக்கு மனம் வெறுத்துப் போய்விட்டது. தங்கையுடன் ஐந்து வருடங்கள் வாழ்ந்துவிட்டு (அவர்களுக்கு இடையில் வாழ்க்கை என்பதே இல்லை என்பது யாருக்கும் தெரியாது) , அவளிடம் இருந்து சொத்துக்களைப் பறித்துச் சென்ற விஷ்ணுபிரஹானை அவனால் மன்னிக்க முடியவில்லை. ஆனால் தங்கை , அவளது கணவனை எதுவும் கேட்க கூடாது , செய்யக் கூடாது என்று கையைக் கட்டி போட்ட பின் அவனால் எதுவும் செய்ய முடியவில்லை. அதன் பிறகு விஷ்ணுபிரஹான் தங்கையைத் தேடி வந்த போது ஒரு அண்ணனாய் அவனுக்கும் கோபம் வந்தது. அதே சமயம் விஷ்ணுபிரஹானிடம் மோதவும் அவன் விருப்பப்படவில்லை.

ஆனால் வேறு ஒருவனுக்குத் தங்கையை நிச்சயித்த பின் விஷ்ணுபிரஹான் ஆராதனாவை கடத்தி சென்றது அறிந்து ஸ்ரீராமின் பொறுமையும் காற்றில் பறந்தது. இத்தனை நாள் விஷ்ணுபிரஹானுக்காகப் பார்த்தது போதும். இனியாவது தங்கைக்காகப் பார்க்க வேண்டும் என்று எண்ணித்தான் ஒரு அண்ணனாய் கோபம் கொண்டு விஷ்ணுபிரஹானை அடித்தது. எல்லாச் சகோதரனுக்கும் வரும் தார்மீக கோபமே அவனது. இப்போது வரை அது தவறு என்று அவன் கருதவில்லை. இதோ இப்போது கூடத் தங்கைக்காகத் தான் அவன் அமைதி காக்கின்றான்.

"தேங்க்ஸ்ண்ணா..." ஆராதனாவின் தழுதழுத்த குரலில் அவன் நிமிர்ந்து பார்த்தான். கண்களில் கண்ணீர் வழிய தன்னைப் பார்த்த தங்கையைக் கண்டு பதறி

போனவனாய் அவன் நாற்காலியில் இருந்து எழுந்து அவள் அருகில் வந்து அவளது கண்ணீரை துடைத்து விட்டான்.

"நான் பாவி பட்டு... எல்லாம் தெரிஞ்சிருந்தும் உன்னைப் படுகுழியில் தள்ளவிட்ட பாவி நான். என்னை மன்னிச்சிரு பட்டு. இப்படி நன்றி சொல்லி என்னைக் குற்றவுணர்ச்சியில் குறுக வைக்காதே." என்றவனை ஏறிட்டு பார்த்த ஆராதனா ,

"எதுக்காகப் பிரஹானை எனக்குக் கணவனா பார்த்தேள் அண்ணா ?"

"அது வந்து..." ஸ்ரீராம் திணறினான்.

"காதலில் தோல்வி அடைஞ்சு கஷ்டத்தில் இருக்கிறார். அவருக்கு ஆறுதலா நம்ம தங்கை இருப்பாள்ன்னு நினைச்சு என்னை அவருக்குக் கட்டி கொடுத்தேளா ?"

அவன் இல்லையென்று தலையசைத்தான். அவனது தங்கை தேவதை தான். அதற்காகத் தேவதையின் வாழ்க்கையைச் சிக்கலாக்க அவன் விரும்புவானா ?

"அப்போ எதுக்குண்ணா கல்யாணம் கட்டி வச்சேள் ?"

"இந்த உலகத்தில் அவனை மாதிரி ஒரு நல்ல பையனை பார்க்கிறது ரொம்பவும் அரிது பட்டு. காதலிச்சது ஒண்ணு தான் அவன் செஞ்ச தவறு. அதைத் தவறுன்னு சொல்ல முடியாது. அதனுடைய தோல்வி தான் தவறாகப் போய்விட்டது. காதலிச்ச பெண் தன்னை விட்டு போய்விட்டால் அவள் மேல் ஆசிட் அடிக்கிறதா , அவளைக் கொலை செய்வதா , நண்பர்களோடு சேர்ந்து அவளை வன்புணர்வு செய்வது என்று இந்தக் காலக் காதல்கள் எல்லாம் இப்படித்தான் இருக்குது. இப்படிப்பட்ட காதலர்களுக்கு இடையில் இவன் அர்ச்சனா பிரிவை பற்றிச் சொன்னதும் அவளைப் புரிந்து கொண்டு கண்ணியமா விலகி வந்துட்டான். அதுக்குப் பிறகு அவளுடைய வாழ்க்கையில் இவன் எந்தக் காரணம் கொண்டும் நுழையவில்லை. இதெல்லாம் தான் என்னை

யோசிக்க வச்சது. அதே நேரம் உன்னைப் பற்றியும் எனக்குத் தெரியும். உன் அன்பால் அவன் மனசை ஜெயிப்பேன்னு... ஆனா இப்படியாகும்ன்னு நான் கனவில் கூட நினைச்சு பார்க்கலை." சொல்லும் போதே ஸ்ரீராமின் குரலில் அத்தனை வருத்தம் இருந்தது.

அவளுக்குமே வருத்தம் இருக்கிறது தான். ஆனால் கணவனின் வேதனையைப் பார்க்கும் போது அவளது வருத்தம் ஒன்றும் இல்லாததாய்ப் போய்விட்டது.

"இந்தக் காரணங்களுக்காகத் தான் நானும் அவரைக் காதலிக்கிறேன் அண்ணா." என்றவள் மனதில் கணவனது கண்ணியமான நடத்தை வலம் வந்தது. மறந்தும் அவள் அதை அவனிடம் கூறவில்லை.

"ஆனாலும் நான் செய்தது தவறு தான்." ஸ்ரீராம் மீண்டும் வருத்தம் கொள்ள...

"இப்படியொரு அம்மாஞ்சி புருசன் யாருக்கு கிடைப்பா ? நேக்கு கிடைச்சிருக்கே. நான் ரொம்பச் சந்தோசமா தான் இருக்கேன் அண்ணா. எனக்காக வருத்தப்படுறதை விடுங்கோ. நான் என் வாழ்க்கையைப் பார்த்துக்கிறேன்." என்றவள் வீட்டிற்குக் கிளம்ப எழுந்தாள்.

"விஷ்ணு எங்கே போனான் ?"

ஸ்ரீராம் கேட்டதும் கைப்பையை எடுத்துத் தோளில் மாட்டி கொண்டிருந்த ஆராதனா ஒரு நொடி அசைவற்று இருந்தாள். இப்போது கணவனது மனம் படும் துன்பத்தைத் தன் துன்பமாய் எண்ணி அவள் கலங்கினாள்.

"வீட்டுக்கு போயிருப்பார்." என்க... இருவரும் இணைந்து வெளியில் வந்தனர்.

"நான் அர்ச்சனாவை செக்கப் பண்ணிட்டு கிளம்பறேன். நீங்க கிளம்புங்கோண்ணா." அவள் கூறியதும் சரியென்று தலையசைத்த ஸ்ரீராம் வீட்டிற்குக் கிளம்பினான்.

ஆராதனா அர்ச்சனா இருந்த அறையை நோக்கி சென்றாள். வெளியில் இருந்த நாற்காலியில் அமர்ந்திருந்த மங்கை அவளைக் கண்டதும் புன்னகையுடன் எழுந்து நின்றார்.

"வாம்மா..." என்று அவர் அவளை வரவேற்க...

"அர்ச்சனா எப்படி இருக்காங்க ?"

"உள்ளே வந்து பாரும்மா." என்றவர் அறை கதவை தட்டிவிட்டு உள்ளே சென்றார். அவரைத் தொடர்ந்து ஆராதனாவும் உள்ளே வந்தாள்.

இருவரையும் கண்டதும் விஜய் எழுந்து நின்றான். அர்ச்சனா சற்று சோர்வோடு ஆராதனாவை கண்டு புன்னகைத்தாள். குழந்தைகள் இரண்டும் அமைதியாக உறங்கி கொண்டிருந்தனர்.

"குழந்தைகளுக்குப் பீட் பண்ணினீங்களா அர்ச்சனா ? எதுவும் ப்ராப்ளம் இல்லையே ?" ஒரு மருத்துவராய் நலம் விசாரித்தவள் அர்ச்சனாவுக்கு இரத்த அழுத்தத்தைப் பரிசோதித்தாள். எல்லாம் சாதாரணமாக இருந்தது.

"எல்லாம் நார்மல்... இப்போ நான் வீட்டுக்கு கிளம்பறேன். ட்யூட்டி டாக்டர் கிட்ட சொல்லிட்டு போறேன். ஏதாவதுன்னா அவங்க கிட்ட கேட்டுக்கோங்க." விஜயிடம் கூறியவள் இருவரிடமும் விடைபெற்று சென்றாள்.

மருமகன் இருக்கும் இடத்தில் தான் இருப்பதற்குக் கூச்சப்பட்டு மங்கை வெளியில் சென்று அமர்ந்து கொண்டார். விஜயும் , அர்சசனாவும் தனித்து இருந்தனர்.

"ஏஞ்சல்..." என்றழைத்தவனை அர்ச்சனா ஏறிட்டு பார்த்தாள்.

"என்னை மன்னிச்சிட்டியா ?"

இதற்கு என்ன பதில் கூறுவதோ ? என்று அவளுக்குத் தெரியவில்லை. அவளது மனம் வெறுமையான நிலையில் இருந்தது. அவள் பதில் கூறாது விழிகளை மூடி கொண்டாள். அதைக் கண்டு விஜய் துணுக்குற்றான்.

தனது தேவதையின் காதலை பெற இனி அவன் இது போன்ற உதாசீனங்களைப் பழகி கொள்ள வேண்டும். ஆறடி ஆண்மகன் தனது தன்னகங்காரத்தை விட்டொழித்துப் பாவையின் கடைக்கண் பார்வைக்காக இப்போதிருந்தே தவம் இருக்க ஆரம்பித்தான்.

ஸ்ரீராம் வீட்டிற்கு வந்த போது எல்லோரும் வரவேற்பறையில் அமர்ந்திருந்தனர். அப்போது தான் எல்லோரும் எழும்பி இருக்க வேண்டும். எல்லோரும் கையில் காபி கோப்பையுடன் அமர்ந்திருந்தனர். கணவனைக் கண்டதும் சீதா உள்ளே சென்று அவனுக்குக் காபி கொண்டு வந்து கொடுத்தாள். மௌனமாகக் காபி குடித்து முடித்த ஸ்ரீராம் எல்லோரையும் ஒரு பார்வை பார்த்துவிட்டு பின்பு தந்தையிடம் தனது பார்வையை நிலைக்கச் செய்தா ,

"நான் உங்க கிட்ட கொஞ்சம் பேசணும்." என்றான்...

"சொல்லு ஸ்ரீ..." அர்ஜூன் சம்மதிக்க... ஸ்ரீராம் எல்லாவற்றையும் ஒன்றுவிடாது அப்படியே கூறினான். அதைக் கேட்டு ரௌத்திரம் அடைந்த அர்ஜூன் எழுந்து வந்து மகனது கன்னத்தில் ஓங்கி ஒரு அறை விட்டான்.

"ப்பா..." என்று திகைத்தபடி ஸ்ரீராம் சோபாவில் இருந்து எழுந்துவிட்டான்.

"என் மகளை என்னடா நினைச்ச ? அவள் தேவதை. அவளைப் போய் இப்படிப்பட்டவனுக்குக் கொடுக்க நினைச்சிருக்கியே உனக்கு வெட்கமா இல்லை. அவனுக்கு ஆயா வேலை பார்க்க என் பொண்ணு தான் கிடைச்சாளா ? துரோகி... உன்னை என் மகன்னு சொல்லிக்கவே வெட்கப்படுறேன்." அர்ஜூன் கோபமாய்க் கத்தினான்.

அவந்திகா இந்தச் செய்தி கேட்டு மனதிற்குள் கண்ணீர் வடித்தாள். அவளது சாபம் மகளையும் துரத்துகிறதோ என்று... எந்தப் பெண்ணுக்கும் கணவனது மனதில் தான் மட்டும் தான் இருக்க வேண்டும் என்கிற ஆசை மலையளவு இருக்கும். அது அவளுக்கும் வாய்க்கவில்லை. அவளது

மகளுக்கும் வாய்க்கவில்லை. அவளுக்கு மகளை நினைத்து வருத்தமாக இருந்தது. அதே சமயம் தனது வாழ்க்கையைக் காப்பாற்றிக் கொண்ட மகளை நினைத்து பெருமையாகவும் இருந்தது.

' நீ என் மகள்டி பட்டு. ' என்று கர்வமாக நினைத்து கொண்டாள் அவந்திகா.

"இப்போ எதுக்குக் கோபமா குதிக்கிறேள் ? அதான் பட்டு இப்போ மாப்பிள்ளை மனசை புரிஞ்சிண்டாளே. இனி எல்லாம் சரியாகும்." அவந்திகா கணவனை அடக்கினாள்.

"பேசாதே அவந்திகா... புரிஞ்சிக்கிட்டா எல்லாம் சரியா போயிருமா ? புரிஞ்சிக்கிட்டா அவன் பண்ணிய துரோகம் சரியா போயிருமா ?" அர்ஜூன் கோபத்தில் வெடித்தான்.

"நம்ம வாழ்க்கை அதுக்கு ஒரு உதாரணம்ன்னா... கொஞ்சம் அதை நினைச்சு பாருங்கோ. எல்லாம் புரியும்." அவந்திகா சளைக்காது பதில் கொடுத்தாள். அவளை ஒரு மாதிரியாய் பார்த்தபடி நின்றிருந்தான் அர்ஜூன்.

' நம்ம வாழ்க்கையும் , பட்டு வாழ்க்கையும ஒண்ணா ? நம்ம கல்யாணம் எப்படி நடந்ததுன்னு மறந்துட்டு பேசுற பேபி ? ஆனா நான் என் பொண்ணை அந்தளவுக்கு விடலை. அவளை இளவரசியா தான் வளர்த்தேன். அவளுக்கு என்ன தலையெழுத்தா ? அவன் கிட்ட போய்க் கஷ்டப்படுறதுக்கு ?' என்று மனதிற்குள் நினைத்த அர்ஜூன் வெளியில் அதைச் சொல்லவில்லை. சொன்னால் , காதல் மனைவியின் மனம் படும் பாட்டை அவன் அறிவானே. ஒரு தந்தையாய் அவனது எண்ணம் சரியே...

"என்னமோ போ... உன் மகன் பண்ணிய தப்புக்கு என் மகள் தண்டனை அனுபவிக்கிறாள்." அர்ஜூன் மனைவியிடம் காய்ந்தான்.

"அப்போ உங்க மகளைப் போய் அழைச்சிண்டு வாங்கோ."

"அது என்னால் முடியாது. அவனுக்காகப் பெத்த தகப்பன் என் கிட்டேயே எல்லாத்தையும் மறைச்சிருக்கிறாள். அவளுக்கு என்னை விட அவன் தான் முக்கியமா போயிட்டான் இல்லை. போய்க் கஷ்டப்படட்டும். அப்போ தான் இந்த அப்பாவோட அருமை தெரியும்."

"பெத்தவா எல்லாரும் தன்னோட பொண்ணு அவ ஆத்துக்காரர் கூடச் சந்தோசமா வாழ்ந்தா சந்தோசம் தான் படுவா. இங்கே தான் துக்கப்படுறதை பார்க்கிறேன். என் பொண்ணு வாழ்க்கையோட தாத்பரியத்தைப் புரிஞ்சவள். அவள் வாழ்க்கையை அவள் பார்த்துக்குவாள்." என்று அவந்திகா முடித்துவிட... அனைவரும் தங்களது அறைக்குச் சென்றனர்.

அர்ஜூனும் அறைக்குச் செல்ல... அவனைப் பின்தொடர்ந்து வந்தாள் அவந்திகா. அவனோ கோபத்துடன் அவளிடம் பேசாது பால்கனியில் போய் அமர்ந்தான். அவளும் அவன் பின்னேயே சென்றாள்.

"உங்க பார்வைக்கான அர்த்தம் என்னன்னா ?" அவள் அமைதியாகக் கேட்க... அவனுக்குத் தூக்கிவாரி போட்டது.

"எந்தப் பார்வை ?" அவன் தடுமாற்றத்துடன் உரைக்க... அவந்திகாவோ அவனைக் கூர்ந்து பார்த்தா ,

"நம்ம வாழ்க்கை ஒரு உதாரணம்ன்னு நான் சொன்னப்போ..." என்று கூற...

அதற்குப் பதில் அளிக்க முடியாதா , மனைவியின் முகத்தைப் பார்க்க முடியாது அர்ஜூன் வேறு எங்கோ பார்த்தான்.

"நான் சொல்லவா ?" அதைக் கேட்டு அவன் திடுக்கிட்டவனாய் அவளைத் திரும்பி பார்த்தான்.

"கொடுத்த பணத்துக்கு வட்டி கட்ட முடியாம அடிமையா வந்தவ நீ... ஆனா என் பொண்ணு அப்படிக் கிடையாது. என் சாம்ராஜ்யத்துக்கு இளவரசின்னு சொல்ல வர்றேள்.

அப்படித்தானே..." அவளது வார்த்தையில் அவன் பதறி போய் எழுந்தான்.

"ஏய் , அப்படி எல்லாம் இல்லைடி..." என்றவன் அவளை இழுத்து அணைத்துக் கொண்டான். அவள் திமிறவில்லை. மாறாக அவனது நெஞ்சில் சாய்ந்தபடி ,

"நான் ஏற்கெனவே உங்க கிட்ட சொன்னது தான். அந்த இடத்தில் நீங்க இல்லைன்னா நிச்சயம் நான் என் உயிரை விட்டிருப்பேன்."

"தெரியும் பேபி... அது ஏதோ பட்டு மேலிருந்த பாசத்தில்..." அவன் வார்த்தை வராது தவித்தான்.

"ஒரு காலத்தில் நானும் என் தோப்பனாருக்கு இளவரசி தான். அந்த இளவரசியை நீங்க படுத்தாத பாடா ?" அதைக் கேட்டு அர்ஜூனின் இதழ்களில் புன்னகை தோன்றியது.

"கொஞ்சம் குறைவா தான் படுத்தியிருக்கேன் பேபி. நான் குறைஞ்சது ஆறுன்னு கணக்கு வச்சிருந்தேன். ஆனா நீ மூணுக்கே மூக்கால அழுத." அவன் குறும்பாய் சிரித்தான்.

"நான் என்ன சொல்றேன ? நீங்க என்ன சொல்றேள ?" அவள் அவனது வாயில் செல்லமாய் ஒரு அடி வைத்தாள்.

"அப்படிப் பார்த்தா என் மருமான் ஜென்ட்டில்மேனாக்கும்." என்று அவள் நொடித்துக் கொள்ள...

"அடியேய் பொண்டாட்டி... நான் தான்டி உன் ஹீரோ..." என்று அவன் போலியாக அலறினான்.

"ம்ஹூம , இந்தக் கதைக்கு என் மருமான் தான் ஹீரோ..."

"பார்க்கலாம , பார்க்கலாம்... உன் மருமான் ஹீரோவா ? ஜீரோவான்னா ?"

"அவர் ஜீரோவா இருந்தாலும் என் பொண்ணு ஜீரோவுக்கு முன்னால் நம்பர் போட்டு அவரை மதிப்புடையவரா ஆக்கிருவாள். எனக்கு என் பொண்ணு மேல் நம்பிக்கை இருக்கு."

"எப்படியோ பட்டு வாழ்க்கை சரியானால் சரி... இல்லை அர்ஜூனோட இன்னொரு பக்கத்தைப் பார்க்க வேண்டி வரும்." அவன் கோபத்தோடு மீசையை முறுக்கி கொண்டான்.

மகள் மீதான கணவனது பாசத்தைக் கண்டு மனம் நெகிழ்ந்தவளாய் அவந்திகா கணவனைக் காதலுடன் பார்த்திருந்தாள். காலம் கடந்தாலும் காதலுக்கு வயதில்லை...!

அறைக்குள் வந்ததில் இருந்து ஸ்ரீராம் ஒரு வார்த்தை பேசாது மனைவியைப் பார்த்திருந்தான். மனைவி என்ன சொல்வாளோ ? என்று அவனுக்குப் பயமாக இருந்தது.

"சீதா , ஏதாவது சொல்லு... இப்படி அமைதியா இருக்காதே." என்று அவன் கூற...

அவன் மௌனம் கலைவதற்காகவே காத்திருந்தார் போன்று சீதா அவனிடம் ஓடி வந்தவள் அவனது உயரத்திற்கு எம்பி அவனது முகத்தைத் தனது இரு கரங்களால் தாங்கியபடி அவனது முகம் முழுவதும் வேக வேகமாய் முத்தமிட்டாள். பின்பு அவனது உதட்டருகே வந்தவள் நாணத்துடன் விலகி போக நினைக்க... ஸ்ரீராம் அவளைத் தூக்கியபடி அவளது இதழோடு இதழ் சேர்த்து அணைத்துக் கொண்டான். மனதிலிருந்த பாரம் எல்லாம் இறங்கியதில் அவன் மிகவும் சந்தோசமாக இருந்தான். இதில் மனைவி வேறு முத்தமிடவும் அவனது சந்தோசத்தைக் கேட்கவும் வேண்டுமோ!

நீண்ட நேரம் கழித்து மனைவியை விடுவித்த ஸ்ரீராம் அவளைப் பார்த்து மயக்கத்துடன் புன்னகைத்தான். அவளும் அதே மயக்கத்தைத் தனது விழிகளில் பிரதிபலித்தவள் ,

"ஐ லவ் யூ ராம். ஐ லவ் யூ." என்று கூறி அவனது நெற்றியில் முத்தமிட்டாள்.

காதலை உணரவில்லை என்று சொன்னவள்... அவனது காதலுக்குத் தலைவணங்கி அவனை ஏற்றுக் கொண்டவள்... இதோ இப்போது அவளது காதலை அவனிடம் வாய்விட்டு கூறுகின்றாள். அவன் சுகமாய்த் தலைகுனிந்து அவளது முத்தத்தை வாங்கிக் கொண்டான்.

"இறக்கி விடுங்க ராம். கை வலிக்கப் போகுது."

"நீ சுகமான சுமை சீதா. எனக்கு வலிக்காது." என்றான் அவன் புன்னகையுடன்...

"ஆனா எனக்கு வலிக்கும்... இங்கே..." என்று அவள் தனது நெஞ்சினை சுட்டிக்காட்ட... அவளது காதலை உணர்ந்தவனாய் அவன் அவளைக் கீழே இறக்கிவிட்டான்.

"என்னைப் பார்த்தா வில்லன் மாதிரி தெரியலையா ?"

"ம்ஹூம் , இல்லை... அர்ச்சனாவோட கல்யாணம் முடிஞ்சதும் அண்ணா யூஎஸ் போயிட்டான். அதுக்குப் பிறகு முழுசா ரெண்டு வருசம் இங்கே வரவே இல்லை. ஸ்கைப்பில் பேசுறதோட சரி. அவனைப் பார்க்கும் போது எல்லாம் அம்மா அழுவா. அவன் சாமியாரா போயிருவானோன்னு பயப்படுவா. ஆனா நீங்க எங்க அண்ணாவுக்காக உங்க தங்கை வாழ்க்கையைப் பணயம் வச்சிருக்கிறதை பார்க்கும் போது நேக்குச் சந்தோசமா தான் இருக்கு. கோபம் வரலை." ஒரு தங்கையாக அவள் பேசினாள்.

"ஆனா அப்பா சொன்னது உண்மை தானே..." அவனது முகம் வேதனையில் கசங்கியது.

"ஒரு பெண்ணா பார்க்கும் போது மன்னியோட நிலையை நினைச்சா பாவமா தான் இருக்கு. அதுக்காக என் அண்ணா கெட்டவன் இல்லையே. அவன் செஞ்ச ஒரே தவறு அர்ச்சனாவையும் , மன்னியையும் போட்டுக் குழப்பிக் கொண்டது தான். இரண்டு உறவையும் சரியா கையாள தெரியலை." அவரவர் அவரவர் பார்வையில் இருந்து யோசித்தனர்.

"இனியாவது அவங்க சந்தோசமா இருக்கணும் சீதா. பட்டு புரிஞ்சு நடந்து கொள்வாள்ன்னு நினைக்கிறேன்." அதை அவளும் ஆமோதிக்க... இருவரின் மனதும் சந்தோசத்தில் நிறைந்திருந்தது.

அறைக்குள் கோபமாய் நுழைந்த பரத் உள்ளே வந்த மனைவியிடம் , " நில்லுடி அங்கேயே..." என்று கத்தினான்.

அவன் சொன்னதைக் கனிஷ்கா கேட்டுவிட்டால் உலகம் அழிந்து விடாதோ! அவளோ காதில் ஆள்காட்டி விரலை விட்டு குடைந்து கொண்டே சாவகாசமாக அறையினுள் நுழைந்தாள்.

"நான் பேசுறது உனக்குக் கேட்குதா ?" அதற்கும் அவன் கோபம் கொண்டு கத்தினான்.

"நீங்க பேசவா செஞ்சேள் ? ஏதோ கத்தின மாதிரி இருந்துச்சே..." என்றவள் கட்டிலில் அமர்ந்து கால் மேல் கால் போட்டுக் கொண்டு அவனைத் தோரணையாகப் பார்த்து வைத்தாள்.

அவளது செயலில் , பார்வையில் அவனது கோபம் இன்னமும் அதிகரித்தது. அவள் அருகில் வந்தவன் அவள் முகத்துக்கு நேரே ஆள்காட்டி விரலை நீட்டி ,

"உண்மையைச் சொல்லு... உன் அண்ணன் காதலிச்ச விசயம் உனக்குத் தெரியுமா ? தெரியாதா ?" என்று கேட்க...

"தெரியும்..." என்றவளது முகம் இறுகி போனது.

"அப்போ குடும்பமே திட்டம் போட்டு எங்களை ஏமாத்தி இருக்கீங்க." அடக்கப்பட்ட கோபத்துடன் அவன் கேட்டான்.

"காதலில் தோல்வி அடைஞ்சவங்க எல்லாம் மறுவாழ்க்கையைத் தேட கூடாதுன்னு சொல்ற மாதிரியிருக்குன்னா உங்க பேச்சு..."

"ஆமாம்டி , அது அப்படித்தான்... என் தங்கச்சி ஒண்ணும் நளாயினி இல்லை. உன் அண்ணனை அவனோட காதலி வீட்டுக்கு கூட்டிட்டு போறதுக்கு." கணவனது கூற்றில் இருந்த உண்மையை உணர்ந்த கனிஷ்கா அமைதியாக இருந்தாள்.

"அண்ணன் பண்ணுனது தப்பு தான். அதனால் தான் நான் மன்னியோட பக்கம் நின்னேன். இப்பவும் நான் மன்னியோட பக்கம் தான். அண்ணா மன்னியை நன்னா வச்சு வாழ்ந்தால் முதலில் சந்தோசப்படுறது நான் தான்."

"இத்தனை வருசமா ஒழுங்கா வச்சுக்கத் தெரியாதவன் இனிதான் பொண்டாட்டியை நல்லா வச்சுக்கப் போறானா ?"

"சும்மா சும்மா எங்க அண்ணாவை பேசாதேள். நீங்க மட்டும் என்ன ஒழுங்கா ? கட்டின பொண்டாட்டியை நல்லாவா வச்சிருக்கேள் ?"

"ஓஹோ..." என்றபடி அவன் அவள் அருகில் வர...

"எதுக்கு இப்போ கிட்ட வர்றேள் ?" அவள் பயத்தில் சுற்றும்முற்றும் பார்த்தாள். எங்கும் தப்பித்துப் போக முடியாதபடி கணவன் முன்னே நிற்க... அவளுக்குப் பின்னால் பெரிய கட்டில் பரந்து விரிந்திருந்தது.

"உன் குறையை நிவர்த்திச் செய்யலாம்ன்னு தான்." என்றவன் அவளது முகம் நோக்கி குனிந்தான். அவளோ கத்தாத , பயப்படாது முகத்தை இறுக்கமாய் வைத்துக் கொண்டு அவனைப் பார்த்தாள். அதைக் கண்டவன் அவளை யோசனையாகப் பார்த்தான்.

"தொடுறதுன்னு முடிவாயிருச்சு. பிஏவா தொடுறேளா ? இல்லை பொண்டாட்டியா தொடுறேளா ? இதைத் தெளிவா சொல்லிண்டா அதுக்கேத்த மாதிரி நான் நடந்துப்பேன்."

"இதுக்கு என்ன அர்த்தம் ?" பரத் கேள்வியாய் ஒற்றைப் புருவத்தை உயர்த்தினான்.

"பிஏன்னா பணம் கொடுக்கணும். பொண்டாட்டின்னா... கொடுமையேன்னு சகிச்சிக்கிறேன்." அவளது வார்த்தைகள் அவனது கோபத்தைக் கிளறிவிட...

"பேசுற வாயை..." என்றவன் அவளது முகத்தைப் பற்றியிழுத்து அவளது இதழ் நோக்கி குனிந்தான்.

அவனது செய்கையில் முதலில் அதிர்ந்தவள் பின்பு தன்னைச் சுதாரித்துக் கொண்டு அவனை முறைத்து பார்த்தாள். அவனோ தனது வலக்கை கட்டை விரல் கொண்டு அவளது இதழ்களை மென்மையாய் வருடினான். அவனது சிறு ஸ்பரிசத்தில் பெண்ணவள் தேகம் குழைந்து தான் போனது. அவளது மனதிடத்தை அவளது தேகம் குழைந்து குலைத்தது.

மனைவியின் அமைதியில் பரத் என்ன நினைத்தானோ ? அவளை விட்டு மெல்ல விலகி நின்றான். கனிஷ்கா அவனை யோசனையாய் பார்த்தாள்.

"நீ கத்துனா தான்டி கிக்கா இருக்கு. இப்படி அமைதியா இருந்தா யாரோ மாதிரியிருக்கு." கண்சிமிட்டியவனைக் கண்டு அவளது கோபம் அதிகரித்தது. ஒன்றும் பேசாது எழுந்தவள் அலமாரியை நோக்கி சென்றாள். குளிக்க உடைகளை எடுத்துக் கொண்டு அவள் திரும்பவும் பரத் வேகமாகக் குளியலறையை நோக்கி ஓடினான்.

"நீ குளிக்கப் போனா ஒரு மணி நேரமாக்குவ... எனக்கு நேரமாச்சு." என்றவன் குளியலறைக்குள் சென்று கதவை மூடி கொண்டான்.

அவனது செயலில் கனிஷ்காவின் முகத்தில் புன்னகை தோன்றியது. குளியலறைக்குள் கண்ணாடி பார்த்துச் சவரம் செய்து கொண்டிருந்த பரத்தும் மனைவியை நினைத்து தனக்குள் சிரித்துக் கொண்டான். அவனது அருகாமையில் மயங்கி நின்ற மனைவியின் முகமே அவனது மனதில் வட்டமிட்டது. அதுவே சொல்லாமல் சொல்லியது அவளது மனதினை. அவள் அவனிடம் காதலை சொல்லி கிட்டத்தட்ட ஆறு வருடங்கள்

முடிந்துவிட்டது. அதை ஒத்து கொள்ளாது முரண்டு பிடிக்கும் மனைவியை நினைத்து அவன் அச்சம் கொண்டான்.

' அண்ணங்காரன் ஐஞ்சு வருசம் கழிச்சு பட்டுவை கழட்டி விட்ட மாதிரி இவளுக்கும் உள்ளுக்குள் ஏதேனும் ஐடியா இருக்குமோ ? டேய் பரத் , அதுக்குள்ள ஏதாவது பண்ணுடா ?' அவன் தனக்குத் தானே எச்சரித்துக் கொண்டான்.

பரத் கனிஷ்காவை காதலித்துத் திருமணம் செய்யவில்லை தான். இருந்தாலும் திருமணம் என்பது வாழ்வில் ஒரு முறை தான் வரும் என்பதில் அவன் உறுதியாக இருந்தான். அவனைப் பொறுத்தவரையில் கனிஷ்கா அவனது மனைவி... அதில் எந்தவித மாற்றமும் இல்லை.

' நீ ஏதாவது பண்ணின... அவள் உன்னை அடி வெளுக்காம இருக்க மாட்டாள். ' அவனது மனசாட்சி அவனைக் கிண்டலடித்தது. அவனது கை தானாக உயர்ந்து கன்னத்தைத் தடவி பார்த்தது. அவள் அடித்தது நினைவில் எழுந்ததும் அவனுள் கோபமும் உடன் சேர்ந்து எழுந்தது.

****

ஆராதனா வீட்டின் முன் காரை நிறுத்தும் போதே அவளது விழிகள் கணவனது காரை தேடியது. ஆனால் அவனது கார் அங்கு இல்லை. எங்கே சென்றான் ? என்று யோசித்தபடி வீட்டினுள் நுழைந்தவள் நேரே மாமனார் இருந்த அறைக்குச் சென்றாள். அங்குச் சுந்தரி கணவருக்குக் காபி கொடுத்துக் கொண்டிருந்தார். இவளது வரவை உணர்ந்து திரும்பி பார்த்தவர் ,

"காலையிலேயே விஷ்ணுவையும் , உன்னையும் காணோமேன்னு பதறிப் போயிட்டேன். எங்கே போயிட்டீங்க ரெண்டு பேரும் ?" என்று கேட்க...

"அர்ச்சனாவுக்குப் பிரசவ வலி வந்திருச்சு."

"எல்லாம் சேமமா முடிஞ்சதா ? என்ன குழந்தைகள் ?"

"ஆண் ஒண்ணுை , பெண் ஒண்ணு..."

"சந்தோசம்..." என்று சுந்தரி கூற... ராகவன் ஆராதனாவை பரிவுடன் பார்த்தார். மகனுக்காக ஆராதனா அர்ச்சனாவுடன் பழகுவதை , உதவுவது எல்லாம் அவருக்குத் தெரியும்.

ஆராதனா விழிகள் கலங்க ராகவனை நோக்கி நடந்து வந்தாள்... அவர் அருகில் மண்டியிட்டு அமர்ந்தவள் அவரது கைகளைப் பிடித்துக் கொண்டாள்.

"அவரை எப்போ மன்னிப்பேள் மாமா ?"

அவளது கேள்வியில் ராகவன் திகைத்து போய் அவளைப் பார்த்தார். சுந்தரியின் விழிகள் கலங்கியது. ராகவன் மகனிடம் சாதாரணமாக ஓரிரு வார்த்தைகள் பேசினாலும் முன்பிருந்த அந்நியோன்யம் அவர்களிடம் இல்லை. விஷ்ணுபிரஹான் இந்தளவிற்குத் தந்தை பேசுவதே தனக்குப் போதுமானது என்று மகிழ்ச்சியில் இருந்தான். அதைத் தான் அவள் கேட்டது.

"காதலிச்சது தப்பா மாமா ?" அதற்கு மேல் ராகவனால் பேசாது இருக்க முடியவில்லை.

"தப்பில்லை. அது தோல்வியில் முடிஞ்சதும் தப்பில்லை. ஆனா அதுக்காகக் கட்டின மனைவியைக் கஷ்டப்படுத்தினான் பாரு... அது தான் தப்பு. உன்னை அவன் விவாகரத்து செஞ்சது தப்பு தானே."

மருமகளை மகளாக நினைத்து தனக்காக மகனிடம் கோபித்துக் கொண்டு பேசாது இருந்த அந்த நல்ல உள்ளத்தைக் கண்டு அவளது மனம் நெகிழ்ந்தது.

"நடந்து முடிஞ்சதை பத்தி நாம பேச வேண்டாமே மாமா. இப்போ தவறு உணர்ந்து வந்திருக்கிறார் இல்லையா ? அதுக்காகவாவது அவரை மன்னிக்கலாமே." மருமகள் கூறியதை விழி மூடி யோசித்த ராகவன் பின்பு விழி திறந்தை ,

"விஷ்ணுவை கூப்பிடு..." என்க... அவனோ இன்னமும் வீட்டிற்கு வரவில்லை.

"அவர் இன்னமும் வரலை மாமா. வந்ததும் பேசுங்கோ." என்றவள் தனது அறைக்குச் சென்றாள்.

ராகவன் தனக்குள் யோசித்தபடி அமர்ந்திருந்தார். சுந்தரி அவரது அமைதியை கலைக்க விருப்பம் இல்லாது சென்றுவிட்டார்.

அன்று நள்ளிரவில் தான் விஷ்ணுபிரஹான் வீட்டிற்கு வந்தான். அவன் வந்த போது ஆராதனா நன்றாக உறங்கி கொண்டிருந்தாள். மெல்லிய விளக்கொளியில் தேவதையாய் உறங்கி கொண்டிருந்தவளை அவன் காதலோடு பார்த்திருந்தான். இன்று முழுவதும் அவன் அவளது அழைப்பை எடுக்கவில்லை. மீண்டும் மீண்டும் அவள் அழைப்பு எடுக்கவும் பரிதாபப்பட்டவனாய் அவன் வீட்டிற்கு வர இரவாகும் என்று ஒரு குறுஞ்செய்தி மட்டும் அவளுக்கு அனுப்பிவிட்டான். அவள் முழித்திருப்பாள் என்பதற்காகத் தான் அவன் தான் வரும் நேரத்தை கூடக் குறிப்பிடவில்லை. எத்தனை நாளைக்கு அவன் மனைவியிடம் இருந்து தப்ப முடியும் ? என்றாவது ஒரு நாள் அவன் அவளிடம் எல்லாவற்றையும் சொல்லித்தான் ஆகவேண்டும். சொல்லிவிட்டு அவளது முகத்தை அவனால் பார்க்க முடியுமா ? அவள் இந்த விசயத்தைக் கேட்டு எப்படி நடந்து கொள்வாள் ? என்று அவனுக்குப் பயமாக இருந்தது. கோபப்படுவாளா ? இல்லை அழுவாளா ? என்ன செய்வாளோ ? அதை இப்போது நினைத்துப் பார்த்தாலும் அவனுக்குப் பக்கென்று இருந்தது.

சத்தம் செய்யாது தன்னைச் சுத்தப்படுத்திக் கொண்டு கீழே படுத்தவன் அப்படியே உறங்கி போனான். மறுநாள் காலையில் அவன் எழுந்த போதே , கட்டிலில் அமர்ந்தபடி தன்னையே பார்த்துக் கொண்டிருந்த மனைவியைத் தான் முதலில் பார்த்தான்.

"குட்மார்னிங் பிரஹான்..." அவளது உற்சாகம் அவனுக்குப் பெருத்த குழப்பத்தைத் தோற்றுவிக்க...

"குட்...மார்னிங்..." அவனது வார்த்தைகள் தடுமாறியது. அதை அவள் கண்டு கொள்ளாது அவனிடம் ,

"உங்களுக்கு ஒரு சர்ப்ரைஸ் காத்திருக்கு..." என்க... அவன் ' ங' என்று விழித்தான்.

"முதலில் போய்க் குளிச்சிண்டு வாங்கோ..." அவள் அவனைத் துரிதப்படுத்த... அவன் புரியாது அவளைப் பார்த்தபடி குளியலறைக்குள் புகுந்தான்.

குளித்துவிட்டு வந்தவனைக் கையோடு ராகவனின் அறைக்கு அழைத்துச் சென்றாள் அவனது மனைவி. எதற்கு என்று புரியாவிட்டாலும் அவன் அவளின் பின்னேயே சென்றான்.

"மாமா..." ஆராதனாவின் குரலில் திரும்பி பார்த்த ராகவன் அங்கு மருமகளுடன் மகனும் இருப்பதைக் கண்டு சந்தோசம் கொண்டார்.

"விஷ்ணா , இங்கே வா..."

அவர் தனது வலக்கையை நீட்டி அவனை அருகில் அழைத்தார். அவன் ஆச்சரியத்துடன் அவர் அருகில் செல்ல... அவர் மகனை தன்னோடு சேர்த்து அணைத்துக் கொண்டார். அவரது விழிகளில் இருந்து கண்ணீர் வழிந்தது.

"என்னை மன்னிச்சிரு விஷ்ணு... ஏதோ ஒரு கோபத்தில் அப்பா உன் கிட்ட பேசாம இருந்துட்டேன்."

"நீங்க தான்ப்பா என்னை மன்னிக்கணும். நான் தான் பாவி... கட்டினவளை அம்போன்னு விட்டுட்டுப் போன பாவி. நீங்க எனக்குக் கொடுத்த தண்டனை சரி தான்." என்றவனது விழிகளிலும் கண்ணீர் துளிர்த்தது.

"அதான் அவளைத் திரும்பக் கூட்டிண்டு வந்துட்டியே விஷ்ணு..." மகனது தவறை அவரும் அன்பால் மன்னித்தார். அவன் பக்க நியாயத்தையும் யோசித்தார். அவன் விழி கசிய அவரைப் பார்த்திருந்தான்.

"என் மருமகளே உன்னை மன்னிச்சிட்டா... அதுக்கு அப்புறமும் நான் மன்னிக்கலைன்னா அது நல்லா இருக்காது விஷ்ணு." ஏதோ நகைச்சுவை சொன்னது போல் ராகவன் விழுந்து விழுந்து சிரித்தார்.

விஷ்ணுபிரஹான் தந்தையை நிறைவாய்ப் பார்த்திருந்தான். ஆராதனாவும் , சுந்தரியும் நடப்பதை சிறு புன்னகையுடன் பார்த்திருந்தனர்.

' உங்க மருமக என்னை மன்னித்து விட்டாளா ?' அந்த நேரத்திலும் அவனது மனம் லேசாக முரண்டியது.

அன்று முழுவதும் விஷ்ணுபிரஹான் தனது தந்தையுடனேயே நேரத்தை செலவளித்தான். அப்பா , மகனுக்கு இடையில் அம்மாவும் , மருமகளும் வராது தள்ளி இருந்தனர். இத்தனை நாள் பேசாத பேச்சை அவர்கள் இருவரும் பேசி தீர்த்தனர். திடுமென ராகவன் மகனிடம் ,

"நீயும் , ஆருவும் சந்தோசமா இருக்கணும்." என்க...

"நிச்சயம்ப்பா... அவளைச் சந்தோசமா வச்சுக்குவேன். இதுவரை என்னால் அவள் அனுபவித்த துன்பம் எல்லாம் போதும்."

"அது போதும்ப்பா..." என்றவர் தனது நெஞ்சின் இடப்பக்கத்தை நீவி விட்டுக் கொண்டார். அவரது முகமாறுதலை அவதானித்தவன் பதறி போய் ,

"என்னப்பா செய்யுது ?" என்று அலற...

"பூஜையறையில் இருந்து துளசி தீர்த்தம் எடுத்துண்டு வா..." அவர் கூறினாலும் அவன் அவரைத் தனியாக விட்டுப் போகத் தயங்கினான்.

"ஆராதனா..." என்று பெருங்குரல் எடுத்துக் கத்தினான். ஆராதனாவோடு , சுந்தரியும் அங்கு வந்து சேர்ந்தார்.

"ஏன்னா..." என்றபடி சுந்தரி கணவனை நோக்கி வர...

"ஆராதனா , போய்த் துளசி தீர்த்தம் எடுத்துட்டு வா..." விஷ்ணுபிரஹான் மனைவியிடம் கூறினான். அவள் ஓடி போய் அதை எடுத்துக் கொண்டு வந்தாள்.

மகனையும் , மருமகளையும் அருகருகில் பார்த்த ராகவன் , " இரண்டு பேரும் சேர்ந்து கொடுங்கோ..." என்க... சுந்தரி தலையில் அடித்துக் கொண்டு அழுதார்.

விஷ்ணுபிரஹானும் , ஆராதனாவும் ஒருவரை ஒருவர் பயத்துடன் பார்த்து கொண்டனர். பின்பு இருவரும் சேர்ந்து கைகள் நடுங்க துளசி தீர்த்தத்தை ராகவன் வாயில் ஊற்றினர். இரண்டு மடக்கு குடித்தவர் மூன்றாவது வாய் குடிப்பதற்கு உயிரோடு இல்லை. இருவரையும் பார்த்தபடி அவரது உயிர் அவரை விட்டுப் பிரிந்திருந்தது.

"ஏன்னா..." சுந்தரி வாய்விட்டு கதறியழுதார்.

ஆராதனாவின் விழிகளும் துக்கம் தாங்காது கண்ணீரை வடித்தது. விஷ்ணுபிரஹான் அவரது விழிகளை மூடியவன் பிறகு அவரை அணைத்துக் கொண்டு அழுதான்.

****

ராகவன் இறந்து இன்றோடு பதினாறு நாட்கள் முடிந்து விட்டது. வந்திருந்த உறவினர்கள் கூட்டம் எல்லாம் போய்விட்டனர். விஷ்ணுபிரஹான் தனது அறையில் வந்து அமர்ந்தான். அவனைத் தொடர்ந்து உள்ளே வந்த ஆராதனா அவன் முன்னே போய் நின்றாள்.

"பிரஹான்..." என்று அவள் கணவனை அழைக்க... அவளை ஏறிட்டு பார்த்தவனின் விழிகள் கலங்கி சிவந்திருந்தது. அதுவே அவனது துக்கத்தை நன்கு பறைச்சாற்றியது.

"பிறப்பு , இறப்பு எல்லாம் நம் கையில் இல்லை பிரஹான். இதைக் கடந்து வாங்கோ." அவள் அவனுக்கு ஆறுதல் வார்த்தைகளைக் கூறினாள்.

அடுத்த நொடி விஷ்ணுபிரஹான் மனைவியின் இடையைக் கட்டி கொண்டு அவளது வயிற்றில் முகம்

புதைத்துக் கொண்டான். அவனது கண்ணீரை அவளது மேனி உணர்ந்தது. முதலில் கணவனது செயலில் விதிர்த்து போனவள் பின்பு தாயாய் அவனை அரவணைத்து கொண்டாள்.

இத்தனை நாளும் அவன் தான் தாய்க்கும் , மூன்று சகோதரிகளுக்கும் தகப்பனாய் இருந்து அவர்களை அரட்டி , உருட்டி , மிரட்டி உண்ண வைத்து அவர்களைத் துக்கத்தில் இருந்து மெல்ல மெல்ல வெளியில் கொண்டு வந்தான். ஆனால் அவனது துக்கத்தினைப் பகிரத்தான் ஆளில்லை. இவ்வளவு நாள் துக்கத்தை மனதில் போட்டு பூட்டி வைத்திருந்தவன் இப்போது மனைவியின் ஆறுதலில் சிறு சேயாய் மாறித் தேம்பினான்.

"பிரஹான் , இதென்ன சின்னக் குழந்தை மாதிரி அழுறேள் ?" அவள் அவன் அருகில் அமர்ந்து அவனை அணைத்து கொண்டாள்.

ஆறுதல் எந்த நேரம் காதலாக மாறியது... காதல் எந்த நேரம் காமமாக மாறியது என்பதை இருவருமே அறியவில்லை , உணரவில்லை. மொட்டொன்று பூவாக மலர்வது போல் அவர்கள் இடையே தாம்பத்யம் மிக அழகாக மலர்ந்தது.

இருவருமே சொல்லாத தங்களது காதலை தங்களது இணைக்குச் செயலில் காட்டினர்...!!!

"இருளில் கண்ணீரும் எதற்கு...
மடியில் கண்மூட வா...
அழகே இந்தச் சோகம் எதற்கு...
நான் உன் தாயும் அல்லவா..."

திருத்தமாகும்...!!!

மனமெல்லாம் லேசாக , விண்ணில் பறப்பது போன்று ஒருவித மாய உலகில் இருந்தான் விஷ்ணுபிரஹான். பெண்ணவள் அருகாமையில் இதுவரை அவனது மனதினை அழுத்தி கொண்டிருந்த சோகம் சற்று குறைந்திருந்ததோ!!! அவன் மனநிறைவோடு மனைவியின் நெற்றியில் அழுத்தமாய்த் தனது உதடுகளைப் பதித்தான். அத்தனை நேரம் தனி உலகில் சஞ்சரித்துக் கொண்டிருந்த ஆராதனாவின் உணர்வுகள் கணவன் கொடுத்த அழுத்தமான முத்தத்தில் அறுபட்டது. நிதர்சனம் முகத்தில் அறைந்ததில் அவள் கணவனைத் தள்ளிவிட்டு விட்டு எழுந்தாள். அவளது செயலுக்கான காரணம் புரியாது விழித்தவன் பிறகு ஏதோ புரிந்தவனாய் தனக்குள் புன்னகைத்துக் கொண்டான்.

அன்று முழுவதும் ஆராதனா கணவன் முன் வரவில்லை. அவனும் அதைப் பெரிதாக எடுத்து கொள்ளவில்லை. அவனுக்கும் விட்டுப் போயிருந்த வேலைகள் முடிக்க வேண்டி இருந்தது. அன்றிரவு மனைவி அறைக்கு வராததை உணர்ந்து விஷ்ணுபிரஹான் அவளைத் தேடி சென்றான். அவளோ சமையலறையில் பாலை ஆற்றி தம்பளரில் ஊற்றி கொண்டிருந்தாள். கணவனது வருகையை உணர்ந்து அவளது மனம் படபடவென அடித்துக் கொண்டது. அதே சமயம் அவளால் அவனது முகத்தை நிமிர்ந்து பார்க்க முடியவில்லை. நிச்சயம் இது வெட்கத்தால் விளைந்தது அல்ல...

கணவன் தந்தை இறந்த துன்பத்தில் இருக்கும் போது தான் அவனது உணர்வுகளோடு விளையாடி விட்டோமோ ? என்று அவள் மனம் கலங்கி போனாள். அவனது மனதினை அறியாதா , அவனது மனக்காயத்தைப் போக்காது தான் நடந்து கொண்டவிதம் அவளுக்கே அவமானமாக இருந்தது. ஏனெனில் அவர்களது சங்கமத்தில் அவளது பங்கு தான் அதிகம். அவளது காத்திருந்த காதல் இதற்காகத் தான் இத்தனை நாட்களாகக் காத்திருந்ததோ என்னமோ! தனது

ஒட்டுமொத்த காதலை ஒற்றைக் கூடலில் அவள் அப்படியே அவனிடத்தில் காட்டி விட்டாள். கணவன் தன்னைப் பற்றி என்ன நினைத்து இருப்பானா ? அதை நினைக்கும் போதே அவளது விழிகள் இரண்டும் கலங்க துவங்கியது.

"இங்கே என்ன உருட்டிக்கிட்டு இருக்க ? தூங்கலையா ?" என்று விஷ்ணுபிரஹான் கேட்க... அவள் திடுக்கிட்டவளாய் அவனைப் பார்த்தவளா ,

"போகணும்..." திணறியபடி கூறினாள்.

அதற்கு மேல் அவனுக்கும் பேச்சு வரவில்லை. அவன் அமைதியாகச் செல்ல நினைக்க...

"பிரஹான்..." மனைவி அழைத்ததும் அவன் நின்று திரும்பி பார்த்தான்.

"பால்..." என்று அவள் தம்பளரை அவனிடம் நீட்டினாள்.

பழைய நினைவுகள் அவனுள் கிளர்ந்தெழுந்தது. தான் வாழ்க்கையில் எத்தகைய சந்தோசங்களை இழந்திருக்கிறோம் என்பதை அவன் அந்தக் கணம் உணர்ந்தான். கடந்த காலத்தைத் திரும்ப மீட்டெடுக்க முடியாது. இனிவரும் காலங்களில் அனைத்தையும் மாற்றியமைக்க வேண்டும். மனைவியவளை சந்தோசமாக வைத்துக் கொள்ள வேண்டும் என்று அவன் நினைத்தான்.

விஷ்ணுபிரஹான் பால் தம்பளரை வாங்கியதும் அவள் இன்னொரு பால் தம்பளரை எடுத்துக் கொண்டு சுந்தரியை தேடி போனாள். அவள் அவனை அழகாகத் தவிர்த்தாள். அதை அவன் உணரவில்லை. அவன் தன்போக்கில் யோசித்துக் கொண்டிருந்தான்.

தூங்க போகும் முன் விஷ்ணுபிரஹான் அன்னையின் அறைக்குச் சென்றான். அங்குச் சுந்தரி பால் அருந்தி கொண்டிருக்க... ஆராதனா அவர் அருகில் அமர்ந்து பேசி கொண்டிருந்தாள். தந்தை இறந்ததில் இருந்து அவள் தான் சுந்தரியின் அருகில் இருக்கிறாள். தனிமை அவரைப்

பாதித்து விடாதபடி அவள் எப்போதும் அவருடன் இருந்தாள்.

பூவும் , பொட்டும் இல்லாத அன்னையைக் கண்டு அவனுக்கு வருத்தமாக இருந்தது. எப்போதும் சாந்தம் தவழும் முகத்துடன் புன்னகையுடன் காட்சியளிக்கும் அன்னையின் முகம் வாடி போயிருந்ததைக் கண்டு அவனும் வாடி போனான். அவர் அருகில் சென்று அவன் கட்டிலில் அமர... சட்டென்று ஆராதனா எழுந்து விட்டாள். மனைவியை ஒரு மாதிரியாய் பார்த்தவன் பின்பு அன்னையிடம் ,

"டேப்லெட் எல்லாம் போட்டீங்களா ?" என்று கேட்க... அவர் மௌனமாய்த் தலையாட்டினார்.

சிறிது நேரம் அவருடன் பேசியிருந்து விட்டு அவன் அறைக்குச் செல்ல வேண்டி எழுந்தான். ஆராதனா அவனைப் பின்தொடர்ந்து வந்தவள் கதவருகே வந்ததும் நின்று கொள்ள... அவன் கேள்வியாய் அவளைப் பார்த்தான்.

"நான் அத்தை கூடப் படுத்துக்கிறேன்."

ராகவன் இறந்ததில் இருந்து அவள் சுந்தரியுடன் தான் உறங்குகிறாள். அதனால் அவன் அவளைத் தவறாக நினைக்கவில்லை.

"ம் , குட்நைட்..." என்றவன் தனது அறைக்குச் சென்றுவிட்டான். அவன் செல்வதைப் பார்த்தபடி நின்றிருந்தவள் பின்பு கதவை சாற்றிவிட்டு உள்ளே வந்தாள்.

"நீ உன் ரூமுக்கு போம்மா ஆரு. நான் தனியா இருந்துக்குவேன்." என்று சுந்தரி கூறினார்.

"இருக்கட்டும் மாமி..." என்றவள் கட்டிலில் அவருக்கு மறுபக்கம் வந்து படுத்து கொண்டாள்.

"சீக்கிரம் ஒரு பேர குழந்தையைப் பெத்து கொடு. என்னோட தனிமை காணாமல் போயிரும். வயசான காலத்தில் எனக்கு அது தான் நிம்மதி." எதார்த்தத்தை உணர்ந்தவராய் அவர் கூறினார்.

"எல்லாம் நடக்கும் மாமி. இப்போ எங்களுக்கு நீங்க தான் முக்கியம்." என்ற ஆராதனா கண்மூடி படுத்து கொண்டாள். அடுத்தக் கணம் அவள் சுகமாய் உறங்கி போனாள்.

அறைக்கு வந்த விஷ்ணுபிரஹான் மனதில் ஆராதனாவின் நினைவுகள் தான் ஓடி கொண்டிருந்தது. ஆனால் வேறு மாதிரி... அதற்காக என்னென்ன செய்ய வேண்டும் என்பதை அவன் இப்போதே பட்டியலிட ஆரம்பித்தான்.

உடல் இச்சையைத் தாண்டி உறவுகள் முக்கியம் என்பதை அவர்கள் இருவரும் செயலால் நிரூபித்தனர்!!!

****

சோக புதுமையாய் வலம் வந்து கொண்டிருந்த சீதாவை கண்டு ஸ்ரீராமிற்கு வருத்தமாக இருந்தது. அவளது தந்தை இறந்ததில் இருந்து அவள் இப்படித்தான் இருக்கிறாள்.

"சீதா..." என்று அவன் அழைக்க... அவள் அமைதியாக அவனை ஏறிட்டு பார்த்தாள்.

"என் மேல் நம்பிக்கை இல்லையா ?"

"ஐயோ , யார் அப்படிச் சொன்னது ?" அவள் பதறி போனாள்.

"பின்னே எதுக்கு இந்தத் துக்கம் ? உன் அப்பா உன்னைப் பார்த்துக்கிட்டதை விட நான் உன்னை நல்லா பார்த்து கொள்வேன் சீதா." என்றவனை அவள் விழிகள் கலங்க பார்த்தாள்.

"நான் சொல்வதை நம்புகிற தானே ?"

"ம் , நம்புறேன்னா..." என்றவள் தானாக அவன் அருகில் வந்து அவனது நெஞ்சில் சாய்ந்து கொண்டாள். அவனும்

நெகிழ்வுடன் அவளை அணைத்துக் கொண்டான்.

பரத் கையில் உணவு தட்டுடன் அறைக்கு வந்தவன் அங்கிருந்த மேசையில் தட்டை வைத்து விட்டு மனைவியைப் பார்த்தான். அவள் அவனைக் கவனித்தால் தானே... சாதாசர்வகாலமும் அவள் அழுது கொண்டே அல்லவா இருக்கிறாள். அவனுக்கே அவளைக் கண்டு பாவமாகி போனது. கனிஷ்கா வீட்டின் கடைக்குட்டி என்பதால் அவள் எல்லோருக்கும் செல்லம். அதுவும் தந்தையிடம் செல்லம் மிகவும் அதிகம். அதனால் அவரின் இழப்பை அவளால் தாங்கி கொள்ள முடியவில்லை.

"வர வர ரூமுக்கு வரவே பயமாயிருக்கு." என்றவனை அவள் ஏறிட்டுப் பார்த்தாலும் ஏன் ? என்று கேள்வி கேட்கவில்லை.

' இவள் கண்ணுல டேம்மை கட்டி வச்சியிருக்காளோ ? எப்படி இவ்வளவு தண்ணி ஊத்துதா ?' அவன் வியப்பாய் அவளைப் பார்த்தான்.

' நீ நினைச்சது மட்டும் அவளுக்குத் தெரிஞ்சது உன் கண்ணுல தண்ணி ஊத்தும்... பரவாயில்லையா ?' அவனது மனசாட்சி மனசாட்சியே இல்லாது அவனைப் பார்த்துக் கிண்டலடித்தது.

' நீ எனக்கு மனசாட்சியா ? இல்லை அவளுக்கு மனசாட்சியா ?' அவன் கோபம் கொள்ள...

' உன் பொண்டாட்டி உன்னைப் பாசமா பார்க்கிறாள் பார்... அவளைப் போய் என்னன்னு கேளா ?' அவனைக் கனிஷ்காவிடம் கோர்த்துவிட்டு விட்டு மனசாட்சி ஓடி ஒளிந்து கொண்டது. அவளைக் கண்டு அதற்குக் கூடப் பயம் போலும்...

"இன்னும் கொஞ்ச நாள் போனா இந்த ரூமுக்கு வெள்ள அபாய அறிக்கை விடலாம்ன்னு இருக்கேன்."

பரத் கூறியதும் தான் அவளுக்குப் புரிந்ததா , அவன் தன்னைக் கிண்டலடிக்கிறான் என்று... முதலில் அவனைக்

கண்டு முறைத்தவள் பின்பு லேசாகச் சிரித்து வைத்தாள்.

"ஹப்பாடி சிரிச்சிட்டியா ? அப்போ தைரியமா உன் பக்கத்தில் வரலாம்." என்றவனை அவள் வியப்பாய் பார்த்தாள். அவன் உணவு தட்டை எடுத்து வந்து அவளிடம் நீட்ட...

"வேண்டாம்..." என்று அவள் மறுத்தாள்.

"எத்தனை நாளைக்குச் சாப்பிடாம இருக்கப் போகிற ? ஒரு பத்து நாளஂ , ஒரு மாசம்... அதுக்குப் பிறகு... ?" அவன் கேள்வியாய் அவளைப் பார்த்தான். அவள் மௌனமாக இருந்தாள்.

"நானே இல்லைன்னாலும் நீ உனக்கான வாழ்க்கையை வாழ்ந்து தான் ஆகணும்." என்றவனைக் கண்டு பதறி போனவள் அவனின் உதடுகள் மீது கை வைத்தவள் விழிகளால் ' பேசாதே ' என்பது போல் தலையசைத்தாள்.

அதைக் கண்ட பரத் திகைத்துப் போனான். அவளது விழி பேசிய மொழி அத்தனை அழகாய் இருந்தது. அவளது விழி ஆழ்கடல் போன்று அகன்று அவனை உள்ளே இழுத்து செல்ல முயன்றது. அவன் தலையைக் குலுக்கி தன்னைச் சமன் செய்து கொண்டான்.

"நெருப்புன்னா வாய் வெந்துடாது கனி. நீயே இல்லைன்னாலும் எனக்குன்னு ஒரு வாழ்க்கை இருக்கு."

"என்னதஂ ?" கனிஷ்கா பத்ரகாளியாய் மாறி அவனை முறைத்து பார்த்தாள்.

"அது வந்து... அது எதுக்கஂ ? இப்போ தான் நீ இருக்கியே. அது சும்மா சொன்னது." என்று அவன் சமாளிக்க... அவளது இதழ்கள் மெல்ல புன்னகையைச் சிந்தியது. மாதுளம்பழ முத்துக்கள் போன்று அழகாயஂ , வரிசையாய் இருந்த அவளது பல்வரிசையில் அவன் மொத்தமாய் அடிமையாகி போனான். பின்பு தன்னைச் சுதாரித்துக் கொண்டவனஂ ,

"சாப்பிடாம உடம்பை கெடுத்துக்காதே. சாப்பிடு கனி." என்றவன் தட்டை அவளிடம் நீட்டினான்.

அவனது வார்த்தையிலோ , செயலிலோ ஏதோ ஒன்றில் மனம் கவர்ந்தவளாய் அவள் மறுக்காது வாங்கி உண்டாள். அதை அவன் திருப்தியுடன் பார்த்திருந்தான். உண்டு விட்டுக் கை கழுவி விட்டு வந்தவளை நிம்மதியாகப் பார்த்தவன் ,

"எத்தனை நாளைக்கு வேலை செய்யாமல் சம்பளம் கொடுப்பது ? நாளையில் இருந்து நீ கட்டாயம் வேலைக்கு வந்தாகணும்." என்று கட்டளை போல் கூற... கனிஷ்காவின் முகம் சிறுத்துப் போனது.

"வந்து தொலைக்கிறேன்." என்று அவள் வெடுவெடுத்தாள்.

"வழியில் எங்கும் தொலையாம நேரா ஆபிசுக்கு வந்து சேரு." என்று அவன் அவளைக் கிண்டலடித்தான்.

"நாய் வாலை நிமித்த முடியாது. கொஞ்ச நேரத்தில் நம்பிண்டேனே." அவள் வாய்க்குள் முணுமுணுத்து கொண்டாள்.

"அதை ஒரு பொட்டை நாய் சொல்லுதே... அடடே ஆச்சரியக்குறி!!!" அதற்கும் அவன் அவளைக் கலாய்த்தான்.

"என்னது பொட்டை நாயா ? நானா ?" அவள் அவனிடத்தில் எகிறினாள்.

"நீ மட்டும் என்னை நாய்ன்னு சொல்லலாமா ?"

"நான் ஆம்பளை நாய்ன்னு ஒண்ணும் சொல்லலை..."

"ஒரு ஆம்பளையைப் பார்த்து நாய்ன்னு சொன்னா... அதுக்கு அர்த்தம் ஆம்பிளை நாய் தான்." அவனது பதிலில் அவள் வாயடைத்து போய் அவனை ஆவென்று பார்க்க...

"இப்படி உன்னைப் பார்க்க எப்படி இருக்கு தெரியுமா ?" என்றவன் அவளைத் தனது அலைப்பேசியில் புகைப்படம் எடுத்துக் கொண்டான்.

"வரலாற்று நிகழ்வுகளை எல்லாம் ஃபோட்டோ எடுத்து வச்சுக்கணும்." என்றான் புகைப்படத்தைப் பார்த்து ரசித்தபடி...

"அதைக் கொடுங்கோ..." என்றவள் அவனிடம் இருந்து அலைப்பேசியைப் பிடுங்க வந்தாள்.

அவன் அவளிடம் அலைப்பேசியைத் தராது தனது கையை உயர்த்திப் பிடித்தான். அவள் மீண்டும் முயற்சிக்க... அவன் சிரித்தபடி அவளுக்குப் போக்கு காட்டி கொண்டே இருந்தான். ஒரு கட்டத்தில் கனிஷ்காவின் கையைப் பிடித்து அதில் தனது அலைப்பேசியை வைத்த பரத் அங்கிருந்து அகன்று விட்டான். ஏனென்று புரியாது அவனைப் பார்த்தவள் முதலில் அலைப்பேசியில் இருந்த தனது புகைப்படத்தை அழிக்கப் போனாள். ஆனால் கணவன் அவளைப் புகைப்படம் எடுத்திருந்தவிதம் கண்டு அதை அழிக்காது விட்டு விட்டாள்.

பின்பு கட்டிலில் அமர்ந்தவள் அப்போது தான் தனது உடையைக் கவனித்தாள். அவள் துள்ளி குதித்ததில் அவள் கட்டியிருந்த புடவையின் மாராப்பு நெஞ்சின் நடுவில் சுருண்டு இருந்தது. அதைக் கண்டதும் திகைத்தவள் அவசரமாகப் புடவையைச் சரி செய்து கொண்டாள்.

"மட்டி , மட்டி..." என்று தலையில் அடித்துக் கொண்டாள். அவளுக்கு வெட்கம் பிடுங்கி தின்றது.

பால்கனியில் இருந்து மனைவியைப் பார்த்துக் கொண்டிருந்த பரத்தின் உதடுகளில் புன்னகை தவழ்ந்தது. பெண்ணவளின் அழகை கண்டவன் அவளை மொத்தமாய்க் கொள்ளை அடிக்க ஆவல் கொண்டான். ' ச்சீ , அவள் இருக்கும் மனநிலையில் இது என்ன நினைப்பு ?' என்று தலையைக் குலுக்கி கொண்டவன் வெளியே வேடிக்கை பார்க்கலானான்.

****

ராகவன் இறந்து ஒரு மாதம் முடிந்துவிட்டது. இன்னமும் ஆராதனா கணவனின் கண்களில் படாது கண்ணாமூச்சி ஆட்டம் ஆடி கொண்டிருந்தாள். அவள் வீட்டில் இருந்த நேரம் முழுவதும் சுந்தரியின் முந்தானையைப் பிடித்துக் கொண்டு சுற்றி கொண்டிருந்தாள். இரவு தங்களது அறைக்குப் போகத் தயங்கி அவள் அவருடன் தங்கிய போது அவர் கண்டிப்புடனஂ ,

"என்னைக் கவனித்தது போதும் ஆரு. போயஂ , உன் ஆத்துக்காரனை கவனி." என்று அவர் திட்டவட்டமாகக் கூற... அவளது முகம் பேயறைந்தார் போன்று மாறியது. அவளது முகத்தைப் பார்த்த விஷ்ணுபிரஹான் அன்னையிடமஂ ,

"பரவாயில்லைம்மா... அவள் இங்கேயே இருக்கட்டும்." என்று கூற...

அன்றிரவு முழுவதும் ஆராதனா கணவன் கூறியதை நினைத்து நினைத்து வேதனை கொண்டு கண்ணீர் வடித்தாள். அவள் நினைத்தது போல் அவர்களுக்கு இடையில் நிகழ்ந்த சங்கமம் ஒரு விபத்து தான். அவன் மனதார விரும்பி தன்னைத் தொடவில்லை. தான் தான் அவனது உணர்வுகளைத் தூண்டிவிட்டு குளிர் காய்ந்து கொண்டோம் என்று தன்னைத் தானே தாழ்த்தி கொண்டு கழிவிரக்கம் கொண்டு அவள் கண்ணீர் வடித்தாள்.

அர்ச்சனாவின் குழந்தைகளைக் கண்டு அவன் கலங்கிய அந்தக் காட்சியே அவளது கண்முன் தோன்றி அவளை வதைத்தது. அந்தத் துன்பத்தில் துவண்டு கொண்டிருந்தவனுக்குத் தந்தையின் இறப்பு எதிர்பாராத ஒன்று. அப்படிப்பட்ட வேதனையான மனநிலையில் அவன் இருக்கும் போது தானும் அவனைப் படுத்தி விட்டோமோ ? என்று அவள் தனக்குள் குமைந்து போனாள். அதற்கு ஏற்றார் போன்று விஷ்ணுபிரஹானும் அவளை நாடவில்லை. அதுவே அவளது குழப்பத்தை இன்னமும் அதிகரித்தது.

இப்படி இருக்கும் போது ஒருநாள் ஆராதனா மருத்துவமனையில் நோயாளிகளைப் பரிசோதித்து விட்டு வரும் போது கணவனை எதிரில் கண்டு விட்டாள். அந்த இரவு பொழுதில் மருத்துவமனையில் அதிகக் கூட்டமில்லை. நீண்ட வராந்தாவின் ஒரு முனையில் இருந்து விஷ்ணுபிரஹான் வந்து கொண்டிருந்தான். மறுமுனையில் இருந்து ஆராதனா நடந்து வந்து கொண்டிருந்தாள். எதிர்பாராது அங்கு கணவனைக் கண்டதும் அவளுள் படபடப்பு எழுந்தது. அவள் தலையைக் குனிந்து கொள்ள... அவனோ இரு கைகளையும் பேண்ட் பாக்கெட்டில் விட்டபடி அவளை இமைக்காது பார்த்தபடி வந்து கொண்டிருந்தான்.

கணவன் அருகில் வந்ததும் விலகி போக நினைத்தவள் எதிர்பாராது அங்குப் போடப்பட்டிருந்த இரும்பு நாற்காலியில் காலை இடித்துக் கொண்டாள்.

"ஆ..." அவள் வலியில் அலறியபடி அங்கிருந்த நாற்காலியில் அமர...

"பேபி..." என்று அவன் பதறியபடி அவள் முன் மண்டியிட்டு அமர்ந்து அவளது காலை பிடித்து ஆராய்ந்தான். அவளது கால் கட்டை விரலை நாற்காலியில் இருந்த ஆணி ஒன்று நன்றாகப் பதம் பார்த்து இருந்தது. அதிலிருந்து இரத்தம் வருவதைக் கண்டவன் பதட்டத்துடன் தன்னிடம் இருந்த கைக்குட்டையைக் கொண்டு விரலை கட்டினான்.

"பிரஹானஂ , ஒண்ணும் இல்லை... விடுங்கோ." அவள் சங்கோஜத்துடன் தனது காலை விலக்கி கொள்ள முயல...

"இரத்தம் வருது... இது உனக்கு ஒண்ணும் இல்லையா ?" என்று அவளைக் கடிந்தவன் அவளைத் தனது கரங்களில் ஏந்தி கொண்டான்.

"ஐயோ , விடுங்கோ பிரஹான்..." அவள் அவனது பிடியில் இருந்து திமிறினாள்.

"ஷ்... பேசாமல் இரு..." என்றவன் அவளைத் தூக்கி கொண்டு ஓபிடி வந்தவன் அங்கிருந்த மருத்துவரிடம் அவளது காயத்தைக் காட்டி அதில் மருந்து வைத்து கட்டு போட்ட பிறகே அமைதியானான்.

"பிரஹானஂ , எதுக்கு இந்த ஆர்ப்பாட்டமஂ ? நானும் ஒரு டாக்டர் தான்." என்று அவள் அவனை மெல்ல கடிந்து கொண்டாள். அவளது வார்த்தையில் அவன் பின்னந்தலையில் தட்டியபடி சற்று வெட்கம் கொண்டஂ ,

"உனக்கு அடிப்பட்டதும் எனக்குக் கையுமஂ , காலும் ஓடலை." என்றவனஂ ,

"உன்னால் செருப்பு போட முடியுமஂா ?" என்று கேட்க...

"ம்..." என்றவள் தனது காலை செருப்பிற்குள் நுழைக்க முயன்றாள். விரலில் போடப்பட்டு இருந்த கட்டு அதற்குத் தடையாக இருந்தது. அவள் குனிந்து அதைச் சரி செய்வதற்குள் விஷ்ணுபிரஹான் கீழே குனிந்து செருப்பை அவளது காலில் மாட்டி விட்டான்.

"மேட் ஃபார் ஈச் அதர்." இருவரையும் வேடிக்கை பார்த்துக் கொண்டிருந்த மருத்துவர் புன்னகை புரிந்தார்.

"தேங்க்ஸ் டாக்டர்." என்று விரிந்த புன்னகையுடன் கூறிய விஷ்ணுபிரஹான் மனைவியைத் தூக்க போக...

"ஐயோ..." என்றபடி அவனைத் தடுத்தவள் தானே நடந்து வர துவங்கினாள். அப்படி இருந்தும் அவன் அவளைக் கைத்தாங்கலாக அழைத்து வந்தான்.

காரிலேறி வீடு வரும் வரை இருவரும் அமைதியாக வந்தனர். கார் நின்றதும் கீழே இறங்க போனவளை அவன் வேகமாய்க் காரை சுற்றி வந்து தனது கரங்களில் ஏந்தி கொண்டான். அவன் அவளை நேரே தங்களது அறைக்கு அழைத்துச் சென்றான். அறைக்குள் நுழைந்ததும் அவளுள் அன்றைய நினைவின் தாக்கம் அதிகரித்தது. கட்டிலில் அமர வைக்கப் போனவனைத் தடுத்தவளஂ ,

"கசகசன்னு இருக்கு குளிக்கணும்." என்க... மருத்துவமனையில் இருந்து வந்ததும் அவள் குளிப்பது வழக்கம் என்பதால் அவன் ஒன்றும் சொல்லவில்லை.

மாற்று உடை எடுத்துக் கொண்டு அவள் குளிக்கச் செல்ல... அவன் அவள் பின்னேயே வந்தான். அவள் பதற்றத்துடன் ,

"நீங்க எதுக்கு உள்ளே வர்றீங்க ?" என்று கேட்க... மனைவியைத் தொடர்ந்து தானும் குளியறைக்குள் வந்துவிட்டதை அப்போது தான் அவனும் உணர்ந்தான்.

"ஹி ஹி... சாரி..." என்று மன்னிப்பு கேட்டுவிட்டு வெளியேறியவன் பின்பு திரும்பி ,

"காலை நனைக்காம பார்த்துக்கோ..." என்க...

"பிரஹான்..." அவள் இடுப்பில் கை வைத்தபடி அவனை முறைக்க...

"சாரிங்க டாக்டரம்மா..." போலி பணிவுடன் அவன் மன்னிப்பு கேட்க... அவள் சிரித்தபடி கதவை சாற்றினாள்.

அவள் மீண்டும் அறைக்குள் வந்த போது விஷ்ணுபிரஹான் அங்கு இல்லை. கட்டிலில் அமர்ந்தவளுக்கு மீண்டும் மீண்டும் அன்றைய கூடலே நினைவுக்கு வந்ததில் அவளது தேகமெல்லாம் கூசி போனது. அவளது விழிகள் கலங்கி போனது. கணவனை எப்படி எதிர்கொள்வது ? என்று தெரியாது அவள் தவித்துப் போனாள்.

இரவு உணவை அறைக்கு எடுத்து வந்த விஷ்ணுபிரஹான் அவளிடம் உணவை நீட்டினான். தன்னை நிமிர்ந்து பார்த்த மனையாளின் விழிகள் கலங்கி இருப்பதைக் கண்டு தட்டை பக்கவாட்டு மேசையில் வைத்தவன் ,

"எதுக்குடி அழற ?" என்று உரிமையோடு கேட்க... அவளோ எதுவும் கூறாது முகத்தை மூடி கொண்டு அழுதாள்.

"ம்ப்ச் , அழாதே பேபி..." என்று அவளைச் சமாதானப்படுத்தியவன் அவளை ஆறுதலாய் அணைத்துக்

கொண்டான்.

அப்படியிருந்தும் விடாது தேம்பியவளின் முகத்தைத் தனது கரங்களில் தாங்கியவன் அவளது நெற்றியில் மென்மையாய் முத்தமிட்டான். பெண்ணவளின் அருகாமையில் அவனது உணர்வுகள் பேயாட்டம் போட்டது. ஒற்றை முத்தத்தில் அடங்கிவிடுமோ ஆணவனின் தாகம்! முகம் முழுவதும் மென்மையாய் இதழ் பதித்தவன் இறுதியில் அவளது இதழ்களில் வந்து இளைப்பாறினான். பூவிலிருந்து வண்டு தேன் எடுப்பது போல் அவன் அவளது இதழ் தேனை மெல்ல அருந்தினான். அத்தனை தாபத்திலும் , மோகத்திலும் ஆணவன் அவசரப்படவில்லை. அத்தனை நிதானம் , மென்மை அவனது செயலில்... மென்மையான பெண்ணவளுக்கு மென்மையையே பரிசாக அளித்தான்.

தாபம் மோகமாக உருவெடுக்கும் போது அவன் சட்டென்று அவளிடம் இருந்து விலகினான். இனியொரு தவறு நடக்க அவன் விரும்பவில்லை. அவனது விலகலில் அவள் புரியாது விழித்தாள். ' இத்தனை நேரம் அழுதுவிட்டு இப்போது விழிப்பதை பார். ' அவன் மனையாளை மனதிற்குள் செல்லமாக வைது கொண்டான்.

"நாளைக்குக் காலையில் உன் வீட்டுக்கு போகணும். ரெடியா இரு." என்று அவன் கூற... ஏனென்று அவள் கேட்கும் முன் அவன் ,

"சாப்பிடு..." என்று தட்டை எடுத்து அவளிடம் கொடுத்துவிட்டு எழுந்து சென்றிருந்தான். அவள் உணவை வெறித்தபடி அமர்ந்திருந்தாள்.

மறுநாள் காலையில் சுந்தரியிடம் சொல்லி கொண்டு இருவரும் அவளது வீட்டிற்குச் சென்றனர். இருவரும் ஜோடியாக வந்திருப்பதைக் கண்டு எல்லோரும் சந்தோசப்பட்டனர். அர்ஜூன் அவர்களை வரவேற்கவும் இல்லை... அவர்களிடம் பேசவும் இல்லை. முறைத்துக் கொண்டு அமர்ந்திருந்தான். பரத் தங்கையை மட்டும் வரவேற்றவன் மறந்தும் விஷ்ணுபிரஹான் பக்கம்

திரும்பவில்லை. ஸ்ரீராமும் , மூன்று பெண்கள் மட்டுமே இருவரையும் முகம் மலர வரவேற்றனர்.

"அண்ணா , எப்படி இருக்கேள் ?" என்று கேட்டபடி சகோதரனிடம் ஈஷி கொண்டிருந்த மனைவியைக் கண்டு பரத் முறைத்தான்.

' என்னமோ யுகம் யுகமா பிரிஞ்சிருந்த மாதிரி என்ன ஒரு உருகல்... ? மனசில் பாசமலர்கள்ன்னு நினைப்பு... ' அவன் மனதில் நக்கலடித்துக் கொண்டான்.

பரஸ்பர நலன் விசாரிப்பிற்குப் பிறகு அங்குச் சங்கடமான மௌனம் நிலவியது. விஷ்ணுபிரஹான் தான் அதை முதலில் கலைத்தது.

"நான் இங்கே எதுக்கு வந்திருக்கேன்னா..." அவன் சொல்லி முடிக்கும் முன் ,

"மறுபடியும் எங்க வீட்டுப் பொண்ணை எங்க கிட்ட ஒப்படைக்க வந்திருக்கியா ?" அர்ஜூன் நக்கலாய் கேட்டான். அதைக் கேட்டு விஷ்ணுபிரஹானின் முகம் கருத்துப் போனது.

"அப்பா..." என்று பேச போன மனைவியை விழிகளால் தடை செய்தவன் தானே பேச ஆரம்பித்தான்.

"அவள் உங்க பொண்ணு இல்லை மிஸ்டர். அர்ஜுன்... அவள் என் மனைவி..." விஷ்ணுபிரஹானின் குரலில் சற்றுப் பெருமை தொனித்தது.

"பார்டா , இது எப்போதிருந்து..." அர்ஜூன் அடங்குவதாய் இல்லை.

"ப்ச் , பேசாம இருங்கோன்னா..." கணவனை அடக்கிய அவந்திகா மருமகனிடம் ,

"அவரைக் கண்டுக்காதீங்க... நீங்க மேலே சொல்லுங்க..." என்க...

' ஹப்பாடி , சுப்ரீம் கோர்ட்டே நம்ம பக்கம் தான் இருக்குது. ' மனதில் நினைத்த விஷ்ணுபிரஹான் தான் நினைத்ததைப் பேச ஆரம்பித்தான்.

"நான் பேசுறதுக்கு முன்னாடி இதை எல்லாம் செக் பண்ணிக்கோங்க..." என்றவன் தான் கையோடு கொண்டு வந்திருந்த கோப்புகளை ஸ்ரீராமிடம் கொடுத்தான்.

"இதில் முக்கியமான பேப்பர்ஸ் மட்டும் இருக்கு. மற்ற விவரங்கள் எல்லாம் நான் உனக்கு மெயில் பண்ணி இருக்கேன்." அவன் ஸ்ரீராமிடம் கூறினான்.

"என்னது விஷ்ணா ?" ஸ்ரீராம் புரியாது கோப்புகளைப் பார்த்தான்.

"ஆராதனா என் பெயருக்கு மாற்றியமைத்த சொத்துக்கள் இது..."

விஷ்ணுபிரஹான் கூறியதும் அங்கு ஊசி விழுந்தால் கூடச் சத்தம் கேட்கும் அளவிற்கு அமைதி நிலவியது. ஆராதனா உடல் விறைக்க அமர்ந்திருந்தாள். அவளது மனதில் இனம் புரியாத பயம் எழுந்தது.

"சில மாதங்களுக்கு முன்னாடி நான் அவள் கிட்ட விவகாரத்து வாங்க பேப்பர்ஸ் கொடுக்கும் போதே இதுக்கும் சேர்த்து தான் பேப்பர்ஸ் கொடுத்தேன். ஆனா அவள்..." இதைச் சொல்லும் போதே அவனது குரல் கமறியது. ஆனாலும் சொல்லாமல் இருக்க முடியாது. ஆராதனா அன்றைய காலக் கட்ட துன்பத்தை இப்போது அனுபவித்தவளாய் வேதனையுடன் அமர்ந்திருந்தாள்.

"விவாகரத்துப் பேப்பரில் கையெழுத்து போட்டவள் சொத்துக்களை என் பெயரில் அப்படியே விட்டு விட்டு போய்விட்டாள். அதுக்கான காரணம் இப்போ வரை எனக்குத் தெரியலை." என்றவன் யோசனையுடன் தனது நெற்றியை நீவி விட்டுக் கொண்டான்.

"அது முடிந்த போன கதை. அதைப் பற்றி நான் பேச வரலை. அவளிடம் இருந்து பிரியணும்னு நினைச்சு தான் நான்

சொத்துக்களைக் கேட்டது." ஆராதனா அதிர்ந்து போய்க் கணவனைப் பார்த்தாள். அவனால் அவளது முகத்தைப் பார்க்க முடியவில்லை.

"ஆனால் ஆராதனா கேட்டதும் நீங்க சொத்துக்களைத் தூக்கி கொடுத்தது எனக்கு ஆச்சரியமா இருந்தது. அதே சமயம் அவள் அதை எல்லாம் என் பெயருக்கு எழுதி வச்சது நானே எதிர்பாராத ஒன்று. அந்த நேரம் நான் அவமானத்தில் கூனிக்குறுகி போயிட்டேன். அவளிடம் அதை மறுக்கவும் முடியலை. ஏத்துக்கவும் முடியலை. அதே சமயம் இதில் இருந்து தப்பிக்க நினைத்து தான் நான் தொழிலை கையில் எடுத்தது."

அவன் கூறும் போதே ஆராதனா அவனது கையைப் பிடித்து அழுத்தினாள். எங்கே கணவன் தங்களது அந்தரங்கத்தை அரங்கேற்றம் செய்துவிடுவானோ ? என்று அவள் பயந்தாள். அதைப் புரிந்தவனாய் அவளது கையை ஆறுதலாய் தட்டி கொடுத்தவன் ,

"இப்போ உங்க சொத்துக்களை நீங்க என்னிடம் கொடுத்ததை விடப் பல மடங்கு அதிகமா பெருக்கி இருக்கேன்." என்று அவன் கூறிய போது எல்லோரும் அவனை ஆச்சரியமாகப் பார்த்தனர்.

"இதை எல்லாம் விட முக்கியமான ஒன்று... உங்க சொத்தில் இருந்து நான் ஐஞ்சு பைசா எடுக்கலை. எனக்கான வேலையை நான் ஆன்லைனில் தேடிக்கிட்டேன். ஏற்கெனவே வேலை பார்த்துக்கிட்டு இருந்தவன் என்பதால் சுலபமா வேலை கிடைத்தது. அதில் தான் எனக்கான தேவைகளைப் பார்த்துக்கிட்டேன். இப்போ வரை அதைத் தான் செஞ்சிக்கிட்டு இருக்கேன்." என்றவனை இப்போது எல்லோரும் பிரமிப்பாய் பார்த்தனர். ஆராதனா கணவனைக் காதலாய் பார்த்திருந்தாள்.

"இதில் சில விசயங்களை நான் என் மனைவியிடம் மட்டுமே பகிர்ந்து கொள்ள முடியும். உங்க எல்லோர் கிட்டவும் சொல்ல முடியாது. உங்களுக்குச் சேர வேண்டியதை உங்க கிட்டேயே திருப்பிக் கொடுத்துட்டேன். அதே போல் எனக்கு

வேண்டியதை நானே எடுத்துக்கிட்டேன்." என்றவனது பார்வை மனைவியைக் காதலாய் வருடியது. அதே நேரம் அவளும் அவனைத் தான் பார்த்திருந்தாள்.

"அப்போ நான் கிளம்பறேன்." என்றவன் எழுந்தான். ஆராதனாவும் அவனுடன் எழுந்தாள். பிறந்த வீட்டில் கணவன் தன்னைக் கௌரவித்து விட்டது கண்டு அவள் மகிழ்ந்து போனாள்.

"மாப்பிள்ளை இருந்து சாப்பிட்டுட்டு போங்கோ." அவந்திகா அவனை வற்புறுத்த...

"நிச்சயம் ஒரு நாள் சாப்பிட வருவேன். ஆனால் அதற்கான நேரம் இப்போது இல்லை." என்றவன் மனைவியை அழைத்துக் கொண்டு சென்றுவிட்டான்.

"எல்லாம் உங்களால் வந்தது. அப்படியென்ன வறட்டுக் கௌரவம் வேண்டி கிடக்கு." அவந்திகா கோபமாய்க் கணவனைச் சாடிவிட்டு உள்ளே சென்று விட்டாள்.

ஸ்ரீராம் கோப்புகளைத் தந்தையிடம் கொடுத்துவிட்டு சென்றுவிட... கனிஷ்கா கர்வத்துடன் கணவனைப் பார்த்தாள்.

' சும்மாவே ஆடுவாள்... இப்போ இவ அண்ணங்காரன் வேற சலங்கையைக் கட்டி விட்டுட்டு போயிருக்கான். இவள் கையில் மாட்டுனோம் நாம கைமா தான். ' மனதில் நினைத்த பரத் அப்படியே எஸ்ஸாகி விட்டான்.

வீட்டிற்கு வந்ததும் தங்களது அறைக்குச் சென்ற விஷ்ணுபிரஹான் மனைவியிடம் ஒரு கவரை கொடுத்தான். அவள் புரியாது அவனைப் பார்த்தாள்.

"பிரிச்சு பாரு..." என்று அவன் அவளை ஊக்குவிக்க... அவள் அதைப் பிரிக்கும் போதே அவளது விழிகளில் லேசாகப் பயம் எட்டிப்பார்த்தது. அதை அவன் உணர்ந்தவனாய் அவளைப் பின்னால் இருந்து அணைத்தவன் அவளது தோள்பட்டையில் நாடி பதித்தபடி

,

"என் மேல் நம்பிக்கை இருக்கிறதா ?" என்று கேட்க... ஆமென்று வேகமாகத் தலையை ஆட்டியவள் கவரை பிரித்தாள்.

அதனுள் அவள் கையெழுத்து போட்ட காசோலை இருந்தது. அன்று விஷ்ணுபிரஹான் வைதேகியின் வளைகாப்பின் போது புடவை , நகை வாங்கிக் கொடுத்ததற்காக அவள் அவனிடம் கொடுத்த வெற்று காசோலை அது... அதில் விஷ்ணுபிரஹான் எழுதியிருந்ததைக் கண்டு அவளது விழிகள் சந்தோசத்தில் அகல விரிந்தது.

"என் காதல் பிழையே! என் பிழையைத் திருத்தி என்னைக் காதலிப்பாயா ?" விஷ்ணுபிரஹான் அவளது காதோரம் ரகசியமாய் முணுமுணுத்தான்.

திருத்தமாகும்...!!!

"ம்ஹூம்..."

விழிகள் கலங்க தன்னைப் பார்த்து மறுத்த மனைவியைக் கண்ட விஷ்ணுபிரஹான் முதலில் திகைத்தாலும் பின்பு அவளது இதழ்களில் பூத்த புன்னகையைக் கண்டு கொண்டவனாய் ஆராதனாவை அப்படியே பின்னோடு இருந்தபடி தூக்கி கொண்டவன் கட்டிலில் தான் அமர்ந்து கொண்டு அவளைத் தனது மடியில் அமர்த்திக் கொண்டான். பின்பு அவளது முகத்தைத் தன்புறமாய்த் திருப்பி அவளது விழிகளோடு விழி கலந்தவன் ,

"ஏய் , ப்ராடு... பொய் கூட ஒழுங்கா சொல்ல தெரியலை." என்று கேட்டு வாய்விட்டுச் சிரித்தான்.

கணவனது சிரிப்பை காதலோடு பார்த்திருந்தவள் அவனது முகத்தைத் தனது கரங்களில் தாங்கி கொண்டாள். அவளது செயலில் அவனது சிரிப்பு நின்றது. அவளது விழிகளில் வழிந்த காதலில் அவன் வாயடைத்துப் போனான்.

"காதலிச்சேன்... காதலிக்கின்றேன்... காதலிப்பேன்... என் உயிர் உள்ளவரை... இல்லையில்லை , என் உயிர் போனாலும் என் ஆன்மாவும் உங்களைக் காதலிக்கும். எத்தனை ஜென்மம் எடுத்தாலும் நீங்க தான் என் கணவனாக வேண்டும்." என்று காதல் மிகக் கூற...

"பேபி..." என்றவனது குரல் குழைந்தே போனது.

"கட்டாயம் பேபி... இந்த ஜென்மம் மட்டுமல்ல இனிவரும் ஜென்மங்களில் நீ தான் என் காதல் மனைவியா வரணும்." அவன் அழகாய் தனது மனதினை அவளுக்கு உணர்த்தினான். அதில் மகிழ்ந்தவள் தனது இதழை அவனது நெற்றியில் பதித்தாள். அவன் தலைகுனிந்தபடி அவளது முத்தத்தைப் பெற்றுக் கொண்டான்.

"உங்க மேல் காதல் இல்லாமலா நீங்க கேட்டதும் என் வாழ்க்கையையே உங்களுக்காக விட்டு கொடுத்துண்டு

வந்தேனா ?" அவனை உறுத்தி கொண்டிருக்கும் கேள்விக்கான விடையை அவள் கூறியது கேட்டு அவன் திகைத்து போய் அவளைப் பார்த்தான்.

"பேபி... நான்... வந்து... ஹனி... அர்ச்சனா..." அவனால் கோர்வையாய் பேச முடியவில்லை. அவனுள் ஏகப்பட்ட தடுமாற்றம்.

"வலிக்குது அத்து... ப்ளீஸ்..." சில விசயங்களைப் பெண்ணவள் கடக்க நினைத்தாலும் அவளால் அதைக் கடக்க இயலவில்லையோ! அவள் கூறியதை கேட்டு அவன் வலியோடு அமைதியாகி போனான். அவனது விழிகளில் பிரதிபலித்த வலியை கண்டு கொண்டவளா ,

"நாம நம்ம ரெண்டு பேரை பத்தியும் பேசுவோம். நமக்கு இடையில் வேறு யாரும் வர வேண்டாம்." என்று கூற... அவன் மௌனமாய்த் தலையசைத்தான்.

"என் அப்பா உங்க ஃபோட்டோவை காட்டிய நாளில் இருந்து நீங்க இங்கே இருக்கேள்..." என்றவள் தனது இதயத்தைச் சுட்டிக்காட்ட... அதைக் கேட்டு அவனது விழிகளில் இருந்த வலி மறைவதை கண்டு அவள் நிம்மதியுற்றாள்.

"படிக்கிற காலத்தில் எத்தனையோ ஆண்களைக் கடந்து வந்திருக்கேன். நிறையப் பேர் அவா காதலை என் கிட்ட சொன்னப்போ கூடப் ' பிடிக்கலை ' ன்னு மறுத்து இருக்கேன். ஏன்னா , அப்பா , அம்மா சொல்ற பையனை தான் கல்யாணம் பண்ணணும்ன்னு உறுதியா இருந்தேன். என்னை நல்லா வளர்த்த பெத்தவாளுக்கு நான் செய்யும் நன்றிக்கடனா தான் நான் என் கல்யாணத்தை நினைச்சேன். அதனால் தான் என்னவோ அப்பா , அம்மா உங்க ஃபோட்டோவை காட்டி கல்யாணத்துக்குக் கேட்டதும் சரின்னு சொல்லிண்டேன். நீங்க எப்படிப்பட்டவரா ? உங்க குடும்பச் சூழ்நிலை என்ன ? வசதி , படிப்பு... இப்படி எதுவுமே நேக்குத் தெரியாது. அதை நான் அப்பா கிட்ட கேட்கவும் இல்லை. ஏன்னு தெரியலை , எதுக்குன்னு தெரியலை... பார்த்த நொடி நேக்கு உங்களை ரொம்பப் பிடிச்சு போச்சு. அந்த நொடி நீங்க தான் என்னோட

வாழ்க்கைன்னு முடிவு பண்ணிண்டேன். காதல்ன்னா என்னன்னு தெரியாத நான் காதலில் விழுந்தேன். நம்ம கல்யாணம் நடந்தது. எல்லாப் பெண்களையும் மாதிரி தான் பல கனவுகளோட வந்தேன்." என்றவள் நிறுத்திவிட்டு அமைதியானாள்.

மனைவியின் உணர்வுகளைப் புரிந்தவனாய் விஷ்ணுபிரஹான் தனது அணைப்பினை இன்னமும் இறுக்கினான்.

"சாரி பேபி..." அவனது உதடுகள் முணுமுணுத்தது.

"ப்ச் , மன்னிப்பு கேட்டா நான் பேச மாட்டேன்." அவள் கண்டிப்புடன் கூற...

"இல்லை கேட்கலை..." என்றவனது முகம் தெளிந்திருந்தது. மனைவியான அவளிடம் கூட அவன் மன்னிப்பு கேட்பதை அவள் விரும்பவில்லை என்பதை உணர்ந்தவன் மகிழ்ந்து தான் போனான்.

"யுஎஸ்ல ஐஞ்சு வருசம் இருந்தப்போ கூட உங்க விலகலை நான் சரியா கவனிக்கலை. கவனிச்சு இருக்கணுமோன்னு இப்போ தோணுது. நீங்க என் படிப்புக்காக விலகி இருக்கிறதா சொன்னதும் நானும் அதைச் சரின்னு எடுத்துண்டேன். படிப்புன்னு வந்துட்டா என் முழுக் கவனமும் அதில் தான் இருக்கும். மருத்துவம் மற்ற படிப்பு மாதிரியில்லை... அதைவிட மருத்துவம் என்னுடைய உயிர். அதனால் தான் எனது முழுக் கவனமும் படிப்பில் இருந்தது. அதுக்கு ஏற்றார் போன்று நீங்களும் எனக்கான ஸ்பேஸ் கொடுத்து விலகி இருந்தேள். அது உங்க பெருந்தன்மை , கண்ணியம்ன்னு நினைச்சு நான் சந்தோசப்பட்டேன். ஆனா அது இல்லைன்னு தெரிஞ்சப்போ..." அவளது விழிகள் அன்றைய நாட்களில் வேதனையை நினைத்துக் கலங்கியது.

"நீங்க டிவோர்ஸ் பேப்பர்சை என் முன் நீட்டும் போது நான் அப்படியே உயிரோடு செத்துப் போயிண்டேன். நான் என்ன தப்பு பண்ணினேன்னு நேக்கு ஏன் இந்தத் தண்டனை ?

ஒருவேளை படிப்பு , படிப்புன்னு இருந்ததால் இப்படிப் பண்ணிட்டீங்களோன்னு கூட நினைச்சு என்னை நானே வெறுத்தேன். வேற பொண்ணைக் கல்யாணம் பண்ணிக்கப் போறேன்னு சொன்னேள்... உங்களுக்கு அந்தப் பொண்ணுடனான பழக்கம் இப்போது ஏற்பட்டதா ? இல்லை முதலில் இருந்தா ? ஏகப்பட்ட கேள்விகள் எனக்குள்... எந்தவொரு விடையையும் யோசிக்க முடியாதபடி எதிர்காலம் இருண்டு போயிருந்தது. அடுத்து என்ன செய்யணும்ன்னு மூளை வேலை செய்ய மறுத்தது. எதையும் யோசிக்க முடியலை."

"நமக்குப் பிடிச்சவங்க நம்மை வேண்டாம்ன்னு சொன்னா அந்த நொடி நமக்கு என்ன தோணும் ? உலகமே வெறுத்து போகும் இல்லையா ? அப்படித்தான் நான் இருந்தேன். எதுவுமே வேண்டாம்ன்னு தோணியது. நீங்க உட்பட... அப்போ கூட அம்மா , அப்பா , அண்ணன்ங்க கிட்ட இந்த விசயத்தைச் சொல்லணும்ன்னு நான் நினைக்கலை. சொன்னால் மட்டும் எதுவும் மாறிட போகுதா ? இல்லையே... அதனால் தான் மனதை திடப்படுத்திண்டு நீங்க கொடுத்த பேப்பர்சில் சைன் பண்ணினேன். அதோடு இருந்த சொத்துப் பத்திரங்களைப் பார்த்து எனக்குச் சிரிப்பு தான் வந்தது. வாழ்க்கையையே விட்டு கொடுத்தாச்சு... இந்தச் சொத்தை வச்சு என்ன பண்றதுன்னு தான் நான் அதை எடுக்கலை... வேண்டாம் , எதுவும் வேண்டாம்ன்னு மனசு வெறுத்து போய் எல்லாத்தையும் விட்டுண்டு என் பிரெண்ட்டோட அப்பார்ட்மெண்ட்க்கு போயிட்டேன்."

"நீங்க கூடக் கேட்டீங்களே... மனசில் காதல் இருந்திருந்தால் உங்க கிட்ட சண்டை போட்டு இருப்பேன்னு... நான் என்னன்னு சண்டை போடுறது ? என்னை விட்டுண்டு வேற ஒருத்தி கூட ஏன் போனீங்கன்னா ? இல்லை என் கிட்ட என்ன குறைன்னா ? நிச்சயம் ஏதோ ஒரு குறை என் கிட்ட இருக்குன்னு நான் எனக்குள் கூனிக்குறுகி போயிட்டேன். ஐஞ்சு வருசமா நான் உங்களைப் பாதிக்கலை. அப்படி இருக்கும் போது நான் இந்தக் கேள்வி கேட்டு உங்களை என் கூடத் தக்க வச்சுக்க விரும்பலை.

அது கேவலம். என்னை ரொம்பக் கீழா நினைச்சேன். என்னோட அழகு , படிப்பு எல்லாத்தையும் வெறுத்தேன். என்னையவே தாழ்வு மனப்பான்மை கொண்டு வெறுத்தேன்." தன்னைப் போலவே மனைவி நினைத்திருந்ததைக் கண்டு அவன் வேதனை கொண்டான்.

"அப்படி எல்லாம் இல்லை பேபி... எல்லாப் பெண்களையும் விட நீ அழகு... உன்னுடைய மனசு அதைவிட அழகு. நான் தான் அதைப் புரிஞ்சிக்காம... எனக்கு அந்த நேரம்..." அவன் மேலே பேசும் முன் அவள் அவனது வாயை தன் கை கொண்டு மூடினாள்.

"வேண்டாம்... ப்ளீஸ்..." என்று இறைஞ்சியவளின் கையில் தனது உதட்டினை பதித்தவன் அவளது கையை எடுத்து தனது கையில் பொத்தி வைத்துக் கொண்டான்.

"என்னோட கடந்த காலம் பத்தி நான் பேசலை... ஆனா நம்மைப் பத்தி நாம பேசலாம் இல்லையா ?" அவன் கூறியதற்கு அவள் சம்மதமாய்த் தலையசைத்தாள்.

"காதல் தோல்வியில் இரண்டு வருசமா கல்யாணமே வேண்டாம்ன்னு தான் நான் இருந்தேன். அப்பா திடீர்ன்னு உன் ஃபோட்டோவை காட்டி இவள் தான் உனக்கு மனைவியா வர போகிறவள்ன்னு சொன்னார். நான் முடியாதுன்னு சொன்னேன். ஆனா அதுக்கு அவர் நான் உன்னைக் கல்யாணம் பண்ணலைன்னா அவர் தன் உயிரை விட்டுவிடுவதாகச் சொல்லி என்னைப் பயமுறுத்தினார். எனக்கு வேறுவழி தெரியாம தான் ஸ்ரீராம் கிட்ட சொன்னேன். அவனும் சரின்னு சரின்னு சொல்லிட்டு கடைசி நிமிஷம் வரை இந்தக் கல்யாணத்தை நிறுத்தவே இல்லை."

"அண்ணா மேல் எந்தத் தப்பும் இல்லை. அவங்க நினைச்சது வேற..." என்றவள் ஸ்ரீராமின் மனநிலையை எடுத்துரைத்தாள். விஷ்ணுபிரஹானின் நல்ல மனதிற்காகத் தான் ஸ்ரீராம் அப்படிச் செய்ததாக அவள் கூறினாள்.

"இது தெரியாம அவனையும் போட்டு படுத்திட்டேனோ ?" அவன் கவலையுடன் கேட்டான்.

"ம் , அண்ணா தான் ரொம்பப் பாவம்..."

"நீயும் தான்..." என்றவன் மேலே சொல்லலானான்.

"கல்யாணத்துக்குப் பிறகும் உன் கிட்ட மனசு விட்டு பேச முடியலை. உன்னோடு ஒன்ற முடியலை. இந்த லட்சணத்தில் நான் எப்படி என் மனசை உன் கிட்ட சொல்வது ? இந்தக் கல்யாணத்துக்கான அர்த்தம் எனக்கு என்னன்னு புரியலை. உன்னை என்ன செய்றதும்ன்னு தெரியலை. அதனால் தான் உன்னைப் படின்னு சொல்லிட்டு நான் ஒதுங்கிட்டேன். நீயும் நான் நினைச்ச மாதிரி அமைதியா ஒதுங்கிட்ட. பார்வையால் , செயலால் கூட நீ என் கவனத்தை ஈர்க்க முயற்சிக்கலை."

"நீங்க என் ஆம்படையா தான். இருந்தாலும் ஒரு பொண்ணு தானா வந்து... இதெல்லாம் எப்படி ?" அவளது முகம் வெட்கத்தில் சிவந்தது. அவளது வெட்கத்தை ரசனையுடன் பார்த்தவன் ,

"பொண்ணு தானா வர கூடாதுன்னு ஏதாவது சட்டம் இருக்கா ?" என்று அவன் கண்சிமிட்ட...

"அப்படி நான் வந்திருந்தால் உங்க மனநிலை என்னவா இருந்திருக்கும் ?" அவள் கேட்டதும் அவன் திகைத்துப் போனான்.

நிச்சயம் அன்றைய மனநிலையில் அவன் அவளது மனம் வருந்தும்படி ஏதாவது பேசியிருப்பான் தான்.

"இப்போ புரியுதா ?" என்றவளை கண்டு அவன் புரிந்தது என்று தலையசைத்தான்.

"நமக்குக் கல்யாணமாகி ஐஞ்சு வருசம் ஓடி போயிருச்சு... நீயும் உன் படிப்பை முடிச்சிட்ட. அடுத்து என்ன செய்றதுன்னு யோசிச்சுட்டு இருந்தேன். உன் கிட்ட சொல்லிட்டு விலகி போயிரலாமான்னு யோசிச்சேன். ஐயம்

சாரி இதைச் சொல்றதுக்கு. அப்போ நீ என்னைப் பாதிக்கலை பேபி. உன் கூட வாழணும்ன்னு எனக்கு எண்ணம் வந்ததே இல்லை. இந்த மாதிரி சூழ்நிலையில் தான் அர்ச்சனாவை திரும்பப் பார்த்தேன். விஜய் அவளை அடிச்சு வீட்டை விட்டு விரட்டினப்போ அவள் என்னைத் தான் கூப்பிட்டாள். அவளுக்குன்னு யாரும் இல்லை. அவளை என் கூடக் கூட்டிட்டு வந்தப்போ கூட நான் அவளைக் கல்யாணம் பண்ணிக்கணும் , அவளுக்கு வாழ்க்கை தரணும்ன்னு நினைக்கலை. ஏன்னா அப்போ அர்ச்சனா என் மனசில் இல்லை. அவளை விஜயோட மனைவியா தான் பார்த்தேன். என்னைக்கு அவள் கழுத்தில் தாலி ஏறிச்சோ அப்பவே என் மனசில் இருந்த அவளைப் பத்தின எண்ணங்களை அழிச்சிட்டேன். என்னை நம்புறியா ?" பாவமாகக் கேட்ட கணவனை ஆதுரத்துடன் பார்த்தவள் ஆமென்று தலையசைத்தாள்.

"அர்ச்சனா , அவள் குழந்தைகளை நல்லா பார்த்துக்கணும்ங்கிற எண்ணம் தான் எனக்கு இருந்துச்சு... மற்றபடி வேறு எந்தக் கெட்ட எண்ணமும் இல்லை. பற்றே இல்லாமல் இருந்த என் வாழ்க்கையில் பற்றுகோளாக அர்ச்சனா மற்றும் அவளது குழந்தைகள் வந்தாங்க. இந்த உறவுக்கு உலகம் என்ன பெயர் வச்சாலும் என்னைப் பொறுத்தவரையில் அக்கறை மட்டும் தான் இருந்தது. தாமரை இலை தண்ணி போலிருந்த நம்ம திருமணப் பந்தத்தை முடிவுக்குக் கொண்டு வர நான் நினைச்சேன். இனியாவது நீ உன் வாழ்க்கையைப் பார்த்துக்குவேன்னு நினைச்சு தான் நான் இதைச் செய்தது. என்னால் உனக்கு எந்தப் பிரயோஜனமும் கிடையாது. அன்றைய மனநிலையில் என்னால் உன்னை மனைவியா ஏத்துக்க முடியலை. அதனால் தான் நான் விவாகரத்து கேட்டது. சும்மா கேட்டா நீ கொடுக்க மாட்ட... அதான் அர்ச்சனாவை கல்யாணம் பண்ணிக்கப் போறேன்னு சொன்னேன். அப்படியாவது நீ உன் வாழ்க்கையைப் பார்த்துக்க மாட்டியாங்கிற எண்ணம் தான். ஆனா நீ..." அவனது குரல் கமறியது.

"வாழ்க்கையையும் விட்டு கொடுத்தா , சொத்துக்களையும் விட்டு கொடுத்த பாரு. அந்த நிமிசம் ஆடி போயிட்டேன். என்ன பொண்ணுடா இவள்ன்னு...! அந்தக் கணம் என் மனசுக்குள்ள ஒரு வலி எழுந்தது என்னவோ உண்மை. அதே நேரம் ஒரு கோபம். இத்தனை வருசத்தில் நான் உன்னைப் பாதிக்கலையான்னு. என்ன , ஏதுன்னு கூடக் கேட்காம டிவோர்ஸ் பேப்பரில் சைன் போட்டுட்டு போயிட்டாளேன்னு. அந்த எண்ணமே என்னுள் வெறியை கிளப்புச்சு. ஏன்னு யோசிச்சு இருக்கணும் ? யோசிக்காதது தான் என் தப்பு தான். அதன் விளைவா , நான் உன்னைப் படுத்தி எடுத்தது." என்று கூறி மெல்ல சிரித்தவன் ,

"விஜய் அர்ச்சனா கழுத்தில் தாலி கட்டும் போது எனக்குள் வேதனை , வலி தான் எழுந்துச்சு. அவள் எங்கிருந்தாலும் நல்லா இருக்கணும்ன்னு என்கிற எண்ணம் தான் இருந்துச்சு. ஆனா சிவேஷ் கூட உனக்குக் கல்யாணம் பேசினப்போ அப்படியொரு ஆத்திரம் , கோபம் வந்துச்சு. என் பொண்டாட்டியை கல்யாணம் பண்ண இவன் யாருன்னு... அப்போ ஆரம்பிச்சது உன் மீதான என்னுடைய உரிமை போராட்டம். உன்னை என்னுடன் தக்க வச்சுக் கொள்ள இன்னும் வெறித்தனமா போராட ஆரம்பிச்சேன். உன் மனசில் நான் இருந்தே ஆகணும்ன்னு நினைச்சேன். அதைச் செயல்படுத்த தான் நான் உன்னைக் கடத்திட்டுப் போனது. ஆனா அங்கு நடந்தது என்னவோ வேறு. நீ என் மேலிருந்த நம்பிக்கையை இழந்து மயங்கி விழுந்த பாரு... அப்போ தான் என் மீதான உனது காதலை உணர்ந்தேன். அதே மாதிரி உன் மீதான என் காதலையும் உணர்ந்தேன்." என்றவன் அவளது விழிகளை நோக்கி யாசித்தபடி ,

"ஒரு முறை காதலில் அடிப்பட்டவன் நான். அதனால் தான் என் மனசில் நீ இருப்பதைக் கூட என்னால் உணர முடியலை. நம்ம வாழ்க்கையில் நிகழ்ந்த தவறு முழுவதும் என் மேல் தான். இதில் உன் தவறு ஒண்ணுமே இல்லை. நீ தான் என்னை மன்னிக்க வேண்டும் பேபி." என்று அவன் மீண்டும் மன்னிப்பை வேண்டினான்.

"மன்னிப்பு கேட்க கூடாதுன்னு சொன்னேனோ இல்லையா ? நீங்க ஒரு தப்புப் பண்ணினால் நானும் ஒரு தப்பு பண்ணியிருக்கேன்." என்றவளது குரல் உடைந்து போனது. அவன் கேள்வியாய் அவளைப் பார்த்தான்.

"நீங்க கட்டிய தாலியை நான் உங்க கிட்ட கழட்டி கொடுத்தது தப்பு தானே. சிவேஷை கல்யாணம் பண்ண மணமேடை வரை ஏறியது என்னுடைய தப்பு தானே." சொல்லும் போதே அவளுடைய விழிகளில் இருந்து விழிநீர் வடிந்தது.

"உன் மேல் எந்தத் தப்பும் இல்லை. விவாகரத்து வாங்கின பெண்கள் எல்லாம் வேறு கல்யாணம் பண்ணிக்கிறது இல்லையா ? அது போல் தான் உன் வீட்டில் உனக்குக் கல்யாணம் பண்ணி வைக்க நினைச்சது. நீயும் உன் வீட்டாருக்காகச் சம்மதிச்ச. அவ்வளவு தான். இதில் உன் தப்பு எங்கே இருந்து வந்தது ?"

"ஆனா நமக்குத் தான் விவாகரத்து ஆகலையே..." அவள் தேம்பினாள்.

"முதலில் எனக்கு இந்த விசயம் தெரியாது. உன்னைத் திரும்பக் கல்யாணம் பண்ணிக்க நினைச்சு வக்கீல் கிட்ட ஆலோசனை நடத்தினேன். அப்போ தான் அவர் சொன்னார்... இந்திய சட்டப்படி விவாகரத்து நடக்கலன்னு. அப்போ தான் எனக்கு நிம்மதியா இருந்தது. இல்லைன்னா மீண்டும் உன்னைக் கடத்தி , தாலி கட்டி..." என்று கூறியபடி வாய்விட்டு சிரித்தவன் ,

"நல்லவேளை தப்பிச்சேன். அதுக்குப் பிறகு என் பொண்டாட்டிக்காகப் போராடுறது ரொம்பச் சுலபமா போச்சு..." என்க...

"ஆனா உங்கப்பா உன்னை வெறுத்திருவாருன்னு நான் நினைச்சு கூடப் பார்க்கலை. என்னால் உனக்குத் தான் கஷ்டம்." அவன் மீண்டும் வருந்த...

"பின்னே யாரு தான் நான் செஞ்சதை ஏத்துக்குவாங்க. நீங்க வாங்கிக் கொடுத்த புடவை , நகைகளை எல்லாம்

போட்டுண்டு மணமேடைக்கு வந்தது கொஞ்சம் ஓவர் தானே. ஆனா நேக்கு வேறுவழி தெரியலை. மறுபடியும் அப்பா , அண்ணன்ங்க உங்களை அடிச்சு போட்டுட்டாங்கன்னா... அதான் வெளியில் எதையும் சொல்ல முடியாம தவிச்சேன்."

"எதுக்குத் தவிக்கணும் பேபி... ? தொல்லை விட்டுச்சுன்னு விட வேண்டியது தானே..." அவன் கேட்டதும் அவளது விழிகளில் மீண்டும் நீர் நிரம்பியது.

"இப்போ புரியுதா ? உன் மனசில் நான் எந்தளவுக்கு ஆழமா பதிஞ்சு இருக்கேன்னு... அன்னைக்கு நான் கல்யாணத்தைத் தடுத்து நிறுத்தாம போயிருந்தால் என்னவாகிருக்கும் ?"

என்னவாகிருக்கும் ? அவளால் அதை நினைத்து கூடப் பார்க்க முடியவில்லை. எவ்வளவு பெரிய தவறு செய்ய இருந்திருக்கிறாள். கணவனாவது ஒரு பெண்ணிற்கு அடைக்கலம் தான் கொடுத்தான். ஆனால் அவள் செய்தது... ? அவளால் தன்னையே மன்னிக்க முடியவில்லை.

"ரொம்பப் பெரிய தப்புப் பண்ணிண்டேன் இல்லையா அத்து..." அவளது முகம் வேதனையில் கசங்கியது.

அப்போது தான் அவன் அவள் தன்னை ' அத்தை ' என்று அழைப்பதை கவனித்தான்.

"இதென்னடி ' அத்தை '... புதுசா இருக்கு..."

"அத்தானுக்குச் சுருக்கம் அத்து. உங்களுக்காக உங்க பாசை , உங்க பழக்கவழக்கம் கத்துண்டாலும் உங்களைக் கூப்பிடும் முறையை மாத்த தோணலை. அதான் மனசுக்குள் அத்துன்னு உங்களைக் கூப்பிட பழகிண்டேன்."

"அத்து..." ஒரு முறை தனக்குள் சொல்லி பார்த்து கொண்டவன் ,

"நல்லா கிக்கா தான் இருக்கு..." என்று மயக்கத்துடன் கூறினான்.

அவள் வெட்கத்துடன் அவனது நெஞ்சில் முகம் புதைத்து கொண்டாள். அவனும் சிரித்தபடி அவளை அணைத்துக் கொண்டான். எத்தகைய சொர்க்கத்தை இழக்க நினைத்திருக்கிறான். காதலற்று வறண்ட பாலை நிலமாய் இருந்தவன் மனதில் காதல் மழை மேகமாய்ப் பெரும் மழை பெய்து குளிர செய்த தன்னவளை நினைத்து அவனது மனம் குளிர்ந்து போனது.

"பேபி..."

"ம்..." அவள் விழி திறவாமல் கூற...

"நீ என்ன தான் சமாதானம் சொன்னாலும் நான் செஞ்சது தப்பு தானே..." அவனது குரல் வேதனையுடன் வந்தது.

அர்ச்சனாவிற்காக அவன் தன்னை விட்டு போனதை அவளால் ஏற்றுக் கொள்ள முடியவில்லை தான். அர்ச்சனா முன் தான் தாழ்ந்து போனதை கண்டு அவளுக்கு வேதனை இருக்கிறது தான். அதற்காகக் கணவனைச் சந்தேகப்பட முடியவில்லை. அவனை வெறுக்க முடியவில்லை. தெரியாது தவறு செய்துவிட்டுத் தாயிடம் மன்னிப்பு கேட்கும் சிறு மழலை போன்றே கணவன் அவளது கண்ணுக்குத் தெரிந்தான். பெண்களுக்கே உரிய தாய்மை கணவனை மன்னிக்கச் சொல்லியதோ!

"தப்பு நம்ம ரெண்டு பேர் மேலும் இருக்கு. முடிஞ்சு போனதை மறந்திருங்கோ... இனி நடப்பது நல்லதாக இருக்கட்டும்." என்ற போதும் அவனது முகம் தெளியவில்லை.

"நாம ரெண்டு பேரும் கணவனஂ , மனைவி... ஐஞ்சு வருசமா கல்யாணம் பண்ணி காதலிச்சிண்டு இருந்தோம். இடையில் கொஞ்சம் மாசம் நமக்குள் சின்ன ஊடல்... அதுக்குப் பிறகு ஊடல் மறைஞ்சு பழையபடி காதல் வந்திருச்சு. இது தான் நம்ம காதல் கதை. கண்டதையும்

யோசிக்காம இதை மட்டும் மனசில் வச்சுக்கோங்கோ. மற் , இன்னொன்னு சொல்லவா... நான் எந்தக் கேள்வியும் கேட்காம டிவோர்ஸ் பேப்பரில் சைன் போட்டுண்டு போனதால் மட்டும் நீங்க என்னைப் பத்தி யோசிக்கலை..."

"ஆமா , எல்லாச் சொத்துக்களையும் என் கிட்டேயே கொடுத்துட்டு போனதை நான் கொஞ்சமும் எதிர்பார்க்கலை. உன்னோட தன்னலமற்ற அன்பை நினைச்சு நான் அசந்து போயிட்டேன்."

"நீங்க மட்டும் என்ன ? கிடைச்சது சான்சுன்னு அத்தனை சொத்துகளையும் சுருட்டிண்டு ஓடிட்டேளா ? இல்லையே... அதைத் திருப்பி , அதுவும் பல மடங்கு அதிகமா திருப்பிக் கொடுத்து என் பிறந்த வீட்டில் என்னைக் கௌரவப்படுத்திட்டேளே. எல்லோரும் நான் செஞ்சது தப்பு , முட்டாள்த்தனம்ன்னு நினைச்சிருப்பா. இல்லை இல்லை... அது அவள் என் மீது வைத்த காதல் , அதனால் வந்த நம்பிக்கை இதுன்னு எல்லோருக்கும் சொல்லாமல் சொல்லிட்டேள். இதைவிட நேக்கு என்ன வேணும் ?" என்றவளுக்குக் கண்கள் கரித்தது.

"உன்னிடம் இருந்து விலகி போக நினைச்சு தான் நான் உன் கிட்ட சொத்துக்கள் கேட்டது. நீ கேட்டதும் உன் வீட்டில் பூகம்பம் வெடிக்கும்ன்னு நினைச்சேன். ஆனா அப்படி எதுவும் நடக்கலை. என்னை நம்பி என் பெயரில் நீ சொத்துக்களை எழுதி வச்சது நான் கொஞ்சமும் எதிர்பாராதது. அதனால் தான் நான் அதைப் பாதுகாத்தது. என்றைக்காவது ஒரு நாள் அதை எல்லாம் உன் கிட்ட திருப்பிக் கொடுக்கணும்ன்னு நினைச்சிருந்தேன்."

"இது தான் நீங்க... நீங்க ரொம்ப நல்லவர். கூடவே இருக்கும் என்னிடம் கூடக் கண்ணியம் தான் காத்தேள். நிச்சயம் இடைப்பட்ட ஐஞ்சு வருடங்களில் என்னை அறியாமல் நான் ஏதோ ஒரு விதத்தில் உங்களைப் பாதிச்சு இருக்கலாம். அதனால் தான் நான் விலகி போனதும் நீங்க கோபப்பட்டு இருக்கேள்."

"மம் , இருக்கலாம் தான்... எப்பவும் நீ..." என்றவன் அவள் தினமும் காலையில் பால்கனியில் அமர்ந்து படிப்பதை ஞாபகப்படுத்திக் கூறினான்.

"அச்சோ நீங்க பார்த்தேளா ?" யார் கவனிக்கப் போகிறார்களம் ? என்கிற நினைப்பில் அவள் அணிந்திருந்த உடைகள் எல்லாம் சற்றுக் கவர்ச்சியாகத் தான் இருக்கும்.

"தினமும் காலையில் அம்மையார் தரிசனம் பார்த்துவிட்டு தான் அந்த நாளே எனக்குத் தொடங்கும்." என்றான் அவன் கண்சிமிட்டியபடி...

"நான்... உங்களைக் கவரணும்ன்னு..." மேலே சொல்ல முடியாது அவளது விழிகள் கலங்கி போனது.

"ப்ச்... அப்படின்னு நான் சொன்னேன்னா... இல்லையே... நீ இயல்பா தான் இருந்த..." என்று அவன் அவளைச் சமாதானப்படுத்தினான்.

"படிப்பர , படிப்புன்னு இருந்துண்டு உங்களைச் சரியா கவனிக்காம போயிட்டேனோன்னு வருத்தமா இருக்குன்னா."

"நீ கவனிச்சு இருந்தாலும் நான் விலகி தான் போயிருப்பேன். அது அப்போ... இப்போ இல்லை. இதை நீ தெளிவா புரிஞ்சுக்கணும் பேபி..."

"மம் , ம்..."

"எல்லாம் சரி... என் மேல் செம காண்டுல இருந்தியே. எப்படி உன் மனசு மாறிச்சர ?"

"அர்ச்சனாவோட குழந்தைகளுக்குத் தேவைப்பட்டா இன்சியல் கொடுப்பேன்னு சொன்னேள் இல்லையா... அப்போ கொஞ்சம் வருத்தமா தான் இருந்துச்சு..."

"அம்மாவா நீ இருக்கும் பட்சத்தில்... இதை நான் வெளியில் சொல்லலை. நீயா இந்தச் சந்தேகத்தில் இருந்து வெளியில் வரணும்ன்னு நினைச்சேன். அதைவிட என்னோட கடந்த

காலத்தைப் பத்தி உன் கிட்ட சொல்ல எனக்குப் பயம். ஆனா என்ன நடந்தாலும் பரவாயில்லை இன்னைக்குப் பேசியே ஆகணும்ன்னு தான் நான் உன் கிட்ட பேச வந்தது." என்றவனை நிமிர்ந்து பார்த்தவளின் விழிகள் பளபளத்தது.

"அத்து..." என்றபடி அவனது கன்னத்தில் முத்தமிட்டாள்.

"போதாதே..." அவன் கண்சிமிட்டி கேலி செய்ய...

"எல்லாம் போதும்..." என்றவள் மேலே பேச துவங்கினாள்.

"அதுக்குப் பிறகு அர்ச்சனாவுக்கு ஸ்கேன் பார்க்க வந்தப்போ தான் உண்மை விளங்கியது. நீங்க எப்போதுமே ஸ்கேனிங் ரூமுக்கு வர மாட்டேள்... ஒன்லி செக்கப் பண்ணும் போது மட்டும் தான் உடன் இருப்பேள். அந்நியோன்யமாய் வாழ்றவங்க அப்படி நடந்துக்க மாட்டா. அந்த இடத்தில் சந்தேகம் வந்து தான் நான் உங்களைக் கூப்பிட்டது. நீங்க என்னடான்னா குழந்தைன்னு சொன்னதும் என் வயித்தில் கை வைக்கிறேள். நான் திகைச்சுப் போயிண்டேன். அதே சமயம் சந்தோசமா இருந்தது. உங்களுக்குக் குழந்தைன்னு சொன்னதும் நான் தான் நினைவில் வந்தேன். அர்ச்சனா இல்லைன்னு..." என்றவள் அவனைப் பார்த்தா ,

"இதை நான் சொல்றேன்னு என்னை வெறுத்துட கூடாது." என்று கூற...

"உன்னை வெறுப்பதா ? ம்ஹூம் , இந்த ஜென்மத்தில் அது இயலாது." அவன் உறுதியாய் மறுத்தான்.

"அர்ச்சனா தான் முக்கியம்ன்னு என்னை விட்டுட்டு நீங்க போனப்போ இருந்த வெறுமை... அந்த நேரத்தில் சமனாச்சு. இதைச் சொல்றதுக்காக என்னை வெறுத்துறாதேள். நானும் சாதாரணப் பொண்ணு தான். எனக்கும் உணர்வுகள் இருக்கு. என் கணவனுக்கு நான் மட்டும் தான் முக்கியமா தெரியணும்ன்னு நான் நினைக்கிறது தப்பான்னா ?" வேதனையில் முகம் கசங்க கேட்டவளை கண்டு அவன் இல்லை என்று தலையசைத்தான்.

"உன்னோட இந்த வேதனைக்கு நான் தான் காரணம். இனியொரு முறை இந்தத் தவறு நடக்காது." அவன் உண்மையாக வருந்தினான்.

"அதுக்குப் பிறகு தான் நான் உங்க பேச்ை , செயல் எல்லாத்தையும் உற்று கவனிக்க ஆரம்பித்தேன். உங்க மனசு புரிய ஆரம்பிச்சது."

"உன்னை மாதிரி ஒரு பொண்ணு மனைவியா வருவாள்ன்னு தெரிஞ்சிருந்தா நான் காதலில் விழாமல் இருந்திருப்பேனோ என்னமோ ? தெரிஞ்சோ தெரியாமலோ நான் செய்த ஒரே தவறு காதலித்தது தான். மற்றவங்களை மாதிரி காதலை மறந்துட்டு பொய்யாய் வாழ முடியும்ன்னு எனக்குத் தோணலை. அதான் கல்யாணத்தை மறுத்து வந்தேன். இல்லை மடையா , இன்னொரு முறை காதல் வரும்ன்னு என் தலையில் அடிச்சு உணர்த்தியிருக்க , நீ உன் அன்பால்... இப்போ கூட என்னால் உன் கிட்ட ஐ லவ் யூ சொல்ல முடியலை. ஏன்னா காதலுக்கும் எனக்கும் ராசியில்லை. என் காதலை நான் உன் கிட்ட சொன்னால் நீயும் என்னை விட்டுட்டு போயிருவியோன்னு எனக்குப் பயமாயிருக்கு. காதலில் நான் கோழை தான்... இந்தக் கோழை மேல் உனக்கு வெறுப்பு தோணலையே..."

தனது உணர்வுகளைக் கொட்டியவனைக் கண்ணிமைக்க மறந்து பார்த்தவள் ' இல்லை ' என்று தலையசைத்தாள்.

"உன்னை எனக்கு ரொம்ப ரொம்பப் பிடிக்கும். உன்னைக் காலம் பூரா கைவிடாம நல்லா வச்சுக்குவேன். உனக்காக என் உயிரையும் தருவேன்." என்றவன் மறந்தும் ' நான் உன்னைக் காதலிக்கிறேன் ' என்று கூறவில்லை. அவனால் கூற முடியவில்லை.

அவனால் சொல்ல முடியவில்லை என்றால் என்ன ? அவளால் சொல்ல முடியுமே... அவனைக் கண்ட நாள் முதலாய் காதலில் உருகி கரைபவளாயிற்றே அவள்...!!! உணர்ச்சி பெருக்கில் அவனது முகத்தைக் கரங்களில் தாங்கியவள் ,

"ஐ லவ் யூ அத்து..." என்றபடி அவனது முகம் முழுவதும் முத்தமிட்டாள்.

ஒவ்வொரு முத்தத்திற்கும் ஒரு ' ஐ லவ் யூ ' வேறு... அவன் சொல்லாத காதல் மொத்தத்தையும் அவள் அவனுக்காகச் சேர்த்து சொன்னாள். காதலிப்பதை விடக் காதலிக்கப்படுவது சுகம் அல்லவா! அவளது காதல் மழையில் அவன் சுகமாய் நனைத்தான். சத்தமாய் முத்தமிட்டு முத்தமிட்டு தன் காதலை சொல்லி ஓய்ந்து துவண்டவளை தன் கையில் ஏந்தி கொண்டவனு் ,

"இவ்வளவு ஆசையை வச்சியிருக்கிறவள் எதுக்கு விலகி போன பேபி ?" என்று காதலோடு கேட்க... அவனது வார்த்தைகளில் அவளது மோக வலை அறுந்து விழ... பட்டென்று விழி திறந்தவள் அவன் கூறுவதன் அர்த்தம் புரிந்து அவனை வேதனையோடு பார்த்தாள்.

"நீங்க ஹாஸ்பிட்டலில் குழந்தைகளைப் பார்த்ததும் மனவேதனையில் கிளம்பி போனது நேக்கு மனசு ரொம்பக் கஷ்டமா போச்சு. அப்போ உங்க மனசு என்ன பாடு பட்டிருக்கும்ன்னு ரொம்ப வருத்தமா இருந்துச்சு. அதுக்கு அடுத்து மாமா இறந்து போனது. எல்லாக் கவலையும் சேர்ந்து நீங்க இருக்கும் நேரத்தில் நான் உங்க உணர்வுகளைத் தூண்டிவிட்டு..."

அவள் சொல்லும் முன் அவன் தன் இதழ் கொண்டு அவளது இதழை சிறை செய்திருந்தான். அவனது இதயத்தில் இருந்த காதல் மொத்தத்தையும் அந்த ஒற்றை இதழொற்றலில் அவளுக்கு உணர்த்தினான். அவளது துயரத்தை போக்கவே அவன் அப்படிச் செய்தது. எந்தப் பெண்ணவளுக்குத் தான் கணவனை இந்த நிலையில் பார்க்க முடியும். அப்படியிருந்தும் ஆராதனா தனக்காக யோசித்து யோசித்து நடந்து கொள்வதைக் கண்டு அவன் மனம் நெகிழ்ந்தான்.

மூச்சு வாங்க தன்னிடம் இருந்து பிரிந்தவளை மகிழ்ச்சியுடன் பார்த்தவனு் , " நான் வேதனைப்பட்டது உன்னை நினைத்து தான் பேபி... என்னை நினைத்து

அல்ல... எனது கடந்த காலத்தை நான் எப்படி உன்னிடம் சொல்ல போகிறேன் என்கிற வேதனை அது... அதைக் கேட்டு நீ எப்படி ரியாக்ட் பண்ணுவேன்னு ஒருவித பயம்... எல்லாம் கலந்த மனநிலையில் தான் நான் அங்கிருந்து போனது." என்று அவன் தன்னிலை விளக்கம் கொடுத்தான்.

"அன்னைக்கு அப்பா இறந்த துக்கம் தாங்காம நானாகத் தான் உன்னிடம் அடைக்கலம் புகுந்தது. இதில் உன் தவறு எதுவும் இல்லை. என்னை உணர்ந்தா , உன்னை உணர்ந்து மனநிறைவோடு தான் நான் உன்னுடன் இணைந்தது. நீ ஃபீல் பண்ணி கவலைப்படுகிற அளவுக்கு இதில் ஒண்ணுமே இல்லை. எல்லாக் கணவனி , மனைவிக்கு இடையில் நடக்கும் இயல்பான தாம்பத்தியம் தான் அது." என்றவன் அவளது முகத்தை ஒற்றை விரலால் நிமிர்த்தி ,

"என்னைப் பார்த்தால் உணர்வுகளுக்கு அடிமையானவன் மாதிரியா இருக்கா ?" என்று கேட்க... அவனைப் புரிந்தவளாய் அவள் இல்லை என்று தலையசைத்தாள்.

"நீ ஆராதனா , என் மனைவி என்று தெரிந்து தான் நான் உன்னைத் தொட்டேன்... போதுமா ? இனியொரு முறை அதை நினைத்து நீ வருத்தப்படக் கூடாது." என்று அவன் முடித்துக் கொண்டான்.

அவள் அவனது நெஞ்சில் சாய்ந்து கொள்ள... அவனும் அவளை அணைத்துக் கொண்டான். இருவருக்கும் இடையில் எத்தனையோ முரண்பாடுகள் இருந்த போதும் இருவரது காதல் இருவரையும் இணைத்தது. அவனது தவறுகளை அவள் மன்னிக்கவில்லை... மாறாக மறந்தாள். அவர்களது வாழ்வில் அவனுமி , அவளும் மட்டுமே... அதில் யாருக்கும் இடம் இல்லை. அதைத் தெளிவாக எடுத்துரைத்தவள் அவனைக் காதலால் ஆட்கொண்டாள். அவன் அவளது தன்னலமற்ற அன்பை கண்டு பித்துக் கொண்டு காதல் கொள்ள... அவளோ அவனது கண்ணியம்

கண்டு அவன் மீது காதல் கொண்டாள். இனி வாழ்க்கையைப் புரிந்து அவர்கள் வாழ்வார்கள்.

சிறிது நேரம் கழித்து விஷ்ணுபிரஹானன் , " பேபி , எனக்கு வேலைகள் இருக்கு... போயிட்டு வரவா ?" என்று கேட்க... ஆராதனா அவனை ஏக்கத்துடன் பார்த்தாள்.

அவளது ஏக்கம் அவனுக்கும் புரிந்தது. ' இன்னும் கொஞ்ச நாள் பொறுத்துக்கோ பேபி ' என்று மனதிற்குள் கூறி கொண்டவன் அவளிடம் இருந்து விடைபெற்றுச் சென்றான்.

****

"ஹேப்பி வெட்டிங் டே பொண்டாட்டி..." காதோரம் கிசுகிசுத்த குரலில் ஆராதனா அடித்துப் பிடித்துக் கொண்டு எழுந்தாள்.

"எதுக்குப் பயப்படுற... ? நான் தான்டி..." என்ற கணவனது குரலில் ஆசுவாசம் அடைந்தவள் அடுத்த நொடி ,

"அத்து..." என்று அவனை அணைத்து கொண்டாள். அவளது விழிகள் கலங்கி கண்ணீரை சொரிந்தது. அதனை அவனது வெற்றுத் தோள்பட்டை உணர்ந்தது.

"சந்தோசமான நாளில் எதுக்குக் கண்ணீர் ?"

"இவ்வளவு சந்தோசமா இந்த நாளை கொண்டாடுவேன்னு நான் நினைச்சு கூடப் பார்க்கலை." அழகாய் கடந்த காலக் கசடுகளைத் தவிர்த்தவள் நிகழ்காலச் சந்தோசத்தை மட்டும் அவனிடத்தில் உரைத்தாள். அதை அவன் உணர்ந்தவனாய் தனது அணைப்பை இறுக்கினான். பின்பு அவளை விலக்கியவன் அவளது நெற்றியில் முத்தமிட்டான் ,

"இன்னும் நிறையச் சந்தோசம் காத்திருக்கு... எழுந்தான் , குளிச்சிட்டு வா..." என்று கூற...

"கட்டாயம் குளிக்கணுமா ?" கணவனது கழுத்தில் தனது கரங்களை மாலையாகக் கோர்த்து அவனைத் தன் பக்கமாய் இழுத்தபடி அவள் கூற... அவள் இழுத்த

இழுப்பிற்கு வாகாய் வளைந்தவன் அவளது நாசியோடு தனது நாசி உரசியபடி விழியோடு விழி கலந்தான் ,

"கட்டாயம் குளிச்சே ஆகணும்." என்றான் அடக்கப்பட்ட சிரிப்புடன்...

"போங்க அத்து..." என்று அவள் சிணுங்கி கொண்டே எழுந்து செல்ல... அவளது ஏக்கத்தினை அவன் உணர்ந்தாலும் அவளுக்காகத் தனது உணர்வுகளைக் கட்டுப்படுத்திக் கொண்டான். இனி அவனது காதல் அவளைக் கௌரவிக்க வேண்டும். அசிங்கப்படுத்தக் கூடாது என்பதில் அவன் மிகவும் கவனமாக இருந்தான்.

இருவரும் இணைந்து வந்து சுந்தரியின் காலில் விழுந்து ஆசிர்வாதம் வாங்கினர். பின்பு மூவரும் கோவிலுக்குக் கிளம்பி சென்றனர். அங்குத் தங்களுக்காகக் காத்திருந்த பிறந்த வீட்டினரை கண்டு ஆராதனாவின் விழிகள் ஆச்சரியத்தில் அகன்றது.

"அத்து..." அவள் சந்தோசத்துடன் அவனைப் பார்க்க...

"உனக்கா தான்... வா..." என்று அவளை அழைத்துச் சென்றான்.

எல்லோரும் அவளைச் சூழ்ந்து கொண்டு நலம் விசாரித்தனர். அர்ஜூனன் , பரத் சற்று தள்ளி நின்று நடப்பதை வேடிக்கை பார்த்தனர். பின்பு எல்லோரும் கோவிலுக்குள் சென்றனர்.

கடவுள் சந்நிதானத்தில் கண்மூடி வேண்டி கொண்டிருந்த ஆராதனாவை நோக்கி விஷ்ணுபிரஹானன் , " பேபி..." என்றழைக்க... கணவனது அழைப்பில் அவள் சட்டென்று விழிகளைத் திறந்தாள். அங்கு அவளது கணவன் கைகளில் தாலி சங்கிலியை ஏந்தியபடி நின்றிருந்தான். அவள் விழிகள் கலங்க அவனைப் பார்த்தாள்.

"இதை உன் கழுத்தில் அணிவிக்க உன் சம்மதம் வேண்டும் பேபி. சம்மதமா ?" என்று அவன் அவளிடம் சம்மதம் வேண்டி நிற்க...

ஆராதனா மனம் நெகிழ , விழிகளில் இருந்து விழிநீர் தெறிக்க வேகமாகத் தலையை அசைத்தாள். அடுத்தக் கணம் விஷ்ணுபிரஹான் மனம் நிறையக் காதலோடு மனைவியின் கழுத்தில் தாலி சங்கிலியை அணிவித்தான்.

"நீயும் நானும் அன்பே
கண்கள் கோர்த்துக் கொண்டு
வாழ்வின் எல்லை சென்று
ஒன்றாக வாழலாம்"

திருத்தமாகும்...!!!

அர்ஜூன் மனம் நெகிழ மருமகனையும் , மகளையும் பார்த்திருந்தான். அவனது மனதில் இருந்த கோபம் எல்லாம் காணாமல் போயிருந்தது. மகள் கழுத்தில் தாலியை அணிவித்த மருமகனது செயல் கண்டு அவன் மகிழ்ச்சி கொண்டான். தவறு செய்வது மனித இயல்பு. அப்படித் தவறு செய்தவன் தனது தவறை உணர்ந்து திருத்தி கொள்ளும் போது அவனை மன்னிப்பது தான் அழகு. அவன் தனது மகளுக்காக மருமகனை மன்னித்தான். அர்ச்சனாவுக்கும் , விஷ்ணுபிரஹானுக்கும் இடையில் இருந்த உறவை சேதுபதி மூலம் அறிந்தவன் மருமகன் மீதான தனது கண்ணோட்டத்தை மாற்றிக் கொண்டான்.

முதன்முறை போன்று அல்லாது இந்த முறை மனைவியை மனதில் இருத்தி தாலி சங்கிலியை அவளது கழுத்தில் அணிவித்த விஷ்ணுபிரஹான் அவள் புறம் குனிந்தான் ,

"டூ யூ லவ் மீ பேபி ?" என்று குறும்புடன் கேட்க...

"ம்ம்... ரொம்ப..." என்று விழிகளில் விழிநீர் தேங்கி நிற்க சந்தோசத்துடன் தலையசைத்தவள் அதே சந்தோசத்தோடு அவனை அணைத்து கொண்டாள். அவனும் சிரித்தபடி அவளை அணைத்துக் கொண்டான்.

இந்த அழகான காட்சியை ஸ்ரீராம் மனநிறைவோடு தனது அலைப்பேசியில் புகைப்படமாய்ப் பிடித்துக் கொண்டான். இதற்காக அவன் பட்ட பாடு தான் எத்தனை! அனைவரும் இந்த நிகழ்வை மனநெகிழ்வுடன் பார்த்திருந்தனர்.

இருவரும் மீண்டும் சுந்தரியின் காலில் விழுந்து ஆசிர்வாதம் வாங்கினர். சுந்தரி கண்கலங்க அவர்களை ஆசிர்வதித்தார். பின்பு இருவரும் அர்ஜூனன் , அவந்திகா முன் வந்து நின்றனர். ஆராதனா கணவனை யோசனையுடன் பார்த்தாள்.

"உன்னோட அப்பா எனக்கும் அப்பா மாதிரி தான்..." என்ற விஷ்ணுபிரஹான் அவர்களது கால்களில் மனைவியோடு விழுந்தான். அவனது வார்த்தைகளில் அர்ஜூன் அப்படியே மருமகனிடம் வீழ்ந்து போனான்.

"மாப்ளே..." என்றபடி அர்ஜுன் மனம் நெகிழ்ந்தவனாய் விஷ்ணுபிரஹானை அணைத்துக் கொண்டான். இந்தக் காட்சியை ஆராதனா சந்தோசத்துடன் பார்த்திருக்க... அவந்திகா மகளை உச்சி முகர்ந்தாள்.

"சீக்கிரம் பேரனோ , பேத்தியோ பெத்து கொடு பட்டு..." என்று மகளிடம் கூற... அதைக் கேட்டு ஆராதனாவின் முகம் சிவந்தது. அர்ஜூனின் தோள் வளைவில் இருந்தபடி விஷ்ணுபிரஹான் மனைவியைப் பார்த்துக் கண்சிமிட்டினான்.

பிறகு ஸ்ரீராம் , சீதா , கனிஷ்கா மூவரும் அவர்களுக்கு வாழ்த்து கூற... பரத் மட்டும் பட்டும் படாமலும் வாழ்த்துக் கூறினான். அதைக் கவனித்த விஷ்ணுபிரஹான் தனக்குள் சிரித்துக் கொண்டான்.

அவந்திகா தங்களது வீட்டில் விருந்து தயாரித்து இருப்பதாகக் கூறி அவர்கள் மூவரையும் உடன் அழைத்துச் சென்றாள். எல்லோரும் வீட்டிற்குள் நுழைந்ததும் விஷ்ணுபிரஹான் மட்டும் சற்று தேங்கி நின்றான். வாசலில் நின்று கொண்டிருந்த பரத் அருகில் போய் அவனை அணைத்துக் கொண்டு ,

"இன்னும் எதுக்கு மூஞ்சியைத் தூக்கி வச்சிக்கிட்டு இருக்க மச்சான்... ? உன் தங்கச்சியே என் கிட்ட ராசியாகிட்டா... நீ என்னடான்னா ?" என்று கூற... அவனது அணைப்பில் இருந்து திமிறிய பரத் ,

"விடு விஷ்ணு... நான் எப்பவுமே உன்னைப் பட்டுவோட பார்வையில் இருந்து தான் பார்ப்பேன். இப்போ பட்டு உன்னை மன்னிச்சு ஏத்துக்கிட்டதால் தான் நான் அமைதியா இருக்கேன். இல்லைன்னா நடக்கிறதே வேற... திரும்ப நீ பட்டுவை ஏதாவது படுத்தின... அப்புறம் நான்

மனுசனா இருக்க மாட்டேன்." என்று பரத் ஒற்றை விரல் நீட்டி அவனை எச்சரித்தான்.

பரத் கூறியதை கேட்டு விசம சிரிப்பு சிரித்த விஷ்ணுபிரஹானஂ , " அப்படியா ? அங்கே உன்னுடைய தங்கையைப் பார்..." என்று வீட்டினுள் கையைக் காண்பிக்க...

அங்குச் சோபாவில் அமர்ந்திருந்த ஆராதனாவின் விழிகள் தனது சகோதரனுடன் இணக்கமாகப் பேசி கொண்டிருக்கும் கணவனைக் காதலோடு வருடி கொண்டிருந்தது. அவளுக்குப் பின்னே நின்று கொண்டிருந்த கனிஷ்கா நமட்டு சிரிப்புடன் தனது கணவனைப் பார்த்திருந்தாள். பரத் மனைவியின் கேலி சிரிப்பை கண்டு காண்டானான். அவனது முகத்தில் எள்ளும் கொள்ளும் வெடித்தது.

"உன் தங்கையைப் பார்க்க சொன்னால் நீ என் தங்கையைப் பார்க்கிறியே மச்சான்..." என்று அதற்கும் விஷ்ணுபிரஹான் பரத்தை கலாய்த்தான். பரத் அவனைத் திரும்பி பார்த்து முறைக்க... அதைக் கண்டு தனது விளையாட்டைக் கைவிட்ட விஷ்ணுபிரஹானஂ ,

"உன் தங்கை என்னைக் காதலோடு பார்க்கிறாள். இப்போது நீ என்ன செய்வதாய் உத்தேசமஂ ?" என்று கேட்க... அதைக் கேட்டு பரத் ' ஙே ' என்று விழித்தான்.

"நீயும் என்னைக் காதலாகப் பார்க்க ரெடியா ?" விஷ்ணுபிரஹான் விசமமாய்ச் சிரிக்க... அதைக் கேட்ட பரதஂ ,

"அவனா நீ... ?" என்று அலறியபடி வீட்டினுள் ஓடினான்.

"மச்சானஂ , என்னை விட்டு போகாதே..." என்று கத்தியபடி விஷ்ணுபிரஹான் பரத்தை துரத்த... அவர்களைக் கண்டு எல்லோரும் சிரித்தனர்.

விருந்து முடிந்து கிளம்பும் போது விஷ்ணுபிரஹானிடம் ஸ்ரீராமஂ , " விஷ்ணூ , நீ திருப்பிக் கொடுத்தது எல்லாம்

பட்டுக்கு சேர வேண்டிய சொத்துக்கள் தான். அப்படிப் பார்த்தால் அது உனக்கு வந்து சேர வேண்டியது தான். நான் என்ன சொல்ல வர்றேன்னா... நீ இதை எல்லாம் திரும்ப வாங்கிக்கணும்." என்று கூற... அர்ஜூனும் , பரத்தும் அதை ஆமோதித்தபடி அமைதியாக இருந்தனர்.

"என் குடும்பத்தைக் காப்பாற்ற என் வருமானம் போதும். சொத்துக்களைப் பற்றி முடிவு செய்ய வேண்டியது ஆராதனா தான்." என்று விஷ்ணுபிரஹான் முடித்துக் கொள்ள...

"அவருக்கு வேண்டாதது எனக்கும் வேண்டாம்." என்று ஆராதனா உறுதியாய் மறுத்து கூறிவிட்டாள்.

மருமகன் , மகள் கூறியதை அமைதியாகக் கேட்ட அர்ஜூன் , " சரி சொத்துக்களை விடு பட்டு... மாப்பிள்ளை உனக்காக வாங்கிய மருத்துவமனை பங்குகளை என்ன செய்யப் போகிறாய் ?" என்று கேட்க...

ஆராதனா கணவனை வியப்புடன் பார்த்தாள். அவன் தன்னிடம் வம்பிழுக்கவே மருத்துவமனைக்கு வந்துள்ளான் என்று அவள் தவறாக அல்லவா அவனைப் பற்றி நினைத்திருந்தாள். அவளது எண்ணங்களை ஊகித்தவனாய் விஷ்ணுபிரஹான் ,

"கொஞ்சம் வம்பிழுக்கவும் தான்..." என்று ரகசியமாய் மனைவியிடம் கூறியபடி அசடு வழிந்தான்.

"அத்து..." அவள் காதல் அதிகரிக்கச் சுகமாய் அவனது தோளில் சாய்ந்து கொண்டாள். அவனது கை நீண்டு மனைவியை அணைத்துக் கொண்டது.

"உனக்கு ஒண்ணுமே தெரியாதா பட்டு ?" அர்ஜூன் மகளிடம் வினவ...

"அவள் எதையும் பார்க்கலை. நான் மாசாமாசம் அவளுக்கு மெயிலில் தொழில் சம்பந்தப்பட்ட கணக்கு வழக்குகளை அனுப்புவேன். அதைக் கூட அவள் திறந்து பார்த்தது இல்லை. அதை அவள் பார்த்திருந்தாலே எப்போதோ என்

மனசு புரிந்திருக்கும்." என்று விஷ்ணுபிரஹான் அலுத்துக் கொண்டான்.

"நேக்கு எதுவும் வேண்டாம் அத்து. நீங்க மட்டும் போதும்." என்று ஆராதனா கூற... விஷ்ணுபிரஹான் மனைவியைக் காதலாய்ப் பார்த்திருந்தான்.

"க்கும்..." என்று பரத் தொண்டையைக் கனைக்க... இருவரும் சுற்றுபுறம் உணர்ந்து தங்களது பார்வையைத் திருப்பிக் கொண்டனர்.

"எங்கண்ணா ரொமான்ஸ் பண்ணினா உங்களுக்கு என்ன வந்தது ? இப்படி வில்லன் மாதிரி பண்றேள் ?" கனிஷ்கா கணவனிடம் சண்டைக்கு வந்தாள்.

"உங்கண்ணன் தான்டி எனக்கு வில்லன்..." என்று பரத் கோபமாய் முணுமுணுத்துக் கொண்டு சென்றான்.

அவன் கூறியதை கேட்டு அவள் புரியாமல் நின்றாள். கணவன் கூறியதற்கான அர்த்தம் புரியும் போது என்ன செய்வாளோ!

சொத்துகள் எதுவும் தனக்கு வேண்டாம் என்று ஆராதனா முடிவு செய்ததைத் தொடர்ந்து அவளது சொத்துகள் அனைத்தையும் அவளது வாரிசுகளுக்கு எழுதி வைக்கப் போவதாய் அர்ஜூன் அறிவித்தான். இதை இருவருமே எதிர்க்கவில்லை.

சிறிது நேரம் கழித்து மூவரும் தங்களது வீட்டிற்குக் கிளம்பி வந்தனர். சுந்தரி ஓய்வெடுக்கச் சென்றுவிட்டார். விஷ்ணுபிரஹான் , ஆராதனா இருவரும் தங்களது அறைக்கு வந்தனர். அறைக்குள் நுழைந்ததும் ஆராதனா கணவனைக் கட்டி கொண்டு அழுதாள்.

"ஏன் அழற பேபி ?" என்று அவன் பதறி போய்க் கேட்க...

"என்ன இருந்தாலும் நான் தாலியை கழட்டியது தப்பு தானே. அதுவும் நீங்க அடிப்பட்டுக் கிடந்தப்போ நான் அப்படி நடந்துக்கிட்டது ரொம்ப ரொம்பத் தப்பு. நான் கெட்ட

பொண்ணு இல்லையான்னா ?" என்று அவள் அழ... அவளது விழிகளைத் துடைத்து விட்டவன் ,

"யார் சொன்னா நீ கெட்ட பொண்ணுன்னு... நீ ரொம்ப ரொம்ப நல்ல பொண்ணு... எந்தப் பொண்ணு டிவோர்ஸ் வாங்கின பிறகும் புருசன் கட்டிய தாலியை கழுத்தில் போட்டுட்டு இருப்பாள். அதைப் பார்த்த பிறகு தானே நான் நம்பிக்கையோடு உன்னை நெருங்கி வந்தது." அவனது பேச்சில் அவள் விழி விரித்து நின்றாள்.

"எனக்கு ஆக்சிடெண்ட் ஆனப்போ நீ வந்து கட்டு போட்டியே... அப்போ தான் உன் கழுத்தில் கிடந்த தாலியை பார்த்தேன். அதைப் பார்த்ததும் எனக்கு லேசா நம்பிக்கை வந்தது. உன்னை என் பக்கம் இழுத்துவிடலாம்ன்னு..."

அன்று அவள் உணர்ந்த சூடான மூச்சுக்காற்றை இப்போதும் உணர்ந்தவளாய் முகம் சிவந்தவள் , " போக்கிரி அத்து..." என்றபடி அவனது நெஞ்சில் முகம் புதைத்து கொண்டாள்.

"அப்போ மட்டுமா ? அன்னைக்குப் பார்ட்டி நடந்த போது டெலிவரி பார்க்க போனப்போ உன்னைப் பிடிச்சு மாடிப்படி அடியில் இழுத்துக்கிட்டு போனேனே... ஞாபகம் இருக்கா..."

"ம்..."

"அப்போ உன் கழுத்தை பிடிக்கும் போது தாலி செயின் என் கையில் நெருடியது. அதில் சந்தோசப்பட்டுத் தான் நான் என் கையை விலக்கினேன்."

"என்னைப் பத்தி நன்னா தெரிஞ்சுண்ட்டு தான் நீங்க என்னை வருத்தி எடுத்திருக்கேள்..." அவள் செல்லமாய் அவனது நெஞ்சில் குத்தினாள்.

"உன் மனதில் இருப்பதை உன் வாயால் சொல்ல வைக்கத் தான்..." அவளது அடிகளைச் சுகமாய் வாங்கியபடி அவன் கூறினான். அவனது மனதின் ஏக்கத்தினைப் புரிந்தவளாய் அவள் மௌனமாய் இருந்தாள். அவன் தான் அவளது மௌனத்தைக் கலைத்தான்.

"பேபி , இன்னும் ஒரு மணி நேரத்தில் எனக்கு ஃபிளைட்..." என்று அவன் கூற... அவள் திகைப்புடன் அவனைப் பார்த்தாள்.

"முக்கியமான வேலை... சாரி பேபி. எனக்காகக் காத்திரு." என்று கூறி அவளது நெற்றியில் அவன் முத்தமிட... அவள் தனது மனக்கவலையை மறைத்துக் கொண்டு அவனுக்காகச் சரியென்று தலையசைத்தாள்.

இன்றோடு விஷ்ணுபிரஹான் வெளியூர் சென்று மூன்று நாட்களாகி விட்டது. சுந்தரி கூட மகனது வரவு குறித்து அவளிடம் கேட்க தொடங்கி விட்டார். பழையபடி அவர்களுக்குள் ஏதாவது மனஸ்தாபமோ ? என்று அவர் பயந்து போனார். கணவன் வராதது குறித்து ஆராதனாவும் மனதளவில் பயந்து தான் போனாள். ஆனால் தினமும் அலைப்பேசியில் அவன் பேசும் காதல் வார்த்தைகளே அவளை நம்பிக்கையோடு வாழ செய்தது.

நாளை அர்ச்சனா , விஜயின் குழந்தைகளுக்குப் பெயர் சூட்டும் விழா... அதற்குப் போக வேண்டும். அதனால் அவள் கணவனை அழைத்தாள். அவள் சொன்னதும் தான் அவனுக்குமே அந்த விசயம் ஞாபகத்தில் வந்தது.

"நாளைக்கு ஏர்லி மார்னிங் சென்னையில் இருப்பேன் பேபி." என்றவன் அழைப்பை துண்டித்துவிட்டான்.

சொன்னது போல் விஷ்ணுபிரஹான் மறுநாள் காலையில் சென்னை வந்துவிட்டான். கணவனைக் கண்டதும் அத்தனை நாள் பிரிவு மனதினை தாக்க ஆராதனா அழுகையோடு ஓடி வந்து அவனைக் கட்டி கொண்டாள்.

"இனி இப்படி எல்லாம் விட்டுட்டு போகாதே விஷ்ணு. ஆரு முகத்தைப் பார்க்க சகிக்கலை. நீ இல்லைன்னா அவள் முகத்தில் சிரிப்பே இல்லை." என்று சுந்தரி மகனிடம் கூறினார்.

சின்னப் பிரிவிற்கே இத்தனை துயர் கொள்பவள் எப்படித் தன்னை நிரந்தரமாகப் பிரிந்து சென்றாள் ? அப்போது

அவளது மனம் என்ன பாடு பட்டிருக்கும் ? என்பதை இப்போது அவனால் புரிந்து கொள்ள முடிந்தது.

அறைக்குள் நுழைந்ததும் அவன் மனைவியை அணைத்து அவளை முத்தமிட்டு ஆறுதல்படுத்த... அவள் சுகமாய் அவனது முத்த மழையில் நனைந்து கொண்டிருந்தாள்.

"இப்படியே இருக்கலாம்ன்னு தான் ஆசையா இருக்கு... ஆனா ஃபங்க்சன் இருக்கே..." அவன் மனைவியின் முகத்தை ஏக்கத்துடன் பார்த்தான். அவள் நாணத்துடன் அவனது அணைப்பில் இருந்து விலகினாள்.

"நேரமாச்சு... கிளம்பலாம்..." என்றி கூறியபடி அவள் உடை மாற்ற சென்றாள். அவனும் சிரித்தபடி குளியறைக்குள் புகுந்தான்.

இருவரும் கிளம்பி விஜயின் வீட்டை அடைந்தனர். சேதுபதியின் வற்புறுத்தலில் பேரில் அர்ச்சனா விஜயின் வீட்டிலிருந்தாள். மருத்துவமனையில் இருந்து அவள் நேரே தனது அம்மா வீட்டிற்குச் சென்றுவிட்டாள். அவளைத் தொடர்ந்து விஜயும் அங்குச் சென்றுவிட்டான். பொறுத்து பார்த்த சேதுபதி மருமகளிடம் பேசினார்.

"உன் முடிவு எதுவாக இருந்தாலும் நாங்க கட்டுப்படுறோம்." என்று அவர் கூற...

"டாட்..." விஜய் மறுத்து பேச வந்தான். அவனைக் கையமர்த்தித் தடுத்த சேதுபதி ,

"உனக்குப் பிடிக்கலைன்னா இவனை டிவோர்ஸ் பண்ணிட்டு வேறு வாழ்க்கைக்குத் தயாராகு அர்ச்சனா. அதுக்கு நான் ஒண்ணும் மறுப்பு சொல்ல மாட்டேன். நீ வாழ வேண்டிய பொண்ணு."

"டாட் , எனக்கு வில்லன் வெளியில் இல்லை..." என்று அவன் தந்தையை முறைத்தான்.

"டிவோர்ஸ் எல்லாம் வேண்டாம் மாமா... வேணும்ன்னா அவருக்கு வேறு ஒரு கல்யாணம் பண்ணி வைங்க. எனக்கு

என் குழந்தைகள் போதும்." சொல்லும் போதே அர்ச்சனாவின் விழிகளில் இருந்து கண்ணீர் வடிந்தது.

"குழந்தைகளுக்காகவாவது இவனை ஏத்துக்கக் கூடாதா அர்ச்சனா ? நாளைக்குப் பிள்ளைகள் வளர்ந்து அப்பா எங்கேன்னு கேள்வி கேட்காதா ?"

"கேட்டால்... நான் பதில் சொல்லிக்கிறேன்."

"என் பேர குழந்தைகள் என் வீட்டில் வளர்வது தான் முறை. நீ நம்ம வீட்டுக்கு வாம்மா... என் மருமகளா இல்லை... என் மகளா வா... இவன் நிழல் கூட உன் மேல் படாமல் நான் பார்த்துக்கிறேன்." என்று சேதுபதி கூற...

"கிழிஞ்சது கிருஷ்ணகிரி..." விஜய் தனக்குள் கோபமாய் முணுமுணுத்துக் கொண்டான்.

"என்னடா முணுமுணுக்கிற ?" சேதுபதி மகனை அதட்ட...

"எனக்கு ஓகேன்னு சொன்னேன் டாட். ஏஞ்சல் வீட்டுக்கு வந்தால் போதும். நான் அவளைத் தொந்தரவு செய்ய மாட்டேன்." என்று அவன் கூற...

"உங்க மகன் இப்படி ஏஞ்சல்ன்னு கூப்பிடறதா இருந்தா நான் வர மாட்டேன்." அர்ச்சனா மறுக்க... சேதுபதி மகனை முறைத்தார்.

"ஏஞ்சல்... சாரி... அர்ச்சனா , நான் அப்படிக் கூப்பிட மாட்டேன். நீ நம்ம வீட்டுக்கு வா..." அவன் உறுதியாய் கூற...

அன்று அங்கு வந்த அர்ச்சனா எப்போதும் போலிருக்க... விஜய் தான் மனைவி அருகில் செல்லாது இருப்பதற்குள் மிகவும் திண்டாடி போனான். அழகான மனைவியை அருகில் வைத்துக் கொண்டு கையைக் கட்டி கொண்டு இருப்பதற்கு அவனுக்கு மிகவும் கஷ்டமாக இருந்தது. அவன் ஏதாவது எசகுபிசகாக நடந்து கொண்டால் முதலுக்கே மோசமாகிவிடும் என்பதால் அவன் சற்று அடக்கி வாசித்தான்.

இதோ குழந்தைகளுக்குப் பெயர் வைக்கும் வைபவத்திற்காகப் பட்டு புடவை , வைர நகைகள் அணிந்து தேவதையாக ஜொலித்த மனைவியைக் கண்டு விஜய் உள்ளுக்குள் டன் டன்னாக ஜொள் வடித்தாலும் வெளியில் முகத்தைச் சாதாரணமாக வைத்துக் கொண்டு வலம் வந்தான்.

' கொல்லுறாளே ராட்சசி ' அவனால் மனதிற்குள் மட்டுமே தாபமாய் முணுமுணுக்க முடிந்தது. அவளோ இவனை ஒரு பொருட்டாகக் கூட மதிக்கவில்லை.

விஷ்ணுபிரஹான் , ஆராதனா இருவரும் வருவதை உணர்ந்த விஜய் வேகமாக மனைவியிடம் போய் , " ஏஞ்... சாரி அர்ச்சனா , உன் மாமூ வந்திருக்கான் பாரு..." என்று கூறி அவளை அழைக்க... அவளது விழிகள் அவனை வினோதமாகப் பார்த்தாலும் அவளது கால்கள் வாயிலுக்கு விரைந்தது.

"வாம்மா ஆராதனா... வா விஷ்ணு..." என்று இருவரையும் ஆர்ப்பாட்டமாய் வரவேற்ற விஜய் விஷ்ணுவை நெகிழ்வுடன் அணைத்துக் கொண்டான். இந்தக் காட்சியைக் கண்டு அர்ச்சனாவின் விழிகள் சற்று வியப்பில் விரிந்தது. உடனே அவள் சட்டென்று தனது முகபாவனையை மாற்றிக் கொண்டாள்.

"நீ இல்லைன்னா என் மனைவி , குழந்தைகள் இல்லை விஷ்ணு. உனக்கு நான் கடமைப்பட்டு இருக்கேன்." என்ற விஜயை கண்டு விஷ்ணுபிரஹான் புன்னகைத்தான். அதைக் கேட்டு அர்ச்சனா புன்னகையைத் தொலைத்து அமைதியாக நின்றவள் பின்ப ,

"வா ஆரு... வாங்க மா... விஷ்ணு..." அவனை ' மாம ' என்றழைக்க வந்து பின்பு தனது வார்த்தைகளைத் திருத்தி கொண்டாள் அர்ச்சனா. அவளது கைகளை வாஞ்சனையுடன் பற்றிக் கொண்ட ஆராதனா ,

"நீங்க அவரை மாமூன்னே கூப்பிடுங்கோ. நான் ஒண்ணும் நினைக்க மாட்டேன். சில உறவுகள் காலத்தால் கூட அழிக்க

முடியாது." என்று ஆறுதலாகப் புன்னகைக்க...

"ஆமா ஆராதனா... இதில் தப்பா நினைக்க என்ன இருக்கு ?" என்று விஜயும் கூற... அர்ச்சனா அவனை வெறுமையாய் பார்த்தாள். அடுத்த நொடி அவன் தனது வாயை இறுக மூடி கொண்டான்.

"எப்படி இருக்க அர்ச்சு ?" விஷ்ணுபிரஹான் அர்ச்சனாவிடம் நலம் விசாரித்தான்.

"இருக்கேன்... குழந்தைகளைப் பார்க்க கூட நீங்க வரலை. அந்தளவுக்கு நான் அந்நியமா போயிட்டேனா ?" அவளது முகம் வேதனையில் கசங்கியது. அவளுக்காக விஷ்ணுபிரஹான் செய்த உதவிகள் தான் எத்தனை...!!!

இதற்கு விஷ்ணுபிரஹான் என்ன பதில் சொல்வது ? என்று தெரியாது விழிக்க... ஆராதனா இடையிட்டு ,

"அவர் குழந்தைகளைப் பார்த்துட்டு தான் போனார். நீங்க தூங்கிண்டு இருந்தேள். அதான் தொந்தரவு பண்ணாம போயிட்டார்." என்று அழகாக நிலைமையைச் சமாளித்தாள்.

விஷ்ணுபிரஹான் மனைவியை நன்றியோடு பார்த்தான். ஆராதனா புன்னகையுடன் கணவனது கையோடு தனது கையைக் கோர்த்துக் கொண்டு அவனது தோளில் சாய்ந்து கொண்டாள். அவன் மனைவியைக் காதலாய் பார்த்தான். இருவரது சந்தோசம் கண்டு அர்ச்சனாவின் முகம் மலர்ந்தது. அவளுக்கு இது தானே வேண்டும்...

ஸ்ரீராம் சீதாவுடன் இந்த விழாவிற்கு வந்திருந்தான். விஜய் தனது குழந்தைகளுக்கு விகாஷினி , வினய் என்று பெயர் வைத்தான். அர்ச்சனா எதிலும் ஒட்டுதல் இல்லாது அவன் அருகில் அமைதியாக நின்றிருந்தாள். அவனிடம் ஒட்டவும் இல்லை... அவனை விட்டு விலகவும் இல்லை. இதுவே விஜய்க்குப் போதுமானதாக இருந்தது.

விஷ்ணுபிரஹானை குழந்தைகளுக்குத் தாய்மாமன் முறையாய் சடங்குகள் செய்யச் சொல்லி விஜய் அவனிடம் கூற... விஷ்ணுபிரஹானோ அதற்கு மறுத்து விட்டான்.

"நான் அர்ச்சனாவோட அண்ணன் இல்லை , வெல்விஷர்... அவளுக்கு ஏதாவது ஒண்ணுன்னா நான்..." என்றவன் மனைவியைத் திரும்பி பார்க்க... ஆராதனா புன்னகையுடன் அவனைப் பார்த்திருந்தாள். இப்போது கணவனது காதல் மீது அவளுக்கு நம்பிக்கை இருந்தது.

"நானும் , என் மனைவியும் இருக்கோம் மிஸ்டர். விஜய்..." என்று அவன் விளையாட்டாய் விஜயை எச்சரித்தான். அதைப் புரிந்து கொண்டவனாய் விஜய் ,

"நான் அம்பேல்..." என்று இருகரங்களையும் தூக்கியபடி வாய்விட்டுச் சிரித்தான். அர்ச்சனா அவனை ஏறிட்டு கூடப் பார்க்கவில்லை. அதைக் கண்டு அவனது முகம் சுருங்கி போனது.

ஸ்ரீராம் அர்ச்சனாவை தனது தங்கையாக எண்ணி கொண்டு தாய்மாமன் சடங்கை அவன் செய்தான். அவனது சுயநலமற்ற அன்பு அனைவரின் மனதினையும் நெகிழ செய்திருந்தது.

எல்லோரும் கிளம்பி சென்றதும் விஜய் மனைவியைத் தேடி சென்றான். அர்ச்சனா குழந்தைகளைத் தூங்க வைத்து கொண்டிருந்தாள். அறை வாசலில் வந்து நின்று கொண்டிருந்தவனை அவள் கேள்வியாய் பார்த்தாள்.

"உன் கூடக் கொஞ்சம் பேசணும் அர்ச்சனா. உள்ளே வரவா ?" என்று அவன் மனைவியிடம் அனுமதி வேண்டி நின்றான்.

"உள்ளே வாங்க..." அவள் அனுமதி அளித்ததும் உள்ளே வந்தவன் தூங்கும் குழந்தைகளின் அழகினை சிறிது நேரம் பார்த்து ரசித்திருந்தவன் பின்பு மனைவியிடம் திரும்பினான். அவளோ அவனைக் கண்டு கொள்ளாது அங்குப் பரவி கிடந்த குழந்தைகளின் பொருட்களை ஒழுங்குப்படுத்திக் கொண்டிருந்தாள்.

"என்னை மன்னிக்கவே மாட்டியா ?" என்றவனது குரல் உடைந்து போயிருந்தது.

அதைக் கேட்டு அவளது மனம் தான் தவித்துப் போனது. அவன் அவளுக்கு என்ன துன்பம் இழைத்திருந்த போதும் அவளால் அவனை வெறுக்கவும் முடியவில்லை. விலக்கவும் முடியவில்லை. இருதலை கொள்ளி எறும்பாய் அவள் மனதிற்குள் தவித்திருந்தாள்.

"ப்ளீஸ் அர்ச்சனா... என்னால் முடியலை. சில சமயம் ஏன்டா உயிரோடு இருக்கோம்ன்னு கூடத் தோணுது."

"ஏன் இப்படி எல்லாம் பேசுறீங்க ? குழந்தைகளை நினைச்சு பாருங்க..." அவளையும் அறியாது அவளது மனம் வெளிப்பட்டது.

"குழந்தைகளுக்குத் தான் நீ இருக்கியே... ஆனா எனக்கு யாரிருக்கா ?" என்றவனது முகம் வேதனையில் கசங்கியது.

"எனக்கு மட்டும் யாரிருக்கா ?" அவளது கேள்வியில் அவன் திகைத்து போய் அவளைப் பார்த்தான்.

"நான் காதலிச்சது தப்பு தான். அதை உண்மையா , நேர்மையா உங்க கிட்ட சொன்னது அதைவிடத் தப்பு. அந்தத் தப்புக்கான பலனை இப்போ வரை நான் அனுபவிக்கிறேன்." அவளது வார்த்தைகள் கேட்டு அவனது தலை தானாகக் கவிழ்ந்தது.

"நீங்க ஒவ்வொரு முறை என்னை நோக்கி கடுமையான வார்த்தைகளை வீசும் போதும் , நம்ம கல்யாணம் முடிஞ்ச புதுசில் நீங்க என் கிட்ட அன்பா நடந்துக்கிட்டதை நினைச்சு தான் நான் அத்தனையும் பொறுத்துக்குவேன். ஏன்னா நான் பண்ணியதும் தப்பு தானே. எந்த ஆணுக்கும் கோபம் வரத்தான் செய்யும். ஆனா கடைசியில் நீங்க என்னைச் சந்தேகப்பட்டு வீட்டை விட்டு வெளியில் அனுப்பினப்போ கூட ராத்திரி முழுசும்... இதோ இந்த வீட்டு வாசலில் தான் காத்திருந்தேன். என்னோட விஜய் கோபப்பட்டாலும் நல்லவர்... கோபம் குறைஞ்சு என்னைக் கூட்டிட்டு போவாருன்னு நம்பி காத்திருந்தேன். ஆனால் நீங்க வரவே இல்லை. அப்போ கூட மாமூவை கூப்பிட எனக்கு மனசு

வரலை. ஏன்னா உங்களுக்குப் பிடிக்காததை நான் செய்யக் கூடாதுன்னு தான் இருந்தேன். நேரமாக நேரமாக அக்கம்பக்கத்தவர் பரிதாப பார்வை , சந்தேகப் பார்வை தாங்க முடியாம தான் நான் மாமூவை கூப்பிட்டது. அப்போ கூட அவர் உங்க கிட்ட வந்து பேசுறேன்னு சொன்னார். நான் தான் வேண்டாம்ன்னுட்டேன். என்னை வேண்டாம்ன்னு சொல்றவங்க கிட்ட எதுக்கு வாழ்க்கை பிச்சை கேட்டு கெஞ்சணும் ?"

"அர்ச்சனா..." அவள் தன்னை எதிர்பார்த்து காத்திருந்ததை அறிந்தவன் முற்றிலும் உடைந்து போனான். தவறு செய்துவிட்டோமே என்று அவன் உள்ளம் நொந்து போனான்.

"மாமூ வீட்டில் இருந்தப்போ நான் நானாக இல்லை. என் நினைவு முழுவதும் நீங்க தான் ஆக்கிரமிச்சு இருந்தீங்க. ஒரு மாசம் கழிச்சு தான் எனக்குச் சுற்றுப்புறம் உறைக்க ஆரம்பிச்சது. மாமூ என்கூடவே இருப்பதைப் பார்த்து தான் கேட்டேன் , அவரோட மனைவி எங்கேன்னு ? அப்போ எனக்குத் தெரியாது அவர் தன்னோட மனைவியை டிவோர்ஸ் பண்ணிட்டாருங்கிறது. அம்மா தான் அதைக் கூடச் சொன்னாங்க. என்னால எத்தனை பேருக்குக் கஷ்டம்... நல்ல காதலியா நடந்துக்கலை. நல்ல மனைவியா நடந்துக்கலை. நல்ல பொண்ணா கூட நடந்துக்கலை. இனி நல்ல அம்மாவாவது இருக்க முயற்சிக்கணும்." என்றவளின் பார்வை குழந்தைகளைப் பாசமாக வருடியது.

"மாமூ கிட்ட எவ்வளவோ சண்டை போட்டேன். எனக்காக உங்க வாழ்க்கையை ஏன் வீணாக்கிக்கிட்டீங்கன்னு ? அப்போ தான் அவங்க சொன்னாங்க... அவங்க வாழ்க்கையும் ஒட்டுதல் இல்லாமல் இருந்ததை. அதைக் கேட்டு நான் அதிர்ந்து போயிட்டேன். உனக்கும் , உன் குழந்தைகளுக்கும் வெல்விஷரா இருக்கேன் , அது போதும் எனக்குன்னு அவர் சொன்னப்போ அப்படியொரு வேதனை எனக்குள். நான் எத்தனையோ தடவை அவர் கிட்ட அவர் மனைவியோடு சேர்ந்து வாழ சொல்லி இருக்கேன். விருப்பம் இல்லாத திருமணம் இது. எத்தனை

நாளைக்கு இழுத்து பிடிக்க... அதான் வேண்டாம்ன்னு வந்துட்டேன்னு ஒரேடியா மறுத்துட்டார். ஒரு பொண்ணுக்குத் துரோகம் பண்ணிட்டோமேன்னு எனக்குள் ஒரே குற்றவுணர்ச்சி. நிம்மதி இல்லை. அப்படி இருக்கும் போது தான் அவர் திரும்ப மனைவி கூடச் சேர்ந்து வாழ போறதா சொன்னார். நான் ரொம்பச் சந்தோசப்பட்டேன். இப்போ வரை அவங்களுக்குள்ள என்ன பிரச்சனைன்னு எனக்குத் தெரியாது. ஆனா பிரச்சனைக்குக் காரணகர்த்தா நான் தான் என்பது மட்டும் எனக்குத் தெரியும்." என்றவள் கணவனை நிமிர்ந்து பார்த்தா ,

"என்னுடைய தவறு இந்தளவுக்கு உங்களைப் பாதிக்கும்ன்னு நான் நினைக்கலை. நிச்சயம் உங்க விசயத்திலும் தவறு என் மேல் தான். இல்லைன்னு சொல்ல முடியாது. ஆனா என் மனநிலையில் இருந்து பாருங்க. உங்களுக்கு உங்க காதல் கை சேர்ந்திருக்கு. ஆனா எனக்கு... ? வாழ்க்கையில் ஏமாற்றம் தான் மிஞ்சியிருக்கு..."

"என்னுடனான வாழ்க்கை உனக்கு ஏமாற்றமா ஏஞ்சல் ?" என்ன முயன்றும் விஜயால் தனது வேதனையைக் கட்டுப்படுத்த முடியவில்லை. அது அவனது வார்த்தைகளில் பிரதிபலித்தது. அவள் திகைத்துப் போய்க் கணவனைப் பார்த்தாள்.

"சொல்லு ஏஞ்சல்."

"இல்லை..." என்று வேகமாக மறுப்பாய் தலையசைத்தவள் ,

"அன்னைக்கு ஒரு நாளை தவிர்த்து பார்த்தால் நீங்க எனக்கு எந்த ஏமாற்றத்தையும் கொடுக்கலை." என்றவளை விழிகள் பளிச்சிட பார்த்தான் அவன்.

"ஆனா அந்த ஒருநாள் என் வாழ்க்கையையே முடக்கி போட்டிருச்சு. என்னோட மனசு உடைஞ்சு போச்சு. உடைஞ்ச மனசை ஒட்ட வைக்க முடியுமான்னு எனக்குத் தெரியலை. பழசை மறக்கவும் முடியலை. மறந்துட்டு உங்க கூட வாழ

முடியும்ன்னும் தோணலை. எனக்காக நீங்க உங்க வாழ்க்கையை வீணாக்கிக்க வேண்டாம். வேற கல்யாணம்..." என்றவள் அருகே வேகமாக வந்தவன் அவளது வாயை மூடி ,

"வேண்டாம் ஏஞ்சல்... வலிக்குது." என்றவனின் விழிகள் வலியை அப்படியே பிரதிபலித்தது. அதில் அவளது மனம் தடுமாறியது.

"நீங்க இவ்வளவு வேதனைப்பட வேண்டிய அவசியம் இல்லை. நீங்க நல்லவங்க தான். நான் தான் தவறு செய்தவள். கல்யாண முடிஞ்ச புதுசில் நீங்க என் கிட்ட காதலை கொட்டினீங்க. அது பொய்யில்லையே. எல்லாத்தையும் நரகமாக்கி கிட்டது நான் தானே. தப்பு எல்லாம் என் மேல் தான்." என்று அழுதவளை அணைத்து ஆறுதல் சொல்ல ஆணவன் மனம் விரும்பினாலும் அவளது மனம் அறிந்து அவன் அமைதி காத்தான்.

"ரெண்டு பேர் பக்கமும் தப்பு இருக்கு. தப்புமம் , தப்பும் சேர்ந்து சரியாகக் கூடாதா ?" அவன் ஏக்கமாகக் கேட்டான்.

"தெரியலை..."

"எனக்காக முயற்சி செய்து பார் ஏஞ்சல்." என்று அவன் கெஞ்சி கேட்க...

அவள் மௌனமாய்த் தலையசைத்தாள். இருவர் மீதும் தவறில்லை. விதியை குறை கூறுவதா ? இல்லை அவர்களைப் படைத்த கடவுளை குறை கூறுவதா ? மனைவி சம்மதித்ததே அவனுக்குப் போதுமானதாய் இருந்தது.

"காத்திருப்பேன் ஏஞ்சல்." என்றவனை அவள் புரியாது பார்க்க...

"உனது காதலுக்காக..." என்று கூறியவன் சந்தோசத்துடன் அறையை விட்டு வெளியில் வந்தான். அவள் தான் குழம்பிய மனதுடன் நின்றிருந்தாள்.

****

"இந்த வீட்டினுடைய சாவி..." என்று விஷ்ணுபிரஹான் சாவியை ஸ்ரீராமிடம் கொடுத்தான். ஆராதனா புன்னகையுடன் கணவனைப் பார்த்திருந்தாள்.

"பட்டா , என்னதிதா ? நீயாவது உன் கணவருக்கு எடுத்து சொல்ல கூடாதா ?" என்று ஸ்ரீராம் வருத்தத்துடன் தங்கையிடம் கேட்டான்.

"அவரோட விருப்பம் தான் என்னுடைய விருப்பமும்..." என்று கணவனுக்கு ஆதரவாகக் கூறினாள் ஆராதனா. விஷ்ணுபிரஹான் மனைவியை நிறைவாய்ப் பார்த்திருந்தான்.

"எங்களுடைய வாழ்க்கையை நாங்க தீர்மானிச்சிட்டோம் ஸ்ரீராம். டோக்பூருக்கு போக நாங்க முடிவு பண்ணிட்டோம். அங்கே உள்ள மக்களுக்கு எங்க சேவை தேவை." என்று அவன் கூறினான்.

தொழிலில் வந்த லாபத்தில் டோக்பூருக்கு நிறைய வசதிகளைச் செய்து கொடுத்திருந்தான் விஷ்ணுபிரஹான். அதே போல் தனது வருமானத்தில் வீடா , நிலங்கள் வாங்கிப் போட்டிருந்தான். தனது வாழ்க்கை அங்கே தான் என்பதை அவன் எப்போதோ தீர்மானித்து இருந்தான்.

எல்லோரும் அவனது விருப்பத்திற்கு இணங்கினர். மனைவி , அம்மா இருவரையும் விமானத்தின் மூலம் டோக்பூர் அழைத்து வந்தான் விஷ்ணுபிரஹான். சுந்தரிக்கு அந்த ஊர் மிகவும் பிடித்துப் போயிற்று. அங்குச் சமையலுக்கு இருந்த தமிழ் பெண்மணி அவருக்கு நட்பாகி போனார். இருவரும் இணைந்து பேசி கொண்டிருப்பதைப் புன்னகையுடன் பார்த்திருந்தாள் ஆராதனா. அப்போது அங்கே வந்து சேர்ந்தான் விஷ்ணுபிரஹான்.

"என்ன பார்த்துக்கிட்டு இருக்க... ?"

"ரொம்ப நாள் கழிச்சு மாமி முகத்தில் சந்தோசத்தைப் பார்க்கிறேன். அதான் அவங்களைப் பார்த்துண்டு இருந்தேன்."

"எல்லாம் சரி... மாமி மகன் முகத்தில் எப்போது சந்தோசத்தைப் பார்க்க போகிற ?" என்று கேட்டபடி அவன் மனைவியின் இடையில் கை கொடுத்து அவளைத் தன்னருகில் இழுத்தான். அவனது வார்த்தையில் திகைத்தவள் அவன் இழுத்த இழுப்பிற்கு வந்தாள்.

"நீங்க சந்தோசமா இல்லையா அத்தா ?" அவளுக்கு மிகவும் கவலையாகி போனது.

"அது நீ வச்சுக்கிறதை பொறுத்து இருக்கு..." அவள் புரியாமல் அவனைப் பார்த்து விழிக்க...

"இன்னைக்கு நைட் நீ நடந்துக்கிறதை பொறுத்து இருக்கு." என்று அவன் அவளைக் கண்டு குறும்பாய் சிரித்தான். கணவன் கூறியதன் அர்த்தம் புரிந்து அவள் நாணத்துடன் தலை கவிழ்ந்தாள்.

விஷ்ணுபிரஹான் அவளது நெற்றியில் முத்தமிட்டா , " காத்திரு பேபி..." என்றவன் புன்னகையுடன் விலகி சென்றான். அவள் படபடக்கும் மனதுடன் கணவனது முதுகினை பார்த்திருந்தாள்.

திருத்தமாகும்...!!!

"அத்தை , கண்ணை மூடிட்டு எங்கே கூட்டிட்டு போறீங்க ?" ஐந்து நிமிடங்களாகக் கணவனிடம் விடாது அனத்தி கொண்டிருந்தாள் ஆராதனா.

"இன்னும் கொஞ்ச தூரம் தான்..." என்ற விஷ்ணுபிரஹான் சிரிப்புடன் மனைவியை அழைத்துச் சென்றான்.

சுந்தரி வீட்டில் இருந்தார். விஷ்ணுபிரஹானும் , ஆராதனாவும் கலை நிகழ்ச்சி பார்ப்பதற்காக வந்திருந்தனர். சுற்றுலா தலமாக டோக்பூர் இருப்பதால் தினமும் அங்கு ஏதாவது ஒரு கலை நிகழ்ச்சி நடந்து கொண்டிருக்கும். நிகழ்ச்சி முடிந்ததும் விஷ்ணுபிரஹான் வீட்டிற்குச் செல்லாது மனைவியை வேறு எங்கோ அழைத்து வந்திருந்தான். இருளில் அவளால் அந்த இடத்தை ஊகிக்க முடியவில்லை.

சிறிது நேரத்தில் நாசி உணர்ந்த நறுமணத்தை வைத்து அது எந்த இடம் ? என்று ஆராதனா சரியாகக் கணித்து விட்டாள்.

"அத்தை , இது நம்ம பூந்தோட்டம் தானே..."

"ப்ச்... சர்பரைஸ் போச்சே..." என்று சலித்தபடி விஷ்ணுபிரஹான் மனைவி கண்களில் இருந்த கட்டை அவிழ்த்தான்.

"உங்க பொண்டாட்டிக்கு மோப்ப சக்தி அதிகம்." அவள் இடுப்பில் இரு கைகளை வைத்தபடி தன்னைத் தானே பெருமை பட்டு கொண்டாள். அவள் எதிர்பாராத நேரத்தில் அவளைத் தனது கைகளில் ஏந்தி கொண்டவன் அவளது கழுத்தருகே குனிந்தை ,

"எனக்கும் மோப்ப சக்தி இருக்கான்னு செக் பண்ணிக்கிறேன்..." என்க...

"விடுங்க அத்து..." என்று அவள் சிணுங்க...

"இன்று நீ இந்த வார்த்தையை எத்தனை முறை சொன்னாலும் நான் உன்னை விடுவதாய் இல்லை பேபி." என்றவனது குரலில் வழிந்த தாபத்தைக் கண்டு திகைத்தவள் பின்பு நாணம் கொண்டு அவனது நெஞ்சில் முகம் புதைத்து கொண்டாள்.

பூந்தோட்டத்திற்கு நடுவில் இருந்த சின்னக் குடிலுக்குள் அவளைத் தூக்கி சென்றான் அவன். ஒற்றை அறையாக விஸ்தாரமாய் இருந்த அந்தக் குடிலின் அழகினை கணவனது கைகளில் இருந்தபடி ஆராதனா பார்த்து ரசித்தாள்.

"பிடிச்சிருக்கா ?" அவனது கேள்வியில் அவள் ,

"ரொம்ப ரொம்பப் பிடிச்சியிருக்கு..." என்று சந்தோசமாய்த் தலையாட்டினாள்.

"உனக்குப் பிடிச்ச சிவப்பு ரோஜா , எனக்குப் பிடிச்ச வெள்ளை ரோஜா... இதில் கூட நம்ம ரெண்டு பேர் விருப்பமும் ஒண்ணா இருக்கணும் பேபி." என்று கூறியவனைக் கண்டு அவள் ' ஙே ' என விழித்தாள்.

விஷ்ணுபிரஹான் அங்கிருந்த கட்டிலில் அவளைக் கிடத்த... அப்போது தான் அவள் அதையே கவனித்தாள். இத்தனை நேரம் அவள் பைத்தியக்காரி போல் குடிலின் மேற்கூரை , பக்கவாட்டுச் சுவரில் வரைந்திருந்த ஓவியங்களை ரசித்தவள் கீழே இருந்த கட்டிலை கவனிக்கவில்லை. அவள் நாணத்துடன் தனது முகத்தினை மூடி கொள்ள... அவளது கைகளை அகற்றியவன் ,

"நானும் ரசிக்க வேண்டாமா பேபி ?" என்று ஒரு ரசிகனாய் மாறி அவளிடம் கேட்க... மெல்ல விழி திறந்தவள் அவனைப் புரியாது பார்த்தாள்.

"அன்னைக்கு சரியா பார்க்கலை... என்ன நடந்ததுன்னு உணரும் முன்னே எல்லாமே நடந்து முடிஞ்சிருச்சு... இன்னைக்குத் தான்..." என்றவனது வாயை மூடியவள் வெட்கம் மேலிட ,

"அத்து..." என்றபடி அவனோடு ஒன்றி கொண்டாள்.

"உனக்கு ஓகேவா பேபி ?" என்று அப்போதும் அவன் அவளது சம்மதம் வேண்டி நிற்க... அவனை ஏறிட்டு பார்த்தவளை ,

"இதுக்கு எல்லாம் பெர்மிசன் கேட்க கூடாது அத்து... அப்படியே அள்ளிக்கணும்." என்று கண்சிமிட்டி சிரித்தாள்.

மனைவியின் குறும்பை ரசித்தவன் அடுத்த நொடி அவள் சொன்னது போல் அவளை அள்ளி கொண்டான். அவன் மிகவும் ரசனையுடையவன் என்று அவளுக்குத் தெரியும். எந்தவொரு காரியத்தையும் அவன் நேர்த்தியுடன் செய்யும் அழகே சொல்லாது சொல்லும் அவனது ரசனையை... ஆனால் ஆராதனா அதனை அனுபவப்பூர்வமாய் உணர்ந்த போது வாயடைத்து போனாள். அவளை அணு அணுவாய் ரசித்துத் தனது காதலை அவளுக்கு உணர்த்தியவனைக் கண்டு அவள் தான் பித்தாகி போனாள். பொதுவாக ஆணவன் தான் பெண்ணிடத்தில் பித்தாகி போவான். இங்கே கதையே தலைகீழாய் மாறிப் போனது.

வன்மை இல்லாது மென்மையாய் ஒருவரது உயிரை எடுக்க முடியுமா ? விஷ்ணுபிரஹான் பெண்ணவளை மென்மையாகக் கையாண்டு அவளது மொத்த உயிரையும் காதலாய் கரைத்துக் கொண்டிருந்தான்.

"ஐ லவ் யூ அத்து..." இதைத் தவிர வேறு வார்த்தைகள் அவளிடம் இருந்து வரவில்லை.

அவளது காதல் தானே அவனது உற்சாகப் பானம்... மது குடிக்காமலேயே பெண்ணவள் காதலில் அவன் கள்ளுண்ட வண்டானான். பெண்ணவளை மொத்தமாய்க் கொள்ளை அடித்த பின்பே அவன் அவளை விட்டு விலகினான்.

"தேங்க்ஸ்டி பொண்டாட்டி..." என்றவனுள் அத்தனை நிறைவு. அவளும் நிறைவாய் மனமும , முகமும் பூரிக்க அவனை அணைத்து படுத்திருந்தாள்.

காடு , மேடு எல்லாம் அலைந்து திரிந்து இறுதியில் சொந்த வீடு திரும்பியது போல் அத்தனை நிம்மதி , அமைதி இருவருள்ளும்.

"பேபி..."

"ம்..."

"எனக்காக ஒரு பாட்டு பாடு பேபி..." அவளது குரல்வளம் பற்றி அறிந்தவனாய் அவன் கூற... அவள் எழுந்து அவனது நெஞ்சில் கையூன்றி அவனைப் பார்த்தாள்.

"பாட்டு பாடுற நேரமா இது ?" அவள் போலியாகக் கோபம் கொள்ள...

"இப்போ தான்டி பாட்டு பாடணும். செம ரொமான்ட்டிக்கா இருக்கும்." என்று அவன் கண்சிமிட்ட... அவனைக் காதலாய் பார்த்திருந்தவள் பின்பு பாட ஆரம்பித்தாள்.

"பார்த்த முதல் நாளே
உன்னைப் பார்த்த முதல் நாளே
காட்சி பிழை போலே
உணர்ந்தேன் காட்சி பிழை போலே
ஒரு அலையாய் வந்து என்னை அடித்தாய்
கடலாய் மாறி பின் என்னை இழுத்தாய்
என் பதாகை தங்கிய உன் முகம் உன் முகம் என்றும் மறையாதே"

அவள் மனதில் இருந்த காதலை பாடலில் கூறியவளை அவன் கண்ணிமைக்காது பார்த்தான். அவளது காதல் அலையில் அவன் தான் சுகமாய் அடித்துச் செல்லப்பட்டான். அடுத்த நொடி "பேபி" என்றபடி தாபத்துடன் அவளது இதழை சிறை செய்தவன் பின்பு அவளை விடவே இல்லை.

மறுநாள் காலையில் தனது மாற்று உடையைக் கண்ட ஆராதனா ,

"பிரஹான்..." என்று சத்தமாக அலறினாள். வெளியில் நின்று கொண்டிருந்தவன் மனைவியின் குரலில் அடித்துப்

பிடித்துக் கொண்டு உள்ளே வந்தான்.

"எங்கே போனீங்க... ?"

"தோட்டத்தைப் பார்த்துட்டு இருந்தேன்."

"பொண்டாட்டியை பார்க்காம தோட்டம் முக்கியமா போச்சா உங்களுக்கு..." அவள் கோபமாய் அவனைப் பார்த்து முறைத்தாள்.

"நீ தூங்கிட்டு இருந்தேன்னு தொந்தரவு பண்ணலை." அவன் சமாதானமாகப் பேசியபடி அவள் அருகே வந்தான்.

"இதென்னது ?" அவள் தனது கையிலிருந்த உடையை அவன் முன் நீட்டினாள்.

"உன்னோட நைட் டிரெஸ்..."

"இதென்ன யுஎஸ்ஸா மிஸ்டர். பிரஹானஂ ? இது இந்தியா..."

அவள் அப்படிச் சொன்னதற்கும் அர்த்தம் இருந்தது. ஏனெனில் அந்த உடை மிகவும் சிறியதாக இருந்தது. முன்பு இது போல் உடுத்தியவள் தான்... இப்போது ஏனோ அவள் இது போன்று உடுத்துவது இல்லை.

"ரூமுக்கு வெளியே இந்தியாவா இருந்துக்கோ பேபி... உள்ளே யுஎஸ்ஸா இரு. இல்லைன்னாலும் கவலை இல்லை..." அவனது குரலில் குறும்பு கொப்பளித்தது.

"உங்களை..." என்றவள் வெட்கத்துடன் படுக்கையை விட்டு எழ... அவன் அவளது கால் பற்றித் தன்னருகே இழுக்க... அவள் வழுக்கி கொண்டு அவன் அருகே வந்தாள். அவளது முகம் நோக்கி குனிந்தவனஂ ,

"சும்மா இருந்தவனை உசுப்பேத்தி விட்டுட்டு தப்பிச்சு போனா என்ன அர்த்தமஂ ?" என்று கேட்க...

"அதுக்குத் தானே உசுப்பேத்தி விடுறது..." அவனைப் போன்றே குறும்புடன் பதிலளித்தவளை அவனது கைகள்

ஆரவாரத்துடன் அணைத்துக் கொண்டது.

நாட்கள் வேகமாக நகர்ந்தது... விஷ்ணுபிரஹானஂ , ஆராதனா இருவருக்கும் கிராமத்தில் இருக்கும் மக்களிடையே விழிப்புணர்வு ஏற்படுத்துவதற்கே நேரம் சரியாக இருந்தது. வேலைகளூடே அவர்களது காதலும் அழகாய் வளர்ந்தது. ஒருநாள் மூக்குத்தி குத்தி கொண்டு வந்த ஆராதனா அதை அவனிடம் ஆர்வத்துடன் காண்பித்தாள்.

"அழகா இருக்கா ?" அவள் ஆர்வமாக அவனிடத்தில் கேட்டாள்.

"ம்... ரொம்ப அழகாயிருக்கு." என்றவன் அவளது நாசியில் ஒய்யாரமாய் வீற்றிருந்த ஒற்றைக் கல் வெள்ளை கல் மூக்குத்தியை மென்மையாக வருடினான்.

"குத்தும் போது வலிச்சதா ?"

"கொஞ்சமா வலிச்சது..."

"வலிச்சதுன்னா எதுக்குடி இதை எல்லாம் பண்ற ?" அவன் கோபத்தோடு கத்தினான். அவளது வலி அவனது வலி அல்லவா!

"உங்களுக்குப் பிடிக்கும்ன்னு மாமி சொன்னாங்க." அவளது வார்த்தையில் அவன் ஸ்தம்பித்துப் போனான்.

"அதுக்காக இப்படி வலியை தாங்கிக்கிட்டு... ஏன்டி என்னை உயிரோடு கொல்ற..." வலி மிகக் கூறியவன் அவளை இறுக அணைத்துக் கொண்டான்.

"உங்களுக்குப் பிடிச்ச மாதிரி இருக்கணும்ன்னு நான் பிரியப்படுறேன்." என்றவளின் முகத்தை நிமிர்த்திப் பார்த்தவனஂ ,

"என்னைச் சந்தேகப்படுறியா ?" என்று கேட்க...

"ஐயோ , இல்லைன்னா..." என்று அவள் பதறி போய்க் கூற...

"அப்போ இதுக்கு என்ன அர்த்தம் ?"

"தெரியலை... உங்களுக்குப் பிடிச்ச மாதிரி இருக்கணும். உங்களையே சுத்தி வந்துண்டு இருக்கணும். உங்க கூடவே இருக்கணும். இவ்வளவு ஏன்... உங்களைப் பார்த்துண்டே உயிரை விடணும்." என்றவளை அவன் விழிகள் கலங்க பார்த்திருந்தான்.

"என்னைப் பார்த்தா பைத்தியக்காரி மாதிரியிருக்கான்னா ?"

"இல்லைடி... என்னையும் ஒருத்தி இப்படிப் பைத்தியக்காரி மாதிரி காதலிப்பாள்ன்னு நான் கனவில் கூட நினைச்சு பார்க்கலை. என் வாழ்க்கையை வரமா மாத்தின தேவதை பெண்ணடி நீ..." கணவனது காதல் வார்த்தையில் அவள் மன நெகிழ அவனைப் பார்த்திருந்தாள்.

அவர்களது காதல் வாழ்க்கையின் சாட்சியாக அவளது வயிற்றில் அவனது உயிர் உதித்திருந்தது. மருத்துவர் என்பதால் ஆராதனா தனது உடல் மாற்றத்தை எளிதாகக் கண்டு கொண்டாள். மாலையில் கணவன் வரும் நேரத்தை எதிர்பார்த்து அவள் காத்திருந்தாள். இன்று பார்த்து விஷ்ணுபிரஹான் பக்கத்தில் இருக்கும் நகரத்திற்கு விவசாயத்திற்கு வேண்டிய பொருட்களை வாங்க சென்று இருந்தான். அதனால் அவன் வர நேரமானது. அவன் ஜீப்பில் இருந்து இறங்கியதும் அவள் ,

"அத்து..." என்று ஓடி வந்து கட்டி கொண்டாள்.

அவன் வெளியில் இருந்து எப்போது வந்தாலும் அவள் இப்படி ஓடி வந்து அணைத்துக் கொள்வது வழக்கம். அவன் காரணம் சொல்லாது திடுமென அவளைப் பிரிந்ததன் விளைவு இது என்பது அவனுக்குப் புரிந்து தான் இருந்தது. அவளது மனம் புரிந்து அவனும் அவளை ஆறுதலாக அணைத்து கொள்வான். இதோ அப்போதும் அவன் அதையே செய்தான்.

"உன்னை விட்டு எங்கேயும் போக மாட்டேன்டி." என்று அவன் சிரித்தபடி கூற...

"போங்க அத்து..." என்றவள் அவனை வீட்டினுள் அழைத்துச் சென்றாள்.

சுந்தரி , பணிப்பெண் இருவரும் உறங்க சென்றிருக்க... வீடே நிசப்தமாய் இருந்தது. அவன் தன்னைச் சுத்தப்படுத்திக் கொண்டு சாப்பிட அமர்ந்தான். ஆராதனா அவன் முன் ஒரு தட்டை நீட்டினாள். அதில் 'XX' மற்றும் 'XY' வடிவத்தில் இரு கேக்குகள் இருந்தது.

"நீ கேக் செஞ்சு பழகுறதுக்கு நான் தான் சோதனை எலியா ?" என்று அவன் போலியாகச் சலித்தபடி கேக்கை எடுக்கப் போனான்.

"அத்து..." அவனது கையில் அடி போட்டவள் ,

"எந்தக் கேக் வேணும் ?" என்று கேட்க...

"இரண்டும் ஒரே மாதிரியா தான் இருக்கு... இதில் எதைத் தேர்ந்து எடுக்கிறது ? எனக்கு ரெண்டும் வேணும்."

"ரெண்டுமா ? ம்ஹூம் , சான்ஸ் இல்லை..." என்று அவள் உதட்டை பிதுக்க... அவள் ஏதோ பொடி வைத்து பேசுகிறாள் என்பது அவனுக்குப் புரிந்து போனது.

"என்ன சொல்ற பேபி ? எனக்குப் புரியலை." என்க...

"எக்ஸ் , எக்ஸ் கேக் பெண் குழந்தை குரோமோசோமையும் , எக்ஸ் , வொய் கேக் ஆண் குழந்தை குரோமோசோமையும் குறிக்கிறது... உங்களுக்கு எந்தக் குழந்தை வேணும் ?" தான் ஒரு மருத்துவர் என்பதைக் கேக்கிலும் நிரூபித்தவள் அவனது கையை எடுத்து தனது வயிற்றில் வைத்தபடி கேள்வி கேட்க...

"உண்மையாவா பேபி... ?" என்றவன் தனது மகிழ்ச்சியை அப்பட்டமாய் முகத்தில் காட்டினான். அடுத்த நொடி நாற்காலியில் இருந்து எழுந்தவன் மனைவியவளை தூக்கி சுற்றியபடி ,

"முதலில் எனக்கு ஆண் குழந்தை தான் வேணும். என் அப்பா எனக்குத் திரும்ப வேணும் பேபி. அதுக்குப் பிறகு உன்னை மாதிரி நிறையப் பெண் குழந்தைகளைப் பெத்துக்கலாம்." என்க...

"மம் , ம்..." என்று அவள் நாணத்துடன் பதிலளித்தாள்.

அவளை நாற்காலியில் அமர வைத்துக் கேக்கை எடுத்து அவளுக்கு ஊட்டியவனின் விழிகள் கலங்கி போயிருந்தது. அவள் ஏனென்று கேட்க...

"அன்னைக்கு நீ டெலிவரி பார்க்கும் போது அந்தப் பொண்ணோட கணவன் கிட்ட சொன்னியே ' தாய்மை ஒரு வரமம் ' ன்னு... அன்னைக்கு உன்னை நினைச்சு நான் ரொம்ப மனசு கஷ்டப்பட்டேன். இந்த வரத்தை உனக்குக் கொடுக்காத பாவியாகிட்டேனேன்னு என்னை நானே வெறுத்தேன். உன்னை ரொம்பக் கொடுமை பண்ணியிருக்கேன்ல. எத்தனை கேலி , கிண்டல் பேச்சு... எல்லாத்தையும் தாண்டி வர நீ எத்தனை கஷ்டப்பட்டு இருப்ப. நான் என் சந்தோசம்ன்னு சந்தோசமா இருந்துட்டு உன்னை ரொம்ப வருத்திட்டேன் பேபி. என்னை மன்னித்துவிடு."

வெகுநாட்கள் கழித்துப் பழைய கதை பேசி மன்னிப்பு கேட்கும் கணவனைக் கண்டு அவளது மனம் வருந்தியது. அவள் அவனை ஆறுதலாக அணைத்து கொண்டாள்.

"இப்போ தான் வரம் கிடைச்சிருச்சே..." என்று அவள் கூற... அப்போதும் அவனது முகம் மலரவில்லை.

"வரம் கொடுத்த சாமிக்கு ஸ்பெசல் பூஜைக்கு ஏற்பாடு செஞ்சிருந்தேன். அதைக் கேன்சல் பண்ணிரலாமா ?" அவள் குறும்புடன் அவனைப் பார்த்து கேட்க... மனைவியின் குறும்பில் அவனது உதடுகளில் புன்னகை மலர்ந்தது.

"சாமி எப்பவோ ரெடி..." என்றவன் அவளைத் தனது கைகளில் ஏந்தி கொண்டான்.

ஆராதனா குழந்தை உண்டாகி இருப்பதை அறிந்து சுந்தரி மனம் மகிழ்ந்தார். ஆராதனா வீட்டினர் மகிழ்ச்சியில் ஆர்ப்பரித்தனர். அர்ஜூன் , அவந்திகா மனதில் உறுத்தி கொண்டிருந்த கவலை முற்றிலும் முழுதாக நீங்கியது. எல்லோரும் சென்று ஆராதனாவை பார்த்துவிட்டு வந்தனர்.

ஸ்ரீராம் தனது மனைவியிடம் தனிமையில் , " என் கனவு எப்போது நனவாவது சீதா ?" என்று கேட்க... அவள் புரியாது கணவனைப் பார்த்தாள்.

"கனவில் நமக்குக் குழந்தைகள் இருக்குன்னு நான் சொன்னேனே... மறந்துவிட்டாயா ?" அவன் கூறியதும் அவளுள் கலவையாய் உணர்வுகள் எழ ஆரம்பித்தது.

அவளது அண்ணனின் திருமணம் முடிந்த சமயம் கம்பீரமாகக் காதலை தன்னிடம் சொன்ன ஸ்ரீராம் அவளது மனக்கண்ணில் வலம் வந்தான்.

"நான் மறந்துட்டேன்னா... நீங்க ஞாபகப்படுத்த மாட்டேளா ?" நாணத்துடன் கூறிவளை கண்டு வியப்பில் விழி விரித்தவன் அடுத்தக் கணம் அவள் அருகில் வந்தே ,

"சீதா..." என்று ஏக்கத்தோடு அவளது முகத்தை நிமிர்த்த... அவள் எதிர்பார்ப்போடு விழி மூடி நின்றாள்.

அதன் பின்பு மன்னவன் மங்கையவளை தன்னவளாக்கி கொள்ள எந்தத் தடையும் இல்லை. எந்த நேரத்திலும் , யாரையும் வருத்தாதவன் ஸ்ரீராம். அப்படிப்பட்டவன் தன் மனைவியை வருந்த செய்வானோ! அவளைக் கிடைப்பதற்கரிய பொக்கிசமாய்க் கொண்டாடி மகிழ்ந்தான்.

பரத் , கனிஷ்கா வாழ்க்கை மட்டும் அப்படியே தான் சென்றது. தினம் ஒரு சண்டை , மோதல் என்று அமோகமாகச் சென்றது. அன்று கனிஷ்கா வேலையில் இருந்து சீக்கிரமே வீட்டிற்கு வந்துவிட்டாள். வேலை விசயமாக வெளியில் சென்றிருந்த பரத் கோபமாக வீட்டிற்கு வந்தான்.

"ஏன்டி அப்படிச் சொன்ன... ?" அவன் அடக்கப்பட்ட கோபத்துடன் மனையாளிடம் கேட்க...

"எப்படிச் சொன்னேனஂ ?" என்றவளது குரலில் எகத்தாளம் நிறைந்து வழிந்தது.

"உன் பிஏவோட ரேட் கேட்டு சொல்லுன்னு தனா என் கிட்ட வந்து கேட்கிறான். கேட்டஂா , நீ தான் கேட்க சொன்னதா சொல்றான். அப்படி என்னத்தடி அவன் கிட்ட சொல்லி தொலைச்ச ?"

"உண்மையைத் தானே சொன்னேன்." அவள் அலட்டாது கூற...

"என்னை வெறியேத்தாம உண்மையைச் சொல்லு கனி..." அவனது குரலில் இருந்த கோபத்தைக் கண்டு மனம் துணுக்குற்றாலும் வெளியில் அதைக் காட்டி கொள்ளாது அவள் கூற துவங்கினாள்.

"இன்னைக்கு நீங்க ஆபிசில் இல்லாதப்போ உங்க பிரெண்ட் தனா உங்களைப் பார்க்க வந்திருந்தார்."

"அவன் என் பிரெண்ட் இல்லை... தொழில் முறையில் பழக்கம் அவ்வளவே..."

"அது எப்படி நேக்கு தெரியுமஂ ? என்னைப் பார்த்ததும் வழிஞ்சான். கொடுமையேன்னு சகிச்சிண்டேன்."

"எதுக்குச் சகிச்சிக்கணுமஂ ? திட்ட வேண்டியது தானே."

"எம்டியே இப்படித் தான் வழியறார். அந்தாளை என்னால் திட்ட முடியுதா என்ன ? நினைச்சது எல்லாம் செஞ்சிட முடியுதஂா ?" அவள் பெருமூச்சு விட... அதைக் கேட்டு பரத்தின் உதடுகளில் புன்னகை அரும்பியது.

"வழிஞ்சிக்கிட்டே கிட்டே வந்தவன்..." பரத் தனது கை முஷ்டியை கோபமாய் இறுக்குவதைக் கண்டு அவள் மேலே சொல்லாது நிறுத்த...

"சொல்லி தொலை..." அவன் வார்த்தைகளைக் கடித்துத் துப்பினான்.

"ஒரு நாள் நைட் உன்னோட ரேட் என்னன்னு கேட்டான். நேக்கு ரேட் பிக்ஸ் பண்ணி பழக்கம் இல்லை. எங்க எம்டி கிட்ட கேளுங்கோன்னு சொன்னேன்." அடுத்த நொடி பரத் கனிஷ்காவின் கன்னத்தில் ஓங்கி அடித்திருந்தான். அவள் கன்னத்தைத் தாங்கியபடி கோபமாய் அவனை முறைத்து பார்த்தாள்.

"தனா என் கிட்ட கேட்டதுக்கு இப்படித் தான்டி அவனை அடிச்சிட்டு வந்தேன். நீயும் இதே மாதிரி அவனை அடிச்சிருந்தால் நல்லா இருந்திருக்கும். நீ என்னடான்னா... ? ச்சே... என் முகத்தில் முழிக்காதே போடி இங்கே இருந்து..." என்று அவன் கோபமாய்க் கத்தினான்.

"நீங்க மட்டும் என்ன ஒழுங்கா ? நீங்களும் இதே மாதிரி பேசியவர் தானே. என் கழுத்தில் தாலி கட்டிண்டா எல்லாம் சரியா போகுமா ?"

"சரியா போகும்... போகணும்..." என்றவன் அவளைப் பார்த்த ,

"அன்னைக்கு நான் அப்படிக் கேட்டதுக்குக் காரணம் உன் அண்ணன்..." என்க... அவள் அதிர்வுடன் அவனைப் பார்த்தாள்.

"பொய் சொல்லாதேள்." அவளது மேனி நடுங்கியது. ஏனெனில் கணவன் கூறிய வார்த்தைகள் அப்படிப்பட்டது.

"நான் எதுக்குடி பொய் சொல்ல போறேன். நான் உன்னைக் காதலிக்கலை தான். ஆனால் என் மனசில் நீ தான் இருக்க. பதினேழு வயசில் காதலை சொன்ன அந்தக் கனி இன்னமும் என் மனசில் அழியாம பத்திரமா இருக்கிறாள். இது காதலான்னு எனக்குத் தெரியலை. எனக்குக் கல்யாணம்ன்னா என் மனசில் தோன்றிய பெண் நீ மட்டும் தான்." கணவனது மனதில் தான் இருப்பதை அறிந்து

அவளது விழிகள் கலங்கி போனது. மனம் நெகிழ்ந்து போனது.

"ஆனா உன் உண்ணன் என் தங்கையைப் பார்த்து சொன்ன வார்த்தையில் எல்லாமே மாறி போச்சு. ' நான் கடத்திட்டு போகணும்ன்னு அவசியம் கிடையாது மிஸ்டர். பரத். இப்போ நான் கூப்பிட்டாலும் உன் தங்கை என் கூட வருவாள். அதுவும் உங்க கிட்ட பொய் சொல்லிக்கிட்டு. இதிலேயே தெரிந்திருக்குமே , ஐயாவோட பவர் என்னன்னு... ' இது உன் அண்ணன் சொன்ன வார்த்தைகள். இதைக் கேட்கும் போது ஒரு அண்ணனா எனக்குக் கோபம் வராதா ? என் தங்கை இவனுக்கு என்ன கிள்ளுக்கீரையா ? அதான் ஒரு அண்ணனா , வலின்னா என்னன்னு தெரிய அவனது பாடத்தை அவனுக்குத் திருப்பிப் படிச்சேன். நான் செஞ்சது தப்பா ?"

அண்ணன் செய்தது தவறு தான். ஆனால் அதைவிடப் பரத் செய்தது மிகப் பெரிய தவறு அல்லவா!

"தவறு தான் மிஸ்டர். பரத். என் அண்ணன் கூப்பிட்டது உங்க தங்கையை இல்லை... அவனுடைய மனைவியை. ஆனா நீங்க கூப்பிட்டது அவனுடைய தங்கையை , அதுவும் திருமணமாகாத தங்கையை. எங்க அண்ணனை பழிவாங்க என்னைக் கேவலப்படுத்திட்டேள்." என்றவளது குரல் கமறியது.

"உன் அண்ணன் பண்ணியது தப்பு தான். அப்போ பட்டு அவனுடைய மனைவி இல்லை. இரண்டு பேருக்கும் விவாகரத்தாகி இருந்தது. அதை மனசில் வச்சிக்கிட்டு நீ பேசு." என்று பரத் அடங்காது எகிறினான்.

"அப்போ நான் மட்டும் உங்களுக்குக் கிள்ளுக்கீரையா ?" அவள் கோபமாய்ப் படபடக்க...

"நீ கிள்ளுக்கீரை இல்லைடி... என்னைக் கொத்தி கொத்தி உயிரை எடுக்கும் கொத்தும் கிளி."

கோபத்தில் நுனிமூக்கு சிவக்க நின்றிருந்த மனையாள் பரத்தின் கண்களுக்குக் கொத்தும் கிளியாகத் தான் தெரிந்தாள்.

"என் கிட்ட வச்சுக்காதீங்க... கொத்தி கொத்தி கொன்னுருவேன்."

"எங்கே கொத்து பார்ப்போமம் ?" என்று அவன் வீம்புடன் அவள் அருகில் வந்து நின்றான்.

அவள் திகைத்து பின்வாங்க... அவன் நமட்டு சிரிப்புடன் முன்னேறினான். பின்னே நகர்ந்தவள் கட்டில் தடுக்கி படுக்கையில் மல்லாக்க விழுந்தாள்.

"வசமா மாட்டிக்கிட்டியா ?" என்று அவன் அவள் மீது பாய்வது போல் பாவனைச் செய்ய... அதில் பெண்ணவள் பயந்து போய் விழிகளை மூடி கொண்டாள்.

"ப்ளீஸ் என்னை விட்டுருங்கோன்னா. என் மனசில் உங்களை ஹீரோ ரேன்ஜ்க்கு வச்சிருக்கேன். இப்படி வில்லனா மாறாதீங்கோ."

அதற்குப் பதில் கூறாது அவன் சிறு புன்னகையுடன் கைகளைக் கட்டி கொண்டு மனைவியைப் பார்த்திருந்தான்.

"உங்களை உயிருக்கு உயிரா காதலிக்கிற என்னை இப்படி எல்லாம் பழிவாங்காதீங்கோ. நான் ரொம்பப் பாவம்ன்னா..." என்று அவள் கெஞ்ச...

"யாரு... ? நீ பாவமா ?" என்று நக்கலாய் கேட்டபடி பரத் அவள் அருகே அமர்ந்தான். அவனது குரலில் விழிகளைத் திறந்தவள் அவன் அருகில் அமர்ந்திருப்பதைக் கண்டு பதறியடித்துக் கொண்டு எழுந்தமர்ந்தாள்.

"எங்கேடி போற ? அதான் நீ என்னைக் காதலிக்கிறேன்னு வாக்குமூலம் கொடுத்தாச்சே. அப்புறம் என்ன ?" அவன் தெனாவெட்டாய் கேட்க...

"வேண்டாம்... கையை விடுங்கோ. நான் காதலிச்சு என்ன பிரயோஜனமம் ? உங்க மனசுல என்னைப் பத்தின

நினைப்புத் தப்பா தானே இருக்கு." என்றவளது விழிகள் கலங்கி போனது. அதைக் கண்டு அவன் சற்று இறங்கி வந்தான்.

"அதான் சொன்னேன்ல... உன் அண்ணன் பேசிய பேச்சுக்கு பதிலடி கொடுக்கத் தான்னு..."

"அதுக்காக என்ன வேணும்ன்னாலும் பேசுவேளா ?" என்று அவள் முறுக்கி கொள்ள...

"நீ இப்படியே முறுக்கிட்டு இரு... நான் என் வேலையைப் பார்க்கிறேன்." என்றவன் மனைவியை அணைத்துக் கொள்ள...

"விடுடா பொறுக்கி..." என்று அவள் அவனை அடிக்க...

"பொறுக்கி இப்படித் தான்ம்மா பண்ணுவான்..." என்றவன் அவளது முகம் நோக்கி குனிந்தான். அவள் பயத்தில் விழிகளை மூடி கொண்டாள்.

"ஏன்டி , என்னை மன்னிக்கவே மாட்டியா ? ஏதோ ஒரு கோபத்தில் சொன்ன வார்த்தையை இன்னமும் பிடிச்சு தொங்கிட்டு இருப்பியா ? என்ன சண்டை போட்டாலும் , அடிச்சாலும் நீ தான்டி என் பொண்டாட்டி. நீயே என்னை விட்டு போனாலும் நீ மட்டும் தான் என் பொண்டாட்டி..."

"என் பொண்டாட்டி நீ பொண்டாட்டி நீ தான் டி
செல்ல குட்டி செல்ல குட்டி தான் டி
எம் மனசில் உம் மனச இப்போ சோடி சேக்குறியே"

என்று அவன் பாட்டாகவே பாடி காட்ட... அவளது இதழ்களில் புன்னகை அரும்பியது.

"நீங்க பேசிய பேச்சுக்கு உங்களை எல்லாம் மன்னிக்க முடியாது." என்று அவள் முறுக்கி கொள்ள...

"சரி , நீ மன்னிக்கலைன்னா விடு... நான் உன்னை மன்னிச்சிட்டு போறேன்." என்றவன் தனது முத்தத்தால் அவளை அர்ச்சித்தான்.

"நான் என்ன தப்பு பண்ணினேனஂ ? நீங்க என்னை மன்னிக்கிறதுக்கு..."

"புருசனை அடிச்சது முதல் தப்பு..."

"அப்போ நமக்குக் கல்யாணமாகலை..."

"நீ என்னைத் தவிர வேறு ஒருத்தனை கல்யாணம் பண்ணிக்குவியஂா ?" அவனது கேள்விக்கு அவள் அமைதியாக இருக்க...

"என்ன சைரன் சைலன்ட்டாகிட்ட..."

"இரண்டாவது தப்பை சொல்லுங்கோ..."

"புருசன்ங்காரன் பக்கத்தில் வந்தாலே சைரன் மாதிரி அலர்றது. அப்புறம் புருசனை கொலைகாரன் மாதிரி பார்க்கிறது."

"ஓஹோ..." அவள் நக்கலாய் அவனைப் பார்க்க...

"தப்புக்குத் தண்டனை கொடுக்கலாமஂா ? இல்லை போனா போகுதுன்னு பாவப்பட்டு மன்னிக்கலாமஂா ?"

"ஒண்ணும் வேண்டாம்..." அவள் முகத்தைத் திருப்பிக் கொண்டு முணுமுணுக்க...

"உன் அண்ணன் மாதிரி எல்லாம் எனக்குப் பொறுமை இல்லை. நான் செஞ்ச தப்புக்கு மன்னிப்பு கேட்டாச்சு. அதனால..."

"அதனால... ?" அவள் பயத்தோடு அவனைப் பார்த்தாள்.

திருத்தமாகும்...!!!

"அதனால நான் என்ன சொல்றேன்னா... நம்ம காலம் நீண்டு இருக்கு. நான் தாத்தாவான பிறகு கூட நீ என்னைப் பொறுமையா மன்னிச்சுக்கோ... அதுக்கு முன்னாடி உன்னைய என் மகனுக்கு அம்மாவாக்குகிறேன்."

"ஏன் பொண்ணா இருக்கக் கூடாதா ? பையனா தான் இருக்கணுமா ?" அவனுக்கும் , தனக்குமான சண்டையை மறந்துவிட்டு பெண்ணியவாதியாய் அவள் சிலிர்த்துக் கொள்ள...

"ஏன் கூடாது ? உன்னை மாதிரி நிறையப் பொண்ணுங்களைப் பெத்துக்கலாம். அதுக்கு நீ..." என்றவன் அவளின் காதுகளில் ரகசியம் பேச...

"ச்சீ... பார்க்க அம்பி மாதிரி இருந்துண்டு பேச்சை பாரு..." அவள் லஜ்ஜையுடன் அவனது முகத்தைப் பிடித்துத் தள்ளினாள்.

"இதில் எல்லாம் ரெமோவா தான் இருக்கணும் கனி..." என்றவன் அவளது இதழ் அருகே தனது இதழை கொண்டு சென்றவன் சற்று நிதானித்தான்.

"பிடிக்கலையா ?" அவனது குரல் அப்படியே குழைந்து போய் ஒலித்தது.

"பிடிக்காம தான் உங்க கூட இப்படி ஈஷிண்டு இருக்கேனா ?" அவள் விழிகளில் நாணத்தைச் சுமந்து கொண்டு கூற...

அடுத்த நொடி பரத் அவளைத் தன்வசப்படுத்தி இருந்தான். பெண்ணவளும் தனது மனஸ்தாபத்தை மறந்து அவனுடன் ஒன்றினாள். கூடல் முடிந்ததும் கனிஷ்கா ஓவென அழுதாள்.

"எதுக்குடி சைரனை அலற விடுற ?" அவன் அறை கதவை பயத்துடன் பார்த்தான்.

"நீங்க என்னை மயக்கி ரே பண்ணிட்டேள்." என்று அவள் தேம்ப...

"அடியேய் மயக்குறதுக்குப் பெயர் காதல்... மிரட்டுறதுக்குப் பெயர் தான் ரேப்..." என்றவனஂ ,

"மயக்கமா ? மிரட்டலான்னஷ ? மீண்டும் ஒரு முறை ஒத்திகை பார்க்கலாமா ?" என்று கேட்டபடி அவன் அவளது முகம் நோக்கி குனிந்தான்.

"அய்யே போதுமே..." என்றவள் அவனைக் கண்டு பழிப்பு காட்டியபடி எழுந்து ஓடினாள். அவளது சேட்டையைக் கண்டு ரசித்தபடி புன்னகையுடன் படுத்திருந்தான் பரத்.

மறுநாள் காலையில் கனிஷ்காவை அலுவலகத்திற்கு வர வேண்டாம் என்று பரத் கூற... அவள் கோபத்துடனஂ ,

"எதுக்கஷ ? எதுக்கஷ ?" என்று ராகம் போட்டு கேட்க...

"வீட்டிலேயுமஂ , ஆபிசிலேயும் இந்த மூஞ்சைய பார்த்து சலிச்சு போச்சு. அதான் எனக்குப் புதுப் பிஏவை அப்பாயிண்ட்மென்ட் பண்ணிட்டேன்."

"என்னதஷ ?" அவள் அதிர...

"மஂ , ம்... இனி உன் தொல்லை இல்லாம ஆபிசில் என் பிஏவோட நிம்மதியா இருப்பேன். அவளோட பெயர் ரீட்டா. என்னோட டெர்ம்ஸ் அன்ட் கன்டிசன்ஸ்க்கு ஓகே சொல்லிட்டாள். எல்லாத்துக்கும்..." கடைசி வார்த்தையை அழுத்தி சொன்னவன் அவளைக் கண்டு கண்சிமிட்டினான்.

"ஓஹோ..." என்றவள் அவன் அருகில் வந்து தனது கைகளால் அவனை அடிக்கத் துவங்க...

"நீ தான் இதுக்கு எல்லாம் ஒத்துக்க மாட்டேங்கிற... அதான் அதுக்கு வேற ஏற்பாடு பண்ணிட்டேன்." அடிக்கும் அவளது கைகளைத் தடுத்தபடி அவன் கூற...

"அப்போ நேத்து நடந்ததுக்கு என்ன பெயரஂ ?" என்று கேட்டபடி அவள் தனது கையை ஓங்கி கொண்டு வர...

அடுத்த நொடி அவளது இதழ்களைச் சிறை செய்தவன் தனது காரியத்தைச் சாதித்த பின்பே அவளை விட்டான்.

"நேத்து நடந்ததுக்குப் பெயர் இது தான்..." என்று அவன் வேண்டுமென்றே அவளை வம்பிழுக்க...

"பொம்மனாட்டி எதுவும் பேச மாட்டா , செய்ய மாட்டாங்கிற தைரியம் தானே... ஆனா நான் அமைதியா இருக்க மாட்டேன். இழுத்து வச்சு நறுக்கிருவேன் நறுக்கி..."

"ஐயோ..." அவன் பயத்துடன் அலற... ' அது ' என்பது போல் அவள் கெத்தாக அவனைப் பார்த்தாள்.

"இனி ரீட்டாவை பத்தி பேசுவேளா ?" அவள் அவனை மிரட்ட...

"என் பிஏவை பத்தி பேசாம எப்படிடி இருக்க முடியும ?" அதைக் கேட்டவள் முகம் கசங்கி போனது. பரத் பதில் சொல்லாது எழுந்து சென்று மேசை மீதிருந்து ஒரு கோப்பை எடுத்து வந்தான்.

"அப்போ... உண்மையா தான் சொல்றேளா ?"

"உன் கிட்ட பொய் சொல்வேனா. நான் சொல்வது எல்லாம் உண்மை... உண்மையைத் தவிர வேறில்லை..." என்றவன் கோப்பை அவளது கைகளில் திணித்தான்.

"டிவோர்ஸ் பேப்பர்சா... ? என் அண்ணா செஞ்சதுக்கு என்னைப் பழிவாங்க போறேளா ?" அவளுக்கு அழுகை வரும் போலிருந்தது.

"ஆமா..." என்று அவன் நமட்டு சிரிப்புடன் கூற...

"நான் டிவோர்ஸ் எல்லாம் கொடுக்க மாட்டேன்."

சற்று முன் காதலோடு தன்னுடன் இணைந்த காதல் மனைவி இப்போது இப்படிப் பேசுவதைக் கண்டு பரத்திற்கு வருத்தமாக இருந்தது. தன்னை அவள் புரிந்து கொள்ளவில்லையா ? இல்லை , தான் அவள் புரிந்து

கொள்ளும்படி நடந்து கொள்ளவில்லையா ? அவனுக்குக் குழப்பமாக இருந்தது.

"முதல்ல ஃபைலை பிரிச்சு பாரு கனி..." அவன் அதட்டலுடன் கூற... அவள் முகச் சிணுக்கத்துடன் அதைப் பிரித்துப் பார்த்தாள்.

அடுத்தக் கணம் அவளது முகம் மலர்ந்து போனது. அவள் மகிழ்ச்சியோடு கணவனைக் கட்டி கொண்டு அவனை முத்த மழையால் குளிப்பாட்டினாள். அவளது அதிரடியில் அவன் கட்டிலில் மல்லாக்க விழுந்தான். ஆனாலும் அவளை விலக்காது அவளது முத்தங்களை ரசித்து அனுபவித்தான்.

"இப்போவாவது என்னை நம்புறியா ?"

"மஃ , ம்..." என்றவளது விழிகளில் கண்ணீர் தேங்கியது.

ஐஏஎஸ் படிக்க வேண்டும் என்பது கனிஷ்காவின் லட்சியம் என்பதைத் தெரிந்து கொண்ட பரத் அதற்கான சிறந்த பயற்சி முகாமின் விண்ணப்பத்தை வாங்கி வந்திருந்தான்.

"இந்தக் கோச்சிங் சென்டரில் உனக்குத் தேவையானது எல்லாத்தையும் அவங்களே பார்த்துக்குவாங்க." என்றவனை அவள் இமைக்காது காதல் பொங்க பார்த்திருந்தாள்.

"இப்போ சொல்லுடி... நான் உன்னோட ஹீரோவா ? வில்லனா ?" என்று அவன் கேட்க...

"ஆன்ட்டி ஹீரோ..." என்றவள் அவனைப் பார்த்துப் பழிப்பு காட்டினாள்.

"என்னடி இப்படிச் சப்புன்னு சொல்லிட்ட." அவன் பாவமாக அவளைப் பார்த்தான்.

"பகல்ல நீங்க வில்லன்... நைட்டில் மட்டும் தான் ஹீரோ... அப்போ நீங்க ஆன்ட்டி ஹீரோ தானே..." அவளது விளக்கம் கேட்டு அவன் வாய்விட்டுச் சிரித்தான்.

"இப்போ பகல்லயும் நான் ஹீரோ மூடில் தான் இருக்கேன். இப்போ இந்த ஹீரோ கிட்ட இந்த ஹீரோயின் ஐ லவ் யூ சொல்லலாமே." கணவனது வார்த்தை ஜாலத்தில் மெய்மறந்து அவனைக் கண்டாள் ,

"ஐ லவ் யூன்னா..." என்றவளது முகம் வெட்கத்தில் சிவந்தது. அவன் மகிழ்வோடு அவளை அணைத்துக் கொண்டான்.

****

சில மாதங்களுக்குப் பிறகு...

"இன்னும் கொஞ்சம் தூரம் தான் பேபி..." என்று கூறியபடி அசுர வேகத்தில் ஜீப்பை ஓட்டி கொண்டிருந்தான் விஷ்ணுபிரஹான்.

பின்னால் இருக்கையில் ஆராதனா பல்லை கடித்து வலியை பொறுத்து கொண்டிருந்தாள். அவள் வலியில் அரற்றினால் அவளை விட அதிக வலியில் கணவன் துடிதுடித்துப் போய்விடுவான் என்பதாலோ என்னவோ அவள் தனது வலியை தாங்கி கொண்டாள். அவனது சுகமான சுமைதாங்கி அவள் அல்லவா! சுந்தரி அவளை ஆறுதலாக அணைத்தபடி அமர்ந்திருந்தார். அவரது வாய் ஏதோ ஒரு சுலோகத்தை விடாது முணுமுணுத்துக் கொண்டிருந்தது.

மருத்துவமனையின் முன் ஜீப்பை நிறுத்திய விஷ்ணுபிரஹான் வேகமாய் இறங்கி வந்து மனைவியைத் தனது கைகளில் தாங்கி கொண்டு மருத்துவமனையினுள் ஓடினான். அங்கு ஆராதனா ஏற்கெனவே மருத்துவராகப் பணியாற்றி வருகிறாள். வீட்டில் இருந்து கிளம்பும் போதே அவள் அந்த வலியிலும் மருத்துவமனைக்கு அழைத்துப் பிரசவத்திற்குத் தேவையான எல்லாவற்றையும் தயாராக எடுத்து வைக்கும்படி கூறிவிட்டு தான் கிளம்பி வந்தாள். அவன் மனைவியைப் பிரசவத்திற்குக் கூட அவளது தாய்வீட்டிற்கு அனுப்பவில்லை.

தன்னை மருத்துவமனை கட்டிலில் படுக்க வைத்துவிட்டு கவலையுடன் பார்த்திருந்த கணவனைக் கண்டு புன்முறுவல் பூத்தவளை ,

"அத்தை , ஃபர்ஸ்ட் டெலிவரி என்பதால் கொஞ்சம் லேட்டாகும். நீங்க தான் பயந்து போய் நேரத்தோடு என்னை இங்கே கூட்டிட்டு வந்துட்டீங்க. நீங்க கவலைப்படாதீங்க. நான் பார்த்துக்கிறேன்." என்று அவனுக்கு ஆறுதல் கூறினாள்.

"ரொம்ப வலிக்குதா பேபி ?" அவள் மூக்குத்தி குத்தியதற்கே வலியால் துடித்த கணவன் அவன்... அப்படி இருக்கும் போது இந்த வலி எப்படி இருக்கும் என்று சொன்னால் தாங்குவானா ? அவனுக்காக அவள் தனது வலியை மறைத்தாள்.

"அப்படி எல்லாம் இல்லை அத்து... நானே ஒரு டாக்டர். என்னால் மேனேஜ் பண்ணிக்க முடியும்."

மனைவியின் நம்பிக்கையான வார்த்தையில் அவளது வயிற்றுப் புறம் குனிந்தவன் அவளது மேடிட்டு இருந்த வயிற்றின் மீது உதடுகளை அழுத்தமாய்ப் பதித்தை ,

"கண்ணா , நீங்க சமத்து பையன் தானே... அம்மாவை ரொம்பக் கஷ்டப்படுத்தாதீங்க." என்றவனது தலைமுடியை அவள் செல்லமாய்க் கலைத்து விட்டாள்.

"அத்தை , உங்க குழந்தை உங்களைப் போல் சமத்து தான்..." மனைவியாய் , தாயாய் அத்தனை பெருமிதம் அவளிடத்தில்... ஏனென்றால் அவர்களது குழந்தை மசக்கை என்று அன்னையைப் போட்டு படுத்தவில்லை. அவள் கர்ப்ப காலத்திலும் எப்போதும் இருப்பது போல் சாதாரணமாகத் தான் இருந்தாள்.

அடுத்து மூன்று மணி நேரம் விட்டு விட்டு வந்த வலியானது பின்பு அதிகரித்தது. விஷ்ணுபிரஹான் மனைவியை விட்டு எங்கும் செல்லாது அவள் அருகிலேயே இருந்தான். அவனுக்காக வலியை பொறுத்து கொண்டவள் மகவை

பிரசவிக்கும் போது கத்தவில்லை. மாறாக அவளது வலி மொத்தமும் அவளது விழிகளில் இருந்து விழிநீராய் வழிந்து ஓடியது. அவளது கைகள் கணவனது கைகளை இறுக்கமாய்ப் பிடித்துக் கொண்டது. அவளது இறுகிய பிடியில் அவளது வலியை உணர்ந்தவனின் விழிகளும் விழிநீரை சிந்தியது.

வீலென்று அழுகையுடன் அவர்களது மகன் மண்ணுலகில் அவதரித்தான். குழந்தையைத் தூக்கிய மருத்துவர் ,

"ஆண் குழந்தை... வாழ்த்துகள்." என்க...

ஆராதனா மகிழ்ச்சியுடன் கணவனை ஏறிட்டு பார்த்தாள். அவனும் நெகிழ்ச்சியான மனநிலையுடன் மனைவியைப் பார்த்தான். அவனது உதடுகள் மகனுக்காகப் புன்னகையைச் சிந்திய போதும் , அவனது விழிகள் தன்னவளுக்காகக் கண்ணீரை சிந்தியது. அப்போதும் அவனால் தனது நேசத்தினை வாய்விட்டு சொல்ல முடியவில்லை. சொல்ல முடிந்தாலும் அவன் கூற மாட்டான் என்பது வேறு விசயம். அவளது கையை இறுக்கப் பிடித்துக் கொண்டு அவளது நெற்றியில் அழுத்தமாய் முத்தமிட்டான் ,

"தேங்க்ஸ் பேபி..." என்றான் மனதார... அவனையே பார்த்து கொண்டிருந்தவள் அவன் சொல்லாத காதலை எல்லாம் சேர்த்து வைத்து அவனிடம் ,

"ஐ லவ் யூ அத்து..." என்றாள் வார்த்தைகளால்... அவளது வார்த்தையில் கண்ணீருடன் சிரித்தவன் பின்பு அவளது நெற்றியில் விளையாட்டாய் முட்டினான்.

ஆராதனா குடும்பத்தினர் எல்லோரும் குழந்தையைப் பார்த்துவிட்டுச் சென்னை திரும்பிவிட... அவந்திகா மட்டும் அங்கேயே தங்கிவிட்டாள்... கூடவே அர்ஜூனும் மனைவியுடன் இருந்துவிட்டான்.

"இந்த வயதிலும் உங்கப்பா உங்கம்மாவை விட்டுட்டு இருக்க மாட்டேங்கிறாரே... என்ன ஒரு லவ் ?"

விஷ்ணுபிரஹான் மனைவியிடத்தில் மாமனாரை கேலி செய்து சிரித்தான்.

"எங்கப்பா வெளியில் தான் புலி... வீட்டில் எலி..." என்றவள் அவனைப் பார்த்தா ,

"இங்கே மட்டும் என்ன வாழுதாம் ?" என்று கேலியாய் கேட்டாள்.

"சரண்டர்..." என்று அவன் தனது இரு கைகளையும் தூக்கி அவளிடம் சரணடைந்தான்.

அங்கிருந்த நாட்களில் மருமகனது சேவை குணத்தை நேரில் கண்ட அர்ஜூன் மருமகனை நினைத்துப் பெருமை கொண்டான். முதன்முறையாக விஷ்ணுபிரஹான் மீதிருந்த தனது பார்வையை அவன் மாற்றிக் கொண்டான்.

"நீங்க சாதிச்சிட்டீங்க மாப்பிள்ளை." என்று அவனை அணைத்து வாழ்த்தினான்.

"உண்மை தான் , நான் சாதிச்சிட்டேன் தான்..." என்றவனது பார்வை தாய்மை கொடுத்த பூரிப்பில் இன்னமும் அழகாய் ஜொலித்த மனைவியைக் காதலோடு பார்த்தது. அவளது காதலை அவன் திரும்பப் பெற்றதும் அவனது சாதனை தானே!

இதோ ஒரு மாதம் கழித்துக் குழந்தைக்குப் பெயர் சூட்டும் வைபவத்திற்காக அங்கு எல்லோரும் குழுமியிருந்தனர். விஷ்ணுபிரஹான் தனது தந்தையின் நினைவாகத் தனது மகனுக்கு ' ராகவேந்தர் ' என்று பெயரிட்டான்.

சீதா நான்கு மாதம் கர்ப்பமாக இருந்தாள். சும்மாவே ஸ்ரீராம் அவளைத் தங்க தட்டில் வைத்துத் தாங்குவான். இப்போது கேட்கவும் வேண்டுமோ... அவன் எங்கே இருந்தாலும் அவனது விழிகள் மனைவியின் மீதே இருந்தது. பரத் கனிஷ்காவின் படிப்பிற்காகக் குழந்தை பிறப்பை தள்ளி போட்டு இருந்தான். அவர்களது வாழ்க்கை எப்போதும் போல் அதிரடி சண்டையுமாய , அடாவடி காதலுமாய் அழகாய்ச் சென்றது.

ஐந்து வருடங்களுக்குப் பின்...

அர்ச்சனாவும் , விஜயும் குழந்தைகளின் விடுமுறைக்காக டோக்பூர் வந்திருந்தனர். அர்ச்சனா சொல்லாமலே அவளது மனம் அறிந்து வருடத்திற்கு ஒரு முறை விஜய் அவளையும் , குழந்தைகளையும் இங்கே அழைத்து வந்துவிடுவான். அதே போல் விஷ்ணுபிரஹான் , ஆராதனா சென்னை செல்லும் போது எல்லாம் அவர்களது வீட்டிற்குச் சென்று வருவது வழக்கம். அது பிள்ளைகள் இடையே நல்ல நட்புறவை ஏற்படுத்தியிருந்தது. விகாஷினி , வினய்க்கு ராகவேந்தர் என்றால் உயிர்.

ஸ்ரீராம் , சீதாவிற்குப் பெண் குழந்தை பிறந்திருந்தது. பெயர் ஜனனி... கனிஷ்கா முதல் முயற்சியில் ஐஏஎஸ் தேர்வில் தேர்ச்சி பெற்றாள். இப்போது அவள் பயிற்சி முடிந்து வேலையில் சேர்ந்துவிட்டாள். இப்போது அவள் மூன்று மாதம் கர்ப்பம். சும்மாவே அவள் பரத்தை ஆட்டிப்படைப்பாள். இப்போது அவனது குழந்தையை வேறு சுமந்து கொண்டிருக்கிறாள். அவனை ஆட்டுவிப்பதற்குக் கேட்கவும் வேண்டுமோ ? அவன் வெளியில் திட்டி கொண்டே அவளுக்கு வேண்டியதை செய்தாலும் மனதிற்குள் அதை விரும்பியே செய்தான். ஆனால் அதை அவன் அவளிடம் காட்டி கொள்ள மாட்டான். கள்வனின் மனதை கள்ளி அவள் தான் நன்கு அறிவாளே! எந்தளவிற்கு அவனைப் படுத்தி எடுக்கிறாளோ , அதை விட அதிகமாய் அவள் கணவன் மீது காதலை பொழிந்தாள்.

"வினய்... நீ தான் அவுட்..." ராகவேந்தர் கத்தியபடி வினயை பிடித்துக் கொண்டான்.

"ஆமாம் வினய் , நீ தான் அவுட்..." என்று விகாஷினியும் கூறினாள்...

சிறுவர்கள் விளையாடுவதைப் புன்னகையுடன் பார்த்தபடி அமர்ந்திருந்தாள் அர்ச்சனா. குழந்தைகள் தான் அவளது உலகம். அவளுக்கும் , விஜய்க்கும் இடையில் இன்னமும் எதுவும் சரியாகவில்லை. குழந்தைகள் பிறந்து கிட்டத்தட்ட ஆறரை வருடங்கள் முழுதாகக் கடந்த பின்பும் அவளால்

கணவனிடம் இணக்கமாக நடந்து கொள்ள முடியவில்லை. அவளும் அவனிடம் நெருங்கத்தான் நினைக்கிறாள். ஆனால் அவள் அவனை நெருங்கும் முன் அவன் பேசிய வார்த்தைகளஂ , செய்த கொடுமைகள் அவளுக்கு முன் வந்து நிற்கிறதே. அவளும் என்ன தான் செய்வாள்! உடலின் காயம் மறைந்து போகலாம்... ஆனால் மனதின் காயம் மறைந்து போகவில்லையே!

"அர்ச்சனஂா , என்ன யோசனஂை ? எத்தனை முறை கூப்பிட்டுக்கிட்டு இருக்கேன்." ஆராதனா தேநீரை எடுத்துக் கொண்டு வந்து அர்ச்சனா அருகில் இருந்த நாற்காலியில் அமர்ந்தாள்.

"சும்மா யோசிச்சிட்டு இருந்தேன்." என்று அவள் சமாளித்தாள்.

இருவரும் ஏதேதோ பேசியபடி தேநீர் பருகி கொண்டிருந்தனர். அப்போது ஜீப் வந்து நிற்கும் சத்தம் கேட்டது. ஆராதனா திரும்பி பார்த்து சந்தோசத்துடனஂ ,

"அத்து..." என்று கணவனைக் கூவி அழைத்தாள். விஷ்ணுபிரஹான் சிறுசிரிப்புடன் மனைவியை நோக்கி வந்தான். அவன் பின்னேயே விஜயும் வந்தான்.

இளம் மாலை வெயிலில் மஞ்சள் நிற தேவதையாக ஜொலித்த மனைவியின் மீது வைத்திருந்த பார்வையை வேறு எங்கும் திருப்ப முடியாதபடி விஜய் சிரமப்பட்டான். இந்த ஆறரை நெடிய ஆண்டுகளாய் அவன் அனுபவித்து வரும் வேதனை சற்று அதிகம் தான். பெண்ணவளின் மனக்காயத்திற்கு அவனது ஆறரை ஆண்டுக் காதலால் கூட மருந்து போட முடியவில்லை என்றால்... பெண்ணவளின் வலி எத்தகையது என்பதை விஜய் இப்போது உணர்ந்து கொண்டான். முன்பு எதற்கு எடுத்தாலும் கோபப்பட்ட விஜய் இப்போது இல்லை. அவன் மிகவும் பொறுமையானவனாக மாறிவிட்டான். அவனை இப்படி மாற்றியதில் பெரும் பங்கு வகிப்பவர்கள் அவனது பிள்ளைகள் இருவரும் தான். அவன் முற்றிலும் முழுவதுமாய்ப் புது மனிதனாய் மாறிவிட்டான். ஆனால்

அர்ச்சனா தான் இன்னமும் மாறவில்லை. என்றாவது ஒருநாள் மனைவி மாறுவாள்... தனக்காகக் காதல் இதயத்தைத் தருவாள் என்கிற நம்பிக்கையுடன் அவன் காத்திருக்கிறான்.

கணவனது பார்வையைக் கண்ட அர்ச்சனா ஒன்றும் பேசாது உள்ளே செல்ல போனாள். அவளது மனதில் இருந்த தடுமாற்றம் அவளது நடையில் தெரிய... அவள் புடவை தட்டி கீழே விழுந்தாள்.

"ம்மா..." என்றபடி விழுந்தவளை ஓடி வந்து முதலில் தூக்கியது விஷ்ணுபிரஹான் தான்.

"ஏஞ்சல்..." என்று அவன் பின்னேயே வந்த விஜயை அப்போது தான் கவனித்தான் விஷ்ணுபிரஹான்.

அர்ச்சனாவின் மீது அவன் கொண்ட அக்கறை தான் அவனை இவ்வாறு செயல்பட வைத்தது. ஆனால் இதை விஜய் எங்ஙனம் எடுத்து கொள்வானோ ? என்று விஷ்ணுபிரஹான் ஒரு கணம் திகைத்து விழித்தான்.

"ஏஞ்சலஂ , அடி எதுவும் பட்டுருச்சா ? ஆர் யூ ஓகே ? விஷ்ணு , ஏஞ்சலை தூக்கிட்டு உள்ளே வா..." என்றபடி விஜய் பதறியவனாய் வீட்டை நோக்கி நடந்தான்.

விஜயை நினைத்து வியந்தபடி விஷ்ணுபிரஹான் அர்ச்சனாவை தூக்கி வந்து விஜயஂ , அர்ச்சனாவிற்கு என்று ஒதுக்கப்பட்டு இருந்த அறையின் படுக்கையில் படுக்க வைத்தவனஂ ,

"பார்த்துக்கோ விஜய்..." என்றபடி அறையை விட்டு வெளியில் வந்துவிட்டான்.

வெளியில் பிள்ளைகளுக்குப் பால் அருந்த கொடுத்துக் கொண்டிருந்த மனைவியை நோக்கி சென்றான் விஷ்ணுபிரஹான். அவனது வரவை உணர்ந்து திரும்பியவளஂ ,

"அத்தை , க்ரீன் டீ எடுத்துக்கோங்க..." என்று அவன் புறம் கோப்பையை நீட்ட...

"பேபி... அர்ச்சனா..." என்று அவன் பேச முடியாது திணற...

"யாராவது கீழே விழுந்தால் தூக்கி விடுறது நல்ல மனிதாபிமானம் உள்ள செயல். என் ஆத்துக்காரர் நல்ல மனம் படைத்த மனிதர். இதைச் சொல்றதுக்கு என்ன தயக்கம் ?" தெளிவாக எடுத்துரைத்த மனைவியை அவன் வியப்பாய் பார்த்தான்.

"நீ எதுவும் தப்பா எடுத்துக்கலையே."

"இந்தக் கேள்வி தான் என் மனசை கஷ்டப்படுத்துது. இத்தனை வருசத்தில் என்னைப் புரிஞ்சிண்டது இவ்வளவு தானா அத்தை ?"

அவளது விழிகளில் அத்தனை வலி...! அவளது வலிகளுக்கு அவனது அணைப்பு தானே மருந்து. அடுத்தக் கணம் அவன் அதை அவளுக்குக் கொடுக்கச் சிறிதும் தயங்கவில்லை.

"ப்ச் , கண்ணா இருக்கிறான்..." அவள் நாணத்துடன் விலகினாள். அவளது வெட்கத்தைக் கணவனவன் ரசித்துப் பார்த்திருந்தான். புரிதலான தாம்பத்தியம் போன்று இனிமையானது வேறிருக்கக் கூடுமோ!

விஜய் மனைவி அருகில் அமர்ந்து அவளது கால்களை ஆராய்ந்து பார்த்தவன் , " வலிக்குதா ஏஞ்சல் ?" என்று வேதனையுடன் கேட்டான். அவன் படும் வேதனையை ஆறரை ஆண்டுகளாக அருகில் இருந்து அவள் பார்த்துக் கொண்டு தானே இருக்கிறாள்.

"இல்லை விஜய்..." தனது முகம் பார்த்து பேசிய மனைவியைக் கண்டு அவன் அதிசயமாகப் பார்த்தான்.

"என்னால் நம்ப முடியலை ஏஞ்சல். நீ என் கிட்ட பேசிட்ட..." என்றவனுக்குச் சந்தோசத்தில் கண்கள் கலங்கியது.

"சாரி விஜய்..." என்று மன்னிப்பு கேட்டவளை கண்டு அவனது வியப்பு இன்னமும் அதிகரித்தது.

"நீ எந்தத் தப்பும் பண்ணலை. நான் தான் புத்தி கெட்டு போய்..." அதற்கு மேல் அவனால் பேச முடியவில்லை. துக்கம் தொண்டையை அடைத்தது.

"நீங்க நல்லவர் தான் விஜய்..."

"இல்லை நான் ரொம்ப ரொம்பக் கெட்டவன்..." அவன் வேகமாக மறுத்தான்.

"நான் ஒரு கதை சொல்லவா ?"

"ம்..." என்று சம்மதமாய்த் தலையசைத்தவனைப் பார்த்து தனது இரு கரங்களையும் நீட்டி ,

"இங்கே வந்தால் தான் கதை சொல்வேன்..." என்று அவள் கூற... அவன் விழிகள் மின்ன அவள் அருகில் வந்து அவளது இடையை அணைத்துக் கொண்டு அவளது மடியில் முகம் புதைத்துக் கொண்டான்.

"நினைவு தெரிஞ்ச நாளில் இருந்து நான் என் அம்மாவை பார்த்தது இல்லை. எனக்கு வரும் மனைவி எனக்கு அம்மாவா இருக்கணும்ன்னு ஆசைப்பட்டேன்." கணவனது ஏக்கத்தில் அவள் பேசற்று அமர்ந்திருந்தாள். அவளது கை தானாக அவனது தலையை ஆறுதலாய் வருடி கொண்டிருந்தது.

"கதை சொல்றேன்னு சொன்னியே ஏஞ்சல்..." அவன் அவளை நிமிர்ந்து பார்த்து கேட்க...

"ம்..." என்றவள் கதை சொல்ல ஆரம்பித்தாள்.

"ஒருமுறை கர்ணனும் , துரியோதனனின் மனைவியும் சொக்கட்டான் (தாயம்) விளையாடிக்கிட்டு இருந்தாங்களாம். அந்த நேரத்தில் துரியோதனன் அங்கு வந்தானாம். அவனைக் கண்டதும் அவனின் மனைவி எழுந்து ஓட போயிருக்கிறாள். ஆனால் துரியோதனன் வந்தது தெரியாத கர்ணன் அவளைத் தடுத்து நிறுத்தும்

வகையில் அவளது கையைப் பிடித்திழுக்க முற்படும் போது அவன் தெரியாது அவளது ஆடையைப் பிடித்திழுத்து விடுகிறான். கர்ணன் ஆடையை இழுத்ததும் அதிலிருந்த முத்துமணிகள் அறுந்து கீழே விழுந்து சிதறியது. இதைத் துரியோதனன் பார்த்துவிட்டான். அவன் பார்த்ததைக் கர்ணனும் பார்த்துவிட்டான்."

"நிலைமை இப்போது மோசமாகி போனது. இந்த இடத்தில் தான் , துரியோதனன் நிலைமையை அழகாகச் சமாளிக்கின்றான். ' கர்ணா! சிதறிய மணிகளை எடுக்கவா ? கோர்க்கவா ?' என்று கர்ணனிடம் கேட்கின்றான். எடுத்தல் என்பதற்கும் , கோர்த்தல் என்பதற்கும் வித்தியாசம் உண்டு. ஆடையில் இருந்து நிலத்தில் சிந்திய மணிகளை எடுக்கும்போது துரியோதனனின் மனதில் இருக்கக்கூடிய சலனத்தை அறிவது கடினம்."

"ஆனால் , எடுத்த மணிகளை ஊசியால் நூலில் கோர்ப்பதென்பது நிதானத்துடன் சம்பந்தப்பட்டது. தன் மனைவியின் ஆடையைக் கர்ணன் பற்றி இழுத்ததால் துரியோதனன் மனம் குழம்பி இருப்பானாயின் , அவனால் மணிகளை நிதானமாகக் கோர்க்க முடியாது. ஆக , ' கர்ணா! நீ கலங்காதே! உன் செயலால் நான் இம்மியும் சலனப்படவில்லை என்பதை எடுத்து சொல்லவே எடுக்கவா ? கோர்க்கவா ?' என்று துரியோதனன் கர்ணனிடம் கேட்டான்."

"கதை நல்லாயிருக்கு... ஆனா இதை ஏன் இப்போ சொல்கிற ?" விஜய் குழப்பத்துடன் மனைவியைப் பார்த்தான்.

அர்ச்சனா கணவனது விழிகளை நேருக்கு நேர் சந்தித்தாள். அவனது பார்வையோடு தனது பார்வையைக் கலக்கவிட்டவள் ,

"நீங்க துரியோதனன் மாதிரி நல்லவங்க. மாமூ என்னைத் தூக்கிய போது உங்க முகத்தில் சிறிதும் கோபம் இல்லை... வருத்தம் இல்லை... சந்தேகம் இல்லை. மாறாக என் மீதான

அக்கறை இருந்தது... துடிப்பு இருந்தது... வலி இருந்தது. நீங்க என்னை எந்தளவுக்கு நேசிக்கிறீங்க என்பதற்கு இந்தச் சான்று ஒன்று போதாதா ?"

"ஏஞ்சல்..." அவன் பிரமிப்பாய் அவளைப் பார்த்திருந்தான்.

"உங்களைப் புரிஞ்சிக்காம நான் தான் தப்புப் பண்ணிட்டேன் விஜய். என்னை மன்னிச்சிருங்க." என்று அவள் மன்னிப்பு வேண்ட... அவளது மனதினை அறிந்த கணவனோ அவளைத் தவிப்புடன் பார்த்திருந்தான். அவனது விழிகளின் அலைப்புறுதலை கண்டா ,

"என்ன விஜய் ? எதுவாக இருந்தாலும் என் கிட்ட சொல்லுங்க..." என்று அவள் அவனை ஊக்கப்படுத்தினாள்.

"ஏஞ்சல் , எனக்கு உன்னை முத்தமிடணும்ன்னு தோணுது." கணவனது வார்த்தைகளில் திகைப்பாய் அவனைப் பார்த்தவள் பின்பு முகத்தில் புன்னகையைத் தவழ விட்டவளாய் ,

"முத்தம் மட்டும் தானா ? மொத்தமும் உங்களுக்குத் தான்..." என்றவள் விழி மூடி அவனது இதழொற்றலுக்குச் சம்மதம் தெரிவித்தாள். அடுத்த நொடி விஜய் சிறிதும் தாமதியாது அவளது இதழ்களைச் சிறை செய்திருந்தான்.

அப்போது விஷ்ணுபிரஹான் , " விஜய்..." என்றழைத்தபடி வந்தவன் அங்குக் கண்ட காட்சியில் திகைத்து பின்பு வெட்கத்துடன் அறை கதவினை சாற்றிவிட்டுத் திரும்பினான். அங்கு அவனது மனைவி இடுப்பில் இருகைகளை வைத்தபடி அவனைப் பார்த்திருந்தாள்.

"ஹி ஹி... விஜய்க்கு டீ கொடுக்கலாம்ன்னு வந்தேன்..." என்றவன் அசடு வழிந்தான்.

"அர்ச்சனா உங்களை மாமூன்னு சொல்வதில் அர்த்தம் இருக்கு..." என்றவள் பார்வையால் அவன் செய்த செயலை சுட்டிக்காட்டினாள்.

"அடிங் , என்னை மாமாங்கிறியா ?" என்றவன் தனது கையிலிருந்த தேநீர் கோப்பையை அங்கிருந்த மேசையில் வைத்துவிட்டு மனைவியை நோக்கி வர...

"மாமா , மாமா , மாமூ..." என்று அவனைக் கலாய்த்தபடி ஆராதனா வெளியில் ஓடினாள். அவன் அவளை விரட்டி கொண்டு அவள் பின்னே ஓடினான். அவர்கள் இருவரது சிரிப்புச் சத்தம் அந்த வீட்டினை நிறைத்தது.

காதல்... சிலருக்கு வரமாக அமையலாம். சிலருக்குச் சாபமாக அமையலாம். வரமாக அமைந்தவர்களின் வாழ்வு பற்றிப் பேச ஒன்றும் இல்லை. அது நித்தமும் சந்தோச சாம்ராஜ்யமே. ஆனால் சாபமாக அமைய பெற்றவர்களை என்ன செய்வது ? அதுவும் அவர்களது கடந்த காலக் காத(லி)லன் நல்லவர்களாக இருக்கும் பட்சத்தில் அவர்களது வலிகளை வார்த்தைகளில் வடிக்க இயலாது. அந்த வலியை மீறி , நிதர்சனத்தை ஏற்றுக் கொண்டு வாழ்வது என்பது முற்றிலும் இயலாத காரியம். அப்படிப்பட்ட காதலர்கள் தான் விஷ்ணுபிரஹான் , அர்ச்சனா... அவர்களது வாழ்க்கையில் வந்த துணைகள் தான் விஜய் மற்றும் ஆராதனா. முதலில் கணவனின் மனம் அறியாது குழம்பி , அவன் தன்னை வேண்டாம் என்றதும் விலகி , பின்பு அவன் மனம் அறிந்து தனது காதலால் அவனைத் தன்வசப்படுத்தினாள் ஆராதனா. மனைவியின் காதலை அறிந்த விஜய் மனைவியை வார்த்தையால் நோகடித்தான். பின்பு மனைவியைப் புரிந்து கொண்டு அவளுக்காக ஆண்டுக் கணக்கில் காதலாய்க் காத்திருந்தான்.

நால்வரின் காதலும் ஏதோ ஒரு புள்ளியில் பிழையாகி போனது விதியின் சதியே. ஆனால் அந்த நால்வரும் தங்களது பிழையை அழகாய் திருத்தி கொண்டு தங்களது வாழ்க்கையைச் சீர் செய்து அதில் வெற்றியும் பெற்றுவிட்டனர். காதலில்லா மனிதன் இல்லை. அந்தக் காதல் யாரிடத்தில் என்பது தான் விடையறியா தொல்லை. விடை அறிந்தவன் வென்றான். விடை அறியாதவன்

தோற்றான். தோற்றவன் வென்று காட்டுவது தான் சரித்திரம்.

விஷ்ணுபிரஹானின் காதல் தோல்வி அடைந்தாலும் அவனது திருமண வாழ்க்கை அவனுக்கு வெற்றியை ஈட்டி தந்திருக்கிறது. இனி விஷ்ணுபிரஹானஂ , ஆராதனா இருவரது வாழ்க்கையிலும் என்றென்றும் புரிதலுமஂ , மகிழ்ச்சியும் இருக்கும் என்று நம்புவோமாக...!!!

பிழை திருத்தப்பட்ட காதல்... காதலுக்கு இலக்கணமானது!!!

சுபம் *-* / \ /\ /\ *-*